# பரிமாணங்களின் பன்முகப் பார்வை

## நீடித்த முன்னேற்றம்

இலங்கை வங்கி

BOC

தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி

85 ஆண்டுகளாக, தேசிய முன்னேற்றத்திற்கான நீடித்த அர்ப்பணிப்பால் வழிநடத்தப்பட்டு, இலங்கையர்களுக்கும் அவர்களின் அபிலாஷைகளுக்கும் இடையே ஒரு உறுதியான பாலமாக நாங்கள் நின்றுள்ளோம். எங்கள் நிபுணத்துவத்தின் ஆழம் மற்றும் எங்கள் குழுவின் வலிமையின் அடிப்படையில், வங்கி தொடர்ந்து நீடித்த பெறுமதியை உருவாக்கி வருகிறது, அதே நேரத்தில் எங்கள் பங்கை நிலைநிறுத்துகிறது...

## “தேசத்தின் வங்கியாளர்”

## தொலைநோக்கு

உறுதியான உலக வியாபகத்துடன் தேசத்தின் விருப்பத்துக்குரிய டிஜிட்டல் முறைமை வங்கியாகத் திகழ்வதன் மூலம் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தை வழிநடாத்துதல்.

## குறிகோள்

நாடளாவிய மற்றும் உலகளாவிய வலையப்பினூடாக உன்னதமான சேவையை நிலைநாட்டும் பொருட்டும் எமது வாடிக்கையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் ஏனைய அனைத்து பங்குதாரர்களுக்கும் நிலைபேறான பெறுமதியை உருவாக்கும் பொருட்டும் தனிநபர்களையும் வியாபாரங்களையும் வலுவூட்டும் பாதுகாப்பானதும் அனைவரையும் உள்ளடக்கியதும் தொழில்நுட்பவியலால் மேம்படுத்தப்பட்டதுமான நிதிச் சேவைகளை வழங்குதல்.

## நிறுவன விழுமியக் கூற்று

உறுதியான உலக வியாபகத்துடன் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட புதுமையான நிதித் தீர்வுகளை வழங்குவதன் மூலம் ,தேசத்தின் விருப்பத்திற்குரிய வங்கியாகத் திகழ்தல் என்ற எங்களது தொலைநோக்குப் பார்வையை அடைவதில் பின்வரும் எங்களது ஐந்து முக்கிய விழுமியங்களை நிலைநிறுத்த நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

- வாடிக்கையாளரை மையமாகக் கொண்டு செயற்படுதல்
- அனைத்து தரப்பு மக்களையும் மதித்தல்
- சீர்மிகு அறம், முகாமைத்துவம், தொழில்முறை என்பவற்றிற்கு முன்னுரிமை அளித்தல்
- சுறுசுறுப்பு மற்றும் புத்தாக்கத்தில் கவனம் செலுத்துதல்
- எங்களது அனைத்து செயல்களுக்கும் பொறுப்பேற்றல்

# பரிமாணங்களின் பன்முகப் பார்வை

## நீடித்த முன்னேற்றம்

முன்னேற்றம் மிகவும் அரிதாகவே நேரியல் ஆகக் காணப்படும். இது பொருளாதாரம், சமூக, டிஜிட்டல், மனித, சூழல் மற்றும் ஆளுகை என ஒவ்வொன்றும் மாறுபடும், ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய மற்றும் மற்றொன்றில் செல்வாக்கு செலுத்தும் பல்வேறு தோற்றத்தொகுப்புக்களினூடாக வெளிவருகிறது. ஒரு பன்முக ரூபிக் கனசதுரத்தைப் போலவே, தேசத்தின் சுபீட்சம் ஒரு நகர்த்தலினால் அல்லாமல் எண்ணற்ற ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட பரிமாணங்களின் ஒத்திசைவுப்படுத்தலினால் வடிவமைக்கப்படுகிறது.

இலங்கையின் முன்னணி வங்கியாக இலங்கை வங்கி ஒரு பங்கேற்பாளராக மட்டுமின்றி தேசிய முன்னேற்றத்திற்கான ஊக்கியாகவும் நிற்கிறது.

உறுதித்தன்மையுடன் புதுமையை, வளர்ச்சியுடன் ஆளுகையை, தொழில்நுட்பத்துடன் உள்ளடக்கத்தை எதிர்காலத்துடன் நிகழ்காலத்தை சமநிலைப்படுத்தி, நாட்டின் பொருளாதார முறைமையின் அனைத்துப் பரிமாணங்களை கடக்கிறோம்.

தொடரும் தலைமைத்துவத்தின் இந்த நிலையில் இவ்வகையான பன்முகங்கொண்ட சூழலில் ஒவ்வொரு தீர்மான மட்டங்களில் பெறுமதிகளை வெளியேகொண்டுவருவதுடன் விளைவுகளை வடிவமைக்கும் ஓர் நோக்கமுடைய மாற்றமாகிறது.

இந்த பன்முகங்கொண்ட சூழலில், எமது பொறுப்பு வெறுமனே சிக்கலை வழிநடத்துவதற்கு அப்பாற்பட்டது.

சந்தைகளில் மாற்றங்களை வடிவமைக்கும் சக்திகள், மாறி வரும் மனித அபிலாசைகள், உலகளாவிய வணிக இயக்கவியல், துரித டிஜிட்டல் வளர்ச்சி மற்றும் பரந்தளவில் நிலைத்தன்மையின் முக்கியத்துவம் என்பவை பற்றியான ஆழமான புரிதல் அவசியமாகும். இந்த தாக்கங்களை அடையாளப்படுத்தி அவற்றின் வேகத்தைப் பயன்பெறும் வகையில் உள்வாங்கிக்கொள்வதனால் வேறுபடும் ஆற்றல்களை ஒரு தனித்துவமான தேசிய முன்னேற்றத்தை முன்னேற்றுதல் என்ற உருமாற்றக்கூடிய நோக்கத்தை நோக்கி நாம் சீரமைக்க முடியும்.

BANK OF CEYLON

BOC

Bankers to the Nation

# உள்ளடக்கம்


## கண்ணோட்டம்
சிறந்த பாரம்பரியம்

இந்த அறிக்கையைப் பற்றி 4
இலங்கை வங்கி பற்றிய கண்ணோட்டம் 10
செயலாற்றத்தின் சிறப்பம்சங்கள் 16
விருதுகள் மற்றும் பாராட்டுகள் 18
எதிர்காலத்திற்காக வடிவமைக்கப்பட்ட வலிமை 20

## தலைமைத்துவம்
நோக்கத்துடன் வழிநடத்தல்

தலைவரின் செய்தி 22
பொது முகாமையாளர் மீளாய்வு 26
பணிப்பாளர் சபை 32
கூட்டாண்மை முகாமைத்துவம் 40
நிறைவேற்று முகாமைத்துவம் 47

## எமது மூலோபாயம்
எதிர்காலத்தை வழிநடத்துதல்

தொழிற்பாட்டுச் சூழல் 52
பங்குதாரர்களின் ஈடுபாடு 57
பொருண்மை மதிப்பீடு 61
மூலோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு 65
பெறுமதி உருவாக்க மாதிரி 72
பெறுமதி சேர் கூற்று 74
நிலைத்தன்மை ஒருங்கிணைத்தல் 75
SLFRS நிலைத்தன்மை தொடர்பான நிதியியல் வெளிப்பாடுகள் 85

## முகாமைத்துவ ஆய்வு கலந்துரையாடல்
செயலாற்றம் மற்றும் வணிக பகுப்பாய்வு

நிதியியல் மீளாய்வு 108
வணிகப் பிரிவுகளின் செயலாற்றம் 115
ஒவ்வொரு வாடிக்கையாளர் பயணத்தையும் வடிவமைத்தல் 132
நீடித்த செயல்திறனுக்கான அனைவரையும் உள்ளடக்கிய பணிக்குழு 138
டிஜிட்டல் அனுபவங்களை வலுப்படுத்துதல் 148
நிலைத்தன்மையான எதிர்காலத்தை உருவாக்குதல் 153

## இடர் மற்றும் ஆளுகை
நேர்மை மற்றும் பொறுப்புக்கூறலை நிலைநிறுத்தல்

இலங்கை வங்கியின் ஆளுகை 162
கணக்காய்வு செயற்குழு அறிக்கை 180
ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ செயற்குழு அறிக்கை 182
மனித வளம் மற்றும் ஊதியக் செயற்குழு அறிக்கை 184
நியமனம் மற்றும் ஆளுகை செயற்குழு அறிக்கை 186
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப செயற்குழு அறிக்கை 188
தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள் மீளாய்வு செயற்குழு அறிக்கை 190
இடர் மற்றும் நிலைத்தன்மை வளர்ச்சி 191

## நிதியியல் அறிக்கைகள்
முன்னணி செயல்திறன்

இலங்கை வங்கியின் விவகாரங்கள் குறித்த பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை 218
ஒப்பந்தங்களிலான பணிப்பாளர்களது நாட்டம் 224
நிதி அறிக்கையின் மீதான உள்ளகக் கட்டுப்பாடு குறித்த பணிப்பாளர்களின் அறிக்கை 226
சுயாதீன உத்தரவாத அறிக்கை 228
நிதியியல் அறிக்கையிடுவதற்கான பணிப்பாளர்களின் பொறுப்பு 229
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 230
இலாப அல்லது நட்ட கூற்று 236
முற்றநடக்க வருமான கூற்று 237
நிதியியல் நிலைமைக் கூற்று 238
உரிமை மாற்றங் கூற்று 240
காசுபாய்ச்சல் கூற்று 244
நிதி கூற்றுகளுக்கான குறிப்புகள் 246

## இணக்கப்பாட்டு பின்னிணைப்புக்கள்

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2023ம் ஆண்டு வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகை பற்றிய சிறந்த நடைமுறைக் கோவைக்கு அமைவான இணக்கப்பாடு 405
2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள் 411
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தினால் வெளியிடப்பட்ட இல 09 அமைவான விதிகளுடனான இணக்கப்பாடு 436
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தினால் அமுல்ப்படுத்தப்பட்ட ஏனைய இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள் 441
இலங்கை மத்திய வங்கியினால் அமுல்ப்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள் 442
மூலதனப் போதுமானதன்மை 446

## துணைத் தகவல்கள்

2025 ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை தொடர்பாக இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபைக்கான சுயாதீன நிபுணரின் உத்தரவாத அறிக்கை 456
நிதியாண்டு 2025 இல் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலைத்தன்மை அறிக்கையிடல் அளவுகோல்கள் தொடர்பாக இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபைக்கான சுயாதீன நிபுணரின் உத்தரவாத அறிக்கை 458
GRI சுட்டி 460
அமெரிக்க டொலரில் நிதியியல் கூற்றுக்கள் 462
காலாண்டு செயலாற்றம் 465
பங்குகள் மற்றும் தொகுதிகடன் தகவல்கள் 468
பத்தாண்டு புள்ளிவிவரச் சுருக்கம் - வங்கி 469
துணை மற்றும் இணை நிறுவனங்கள் 471
நிதியியல்/ வங்கியியல் கலைச்சொற்கள் 473
கூட்டாண்மை அலுவலகங்கள் மற்றும் கடல்கடந்த கிளைகள் 475
நிறுவனத் தகவல்கள் 476

# கண்ணோட்டம்

## சிறந்த பாரம்பரியம்

**86 ஆண்டுகளாக இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சமூகத்தின் உயிர்நாடியாக இலங்கை வங்கி இருந்து வருகிறது. நாட்டின் மிகப்பெரிய மற்றும் மிகவும் நம்பக்தன்மையுடைய வங்கியாக, இது சமூகங்களுக்கு வலுவூட்டி வாழ்வுகளை வடிவமைக்கிறது. பல தலைமுறைகளாக இலங்கையர்களுக்கு முன்னேற்றத்தின் கலங்கரை விளக்காக வங்கி திகழ்கிறது.**

*இலங்கை வங்கி ஒரே நேரத்தில் ஒவ்வொரு நடவடிக்கையும் தேசத்திற்கு நீடித்து நிலைத்திருக்கக்கூடிய பெறுமதி உருவாக்கத்திற்கு பங்களிக்கிறது என்பதை உறுதி செய்து பன்முகமுடைய மூலோபாய முன்னுரிமைகளை எவ்வாறு கடக்கிறது என்பதற்கான ஒரு காட்சி உருவகமாக ரூபிக்ஸ் கனசதுரம் செயல்படுகிறது.*

# இந்த அறிக்கையைப் பற்றி

## இலங்கை வங்கியின்

### 2025ற்கான ஆண்டறிக்கைக்கு உங்களை வரவேற்கிறோம்

**இலங்கை வங்கி, 2025 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த நிதியாண்டுக்கான தனது 13-வது ஒருங்கிணைந்த வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்கிறது. இந்த ஆண்டு வங்கியின் பன்முக வளர்ச்சி, சவால்களை எதிர்கொள்ளும் உறுதி மற்றும் தேசத்தின் மீதான காத்திரமான தாக்கம் ஆகியவற்றை பிரதிபலிக்கிறது.**

**இந்த ஆண்டின் கருப்பொருள்: "பரிமாணங்களின் பன்முகப் பார்வை - நீடித்த முன்னேற்றம்" பல்வேறு விழுமியங்களின் அடிப்படையில் வங்கியின் நீடித்த வலிமையை வெளிப்படுத்துகிறது. இலங்கையின் மிகப்பெரிய மற்றும் நம்பிக்கைக்குரிய வங்கி என்ற ரீதியில், நிதியியல் உறுதித்தன்மை, தொழிற்பாட்டு நேர்த்தி, தொழில்நுட்ப புத்தாக்கம், மனித வளம், ஆளுகை, நேர்மை, தேசியளவிலான அணுகல் மற்றும் சர்வதேச ரீதியிலான தொடர்பு என வங்கி கொண்டுள்ள வேறுபட்ட திறன்கள் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டுள்ளன.**

இந்த அறிக்கை வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், பங்குதாரர்கள மற்றும் நிதி வழங்குநர்கள், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல், வர்த்தக பங்காளர்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் என அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. வங்கியானது தனது பன்முக வலிமையைப் பயன்படுத்தி எவ்வாறு அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, தேசிய அபிவிருத்தி மற்றும் நீடித்த நம்பிக்கையை வழங்குகிறது என்பதை இது விளக்குகிறது. இது வெறும் சாதனைகளின் பதிவு மட்டுமல்ல, இது ஒரு உத்வேகமான நிறுவனம் தனது பல்வேறு பலங்களை ஒன்றிணைத்து, எவ்வாறு அர்த்தமுள்ள மற்றும் நிலையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதன் பிரதிபலிப்பாகும்.




### அறிக்கையிடலின் நோக்கம் மற்றும் எல்லை GRI 2-2,3,6

இந்த அறிக்கை 2025 ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரையான காலப்பகுதியில் இலங்கை வங்கியின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செயல்பாடுகளையும், அதன் துணை நிறுவனங்களையும் (ஒட்டுமொத்தமாக "குழுமம்" என அழைக்கப்படும்) உள்ளடக்கிய முழுமையான பார்வையை வழங்குகிறது.

முக்கிய நிதித் தகவல்கள் முழு குழுமத்தின் ஒருங்கிணைந்த தகவல்களாக வழங்கப்பட்டுள்ளன. எனினும், குழுமத்திற்குள் வங்கியே முதன்மையானதாக இருப்பதால் நிதிசாரா தகவல்கள் வங்கியின் செயல்பாடுகளை மையமாகக் கொண்டே விளக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அறிக்கையிடல் எல்லைகளில் மாற்றங்கள் இல்லை. மேலும், பிஓசி ஐரீ சொலூசன்ஸ் (பிறைவட்) லிமிடெட் எனும் புதிய நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதைத் தவிர, குழுமத்தின் அளவு, கட்டமைப்பு அல்லது விநியோகச் சங்கிலியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏதுமில்லை.

### பொருண்மை

வங்கி **இரட்டை பொருண்மைக்** கோட்பாட்டினை பின்பற்றுகிறது. இது வங்கியின் நிதிச் செயல்பாடுகளில் செல்வாக்கு செலுத்தும் விடயங்களை மட்டும் அறிக்கையிடாமல், சமூகம், சுற்றுச்சூழல் மற்றும் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தைப் பாதிக்கும் முக்கிய அம்சங்களையும் முன்னிலைப்படுத்துகிறது. இந்த அணுகுமுறை, வங்கியின் செயல்பாடுகள் எவ்வாறு அளவிடக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதையும், அதே நேரத்தில் நீண்டகால நிதி உறுதித்தன்மையை எவ்வாறு தக்கவைத்துக் கொள்கின்றன என்பதையும் பங்குதாரர்கள் முழுமையாகப் புரிந்துகொள்ள வழிவகுக்கிறது.

## இலங்கை வங்கியின் ஆண்டறிக்கை

### இரட்டைப் பொருண்மையை தீர்ப்பது

## அறிக்கையிடல் கட்டமைப்புக்கள்

நாங்கள் வெறும் விதிமுறை இணக்கத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையிலிருந்து முன்னேறி, நிறுவன அறிக்கையிடலில் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சிறந்த நடைமுறைகளை ஏற்றுக்கொண்டுள்ளோம். எமது அறிக்கையிடல் கட்டமைப்பு இலங்கை நிதியியல் அறிக்கையிடல் தரநிலைகள் (SLFRS) மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள் மற்றும் தொழில்துறை சிறந்த நடைமுறைகள் என்பவற்றின் தேவைப்பாடுகளுக்கு மத்தியில் நிறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், சர்வதேச ஒருங்கிணைந்த அறிக்கையிடல் கட்டமைப்பு, உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்பு (GRI) தரநிலைகள் மற்றும் நிலைபேண்தகு கணக்கியல் தரநிலைகள் சபை (SASB) வழங்கிய தரநிலைகளுடனும் இது ஒத்துப்போகின்றது:

புதிய SLFRS நிலைபேண்தகு தரநிலைகளான SLFRS S1 - நிலைபேண்தகு தன்மை சார்ந்த நிதித் தகவல்களை வெளிப்படுத்துவதற்கான பொதுவான தேவைகள் மற்றும் SLFRS S2 காலநிலை தொடர்பான வெளிப்படுத்தல்கள் ஆகியவற்றின் அறிமுகத்துடன், SLFRS நிலைபேண்தகு தன்மை சார்ந்த நிதியியல் வெளிப்படுத்தல்களின் தேவைகளுக்கு ஏற்ப நாங்கள் தன்னார்வத்துடன் இசைந்துள்ள அதே வேளையில் இத்தரநிலைகளை முதன்முறையாகப் பின்பற்றுபவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடைக்காலச் சலுகைகளையும் நாங்கள் பயன்படுத்தியுள்ளோம்.

T A

**நிதியியல் அறிக்கையிடல் (ஒழுங்குமுறைப்படுத்தல்)**

- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட கணக்கீட்டு நியமங்கள்
- 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அதைத் தொடர்ந்து செய்யப்பட்ட திருத்தங்கள்
- கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிறுவனத்தின் (CSE) பட்டியல் விதிகள்
- இலங்கையின் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க சட்டம் மற்றும் திருத்தங்கள்.
- 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இல இலங்கை கணக்கீட்டு கணக்காய்வு நியமங்கள்
- உரிமம் பெற்ற வணிக வங்கிகளுக்கான நிதிநிலை அறிக்கைகள்மற்றும் பிற வெளிப்படுத்தல்களுக்கான பட்டியல் தேவைகளுக்கு இலங்கை மத்திய வங்கி மற்றும் கொ.ப.ப.நி. (CSE) ஆல் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள்.

T G A

**கூட்டாண்மை ஆளுகை, இணக்கப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவ அறிக்கையிடல் (ஒழுங்குமுறைப்படுத்தல்)**

- 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் திருத்தங்கள்
- கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிறுவனத்தின் 09ஆம் இலக்க பட்டியல் விதி
- இலங்கையில் உரிமம் பெற்ற வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளுகை குறித்த 2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இல வங்கியியல் சட்ட வழிகாட்டல்.
- இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகைக்கான சிறந்த நடைமுறைக் கோவை (2023)
- பாசல் III இன் கீழ் மூலதனத் தேவைகள் மற்றும் அதன் திருத்தங்கள் குறித்த 2016ஆம் ஆண்டின் 1ம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டல்.

T

**ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் (தன்னார்வ)**

- சர்வதேச ஒருங்கிணைந்த அறிக்கையிடல் மன்றத்தின் (IIRC) ஒருங்கிணைந்த அறிக்கையிடல் கட்டமைப்பு (IR)
- இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் வெளியிடப்பட்ட ஒருங்கிணைந்த அறிக்கையிடலுக்கான தயாரிப்பாளருக்கான வழிகாட்டி

T A S

**நிலைபேண்தகு அறிக்கையிடல் (வேறுவிதமாகக் குறிப்பிடாவிட்டால் தன்னார்வமானது)**

- உலகளாவிய அறிக்கையிடல் முன்முயற்சி (GRI) உலகளாவிய நிலைத்தன்மை தரநிலைகள் வாரியத்தால் (GSSB) வெளியிடப்பட்ட தரநிலைகள்
- உரிமம் பெற்ற வங்கிகளின் நிலையான நிதியிடல் செயல்பாடுகள் குறித்த 2022ஆம் ஆண்டின் 5ம் இலக்க வங்கிச் சட்ட வழிகாட்டுதல் (ஒழுங்குமுறை)
- SLFRS நிலைத்தன்மை தொடர்பான நிதி வெளிப்படுத்தல் தரநிலைகள் - SLFRS S1 மற்றும் S2
- ஐக்கிய நாடுகளின் (UN) நிலைத்தன்மை அபிவிருத்தி இலக்குகள் (SDGs)
- சர்வதேச நிதியியல் அறிக்கையிடல் தரநிலைகள் அமைப்பின் நிலைபேண்தகு கணக்கியல் தரநிலைகள் சபையினால் வெளியிடப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான நிலைபேண்தகு கணக்கில் தரநிலைகள்
- ISO 14064-1:2018 பசுமை இல்ல வாயு உமிழ்வுகள் மற்றும் நீக்கங்கதகணைக் கணக்கிடுதல் மற்றும் அறிக்கையிடல் குறித்த நிறுவன மட்டத்திலான வழிகாட்டுதல்களுடன் கூடிய விவரக்குறிப்பு
- இலங்கை பட்டயக் கணக்காளர்களால் வெளியிடப்பட்ட பாலின சமத்துவ அறிக்கையிடல் கட்டமைப்பு
- பசுமை இல்ல வாயு GHG நெறிமுறை கூட்டாண்மை கணக்கியல் மற்றும் அறிக்கையிடல் தரம் (ஒழுங்குமுறை)

T வெளிப்படைத்தன்மை | A பொறுப்புக்கூறல் | G ஆளுகை | S நிலைத்தன்மை

# இந்த அறிக்கையைப் பற்றி

## TAGS இற்கான அர்ப்பணிப்பு

வெளிப்படைத்தன்மை , பொறுப்புக்கூறல், ஆளுகை மற்றும் நிலைபேண்தகு தன்மை ஆகியவையே வங்கியின் ஒவ்வொரு தீர்மானத்தையும் வழிநடத்துகின்றன. இதன் மூலம் நாம் பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாப்பதுடன், நெறி சார்ந்த நிர்வாகத்தை உறுதிசெய்து, அனைத்து பங்குதாரர்களுக்கும் நிலையான மதிப்பை வழங்குகிறோம்.

### வெளிப்படைத்தன்மை

பின்வருவனவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது:

- பணிப்பாளர் சபையினால் அறிக்கையிடல் சார்ந்த சிறந்த நடைமுறைகளைக் கட்டாயமாகவும் தன்னார்வமாகவும் பின்பற்றுதல்
- சுயாதீனமான வெளிப்புற உறுதிப்படுத்தல்
- சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட அறிக்கையிடல் தரநிலைகளுடன் இணங்குதல்
- தகவல்களைத் தெளிவாகவும் சரியான நேரத்திலும் வெளிப்படுத்துதல்
- சீரான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுதல்

### பொறுப்புக்கூறல்

பின்வருவனவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது:

- ஒருங்கிணைந்த அறிக்கையின் உள்ளடக்கத்திற்கான பொறுப்பு.
- நிதியியல் அறிக்கையிடல் மற்றும் உள்நாட்டுக் கட்டுப்பாடுகளுக்கான பொறுப்புக்கூறல்
- இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் மூலதனப் போதுமாந்தன்மை ஆகியவற்றைக் கண்காணித்தல்.
- பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் தலைவரின் கூற்றில் பிரதிபலிக்கப்படும் பொறுப்பான மேலாண்மை.




### ஆளுகை

பின்வருவனவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது:

- நிறுவன ஆளுமை மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டல்கள் குறித்த சிறந்த நடைமுறைகளின் கோவையைப் பின்பற்றுதல்
- அமைப்புடைய பணிப்பாளர் சபை மற்றும் சபையின் துணைக்குழுக்களின் மேற்பார்வை
- நெறி சார்ந்த கலாசாரம் மற்றும் தலைமைத்துவத்தை ஊக்குவித்தல்.
- இடர்நேர்வு ஆளுகை, இணங்குவிப்பு மற்றும் கட்டுப்பாட்டுச் சூழல்களைத் தொடர்ச்சியாக வலுப்படுத்துதல்

### நிலைபேண்தகு தன்மை

பின்வருவனவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது:

- வணிக உபாயம் மற்றும் அறிக்கையிடலில் நிலைபேண்தகு கருத்தமைவுகளை ஒருங்கிணைத்தல்
- ஆளுமைக் கட்டமைப்பிற்குள் நிலைபேண்தகு தன்மையை உள்வாங்குதல்.
- உலகளாவிய நிலைபேண்தகு தரநிலைகள் மற்றும் கட்டமைப்புகளுடன் இணங்குதல்
- பொறுப்பான வங்கிச் செயல்பாடு, சமூகத் தாக்கம் மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவம் ஆகியவற்றை ஊக்குவிக்கும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்.

## முன்னெச்சரிக்கைக் கோட்பாடு

தனது பிரதான வணிகச் செயல்பாடுகளில் நிலைபேண்தகு தன்மையை முதன்மைப்படுத்துவதில், வங்கி முன்னெச்சரிக்கைக் கோட்பாட்டினை அடிப்படை கரிசனையாகக் கொண்டுள்ளது. நிலைபேண்தகு நிதியளிப்பு (பக்கங்கள் 153-160 இல் குறிப்பிடப்பட்டுள்ளது) தொடர்பான வங்கியின் முயற்சிகள், செயல்பாடுகளினால் ஏற்படக்கூடிய எதிர்மறைத் தாக்கங்களைக் குறைப்பது மட்டுமன்றி, சுற்றுச்சூழல் மற்றும் பங்குதாரர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்கு ஏற்படக்கூடிய உள்ளூர் மற்றும் உலகளாவிய சவால்களை முன்கூட்டியே கையாள்வதற்கான விரிவான நடவடிக்கைகளையும் விளக்குகின்றன.

## ஒருங்கிணைந்த உறுதிப்படுத்தல்

GRI 2-4,5

நிர்வாகத்தின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை, உள்ளக கணக்காய்வு மற்றும் வெளிப்புற உறுதிப்படுத்தல் வழங்குநர்களின் பங்களிப்பு ஆகியவற்றின் மூலம் எமது நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத தகவல்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதை நாம் நோக்கமாகக் கொண்டுள்ளோம். இந்த ஒருங்கிணைந்த உறுதிப்படுத்தல் மாதிரியின் மூலம், நிர்வாகம் மற்றும் உள்ளக மற்றும் வெளிவாரியான உத்தரவாத வழங்குநர்களிமிருந்து பெறப்படும் உறுதிப்பாட்டை வலுவான நெறிமுறையான சூழல் மற்றும் இணங்குவிப்பை உறுதிப்படுத்தும் வழிமுறைகளை வளர்க்கவும் நாம் முயற்சிக்கிறோம்.

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுகளின் வெளிவாரியான உறுதிப்படுத்தல்.

**கணக்காய்வுக் குழு மற்றும் உள்ளக கணக்காய்வின் செயற்பாடுகள்:**

குழுமத்தின் நிதி அறிக்கையிடல் செயல்முறைகள் மற்றும் தொடர்புடைய உள்நாட்டுக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனை உறுதிப்படுத்தும் பொறுப்பு

**கூட்டாண்மை முகாமைத்துவக் குழு**

அறிக்கையைத் தயாரிப்பது தொடர்பாக பணிப்பாளர் சபைக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள்

இந்த அறிக்கை தலைமைத்துவக் குழுவின் பங்களிப்பு, பல்வேறு துறைகளைச் சார்ந்த உள்ளக தகவல்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய வெளிப்புறத் தகவல்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள நிலைபேண்தகு தகவல்கள் ஆனளசள Ernst & Young நிறுவனத்தினால் வெளிவாரியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் வெளியிடப்பட்ட நிதி சாராத தகவல்களில் பெரிய அளவிலான மாற்றங்கள் எவையும் செய்யப்படவில்லை.

## முன்னோக்கிய பார்வைகொண்ட கூற்றுகள்

குழுமத்தின் எதிர்காலச் செயல்பாடு மற்றும் வாய்ப்புகள் குறித்த சில எதிர்காலம் முன்னோக்கிய பார்வைகொண்ட கூற்றுகள் இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கலாம். இவை எதிர்காலச் செயல்பாட்டிற்கான உத்தரவாதமாகக் கருதப்பட முடியாது. ஏனெனில், இவை தோற்றம்பெற்று வரும் இடர்நேர்வுகள், எதிர்கால நிகழ்வுகள் மற்றும் வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஏனைய முக்கிய காரணிகளினால் பாதிக்கப்படலாம். இந்நிகழ்வுகள், இந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தற்போதைய எதிர்பார்ப்புகளிலிருந்து உண்மையான முடிவுகள் மாறுபடுவதற்கு காரணமாக அமையலாம்.

## எமது ஒருங்கிணைந்த அறிக்கையிடல் பயணம்

2012 ஆம் ஆண்டு முதல், வங்கி தனது உபாயம் மற்றும் தொழிற்பாடுகளில் ஒருங்கிணைந்த சிந்தனையை உட்புகுத்தி, ஒருங்கிணைந்த அறிக்கையிடல் பயணத்தில் படிப்படியாக முன்னேறி வருகின்றது. இலங்கையின் மிகப்பெரிய மற்றும் மிகவும் நம்பகமான வங்கி நிறுவனம் என்ற வகையில், வெறும் பாரம்பரிய நிதியியல் அறிக்கையிடலுக்கு அப்பால் சென்று, பெறுமதி உருவாக்கத்தின் ஒரு முழுமையான காட்சியினை முன்வைப்பதன் முக்கியத்துவத்தை வங்கி அங்கீகரித்துள்ளது.

பல ஆண்டுகளாக, வங்கி தனது மூலதனங்கள் எவ்வாறு ஒன்றிணைந்து நிலையான விளைவுகளை உருவாக்குகின்றன என்பதை சிறப்பாக விளக்கும் வகையில் தனது அறிக்கையிடல் நடைமுறைகளை மேம்படுத்தியுள்ளது. இந்த பரிணாம வளர்ச்சியானது, வங்கியின் வெறும் செயலாற்றத்தை மட்டும் காட்டாமல், அதன் நோக்கத்தையும் வெளிப்படுத்தும் ஒரு திட்டமிட்ட முயற்சியாகும். அதாவது வங்கியின் செயற்பாடுகள் வாடிக்கையாளர்கள், சமூகங்கள், தேசிய பொருளாதாரம் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை இது விளக்குகின்றது.

இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறையின் மூலம், இலங்கை வங்கி தனது பெறுமதி உருவாக்கும் பயணத்தின் வெளிப்படையான கணக்கை பங்குதாரர்களுக்குத் தொடர்ந்து வழங்கி வருவதுடன், அதன் மீளெழும் திறன், பன்முக வலிமை மற்றும் தேசிய முன்னேற்றத்திற்கான அதன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு ஆகியவற்றைச் சித்திரிக்கிறது. ஒருங்கிணைந்த சிந்தனை எனும் கருத்தாக்கத்தை ஏற்றுக்கொள்வது, குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால விளைவுகளை சமநிலைப்படுத்த உதவும் ஒரு மனப்போக்கை ஊக்குவிக்கிறது. இது காலப்போக்கில் நிலைபேண்தகு பெறுமதியை உருவாக்குவதற்கான எமது திறனுக்கு அடிப்படையானதுடன், முடிவெடுப்பதில் ஒரு விரிவான மற்றும் மூலோபாய அணுகுமுறையை ஊக்குவிக்கிறது.

முதன்மையாக பங்குதாரர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை, எப்போதும் மாறிவரும் ஒரு செயல்பாட்டுச் சூழலில், வங்கியின் தொலைநோக்குப் பார்வை எவ்வாறு நிறுவனத்தின் உபாயம், பெறுமதி உருவாக்கம் மற்றும் பங்குதாரர்களின் ஈடுபாடு ஆகியவற்றை வழிநடத்துகிறது என்பதைக் காட்டுகிறது. வங்கியின் பண்புசார் மற்றும் அளவுசார் முடிவுகளுக்கு மேலதிகமாக, இந்த அறிக்கை வங்கியின் எதிர்கால நோக்கு மற்றும் நீண்ட கால பெறுமதியை உருவாக்கும் அதன் திறன் பற்றிய உறுதியையும் கோடிட்டுக் காட்டுகிறது.

### ஒருங்கிணைந்த அறிக்கையின் சிறப்பம்சங்கள்:




### இந்த அறிக்கையில் செய்யப்பட்டுள்ள மேம்பாடுகள்

இந்த ஆண்டு, எமது அறிக்கையிடலானது அதிக கவனம் மற்றும் எதிர்கால நோக்குடன் கூடிய வலிமையைப் பிரதிபலிக்கும் வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

1. அறிக்கையிடல் கட்டமைப்பில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஆளுகை மற்றும் நிலைபேண்தகு தன்மை ஆகியவற்றை உள்ளடக்கியதன் மூலம் ஒருங்கிணைந்த அறிக்கையிடல் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

2. SLFRS S1 மற்றும் S2 தொடர்பான தன்னார்வ வெளிப்படுத்தல்கள் மற்றும் SASB தரநிலைத் தேவைகளுக்கு இணங்குவதன் மூலம் ஒருங்கிணைந்த அறிக்கையிடல் கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது.

3. வங்கியின் நிலைபேண்தகு பெறுமதி உருவாக்கத்தில் செல்வாக்கு செலுத்தும் மாறிவரும் பொருளாதார, சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகைப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்காக, ஒரு பொருண்மை மதிப்பீட்டை நடத்துவதன் மூலம் முக்கிய விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

4. எதிர்கால உபாயங்கள் குறுகிய காலம், நடுத்தர காலம் மற்றும் நீண்ட காலம் என வரையறுக்கப்பட்ட கால எல்லைகளில் விளக்கப்பட்டுள்ளன. இந்த கட்டமைக்கப்பட்ட கால எல்லை அணுகுமுறையானது, தற்போதைய செயல்பாடுகள் எவ்வாறு நீண்ட கால பெறுமதி உருவாக்கத்துடன் திட்டமிட்டு சீரமைக்கப்பட்டுள்ளன என்பதை நிரூபிக்கிறது.

5. தடுக்கும் உபாயங்கள் மற்றும் சபையின் மேற்பார்வை ஆகியவற்றில் அதிக வெளிப்படைத்தன்மைக்காக இடர்நோவு மற்றும் ஆளுமை அறிக்கையிடல் மேம்படுத்தப்பட்டுள்ளது.

6. நிலைபேண்தகு அறிக்கையிடல் மற்றும் ஒருங்கிணைந்த அறிக்கையிடல் ஆகியவற்றின் மீதான உறுதிப்படுத்தல் மேம்படுத்தப்பட்டுள்ளது.

# இந்த அறிக்கை பற்றி

## வழிச்செலுத்துதல் சின்னங்கள்

### பங்குதாரர்கள்

- வாடிக்கையாளகள்
- தொழிலாளர்கள்
- பங்குதாரர்கள் மற்றும் நிதி வழங்குனர்கள்
- சமூகம் மற்றும் சூழல்
- வணிகப் பங்காளர்கள்
- ஒழுங்கு முறையாளர்கள்

### ஆறு மூலதனங்கள்

- நிதியியல் மூலதனம்
- தயாரிக்கப்பட்ட மூலதனம்
- மனித மூலதனம்
- அறிவுசார் மூலதனம்
- சமூக மற்றும் உறவுசார் மூலதனம்
- இயற்கை மூலதனம்

### மூலோபய தூண்கள்

- உறுதிப்பாடு, ஆளுகை மற்றும் நிலைத்தன்மை வளர்ச்சி
- வாடிக்கையாளர் அனுபவத்தில் சிறப்பு
- டிஜிட்டல் சிறப்பு
- வெகுமதியளிக்கும் கடன் கலாச்சாரம் மற்றும் ஆரோக்கியமான கடன் பட்டியல்
- உயர் செயற்திறன் கொண்ட அணியை கட்டியெழுப்புதல்

### இடர்நேர்வு வகைகள்

- R1 கடன் இடர்
- R2 சந்தை இடர்
- R3 தொழிற்பாட்டு இடர்
- R4 திரவத்தன்மை இடர்

### பொருண்மை தலைப்புக்கள்

- M1 பொருளாதாரச் செயலாற்றும்
- M2 டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் நிலைமாற்றம்
- M3 வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் சந்தைப்படுத்தல்
- M4 வணிக விழுமியங்கள் மற்றும் ஒழுங்குமுறை இணக்கம்
- M5 ஊழியர் உறவுகள்
- M6 பொறுப்பான நிதியளிப்பு
- M7 காலநிலை மாற்றம் மற்றும் பசுமை இல்ல வாயு (GHG) உமிழ்வுகள்
- M8 தொழிற்துறை கூட்டாண்மைகள் மற்றும் ஒத்துழைப்புகள்
- M9 பொறுப்பான மூலங்கள் மற்றும் வள முகாமைத்துவம்
- M10 சமூக மேம்பாடு மற்றும் ஈடுபாடு

## ஆண்டு அறிக்கை 2025 இன் தொடர்பாடல் மற்றும் சென்றடைவு

கருத்துக்கள்

GRI 2-3

இந்த அறிக்கை குறித்த ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை தயவுசெய்து **cfo@boc.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் இணையதளம்

இலங்கை வங்கி இணையதளம்

தலைவர் மற்றும் பொது முகாமையாளரின் செய்திகளின் ஒலி வடிவங்கள்

ஆண்டு அறிக்கை - 2025 இன் சிறப்பம்சங்களை உள்ளடக்கிய காணொளி

## ஒருங்கிணைந்த சிந்தனை மூலம் பெறுமதி உருவாக்குதல்

ஒருங்கிணைந்த சிந்தனையை ஏற்றுக்கொள்வது, குறுகிய காலச் செயல்பாட்டுத் திறனையும் நீண்ட கால பெறுமதி உருவாக்கத்தையும் சமநிலைப்படுத்தும் ஒரு முழுமையான பார்வையை வங்கி கொண்டிருக்க உதவுகிறது. உபாயம், ஆளுகை, இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் நிலைபேண்தகு தன்மை ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்புகளை அங்கீகரிப்பதன் மூலம், வங்கியின் தீர்மானங்கள் நிறுவனத்தின் குறிக்கோள்கள் மற்றும் பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகளுடன் ஒத்துப்போவதை வங்கி உறுதி செய்கிறது. இந்த அணுகுமுறை ஒத்துழைப்பை வலுப்படுத்துகிறது, வள ஒதுக்கீட்டை மேம்படுத்துகிறது மற்றும் ஒரு மாறி வரும் வணிகச் சூழலில் வங்கி மீளெழுந்து நிற்கும் திறனை நிலைநிறுத்தும் அதேவேளையில், நிலைபேண்தகு பெறுமதி உருவாக்கத்திற்கும் ஆதரவளிக்கிறது.

### பொருண்மையான விடயங்களைத் தீர்மானித்தல்

செயல்பாட்டுச் சூழல் — பக்கம் 52

பங்குதாரர்களின் ஈடுபாடு — பக்கம் 57

இடர்கள் மற்றும் நிலைபேண்தகு வளர்ச்சி — பக்கம் 191

### இரட்டை பொருண்மை




### எமது உத்தி உருவாக்கம் மற்றும் வள ஒதுக்கீடு

உபாய தூண்கள்

வள ஒதுக்கீடு — பக்கம் 65

### முக்கிய வணிகப் பிரிவுகளின் ஊடாக எமது உபாயத்தை வகுத்தல்

சில்லறை வங்கிச் சேவை — பக்கம் 115

கூட்டாண்மை மற்றும் கரை கடந்த வங்கிச் சேவை — பக்கம் 121

சர்வதேசம், திறைசேரி, முதலீடு மற்றும் வெளிநாட்டு தொழிற்பாடுகள் — பக்கம் 126

### இடர்நேர்வுகளை முகாமைத்துவஞ்செய்தல், முறையான கூட்டாண்மை ஆளுகையை உறுதி செய்தல் மற்றும் நிலைபேண்தகு தன்மையை உட்புகுத்துதல்

**இடர்நேர்வு முகாமைத்துவம்**

செயல்திறன்மிக்க இடர்நேர்வு முகாமைத்துவம் மூலம், வங்கி தனது உறுதிப்பாட்டினை மற்றும் மீளெழும் திறனை வலுப்படுத்தும் அதேவேளையில் பங்குதாரர்களின் பெறுமதியை பாதுகாக்கிறது.

பக்கம் 191

**கூட்டாண்மை ஆளுகை**

வலுவான நிறுவன ஆளுகைக் கட்டமைப்பு வங்கியின் செயல்பாடுகளை வழிநடத்துவதுடன், அறநெறி சார்ந்த நடத்தை மற்றும் அதன் அடிப்படை விழுமியங்களுடன் இணங்கிப்போவதை ஊக்குவிக்கிறது.

பக்கம் 162

**நிலைபேண்தகு தன்மை (Sustainability)**

நிலைபேண்தகு தன்மையானது எமது செயல்பாடுகளை வழிநடத்துவதுடன், ஐக்கிய நாடுகளின் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளுடன் ஒத்துப்போகின்றது.

பக்கம் 75

### பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுதல்

அனைத்துப் பங்குதாரர்களிடமும் பெறுமதி உருவாக்கம், நம்பிக்கை மற்றும் பொறுப்பான வளர்ச்சியை உறுதி செய்தல்

பக்கம் 72

# இலங்கை வங்கி பற்றிய கண்ணோட்டம்

## தேசிய முன்னேற்றத்தை வலுப்படுத்தும் ஒரு பன்முக ஆற்றல்

இலங்கையின் முன்னணி வர்த்தக வங்கி என்ற வகையில், இலங்கை வங்கி, தொழிற்துறை சொத்துக்கள், கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் வைப்புத்தொகைகளில் மிகப்பெரிய சந்தைப் பங்கைக் கொண்டு தேசத்தின் வங்கியாளராகச் செயல்படுகிறது. உள்நாட்டு முறைமை முக்கியத்துவம் வாய்ந்த வங்கி என அங்கீகரிக்கப்பட்டுள்ள வங்கியின் வகிபாகம் பாரம்பரிய வங்கித்தொழில் சேவைக்கும் அப்பால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நலன்களுக்குச் சேவை செய்வது வரை விரிவடைகிறது.

86 ஆண்டுகளுக்கும் மேலான தனித்துவமான பாரம்பரியத்தைக் கொண்டுள்ள இலங்கை வங்கி, 16.0 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்குச் சேவையாற்றுவதன் மூலம் நமது தேசத்தின் சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்போடு ஆழமாகப் பின்னிப் பிணைந்துள்ளது. தனிநபர்கள் முதல் பெரிய நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் வரை, சமூகத்தின் பல்வேறு பிரிவுகளின் உண்மையான தேவைகளுக்குப் பதிலளிக்கும் உள்ளடங்கலான, வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட வங்கித் தீர்வுகளை வழங்குவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். வலுவான மூலதன அடிப்படை, நவீன டிஜிட்டல் திறன்கள் மற்றும் அர்ப்பணிப்புள்ள நிபுணத்துவக் குழுவின் ஆதரவுடன், தேசத்தின் பொருளாதார முன்னேற்றத்தை ஆதரிக்கும் அதேவேளையில் அனைத்து இலங்கையர்களின் அபிலாசைகளையும் நனவாக்க வங்கி உறுதியுடன் உள்ளது.

**இலங்கையின் No.1 வர்த்தக நாமம்**

**உறுதிப்பாட்டினை மற்றும் வளர்ச்சியை எதிரொலிக்கும் தனித்துவமான பலங்கள்**

சொத்துகள்:
**ரூபா 5.5 டிரில்லியன்**

வைப்புகள்:
**ரூபா 4.4 டிரில்லியன்**

மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள்:
**ரூபா 2.7 டிரில்லியன்**

உரிமையாண்மை:
**ரூபா 365.8 பில்லியன்**

வரிக்கு முன்னரான இலாபம்:
**ரூபா 120.8 பில்லியன்**

வாடிக்கையாளர் தொடுமுனைகள்:
**2,413**

வாடிக்கையாளர் நுழைவு: **76%**

ஊழியர்கள்:
**8,912**

வர்த்தக நாமப் பெறுமதி:
**ரூபா 57.4 பில்லியன்**

உலகின் முதல் 500 வங்கித்தொழில் வர்த்தகநாமங்களில் இடம்பிடித்த முதல் மற்றும் ஒரே இலங்கை வங்கி

உலகளாவிய தரவரிசை:
16 ஆண்டுகளாக உலகின் முதல் 1,000 வங்கிகளில் இடம்பிடித்துள்ள ஒரே இலங்கை வங்கி.

பிட்ச் (கடன் தர மதிப்பீடு:
உள்நாட்டு: : AA-(lka)/ ஸ்திரமானது
சர்வதேச: CCC+

## 01 நிதி வலிமை மற்றும் உறுதிப்பாடு

ரூ. 5.5 டிரில்லியன் மொத்த சொத்துக்கள், 16.9% மூலதனப் போதுமானதன்மை மற்றும் ரூ. 120.8 பில்லியன வரிக்கு முன்னரான இலாபத்துடன் கூடிய மீளெழும் திறன் கொண்ட ஒரு நிதி ஆற்றல் மையமாகத் திகழ்வதுடன், சகல பொருளாதாரச் சுழற்சிகளிலும் நம்பிக்கையைத் தூண்டுகிறது.

## 02 பன்முகத்தன்மை கொண்ட தயாரிப்பு மற்றும் வாடிக்கையாளர் தொகுப்பு

சில்லறை வாடிக்கையாளர்கள் மற்றும் சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் (முதல் பெருநிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிகக் குழுமங்கள் வரை முழு பொருளாதாரத் தளத்திற்கும் விரிவான கடன் வழங்கல், முதலீடு, வர்த்தக நிதி மற்றும் திறைசேரி தீர்வுகளின் மூலம் சேவை வழங்குகிறது.

## 03 அனைவரும் உள்ளடங்கலான நாடு தழுவிய பரவல்

2,400 இற்கும் மேற்பட்ட உள்ளூர் வாடிக்கையாளர் தொடர்பு மையங்கள் மூலம் 16.0 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களை இணைக்கும் ஒரு உண்மையான தேசிய வங்கியானது, கிராமப்புற சமூகங்கள், பெண் தொழில்முனைவோர் மற்றும் வளர்ந்து வரும் வணிகப் பிரிவுகளுக்கு நிதி வலுவூட்டலை வழங்குகிறது.

வெளிநாட்டுச் செயல்பாடுகள், வலுவான தொடர்பாளர் வங்கி உறவுகள் மற்றும் பணம் அனுப்பல்களில் அதிக சந்தைப் பங்கை உறுதிப்படுத்துவதன் மூலம் இலங்கையை உலகத்துடன் இணைப்பதுடன், இலங்கையர்களின் வாழ்வாதாரத்தையும் வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களையும் ஆதரிக்கிறது.

## 04 அணுகலை மாற்றியமைக்கும் டிஜிட்டல் புத்தாக்கம்

ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டணச் சூழல்களின் மூலம், 23% வளர்ச்சியுடன், 88% இற்கும் அதிகமான தடையற்ற டிஜிட்டல் வங்கி கொடுக்கல்வாங்கல்களை சாத்தியப்படுத்துகிறது.

## 05 நிலைபேண்தகு தன்மை மற்றும் சமூகப் பொறுப்பு

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, கழிவு முகாமைத்துவம் மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளின் நிதியிடல் ஆகியவற்றை ஆதரிப்பதன் மூலமும் தேசிய வளர்ச்சி முன்னுரிமைகளை வலுப்படுத்துவதற்காகவும் இலங்கையில் ரூ. 20.0 பில்லியன் பெறுமதியான மிகப்பெரிய நிலைபேண்தகு முறியை வெளியீடு செய்துள்ளது.

## 06 நம்பிக்கை, பாரம்பரியம் மற்றும் தேசிய தாக்கம்

86 ஆண்டுகால நம்பகமான சேவையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டு, உள்ளூர் மற்றும் உலகளாவிய பாராட்டுக்களின் மூலம் அங்கீகரிக்கப்பட்டு, தேசிய வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டிற்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குகிறது.

# இலங்கை வங்கி பற்றிய கண்ணோட்டம்

## குழுமக் கட்டமைப்பு மற்றும் முக்கிய வணிக பிரிவுகள் GRI 2-6




* செயல்பாட்டில் இல்லை

** BOC Management & Support Services (Private) Limited என முன்னர் அழைக்கப்பட்டது

### சில்லறை வங்கிச் சேவை

சில்லறை வங்கிச் சேவையானது தனிநபர்கள், தொழில்முனைவோர் மற்றும் சிறு வணிகங்களின் மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட கடன் வழங்கல், வைப்புத்தொகை, கட்டணத் தீர்வுகள் மற்றும் கொடுக்கல்வாங்கல் வங்கிச் சேவைகள் உள்ளிட்ட விரிவான நிதியியல் தீர்வுகளை வழங்குகிறது. சாதாரண சில்லறை வாடிக்கையாளர்கள் முதல் வசதி படைத்த பிரிவினர் வரை பரந்த அளவிலான வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்யும் இந்த வழங்கல்கள், அணுகல் வசதி, சௌகரியம் மற்றும் தடையற்ற நிதி நிர்வாகத்தை உறுதி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இது வாடிக்கையாளர்களின் நிதிப் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களுக்கு வலுவூட்டுகிறது.

### கூட்டாண்மை மற்றும் கரை கடந்த வங்கிச் சேவை

கூட்டாண்மை மற்றும் கரை கடந்த வங்கிச் சேவையானது நிறுவனங்களுக்கான நிதியளிப்பு, வைப்புச் சேவைகள், திட்ட நிதியளிப்பு மற்றும் வர்த்தகம் சார்ந்த சேவைகளை வழங்குகிறது. தனியார், அரசு மற்றும் கடல் கடந்த செயல்பாடுகளில் உள்ள சிறிய, நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்கள் மற்றும் நிறுவன ரீதியான வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்யும் இந்தத் தீர்வுகள், வணிக விரிவாக்கத்தை ஆதரிக்கவும், எல்லை கடந்த பரிவர்த்தனைகளை எளிதாக்கவும் மற்றும் நிதித் திறனை வலுப்படுத்தவும் கட்டமைக்கப்பட்டுள்ளன. அதேவேளையில், சிக்கலான மற்றும் மாறும் சந்தைச் சூழல்களைக் கையாள்வதற்கு இது வாடிக்கையாளர்களுக்கு உதவுகிறது.

### சர்வதேச, திறைசேரி, முதலீடு மற்றும் வெளிநாட்டுச் செயல்பாடுகள்

சர்வதேச செயல்பாடுகள் வெளிநாட்டு நாணயப் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் எல்லை கடந்த நிதிச் சேவைகளைக் கண்காணிப்பதுடன், உலகளாவிய வர்த்தகம், பணம் அனுப்புதல் மற்றும் சர்வதேச வங்கித் தேவைகளைத் தடையின்றி எளிதாக்குவதை உறுதி செய்கிறது. திறைசேரி திரவத்தன்மை முகாமைத்துவம், நிதியளிப்பு மற்றும் இருப்புநிலைக் குறிப்பை உகந்ததாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. முதலீட்டுப் பிரிவு நீண்ட கால நிதி நோக்கங்களுடன் சீரமைக்கப்பட்ட உத்திசார் முதலீட்டுச் செயல்பாடுகள் மூலம் சொத்துப் பட்டியல் வளர்ச்சியைத் தூண்டுகிறது. எமது வெளிநாட்டுச் செயல்பாட்டுக் குழுமம் எமது சர்வதேச கிளை வலையமைப்பை நிர்வகித்து வலுப்படுத்துவதுடன், முக்கிய சர்வதேச சந்தைகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறனுடன் சேவை செய்ய உலகளாவிய இருப்பை உறுதிப்படுத்துகிறது.

எமது தயாரிப்புக்கள் பற்றி அறிய QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்
www.boc.lk

## பல்வகைத்தன்மைகொண்ட தயாரிப்பு பட்டியல்

இலங்கை வங்கியின் பல்வகைப்படுத்தப்பட்ட தயாரிப்புத் பட்டியலானது, பரந்த அளவிலான வாடிக்கையாளர்களின் மாறிவரும் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதேவேளையில், இலங்கையின் பன்முகத் துறைப் பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பதற்கான ஒரு திட்டமிட்ட உபாயத்தைப் பிரதிபலிக்கிறது. பாரம்பரிய வங்கித்தொழில் எல்லைகளுக்கு அப்பால் சென்று, தனிநபர்கள், தொழில்முனைவோர், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள், பெருநிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் தேசிய முன்னேற்றத்திற்கு அடித்தளமாக விளங்கும் பெரிய வணிகக் குழுமங்களுக்குச் சேவை செய்யும் வகையில் வங்கி தனது வழங்கல்களைத் தொடர்ந்து விரிவுபடுத்துகிறது.

தனது தயாரிப்பு வரிசையைத் தொடர்ச்சியாக விரிவுபடுத்துவதன் மூலமும் செம்மைப்படுத்துவதன் மூலமும், வங்கியின் தீர்வுகள் தற்போதைய சூழலுக்குப் பொருத்தமானதாகவும், போட்டித்தன்மை வாய்ந்ததாகவும் மற்றும் வளர்ந்து வரும் சந்தை வாய்ப்புகளுக்கு ஏற்ப பதிலளிக்கக்கூடியதாகவும் இருப்பதை வங்கி உறுதி செய்கிறது. இந்த உபாயகரமான பல்வகைப்படுத்தல், பல்வேறு துறைகளில் வாடிக்கையாளர் உறவுகளை வலுப்படுத்துவதுடன், நிலையான பொருளாதார மற்றும் சமூகத் தாக்கத்தை உருவாக்குகிறது. இது உள்ளடக்கிய தேசிய வளர்ச்சிக்கான ஒரு வினையூக்கியாக இலங்கை வங்கியின் வகிபாகத்தை மேலும் உறுதிப்படுத்துகிறது.

## எமது தயாரிப்புகள் மற்றும் சேவைகள்

| நோக்கம் | | தனிநபர்கள் | MSMEs | கூட்டாண்மைகள் | அரச நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|
| மேலதிக நிதியை முதலீடு செய்தல் மற்றும் சேமித்தல் | தவணை வைப்புக்கள், முதலீட்டு கருவிகள் மற்றும் கடன் பத்திரங்கள் | ✓ | ✓ | ✓ | ✓ |
| | சேமிப்புத் தயாரிப்புகள் | ✓ | ✓ | ✓ | ✓ |
| கொடுக்கல்வாங்கல் மற்றும் நிதி முகாமைத்துவம் | தினசரி கொடுக்கல்வாங்கல்களுக்கான நடைமுறை கணக்குகள் | ✓ | ✓ | ✓ | ✓ |
| | பண முகாமைத்துவ தீர்வுகள். | ✓ | ✓ | ✓ | ✓ |
| | சொத்து மற்றும் பட்டியல் முகாமைத்துவ சேவைகள் | ✓ | ✓ | ✓ | ✓ |
| கடன் தீர்வுகள் | தனிநபர் கடன்கள் | ✓ | | | |
| | வீட்டு வசதிக் கடன்கள் | ✓ | | | |
| | வர்த்தக நிதி | ✓ | ✓ | ✓ | ✓ |
| | மேலதிகப் பற்று | ✓ | ✓ | ✓ | ✓ |
| | குத்தகை வசதிகள் | ✓ | ✓ | ✓ | ✓ |
| | திட்டக் கடன்கள் | ✓ | ✓ | ✓ | |
| | அடகுச் சேவை (தங்கக் கடன்கள்) | ✓ | | | |
| | சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் அபிவிருத்திக் கடன்கள் | ✓ | ✓ | | |
| | திட்ட நிதியளிப்பு உள்ளிட்ட வணிகக் கடன்கள் | | ✓ | ✓ | ✓ |
| | தவணைக் கடன்கள் | ✓ | ✓ | ✓ | ✓ |
| | கூட்டுக் கடன்கள் | | | ✓ | ✓ |
| கொடுப்பனவு தீர்வுகள் | டெபிட், கிரெடிட் மற்றும் பயண அட்டைகள். | ✓ | ✓ | ✓ | |
| | டிஜிட்டல் வங்கியியல் வசதிகள் | ✓ | ✓ | ✓ | ✓ |
| | சர்வதேச கொடுப்பனவுத் தீர்வுகள். | ✓ | ✓ | ✓ | ✓ |
| சர்வதேச சேவைகள் | உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் பண அனுப்புதல்கள். | ✓ | ✓ | ✓ | ✓ |
| | தொடர்பாளர் வங்கிச் சேவை, வெளிநாட்டு நாணயம் மற்றும் வர்த்தக சேவைகள் | ✓ | ✓ | ✓ | ✓ |

தனிநபர்கள் | MSMEs | கூட்டாண்மைகள் | அரச நிறுவனங்கள்

## நமது டிஜிட்டல் சூழலமைப்பு

Flex | BOC SMART ONLINE BANKING | BOC SMART PASSBOOK | SMART PAY | BOC META banking | BOC SR

# இலங்கை வங்கி பற்றிய கண்ணோட்டம்

## நாடு தழுவிய மற்றும் உலகளாவிய தடம்

குறிப்பிடத்தக்க சொத்துக்கள், வைப்புத்தொகைகள் மற்றும் கடன்களின் பலத்துடன், இலங்கையின் மிகப்பெரிய வங்கி எனும் தலைமைத்துவத்தை இலங்கை வங்கி தக்கவைத்துள்ளது. முழுமையான வசதிகள் கொண்ட கிளைகள், நடமாடும் கிளைகள், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான், தானியங்கி வங்கி இயந்திரங்கள், பணச் சுழற்சி இயந்திரங்கள் மற்றும்  மற்றும் டீழுஊ ஊழுநெஉவ உள்ளிட்ட 2,400 க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர் தொடர்பு மையங்களைக் கொண்ட அதன் விரிவான வலையமைப்பு, நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள தனிநபர்களுக்கும் வணிகங்களுக்கும் நிதிச் சேவைகள் கிடைப்பதை உறுதி செய்கிறது. இது நிதியியல் உள்ளடக்கத்திற்கான வங்கியின் அர்ப்பணிப்பை வலுப்படுத்துகிறது.

இலங்கைக்கு அப்பால், வங்கி ஒரு வலுவான சர்வதேச இருப்பை நிலைநாட்டியுள்ளதுடன், எல்லைகளைக் கடந்து சமூகங்களுக்கும் வணிகங்களுக்கும் சேவை செய்கிறது. இது இந்தியா, மாலைதீவு மற்றும் சீசெல்ஸ் ஆகிய நாடுகளில் கிளைகளையும், ஹல்ஹுமாலேயில் ஒரு வரையறுக்கப்பட்ட சேவை கிளையையும், ஐக்கிய இராச்சியத்தின் லண்டனில் முழுமையான உரிமையுடைய துணை நிறுவனத்தையும் இயக்குகிறது. இந்த சர்வதேச செயல்பாடுகள் வெளிநாடுகளில் உள்ள இலங்கை வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளிப்பது மட்டுமல்லாமல், வங்கியை உலகளாவிய நிதிச் சந்தைகளுடன் இணைக்கின்றன. இது உள்நாட்டு வளர்ச்சிக்கும் சர்வதேச வாய்ப்புகளுக்கும் இடையிலான ஒரு பாலமாக வங்கியின் பங்கை உறுதிப்படுத்துகிறது.

### சமூக வலைதள இருப்பு

### வெளிநாட்டு இருப்பு




Scan to view the list on the web for Correspondent Banks, Exchange Houses and Overseas Representatives

| கிளைகள் | வரையறுக்கப்பட்ட சேவை கிளைகள் | நடமாடும் கிளைகள் | சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் நிலையங்கள் | தானியங்கி வங்கி இயந்திரங்கள் மற்றும் பணச் சுழற்சி இயந்திரங்கள் | BOC Connect | தொடர்பாளர் வங்கி உறவுகள் | பரிவர்த்தனை கம்பனிகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 584 | 72 | 10 | 15 | 1,506 | 222 | 710 | 95 |

### உள்நாட்டு இருப்பு



# முக்கிய முன்னேற்றப் புள்ளிகள்

## 1939

இலங்கை வங்கிச் சட்டத்தின் கீழ் தேசத்தின் முதலாவது சுதேசிய வங்கியாகக் கூட்டிணைக்கப்பட்டது.

## 1941

கண்டியில் முதலாவது கிளையை ஆரம்பித்தது.

## 1949

லண்டனில் வங்கியின் முதலாவது வெளிநாட்டுக் கிளையை நிறுவியது.

## 1961

1961 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் தேசியமயமாக்கப்பட்டது.

## 1973

விவசாயக் கடன் வழங்கலை வலுப்படுத்துவதற்காக விவசாய சேவை மையங்களினூடாகத் தனது உப கிளை வலையமைப்பை விரிவுபடுத்தியது.

## 1979

கரை கடந்த செயல்பாடுகளுக்காக வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவை நிறுவியது.

## 1981

மாலைதீவின் மாலே நகரில் முழுமையான கிளையொன்றைத் திறந்தது.

## 1989

VISA International நிறுவனத்துடன் இணைந்து இலங்கையின் முதலாவது கடன் அட்டையை அறிமுகப்படுத்தியது.

## 1995

இந்தியாவின் சென்னையில் ஒரு கிளையைத் திறந்தது.

## 2008

முதலாவது பட்டியலிடப்பட்ட, ஐந்து ஆண்டு கால ரூபா தொகுதிக்கடன்களை வெளியிட்டது.

## 2012

சிங்கப்பூர் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட அமெரிக்க டொலர் மதிப்பிலான பிணைகளை வெளியிட்ட முதலாவது இலங்கை வங்கியாகத் திகழ்ந்தது.

## 2014

75 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியதுடன், ஆபிரிக்காவிற்குள் நுழைவதைக் குறிக்கும் வகையில் சீசெல்ஸில் ஒரு கிளையைத் திறந்தது.

## 2016

மூன்று டிரில்லியன் பெறுமதியான இருப்புநிலைக் குறிப்பை எட்டியது.

## 2017

'B-App' மொபைல் வங்கித் தளத்தைத் தொடங்கியதுடன், 'Branch on Wheels' எனும் புத்தாக்கமான நடமாடும் கிளைக் கருத்தை அறிமுகப்படுத்தியது.

## 2018

கண்டி சிட்டி சென்டரில் முன்னோடி "BOC DIGI" கிளையை நிறுவியதுடன், NFC வசதி கொண்ட மின்னணு அட்டைகளை அறிமுகப்படுத்தியது.

## 2019

மாலைதீவின் ஹுல்ஹுமாலேயில் நான்காவது சர்வதேச கிளையைத் திறந்தது.

## 2020

கொவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட வணிகங்களை ஆதரிப்பதற்காக வணிக மறுமலர்ச்சி மற்றும் புனர்வாழ்வுப் பிரிவை (BRRU) நிறுவியது.

## 2021

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி ஏற்றுமதியாளர்களை வலுப்படுத்த 'Export Circle' ஐத் தொடங்கியதுடன், 'BOC Connect' ஊடாக முகவர் வங்கிச் சேவைக் கருத்தை அறிமுகப்படுத்தியது.

## 2022

சர்வதேச வாடிக்கையாளர்களை ஆதரிப்பதற்காக 'BOC ஏற்றுமதி வட்டம்' ஐ நிறுவியதுடன், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் மேம்பாட்டை எளிதாக்க 'BOC SME வட்டம்' ஐ அறிமுகப்படுத்தியது.

## 2023

BASEL III இணக்கமான, இரண்டாம் தர (அடுக்கு 2) பட்டியலிடப்பட்ட, மீளப்பெறத்தக்க தொகுதிக் கடன்களை வெளியிட்டது.

## 2024

வரிக்கு முன்னரான இலாபம் ரூ. 100.0 பில்லியனையும், குழுமத்தின் சொத்துக்களில் ரூ. 5.0 டிரில்லியனையும் தாண்டியது.

## 2025

'BOC Flex' எனும் அனைத்தையும் உள்ளடக்கிய மொபைல் வங்கிச் செயலியைத் தொடங்கியது.

இலங்கையின் முதலாவது மக்கும் தன்மை கொண்ட (Biodegradable) வங்கி அட்டையை அறிமுகப்படுத்தியது.

பசுமை மற்றும் சமூகக் கடன் வழங்கலை விரிவுபடுத்துவதற்காக மிகப்பெரிய நிலைபேண்தகு முறியை (Sustainability Bond) வெளியிட்டது.

# செயலாற்றத்தின் சிறப்பம்சங்கள்

## நிதியியல் செயலாற்றம்

| நிதியியல் செயலாற்றம் | வங்கி | | | குழுமம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2025 | 2024 | மாற்றம் % | 2025 | 2024 | மாற்றம் % |
| **தொழிற்பாட்டு முடிவுகள் (ரூபா மில்லியனில்)** | | | | | | |
| மொத்த வருமானம் | **548,623** | 485,405 | 13.0 | **558,675** | 494,922 | 12.9 |
| தேறிய வட்டி வருமானம் | **206,936** | 167,552 | 23.5 | **211,843** | 171,728 | 23.4 |
| நிதி சேவைகளில் வரிக்கு முன்னரான இலாபம் | **152,708** | 135,300 | 12.9 | **154,068** | 136,925 | 12.5 |
| வரிக்கு முன்னரான இலாபம் | **120,827** | 106,904 | 13.0 | **121,934** | 108,221 | 12.7 |
| வரிக்குப் பின்னரான இலாபம் | **76,007** | 64,387 | 18.0 | **76,471** | 65,061 | 17.5 |
| அரசாங்கத்திற்கான பெறுமதி | **89,395** | 65,931 | 35.6 | **90,541** | 66,969 | 35.2 |
| **நிதியியல் நிலைமை (ரூபா மில்லியனில்)** | | | | | | |
| மொத்த சொத்துக்கள் | **5,467,551** | 4,985,139 | 9.7 | **5,567,050** | 5,048,671 | 10.3 |
| மொத்த கடன்களுக்கு முற்பணங்கள் | **2,654,272** | 2,436,162 | 9.0 | **2,726,686** | 2,482,029 | 9.9 |
| வாடிக்கையாளருக்கு செலுத்தவேண்டிய வைப்புக்கள் | **4,388,586** | 4,208,603 | 4.3 | **4,447,653** | 4,245,532 | 4.8 |
| மொத்த பொறுப்புக்கள் | **5,101,751** | 4,682,579 | 9.0 | **5,179,071** | 4,726,224 | 9.6 |
| மொத்த உரிமையாண்மை | **365,800** | 302,560 | 20.9 | **387,979** | 322,448 | 20.3 |
| **பங்கொன்றுக்கான தரவு (ரூபா)** | | | | | | |
| பங்கொன்றுக்கான அடிப்படை உழைப்பு | **2,988** | 2,575 | 16.0 | **3,011** | 2,600 | 15.8 |
| பங்கொன்றுக்கான தேறியச் சொத்து பெறுமதி | **14,217** | 12,102 | 17.5 | **15,037** | 12,852 | 17.0 |
| **செயலாற்ற விகிதங்கள் (%)** | | | | | | |
| சராசரி சொத்துக்கள் மீதான வருவாய் | **2.3** | 2.3 | - | **2.3** | 2.3 | - |
| சராசரி உரிமையாண்மை மீதான வருவாய் | **22.7** | 23.2 | (0.5) | **21.5** | 21.9 | (0.4) |
| வட்டி எல்லை | **4.0** | 3.6 | 0.4 | **4.0** | 3.6 | 0.4 |
| வருமானத்திற்குச் செலவுகள் | **33.0** | 40.1 | (7.1) | **34.1** | 41.3 | (7.2) |
| வைப்புகளுக்கான கடன்கள் | **60.5** | 57.9 | 2.6 | **61.3** | 58.5 | 2.8 |
| உரிமையான்மையிற்குக் கடன் | **25.5** | 26.8 | (1.3) | | | |
| குறைபாடு ஏற்பாடு மொத்த கடன் மற்றும் முற்பணங்களின் சதவீதமாக | **10.6** | 10.6 | - | **10.4** | 10.5 | (0.1) |
| செயற்படாக் கடன்கள் (கட்டம் 3) | **5.6** | 7.2 | (1.6) | | | |
| குறைபாட்டிற்கு (கட்டம் 3) கட்டம் 3 கடன்கள் | **57.9** | 53.6 | 4.3 | | | |
| **நியதிச் சட்ட விகிதங்கள் (%)** | | | | | | |
| திரவத்தன்மை காப்பீட்டு விகிதம் (ரூபா) (குறைந்தபட்சத் தேவை - 100%) | **296.0** | 329.0 | (33.0) | | | |
| திரவத்தன்மை காப்பீட்டு விகிதம் (அனைத்து நாணயம்) (குறைந்தபட்சத் தேவை - 100%) | **260.4** | 269.6 | (9.2) | | | |
| தேறிய நிலையான நிதியிடல் விகிதம் (குறைந்தபட்சத் தேவை - 100%) | **156.6** | 157.9 | (1.3) | | | |
| முடுக்கி விகிதம் (குறைந்தபட்சத் தேவை - 3%) | **4.1** | 4.4 | (0.3) | **4.3** | 4.6 | (0.3) |
| **மூலதன போதுமாந்தன்மை விகிதம் (%)** | | | | | | |
| பொது மூலதன அடுக்கு 1 மூலதனம் (குறைந்தபட்சத் தேவை - 8.50%) | **11.4** | 12.0 | (0.6) | **11.5** | 12.2 | (0.7) |
| அடுக்கு 1 மூலதனம் (குறைந்தபட்ச தேவை - 10.00%) | **12.4** | 13.0 | (0.6) | **12.4** | 13.1 | (0.7) |
| மொத்த மூலதனம் (குறைந்தபட்ச தேவை - 15.00%) | **16.9** | 16.6 | 0.3 | **16.8** | 16.7 | 0.1 |

# பெறுமதி உருவாக்கத்தின் சிறப்பம்சங்கள்

## ஒவ்வொரு பரிமாணத்திலும் செயலாற்றும்

### வங்கித்தொழில் பரப்பில் தலைமைத்துவம்

**சந்தை தலைமைத்துவம் மற்றும் தாக்கம்**

| | 2025 | 2024 | மாற்றம் |
|---|---|---|---|
| மிகப்பெரிய சொத்துத் தளம் (ரூ. டிறில்லியன்) | 5.5 | 4.9 | 10% |
| மிகப்பெரிய வைப்புத் தளம் (ரூ. டிறில்லியன்) | 4.4 | 4.2 | 5% |
| வரிக்கு முன்னரான மிக உயர்ந்த இலாபம் (ரூ. பில்லியன்) | 120.8 | 106.9 | 13% |
| மிக உயர் வர்த்தக நாமப் பெறுமதி (ரூ. பில்லியன்) | 57.4 | 50.2 | 14% |

### பொருளாதார பெறுமதி உருவாக்கம்

**தேசிய சுபீட்சத்தை உந்துதல்**

| | 2025 | 2024 | மாற்றம் |
|---|---|---|---|
| அரசிற்கான பெறுமதி (ரூ. பில்.) | 89.4 | 65.9 | 36% |
| மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ரூ. பில்.) | 2,654.3 | 2,436.2 | 9% |
| நுண் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் நிதியிடல் பட்டியல் (ரூ. பில்.) | 319.9 | 249.4 | 28% |
| புதுப்பிக்கப்பட்ட வர்த்தகங்களின் மொத்த வெளிப்படுத்துகை (ரூ. பில்.) | 100.8 | 98.4 | 2% |

### வாடிக்கையாளர்கள் மற்றும் அணுகல் (%)

**அணுகல் மற்றும் நுழைவுத்தன்மையுடன் தேசத்திற்கு சேவையாற்றுவது (எண்ணிக்கை)**

| | 2025 | 2024 | மாற்றம் |
|---|---|---|---|
| வாடிக்கையாளர் நுழைவு (%) | 76 | 74 | 2 |
| வாடிக்கையாளர் தொடுமுனைகள் (எண்.) | 2,413 | 2,294 | 119 |
| தன்னியக்கப்படுத்தப்பட்ட வேலை வழிமுறைகள் (எண்.) | 805 | 806 | (1) |
| New products (எண்.) | 10 | 9 | 1 |
| Customers revived (எண்.) | 233 | 274 | (41) |

### டிஜிட்டல் வழிமுறைகள்

**எதிர்காலத்திற்கான ஸ்மார்ட் வங்கியியலை துரிதப்படுத்தல்**

| | 2025 | 2024 | மாற்றம் |
|---|---|---|---|
| டிஜிட்டல் பரிவர்த்தனைகள் (%) | 88 | 88 | - |
| டிஜிட்டல் பரிவர்த்தனைகள் வளர்ச்சி (%) | 23 | 31 | (8) |
| டிஜிட்டல் தொடுமுனைகள் (இல.) | 1,510 | 1,503 | 7 |
| பணிப்பாய்வு தானியக்கம் (இல.) | 11 | 3 | 8 |

### சமூக அதிகாரமளித்தல் மற்றும் நிதியியல் உள்ளடக்கம்

**ஒவ்வொரு இலங்கையருக்கும் வாய்ப்புக்களை கிடைக்கச்செய்தல்**

| | 2025 | 2024 | மாற்றம் |
|---|---|---|---|
| புதிய நுண்பாகக் கடன்கள் (ரூ. பில்.) | 25.9 | 17.6 | 47% |
| பெண்களினால் முன்னெடுக்கப்பட்ட வர்த்தகங்களுக்கான புதிய நுண்பாக கடன்கள் (ரூ. பில்.) | 7.2 | 4.8 | 50% |
| புதிய BOC Connect முகவர்கள் (எண்.) | 110 | 35 | 75 |
| புதிய BOC மித்துரு சங்கங்கள் (எண்.) | 212 | 330 | (118) |
| புதிய BOC கம்மான நிறுவப்பட்டவை (எண்.) | 2 | 2 | - |
| அசுவெசும திட்டத்தின் கீழ் திறக்கப்பட்ட கணக்குகள் (ரூ. மில்.) | 780.5 | 207.3 | 277% |

### மனித மூலதன வலிமை

**நமது சேவைப் பிரிவுகளுக்கு அதிகாரமளித்தல்**

| | 2025 | 2024 | மாற்றம் |
|---|---|---|---|
| ஊழியர்கள் மீதான முதலீடு | 45.7 | 40.3 | 13% |
| பயிற்சி மற்றும் அபிவிருத்தி மீதான முதலீடு (ரூ. மில்.) | 348.0 | 374.9 | (7%) |
| தக்கவைப்பு வீதம் (%) | 97 | 95 | 2 |
| பதவி உயர்வுகள் (எண்.) | 431 | 714 | (283) |
| ஆட்சேர்ப்புக்கள் (எண்.) | 952 | 75 | 877 |

### சுற்றுச்சூழல் மேற்பார்வை

**எதிர்காலத்திற்கு பொறுப்பான வங்கித்தொழில்**

| | 2025 | 2024 | மாற்றம் |
|---|---|---|---|
| பசுமை நிதியிடல் பட்டியல் (ரூ. பில்.) | 10.2 | 6.1 | 67% |
| மறுசுழற்சிசெய்யப்பட்ட கடதாசி (மெ. தொ.) | 14.4 | 35.9 | (21.5) |
| மறுசுழற்சிசெய்யப்பட்ட கடதாசிக்குச் சமமான சேமிப்புக்கள் | | | |
| மரங்கள் (எண்.) | 244 | 610 | (366) |
| எண்ணெய் (லீட்டர்) | 25,202 | 63,003 | (37,801) |
| மின்சாரம் (கிவாம) | 57,440 | 143,596 | (86,156) |
| நீர் (லீட்டர்கள்) | 456,361 | 1,140,870 | (684,509) |
| நிலத்தை நிரப்புதல் (மீற்றர் கனம்) | 43 | 108 | (65) |
| புதிய பசுமைக் கட்டடங்கள் (எண்.) | 2 | - | 2 |

# விருதுகள் மற்றும் பாராட்டுக்கள்

## பல்வேறு தளங்களில் அங்கீகரிக்கப்பட்ட சிறந்து விளங்கும் ஒரு பாரம்பரியம்

நிதியியல் சேவைகள், புத்தாக்கம் மற்றும் ஆளுமை ஆகியவற்றில் இலங்கை வங்கி தொடர்ச்சியான தலைமைத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளது. உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பலதரப்பட்ட தளங்களில் வங்கி ஏராளமான பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. நிலைபேறான முயற்சிகள், டிஜிட்டல் புத்தாக்கம் மற்றும் உருமாற்ற வங்கித் தீர்வுகள் ஆகியவற்றை அங்கீகரிக்கும் மதிப்புமிக்க விருதுகள் முதல், வர்த்தகநாம தலைமைத்துவம், கூட்டாண்மை அறிக்கைப்படுத்தல் மற்றும் செயல்பாட்டுத் திறன் போன்றவற்றுக்கான கௌரவங்கள் வரை, இலங்கை வங்கியின் சாதனைகள் பெறுமதி உருவாக்கத்திற்கான ஒரு முழுமையான அணுகுமுறையைப் பிரதிபலிக்கின்றன.

2025 ஆம் ஆண்டின் உலகின் சிறந்த 1,000 வங்கிகள் (நாட்டிற்கான தரமிடலில் முதலாமிடம்)
த பெங்கர் இதழ் (இங்கிலாந்து)

இலங்கையில் மிகவும் பெறுமதியான வணிகச் சின்னம் - 2025
பிறாண்ட் பினான்ஸ் லங்கா

த பெங்கர் இஸ்லாமிய வங்கித்தொழில் விருது - ஆசியா 2025
த பெங்கர் இதழ் (இங்கிலாந்து)

ஸ்லிம்-காந்தார் மக்கள் விருதுகள் 2025
2025ஆம் ஆண்டின் மக்களின் வங்கிச் சேவை வர்த்தகச் சின்னம்

இலங்கையில் மிகச் சிறந்த வங்கி
ஐகொனிக் விருதுகள் 2025
த சிலோன் யுனைடெட் பிஸ்னெஸ் அலையன்ஸ்



சிறந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான சேவை வழங்குநர்
இலங்கையின் சிறந்த மொபைல் செயலி - பிளெக்ஸ்
ஐகொனிக் விருதுகள் 2025
த சிலோன் யுனைடெட் பிஸ்னெஸ் அலையன்ஸ்

தன்னிகரற்ற செயல்பாடு 2024/ 2025 - தங்க விருது
ஆண்டின் சிறந்த சந்தைப்படுத்தல் பிரச்சாரம் 2024/ 2025 - தங்க விருது
எஸ்.எல்.ஐ.எப்.ஐஜ விருதுகள்

ஆண்டின் சிறந்த வங்கி
ஆண்டின் சிறந்த சில்லறை வங்கிச் சேவை
ஆண்டின் மிகவும் நம்பகமான கடன் அட்டை (Credit Card) வர்த்தக சின்னம்
சிறந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான சேவை வழங்குநர்
மக்களின் சிறந்த சாதனையாளர் விருதுகள் 2025 (பிப்பள்ஸ் எக்ஸலன்சி அவார்ட்ஸ்)

ஆண்டின் சிறந்த வாடிக்கையாளர் சேவை வழங்கும் வங்கி
ஆண்டின் மிகவும் புதுமையான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான வங்கி
ஆண்டின் சிறந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான வங்கி
மக்கள் பினக்கல் விருதுகள் 2025

சிறந்த முறையில் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த அறிக்கைக்கான விருதுகள்
வெண்கல விருது (அரசுத் துறை வங்கிகள்)
சாபா விருதுகள்

பத்து சிறந்த ஒருங்கிணைந்த அறிக்கைகள் (கூட்டு வெற்றியாளர்)
சிறந்த ஒருங்கிணைந்த அறிக்கை (அரசு வங்கித் துறை)
சி.எம்.ஏ சிறப்புத்திறமை விருதுகள் 2025

அரசு வங்கிகளுக்கிடையிலான சிறப்புத்திறமைக்கான வெள்ளி விருது
டேக்ஸ் விருதுகள் 2025
சி.ஏ. சிறிலங்கா (இலங்கை பட்டய கணக்கறிஞர்கள் நிறுவனம்)

பங்குதாரர்களின் மாறிவரும் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் திறன், எமது வாடிக்கையாளர்களுடனான நம்பிக்கையை வலுப்படுத்துதல் மற்றும் முன்னுதாரணமான தரங்களை நிலைநிறுத்துதல் என்பவற்றை இந்த பல்துறை அங்கீகாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. ஒவ்வொரு விருதும் எமது குழுவினரின் அர்ப்பணிப்பு, நிபுணத்துவம் மற்றும் தொலைநோக்குப் பார்வைக்கு ஒரு சான்றாகும். இவை இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் உள்ளடங்கலான வளர்ச்சிக்கான ஊக்கியாக எமது பங்கினை மேலும் வலுப்படுத்துகின்றன.

லங்காபே டெக்னோவே'ன் விருதுகள் 2025
சில்லறை கொடுப்பனவுகளுக்கான சிறந்த வங்கி - தங்க விருது
டிஜிட்டல் அரசாங்கக் கொடுப்பனவுகளுக்கான சிறந்த வங்கி - தங்க விருது
நிதி உள்ளடங்கலுக்கான ஆண்டின் சிறந்த வங்கி (பிரிவு A) - தங்க விருது
வாடிக்கையாளர் சௌகரியத்தில் சிறந்த விளங்கும் வங்கி (பிரிவு A) - தங்க விருது

ஒட்டுமொத்த விருது - டிஜிட்டல் கொடுப்பனவுகளில் சிறந்து விளங்கியமைக்கான வெள்ளி விருது (வங்கி நிறுவனங்கள்)

ஆண்டின் சிறந்த லங்காபே (LankaPay) அட்டை அங்கீகரிப்பாளர் - தகுதி விருது
மிகவும் பிரபலமான டிஜிட்டல் கொடுப்பனவு தயாரிப்பு (அரசு வங்கிகள்) - தகுதி விருது



திட்ட மேலாண்மை மற்றும் ஐசிடி (ICT) விருதுகள்
வங்கி மற்றும் நிதிச் சேவைத் துறை - தங்க விருது
திட்ட மேலாண்மை விருதுகள் - பிஓசி பிளெக்ஸ் (BOC Flex)
தேசிய திட்ட மேலாண்மை சிறப்புத்திறமை விருதுகள் 2025

பொதுத்துறையில் டிஜிட்டல் அரசாங்கத்தின் கீழ் வழங்கப்பட்ட தங்க விருது - பிஓசி பிளெக்ஸ் (BOC Flex)
தேசிய தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப (ICT) விருதுகளில் ஆண்டின் சிறந்த ஐசிடி கண்டுபிடிப்பு - பிஓசி பிளெக்ஸ் (BOC Flex)

சிறந்த மொபைல் பயனாளர் அனுபவத்தைக் கொண்ட வங்கி இணையதளம் - தங்க விருது
சிறந்த வங்கி இணையதளம் - தங்க விருது
2025 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த வெற்றியாளர் - வெண்கல விருது
Bestweb.lk விருதுகள் 2025

இலங்கை பசுமைக் கட்டிட சபையினால் மதிப்பிடப்பட்ட "பசுமைக் கட்டிடச் சான்றிதழ்" - பிளாட்டினம் விருது

வங்கித் துறை - தகுதி விருது
சி.ஐ.பி.எம் கிரேட் எச்ஆர் விருதுகள் 2025

ஆண்டின் சிறந்த இஸ்லாமிய வங்கி ஊழியர் - வெண்கல விருது
எஸ்.எல்.ஐ.பி.எ.ஃப்.ஐ விருதுகள் 2024/ 2025



# எதிர்காலத்திற்காக வடிவமைக்கப்பட்ட வலிமை

பல தசாப்த கால பொருளாதார சுழற்சிகள், கொள்கை மாற்றங்கள் மற்றும் தேசிய நிச்சயமற்ற நிலைகளிலும், இலங்கை வங்கி ஒரு நோக்கத்துடன் தன்னை மாற்றியமைத்து, உறுதிப்பாடின் தூணாக இருந்து வருகிறது. அசைக்க முடியாத நம்பிக்கையை அடித்தளமாகக் கொண்டு, வங்கி தொடர்ச்சியாக சிக்கல்களை உள்வாங்கி, மீண்டெழும் திறனுடன் பதிலளித்து, மேலும் வலிமையுடன் உருவெடுத்து இது தேசம் நம்பிக்கையுடன் முன்னோக்கிச் செல்ல உதவுகிறது. வங்கியின் இந்தப் பயணத்தை ஒரு "நம்பிக்கையின் கனசதுரம்" எனப் புரிந்து கொள்ளலாம் - அதன் மையத்தில் உறுதியானது, வலுவான விளிம்புகளால் வரையறுக்கப்பட்டது மற்றும் அனைத்து பரிமாணங்களிலும் சமநிலையானது. இந்த மையம் உறுதிப்பாட்டினை வழங்கும் அதே வேளையில், அதன் விளிம்புகள் வங்கி வளர்வதற்கும், பரிணமிப்பதற்கும், எதிர்காலத்தை நோக்கி தெளிவுடன் வழிநடத்துவதற்கும் வடிவம், வழிகாட்டல் மற்றும் வலிமையைத் தருகின்றன.

**மையப்பொருள்: நம்பிக்கை**

**தலைமைத்துவத்தின் உயிர்நாடியாக நிலைத்தன்மை வழங்கும் சக்தியாக இது திகழ்கிறது.**

பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு மத்தியில் நம்பிக்கையை உறுதிப்படுத்தவும், பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாக்கவும், "தேசத்தின் வங்கி" எனும் தனது பங்கினை நிலைநாட்டவும், இலங்கை வங்கியின் தலைமைத்துவம் பரிணமித்துள்ள மையப்புள்ளியாக இந்த "நம்பிக்கை" காணப்படுகிறது.

## கனசதுரத்தின் விளிம்புகள்: செயல்பாட்டில் தலைமைத்துவம்

### பல் பரிமாண தொடர்புகள்

தனிநபர்கள், தொழில்முயற்சிகள் மற்றும் அரசைத் தடையின்றி இணைக்கும் வங்கியின் திறன் அதன் ஒருமைப்பாட்டை வலுப்படுத்தியுள்ளது. இது பங்குதாரர்களிடையே இணக்கத்தை உருவாக்கி தேசிய முன்னுரிமைகளை வலுப்படுத்துகிறது. நோக்கத்துடனான டிஜிட்டல் மயமாக்கல் மூலம் இந்த இணைப்பு பெருமளவில் சாத்தியமாகிறது. இது டிஜிட்டல் கொடுப்பனவு கட்டமைப்பின் விரிவாக்கத்தை ஊக்குவிப்பதுடன், பல வாடிக்கையாளர் குழுக்களின் விரைவான பின்பற்றல் மற்றும் பாதுகாப்பான மற்றும் எளிதில் அணுகக்கூடிய நிதித் தீர்வுகளை உட்பொதிக்கிறது.

### துரிதம் மற்றும் பதிலளிக்கும் திறன்

ஒவ்வொரு விளிம்பும் சந்தை தளம்பல்கள் மற்றும் பங்குதாரர்களின் வளர்ந்து வரும் தேவைகளை முன்கூட்டியே கணித்து, வேகம் மற்றும் ஒழுக்கமான செயல்பாட்டுடன் தீர்க்கமாக எதிர்கொள்ளும் இலங்கை வங்கியின் திறனைப் பிரதிபலிக்கிறது. இந்த சுறுசுறுப்பு, தேசிய முன்னுரிமைகளுடன் வங்கி தன்னை விரைவாக இணைத்துக் கொள்வதில் தெளிவாகத் தெரிகிறது. நிதியியல் உள்ளடக்கத்தை வலுப்படுத்துவதில் இலங்கை வங்கி தொடர்ந்து ஒரு ஊக்கியாகச் செயல்படுகிறது.

### மீண்டெழும் தலைமைத்துவம்

பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் கையாண்டு நம்பிக்கையைப் பேணுவதற்கு மீண்டெழும் திறன் இலங்கை வங்கிக்கு உந்துசக்தியாக அமைகிறது. இது பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாப்பதிலும், நாடு முழுவதும் தடையற்ற சேவைகளைத் தொடர்வதிலும் பிரதிபலிக்கிறது. இந்த மீண்டெழும் திறன் தொடர்ச்சியை உறுதிப்படுத்துகிறது, நம்பகத்தன்மையை வலுப்படுத்துகிறது மற்றும் ஒரு உறுதியான தேசிய நிறுவனமாக வங்கியின் நீண்டகால பொருத்தத்திற்கு அடித்தளமாக அமைகிறது.

### நிதியியல் உள்ளடக்கம்

இலங்கை வங்கியின் நாடு தழுவிய இருப்பு மற்றும் வேகமான டிஜிட்டல் பரிணாமம் ஆகியவை வளர்ச்சி உண்மையான உள்ளடக்கிய ஒன்றாக இருப்பதை உறுதி செய்துள்ளன. இலங்கையின் ஒவ்வொரு மூலையிலும் நிதி அணுகலை விரிவுபடுத்துவதன் மூலம், வங்கி பெண் தொழில்முனைவோரை மேம்படுத்தி, கீழ்மட்ட வாழ்வாதாரங்களுக்கு ஆதரவளித்து, சமூகத்தின் விளிம்புநிலை மக்கள் முறையான நிதி அமைப்பில் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்க வழிவகுத்தது.இதன் மூலம், நிதி அணுகலானது ஒரு வாய்ப்பாகவும், வங்கியின் சென்றடைவு என்பது பகிரப்பட்ட தேசிய முன்னேற்றமாகவும் மாற்றப்பட்டுள்ளது.

### பங்குதாரர் பெறுமதி உருவாக்கம்

கனசதுரத்தை அனைத்து திசைகளிலும் சமநிலைப்படுத்துவதன் மூலம், இந்த விளிம்பானது நிலையான பெறுமதியை வழங்கும் அதே வேளையில் முன்னேற்றம் அனைத்து பங்குதாரர்களுக்கும் பகிரப்படுவதை உறுதி செய்கிறது. இதன் மையமாக, கூட்டாண்மை வரிகள், கட்டணங்கள் மற்றும் சட்டரீதியான கொடுப்பனவுகள் மூலம் அரசுக்கு கணிசமான வருவாயை ஈட்டித் தருவதன் மூலம் பொதுச் சேவைகள், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நீண்டகால பொருளாதார உறுதிப்பாட்டிற்கு வங்கி ஆதரவளிக்கிறது.

### எதிர்காலத்திற்காக உருவாக்கப்பட்ட ஒரு வங்கி

நம்பிக்கையை மையமாகக் கொண்டு, தலைமைத்துவ வலிமையால் வரையறுக்கப்பட்டுள்ள இலங்கை வங்கி, இலங்கையின் பொருளாதார எதிர்காலத்தின் ஒரு மூலோபாய இயக்குநராகத் தொடர்ந்து பரிணமித்து வருகிறது. இந்த சமநிலையான தலைமைத்துவ மாதிரி, எதிர்கால நிச்சயமற்ற தன்மைகளை உள்வாங்கவும், வாய்ப்புகளைத் திறக்கவும், தலைமுறைகளுக்கும் ஒரு உறுதிப்படுத்தும் சக்தியாகத் திகழவும் இலங்கை வங்கியைத் தயார்படுத்தியுள்ளது.

அதன் ஒவ்வொரு முகப்பும் ஒன்றோடொன்று தடையின்றி இணைந்து செயல்படுவது வங்கியின் பன்முகத் திறனைப் பிரதிபலிக்கிறது. இவை அனைத்தும் இணைந்து, இலங்கையின் வளர்ச்சிப் பாதையில் ஒரு நம்பிக்கைக்குரிய பங்காளராகத் தனது பங்கினை வலுப்படுத்துவதோடு, பங்குதாரர்களுக்கு நிலையான பெறுமதியினை உருவாக்குவதன் மூலம், மாறிவரும் நிதிச் சூழலைத் தெளிவு, உறுதி மற்றும் நோக்கத்துடன் கையாளுவதற்கு இது இலங்கை வங்கிக்கு இடமளிக்கிறது.

# தலைமைத்துவம்:

## நோக்கத்துடன் வழிநடத்தல்

வலுவான தலைமைத்துவம், கடுமையான ஆளுகை மற்றும் கொள்கை ரீதியான செயல்பாட்டுக் கலாச்சாரம் ஆகியவற்றின் மூலம் இலங்கை வங்கி உயர்மட்டத்திலிருந்து சரியான வழிகாட்டுதலை வழங்குகிறது. எமது நிறைவேற்று கட்டமைப்புகள், டிஜிட்டல் முன்னுரிமை மாதிரிகள் மற்றும் ஆளுகை நெறிமுறைகள் ஆகியன, எமது உபாயத்தை ஒருங்கிணைந்த செயல்பாடுகளாகவும், பொறுப்புக்கூறத்தக்க செயலாற்றமாகவும் மற்றும் தேசிய பெறுமதி உருவாக்கமாகவும் மாற்றுவதை உறுதி செய்கின்றன.

*ரூபிக் கனசதுரத்தை வெற்றிகரமாகக் கையாள்வது என்பது வெறும் நிறங்களை மட்டும் கவனிப்பதில் இல்லை அதன் ஒட்டுமொத்த அமைப்பையும் அவற்றுக்கிடையிலான தொடர்புகளையும் புரிந்துகொள்வதிலேயே தொடங்குகிறது. ஒரு சிக்கலான கனசதுரத்திற்குத் தீர்வுகாண்பதற்கு உள்ளுணர்வை விடவும் முறையான படிமுறைத் தீர்வுகள் (Algorithms) அவசியமாகும்.*

# தலைவரின் செய்தி

> நிலையான இலாபகரத்தன்மை மற்றும் வலுவான மூலதனக் கட்டமைப்புகள் மூலம் நிருபிக்கப்பட்ட எமது நிதி வலிமையைப் பயன்படுத்தி, தேசத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உற்பத்தித்திறன் சார்ந்த துறைகளை ஊக்குவிக்கும் ஒரு வங்கியாக நாம் திகழ விரும்புகிறோம்.

**காவிந்த டி சொய்சா**
**தலைவர்**

*செய்தியின் சுருக்கத்தை ஒலி வடிவில் செவிமடுக்க இவ் QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்*

அன்பிற்குரிய பங்குதாரர்களே,

எட்டு தசாப்தங்களுக்கும் மேலாக, இலங்கை வங்கி நாட்டின் பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களுக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொண்டு, தேசிய அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதன் மூலம் இலங்கையின் நிதிச் சூழலில் ஒரு உயிர்நாடியாக செயற்பட்டு வருகிறது. எமது பாரம்பரியமானது, வணிகச் செயல்திறனுடன் தேசியப் பொறுப்பையும், உறுதிப்பாட்டுடன் புத்தாக்கத்தையும், அதேபோல் வலுவான ஆளுகையுடன் கூடிய வளர்ச்சியையும் சமநிலைப்படுத்துவதன் மூலம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில், இந்த அம்சங்கள் அனைத்தும் ஒரு நேர்த்தியான நிலைக்கு வந்துள்ளன.

நாட்டின் மிகப்பெரிய வங்கி நிறுவனத்தை நிர்வகிப்பது என்பது வெறும் நிதியியல் விளைவுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு பொறுப்பாகும். இது காலப்போக்கில் சம்பாதிக்கப்பட்ட, தேசிய சவால்களின் போது சோதிக்கப்பட்ட மற்றும் தொடர்ச்சியான செயல்பாடுகளின் மூலம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்ட நம்பிக்கையால் வரையறுக்கப்படுகிறது. 2025 ஆம் ஆண்டில் நாட்டின் முன்னணி வணிக முத்திரை மற்றும் அதிக இலாபம் ஈட்டும் நிறுவனம் என இலங்கை வங்கி பெற்ற அங்கீகாரம், வாடிக்கையாளர்களும் பங்குதாரர்களும் வங்கி மீது வைத்துள்ள நம்பிக்கையையும், எமது ஊழியர்களின் கூட்டு அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கிறது. இந்தச் சாதனை வெறும் நம்பிக்கையை மட்டும் வெளிப்படுத்தாமல், நாம் ஒன்றிணைந்து எதனையும் சாதிக்க முடியும் என்ற பகிரப்பட்ட நம்பிக்கையையும் காட்டுகிறது. நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள எமது இலங்கை வங்கிக் குழுவின் அர்ப்பணிப்பு, திறமை மற்றும் ஆர்வம் ஆகியவைதான் எமது வழிகாட்டும் நோக்கத்தை ஒரு தாக்கமாக மாற்றி, சிறப்புக்கான தரத்தை நிர்ணயிக்கின்றன.

எமது சாதனைகளுக்கு மத்தியில், 2025 ஆம் ஆண்டுடன் முடிவடைந்த நிதியாண்டுக்கான 13வது ஒருங்கிணைந்த வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இது 86 ஆண்டுகளுக்கும் மேலான அசைக்க முடியாத பாரம்பரியத்தையும் நம்பிக்கையையும் குறிக்கிறது. வங்கி எவ்வாறு தொடர்ந்து சமூகங்களை வலுப்படுத்துகிறது, தேசிய செழிப்பை ஊக்குவிக்கிறது மற்றும் எதிர்காலத்திற்குத் தயாரான வங்கிச் சூழலை ஏற்றுக்கொண்டு, அனைத்து இலங்கையர்களுக்கும் ஒரு வலுவான நாளையை உருவாக்குகிறது என்பதை இந்த ஆண்டறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

## நிதியியல் வலிமை: நோக்கத்துடன் கூடிய இலாபம்

மீளாய்வுக்கு உட்பட்ட இந்த ஆண்டு, பொருளாதார சீர்திருத்தங்கள், உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் டித்வா சூறாவளியின் பாதிப்புகளுக்கு மத்தியிலேயே கடந்து சென்றது. இக்காலகட்டத்தில், இலங்கை வங்கி "தேசத்தின் வங்கியாளர்" எனும் தனது நீண்டகாலப் பணியின் வழிகாட்டுதலில் உறுதியாக இருந்தது. சிறந்த நிதிச் செயலாற்றம், மீளெழுச்சியுடனான மூலதன தளம் மற்றும் நிலையான திரவத்தன்மை ஆகியவை வங்கி நிதி ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்கவும், பொருளாதாரத்திற்குத் தொடர்ந்து ஆதரவளிக்கவும் வழிவகுத்தன. இச்சூழலில், இலாபம் என்பது ஒரு இறுதி இலக்கு மட்டுமல்ல அது பாதிப்புகளை உள்வாங்கவும், கொடுகடன் பாய்ச்சல்களைத் தொடரவும் மற்றும் தேசிய மீட்சிக்குப் பங்களிக்கவும் ஒரு கருவியாக அமைந்தது. அதேவேளை, இது நீண்டகால உறுதிப்பாடு மற்றும் ஒழுக்கமான ஆளுகையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில், இலங்கை வங்கி தனது சிறப்புவாய்ந்த வரலாற்றிலும், ஒட்டுமொத்த இலங்கையின் பெருநிறுவன நிலப்பரப்பிலும் மிகச்சிறந்த நிதிச் செயல்திறனைப் பதிவு

செய்துள்ளது. ரூ. 120.8 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்துடன் 13% வளர்ச்சிப் பாதையை எட்டியதன் மூலம், நாட்டின் மிகப்பெரிய மற்றும் அதிக இலாபம் ஈட்டும் நிறுவனம் என்ற எமது நிலையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளோம். இந்த வலுவான செயலாற்றம் வங்கியின் சொத்து மீதான வருவாயை 2.3% ஆகவும், பங்கு மூலதனம் மீதான வருவாயை 22.7% ஆகவும் உயர்த்தியுள்ளது. அதேவேளை நிதிச் சேவை வரி, வருமான வரி மற்றும் ஏனைய வரிகள் மூலம் வழங்கப்பட்ட ரூ. 76.7 பில்லியன் பங்களிப்பானது, தேசிய பொருளாதாரத்தில் வங்கியின் முக்கிய பங்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

சொத்துக்கள், முற்பணங்கள், வைப்புத்தொகைகள் மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புத்தொகைகள் என அனைத்து துறைகளிலும் சந்தை முன்னிலை வகிப்பதன் மூலம், முக்கிய நிதி குறிகாட்டிகளில் வங்கி நிலையான வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது. இது இலங்கை வங்கித் துறையில் அதன் தலைமைத்துவ நிலையை மேலும் வலுப்படுத்தியுள்ளது. சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவம் மற்றும் சாதகமான சந்தை சூழலைப் பயன்படுத்திக்கொண்ட திறமை ஆகியவற்றின் காரணமாக, இலங்கை வங்கிக் குழுமத்தின் சொத்துக்கள் 10% ஆண்டு வளர்ச்சியுடன் ரூ. 5.6 டிரில்லியனைத் தாண்டியுள்ளது. வங்கியின் அளவு வளர்ந்த அதேவேளை, வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யக்கூடிய துரிதத்துடனும் நாம் செயல்பட்டோம்.

சவாலான பேரண்டபொருளாதார சூழலுக்கு மத்தியில் எட்டப்பட்ட இப் பெறுபேறுகள், வங்கியின் ஒழுக்கமான செயல்பாடு, விவேகமான இடர் முகாமைத்துவம் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக, தலைமுறை தலைமுறையாக இலங்கையர்கள் வங்கி மீது வைத்துள்ள மாறாத நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றன. முக்கியமாக, இந்தச் செயலாற்றம் என்பது ஒரு இறுதி இலக்கு அல்ல. இது எமது மூலதன அடிப்படையை வலுப்படுத்தியுள்ளதுடன், சந்தை நம்பிக்கையை உறுதிப்படுத்தி, டிஜிட்டல் நிலைமாற்றம், மனிதவள மேம்பாடு மற்றும் பொருளாதார வாய்ப்புகளை விரிவுபடுத்தும் உள்ளடக்கிய வங்கித் தீர்வுகள் ஆகியவற்றில் தீர்க்கமான முதலீடுகளைச் செய்ய எங்களுக்கு வழிவகுத்துள்ளது. எமது வலுவான வருவாய்கள், மூலதன இருப்புகள் மற்றும் திரவத்தன்மை நிலை ஆகியவை வெறும் இலக்குகள் மட்டுமல்ல அவை நிதி உறுதிபாட்டினைப் பாதுகாக்கவும், பொருளாதார மறுமலர்ச்சிக்கு ஆதரவளிக்கவும் மற்றும் மிகவும் அவசியமான நேரங்களில் சேவையின் தொடர்ச்சியை உறுதிப்படுத்தவும் நாம் பயன்படுத்திய வழிமுறைகளாகும்.

## பொறுப்பான வங்கியியல்: தேசத்திற்கு ஆதரவளித்தல் - அனைவருக்கும் வங்கிச் சேவை

2025 ஆம் ஆண்டில் இலங்கையின் படிப்படியான பொருளாதார உறுதிப்படுத்தல் ஒழுக்கமான இறைச் சீர்திருத்தங்கள் மற்றும் நம்பகத்தன்மையையும் நம்பிக்கையையும் மீட்டெடுப்பதற்கான கூட்டுத் தேசிய உறுதியைப் பிரதிபலித்தது. இருப்பினும், இந்த மீட்சி ஒரு சீரான பாதையில் அமையவில்லை. டித்வா சூறாவளியால் ஏற்பட்ட அழிவானது, நமது நாட்டின் எய்துநிலையை, குறிப்பாக கிராமப்புற சமூகங்கள் மற்றும் விவசாயம், சுற்றுலா போன்ற காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படையக்கூடிய துறைகளிடையே ஒரு கசப்பான உண்மையாக நினைவூட்டியது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடனான திட்டத்தின் கீழ் இறை ஒழுக்கத்தைப் பேணுவது பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டை மீட்டெடுக்க அவசியமாக இருந்தபோதிலும், இது வணிகங்கள் மற்றும் குடும்பங்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் கடினமான மாற்றங்களை தேவைப்படுத்தியது. காலநிலை நிகழ்வுகளின் மோசமான விளைவுகள், விவசாயம், வாழ்வாதாரம் மற்றும் பிராந்திய பொருளாதாரங்களில் உள்ள பலவீனங்களை மேலும் வெளிச்சமிட்டுக் காட்டின. இருப்பினும், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல், வெளிநாட்டு நிலுவைகளை மேம்படுத்துதல் மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கை படிப்படியாகத் திரும்புதல் ஆகியவற்றின் மூலம் முன்னேற்றத்திற்கான தெளிவான அறிகுறிகள் காணப்படுகின்றன. நிலையான கொள்கை நிறைவேற்றல் மற்றும் நிறுவன வலிமையுடன், இலங்கை இந்த மாற்றக் காலத்தை நிலையான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான ஒரு தளமாக மாற்ற முடியும் என்பதில் நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன். இந்தத் தேசியச் சூழலில், நாட்டின் மிகப்பெரிய உள்நாட்டு முறைமை முக்கியத்துவம் வாய்ந்த வங்கி என்ற ரீதியில், இந்த வங்கி ஒரு ஆழமான பொறுப்பைத் சுமந்துள்ளது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை பாதுகாப்பதோடு, தேசிய மீட்சிக்கு தீவிரமாக ஆதரவளிப்பதும் எமது முக்கியப் பணியாகத் தொடர்கிறது. ஆண்டு முழுவதும், இலக்கு வைக்கப்பட்ட வணிகக் கடன்கள் மூலம் நிதி உள்ளடக்கம் மற்றும் வணிக மறுமலர்ச்சிக்கு நாங்கள் முன்னுரிமை அளித்தோம். ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் உள்நோக்கிய பணவனுப்பல்கள் மூலம் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை வலுப்படுத்தியதுடன், தேசிய டிஜிட்டல் பொருளாதாரத் திட்டத்தையும் முன்னெடுத்தோம்.

நாடு முழுவதும், நாங்கள் வணிகங்களுக்கு ஆதரவளித்தோம், வாழ்வாதாரங்களைப் பாதுகாத்தோம் மற்றும் வாய்ப்புகளை விரிவுபடுத்த உதவினோம். சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், இளைஞர் தொழில்முயற்சிகள் மற்றும் பெண்கள் தலைமையிலான தொழில்முயற்சிகளை வங்கி சென்றடைந்ததுடன் இது பொருளாதார நடவடிக்கைகளை மட்டுமல்லாமல், சமூக முன்னேற்றத்தையும் எதிர்கால மீளெழுச்சியையும் உந்தியது. விவசாயம், கட்டுமானம், ஏற்றுமதி மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம், ஒரு எளிய உண்மையை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்தினோம்: இலங்கை வளரும்போது, பொருளாதாரத்தைத் தாங்கி நிற்கும் துறைகளை ஆதரிப்பதற்காக இலங்கை வங்கி அங்கிருக்கும்.

டித்வா சூறாவளியானது வங்கியின் பொறுப்புணர்வைச் சோதித்தது. அதற்கான எமது பதிலிறுப்பு உடனடியானதாகவும் பன்முகத்தன்மை கொண்டதாகவும் இருந்தது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் வங்கிச் சேவைகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய "நடமாடும் வங்கிச் சேவை" மற்றும் வலுவான டிஜிட்டல் தளங்கள் பயன்படுத்தப்பட்டன. பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழிலமுயற்சிகளுக்கு 3% எனும் சலுகை வட்டி விகிதத்தில் நடைமுறை மூலதனக் கடன்கள் வழங்கப்பட்டதுடன், நிவாரணப் பொதிகள், கடன் மீட்புச் சலுகைகள் மற்றும் ஆலோசனை உதவிகளும் வழங்கப்பட்டன.

நிதியுதவிகளுக்கு அப்பாற்பட்டு, இலங்கையை மீளக்கட்டியெழுப்புவோம் நிதியத்தை உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் இலங்கை வங்கி முன்னெடுத்தது. வீடுகள், உள்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக ரூ. 500.0 மில்லியனை வங்கி இதற்காக ஒதுக்கியது. வங்கியும் அதன் ஊழியர்களும் இணைந்து வழங்கிய நிவாரணப் பொருட்கள் நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டன் இது சேவை மற்றும் ஒற்றுமையில் வேரூன்றிய எமது நிறுவன கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கிறது.

## புத்தாக்கம் மற்றும் அணுகல்: எதிர்காலத்தை நோக்கி நகர்தல்

மூலோபாய ரீதியாக, 2025 ஆம் ஆண்டு வங்கியின் மாற்றத்திற்கான ஆண்டாகவும் அமைந்தது. தேசிய டிஜிட்டல் பொருளாதாரத் திட்டத்திற்கு இணங்க, புதிய தளங்கள், முகவர் வங்கி மாதிரிகள் மற்றும் அடுத்த தலைமுறை டிஜிட்டல் தீர்வுகள் மூலம் வங்கிச் சேவைகளின் அணுகல், செயல்திறன் மற்றும் உள்ளடக்கம் ஆகியவை விரிவாக்கப்பட்டன. இதன் மூலம், வங்கிச் சேவைகள் குறைவாகக் கிடைக்கும் சமூகங்கள் முறையாக நிதி அமைப்பில் இணைக்கப்படுவதனை நிதியியல் உள்ளடக்க முன்னெடுப்புக்கள் உறுதிசெய்தன. அதேவேளை, இளைஞர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கான இலக்கிடப்பட்ட திட்டங்கள் என்பவையின் மூலம் இலங்கையின் நீண்டகாலப் போட்டித்தன்மை மற்றும் எதிர்கால சந்ததியினரின் மீளெழுச்சி ஆகியவற்றில் முதலீடு செய்யப்பட்டது. எமது நீண்டகால மூலோபாயமானது இலங்கையின் அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியுடன் உறுதியாக இணைந்துள்ளது. விவசாயம், பால் உற்பத்தி, சுற்றுலா, கட்டுமானம் மற்றும் ஏற்றுமதி சார்ந்த தொழில்கள் போன்ற முக்கிய உற்பத்தித்திறனுடைய துறைகளுக்கு நாங்கள் தொடர்ந்து ஆதரவளித்தோம். நிலைத்தன்மை என்பது வெறும் விருப்பமாக இல்லாமல் செயல்பாடாக மாறியது. இதன் உச்சகட்டமாக, அரச வங்கி ஒன்றினால் வெளியிடப்பட்ட இலங்கையின் மிகப்பெரிய "நிலைத்தன்மைப் பத்திரம்" வெற்றிகரமாக வெளியிடப்பட்டது. இது எமது ஆளுகை மீதான, நம்பகத்தன்மை மற்றும் நீண்டகால தொலைநோக்கு பார்வை மீது முதலீட்டாளர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்தியுள்ளது.

# தலைவரின் செய்தி

BOC IT சொலுஷன்ஸ் (பிரைவட்) லிமிடெட் இன் நிறுவுதல், தேசிய போக்குவரத்து டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தில் பங்கேற்பு மற்றும் அடுத்த தலைமுறைக்கான பிஓசி பெளெக்ஸ் மொபைல் செயலியின் அறிமுகம் ஆகியவை வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் செயல்பாட்டு துரிதத்தை மேம்படுத்துவதில் முக்கிய மைல்கற்களாக அமைந்தன.

பிஓசி கனெக்ட் முகவர் வங்கி முறை மற்றும் இலங்கைத் தபால் திணைக்களத்துடனான கூட்டிணைப்பு ஆகியவற்றின் ஊடாக, தொலைதூரக் கிராமப்புறங்களுக்கும் வங்கிச் சேவைகள் விரிவுபடுத்தப்பட்டன. BizPlus சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கடன் அட்டை மற்றும் BizLift கடன் திட்டம் போன்ற புத்தாக்கமான தயாரிப்புகள் தொழில்முயற்சிகளுக்கான திரவத்தன்மையை ஆதரித்தன. அதேவேளை, பிஓசி கம்மான மற்றும் பிஓசி மிதுரு போன்ற சமூகத்தை மையப்படுத்திய திட்டங்கள் அடிமட்ட மக்களுடனான ஈடுபாட்டை வலுப்படுத்தின.

அஸ்வெசும திட்டத்தின் கீழ், வங்கிச் சேவையைப் பெறாத 700,000க்கும் மேற்பட்ட குடிமக்களுக்காக இலவச டெபிட் கார்டுகள் மற்றும் சேவைக்கட்டணங்கள் அற்ற கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன. இது பொருளாதாரத்தை முறைமைப்படுத்துவதிலும் நிதி அறிவை மேம்படுத்துவதிலும் வங்கியின் பங்கை உறுதிப்படுத்தியது. அதேநேரம், பசுமை வைப்புகள் மற்றும் கடன் தயாரிப்புகள் மூலம் நிலையான நிதியை முன்னெடுத்தோம். இலங்கையின் முதலாவது உயிரினச் சிதைவடையக்கூடிய (Biodegradable) டெபிட் கார்டின் அறிமுகம் வங்கித் துறையில் ஒரு புரட்சிகரமான முன்னேற்றமாகும். சுற்றுச்சூழல் தொடர்பான பொறுப்பு, சமூக உள்ளடக்கம் மற்றும் நிதியியல் செயலாற்றம் ஆகியவை ஒன்றையொன்று வலுப்படுத்துகின்றன என்ற எமது நம்பிக்கையை இந்த முயற்சிகள் பிரதிபலிக்கின்றன.

## நிலைத்தன்மை: நீண்டகாலப் பொறுப்புணர்வை உட்பொதித்தல் - இலங்கையின் வரலாற்றிலேயே மாபெரும் நிலைத்தன்மை முறி

ஆண்டுக்காலப்பகுதியில், வங்கியின் நிலைத்தன்மை முன்னெடுப்புக்கள் திட்டமிடல் நிலையிலிருந்து நிறைவேற்று நிலைக்கு நகர்ந்தன. பசுமை மற்றும் சமூகக் கடனுதவிகள் மற்றும் உள்வாரி கார்பன் குறைப்பு முயற்சிகள் ஆகியவற்றின் மூலம், நிலையான நிதிச் செயல்பாடுகளில் தனது தலைமைத்துவத்தை வங்கி மேலும் வலுப்படுத்தியுள்ளது. ஒரு முக்கிய மைல்கல்லாக, இலங்கையின் வரலாற்றில் மிகப்பெரிய நிலைத்தன்மை முறி வெற்றிகரமாக வெளியிடப்பட்டது. இத்தகைய பத்திரத்தை வெளியிட்ட முதல் அரச வங்கி என்ற ரீதியில், இது வங்கியின் நிதி வலிமை, ஆளுகை முதிர்ச்சி மற்றும் நிலைத்தன்மை கட்டமைப்பின் மீது முதலீட்டாளர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. லங்கா ரேட்டிங் ஏஜென்சியினால் AA-(Stable) தரப்படுத்தல் கொண்ட இந்த கருவி வங்கியின் அடுக்கு II மூலதனத்தை வலுப்படுத்தியதுடன், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், சிறு நில உரிமையாளர் விவசாயிகள், சுகாதாரம், கல்வி மற்றும் தகுதியுள்ள பசுமைத் திட்டங்களுக்காக ரூ. 20.0 பில்லியன் நிதியைத் திரட்டியது. இது இலங்கை வங்கியின் ஆளுமை, நம்பகத்தன்மை மற்றும் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் மீது முதலீட்டாளர்கள் கொண்டுள்ள நம்பிக்கையைத் தெளிவாகக் காட்டியது.

பெறுமதி உருவாக்கத்தில் நிலைத்தன்மை என்பது ஒரு ஒருங்கிணைந்த அம்சம் என்பதை அங்கீகரித்து, வங்கியானது தனது நிதிச் செயல்பாடுகளை மத்திய வங்கியின் நிலையான நிதி வழிகாட்டலுடன் இணைத்துள்ளது. இதன் மூலம் புதுப்பிக்கத்தக்க சக்தி, பசுமைச் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் மற்றும் காலநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய விவசாயம் ஆகியவற்றுக்கு வங்கி ஆதரவளிக்கிறது. இலங்கையின் முன்னணி அரச வங்கி என்ற ரீதியில், முதலீட்டாளர்களின் வலுவான நம்பிக்கையைத் தக்கவைத்துக்கொள்வதோடு, தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளை நோக்கி மூலதனத்தைத் திரட்டுவதில் இலங்கை வங்கி முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக, புதுப்பிக்கத்தக்க சக்தி, சூரிய சக்தித் திட்டங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளுக்கான பசுமைக் கடன்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. இவை அபிவிருத்தித் தாக்கத்தையும் நீண்டகாலப் பொருளாதார மீளெழுச்சியையும் ஒன்றிணைக்கின்றன.

காலநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய விவசாயம் மற்றும் குறைந்த கார்பன் உட்கட்டமைப்புகளுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கும் அதேவேளை, வங்கி தனது சொந்தச் செயல்பாடுகளிலும் ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது. இதில் 100 கிளைகளில் 4.3 மெ.வா.ம. இயலளவு கொண்ட புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தி மற்றும் பசுமைச் சான்றிதழ் பெற்ற கட்டிடங்களின் உருவாக்கம் ஆகியவை அடங்கும். இந்த முயற்சிகள், நிதித் தீர்மானங்கள் மற்றும் செயல்பாட்டு நடைமுறைகள் ஆகிய இரண்டிலும் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை காரணிகளை ஒருங்கிணைக்கும் எமது யதார்த்தமான அணுகுமுறையைப் பிரதிபலிக்கின்றன.

## எமது பாரம்பரியத்தின் காவலர்கள்: வாடிக்கையாளர் கனவுகளின் வெற்றியாளர்கள்

சுமார் 9,000 அர்ப்பணிப்புள்ள மற்றும் ஆர்வமிக்க எமது பணியாளர்கள் வெறும் ஊழியர்கள் மட்டுமல்ல அவர்கள் இலங்கையின் முதன்தர வணிக முத்திரையின் பாதுகாவலர்களாக விளங்குகின்றனர். அவர்கள் தங்களது செயல்பாடுகள், நேர்மை மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம் வங்கியின் பலத்தை ஒவ்வொரு நாளும் வெளிப்படுத்துகின்றனர். அவர்கள் எமது வர்த்தக நாமத்தை வெறும் உபாயங்களுக்குள் மட்டும் முடக்காமல், ஒவ்வொரு வாடிக்கையாளர் சந்திப்பிலும் உயிரூட்டுகின்றனர் இதன் மூலம் அடிமட்ட மக்களின் அபிலாசைகளை வளர்த்தெடுக்கின்றனர். தொடர்ச்சியான கற்றல், உள்ளடக்கம் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றின் மூலம் எமது ஊழியர்களை வலுப்படுத்துவதன் மூலம், அவர்கள் நேர்மறையான மாற்றத்தின் பிரதிநிதிகளாக இருப்பதை நாங்கள் உறுதி செய்கிறோம். அவர்கள் வாடிக்கையாளர்களின் கனவுகளை நனவாக்குவதுடன், எமது பாரம்பரியத்தை வரையறுக்கும் நம்பிக்கை மற்றும் சிறப்பை மேலும் வலுப்படுத்துகின்றனர். அவர்களது ஆர்வம், அர்ப்பணிப்பு மற்றும் அக்கறை ஆகியவைதான் எமது வர்த்தக நாமத்தை நாடு முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக மட்டுமல்லாமல், அனைவராலும் போற்றப்படும் ஒன்றாகவும் மாற்றியுள்ளது.

## செயல்வடிவத்தில் ஆளுகை: நம்பிக்கையை உறுதிப்படுத்துதல்

எமது பயணம் முழுவதிலும், வலுவான ஆளுகை மற்றும் கொள்கை ரீதியான தலைமைத்துவம் ஆகியன எமது உள்வாரி வழிகாட்டியாக அமைந்தன. மேம்படுத்தப்பட்ட சபை மேற்பார்வை, கடுமையான இடர் முகாமைத்துவம் மற்றும் காலநிலை மற்றும் நிலைத்தன்மை தொடர்பான இடர்கள் மீதான ஆழமான கவனக் குவிப்பு ஆகியன, பொறுப்புத்தன்மையுடனான வளர்ச்சியை எட்டுவதையும் இலாபகரத்தன்மையானது ஒரு நோக்கத்துடன் இணைந்திருப்பதையும் உறுதி செய்தன.

இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களுக்கு இணங்க எமது ஆளுகை கட்டமைப்புகளைத் தொடர்ந்து உயர்த்தி வருகிறோம். மேம்படுத்தப்பட்ட குழு கட்டமைப்புகள், சுயாதீன பிரதிநிதித்துவம் மற்றும் வலுவான வெளிப்பாடுகள் மூலம் பணிப்பாளர் சபையின் மேற்பார்வையை வலுப்படுத்தியுள்ளோம். எனது பார்வையில், ஆளுகை என்பது வளர்ச்சியைத் தடுக்கும் ஒரு தடையல்ல அது நம்பிக்கை மற்றும் நீண்டகால பெறுமதி உருவாக்கத்திற்கான அடித்தளமாகும்.

விரிவான வெளிப்பாடுகள், பங்குதாரர்களுடனான ஈடுபாடு, வருடாந்த சுய மதிப்பீடுகள், இடர் சார்புத்தன்மையை கண்காணித்தல் மற்றும் சபை சாசனங்கள், ஒழுக்க நெறிமுறைகள், முறைகேடுகளை வெளிப்படுத்துவோருக்கான பாதுகாப்பு மற்றும் பணிப்பாளர்களுக்கான தொடர்ச்சியான பயிற்சிகள் மூலம் கடுமையான ஆளுகைத் தரங்களைப் பேண வங்கி உறுதிபூண்டுள்ளது.

11 பணிப்பாளர்களைக் கொண்ட எமது சபையின் பன்முகத்தன்மை குறித்து நான் பெருமிதம் கொள்கிறேன் இது மூலோபாய மேற்பார்வை மற்றும் தீர்மானம் எடுத்தல் திறனை வலுப்படுத்துகிறது. பல்வேறு வயதுப் பிரிவினர், தொழில்முறை அனுபவங்கள் மற்றும் பெண் பிரதிநிதித்துவம் ஆகியவற்றைக் கொண்டிருப்பதன் மூலம் பரந்த நோக்குகளினால் நாம் பயனடைகிறோம். ஆரம்பநிலை அறிமுகப் பயிற்சிகள் மற்றும் SLFRS S1 மற்றும் S2 உள்ளடங்கலான தொடர்ச்சியான கற்றல் மூலம், எமது தலைமைத்துவம் தகவலறிந்ததாகவும், பொறுப்புணர்வுடனும், வங்கியின் தொடர்ச்சியான

வளர்ச்சியை வழிநடத்தக்கூடிய நிலையிலும் இருப்பதை நாங்கள் உறுதி செய்கிறோம். மேலும், அண்மையில் நிலைத்தன்மை மற்றும் கொடுகடன் ஆகியவற்றுக்காக இரண்டு புதிய சபை உபசெயற்குழுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, ஆளுகை கட்டமைப்புகள் மேலும் வலுவூட்டப்பட்டுள்ளன.

## எதிர்காலப் பாதையை வகுத்தல்: நோக்கத்துடன் கூடிய முன்னேற்றம்

ஒழுக்கமான இறைத் திரட்சி கட்டமைப்புகளைச் சீரமைக்க வழிவகுத்துள்ளதோடு தனியார் துறையின் துடிப்புமிக்கச் செயல்பாடுகள் போட்டித்தன்மை, புத்தாக்கம் மற்றும் உள்ளடக்கம் போன்ற தேசிய அபிலாசைகளை எட்டக்கூடிய ஒரு வாய்ப்பின் விளிம்பில் எமது நாடு நிற்கிறது. இத்தகைய சூழலில், வங்கியின் வகிபாகம் என்பது பாரம்பரிய வங்கிச் சேவைகளுக்கும் அப்பாற்பட்டது என நாம் நம்புகிறோம் - நாம் முன்னேற்றத்திற்கான ஒரு பங்காளராகவும், வாய்ப்புகளை உருவாக்குபவராகவும் மற்றும் நம்பிக்கையின் பாதுகாவலராகவும் திகழ்கிறோம்.

இந்தச் சூழலில், வங்கியின் எதிர்காலப் பாதையானது மூலோபாயத் தெளிவு மற்றும் நிறுவன முதிர்ச்சியால் வழிநடத்தப்படுகிறது. எமது பயணத்தின் அடுத்த கட்டம் வெறும் வளர்ச்சியை மட்டும் நோக்கமாகக் கொண்டதல்ல அது பொருத்தப்பாடு, மீண்டெழுந்தன்மை மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றைப் பற்றியது. வலிமை, தேசிய சேவை, நிலைத்தன்மை மற்றும் நம்பிக்கை ஆகிய பரிமாணங்களை மையப்படுத்தியே வங்கி தொடர்ந்து இயங்குகிறது. இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறை நீண்டகாலமாக வங்கியின் வகிபாகத்தை வரையறுத்துள்ளதுடன், மாறிவரும் வெளிப்புறச் சூழலை நாம் கையாளுவதற்கு தொடர்ந்து வழிகாட்டும்.

தொடர்ச்சியான இலாபகரத்தன்மை மற்றும் வலுவான மூலதனக் கட்டமைப்புகள் மூலம் நிரூபிக்கப்பட்ட எமது நிதி வலிமையைப் பயன்படுத்தி, தேசத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உற்பத்தித்திறன் சார்ந்த துறைகளை ஊக்குவிக்கும் ஒரு வங்கியாக நாம் திகழ விரும்புகிறோம். ஏற்றுமதி சார்ந்த தொழில்முயற்சிகள், காலநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய விவசாயம், நிலையான உட்கட்டமைப்பு, இளைஞர் தொழில்முனைவு மற்றும் பெண்கள் தலைமையிலான வணிகங்களுக்கு நிதியளிப்பதன் மூலம் பொருளாதாரப் பங்கேற்பை விரிவுபடுத்தவும் பரந்த அளவிலான வாய்ப்புகளை உருவாக்கவும் நாம் இலக்கிடுகிறோம்.

டிஜிட்டல் தலைமைத்துவத்திற்கான எமது அர்ப்பணிப்பு, சிறந்த வங்கிச் சேவைகள் ஒவ்வொரு இலங்கையருக்கும் கிடைப்பதை மேலும் உறுதி செய்யும். மேம்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி தளங்கள், விரிவுபடுத்தப்பட்ட முகவர் வங்கித்தொழில், தரவு சார்ந்த நுண்ணறிவுகள் மற்றும் சுறுசுறுப்பான பின்டெக் (Fintech) கூட்டாண்மைகள் மூலம் நகரங்கள் மற்றும் கிராமங்கள் என வாடிக்கையாளர்கள் எங்கிருந்தாலும் அவர்களைச் சென்றடைய எம்மால் முடியும்.

இது தொழில்நுட்பத்திற்காக உருவாக்கப்பட்ட தொழில்நுட்பம் அல்ல, இது அதிகாரம் அளித்தல், வசதி மற்றும் வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட தொழில்நுட்பமாகும்.

நாளைக்கான எமது முதலீடுகளுக்கு நிலைத்தன்மை ஒரு உறுதியாக அமையும். ஒரு பொறுப்பான நிறுவனமாக, உலகளாவிய முதலீட்டாளர்கள், சமூகங்கள் மற்றும் வருங்கால சந்ததியினரின் வளர்ந்து வரும் எதிர்பார்ப்புகளைப் பிரதிபலிக்கும் வகையில் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை ஆகிய அம்சங்களை எமது இடர் மதிப்பீடு, மூலதன ஒதுக்கீடு மற்றும் நாளாந்த தீர்மானம் மேற்கொள்ளல் ஆகியவற்றில் ஒருங்கிணைப்போம். இந்த எதிர்காலத்தின் மையப்புள்ளியாக விளங்குபவர்கள் எமது ஊழியர்களே அவர்கள் ஒவ்வொரு நாளும் நேர்மை, ஆர்வம் மற்றும் நோக்கத்துடன் இலங்கை வங்கிக்கு வலுசேர்க்கும் தொழில் வல்லுநர்கள். அவர்களே எமது பாரம்பரியத்தைச் சுமந்து செல்பவர்கள் மற்றும் வங்கியின் அடுத்த அத்தியாயத்தின் வடிவமைப்பாளர்கள் ஆவர்.

தேசியப் போட்டித்தன்மையை மேம்படுத்தும் துறைகளை நோக்கி மூலதனத்தைத் தேர்ந்தெடுத்து முதலீடு செய்யவும், செயல்திறன் மற்றும் அணுகலை மேம்படுத்த டிஜிட்டல் திறன்களை ஆழப்படுத்தவும், உபாயம் மற்றும் இடர் முகாமைத்துவம் நிலைத்தன்மையை உட்புகுத்தவும் நாம் தொடர்ந்து முயலுவோம். ஒரு ரூபிக் கனசதுரத்தைப் போன்ற பன்முகத்தன்மை கொண்ட நிறுவனமாக, நிதிச் செயல்திறன், ஆளுகை, மனிதவளம், தொழில்நுட்பம் மற்றும் தேசியப் பொறுப்புணர்வு ஆகியவற்றை சீரமைப்பதில்தான் எமது பலம் உள்ளது. இந்த பரிமாணங்கள் ஒன்றாக செயற்படும் போது, அவை நிலையான பெறுமதியை உருவாக்குகின்றன.

## நன்றியுரை: நோக்கத்திற்காக ஒன்றிணைதல்

எமது ஒரே பங்குதாரரான இலங்கை அரசாங்கம் ஒரு உறுதியான வழிகாட்டும் சக்தியாக இருந்து வருகிறது. கௌரவ நிதி அமைச்சர், திறைசேரியின் செயலாளர் மற்றும் அமைச்சின் அதிகாரிகள் என்பவர்களின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் வழிகாட்டலுக்காக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வங்கியின் மூலோபாயப் பாதையை வகுப்பதில் தங்களது ஒன்றிணைந்த அறிவினையும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பையும் வழங்கிய தற்போதைய மற்றும் முன்னாள் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னாள் பொது முகாமையாளர் திரு. ரசல் பொன்சேகா, தற்போதைய பொது முகாமையாளர் திரு. வை. ஏ. ஜயதிலக்க, நிறுவன மற்றும் நிறைவேற்று முகாமைத்துவத்தின் தற்போதைய மற்றும் ஓய்வுபெற்ற உறுப்பினர்கள், தொழிற்சங்கங்கள், ஓய்வூபெற்றோர் மற்றும் முழு இலங்கை வங்கிக் குழுவினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களது நிபுணத்துவமும், மீண்டெழுந்தன்மை மற்றும் ஆழ்ந்த தேசியப் பொறுப்புணர்வும் எமது உபாயத்தை செயல்திறனாகவும், நம்பிக்கையை நிலையான பெறுமதியாக் உருமாற்றிக் கொண்டிருக்கின்றன.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அதிகாரிகள், கணக்காய்வாளர் நாயகம் மற்றும் ஊழியர்களுக்கு அவர்களது ஆதரவு, மேற்பார்வை மற்றும் தொடர்ச்சியான நம்பிக்கைக்கு நான் ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவை, ஒரு முறைமை ரீதியாக முக்கியமான நிதி நிறுவனம் எனும் வங்கியின் வகிபாகத்திற்கு அவசியமான தெளிவையும் நிறுவன ரீதியான உறுதிப்பாட்டினையும் வழங்குகின்றன. எமது வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகப் பங்காளர்களின் நிலையான நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்புக்காக அவர்களுக்கு நான் நன்றி தெரிவிப்பதுடன், இலங்கை வங்கி நிதியியல் முறைமையில் ஒரு நிலைநிறுத்தும் சக்தியாகத் தொடர்ந்து திகழ்வதற்குத் தங்களது கூட்டு ஆதரவை வழங்கிய அனைத்துப் பங்குதாரர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

86 ஆண்டுகால பாரம்பரியத்தால் உருவாக்கப்பட்ட நம்பிக்கையுடனும், மீளெழுச்சி கொண்ட ஐந்தொகை வழங்கியுள்ள பலத்துடனும் நாம் முன்னோக்கிச் செல்கிறோம். இந்த பாரம்பரியம் மற்றும் நிதி வலிமையின் இணைவுதான், இலங்கை வங்கி தொடர்ந்து நம்பிக்கையுடனும், பொறுப்புடனும், நோக்கத்துடனும் தேசத்திற்கு சேவை செய்ய அதிகாரம் அளிக்கிறது.



**காவிந்த டி சொய்சா**
தலைவர்

24 பெப்ரவரி 2026
கொழும்பு

# பொது முகாமையாளரின் மீளாய்வு

> இலங்கை வங்கியானது தனது பாரிய கூட்டமைப்பு, பரந்துபட்ட சேவை மற்றும் தேசியப் பொறுப்பு ஆகியவற்றைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தி நாடு முழுவதும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

**வை. ஏ. ஜயதிலக**
பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி

*செய்தியின் சுருக்கத்தை ஒலி வடிவில் செவிமடுக்க இவ் QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்*

இலங்கை வங்கியின் வரலாற்றில் 2025 ஆம் ஆண்டு முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாக அமைந்துள்ளது. இது அண்மைக்கால வரலாற்றில் வங்கியின் மிகச்சிறந்த செயல்ாற்றத்தைப் பதிவு செய்த ஆண்டாகும். இந்தச் சாதனை, நாட்டின் மிகப்பெரிய வங்கி என்ற எமது தலைமைத்துவ நிலையை உறுதிப்படுத்தியதுடன், நாட்டின் நிதியியல் முறைமையின் மீண்டெழுந்தன்மை மற்றும் நம்பிக்கையின் தூணாக எமது வகிபாகத்தை மீண்டும் நிலைநாட்டியுள்ளது. முறையான உபாயம், வலுவான இடர் முகாமைத்துவம் மற்றும் வாடிக்கையாளர்கள் மீதான மாறாத அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம், நிதிச் சேவைகளுக்கான அணுகலை விரிவுபடுத்தியதுடன், டிஜிட்டல் நிலைமாற்றத்தை விரைவுபடுத்தி, நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சிக்குத் தொடர்ந்து ஆதரவளித்தோம்.

இந்த ஆண்டில் பல குறிப்பிடத்தக்க அங்கீகாரங்கள் மூலம் வங்கியின் நிறுவன வலிமை மற்றும் சந்தை தலைமைத்துவம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. சர்வதேச வங்கித்தொழில் துறையில் தனது வலுவான நிலையை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், உலகளாவிய ரீதியில் சிறந்த 1,000 வங்கிகளில் ஒன்றாகத் தொடர்ந்து 16 ஆண்டுகளாக எமது வங்கி தரப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பிட்ச் ரேட்டிங்ஸ் வங்கியின் தேசிய நீண்டகால தரப்படுத்தலை AA-(lka)/Stable எனவும், அதன் நீண்டகால வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணய வழங்குனர் கடன்தவறல் தரமிடல்கள் CCC+ எனவும் உறுதிப்படுத்தியுள்ளது. இது சவாலான ஒரு செயல்பாட்டு சூழலுக்கு மத்தியிலும் வங்கியின் கடன் அடிப்படைகள் மீதான தொடர்ச்சியான நம்பிக்கையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. எமது வர்த்தக நாமம் தலைமைத்துவத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் பிராண்ட் ∴பைனான்ஸ் லங்கா நிறுவனத்தால் ரூ. 57.4 பில்லியன் பெறுமதியுடன் இலங்கையின் முதற்தர வர்த்தக நாமம் என வங்கி அங்கீகரிக்கப்பட்டது.

எமது 13வது ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை 2025 இன் கருப்பொருளான "பரிமாணங்களின் பன்முகப் பார்வை - நீடித்த முன்னேற்றம்" என்பது இந்தச் செயல்திறனுக்கு அடிப்படையாக விளங்கும் எமது பலத்தின் அளவைப் பிரதிபலிக்கிறது. எமது மூலதன வலிமை, திரவத்தன்மையின் மீண்டெழுந்தன்மை, டிஜிட்டல் புத்தாக்கம், நிலைத்தன்மை ஒருங்கிணைப்பு, ஆளுகை ஒழுக்கம் மற்றும் எமது ஊழியர்களின் அர்ப்பணிப்பு ஆகியன ஒரு ஒருங்கிணைந்த நிறுவனக் கட்டமைப்பின் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட பரிமாணங்களாகச் செயல்படுகின்றன. இவை தேசிய முன்னேற்றத்திற்கு ஆதரவளிக்கும் அதேவேளை, நிலையான பெறுமதியை உருவாக்க எமக்கு வழிவகுக்கின்றன.

எனவே, 2025 ஆம் ஆண்டிற்கான எமது செயல்திறன் மற்றும் அடைவுகளின் இந்த மீளாய்வை மிகுந்த பெருமையுடன் சமர்ப்பிக்கின்றேன்.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுபேறுகள், எமது நிறுவனத்தின் கூட்டு வலிமை, ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் நாம் சேவை செய்யும் தேசம் எம்மீது வைத்துள்ள மாறாத நம்பிக்கைக்கு ஒரு சான்றாகும்.

## செயல்பாட்டுச் சூழல்: செயல்திறனை வடிவமைத்தல்

அதிகரித்து வரும் வர்த்தக நெருக்கடிகள், தீர்வைத் தடைகள் மற்றும் புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மைகள் உலகப் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், ஏற்றுமதி வளர்ச்சி, வெளிநாட்டு முதலீட்டு பாய்ச்சல்கள் மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளில் பாதிப்பை ஏற்படுத்தின. காலநிலை தொடர்பான இடையூறுகள், குறிப்பாக விவசாய உற்பத்தியில் மேலதிக அழுத்தத்தைக் கொடுத்தன. இத்தகைய உலகளாவிய ஏற்றத்தாழ்வுகளுக்கு மத்தியில், ஊக்கமளிக்கும் மீட்சி அறிகுறிகளை இலங்கை வெளிப்படுத்தியது. ஏற்றுமதி, சுற்றுலா மற்றும் சேவைகள் உள்ளிட்ட துறைகளில் வளர்ச்சி வேகம் மற்றும் மேம்பட்ட செயல்திறன் காணப்பட்டமை மகிழ்ச்சியளிக்கிறது. அதேவேளை, நாட்டின் கடன் தரமிடல்கள் உயர்வடைந்தமை முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. அதே நேரத்தில், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் மேம்பாடு, இளைஞர் பங்களிப்பு மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தி, நாடு தனது கட்டமைப்புச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.

இந்த நேர்மறையான முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், குறிப்பிடத்தக்க உள்நாட்டு சவால்கள் நீடித்தன. அதிகரித்துள்ள வறுமை மட்டங்களை தீர்த்தல், தொடர்ச்சியான அறிவுடையோர் வெளியேற்றம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்த சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றுடன் பொருளாதார மீட்சியைத் தக்கவைக்க மீண்டெழுந்தன்மையும் ஒழுக்கமும் தேவைப்பட்டன. ஆண்டின் பிற்பகுதியில் டித்வா சூறாவளி பேரழிவின் தாக்கம் ஏற்பட்டது. இது உயிரிழப்புகள், பரவலான இடப்பெயர்வுகள் மற்றும் விரிவான உட்கட்டமைப்பு சேதங்களை விளைவித்ததுடன், காலநிலை தொடர்பான நிகழ்வுகளால் ஏற்படக்கூடிய ஏய்துநிலையை எடுத்துக்காட்டியது.

இந்த ஆண்டில், வங்கித்தொழில்துறையின் திரண்ட உறுதிப்பாட்டினை அளவிடும் வங்கித் திறன் சுட்டெண் முன்னேற்றமடைந்தது. இது பொருளாதார அதிர்ச்சிகளைத் தாங்கும் திறன் மேம்பட்டுள்ளதைக் குறிக்கிறது. முக்கியமாக, இத்துறையின் இலாபகரத்தன்மையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, மேம்படுத்தப்பட்ட மூலதனப் போதுமானதன்மை, சொத்துத் தரம் மற்றும் சந்தை இடர் மட்டங்களுக்கான மீண்டெழுந்தன்மை ஆகியவற்றின் காரணமாக இந்த முன்னேற்றம் ஏற்பட்டது.

## மாறிவரும் சூழல்களைக் கையாளுவதற்கு: துரிதத்துடன் செயற்படுதல்

இந்த மாறிவரும் இயக்கவியலை கையாளுவதற்கு துரிதம், தொலைநோக்குப் பார்வை மற்றும் மாறும் வர்த்தகச் சூழலுக்கு விரைவாகப் பதிலளிக்கும் திறன் ஆகியவை தேவைப்பட்டன. இதற்குப் பதிலிறுப்பாக, வங்கியின் நிறுவன அடித்தளத்தை நாங்கள் தொடர்ந்து வலுப்படுத்தினோம். காலந்தாழ்ந்த தொழில்நுட்ப முறைமைகளை நவீனமயமாக்குவதில் வங்கி அடைந்துள்ள முன்னேற்றம், மேம்பட்ட டிஜிட்டல் இயலுமைகள், செயல்பாட்டுத் திறன் மற்றும் தடையற்ற வாடிக்கையாளர் அனுபவத்திற்கு வழிவகுத்தது. மேலும், அறிக்கையிடல் கட்டமைப்புகளை சீரமைப்பதன் மூலமும், ஆளுகை கட்டமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலமும் நிறுவனத்தின் துரித செயல்பாட்டை நாங்கள் உறுதிப்படுத்தினோம்.

டிட்வா சூறாவளி பல பிராந்தியங்களில் உள்ள சமூகங்களை பாதித்தபோது, அத்தியாவசிய நிதிச் சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதன் மூலம் வங்கி விரைவாகச் செயல்பட்டது. இடையூறுகள் பரவலாக இருந்தபோதிலும், வாடிக்கையாளர்கள் வங்கி வசதிகளை அணுகுவதை உறுதிசெய்ய பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடமாடும் கிளைகள் ஈடுபடுத்தப்பட்டன. இந்த சவாலான காலகட்டத்தில் நிதிச் சேவைகளை தடையின்றி அணுகுவதை உறுதி செய்வதில் எமது விசாலமான டிஜிட்டல் வங்கித் தளங்களும் முக்கிய வகிபாகம் கொண்டிருந்தன.

மீட்சி மற்றும் மீள்கட்டியெழுப்புதலுக்கான பரந்த தேசியத் தேவையை அங்கீகரித்து வங்கியானது அரசாங்கத்தின் "இலங்கையை மீளக் கட்டியெழுப்புதல்" முன்னெடுப்பிற்கு ரூ.500.0 மில்லியன் ரூபாயை வழங்கியது. இந்த அர்ப்பணிப்பு, ஊழியர்களின் பங்களிப்புகள் மற்றும் ரூ.50.0 மில்லியன் பெறுமதியான நன்கொடைகள் மூலம் மேலும் வலுப்படுத்தப்பட்டது. இத்தகைய கூட்டு முயற்சிகள் மூலம், நிதி உதவியை வழங்குவது மட்டுமல்லாமல், தங்களின் வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பப் போராடும் சமூகங்களுடன் ஒற்றுமையாக நிற்கவும் நாங்கள் முயன்றோம். இந்த நடவடிக்கைகள், நிதிச் சேவைகளுக்கு அப்பால், நெருக்கடியான காலங்களில் மீண்டெழுந்தன்மைக்கும் மீட்சிக்கும் ஆதரவளிக்கும் ஒரு நம்பகமான தேசிய நிறுவனம் என்ற எமது வகிபாகத்தை மீண்டும் உறுதிப்படுத்துகின்றன.

## பொறுப்புணர்வுடன் கூடிய வளர்ச்சி: நிலையான தாக்கத்தை உருவாக்குதல்

எமது நாடு தழுவிய இருப்பு, விரிவான ஐந்தொகை மற்றும் பல்வேறுபட்ட துறைகளில் எமது ஆழமான ஈடுபாடு ஆகியவை இலங்கையின் பொருளாதாரச் சூழல் முறைமையின் மையப்புள்ளியாக எம்மை நிலைநிறுத்தியுள்ளன. எனவே, எமது வளர்ச்சி என்பது நாட்டின் முன்னேற்றத்துடன் பிரிக்கமுடியாத வகையில் பிணைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில், தேசிய பொருளாதார உத்வேகத்தை உந்தித்தள்ளும் துறைகளில் எமது பலத்தை நாங்கள் தொடர்ந்து செலுத்தினோம். மாறிவரும் உலகளாவிய வர்த்தகச் சூழலைக் கையாளும் ஏற்றுமதியாளர்களுக்கு, தடையற்ற எல்லை கடந்த கொடுக்கல்வாங்கல்களை எளிதாக்குதல், வர்த்தக நிதி தீர்வுகளை விரிவுபடுத்துதல் மற்றும் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையை உறுதி செய்தல் ஆகியவற்றின் மூலம் எமது ஆதரவை வலுப்படுத்தினோம். வலுவான சர்வதேச வங்கித்தொழில் உறவுகளைப் பேணுவதன் மூலம், இலங்கை நிறுவனங்கள் சர்வதேச சந்தைகளுடன் இணைந்திருக்க உதவுவதோடு, வெளிநாட்டுச் செலாவணி உறுதிப்பாட்டிற்கு பங்களித்தது.

மருந்தாக்கல் மற்றும் சூரிய, காற்று, நீர் வலு போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள் உள்ளடங்கலான முக்கிய துறைகளில் பல பாரிய அளவிலான முதலீடுகளுக்கு வங்கி நிதியுதவி அளித்தது. இத்தகைய முன்னெடுப்புக்கள், தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதோடு, இறக்குமதிகள் மீதான சார்புத்தன்மையையும் குறைத்து, நீண்டகால சுற்றுச்சூழல் சார்ந்த மீண்டெழுந்தன்மையை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல், நாடு பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் நிலையான எரிசக்தி பயன்பாட்டை நோக்கி நகர்வதற்கும் ஆதரவளிக்கின்றன. அடிப்படை மட்டத்தில், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் விவசாயத் துறைக்கான எமது ஆதரவு உறுதியாக இருந்தது. இன்னும் பலவீனமாக உள்ள பொருளாதார மீட்சி நிலையில், தொடர்ச்சியான நடைமுறை மூலதனத்தை உறுதி செய்வதன் மூலம், வணிகங்கள் தங்களது செயல்பாடுகளைத் தொடரவும் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும் உதவினோம். காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் பிராந்தியங்களில், இசைவிப்பு முறைகளை ஆதரிக்கவும் கிராமப்புற மீண்டெழுந்தன்மையை வலுப்படுத்தவும் விவசாயக் கடன்வழங்கல் விரிவுபடுத்தப்பட்டன. இறுதியாகப் பார்க்கும்போது, வங்கியின் வளர்ச்சியானது எமது நிதிநிலை அறிக்கையின் அளவு அல்லது சந்தைப் பங்கைக் கொண்டு மட்டும் நாங்கள் அளவிடுவதில்லை. சமூகத்தில் நாங்கள் உருவாக்கும் தாக்கத்தைக் கொண்டே அளவிடப்படுகிறது.

# பொது முகாமையாளரின் மீளாய்வு

தனிப்பயனுடைய இளைஞர் நிதியுதவித் திட்டங்கள் மூலம், இளம் தொழில்முயற்சியாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு ரூ. 9.4 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தொகையை நாம் வழங்கினோம். இது புதிய தலைமுறை கண்டுபிடிப்பாளர்களையும் தொழில் வாய்ப்புகளை உருவாக்குபவர்களையும் வலுப்படுத்துகிறது. இந்தக் கடன் பட்டியலில் வலுவான செயல்பாடு மற்றும் அதில் பதிவாகியுள்ள குறைந்தளவிலான கட்டம் 3 விகிதம் ஆகியவை வங்கியின் முன்மதியுடனான கடன் முகாமைத்துவத்தையும் இலங்கையின் வளர்ந்து வரும் தொழில்முயற்சித் துறையின் மீண்டெழுந்தன்மையையும் எடுத்துக்காட்டுகின்றன. பெண்களுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான எமது ஆதரவை நாங்கள் மேலும் வலுப்படுத்தியதோடு, நிதி வசதிகள், ஆலோசனைச் சேவைகள் மற்றும் நிலையான வணிக வளர்ச்சியை உறுதிப்படுத்தும் கட்டமைப்புடைய திட்டங்களுக்கான அணுகலையும் விரிவுபடுத்தினோம். விவசாயம், தயாரிப்பு, வர்த்தகம் மற்றும் சேவைகள் ஆகிய துறைகளில் பெண்களை வலுப்படுத்துவதன் மூலம், பரந்த சமூகபொருளாதார சமத்துவத்திற்கும் சமூக மேம்பாட்டிற்கும் நாங்கள் பங்களிக்கிறோம்.

### தாக்கத்தை ஏற்படுத்தும் நிதியியல் செயல்பாடு: கட்டமைப்பு பலத்தின் அடிப்படையில் கட்டப்பட்டது

2025 ஆம் ஆண்டில் வங்கி உண்மையிலேயே ஒரு முன்மாதிரியான நிதிச் செயல்பாட்டை வழங்கியது. பொருளாதார புத்துயிரளித்தல் மற்றும் மாறிவரும் வட்டி விகிதங்களுக்கு மத்தியில், வங்கி மூலோபாயத் தெளிவு, ஒழுக்கமான நிறைவேற்றல் மற்றும் மீண்டெழுந்தன்மையுடைய மேலாண்மை ஆகியவற்றுடன் பதிலிறுத்தியது. இது சிக்கலான சூழல்களையும் வாய்ப்புகளாக மாற்றிய அதேவேளை, வங்கியின் நீண்டகால பெறுமதியையும் பாதுகாத்தது.

வங்கி ஒரு முக்கியத்துவம்வாய்ந்த செயற்பாடாக, முன்னைய ஆண்டை விட 18% அதிகரிப்புடன் ரூ. 76.0 பில்லியன் வரிக்கு பின்னரான இலாபத்தை பதிவு செய்துள்ளது. அதே வேளையில் வரிக்கு முன்னரான இலாபமாக ரூ. 120.8 பில்லியனை எட்டியுள்ளது. இலங்கை அரசாங்கத்திற்கு வங்கி வழங்கிய ரூ. 76.7 பில்லியன் மொத்த வரிப் பங்களிப்பானது, தேசிய பொருளாதார அபிவிருத்தியை ஆதரிப்பதில் வங்கியின் முக்கிய பங்கை உறுதிப்படுத்துகிறது.




வங்கியின் மொத்த சொத்துக்கள் ரூ. 5.5 டிரில்லியனைத் தாண்டியுள்ளதுடன், மொத்தக் கடன்கள் ரூ. 2.7 டிரில்லியனாகவும் வைப்புத்தொகைகள் ரூ. 4.4 டிரில்லியனாகவும் காணப்படுகின்றன. இது வாடிக்கையாளர்களின் பலமான நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றது. வரிக்கு முன்னரான சொத்துக்களின் மீதான வருவாய் 2.3% ஆக முன்னேற்றமடைந்துள்ளதுடன், வரிக்குப் பின்னரான உரிமை மீதான வருவாய் 22.7% என்ற வலுவான மட்டத்தில் உள்ளது. நடைமுறை, சேமிப்பு கணக்குகளின் வளர்ச்சி மற்றும் ஐந்தொகை மேம்படுத்தல் காரணமாக தேறிய வட்டி எல்லை 4.0% ஆக விரிவடைந்தது.

திரண்ட அடிப்படையில், 2025 ஆம் ஆண்டில் வங்கியின் செயல்பாடு என்பது வெறும் நிதி முடிவுகளை மட்டும் குறிக்கவில்லை இது மூலோபாய ஒழுக்கம், செயல்பாட்டுத் திறன் மற்றும் விவேகமான நிர்வாகத்தை பிரதிபலிக்கிறது. உறுதியான இலாபகரத்தன்மை, மீண்டெழும் மூலதன கையிருப்புக்கள் மற்றும் வலுவான திரவத்தன்மை ஆகியவற்றால் பலப்படுத்தப்பட்ட வங்கி, நிலையான வளர்ச்சியை துரிதப்படுத்தவும், தேசிய பொருளாதார மறுமலர்ச்சிக்கு ஆதரவளிக்கவும், தேசத்தின் வங்கியாளர் (Bankers to the Nation) என்ற ரீதியில் நீடித்த பெறுமதியை தொடர்ந்து வழங்கவும் உறுதியாக உள்ளது.

### வாடிக்கையாளர் மையப்படுத்தல்: நிதியியல் உள்ளடக்கத்தை ஊக்குவித்தல்

“தேசத்தின் வங்கி” என்ற எமது அர்ப்பணிப்பு, நிதியியல் உள்ளடக்கம், டிஜிட்டல் வசதிப்படுத்தல் மற்றும் தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு ஆதரவளிக்கும் துறை சார்ந்த கடன் வழங்கல் ஆகியவற்றின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

டிஜிட்டல் நிலைமாற்றம் என்பது அணுகலை விரிவுபடுத்தும், கொடுக்கல்வாங்கல் செலவுகளைக் குறைக்கும் மற்றும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற சமூகங்களில் சேவைத் திறனை மேம்படுத்தும் ஒரு மூலோபாய காரணியாக நாங்கள் கருதுகிறோம். 2,400 க்கும் மேற்பட்ட தொடுமுனைகளைக் கொண்ட எமது விரிவான கிளை வலையமைப்புடன் டிஜிட்டல் சேனல்களை ஒருங்கிணைப்பதன் மூலம், விவசாயிகள், புலம்பெயர் தொழிலாளர்கள், நுண்-தொழில்முயற்சியாளர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் உள்ளடங்கலான பின்தங்கிய சமூகங்களுக்கு முறையான நிதிச் சேவைகளை விரிவுபடுத்தி வருகிறோம். இலங்கை தபால் துறையுடனான பி.ஓ.சி Connect போன்ற மூலோபாயக் கூட்டுறவுகள், தொலைதூர சமூகங்கள் மற்றும் அஸ்வெசும பயனாளிகளுக்கான எமது சேவைகளை மேலும் விரிவுபடுத்துகின்றன.

எமது வங்கியின் மையமாக வாடிக்கையாளர்களுடன் நாங்கள் பேணி வரும் தனிப்பட்ட உறவுகள் அமைகின்றன. இந்த உறவுகள் நம்பிக்கை, புரிதல் மற்றும் எமது வங்கியின் அணியினருடனான நீண்டகால ஈடுபாட்டின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

பிஸ்லிப்ட் மற்றும் பிஸ்பிளஸ் கடன் திட்டங்கள் போன்ற முன்னெடுப்புக்களின் மூலம், தேசிய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறைக்கு அத்தியாவசிய மூலதனம் மற்றும் வளர்ச்சி நிதியிடலை வங்கி வழங்கி ஆதரவளித்தது. வாடிக்கையாளர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு, நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை வழங்க எமது உறவுமுறை சார்ந்த அணுகுமுறை உதவுகிறது. இளைஞர்கள் மற்றும் பெண்களால் வழிநடத்தப்படும் தொழில்முயற்சிகள் மீதான எமது தொடர்ச்சியான கவனம், உற்பத்தித்திறன் மிக்க பொருளாதாரப் பங்கேற்பைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இலக்கு வைக்கப்பட்ட கடன் வழங்கல், ஆலோசனை ஆதரவு மற்றும் கட்டமைக்கப்பட்ட நிதித் தீர்வுகள் மூலம் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதனூடாக, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் சமூக மட்டத்திலான பெறுமதி உருவாக்கத்தை நாங்கள் எளிதாக்குகிறோம். இவ்வாண்டு முழுவதும், கடன் வழங்குவதற்கும் அப்பால் தொழில்முயற்சியாளர்களுக்கு நிதி அறிவு மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்கி வங்கி இந்த பகுதிகளுக்கு ஆதரவளிப்பதில் கவனஞ்செலுத்தியது. இத்தகைய முயற்சிகளின் வெற்றி, உள்ளடங்கலான வங்கித்தொழிலானது சேவையானது சமூகப் பொறுப்பு மட்டுமல்ல,

பொருளாதார ரீதியாகவும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியது என்ற எமது நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது.

நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும் வாடிக்கையாளர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றிய வங்கி, ரூ. 100.8 பில்லியன் பெறுமதியான 400 க்கும் மேற்பட்ட வணிகங்களை வெற்றிகரமாக மீட்டெடுத்துள்ளது. இது கடன் வழங்குநராக மாத்திரமன்றி, அறவிடல் மற்றும் வளர்ச்சியில் ஒரு பங்காளராகவும் எமது பங்களிப்பை நிரூபிக்கிறது. இதற்கு இணையாக, வங்கி பொறுப்பான மற்றும் நிலையான வங்கி நடைமுறைகளைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது.

### டிஜிட்டல் நிலைமாற்றம்: வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தல்

எமது நீண்டகால சாதனைகளின் தொடர்ச்சியாக இலங்கை வங்கி டிஜிட்டல் நிலைமாற்றலில் முன்னோடியாக விளங்கி எமது நீண்டகால சாதனைகளின் தொடர்ச்சியாகும். இது இலங்கையின் வங்கிதொழில் துறையில் எப்போதும் எங்களை முன்னிலையில் வைத்துள்ளது. இலங்கை வங்கியானது தனது பாரிய கட்டமைப்பு, பரந்துபட்ட சேவை வலையமைப்பு மற்றும் தேசியப் பொறுப்பு ஆகியவற்றைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தி, நாடு முழுவதும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

செயல்முறை தானியங்கிமயமாக்கலுக்கு அப்பால், தடையற்ற, பாதுகாப்பான மற்றும் தரவு அடிப்படையிலான வாடிக்கையாளர் அனுபவங்களை வழங்குவதற்காக மொபைல், ஆன்லைன், வங்கி கிளை மற்றும் சுய-சேவை அலைவரிசைகளை ஒன்றிணைப்பதன் மூலம் முழுமையான வங்கித்தொழில் பயணத்தை நாங்கள் மறுசீரமைக்கிறோம். டிஜிட்டல் மயமாக்கல் என்பது நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கும், வெளிப்படையான பொதுச் சேவை வழங்கலைச் சாத்தியமாக்குவதற்கும் மற்றும் டிஜிட்டல் ரீதியாக வலுவூட்டப்பட்ட குடிமக்களை உருவாக்குவதற்கும் வழிவகுப்பதன் மூலம், தேசிய முன்னேற்றத்திற்கான ஒரு ஊக்கியாக இலங்கை வங்கியின் வகிபாகத்தை மேலும் வலுவூட்டுகிறது. ஒழுக்கமான முதலீடு, வலுவான ஆளுகை மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றின் மூலம், எமது பொதுப் பொறுப்பில் இயல்பாகவே அமைந்துள்ள நம்பிக்கையுடன் செயல்பாட்டுத் திறனை சமநிலைப்படுத்தும், புத்தாகத்தினால் உந்தப்படும் ஒரு விரிவான சூழலை உருவாக்க நாங்கள் முயற்சிக்கிறோம்.

டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல் அளவுகளின் வலுவான வளர்ச்சி எமது தளங்களின் பரவலான பயன்பாட்டையும் அவை மீதான நம்பிக்கையையும் கணிசமாகப் பிரதிபலிக்கிறது. இது எமது தொழில்நுட்பம் சார்ந்த அணுகுமுறை வாடிக்கையாளர்களின் மாறிவரும் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்கிறது என்பதை நிரூபிக்கிறது. பிஓசி பிலெக்ஸ் செயலியானது அறிமுகப்படுத்தப்பட்ட குறுகிய காலத்திற்குள் 1.2 மில்லியனுக்கும் அதிகமான பதிவுகளைத் தாண்டியுள்ளதுடன், நாடு தழுவிய ரீதியில் டிஜிட்டல் பணப்பை பயன்பாட்டை கணிசமாக விரைவுபடுத்தி, வசதியான மற்றும் உள்ளடக்கிய வங்கிச் சேவைக்கான அணுகலை விரிவுபடுத்தியுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. பிஓசி பிலெக்ஸ் அதன் டிஜிட்டல் சிறப்பிற்காக பல விருதுகளையும் அங்கீகாரங்களையும் பெற்றுள்ளது. அதேவேளை, ஸ்மார்ட் ரெமிட் மொபைல் செயலி போன்ற எமது ஏனைய டிஜிட்டல் தளங்களும் மூலோபாயக் கூட்டாண்மைகள் மூலம் ஆழமான ஒருங்கிணைப்பைப் பெற்றுத் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகின்றன.

### மனித மூலதனம்: ஆற்றல்களை வளர்த்தல்

எமது தொடர்ச்சியான தலைமைத்துவத்திற்குப் பின்னால் இருக்கும் உந்து சக்தியாக எமது மனித மூலதனத்தை நாங்கள் ஆழமாக மதிக்கிறோம். எமது ஊழியர்கள், வங்கியின் மூலோபாயங்களை அர்த்தமுள்ள வாடிக்கையாளர் உறவுகளாகவும், களத்தில் சிறந்த சேவைகளாகவும் மாற்றும் முக்கிய பாலமாகச் செயல்படுகின்றனர்.

இந்த ஆண்டுக்காலப்பகுதியில் எமது மனிதவள நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் மூலோபாய மேற்பார்வையை வலுப்படுத்துவதற்காகக் கட்டமைப்பு ரீதியான மேம்பாடுகளை நாங்கள் மேற்கொண்டோம். தலைமை செயல்பாட்டு அதிகாரி, பிரதி பொது முகாமையாளர் - நிலைமாற்றம் மற்றும் மனிதவள மூலோபாயம் மற்றும் பிரதி பிரதான சட்ட அதிகாரி (ஆளுகை, மனிதவளம் மற்றும் வங்கி செயல்பாடுகள்) உள்ளிட்ட முக்கிய தலைமைத்துவப் பதவிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், செயல்பாடுகளைச் சீரமைக்கவும், பொறுப்புக்கூறலை மேம்படுத்தவும் திணைக்களங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும் எமது அறிக்கையிடல் கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட்டது. இந்த மாற்றங்கள் எமது துரிதம், ஒழுக்கமான நிர்வாகம் மற்றும் செயல்பாட்டுத் சிறப்பிற்கான அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துவதுடன், பெருமளவில் மாறிவரும் சூழலில் எமது ஊழியர்கள் நீடித்த பெறுமதியை வழங்க இது அதிகாரம் அளிக்கிறது.

திறமைகளை வளர்ப்பதற்கும் வங்கியின் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்திற்கு ஆதரவளிப்பதற்கும் எமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் விதமாக, இந்த ஆண்டுக்காலப்பகுதியில் 800க்கும் மேற்பட்ட புதிய பயிற்சிப் பணியாளர்களை நாங்கள் இணைத்துக் கொண்டோம். எமது இலங்கை வங்கிக் குழுமமானது உள்ளடங்கலான தன்மையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருவதின் பிரதிபலிப்பாக எமது குழுவில் 59% ஆனோர் பெண்கள் ஆவர். பன்முகத்தன்மை மற்றும் சமத்துவம் ஆகியவை எமது செயல்பாடுகளின் மையமாகத் தொடர்கின்றன என்பதற்கு இது ஒரு தெளிவான சான்றாகும். உள்நாட்டு மற்றும் சர்வதேச தளங்களில் வழங்கப்படும் விரிவான பயிற்சித் திட்டங்கள் மூலம் கற்றல் மற்றும் மேம்பாடு மீதான எமது கவனத்தை நாங்கள் மேலும் வலுப்படுத்தியுள்ளோம். முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள் சார்ந்த செயல்திறன் கலாச்சாரத்தை தழுவுவதோடும், உறுதியான மூலதன முகாமைத்துவ உபாயங்களோடும் இணைந்த இந்த நடவடிக்கைகள், வேகமாக மாறிவரும் நிதி சூழலில் வங்கியின் தகவமைப்பு, பதிலளிப்பு மற்றும் வளர்ச்சி வேகத்தைத் தக்கவைக்கும் திறனை வலுப்படுத்தியுள்ளன.

எங்களின் பயிற்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்கள், சிறந்த செயல்திறன் மிக்கவர்கள் அங்கீகரிக்கப்பட்டு அதிகாரமளிக்கப்படுவதை உறுதிசெய்து, சிறப்புத்தன்மையின் கலாச்சாரத்தை வளர்க்கின்றன. செயல்திறன் என்பது திறன், கலாச்சாரம் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றால் நிலைநிறுத்தப்படுகிறது என்பதை உணர்ந்து, நிறுவனம் முழுவதும் தலைமைத்துவ மேம்பாடு, டிஜிட்டல் திறன் வளர்ச்சி, நிலைத்தன்மை மற்றும் இடர் விழிப்புணர்வு ஆகியவற்றில் தொடர்ந்து முதலீடு செய்தோம். கிளை குழுக்கள் மேம்படுத்தப்பட்ட கருவிகள் மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட செயல்முறைகளால் வலுப்பெற்று, வாடிக்கையாளர் ஈடுபாட்டில் மிகவும் விரைவான பதிலளிப்பை சாத்தியமாக்கின.

### நிலைத்தன்மை மற்றும் காலநிலை மீள்திறன்: பொறுப்பான வங்கியியலில் மீதான கவனம்

ஆண்டின் போது காணப்பட்ட காலநிலை பாதிப்புகள், சுற்றுச்சூழல் மாறுபாடுகளுக்கும் நிதி உறுதிப்பாட்டிற்கும் இடையிலான ஆழமான தொடர்பை வலியுறுத்தின. காலநிலை சார்ந்த இடையூறுகள், சுற்றுச்சூழல் அபாய பரிசீலனைகளை மையமான வங்கி நடவடிக்கைகளில் உள்ளடக்குவதன் அவசியத்தை மேலும் உறுதிப்படுத்தின. இதற்கு பதிலிறுத்தும் வகையில், நிலைத்தன்மை

# பொது முகாமையாளரின் மீளாய்வு

> எதிர்காலத்தை நோக்குகையில், மூலதன மீண்டெழுந்தன்மையை நிலைநிறுத்துதல், டிஜிட்டல் ஒருங்கிணைப்பை ஆழப்படுத்துதல், காலநிலையுடன் இசைந்துசெல்லும் நிதியிடலை விரிவாக்குதல், செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துதல் மற்றும் வலுவான ஆளுகைத் தரங்களைப் பேணல் ஆகியவற்றில் எங்களது முன்னுரிமைகள் தொடர்ந்து கவனஞ்செலுத்துகின்றன.

என்பது இனி வெளிப்புற நிகழ்ச்சி நிரலாக கருதப்படாமல், மூலோபாய முடிவெடுத்தல், மூலதன ஒதுக்கீடு மற்றும் நிறுவன இடர் முகாமைத்துவ கட்டமைப்புகளில் பெருமளவாக ஒருங்கிணைக்கப்படுகிறது.

வங்கி தனது சுற்றுச்சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ முறைமைகளை வலுப்படுத்தி, கடன் மதிப்பீடு மற்றும் சொத்துப்பட்டியல் மதிப்பாய்வில் காலநிலை இடர் மதிப்பீட்டை உள்ளடக்கியது. SLFRS S1 மற்றும் S2 வெளிப்படுத்தல் கட்டமைப்புகளின் கீழ் தயார்நிலை மேம்படுத்தப்பட்டு, தன்னார்வ அறிக்கையிடல் சந்தை எதிர்பார்ப்புகளுடன் இணங்கச்செய்யப்பட்டது.

நாங்கள் முன்னோக்கிப் பார்க்கும்போது, மூலதன மீண்டெழுந்தன்மையை நிலைநிறுத்துதல், டிஜிட்டல் ஒருங்கிணைப்பை ஆழப்படுத்துதல், காலநிலையுடன் இசைந்துசெல்லும் நிதியிடலை விரிவாக்குதல், செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துதல் மற்றும் வலுவான ஆளுகைத் தரங்களைப் பேணல் ஆகியவற்றில் எங்களது முன்னுரிமைகள் தொடர்ந்து கவனஞ்செலுத்துகின்றன.

புதுப்பிக்கத்தக்க வலு நிதியிடல் மற்றும் பசுமைக் கடன்களை விரிவுபடுத்துவதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். அதேவேளை, எங்களது அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் இடர் முகாமைத்துவ கட்டமைப்பில் SLFRS S1 மற்றும் SLFRS S2 தரநிலைகளை முறையாக ஒருங்கிணைக்கின்றோம். வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவிக்கும் அதே வேளையில், வலுவான ஆளுகை, சிறந்த தகவல் மற்றும் முன்னேற்றகரமான இடர்நேர்வு மதிப்பீடுகள் மூலம், வளர்ந்து வரும் நிலைத்தன்மை தரநிலைகளுக்கு ஏற்ப கடன், மூலதனம் மற்றும் மூலோபாய முடிவுகளில் நிலைத்தன்மை அளவுகோல்களை நாங்கள் இணைத்துள்ளோம். இலங்கையின் முதல் சிதைவடையக்கூடிய தன்மை கொண்ட வரவட்டைகளின் அறிமுகம் போன்ற முன்னெடுப்புக்கள், பொறுப்பான புத்தாக்கத்திற்கான எங்களது அர்ப்பணிப்பை மேலும் எடுத்துக்காட்டுகின்றன.

அளவிடக்கூடிய சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களுக்கு நிதி திரட்டுவதற்காக, இதுவரை இல்லாத அளவில் மிகப்பெரிய நிலைத்தன்மைப் முறி வெளியீட்டின் தொடக்கம் ஒரு முக்கிய சாதனையாகும். இதன் மூலம் ரூ. 20.0 பில்லியன் திரட்டப்பட்டது. இது எங்களது மூலதன நிலையை வலுப்படுத்தியதோடு, தகுதியுள்ள பசுமை மற்றும் சமூகத் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் எங்களது நிலையான கடன் சொத்துப்பட்டியலை விரிவுபடுத்தியது.

## முன்னோக்கிய மூலோபாய மாற்றம்: தேசத்தின் வங்கியாளராக

வங்கியின் "பரிமாணங்களின் பன்முகப் பார்வை" என்பது நிறுவனத் திறனின் பல பரிமாணங்களில் ஒருங்கிணைக்கப்பட்ட சீரமைப்பைப் பிரதிபலிக்கிறது. எதிர்காலத்தை நோக்குகையில், மூலதன மீண்டெழுந்தன்மையை நிலைநிறுத்துதல், டிஜிட்டல் ஒருங்கிணைப்பை ஆழப்படுத்துதல், காலநிலையுடன் இசைந்துசெல்லும் நிதியிடலை விரிவாக்குதல், செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துதல் மற்றும் வலுவான ஆளுகைத் தரங்களைப் பேணல் ஆகியவற்றில் எங்களது முன்னுரிமைகள் தொடர்ந்து கவனஞ்செலுத்துகின்றன. எமது நிதியியல், செயல்பாட்டு, டிஜிட்டல் மற்றும் நிலைத்தன்மை பரிமாணங்களில் எய்திய இந்த சீரமைப்பு, இலங்கையின் அடுத்தகட்ட முன்னேற்றத்திற்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்க எங்களை தயார்படுத்தியுள்ளது.

டிஜிட்டல் புத்தாக்கம், வாடிக்கையாளர்களின் மாறிவரும் எதிர்பார்ப்புகள் மற்றும் உயரிய ஒழுங்குமறைப்படுத்தல் மற்றும் நிலைத்தன்மை தரநிலைகளால் நிதியியல்துறை முன்னெப்போதும் இல்லாதவாறு வேகத்தில் வளர்ச்சியடைந்து வருகின்றது. எனவே, வளர்ந்து வரும் நிதிச் சூழலுக்கு ஏற்ப எங்களது தொலைநோக்கு மற்றும் குறிக்கோளை நாங்கள் மறுசீரமைத்துள்ளோம். இது நோக்கத்தின் தெளிவை மேம்படுத்துவதுடன், இலங்கையில் வங்கித்தொழில் துறையின் எதிர்காலத்தை மறுசீரமைப்பதற்கான எங்களது தலைமைத்துவத்தையும் மூலோபாய இலட்சியத்தையும் வலுப்படுத்துகிறது. எங்களது 2026–2030 மூலோபாய வரைபடம் மாறிவரும் சந்தை போக்குகள், ஒழுங்குமுறை மாற்றங்கள் மற்றும் தொழில்நுட்ப சீர்குலைவுகளுக்கு மத்தியில் வங்கி சுறுசுறுப்புடன் இயங்குவதையும் மீண்டெழுந்தன்மை மற்றும் நோக்குடன் முன்செல்வதற்கு நிறுத்துகிறது. இந்த மூலோபாய வழிகாட்டியின் ஒரு முக்கிய மேம்பாடு, "ஆளுகையை" ஒரு தனித்துவமான மூலோபாயத் தூணாகச் சேர்த்துள்ளதாகும். மேற்பார்வை, பொறுப்புக்கூறல் மற்றும் இடர்நேர்வு வழிகாட்டல் ஆகியவற்றை வலுப்படுத்துவதன் மூலம், பங்குதாரர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தவும், நீண்ட கால பெறுமதியை பாதுகாக்கவும், இலங்கையின் வேகமாக மாறிவரும் நிதிச் சூழலில் நிலையான வளர்ச்சிக்கான தெளிவான பாதையை வகுக்கவும் நாங்கள் திட்டமிட்டுள்ளோம். வலுவான இடர் முகாமைத்துவம், சூழல் சமூக மற்றும் ஆளுகை ஒருங்கிணைந்த கடன் கட்டமைப்புகள் மற்றும் விவேகமான மூலதன ஒதுக்கீடு ஆகியவை எங்களது வளர்ச்சி சமநிலையானதாகவும், உறுதியானதாகவும், நீடித்ததாகவும் இருப்பதை உறுதி செய்யும்.

முன்னோக்கிப் பார்க்கையில், உள்ளடங்கலான வங்கித்தொழில் சேவையே தேசிய முன்னேற்றத்தை உந்துகிறது என்ற நம்பிக்கையில் வங்கி உறுதியாக உள்ளது. வங்கிச் சேவைகள் அனைவருக்கும் சமமாகக் கிடைப்பதையும், செழிப்பு பகிர்ந்து கொள்ளப்படுவதையும் உறுதிசெய்யும் ஒரு நிதிச் சூழலை உருவாக்க நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம். எங்களது டிஜிட்டல் நிலைமாற்ற பயணத்தை விரைவுபடுத்தவும், வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட புத்தாக்கத்தை ஆழப்படுத்தவும், பொறுப்பான வளர்ச்சியை உறுதி செய்ய எமது கடன் மற்றும் விழுமியங்களை வலுப்படுத்துவது மீது நாங்கள் கவனம் செலுத்துகிறோம். அதேவேளையில், தனிநபர்களை வலுப்படுத்துதல், வணிகங்களை ஊக்குவித்தல் மற்றும் நாடு முழுவதும் மற்றும் கடல்கடந்த சமூகங்களுக்கு ஆதரவளித்தல் ஆகிய எமது தேசியக் கடமையில் நாங்கள் உறுதியாகவுள்ளோம்.

வங்கியின் எதிர்காலம் என்பது துரிதம், ஒழுக்கமான நிறைவேற்றல் மற்றும் பகிரப்பட்ட விழுமியங்களால் ஒன்றிணைந்த உயர்திறன் கொண்ட குழுவால் வரையறுக்கப்படும். வலுவான ஆளுகை எமது அடித்தளமாகவும்,

நிலைத்தன்மையை எமது வழிகாட்டும் கொள்கையாகவும் கொண்டு, அனைத்துப் பங்குதாரர்களுக்கும் நீடித்த பெறுமதியை உருவாக்குவதோடு, இலங்கையின் நிதியியல் முன்னேற்றத்தை மேம்படுத்தும் எமது திறனில் நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

## நன்றியுரை: எமது மதிப்பிற்குரிய பங்குதாரர்களுக்கு

குறிப்பிடத்தக்க அடைவுகள் மற்றும் முக்கிய கட்டங்களால் வரையறுக்கப்பட்ட இந்த ஆண்டைத் திரும்பிப் பார்க்கும்போது, வங்கியின் வெற்றிப் பயணத்திற்குப் பங்களித்த அனைவருக்கும் நான் ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எமது தலைவர் திரு. காவிந்த டி சொய்சா மற்றும் பணிப்பாளர் சபையினரின் தொலைநோக்குடனான வழிகாட்டல் மற்றும் முன்மாதிரியான தலைமைத்துவத்திற்காக எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓய்வுபெற்ற முன்னாள் பொது முகாமையாளர் திரு. ரசல் பொன்சேகா அவர்களின் சிறந்த வங்கிப் பணிக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன். அவரது தொலைநோக்குடனான தலைமைத்துவமும் தளராத அர்ப்பணிப்பும் வங்கியின் வெற்றிப் பயணத்தில் அழியாத தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

எங்களது மூலோபாயத்தை திட்டவட்டமான பெறுபேறுகளாக மாற்றுவதில் முக்கிய பங்காற்றிய எமது கூட்டாண்மை மற்றும் நிறைவேற்று முகாமைத்துவக் குழுக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் முழு இலங்கை வங்கி குழுவினரின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் சிறந்து விளங்குவதற்கான இடைவிடாத முயற்சி ஆகியவற்றிற்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வங்கியின் ஆளுகை மற்றும் மீண்டெழுந்தன்மையைத் தொடர்ந்து வலுப்படுத்தி வரும் நிதி அமைச்சின் அலுவலர்கள், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அவரது குழுவினர், மற்றும் கணக்காய்வாளர் நாயகம் மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஊழியர்களுக்கு அவர்களின் விலைமதிப்பற்ற வழிகாட்டல் மற்றும் மேற்பார்வைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை முழுவதும் உள்ள எமது விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கு, ஒவ்வொரு நாளும் உங்களது நம்பிக்கையைப் பெறுவதற்கான எங்களது உறுதிப்பாட்டை இலங்கை வங்கி மீண்டும் உறுதிப்படுத்துகிறது. உங்களது மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு சிறப்பான வங்கி அனுபவத்தை வழங்குவதற்கும், எமது அனைத்துப் பங்குதாரர்களுக்கும் பெறுமதியினை உருவாக்குவதற்கும் நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம்.

எதிர்காலத்தை நோக்குகையில், நம்பிக்கையின் வழிகாட்டுதலுடன், வங்கியின் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட பன்முகப் பரிமாணங்களையும், எப்போதும் மாறிவரும் சிக்கல்களையும் ஒரு கனசதுரத்தின் துல்லியமான சீரமைப்பைப் போல தெளிவுடன் கையாள்கிறோம். எம்மீது நம்பிக்கை வைத்துள்ள அனைவருக்கும் உறுதிப்பாடு, வளர்ச்சி மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்வதன் மூலம், சிறந்து விளங்குவதற்கான எமது அர்ப்பணிப்பில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.



**வை. ஏ. ஜயதிலக**
பொது முகாமையாளர் /
பிரதான நிறைவேற்று அதிகாரி

2026 பெப்ரவரி 24

# பணிப்பாளர்கள் சபை

இடமிருந்து வலம்

**அம்மணி. ஜானகி சேனாநாயக்க சிறிவர்தன,** செயலாளர், இலங்கை வங்கி/ சபையின் செயலாளர், **திரு சுனிமல் வீரசூரிய** நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் **பொறியியலாளர் பேராசிரியர் ஆனந்த ஜயவர்தன** நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் **திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க,** நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர், **திரு. காவிந்த டி. சொய்சா,** தலைவர், **திரு. தர்ஷன குணசேகர,** நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**கலாநிதி கபில** சேனாநாயக்க நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர், பதவிவழி பணிப்பாளர் **திரு. ஜெஹான் இஸ்மாயில்** நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் **திரு. துல்சி அலுவிகாரே** நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் **அம்மணி. ஷர்மினி ரத்வத்தே** நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் **திரு. தர்ஷன் ஜயரத்ன** நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் **கலாநிதி அமல் இல்லேசிங்க** நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

# பணிப்பாளர்கள் சபை

## திரு. காவிந்த டி சொய்ஸா

தலைவர்

நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

GRI 2-11

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளின்படி ஒரு சுயாதீனமான கணிப்பாளராகவும், இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வங்கிகளுக்காக வழங்கிய நிறுவன ஆளுகை தொடர்பான வங்கிச் சட்டப் பணிப்புரைகளின் கீழ் ஒரு சுயாதீனமற்ற பணிப்பாளராகவும் இவர் பணியாற்றுகிறார்.

**நியமன திகதி: 04 நவம்பர் 2024**

### திறன்கள் மற்றும் அனுபவம்

- 30 ஆண்டுகளுக்கும் மேலான தொழில்துறை அனுபவம் மற்றும் முகாமைத்துவம், தலைமைத்துவம், மூலோபாய திட்டமிடல் மற்றும் ஆளுகை போன்றவற்றில் நிபுணத்துவம் கொண்ட ஒரு ஓர்வங்கியாளர்
- கூட்டாண்மை மற்றும் முதலீட்டு வங்கியியல், செயற்திட்ட நிதி, அபிவிருத்தி வங்கியியல், இணைப்புக்கள் மற்றும் கையகப்படுத்தல் மூலதன சந்தைகள், இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல், இடர் முகாமைத்துவம் மற்றும் ஆலோசனை ஆகியவற்றில் அனுபவம்.
- சில்லறை மற்றும் கிளை வங்கியியல், டிஜிட்டல்மயமாக்கல், திட்ட நிதி, மேம்பாட்டு வங்கி, சிறிய நடுத்தர முயற்சியாண்மைக் கடன், ஏற்றுமதி கடன் செயலாண்மை (ECA) நிதி, வர்த்தகம், பண முகாமைத்துவம், திறைசேரி, சந்தைப்படுத்தல், வங்கி செயல்பாடுகள் மற்றும் கணக்காய்வு ஆகியவற்றில் அனுபவம்.
- கொழும்பு பல்கலைக்கழகத்தில் முதுநிலை பட்டம் வியாபார நிர்வாகம் (தகுதி தேர்ச்சி) மற்றும் தங்கப் பதக்கம் வென்றவர்.
- பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் சக உறுப்பினர் (CIMA) U.K.
- உலகளாவிய பட்டய முகாமைத்துவ கணக்காளர் (CGMA)-AICPA மற்றும் CIMA.
- பட்டய சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் சக உறுப்பினர் (CIM) U.K.
- இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் (IBSL) சக உறுப்பினர்.
- இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்களின் சக உறுப்பினர் (CMA).
- சிகாகோ பல்கலைக்கழகத்தின் பூத் வணிகக் கல்லூரியிலிருந்து “தரவு மற்றும் பகுப்பாய்வுகளுடன் வழிநடத்தல் “நிறைவேற்றுக் கல்வித் திட்டத்தை முடித்தார்.
- பிரித்தானியாவின் ICAEW மற்றும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் சங்கம் (NEDA) இணைந்து வழங்கிய ICAEW நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் சான்றிதழை (Non-Executive Director Certification) வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார்.

### முன்னைய நியமனங்கள்

- இலங்கை சிட்டி வங்கி N.A., பணிப்பாளர் மற்றும் நாட்டு வணிகத் தலைவர்.
- தேசிய அபிவிருத்தி வங்கி (முன்னாள் ABN Amro), நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி மற்றும் செலான் வங்கியில் பணியாற்றினார்.
- சர்வதேச சான்றளிக்கப்பட்ட தொழில்முறை கணக்காளர்கள் சங்கத்தின் (AICPA) MESANA REG தலைவர்.
- இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் பிரதான பரீட்சகர், நெறியாளர் மற்றும் ஆலோசகர்.
- இலங்கை அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- மூத்த உறுப்பினர் மதிப்பீட்டாளர் (Senior Membership Assessor) மற்றும் CIMA சர்வதேச உறுப்பினர் குழுவின் உறுப்பினர் (CIMA சர்வதேச உறுப்பினர் குழுவின் துணைத் தலைவர்).

### பிற நியமனங்கள்

- இலங்கை வங்கி (UK) லிமிடெட் தலைவர்/ நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் (UK) லிமிடெட்.
- தலைவர்/ நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் ப்ரோபர்ட்டி டெவலப்மென்ட் லிமிடெட்.
- BOC பிராபர்ட்டி டெவலப்மென்ட் அண்ட் மேனேஜ்மென்ட் (தனியார்) லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் / நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- BOC IT Solutions (தனியார்) லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் / நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
- லங்கா ஹாஸ்பிடல்ஸ் கோப்பரேஷன் பிஎல்சி (PLC) நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- உலகளாவிய மன்ற உறுப்பினர், (CIMA) U.K.
- கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் ருஹுணு பல்கலைக்கழகத்தில் வருகைதரு விரிவுரையாளர்

## கலாநிதி. கபில சேனாநாயக்க

நிறைவேற்று அதிகாரமற்ற பதவிவழி பணிப்பாளர்

**நியமன திகதி: 14 நவம்பர் 2024**

### திறன்கள் மற்றும் அனுபவம்

- பொது மற்றும் தனியார் துறைகளில் மூலோபாய திட்டமிடல், நிதி முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவம் மற்றும் ஆளுகை தொடர்பான பரந்த அனுபவம் மற்றும் வெளிப்பாடு.
- ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் கலாநிதி பட்டம் பெற்றுள்ளார்.
- ஜப்பானின் ஹிட்டோட்சுபாஷியில் வணிக மூலோபாயங்கள் தொடர்பான பட்டப்படிப்பு கல்லூரியில் பொதுக் கொள்கையில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார்.
- ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிகவியலில் இளமாணி (சிறப்பு) இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு) பட்டம் பெற்றுள்ளார்.
- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் (SLIDA) மற்றும் இலங்கை மன்ற நிறுவகம் ஆகியவற்றில் முகாமைத்துவம் தொடர்பாக உயர் டிப்ளோமா பெற்றுள்ளார்
- இலங்கைப் பணிப்பாளர் நிறுவனத்தின் உறுப்பினர்

### முன்னைய நியமனங்கள்

- தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர்
- இலங்கை கொள்கை ஆய்வுகள் நிறுவனத்தின் (IPS) ஆளுநர் சபையின் பதவிவழி உறுப்பினர்
- ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிடெட் பணிப்பாளர்.
- இலங்கை முதலீட்டு சபையின் பணிப்பாளர்
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர்.
- ஆங்கில முதுகலை நிறுவனத்தின் பணிப்பாளர்
- இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்தின் பணிப்பாளர்
- லங்கா நிலக்கரி (தனியார்) லிமிடெட் பணிப்பாளர்
- பணிப்பாளர், பதில் பிரதிப் பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் – இறைக் கொள்கைத் திணைக்களம், பொது திறைசேரி.
- உதவிப் பணிப்பாளர் – தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு.

### பிற நியமனங்கள்

- நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் இறைக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம்

## திரு ஜெஹான் இஸ்மாயில்

நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளின்படி ஒரு சுயாதீனமான பணிப்பாளராகவும், இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வங்கிகளுக்காக வழங்கிய நிறுவன ஆளுகை தொடர்பான வங்கிச் சட்டப் பணிப்புரைகளின் கீழ் ஒரு சுயாதீனமற்ற பணிப்பாளராகவும், இவர் பணியாற்றுகிறார்.

**நியமன திகதி: 07 பெப்ரவரி 2024**

### திறன்கள் மற்றும் அனுபவம்

- முக்கியமாக ஆசியா, மேற்கு அரைக்கோளம் மற்றும் மத்திய கிழக்கில் உள்ள நாடுகளில் வணிக மற்றும் முதலீட்டு வங்கியியலில் 42 ஆண்டுகளுக்கும் மேலான விரிவான அனுபவம்.
- முக்கிய அமைப்பு தொடர்பான திட்டங்களை ஒருங்கிணைத்துள்ளது மற்றும் அனைத்து முதலீட்டு வங்கி ஆதரவு செயல்பாடுகளை அமைப்பதற்கும் இயக்குவதற்கும் பொறுப்பாக உள்ளார்
- இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் வருகைதரு விரிவுரையாளர்
- இலங்கை, கொழும்பு பல்கலைக்கழகத்தில் கௌரவ விஞ்ஞானமாணிப் பட்டம் (இரசாயனவியல்) பட்டம் பெற்றுள்ளார்.
- ஐக்கிய இராச்சியத்தின் வங்கியாளர்களின் பட்டய நிறுவனத்தின் சக உறுப்பினர்.
- INSEAD மற்றும் Cranfield இல் வெளிப்புற முகாமைத்துவ மற்றும் தலைமைத்துவ அபிவிருத்தி திட்டங்களில் பங்கேற்றுள்ளார்
- பிரித்தானியாவின் ICAEW மற்றும் நிர்வாகமற்ற இயக்குநர்கள் சங்கம் (NEDA) இணைந்து வழங்கிய ICAEW நிர்வாகமற்ற இயக்குநர் சான்றிதழை (Non-Executive Director Certification) வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார்.
- இலங்கை பணிப்பாளர் நிறுவனத்தின் உறுப்பினர்

### முன்னைய நியமனங்கள்

- எம் பவர் கெப்பிட்டல் லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி.
- First Capital Holdings PLC பிரதான நிறைவேற்று அதிகாரி/ பணிப்பாளர்.
- HSBC கொலம்பியா மற்றும் HSBC சவுதி அரேபியா ஆகிய இரண்டின் பிரதான தொழிற்பாட்டு அதிகாரி.
- SABB செக்யூரிட்டீஸ் (HSBC குழுமம், சவுதி அரேபியா) பிரதான நிறைவேற்று அதிகாரி.
- சிரேஷ்ட தலைவர், கூட்டாண்மை வங்கியியல், HSBC இந்தோனேசியா.
- உலகளாவிய உறவுமுறை முகாமையாளர் - கூட்டாண்மை வங்கிச்சேவை, HSBC, ஹாங்காங்.

### பிற நியமனங்கள்

- எம் பவர் கேப்பிட்டல் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர்/ நிறைவேற்று பணிப்பாளர்.
- எம் பவர் கேப்பிட்டல் செக்யூரிட்டீஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர்/ நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- ஹோட்டல்கள் கொழும்பு (1963) லிமிடெட் நிறுவனத்தின் தலைவர்/ நிறைவேற்று அதிரகாரமற்ற/ பணிப்பாளர்
- காமன்வெல் (பிரைவேட்) லிமிடெட் நிறைவேற்று அதிகாரமுள்ள பணிப்பாளர்.
- கபிதான் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர்.
- லிட்டில் ஜிம் லங்கா (தனியார்) நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- மேர்ச்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீலங்கா மற்றும் ஃபினான்ஸ் பிஎல்சி ஆகியவற்றின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
- எம் பவர் குரூப் (தனியார்) லிமிடெட் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர்

## கலாநிதி அமல் இல்லேசிங்க

நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளின்படி ஒரு சுயாதீனமான பணிப்பாளராகவும், இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வங்கிகளுக்காக வழங்கிய நிறுவன ஆளுகை தொடர்பான வங்கிச் சட்டப் பணிப்புரைகளின் கீழ் ஒரு சுயாதீனமற்ற பணிப்பாளராகவும் இவர் பணியாற்றுகிறார்.

**நியமன திகதி: 06 டிசம்பர் 2024**

### திறன்கள் மற்றும் அனுபவம்

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் மூலோபாய முகாமைத்துவம் ஆகிய துறைகளில் 35 ஆண்டுகளுக்கும் மேலானஅனுபவத்தைக் கொண்டுள்ள வங்கித்தொழில் நிபுணர்.
- மலேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் தகவலியலில் கலாநிதி பட்டம் பெற்றார்.
- கொழும்பு பல்கலைக்கழகத்தின் UCSC இலிருந்து தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞான முதுமாணிப் பட்டம்.
- களனி பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமானிப் பட்டம்.

# பணிப்பாளர்கள் சபை

- கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினி தொழில்நுட்ப நிறுவகத்தில் கணினி தொழில்நுட்பத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா,
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கணிதம் மற்றும் புள்ளிவிபரத்தில் இளமாணிப் பட்டம் (கௌரவ) பட்டம்.
- இலங்கை பணிப்பாளர் நிறுவனத்தின் உறுப்பினர்
- பிரித்தானியாவின் ICAEW மற்றும் நிர்வாகமற்ற பணிப்பாளர்கள் சங்கம் (NEDA) இணைந்து வழங்கிய ICAEW நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் சான்றிதழை (Non-Executive Director Certification) வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார்.

### முன்னைய நியமனங்கள்

- தேசிய சேமிப்பு வங்கி மற்றும் மக்கள் வங்கியில் சேவையாற்றியுள்ளார்.
- தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சபை உறுப்பினர்.
- வங்கியின் சி.ஐ.ஓ மன்றத்தின் செயலாளர்.
- இலத்திரனியல் கொடுப்பனவு முறைமை நடைமுறைப்படுத்தல் செயற்குழுவின் உறுப்பினர்.
- தேசிய கொடுப்பனவு சபை உறுப்பினர்.
- இலங்கை மத்திய வங்கியின் டியமெயஞசு அமுலாக்கல் குழுவை நியமித்ததுடன் கட்டச் சங்கிலி தொழில்நுட்பக் குழவை அடிப்படையாகக் கொண்டு பகிர்ந்த KYC நடைமுறைபடுத்தல் உறுப்பினர்.
- இலங்கை கணிணி சங்கத்தின் செயலாளர்.

### பிற நியமனங்கள்

- பிரித்தானிய கணினிச் சங்கத்தின் உறுப்பினர் (BCS)
- இலங்கை கணிணி சங்கத்தின் பொருளாளர். (CSSL)
- தொழிற்துறை அமைப்பின் சங்கத்தின் (OPA) நிறைவேற்று சபை உறுப்பினர்.
- BOC IT Solutions (Pvt) Limited இல் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

## திரு ஆர் எம் பி ரத்நாயக்க

நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளின்படி ஒரு சுயாதீனமான பணிப்பாளராகவும், இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வங்கிகளுக்காக வழங்கிய நிறுவன ஆளுகை தொடர்பான வங்கிச் சட்டப் பணிப்புரைகளின் கீழ் ஒரு சுயாதீனமற்ற பணிப்பாளராகவும் இவர் பணியாற்றுகிறார்.

**நியமன திகதி: 20 டிசம்பர் 2024**

### திறன்கள் மற்றும் அனுபவம்

- அரச துறையில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக விரிவான சேவை, பல்தரப்பு அபிவிருத்தி வங்கிச்சேவை, இருதரப்பு உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி (ODA) கலந்துரையாடல்கள், அபிவிருத்தி பங்காளர்களுடன் உறவுகளை வளர்த்தல் மற்றும் கடன் வழங்கும் முகவர்கள், ஆளுகை மற்றும் மேற்பார்வை ஆகியவற்றில் விரிவான அனுபவம்.
- பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விவசாயப் பொருளியலில் இளமாணிப் பட்டம் பெற்றவர்.
- நோர்வே விவசாய பல்கலைக்கழகத்தில் விவசாயத்தில் முதுகலை பட்டம் பெற்றார்.
- பலதரப்பு அபிவிருத்தி வங்கியியலில் நிபுணத்துவம், முக்கிய அபிவிருத்தி திட்டங்களுக்கு வெளிநாட்டு நிதியைத் திரட்டுதல்.
- இலங்கை பணிப்பாளர் நிறுவனத்தின் உறுப்பினர்
- பிரித்தானியாவின் ICAEW மற்றும் நிர்வாகமற்ற இயக்குநர்கள் சங்கம் (NEDA) இணைந்து வழங்கிய ICAEW நிர்வாகமற்ற இயக்குநர் சான்றிதழை (Non-Executive Director Certification) வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார்.

### முன்னைய நியமனங்கள்

- திறைசேரியின் பிரதிச் செயலாளர்.
- இலங்கை வங்கி மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பதவிவழிப் பணிப்பாளர்.
- கொழும்பு லோட்டஸ் டவர் முகாமைத்துவ கம்பனி (தனியார்) நிறுவனத்தின் பதில் தலைவர்.
- தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர்.
- தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பணிப்பாளர்.
- சீன மக்கள் குடியரசின் பெய்ஜிங்கில் உள்ள ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிறைவேற்ற அதிகாரமற்ற பணிப்பாளர்.
- மக்கள் வங்கியின் பணிப்பாளர்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர்.
- இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர்.
- இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் (SPC) பணிப்பாளர்.
- இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஆணைக்குழு உறுப்பினர்.
- உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் பதவி வழி தலைவர்.

### பிற நியமனங்கள்

- BOC Travels (Private) Limited இன் தலைவர் மற்றும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

## திரு தர்ஷன குணசேகர

நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளின்படி ஒரு சுயாதீனமான பணிப்பாளராகவும், இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வங்கிகளுக்காக வழங்கிய நிறுவன ஆளுகை தொடர்பான வங்கிச் சட்டப் பணிப்புரைகளின் கீழ் ஒரு சுயாதீனமற்ற பணிப்பாளராகவும் இவர் பணியாற்றுகிறார்.

### நியமனத் திகதி

சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக 2025 ஒகஸ்ட் 13 அன்று நியமிக்கப்பட்டார்.

2026 மார்ச் முதல் சிரேஷ்ட சுயாதீனமான பணிப்பாளர்

### திறன்கள் மற்றும் அனுபவம்

- பல்வேறு துறைகளில் 25 ஆண்டுகளுக்கும் மேலான தலைமைத்துவ அனுபவத்தைக் கொண்ட ஒரு முதிர்ந்த கூட்டாண்மை நிறைவேற்று அதிகாரி (Corporate Executive).
- கூட்டாண்மை நிதி, இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல்கள், வணிக உருமாற்றம், முதலீட்டாளர் உறவுகள், நிறுவன இடர் முகாமைத்துவம், பகுப்பாய்வு மற்றும் டிஜிட்டல் நிதி ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர்.
- பிரித்தானியாவின் CIMA மற்றும் யுஊஊயு ஆகியவற்றின் ஒரு சக உறுப்பினர் (Fellow) மற்றும் அமெரிக்க சான்றளிக்கப்பட்ட பொதுக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (AICPA) ஒரு CGMA தகுதியைப் பெற்றவர்.
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பௌதீக விஞ்ஞானத்தில் இளங்கலை (BSc) பட்டம் பெற்றவர்.
- பிரித்தானியாவின் CIM நிறுவனத்தில் சந்தைப்படுத்தல் துறையில் முதுகலை டிப்ளோமா பெற்றவர்.
- இலங்கை பணிப்பாளர் நிறுவனத்தின் (SLID) உறுப்பினர்.

### முன்னைய நியமனங்கள்

- டில்மா சிலோன் டீ கொம்பனி பிஎல்சி (Dilmah Ceylon Tea Company PLC) நிறுவனத்தின் பிரதான நிதியியல் அதிகாரி.

### பிற நியமனங்கள்

- டில்மா சிலோன் டீ கொம்பனி பிஎல்சி நிறுவனத்தின் குழும நிதி பணிப்பாளர்.
- பாத்தியகம எஸ்டேட்ஸ் (தனியார்) லிமிடெட் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர்.
- MJF பெவரேஜஸ் ANZ லிமிடெட் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர்.
- MJF எபிக்ரோ ரினியூவபிள்ஸ் (தனியார்) லிமிடெட் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர்.
- MJF கோப்பரேட் சர்வீசஸ் (தனியார்) லிமிடெட் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர்.
- டீடைம் ரொக்ஸ் (தனியார்) லிமிடெட் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர்.
- டீடைம் ரொக்ஸ் லிமிடெட் (நியூசிலாந்து) நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர்.
- கஹவத்தை பிளான்டேஷன்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- தலவாக்கலை டீ எஸ்டேட்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- இலங்கை சர்வதேச வர்த்தக சபையின் (ICCSL) நேர்மை மற்றும் நெறிமுறைக் குழுவின் தலைவர் மற்றும் கொள்கை ஆலோசனை செயற்குழுவின் உறுப்பினர்.
- சக்ர சூத்ரா (தனியார்) லிமிடெட் நிறுவனத்தின் நிதி பணிப்பாளர்.
- MJF குழுமத்தின் புதுப்பிக்கதக்க எரிசக்தி பிரிவின் (Renewable Energy Sector) தலைமை நிறைவேற்று அதிகாரி.

## திரு. துல்சி அலுவிகாரே

நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளின்படி ஒரு சுயாதீனமான பணிப்பாளராகவும், இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வங்கிகளுக்காக வழங்கிய நிறுவன ஆளுகை தொடர்பான வங்கிச் சட்டப் பணிப்புரைகளின் கீழ் ஒரு சுயாதீனமற்ற பணிப்பாளராகவும் இவர் பணியாற்றுகிறார்.

### நியமனத் திகதி: 2025 செப்டம்பர் 16

### திறன்கள் மற்றும் அனுபவம்

- கூட்டாண்மை சொத்து உருவாக்கத் துறையில் 25 ஆண்டுகளுக்கும் மேலான சர்வதேச அனுபவத்தைக் கொண்ட ஒரு அனுபவம் வாய்ந்த வணிக மூலோபாயவாதி மற்றும் முதலீட்டு நிபுணர். இவர் நிறுவன இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல்கள் (Mergers and acquisitions), அரச-தனியார் பங்களிப்புகள், பரிவர்த்தனை ஆலோசனை மற்றும் மறுசீரமைப்பு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர்.
- பிரித்தானியாவின் வெஸ்ட் லண்டன் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் பட்டதாரி.
- கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிதிப் பொருளாதாரத்தில் முதுகலை (MA) பட்டம் பெற்றவர்.
- கோபன்ஹேகன், ஸ்டாக்ஹோம், டப்ளின், ரோம், வார்சா மற்றும் அபுதாபி ஆகிய இடங்களில் நடைபெற்ற PwC ஆலோசனை பல்கலைக்கழக திட்டத்தில், மேலாளர்களுக்கான “நிறுவன இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல்கள்“ தொடர்பான பயிற்சிகளை வழங்கியுள்ளார்.

### முன்னைய நியமனங்கள்

- இலங்கை மற்றும் மாலைதீவுக்கான PwC நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் நிறுவன இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல் பிரிவின் தலைவர்.

### பிற நியமனங்கள்

- CHEC போர்ட் சிட்டி கொழும்பு (தனியார்) லிமிடெட் நிறுவனத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர்
- அபான்ஸ் ∴பைனான்ஸ் பிஎல்சி (Abans Finance PLC) நிறுவனத்தின் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- எக்ஸ்பேக் கொருகேட்டட் கார்டன்ஸ் பிஎல்சி (Expack Corrugated Cartons PLC) நிறுவனத்தின் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.

# பணிப்பாளர்கள் சபை

## அம்மணி. ஷர்மினி ரத்வத்தே

நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளின்படி ஒரு சுயாதீனமான பணிப்பாளராகவும், இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வங்கிகளுக்காக வழங்கிய நிறுவன ஆளுகை தொடர்பான வங்கிச் சட்டப் பணிப்புரைகளின் கீழ் ஒரு சுயாதீனமற்ற பணிப்பாளராகவும் இவர் பணியாற்றுகிறார்.

**நியமன திகதி: 2025 செப்படம்பர் 16**

### திறன்கள் மற்றும் அனுபவம்

- பிரித்தானிய பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் (CIMA) ஒரு சக உறுப்பினர் (Fellow).
- கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுகலை (MBA) பட்டம் பெற்றவர்.
- 2024 ஆம் ஆண்டில் முகாமைத்துவத் துறைக்கான சோண்டா (Zonta) “சாதனைப் பெண்மணி” விருதைப் பெற்றவர்.
- இலங்கை பணிப்பாளர் நிறுவனத்தின் (SLID) உறுப்பினர்.

### முன்னைய நியமனங்கள்

- இலங்கையின் MAS ஹோல்டிங்ஸ் நிறுவனத்தில் 16 ஆண்டுகளுக்கும் மேலாக சிரேஷ்ட நிதி, முகாமைத்துவம் மற்றும் உயர்மட்ட (C-suite) தலைமைப் பொறுப்புகளை வகித்தவர்.
- John Keells PLC நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- Ceylon Cold Stores PLC நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- BPPL ஹோல்டிங் பிஎல்சி நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- RECOFTC - மக்கள் மற்றும் காட்டிற்கான மையம் (தாய்லாந்து) நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளா.

### பிற நியமனங்கள்

- தேசிய கடன் உத்தரவாத நிறுவனத்தின் (National Credit Guarantee Institution) சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- கண்வீனியன்ஸ் ஃபுட் (லங்கா) பிஎல்சி நிறுவனத்தின் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- கிரீன்பீஸ் தெற்காசியா (Greenpeace South Asia) நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- பேர்ஃபர்ஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடெட் (Fairfirst Insurance Limited) நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- சுனேரா அறக்கட்டளையின் (Sunera Foundation) அறங்காவலர்.

## திரு. தர்ஷன் ஜயரத்ன

நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளின்படி ஒரு சுயாதீனமான பணிப்பாளராகவும், இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வங்கிகளுக்காக வழங்கிய நிறுவன ஆளுகை தொடர்பான வங்கிச் சட்டப் பணிப்புரைகளின் கீழ் ஒரு சுயாதீனமற்ற பணிப்பாளராகவும் இவர் பணியாற்றுகிறார்.

**நியமனத் திகதி: 2025 செப்டெம்பர் 26**

### திறன்கள் மற்றும் அனுபவம்

- நிதிச் சந்தை முகாமைத்துவம், அந்நியச் செலாவணி மற்றும் பிணைப்பத்திர வர்த்தகம், பணச் சந்தைகள், முதலீட்டு முகாமைத்துவம், மூலதனச் சந்தைகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட தயாரிப்புகள் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற, உலகின் முன்னணி சர்வதேச வங்கிகளில் 31 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்ட ஒரு தொழில்முறை வங்கி அதிகாரி.
- அவுஸ்திரேலியாவின் வெஸ்டர்ன் சிட்னி பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுகலை (MBA) பட்டம் பெற்றவர்.

### முன்னைய நியமனங்கள்

- ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கியின் இலங்கைக்கான நிதிச் சந்தைப் பிரிவுத் தலைவர்.

## திரு. சுனிமல் வீரசூரிய

நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளின்படி ஒரு சுயாதீனமான பணிப்பாளராகவும், இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வங்கிகளுக்காக வழங்கிய நிறுவன ஆளுகை தொடர்பான வங்கிச் சட்டப் பணிப்புரைகளின் கீழ் ஒரு சுயாதீனமற்ற பணிப்பாளராகவும் இவர் பணியாற்றுகிறார்.

**நியமனத் திகதி: 2025 ஒக்டோபர் 07**

### திறன்கள் மற்றும் அனுபவம்

- டிஜிட்டல் கொடுப்பனவுகள், ஏற்பாட்டியல், தானியங்கி தீர்வகங்கள்ஃ கொடுப்பனவு உட்கட்டமைப்பு, தகவல் பாதுகாப்பு, வணிக செயல்முறை வெளி மூலங்களிலிருந்து பெறுதல், பண முகாமைத்துவம், முதலீட்டு வங்கி, உற்பத்தி மற்றும் பயிற்சி ஆகியவற்றில் 33 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்ட அனுபவம் வாய்ந்த தொழில்நுட்ப நிபுணர்.
- தொழில்நுட்ப மூலோபாயம், டிஜிட்டல் நிலைமாற்றம், தொழில்நுட்ப மேலாண்மை, தொழில்நுட்ப பரிமாற்றம், வணிக மூலோபாயம் மற்றும் கண்டுபிடிப்புகளில் நிபுணத்துவம் பெற்றவர்.
- பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் முதற்தர கௌரவப் பட்டம் பெற்றவர்.

- Postgraduate Institute of Management (PIM) வணிக நிர்வாக முதுகலை (MBA) பட்டம் பெற்றவர்.
- தாய்லாந்தின் ஆசிய தொழில்நுட்ப நிறுவனத்தில் (AIT) தொழில்நுட்ப மேலாண்மைக்கான ஆடியு பட்டம் பெற்றவர்.
- அவுஸ்திரேலியாவின் கர்டின் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் செயற்திட்ட முகாமைத்துவத்தில் முதுகலை (MSc) பட்டம் பெற்றவர்.
- பிரித்தானிய பட்டய முகாமைத்துவ நிறுவனத்தின் (CMI) ஒரு சக உறுப்பினர் (Fellow).
- சிங்கப்பூர் சர்வதேச மத்தியஸ்த நிறுவனம் (SIMI), சேஜ் மீடியேஷன் (சிங்கப்பூர்) மற்றும் இலங்கையின் IADRC ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்ற சர்வதேச மத்தியஸ்தர் (International Mediator).

## முன்னைய நியமனங்கள்

- லங்காபே (Lankapay) தனியார் லிமிடெட் நிறுவனத்தின் முன்னாள் பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி.
- சிங்கப்பூரின் ட்ரான்ஸ்நேஷனல் குழுமத்தின் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான சிரேஷ்ட துணைத் தலைவர்.
- இலங்கையிலுள்ள ட்ரான்ஸ்நே‘னல் குழும நிறுவனங்களின் நாட்டுப் பணிப்பாளர்.
- ட்ரான்ஸ்நேஷனல் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் லங்கா (தனியார்) லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளர்.
- ட்ரான்ஸ்நேஷனல் லங்கா (தனியார்) லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளர்.
- புரொன்டோ லங்கா (Pronto Lanka) தனியார் லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளர்.
- இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவின் (SLCERT) பணிப்பாளர்.

## பிற நியமனங்கள்

- சினாப்சிஸ் லிமிடெட் (Synapsys Limited) நிறுவனத்தின் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- Techdot Solutions பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர்.

### பொறியியலாளர் பேராசிரியர் ஆனந்த ஜயவர்தன

நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளின்படி ஒரு சுயாதீனமான பணிப்பாளராகவும், இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வங்கிகளுக்காக வழங்கிய நிறுவன ஆளுகை தொடர்பான வங்கிச் சட்டப் பணிப்புரைகளின் கீழ் ஒரு சுயாதீனமற்ற பணிப்பாளராகவும் இவர் பணியாற்றுகிறார்.

**நியமனத் திகதி: 2025 நவம்பர் 14**

## திறன்கள் மற்றும் அனுபவம்

- வங்கி, நிதி, உற்பத்தி, காப்பீடு, கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் உள்ள பொது நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் நிறுவன ஆளுகையில் விரிவான அனுபவம் கொண்ட ஒரு சிறந்த கல்வியாளர், கல்வித்துறைத் தலைவர் மற்றும் கூட்டாண்மை ஆளுமை மிக்கவர்.
- பட்டயப் பொறியாளர் மற்றும் சர்வதேச தொழில்முறைப் பொறியாளர்.
- இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் சக உறுப்பினர்
- இலங்கை திட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் சக உறுப்பினர்
- இலங்கை தேசிய விஞ்ஞான கல்விக் கழகத்தின் சக உறுப்பினர்
- விஞ்ஞான முன்னேற்றத்திற்கான இலங்கை சங்கத்தின் (SLAAS) வாழ்நாள் உறுப்பினர்.
- இலங்கை பணிப்பாளர்கள் நிறுவனத்தின் பட்டதாரி உறுப்பினர்.
- இலங்கை கட்டடமைப்பு பொறியியலாளர் சங்கத்தின் உறுப்பினர்.

## முன்னைய நியமனங்கள்

- கொமர்சல் வங்கி பிஎல்சியின் தலைவர்.
- மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்.
- துணைவேந்தர்கள் குழுவின் தலைவர்.
- தேசிய விஞ்ஞான அறக்கட்டளையின் (NSF) பணிப்பாளர் நாயகம்.
- CBC டெக் சொல்யூ‘ன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் தலைவர்.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) உறுப்பினர்.
- சியரா கேபிள்ஸ் பிஎல்சி (Sierra Cables PLC), நவீன தொழில்நுட்பங்களுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவனம், தேசிய விஞ்ஞான அறக்கட்டளை, கட்டுமானப் பயிற்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (ICTAD), அரச பொறியியல் கூட்டுத்தாபனம், மேலாண்மை முதுகலை நிறுவனம் (PIM), மிலோடா நிதி ஆய்வுக் கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், கட்டுமானத் தொழில் வளர்ச்சி அதிகார சபை, இலங்கை பொறியியல் பேரவை மற்றும் இலங்கை பசுமைக் கட்டிடப் பேரவை ஆகியவற்றின் ஆளுநர்கள் சபை/பணிப்பாளர் சபை உறுப்பினர்.
- மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் NDB வங்கி வழங்கிய தொழில்முனைவோர் துறைப் பேராசிரியர்.
- இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் தலைவர்.

## பிற நியமனங்கள்

- மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட பேராசிரியர்.
- HNB அஷ்யூரன்ஸ் பிஎல்சி (HNB Assurance PLC) நிறுவனத்தின் சுயாதீனமற்ற, நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- மதர் லங்கா அறக்கட்டளையின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- பிரைம் லேண்ட்ஸ் ரெசிடென்சீஸ் பிஎல்சி (Prime Lands Residencies PLC) நிறுவனத்தின் சுயாதீனமான, நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்.
- இலங்கை மத்திய வங்கியின் பங்குதாரர் ஈடுபாட்டுக் குழுவின் (உறுப்பினர்.
- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (CA Sri Lanka) நிறுவன ஆளுகைக் குழுவின் உறுப்பினர்.

### அம்மணி. ஜானகி சேனாநாயக்க சிறிவர்தன

செயலாளர், இலங்கை வங்கி/ சபையின் செயலாளர்

பக்கம் 42இல் சுயவிபரங்கள் தரப்பட்டுள்ளன

# கூட்டாண்மை முகாமைத்துவம்

இடமிருந்து வலமாக அமர்ந்திருப்பவர்கள்

**அம்மணி டபிள்யூ. பீ. பீ. ரத்நாயக்க, திரு. பிரியால் சில்வா, திரு. ஆர் என் எம் ஜீவந்த**

இடமிருந்து வலமாக நிற்பவர்கள்

**திரு. பீ மதுவந்த லியனகே, அம்மணி குமுதினி ஜே யோகரத்தினம், திரு. புத்திக சீலநாத, திரு. ரோஹண குமார, திரு. பத்ர கல்யாணப்பிரிய குருசிங்க, திரு. சம்பத் பெரேரா, அம்மணி ரொசெல் பெர்னாண்டோ, திரு. கே ஏ அஜித் கருணாரத்ன**

இடமிருந்து வலமாக அமர்ந்திருப்பவர்கள்

**திரு. வை ஏ ஜயதிலக, திரு. ஜயஷாந்த கொடகந்த, அம்மணி ஜானகி சேனநாயக்க சிறிவர்தன**

இடமிருந்து வலமாக நிற்பவர்கள்

**திரு. எஸ் சிவாஞ்சன், அம்மணி பிரியந்தி விஜேசேகர, திரு. சமீர டீ லியனகே,
திரு. தம்ம விஜயவர்தன, திரு. ருவன் சமரக்கொடி, திரு. எம் பீ ருவன் குமார,
திரு. சஷி ஜயசிங்க, திரு. சுரெஷ் பெரேரா, அம்மணி சுபானி நாணாயக்கார**

# கூட்டாண்மை முகாமைத்துவம்

## திரு. வை ஏ ஜயதிலக

பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி

**2025 ஆகஸ்டில் பதில் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டு, 2026 பெப்ரவரியில் இப்பதவியில் உறுதிப்படுத்தப்பட்டார்.**

முக்கிய வங்கிச் செயல்பாடுகள், கடன் செயல்பாடுகள், கடன் மீட்பு, கருவூலம் மற்றும் வெளிநாட்டுச் செயல்பாடுகள், திட்ட மேலாண்மை, செயல்முறை தானியக்கமாக்கல், தயாரிப்பு மேம்பாடு மற்றும் புதுமைப் புனைவுகள் உட்பட பரந்த அளவிலான பன்முகத் துறைசார் பொறுப்புகளில் பணியாற்றியதன் மூலம், வங்கித் துறையில் 28 ஆண்டுகளுக்கும் மேலான விரிவான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

Bank of Ceylon (UK) Ltd இல் முக்கிய வங்கி முறைமை மற்றும் வர்த்தக நிதி முறைமைகளை நடைமுறைப்படுத்தியமை, வங்கியின் முக்கிய வங்கி மற்றும் காசாளர் முறைமை மேம்படுத்தல், ஆவண மேலாண்மை அமைப்பு மற்றும் பணிப்பாய்வு தானியக்க அமைப்பை (Workflow Automation System) நடைமுறைப்படுத்தியமை, அத்துடன் BOC Digi, Branch on Wheels, BOC Connect, WhatsApp Banking, Smart FD, BOC Flex மற்றும் tvBOC போன்ற வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட டிஜிட்டல் தீர்வுகளை அறிமுகப்படுத்தியமை உள்ளிட்ட வங்கியின் பல முக்கிய தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் உருமாற்ற முயற்சிகளில் முக்கிய பங்காற்றியுள்ளார்.

வணிக நிர்வாகத்தில் விஞ்ஞானமானி (சிறப்பு) பட்டம் (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்), வணிக முதுகலை (நிதி) பட்டம் (களனிப் பல்கலைக்கழகம்), இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் இணை உறுப்பினர் (Associate Member) ஆவார். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முதுகலை மேலாண்மை நிறுவனத்தில் மூலோபாய மேலாண்மைக்கான மேம்பட்ட பாடநெறியையும், பிரான்சின் INSEAD பல்கலைக்கழகத்தில் மேம்பட்ட மேலாண்மைத் திட்டத்தையும் (AMP) நிறைவு செய்துள்ளார்.

## திரு. ஆர் என் எம் ஜீவந்த

பதில் பிரதான செயல்பாட்டு அதிகாரி

**2020 செப்டம்பரில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

திறைசேரி மேலாண்மை, முதலீட்டு வங்கிச் சேவை, நிதி மேலாண்மை, கடன் மேலாண்மை மற்றும் சில்லறை மற்றும் மேம்பாட்டு வங்கிச் சேவை ஆகிய துறைகளில் 23 ஆண்டுகளுக்கும் மேலான வங்கித்துறை அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

கணக்கியலில் விஞ்ஞானமானி (சிறப்பு) பட்டம் (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்), ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முதுகலை மேலாண்மை நிறுவனத்தில் MBA பட்டம் பெற்றுள்ளார். அத்துடன், இலங்கையின் சான்றளிக்கப்பட்ட தொழில்முறை மேலாளர்கள் நிறுவனத்தின் உறுப்பினராகவும், இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் சிரேஸ்ட சக உறுப்பினராகவும் உள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை வங்கியாளர்கள் சங்கம் ஆகியவற்றின் பகுதிநேர விரிவுரையாளராகவும் பணியாற்றுகிறார்.

## அம்மணி ஜானகி சேனநாயக்க சிறிவர்தன

சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர்/ வங்கிச் செயலாளர், இலங்கை வங்கி/ பணிப்பாளர் சபைச் செயலாளர்

**2010 அக்டோபரில் கூட்டான்மைக் முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

நிறுவனச் செயலகம் மற்றும் பெருநிறுவன ஆளுகை ஆகியவற்றில் வங்கியில் 29 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

LLB பட்டத்துடன் தொழில் ரீதியாக ஒரு சட்டத்தரணி ஆவார்

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் MBA (Merit) பட்டம் பெற்றுள்ளார்.

## திரு. பிரியால் சில்வா

பிரதிப் பொது முகாமையாளர் (கிளைச் செயல்பாடுகள்)

**2020 பெப்ரவரியில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

நிதி, பெருநிறுவன, சில்லறை மற்றும் மேம்பாட்டு வங்கிச் சேவை, சர்வதேச மற்றும் கருவூலச் செயல்பாடுகள் மற்றும் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் உள்ளடங்கலான கிளைச் செயல்பாடுகள் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்று, வங்கித்துறையின் பல்வேறு அம்சங்களில் 28 ஆண்டுகளுக்கும் மேலான விரிவான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

சந்தைப்படுத்தலில் BBA - சிறப்பு பட்டம் (ருஹுணு பல்கலைக்கழகம்), கணக்கியலில் MBA பட்டம் (களனிப் பல்கலைக்கழகம்), முதுகலை டிப்ளோமா (Chartered Institute of Marketing, UK), வணிக நிர்வாகத்தில் முதுகலை டிப்ளோமா ஆகியவற்றைப் பெற்றுள்ளார். அத்துடன், Chartered Institute of Marketing (UK) இன் உறுப்பினர், இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் இணை உறுப்பினர் மற்றும் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் உறுப்பினர் ஆவார்.

## திரு. ஜயஷாந்த கொடகந்த

பிரதிப் பொது முகாமையாளர் (சர்வதேச, திறைசேரி மற்றும் முதலீடு)

**2020 செப்டம்பரில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

சில்லறை மற்றும் பெருநிறுவனக் கடன், இடர் மேலாண்மை, கிளைச் செயல்பாடுகள், சர்வதேசம், திறைசேரி, முதலீட்டு வங்கிச் சேவை, வெளிநாட்டுச் செயல்பாடுகள் மற்றும் கரைகடந்த வங்கிச் சேவை ஆகியவற்றில் 28 ஆண்டுகளுக்கும் மேலான விரிவான மற்றும் புகழ்பெற்ற தொழில்முறை அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

வணிக நிர்வாகத்தில் முதலாம் வகுப்புடன் கூடிய விஞ்ஞானமானி (சிறப்பு) பட்டம் (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்), நிதிப் பொருளாதாரத்தில் முதுகலை MA - Merit பட்டம் (கொழும்புப் பல்கலைக்கழகம்), கடன் மேலாண்மையில் டிப்ளோமா (இலங்கை வங்கியாளர்கள் சங்கம்) மற்றும் இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் இணை உறுப்பினர் ஆவார்.

மேலாண்மை முதுகலை நிறுவனத்தில் (சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்) வணிக உருவகப்படுத்துதல் மூலமாக Globus மூலோபாய மேலாண்மைக்கான மேம்பட்ட பாடநெறியை நிறைவு செய்துள்ளார்.

பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளராக இரண்டு ஆண்டுகள் பணியாற்றியுள்ளதுடன், கணக்காய்வு மற்றும் இடர் குழுக்களில் முக்கிய பங்காற்றியுள்ளார்.

### அம்மணி டபிள்யூ. பீ. பீ. ரத்நாயக்க

**பிரதான இணக்கப்பாட்டு அதிகாரி**

**2020 செப்டம்பரில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

சில்லறை, பெருநிறுவன, கொடுப்பனவு அட்டைகள், இடர் மேலாண்மை, இணக்கப்பாடு ஆகிய துறைகளில் 28 ஆண்டுகளுக்கும் மேலான பன்முக செயல்பாட்டு அனுபவம் கொண்ட ஒரு பல்துறை வங்கித் தொழில்முறை வல்லுநர் ஆவார். அத்துடன் வங்கியின் இடர் மேலாண்மைக் கொள்கைகள் மற்றும் கருவிகளை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றியுள்ளார்.

விவசாயத்தில் விஞ்ஞானமானி (சிறப்பு) பட்டம் (ருஹுணு பல்கலைக்கழகம்), MBA - இலங்கை திறந்த பல்கலைக்கழகம், வங்கி மேலாண்மையில் முதுகலை நிறைவேற்று டிப்ளோமா (இலங்கை வங்கியாளர்கள் சங்கம்), ஆளுகை, இடர் மற்றும் இணக்கப்பாட்டில் சர்வதேச டிப்ளோமா (International Compliance Association, UK) ஆகியவற்றைப் பெற்றுள்ளார். மேலும், இலங்கை வங்கியாளர்கள் சங்கம் மற்றும் சர்வதேச இணக்கப்பாட்டுச் சங்கம் (International Compliance Association) ஆகியவற்றின் இணை உறுப்பினர் ஆவார்.

இலங்கை வங்கிகளின் இணக்கப் பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகப் பணியாற்றுகிறார்.

### திரு. எம் பீ ருவன் குமார

**பிரதான நிதியியல் அதிகாரி**

**2020 செப்டம்பரில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்**

நிதி மேலாண்மை, மூலோபாயத் திட்டமிடல், முதலீட்டு வங்கிச் சேவை, வணிக மற்றும் வெளிநாட்டு வங்கிச் செயல்பாடுகள் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்று, வங்கித்துறையில் 23 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

கணக்கியலில் விஞ்ஞானமானி (சிறப்பு) பட்டம் (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்), பொதுநலவாய நிறைவேற்று MBA (இலங்கை திறந்த பல்கலைக்கழகம்) ஆகியவற்றைப் பெற்றுள்ளார். மேலும், இலங்கையின் பட்டயக் கணக்கறிஞர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினர், இலங்கையின் சான்றளிக்கப்பட்ட மேலாண்மைக் கணக்கறிஞர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினர், இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் இணை உறுப்பினர் மற்றும் இலங்கை பணிப்பாளர்கள் நிறுவனத்தின் உறுப்பினர் ஆவார்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் தலைமைத்துவ மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவு செய்துள்ளார்.

### திரு. எஸ் சிவாஞ்ஜன்

**பிரதிப் பொது மேலாளர் (கூட்டாண்மை கடன் அறவிடல்)**

**2020 செப்டம்பரில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

சில்லறை கிளைச் செயல்பாடுகள், கடன், கடன் மீட்பு, வணிக மறுமலர்ச்சி மற்றும் மறுவாழ்வு, அபிவிருத்தி வங்கிச் சேவை, கிளை உருமாற்றம், நுண்நிதி, சர்வதேச மற்றும் வெளிநாட்டுச் செயல்பாடுகள் ஆகியவற்றில் 23 ஆண்டுகளுக்கும் மேலான வங்கித்துறை அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

அறிவியலில் முதலாம் வகுப்புச் சிறப்புத் தேர்ச்சியுடன் கூடிய விஞ்ஞானமானிப் பட்டம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) மற்றும் சந்தைப்படுத்தலில் MBA பட்டம் (கொழும்புப் பல்கலைக்கழகம்) ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

### திரு. பத்ர கல்யாணப்பிரிய குருசிங்க

**பிரதிப் பொது முகாமையாளர் (அபிவிருத்தி வங்கியியல் மற்றும் கிளைக் கடன் செயல்பாடுகள் - வலயம் 2)**

**2020 செப்டம்பரில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

வங்கித் தொழில்முறை வல்லுநராக 28 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் பெருநிறுவன வங்கிச் சேவை, சில்லறை வங்கிச் சேவை, கடன், நிறுவன உருமாற்றம், சட்டச் சேவைகள் மற்றும் இலங்கை வங்கி மாலேயின் நாட்டு முகாமையாளர் ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்.

இலங்கை சட்டக் கல்லூரியின் சட்டத்தரணி (Attorney-at-law) ஆவார்.

வணிக நிர்வாகத்தில் விஞ்ஞானமானி (சிறப்பு) பட்டம் (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்), பொதுநலவாய நிறைவேற்று (Commonwealth Executive MBA - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்), வணிக மற்றும் நிதி நிர்வாகத்தில் முதுகலை டிப்ளோமா (இலங்கையின் பட்டயக் கணக்கறிஞர்கள் நிறுவனம்), கடன் மேலாண்மையில் டிப்ளோமா (இலங்கை வங்கியாளர்கள் சங்கம்), இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் இணை உறுப்பினர் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர் ஆவார்.

### திரு. ரோஹண குமார

**பிரதிப் பொது முகாமையாளர் (வியாபார புத்துயிர்ப்பு)**

**2021 ஜனவரியில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

வங்கித்துறையில் 23 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார். சில்லறைக்கடன், திட்ட நிதி, வணிக மறுமலர்ச்சி மற்றும் மறுவாழ்வு, கடன் மீட்பு, மற்றும் பெருநிறுவன மற்றும் கரைகடந்த வங்கிச் சேவை ஆகியவற்றில் நிபுணத்துவமும் தலைமைத்துவப் பொறுப்புகளும் வகித்துள்ளார்.

இலங்கை தொழில்முறை வங்கியாளர்கள் சங்கத்தின் துணைத் தலைவராகப் பணியாற்றுகிறார்.

கணிதத்தில் முதலாம் வகுப்புடன் கூடிய விஞ்ஞானமானிப் பட்டம் (களனிப் பல்கலைக்கழகம்), தலைமைத்துவத்தில் நிறைவேற்று டிப்ளோமா (Northern Illinois University, USA) ஆகியவற்றைப் பெற்றுள்ளார். மேலும், இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் இணை உறுப்பினர் ஆவார்.

# கூட்டாண்மை முகாமைத்துவம்

## திரு. தம்ம விஜயவர்தன

**பிரதிப் பொது முகாமையாளர் (மனிதவளச் செயல்பாடுகள்)**

**2021 அக்டோபரில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்**

கிளை வங்கிச் சேவை, கடன் மற்றும் சில்லறை வங்கிச் சேவை, மனிதவளச் செயல்பாடுகளில் நிறைவேற்று மற்றும் பெருநிறுவன தலைமைத்துவம் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்று, வங்கியில் 23 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு) சிறப்புத் தேர்ச்சியுடன் கூடிய விஞ்ஞானமானி (பொது) பட்டம் (களனிப் பல்கலைக்கழகம்), வணிக மேலாண்மையில் முதுகலை டிப்ளோமா (வயம்ப பல்கலைக்கழகம்), இலங்கை வங்கியாளர்கள் சங்கம் மற்றும் இலங்கை தொழில்முறை வங்கியாளர்கள் சங்கம் ஆகியவற்றின் இணை உறுப்பினர் ஆவார்.

## திரு. கே ஏ அஜித் கருணாரத்ன

**பிரதிப் பொது முகாமையாளர் (கிளைக் கடன் செயல்பாடுகள் - வலயம் 1)**

**2021 டிசம்பரில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

சில்லறை வங்கிச் சேவை, வர்த்தக நிதி, பெருநிறுவன மற்றும் பிரீமியர் வங்கிச் செயல்பாடுகள், தயாரிப்பு மற்றும் மேம்பாட்டு வங்கிச் சேவை, மாகாணக் கடன் மீட்பு மற்றும் கிளைக் கடன் செயல்பாடுகள் ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற்று, வங்கியில் 23 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

வணிக மேம்பாடு, நிர்வாகம் மற்றும் மனிதவளம் ஆகிய பொறுப்புகளுடன் பல மாகாணங்களில் சில்லறை வங்கிச் சேவை மற்றும் நிறைவேற்று தலைமைத்துவப் பொறுப்புகளில் பன்முகத் துறைசார் அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

வணிக நிர்வாகத்தில் விஞ்ஞானமானி (சிறப்பு) பட்டம் (சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்), எம்பிஏ (MBA - வயம்ப பல்கலைக்கழகம்) ஆகியவற்றைப் பெற்றுள்ளார். மேலும், இலங்கையின் கணக்கியல் தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் உறுப்பினர், இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் இணை உறுப்பினர் மற்றும் CA Sri Lanka Licentiate மட்டத்தை நிறைவு செய்துள்ளார்.

## அம்மணி பிரியந்தி விஜேசேகர

**பிரதிப் பொது முகாமையாளர் (செயல்பாடுகள்)**

**2023 மார்ச்சில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

34 ஆண்டுகளுக்கும் மேலான புகழ்பெற்ற தொழில்முறை வாழ்க்கையைக் கொண்ட ஒரு சுறுசுறுப்பான தலைவரான இவர், சில்லறை வங்கிச் சேவை, பெருநிறுவனக் கடன், கடன் மீட்புகள், கடல்கடந்த வங்கிச் சேவை, நிர்வாகச் சேவைகள், சந்தைப்படுத்தல், வெளிநாட்டுக் கிளைச் செயல்பாடுகள், கடன் தணிக்கை மற்றும் செயல்பாட்டுப் பணிகளை வலுப்படுத்துதல் உள்ளிட்ட வங்கித்துறையின் பல கோணங்களில் சிறந்த நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளார்.

லண்டனிலுள்ள Bank of Ceylon (UK) Ltd இல் பணியாற்றிய காலத்தில் இவரது சர்வதேச வங்கிச் சேவைத் தகைமைகள் மேம்பட்டதுடன், அங்கிருந்து மதிப்புமிக்க உலகளாவிய அனுபவத்தையும் இவர் பெற்றுக்கொண்டார்.

MBA - Merit பட்டம் (லண்டன் மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகம்), மேலாண்மையில் முதுகலை டிப்ளோமா (சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்), தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா (மொரட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியவற்றைப் பெற்றுள்ளார். மேலும், இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் சக உறுப்பினர் (Fellow Member) ஆவார்.

## அம்மணி ரொசெல் பெர்னாண்டோ

**பிரதிப் பொது முகாமையாளர் (மாகாணக் கடன் அறவிடல்)**

**2023 மார்ச்சில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

கடல்கடந்த வங்கிச் சேவை, பெருநிறுவன வங்கிச் சேவை, வர்த்தக நிதி, அபிவிருத்தி வங்கிச் சேவை, கிளைக் கடன் மற்றும் மாகாணக் கடன் மீட்பு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்று, சில்லறை வங்கிச் சேவையில் 28 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

நிதி மேலாண்மையில் BBA - சிறப்பு பட்டம் (கொழும்புப் பல்கலைக்கழகம்), முதுகலை மேலாண்மை நிறுவனத்தினால் (சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்) முக்கிய மேலாண்மைப் பணியாளர்களுக்காக நடத்தப்பட்ட மேலாண்மை மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றைப் பூர்த்தி செய்துள்ளதுடன், இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் இணை உறுப்பினர் மற்றும் இலங்கை தொழில்முறை வங்கியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் ஆவார்.

2018 ஆம் ஆண்டு முதல் 2022 டிசம்பர் வரை ஏற்றுமதி மேம்பாட்டுச் சபைக்கு சர்வதேச வர்த்தகம் தொடர்பான வங்கி நடைமுறைகள் குறித்த சான்றிதழ் பாடநெறி/ மேம்பட்ட சான்றிதழ் பாடநெறிக்கான வளவாளராகப் பணியாற்றியுள்ளார். 2023 ஆம் ஆண்டில் வங்கியாளர்களின் வர்த்தக நிதிச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றினார்.

## திரு. சம்பத் பெரேரா

**பிரதிப் பொது முகாமையாளர் (கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கிச் சேவை)**

**2024 பெப்ரவரியில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

கிளை வங்கிச் சேவை, நிதி, பெருநிறுவன மற்றும் கரைகடந்த வங்கிச் சேவை, கருவூலச் செயல்பாடுகள் மற்றும் கடன் மீட்புகள் உள்ளிட்ட பல்வேறு வங்கிப் பிரிவுகளில் 23 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

இவரது சர்வதேச அனுபவத்தில், லண்டனிலுள்ள Bank of Ceylon (UK) Ltd இன் பயிற்சி வர்த்தகர் பணியும், BOC (UK) கிளை ஒரு சுயாதீன துணை நிறுவனமாக மாற்றப்பட்டதன் பின்னரான முதலாவது கடன் மேலாளர் பணியும் அடங்கும்.

வணிக மேலாண்மையில் விஞ்ஞானமானி (சிறப்பு) பட்டம் (ரஜரட்ட பல்கலைக்கழகம்), எம்பிஏ (MBA) பட்டம் மற்றும் முதுகலை மேலாண்மை நிறுவனத்தில் (சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்) மூலோபாய மேலாண்மைக்கான மேம்பட்ட பாடநெறி ஆகியவற்றை நிறைவு செய்துள்ளதுடன், இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் இணை உறுப்பினர் ஆவார்.

## திரு. சுரேஷ் பெரேரா

**பிரதிப் பொது மேலாளர் (தயாரிப்பு மற்றும் வங்கியியல் அபிவிருத்தி)**

**2026 ஜனவரியில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

தயாரிப்பு மேம்பாடு, நிறுவன உருமாற்றம், திட்ட மேலாண்மை மற்றும் வணிகச் செயல்முறை மறு-பொறியியல் (Business Process Re-Engineering) ஆகியவற்றில் நிபுணத்துவமும் தலைமைத்துவப் பொறுப்புகளும் வகித்து, வங்கியில் 23 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்ட ஒரு தொழில்முறை வங்கியாளர் ஆவார்.

முழு கிளை வலையமைப்பையும் தானியக்கமாக்கி ஒருங்கிணைத்த வங்கியின் பல மூலோபாய உருமாற்ற முயற்சிகளிலும், வங்கியின் முதன்மை சில்லறை வங்கி மொபைல் செயலியான "BOC Flex" இன் வடிவமைப்பு மற்றும் செயலாக்கம் உள்ளிட்ட முக்கிய டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் புதுமையான தீர்வுகளிலும் முக்கிய பங்காற்றியுள்ளார்.

பொது நிர்வாகத்தில் இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு) தேர்ச்சியுடன் கூடிய விஞ்ஞானமானி (சிறப்பு) பட்டம் (சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்), நிதிப் பொருளாதாரத்தில் முதுகலை (Master of Financial Economics) பட்டம் (கொழும்புப் பல்கலைக்கழகம்), வங்கி மற்றும் நிதியில் டிப்ளோமா (இலங்கை வங்கியாளர்கள் சங்கம்) ஆகியவற்றைப் பெற்றுள்ளார். மேலும், இலங்கை தொழில்முறை வங்கியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் ஆவார்.

## அம்மணி குமுதினி ஜே யோகரத்தினம்

**பிரதிப் பொது முகாமையாளர் (துணைச் சேவைகள்)**

**2026 ஜனவரியில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

பொது வங்கிச் சேவை, கடன் செயல்பாடுகள், கரைகடந்த வங்கிச் சேவை (Offshore Banking), சர்வதேச வங்கிச் சேவை ஆகியவற்றில் விசேட நிபுணத்துவம் பெற்று, வணிக வங்கித்துறையில் 28 ஆண்டுகளுக்கும் மேலான விரிவான அனுபவத்தைக் கொண்டுள்ளார். அத்துடன் கிழக்கு மாகாணத்தின் பிராந்திய செயல்பாடுகளுக்குத் தலைமை தாங்கியுள்ளார். Bank of Ceylon (UK) Limited, மாலே மற்றும் சென்னை ஆகிய கிளைகள் உட்பட பல வெளிநாட்டுப் பணிகளில் 11 ஆண்டுகால வெளிநாட்டுக் கிளை அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

வணிக நிர்வாகத்தில் விஞ்ஞானமானி (சிறப்பு) பட்டம் (சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்), சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முதுகலை மேலாண்மை நிறுவனத்தில் எம்பிஏ (MBA) பட்டம் ஆகியவற்றைப் பெற்றுள்ளார். மேலும், இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் இணை உறுப்பினர் மற்றும் இலங்கை தொழில்முறை வங்கியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் ஆவார்.

2020-2024 காலப்பகுதியில் இந்தியாவில் உள்ள இந்தோ-ஆசியான் ஸ்ரீலங்கன் வர்த்தக சபையின் குழு உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். வங்கியின் மத்திய பயிற்சி நிறுவனம் மற்றும் இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் வளவாளராகப்பணியாற்றுகிறார்.

## திரு. ருவன் சமரக்கொடி

**பதில் பிரதான இடர் அதிகாரி**

**2026 ஜனவரியில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

கிளை வங்கிச் சேவை, இடர் மேலாண்மை, ஆளுகை, விசாரணைகள் மற்றும் ஒழுங்குமுறை இணக்கப்பாடு ஆகியவற்றில் விரிவான அனுபவத்தைக் கொண்டு, 30 ஆண்டுகளுக்கும் மேலாகப் புகழ்பெற்ற சேவையாற்றிய ஒரு சிரேஷ்ட வங்கித் தொழில்முறை வல்லுநர் ஆவார்.

நிறுவனம் முழுவதற்குமான இடர் மேலாண்மை கட்டமைப்பை நிறுவுதல், ஒருங்கிணைந்த இடர் மேலாண்மை முறைமை மற்றும் முக்கிய வங்கி முறைமை ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதில் பங்கெடுத்துள்ளார். வெளிநாட்டு மற்றும் துணை நிறுவனங்களுக்கான இடர் மேலாண்மை கட்டமைப்புகள் மற்றும் ஆளுகை மாதிரிகள், இடர் திரட்டல் முறைகள், வணிகத் தொடர்ச்சித் திட்டமிடல் மற்றும் செயல்முறை தானியக்க முயற்சிகளை உருவாக்கியுள்ளார். அத்துடன், சட்டரீதியான தேவைகளுக்கு ஏற்ப வங்கியின் செயல்பாடுகளை ஒழுங்கமைக்கும் முயற்சிகளுக்குத் தலைமை தாங்கி, வங்கியின் முதலாவது தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார்.

LLB பட்டத்துடன் (கொழும்புப் பல்கலைக்கழகம்) ஒரு சட்டத்தரணி ஆவார். மேலும், நிதிப் பொருளாதாரத்தில் முதுகலை (MA) பட்டம் (கொழும்புப் பல்கலைக்கழகம்), எம்பிஏ (MBA - வயம்ப பல்கலைக்கழகம்), வங்கி நிதியில் டிப்ளோமா (இலங்கை வங்கியாளர்கள் சங்கம்), வணிக நிதி மற்றும் மூலோபாயத்தில் முதுகலை டிப்ளோமா (இலங்கையின் பட்டயக் கணக்கறிஞர்கள் நிறுவனம்) ஆகியவற்றைப் பெற்றுள்ளார். அத்துடன் நிதிச் சேவைகளில் இடர் (Risk in Financial Services - Chartered Institute for Securities and Investments (CISI), UK) எனும் பாடநெறியை நிறைவு செய்துள்ளார்.

## அம்மணி சுபானி நாணாயக்கார

**பதில் பிரதான சட்ட அதிகாரி**

**2025 டிசம்பரில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

வங்கித் தொழில்முறை வல்லுநராக 21 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் கடன் மீட்பு மற்றும் வழக்கு மேலாண்மை, கடன் மற்றும் மனிதவளம் சார்ந்த சட்டச் சேவைகளில் நிபுணத்துவம் பெற்றவர்.

இலங்கை சட்டக் கல்லூரியின் சட்டத்தரணி (Attorney-at-law) ஆவார்.

இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு) தேர்ச்சியுடன் கூடிய பி.ஏ (BA) பட்டம் (கொழும்புப் பல்கலைக்கழகம்), LLM - ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்) ஆகியவற்றைப் பெற்றுள்ளார். அத்துடன், நிதி, வங்கி மற்றும் காப்புறுதிச் சட்டங்களில் சட்டத்தரணிக்கு பிந்திய டிப்ளோமாவை (Post-Attorney Diploma - Institute of Advanced Legal Studies) Merit தேர்ச்சியுடன் நிறைவு செய்துள்ளதுடன், சர்வதேச விவகாரங்களில் டிப்ளோமா (பண்டாரநாயக்க சர்வதேச கல்வி மையம்) பட்டமும் பெற்றுள்ளார்.

ஜனாதிபதி குழுக்கள், தொழிலாளர் ஆணையாளர், மனித உரிமைகள் ஆணைக்குழு, நிதி ஓம்புட்ஸ்மேன் மற்றும் வாடகைச் சபை உள்ளிட்ட பல்வேறு ஒழுங்குமுறை மற்றும் பகுதி-நீதித்துறை அமைப்புகளின் முன்னிலையில் வங்கி சார்பாகப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். சட்டரீதியான கடன் மீட்புத் துறையில் வளவாளராகப் பணியாற்றி வருவதுடன், உள்வாரி மற்றும் வெளிவாரி பயிற்சித் திட்டங்களுக்கும் தனது பங்களிப்பை வழங்கி வருகிறார்.

# கூட்டாண்மை முகாமைத்துவம்

## திரு. பீ மதுவந்த லியனகே

**பிரதான உள்ளக கணக்காய்வாளர்**

**2014 டிசம்பரில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

வங்கி மற்றும் நிதித்துறையில் 26 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்ட ஒரு நிதித் தொழில்முறை வல்லுநர் ஆவார்.

வங்கியின் பிரதான உள்ளக கணக்காய்வாளராக இணைவதற்கு முன்னர், இவர் Commercial Credit and Finance PLC மற்றும் Pan Asia Bank ஆகியவற்றிலும் இதே பதவியில் பணியாற்றியுள்ளார். 2006 - 2008 காலப்பகுதியில் இந்த வங்கியில் உள் தணிக்கையாளராகப் பணியாற்றியுள்ளார். இவரது ஏனைய அனுபவங்களில் Lanka Clear (Pvt) Ltd, தேசிய காசோலை தீர்வகம் ஆகியவற்றில் நிதி மற்றும் நிர்வாக மேலாளர் பதவியும், Ernst & Young நிறுவனத்தில் தகைமைபெற்ற உதவியாளர் பதவியும் அடங்கும்.

கணக்கியல் மற்றும் நிதி மேலாண்மையில் விஞ்ஞானமானி (சிறப்பு) பட்டம் (சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்) பெற்றுள்ளார். மேலும், இலங்கையின் பட்டயக் கணக்கறிஞர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினர் மற்றும் அமெரிக்காவின் ISACA இன் சான்றளிக்கப்பட்ட தகவல் அமைப்பு தணிக்கையாளர்கள் (CISA) அமைப்பின் உறுப்பினர் ஆவார்.

## திரு. சமீர டீ லியனகே

**பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரி**

**2020 ஆகஸ்டில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

பொது மற்றும் தனியார் துறை சார்ந்த நிறுவனங்கள் இரண்டிலும் வங்கி மற்றும் சந்தைப்படுத்தல் துறைகளில் 27 ஆண்டுகளுக்கும் மேலான தொழில்முறை நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளார்.

2015 ஆம் ஆண்டில் Chartered Institute of Marketing, (UK) நிறுவனத்தினால் இவருக்கு பட்டயச் சந்தைப்படுத்துநர் அந்தஸ்து வழங்கப்பட்டது.

சந்தைப்படுத்தலில் எம்பிஏ (MBA) பட்டம் (ரெக்ஸ்ஹாம் பல்கலைக்கழகம், UK), சந்தைப்படுத்தலில் முதுகலை டிப்ளோமா (Chartered Institute of Marketing, UK) ஆகியவற்றைப் பெற்றுள்ளார். மேலும், இலங்கையின் சான்றளிக்கப்பட்ட தொழில்முறை மேலாளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினர், Chartered Institute of Marketing (CIM-UK) இன் சக உறுப்பினர், இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் உறுப்பினர் மற்றும் இலங்கை தொழில்முறை வங்கியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் ஆவார்

## திரு. புத்திக சீலநாத

**பிரதான தகவல் அதிகாரி**

**2023 செப்டம்பரில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

பொது மற்றும் தனியார் துறை சார்ந்த நிறுவனங்கள் இரண்டிலும் வங்கி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளில் 27 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார். வருவாயை அதிகரிப்பதன் மூலமும் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதன் மூலமும், நிறுவனங்களின் ஒட்டுமொத்த மதிப்பை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட டிஜிட்டல் உருமாற்ற உத்திகளுக்குத் தலைமை தாங்கி, அவற்றை நடைமுறைப்படுத்துவதில் சிறந்த வெற்றியை வெளிப்படுத்தியுள்ளார். பயன்பாட்டு மேம்பாடு, தரவுக் களஞ்சியமாக்கல் மற்றும் தரவுப் பகுப்பாய்வு உள்ளிட்ட முக்கிய துறைகளில் சிறந்த நிபுணத்துவம் பெற்றவர்.

வங்கியின் தலைமைத் தகவல் அதிகாரியாக இணைவதற்கு முன்னர், இவர் நேசன்ஸ் டிரஸ்ட் வங்கியிலும் இதே பதவியில் பணியாற்றியுள்ளார். அதற்கு முன்பு, மக்கள் வங்கியின் பயன்பாட்டு முறைமை பிரிவின் தலைவராகவும் , நேசன்ஸ் டிரஸ்ட் வங்கியின் பயன்பாட்டு மேம்பாடு மற்றும் MIS பிரிவின் சிரேஸ்ட மேலாளராகவும் பணியாற்றினார்.

மேலாண்மைத் தகவல் அமைப்புகளில் விஞ்ஞானமானிப் பட்டம் (அயர்லாந்து தேசிய பல்கலைக்கழகம், டப்ளின்) பெற்றுள்ளார்.

## திரு. சஷி ஜயசிங்க

**பிரதிப் பொது முகாமையாளர் (நிலைமாற்றம் மற்றும் மனிதவள மூலோபாயம்)**

**2026 ஜனவரியில் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவிற்கு நியமிக்கப்பட்டார்.**

உற்பத்தி, கட்டுமானம், பொறியியல், சில்லறை வர்த்தகம், விநியோகம் மற்றும் சேவைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மனிதவள மேலாண்மையில் 22 ஆண்டுகளுக்கும் மேலான தொழில்முறை அனுபவத்தைக் கொண்டுள்ளார். மனிதவள உருமாற்றம் மற்றும் மூலோபாயம், வணிக மூலோபாய ஒருங்கிணைப்பு, நிறுவன மேம்பாடு, மனிதவளப் பகுப்பாய்வு, திறமை மேலாண்மை, கற்றல் மற்றும் மேம்பாடு, செயல்திறன் மற்றும் வெகுமதி மேலாண்மை, மனிதவள தகவல் அமைப்பு செயலாக்கம், தொழில்துறை உறவுகள் மற்றும் ஊழியர் உறவுகள், மாற்ற மேலாண்மை மற்றும் செயல்முறை உகந்ததாக்கல் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர்.

வங்கியில் இணைவதற்கு முன்னர், இவர் EMJAY International (Pvt) Ltd மற்றும் Penguin Sportswear (Pvt) Ltd ஆகியவற்றில் குழு மனிதவள (செயல்பாடுகள்) பொது மேலாளராகவும், Tudawe Brothers குழும நிறுவனங்களில் மனிதவளத் தலைவராகவும், AMSK Constructions (Pvt) Ltd இல் மனிதவளம் மற்றும் நிர்வாகத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். மேலும், MAS Holdings இல் மேலாளர் பொறுப்பை வகித்து, பெருமளவிலான நிறுவனங்களுக்கான விரிவான மனிதவளக் கட்டமைப்புகளை வடிவமைத்துள்ளார்.

BBA (ICFAI பல்கலைக்கழகம், இந்தியா), மனிதவள மேலாண்மையில் முதுகலை (Merit தேர்ச்சியுடன் - கொழும்புப் பல்கலைக்கழகம்) ஆகியவற்றைப் பெற்றுள்ளார். மேலும், இலங்கையின் சான்றளிக்கப்பட்ட தொழில்முறை மேலாளர்கள் நிறுவனத்தின் வாழ்நாள் சக உறுப்பினர், இலங்கையின் பட்டயப் பணியாளர் மேலாண்மை நிறுவனத்தின் (CIPM Sri Lanka) இணை உறுப்பினர் மற்றும் இலங்கை மனிதவள தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் இணை உறுப்பினர் ஆவார்.

(வங்கியின் துணை நிறுவனங்கள் மற்றும் துணை நிறுவனங்களில் கூட்டாண்மை முகாமைத்துவ உறுப்பினர்கள் பணிப்பாளர் பதவி வகிப்பது தொடர்பான விபரங்கள் 471 முதல் 472 பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.)

# நிறைவேற்று முகாமைத்துவம்

**திரு கே ஜி சீ தீபால்**
உதவிப் பொது முகாமையாளர் - தகவல் முறைமைகள் கணக்காய்வு

**அம்மணி ஜெயராணி ஞானசம்பந்தன்**
வதிவிட முகாமையாளர் சென்னை

**அம்மணி மாலா வீரசேகர**
உதவிப் பொது முகாமையாளர்- கிளை கடன் பிரிவு 1

**அம்மணி கே பி மல்லிகா**
உதவிப் பொது முகாமையாளர் - திறைசேரி பின்நிலை அலுவலகம்

**அம்மணி கிருஷாந்தி பெர்னாண்டோ**
உதவிப் பொது முகாமையாளர் - கூட்டாண்மை கடன்

**அம்மணி ஷீனா ருவைஸ்**
உதவிப் பொது முகாமையாளர் - பாதீடு மூலோபாய திட்டமிடல் மற்றும் தகவல் முகாமைத்துவ முறைமை

**திரு ஆனந்த வணிகசேகர**
உதவிப் பொது முகாமையாளர் - அறவிடல் மாகாணங்கள்

**அம்மணி மன்சலா விதான ஆராச்சி**
உதவிப் பொது முகாமையாளர் - கிளை செயற்பாடுகள்

**திரு சமந்த விமலசிறி**
உதவிப் பொது முகாமையாளர் - நுகர்வோர் மற்றும் அபிவிருத்தி வங்கியியல்

**அம்மணி இந்திரா கன்னங்கர**
உதவிப் பொது முகாமையாளர் - அறவிடல் கூட்டாண்மை

**அம்மணி மனோசிகா ஹேரத்**
உதவிப் பொது முகாமையாளர் - வடமேல் மாகாணம்

**அம்மணி மஞ்ஜுலா ஹேரத்**
வதிவிட முகாமையாளர் மாலே

**அம்மணி சுமங்கலா பிரபாகரன்**
உதவிப் பொது முகாமையாளர் - மத்திய கடன் தொழிற்பாடுகள்

**திரு சமன் கே விக்ரமசிங்க**
உதவிப் பொது முகாமையாளர் - டிஜிட்டல் தயாரிப்புகள் மேம்படுத்தல்

**அம்மணி பூர்ணா திலகரத்ன**
பிரதிப் பிரதான சட்ட அதிகாரி - சர்வதேச மற்றும் பொது தொழிற்பாடுகள்

**அம்மணி நிஷானதீ நாணயக்கார பிரதி**
பிரதான சட்ட அதிகாரி – கடன்

# நிறைவேற்று முகாமைத்துவம்

**திரு எஸ் பீ ஏ எம் ஜீ எஸ் ஆரம்பத்**
உதவிப் பொது முகாமையாளர் - புறக்கோட்டை வணிக மையம்

**திரு சுதத் லியனகே**
உதவிப் பொது முகாமையாளர் - மேல்மாகாணம் வடக்கு

**திரு வி சிவானந்தன்**
உதவிப் பொது முகாமையாளர் - வட மாகாணம்

**திரு துமிந்த தயாவன்ச**
உதவிப் பொது முகாமையாளர்- மத்தியமயப்படுத்தப்பட்ட தொழிற்பாடுகள்

**அம்மணி டபிள்யூ.கே.எல்.பீ.என். சமந்தி**
உதவிப் பொது முகாமையாளர் - கிளை கடன் பிரிவு 2

**அம்மணி தீபா குமாரி**
உதவிப் பொது முகாமையாளர் - கடன் இடர்

**திரு ரஜித துஷாந்த**
வதிவிட முகாமையாளர் - சீஷெல்ஸ்

**திரு மாதவ திசாநாயக்க**
பிரதான நிறைவேற்று அதிகாரி- இலங்கை வங்கி (ஐக்கிய இராச்சியம்) லிமிட்டெட்

**அம்மணி சுரேகா குலசேகர**
உதவிப் பொது முகாமையாளர் - நிலைத்தன்மை வங்கியியல்

**அம்மணி கங்கா வீரக்கொடி**
உதவிப் பொது முகாமையாளர் - செயற்பாட்டு கணக்காய்வு

**அம்மணி டிஸ்னா டயஸ்**
உதவிப் பொது முகாமையாளர் - ஓய்வூதிய திட்டங்கள்

**அம்மணி ருச்சின்றா பெரேரா**
உதவிப் பொது முகாமையாளர் - பெருநகரம்

**திரு ரஞ்சித் ருவன்பத்திரன**
உதவிப் பொது முகாமையாளர் - தென்மாகாணம்

**திரு என் கிருஷ்ணகுமார்**
உதவிப் பொது முகாமையாளர் - வியாபார புத்துயிர்ப்பு கூட்டாண்மை

**திரு உபுல் விஜேகுணவர்தன**
உதவிப் பொது முகாமையாளர் - இலத்திரனியல் வங்கியியல்

**திரு புத்திக பிரேமரத்ன**
உதவிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல்

**திரு ரிஹான் ஷக்கூர்**
உதவிப் பொது முகாமையாளர் - முதலீடுகள்

**அம்மணி பீ சிந்தியா மார்டின்**
உதவிப் பொது முகாமையாளர் - கடன் கணக்காய்வு

**திரு குஷான் தெல்கொட**
உதவிப் பொது முகாமையாளர் - மேல் மாகாணம் மத்திய

**திரு சமிந்த ரணசிங்க**
உதவிப் பொது முகாமையாளர் - சப்ரகமுவ மாகாணம்

**திரு எஸ் சபேசன்**
உதவிப் பொது முகாமையாளர்

**கலாநிதி சமில் பண்டார**
உதவிப் பொது முகாமையாளர் - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

**திரு கெலும் கஜநாயக்க**
உதவிப் பொது முகாமையாளர் - திட்ட நிதி

**திரு சந்தன கொடிதுவக்கு**
தகவல் தொழில்நுட்பத் தலைவர் - உட்கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டு

**அம்மணி பிரஷானி குணதிலக**
உதவிப் பொது முகாமையாளர் - இணக்கப்பாடு

**திரு கே கே சுசந்த**
உதவிப் பொது முகாமையாளர் - வர்த்தக நிதி மற்றும் சேவைகள்

**திரு குமுது மஹவத்த**
உதவிப் பொது முகாமையாளர் - கிழக்கு மாகாணம்

**அம்மணி உத்பலா ஹேரத்ரந்தெனி**
உதவிப் பொது முகாமையாளர் - அரசுடைமை தொழில்முயற்சிகளினுடனான உறவுகள்

**அம்மணி ஜயமாலி பிரியதர்ஷிகா**
உதவிப் பொது முகாமையாளர் - வெளிநாட்டுக் கிளைகள்

**அம்மணி இஷாரா ரணசிங்க**
உதவிப் பொது முகாமையாளர் - கொள்முதல்

**அம்மணி கோசிலா ஜயசூரிய**
உதவிப் பொது முகாமையாளர் - வியாபார புத்துயிர்ப்பு (மாகாணங்கள்)

**அம்மணி பிரியங்கனி ஜயதுங்க**
தகவல் தொழில்நுட்பத் தலைவர் - பயன்பாட்டு அபிவிருத்தி மற்றும் துணை

# நிறைவேற்று முகாமைத்துவம்

**அம்மணி தனுஜா பெரேரா**
தகவல் தொழில்நுட்பத் தலைவர் - செயற்திட்ட முகாமைத்துவ அலுவலகம்

**அம்மணி தரங்கனி ரணசிங்க**
உதவிப் பொது முகாமையாளர் - மனித வளத் தொழிற்பாடுகள்

**திரு உபுல் விஜயதுங்க**
உதவிப் பொது முகாமையாளர் - சர்வதேசம்

**திரு பிரகீத் பாலசூரிய**
உதவிப் பொது முகாமையாளர் - கூட்டாண்மை உறவுகள்

**திரு சானக கோஹோமங்கே**
உதவிப் பொது முகாமையாளர் - பொது முகாமையாளருக்கான ஆளணி உதவியாளர்

**திரு அசங்க பெந்தர விதானகே**
உதவிப் பொது முகாமையாளர் - மேல் மாகாணம் தெற்கு

**அம்மணி நிரோஷா அபேசுந்தர**
உதவிப் பொது முகாமையாளர் நிர்வாக சேவைகள்

**திரு டி.டபிள்யு.பி.கே. பிரேமரத்ன**
உதவிப் பொது முகாமையாளர் வடமத்திய மாகாணம்

**திரு தமித் ஏக்கநாயக்க**
உதவிப் பொது முகாமையாளர் - மத்திய மாகாணம்

**திரு இரேஷ் ரத்நாயக்க**
பிரதான தகவல் பாதுகாப்பு அதிகாரி

**அம்மணி சாரங்கா பெரேரா**
உதவிப் பொது முகாமையாளர் - கணக்கீடு மற்றும் வரி

**அம்மணி மாலிதா குணதிலக**
உதவிப் பொது முகாமையாளர் - விசாரணைகள்

**திரு லசந்த பிரேமரத்ன**
உதவிப் பொது முகாமையாளர் – திறைசேரி

**திரு எச் ஏ கே சம்பத**
உதவிப் பொது முகாமையாளர் - ஊவா மாகாணம்

**அம்மணி தயாஜினி பீரிஸ்**
உதவிப் பொது முகாமையாளர் - ஆளுகை, மனித வளம் மற்றும் வங்கித்தொழில் செயற்பாடுகள்

**திரு என் இராஜலிங்கம்**
தகவல் தொழில்நுட்ப தலைவர் - ஆளுகை

# எமது மூலோபாயம்

## எதிர்காலத்தை வழிநடத்துதல்

**வங்கியின் மூலோபாயத் தூண்கள் ஒன்றோடொன்று ஆழமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. சந்தைகள், சமூகம், புத்தாக்கம், நிலைத்தன்மை, ஆளுகை மற்றும் இடர் ஆகியவற்றை சீரமைப்பதன் மூலம், வங்கி தனது உபாயத்தை செயலாக மாற்றி, தேசம் முழுவதும் உறுதியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.**

*கனசதுரத்தின் ஒவ்வொரு திருப்பமும் முழு அமைப்பையும் மாற்றி, இறுதி விளைவை வடிவமைக்கிறது. ஒரேயொருசுழற்சி கனசதுரத்தை மாற்றுவது போல, ஒரு சிறிய முன்னெடுப்பு பல சமூகங்களில் அதிவேக வளர்ச்சியைத் தூண்டும்.*

# தொழிற்பாட்டுச் சூழல்

## உலகளாவிய சூழல்

2025 ஆம் ஆண்டில், உலகப் பொருளாதாரம் புவிசார் அரசியல் பதற்றங்கள், உருவாகி வரும் வர்த்தகக் கட்டமைப்புகள் மற்றும் கட்டமைப்புரீதியான மறுசீராக்கங்களினால் வடிவமைக்கப்பட்ட ஒரு மாறிவரும் சூழலில் இயங்கியது. சர்வதேச நாணய நிதியத்தின் அண்மைய உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின்படி, 2025 இல் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி சுமார் 3.3% எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது ஒரு மீண்டெழுந்தன்மை கொண்ட அதே சமயம் சீரற்ற விரிவாக்கத்தைப் பிரதிபலிக்கிறது. முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ள நிலையில், தோற்றம்பெற்று வரும் சந்தைகள் உள்நாட்டுத் தேவை மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான முன்னேற்றங்களின் ஆதரவுடன் வலுவான வேகத்தைத் தக்கவைத்துள்ளன.

பணவீக்கமானது முன்னைய உச்சங்களிலிருந்து குறைந்த போதிலும், முக்கிய பகுதிகளில் இன்னும் உயர்மட்டத்திலேயே இருந்தது. இது அமெரிக்க பெடரல் ரிசர்வ் மற்றும் ஐரோப்பிய மத்திய வங்கி உள்ளிட்ட மத்திய வங்கிகளைத் தரவு அடிப்படையிலான கொள்கை அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்கத் தூண்டியது.

உலகளாவிய நிதிச் சந்தைகள் உபாயகரமான போட்டி, பிராந்திய முரண்பாடுகள் மற்றும் மாறிவரும் வர்த்தக இயக்கவியலால் வடிவமைக்கப்பட்டன. அமெரிக்க டொலர் சுட்டெண் சற்றுத் தணிந்ததால், தோற்றம்பெற்று வரும் சந்தைகள் மீதான அழுத்தம் குறைந்து எல்லை கடந்த வர்த்தகத்திற்கு ஆதரவளித்தது. அதே வேளையில், அதிகரித்த இடர் தவிர்ப்பு மற்றும் மத்திய வங்கிகளின் கையிருப்பு பல்வகைப்படுத்தல் ஆகியவற்றால் தங்கம் பதிவு செய்யப்பட்ட நிலைமை எட்டியது. புவிசார் அரசியல் இடர் மற்றும் மிதமான கேள்வியினால் பண்டச் சந்தைகள் கலவையான போக்கைக் கொண்டிருந்தன.

உலகளாவிய வங்கித்தொழில் துறை இத்தகைய சவாலான சூழலிலும் மீள்திறனுடன் செயல்பட்டது. உயர்ந்த வட்டி வீதங்கள் இலாப எல்லைகளுக்கு ஆதரவளித்தன. அதே நேரத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட கடன் வழங்கல், வலுவான மூலதன இருப்புக்கள் மற்றும் முன்மதியுடைய திரவத்தன்மை முகாமைத்துவம் ஆகியவை இடர்நேர்வுகளை மட்டுப்படுத்தியது. ஒட்டுமொத்தமாக, 2025 ஆம் ஆண்டு அளவிடப்பட்ட வளர்ச்சி, உச்சமான சந்தை ஏற்றத்தாழ்வுகள் மற்றும் மீண்டெழுந்தன்மையுடைய கொண்ட நிதிச் செயல்பாடுகளைக் கொண்ட ஆண்டாக அமைந்தது. இது ஒரு சிக்கலான உலகளாவிய சூழலில் இயங்கும் வங்கிகளுக்கு மூலோபாய விரைவியக்கம் மற்றும் வலுவான இடர் முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை கோடிட்டுக் காட்டுகிறது.

எதிர்காலத்தைப் பார்க்கையில், மேற்கு ஆசியாவில் தொடரும் புவிசார் அரசியல் பதற்றங்கள் எரிபொருள் விலை தளம்பல்களை மற்றும் பணவீக்க அழுத்தங்களை உருவாக்குவதன் மூலம் உலகப் பொருளாதார நிச்சயமற்ற தன்மையை நீடிக்கச் செய்ய வாய்ப்புள்ளது. இது இலங்கையின் ஏற்றுமதிச் செயலாற்றம், பணவனுப்பல்களின் உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உறுதிப்பாடு ஆகியவற்றிற்குச் சவால்களை உருவாக்கக்கூடும்.

## உள்நாட்டுச் சூழல்

2025 ஆம் ஆண்டில், இலங்கை சீர்திருத்தத் திட்டங்களின் ஆதரவுடன் அளவான உறுதிப்பாட்டினையும் புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையையும் அனுபவித்தது. திட்டமிடப்பட்ட செலவினங்கள், வருவாய் மேம்பாடு மற்றும் கட்டமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்கள் மூலம் பேரண்டப்பொருளாதார நிலைத்தன்மையை மீட்டெடுப்பதில் இறைத் திரட்சி பிரதான வகிபாகம் கொண்டிருந்தது. வலுப்படுத்தப்பட்ட வரி நிர்வாகம் மற்றும் விரிவுபடுத்தப்பட்ட வரி இணக்கம் ஆகியவை அரசிறையை உயர்த்தியதுடன், இறை நம்பகத்தன்மையை அதிகரித்து கடன் மறுசீரமைப்பு குறிக்கோள்களுக்கு ஆதரவளித்தன.

கொள்கை சீர்திருத்தங்கள் மற்றும் வலுவான அடிப்படைகளின் தூண்டுதலுடன், 2025 இல் இலங்கை பேரண்டப்பொருளாதார நிலைத்தன்மையை நோக்கிய பாதையில் சீராக முன்னேறியது. 2024 ஆம் ஆண்டின் மறுமலர்ச்சியைத் தொடர்ந்து, அனைத்து முக்கிய துறைகளும் வலுவான வளர்ச்சியைத் தக்கவைத்துக் கொண்டன. 2025 இன் மூன்றாவது காலாண்டில் பொருளாதாரம் 5.4% வளர்ச்சியடைந்து, இது முன்னைய ஆண்டை விட 5.3மூ வளர்ச்சியைக் எடுத்துக்காட்டுகிறது. அனைத்து முக்கிய பொருளாதார நடவடிக்கைகளின் நேர்மறையான பங்களிப்பு மற்றும் 6.8% என்ற மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மறைமுக விலைச்சுருக்கியுடன், முதல் ஒன்பது மாதங்களில் ஒட்டுமொத்த வளர்ச்சி 5.0மூ ஆக இருந்தது. இது நாட்டின் மீண்டெழுந்தன்மை மற்றும் மீட்சியின் வேகத்தைப் பிரதிபலிக்கிறது. இந்த நேர்மறையான பாதை, தொழில் துறை, போக்குவரத்து மற்றும் சுற்றுலா சார்ந்த சேவைகளின் குறிப்பிடத்தக்க பங்களிப்புடன் பொருளாதார வேகம் மேம்படுவதை உறுதிப்படுத்துகிறது.

குறைந்து வரும் பணவீக்கம் மற்றும் மேம்பட்ட வெளிநாட்டு மீதிகள் காரணமாக, இலங்கை மத்திய வங்கி குறைந்த வட்டி வீதங்களைப் பேண முடிந்தது. இது கடனுக்கான கேள்வியை ஊக்குவித்ததுடன் நிதியிடல் அழுத்தங்களையும் குறைத்தது. வலுவான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் மற்றும் முன்மதியுடைய ஒதுக்கு முகாமைத்துவத்தால் ஆதரிக்கப்பட்ட செலாவணி வீத உறுதிப்பாடானது வணிகக் கணிப்புகளை மேம்படுத்தியதுடன் வெளிநாட்டு

நாணய பாதிப்புக்களுடன் ஐந்தொகைகளை வலுப்படுத்தியது. இருப்பினும், வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளின் தளர்வு மற்றும் அதிகரித்து வரும் இறக்குமதிகளுக்கு மத்தியில், இலங்கை ரூபாய் (LKR) அமெரிக்க டொலருக்கு (USD) எதிராக 2025 இல் 5.6% பெறுமதிதேய்வினை பதிவு செய்தது.

ஒரு குறிப்பிடத்தக்க கொள்கை மாற்றம் வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்பட்டதாகும். இது நிதிச் செயல்பாடுகளை ஊக்கப்படுத்தியது. அதிக கடன் வழங்கல்கள் சொத்துப் புத்தகங்களை விரிவுபடுத்தியதுடன், வாகன நிதியிடல் துறையில் காணப்பட்ட வலுவான நுகர்வோர் கேள்வியினால் கட்டணம் சார்ந்த வருமானமும் அதிகரித்தது. கடன் வழங்குநர்கள் அதிக வளர்ச்சிக்கிடையே சொத்து தரத்தைப் பாதுகாப்பதில் ஒழுக்கமான கடன் மதிப்பீட்டு முறைகளைக் கடைப்பிடித்தனர்.

அதிகரித்த வரி வசூல், சுங்க வரி மற்றும் ஏனைய வருமான வழிகளால் 2025 இல் அரசிறை வலுவடைந்தது. இது இறை உறுதிப்பாட்டினை மேம்படுத்தியதுடன் தேசிய வளர்ச்சியில் தொடர்ச்சியான முதலீட்டிற்கு ஆதரவளித்தது. வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் குறிப்பிடத்தக்க அளவில் வலுவடைந்தது. சுற்றுலாத் துறை சுமார் 2.4 மில்லியன் வருகையாளர்கள் மற்றும் அதிக தங்குமிடப் பயன்பாட்டுடன் மீண்டெழுந்தது. இது 2025 ஆம் ஆண்டில் சுமார் ஐக்கிய அமெரிக்க டொலர் 3.2 பில்லியன் வருவாயை ஈட்டித் தந்தது. அதே வேளையில், தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் முறையான வழிகள் ஊடாக 23% வளர்ச்சியுடன் 8.1 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்தது, இது சந்தை திரவத்தன்மை மற்றும் ஒதுக்குகளை மேம்படுத்தியது.

நீடித்த சவாலில், குறிப்பாக டித்வா சூறாவளியானது வாழ்வாதாரங்கள், விவசாயம் மற்றும் உட்கட்டமைப்புகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது. புனரமைப்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் கட்டுமானம், தளவாடங்கள் மற்றும் அது சார்ந்த துறைகளில் செயல்பாடுகளைத் தூண்டின. பொது-தனியார் கூட்டிணைப்பு மூலதனச் செலவினங்களை விரைவுபடுத்தியது, இது நடுத்தர கால அபிவிருத்தி மற்றும் காலநிலை மீண்டெழுந்தன்மைக்கு ஆதரவளித்தது. அதே வேளையில் நிதி நிறுவனங்கள் நிவாரண வழிமுறைகள், சலுகைக் கடன்கள் மற்றும் காப்பீட்டுத் தீர்ப்பனவுகள் மூலம் தமது பங்களிப்பை வழங்கின.

ஒட்டுமொத்தமாக, 2025 ஆம் ஆண்டு இலங்கைக்கு ஒரு எச்சரிக்கையுடன் கூடிய நம்பிக்கையைப் பிரதிபலித்தது. பேரண்டப்பொருளாதார உறுதிப்பாடு, வலுவான வெளிநாட்டு இருப்புக்கள், நாணய தளர்வு நிலைமைகள் மற்றும் துறைசார் வளர்ச்சி வேகம் ஆகியவை நிலையான வளர்ச்சிக்கான அடித்தளத்தை உருவாக்கின. எஞ்சியிருக்கும் பாதிப்புகளைக் கையாள்வதற்கும் நாட்டின் நீண்டகால பொருளாதாரப் பாதையை வலுப்படுத்துவதற்கும் மீண்டெழுந்தன்மை, சீர்திருத்தங்களின் தொடர்ச்சி மற்றும் ஒழுக்கமான நிதி முகாமைத்துவம் ஆகியவை மிக முக்கியமானதாக அமைந்தன.

## பேரண்டப்பொருளாதார நிலைத்தன்மை வலுவடைவதன் ஒரு பார்வை

2025 ஆம் ஆண்டில், இலங்கை நெருக்கடி கட்டுப்பாட்டு நிலையிலிருந்து கட்டமைப்புனான மீட்சி நிலைக்கு மாறியதுடன், பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டு நடவடிக்கைகள் உறுதியான முடிவுகளைத் தரத் தொடங்கின.















# தொழிற்பாட்டுச் சூழல்

## வங்கித்தொழில் துறையின் செயல்திறனின் ஒரு பார்வை

2025 ஆம் ஆண்டில், இலங்கையின் வங்கித்தொழில் துறையானது படிப்படியான மீட்சி மற்றும் எச்சரிக்கையுடனான நம்பிக்கையுடன் கூடிய ஒரு ஆண்டை எதிர்கொண்டது. சீராகி வரும் பணவீக்கம், பெரும்பாலும் நிலையான செலாவணி வீதங்கள் மற்றும் இணக்கமான வட்டி வீதங்கள் ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்ட பேரண்டப்பொருளாதார சூழல், புதுப்பிக்கப்பட்ட கொடுகடன் வளர்ச்சிக்கும் மேம்பட்ட துறைசார் மீண்டெழுந்தன்மைக்கும் உகந்த பின்னணியை வழங்கியது. வங்கிகள் வலுவான இறை நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டதுடன், சுற்றுலா மற்றும் வெளிநாட்டுப் பணவனுப்பலக்கள் மூலம் அதிகரித்த வெளிநாட்டு உட்பாய்ச்சல்களைக் கொண்டு தமது திரவத்தன்மை இருப்புகளை (வலுப்படுத்தியதுடன், வைப்பாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களிடையே நம்பிக்கையை மீட்டெடுத்தன.













2025 ஆம் ஆண்டானது வங்கித்தொழில் துறைக்கு ஒரு சமநிலையான மற்றும் முன்மதியுடைய வளர்ச்சியைப் பிரதிபலித்தது இது பொருளாதார மீட்சிக்கு ஆதரவளித்ததுடன், தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு வழிவகுத்து டிஜிட்டல் நிலை ஏற்றுக்கொள்ளச்செய்தது. அதே வேளையில், வலுவான இடர் முகாமைத்துவம் மற்றும் மூலதனப் போதுமானதன்மை தரநிலைகளை இது பேணி வந்தது. வங்கிகள் அதிக மீண்டெழுந்தன்மை கொண்டவையாகவும், மாறிவரும் சூழலுக்கு ஏற்பத் தம்மை மாற்றிக்கொள்பவையாகவும் உருவெடுத்ததுடன், இலங்கையின் தற்போதைய மீட்சி மற்றும் நீண்டகால உறுதிப்பாட்டிற்கு முட்டுக்கொடுக்கத் தயாராக உள்ளன.

வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளின் படிப்படியான தளர்வு, வாகன நிதியிடல் மற்றும் வாடகை-கொள்முதல் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை ஏற்படுத்தியது. அதே நேரத்தில் சில்லறை, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் மற்றும் வீட்டு வசதிக்கான கடன்கள் ஒழுங்குமுறைப்பட்ட முறையில் தொடர்ந்து விரிவடைந்தன. டிஜிட்டல் வங்கிச் சேவைகளின் பயன்பாடு வேகமடைந்ததுடன் இது பரந்த வாடிக்கையாளர் சென்றடைவு, செயற்பாட்டுத் திறன் மற்றும் மேம்பட்ட நிதி உள்ளடக்கம் ஆகியவற்றைச் சாத்தியமாக்கியது.

இந்த நேர்மறையான போக்குகள் இருந்தபோதிலும், காலநிலை தொடர்பான பாதிப்புகள், அதிக கேள்வியுள்ள துறைகளில் கடன் குவிப்பு மற்றும் சாத்தியமான உலகளாவிய சந்தை தளம்பல்கள் உள்ளிட்ட முக்கிய இடர்கள் குறித்து இத்துறை விழிப்புடன் இருந்தது. ஒழுக்கமான கடன் மதிப்பீடு மற்றும் இலக்கு வைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ நடைமுறைகள் சொத்து தரத்தை வலுப்படுத்தியதால், செயற்படாக் கடன்கள் படிப்படியான முன்னேற்றத்தைக் காட்டின.

## மத்திய வங்கியின் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள்

- **பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு (SME) உதவும் நிவாரண நடவடிக்கைகள் தொடர்பான 2024 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் மேலதிக இணைப்பு**

  சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிவாரண நடவடிக்கைகளை நீட்டித்தல் மற்றும் கண்காணித்தல்.

- **பெறுமதிக்கான கடனுக்கான உச்சவரம்புகள்**

  மோட்டார் வாகனக் கொள்வனவுக்காக வழங்கப்படும் கடன் வசதிகளுக்குப் பயன்படுத்தப்படும் “பெறுமதிக்கான கடன்“ விகிதங்களின் உச்சவரம்புகள்.

- **தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணையப் பாதுகாப்பு அறிக்கையிடல்:**

  2021 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரைக்கு இணங்க, இணைய அச்சுறுத்தல்கள், தரவு மீறல்கள், அமைப்பியல் தோல்விகள் மற்றும் ஏனைய இடையூறுகள் உள்ளிட்ட தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணையப் பாதுகாப்புச் சம்பவங்களை உரிமம் பெற்ற வங்கிகள் உடனடியாகப் புகாரளிக்க வேண்டும்.

- **தொடர்புடைய தரப்பினருக்கு வழங்கப்படும் வசதிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பிணைகள் தொடர்பான 2024 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிச் சட்டத் தீர்மானத்திற்கான திருத்தங்கள்:**

  பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட பொறுப்பேற்புக் கடிதத்துடன், இலங்கை அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு கடன் கடிதங்களை திறக்க வழிவகை செய்தல்.

- **உரிமம் பெற்ற வங்கிகளுக்கான மீட்சித் திட்டங்கள்:**

  மீட்சித் திட்டங்களை உருவாக்குவது தொடர்பான பணிப்புரைகள்.

- **நடமாடும் வங்கி அலகுகளுக்கான வழிகாட்டல்கள்:**

  நடமாடும் வங்கி அலகு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான முன் அனுமதி தொடர்பான திருத்தம்.

- **டித்வா சூறாவளி நிவாரண நடவடிக்கைகள்:**
  - கடன் மற்றும் வட்டித் திருப்பிச் செலுத்துதல்களை 3-6 மாதங்களுக்குத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்.
  - சலுகைக் காலங்கள் மற்றும் போட்டித்தன்மையுள்ள வட்டி விகிதங்களுடன் புதிய கடன்களை நீடித்தல்.
  - 2026 ஜனவரி 31 வரை கட்டணங்கள் மற்றும் அபராதங்களைத் தள்ளுபடி செய்தல்.

## PESTEL பகுப்பாய்வு

உள்நாட்டுச் செயல்பாட்டுச் சூழலில் உருவாகி வரும் அபிவிருத்திகளுக்கு வங்கியின் பிரதிபலிப்பை பின்வரும் பகுப்பாய்வு ஆராய்கிறது.

### P அரசியல் சூழல்

**அரசியல் உறுதிப்பாடு:**

சீர்திருத்தங்களை நோக்கிய அரசாங்கம், தேர்தலுக்குப் பின்னைய உறுதிப்பாட்டைப் பேணியது.

**கொள்கை அவதானிப்பு:**

இறை ஒழுக்கம், அரச துறை வெளிப்படைத்தன்மை மற்றும் கட்டமைப்புச் சீர்திருத்தங்களுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

**பல்நோக்கு ஈடுபாடு:**

சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்ச்சியான வலுவான ஒத்துழைப்பு இதில் ஐக்கிய அமெரிக்க டொலர் 334 மில்லியன் (3வது மீளாய்வு), ஐக்கிய அமெரிக்க டொலர் 350 மில்லியன் (4வது மீளாய்வு) மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் 206 மில்லியன் அவசரகால நிதி ஆகியவை நிதித்துறை மீதான நம்பிக்கையை ஆதரித்தன.

**எமது மூலோபாயப் பதிலிறுப்பு:**

- நிலையான அரசியல் சூழல், வங்கி நம்பிக்கையுடன் கடன்களை வழங்கவும் வைப்புக்களைத் திரட்டவும் வழிவகுத்தது.
- ஒழுங்குமுறைச் சீர்திருத்தங்கள் ஆளுகையை மேம்படுத்தியதுடன் மூலோபாய வளர்ச்சி வாய்ப்புகளை உருவாக்கின.
- அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட துறைசார் ஒருங்கிணைப்பு, வங்கிச் செயல்பாடுகளை வலுப்படுத்தியது.
- அரசாங்கத்தின் முன்னுரிமைகளுடன் (டிஜிட்டல் மற்றும் நிதி உள்ளடக்கம்) இணங்கிச் செயல்பட்டமை, கிராமப்புற மற்றும் பின்தங்கிய சமூகங்களைச் சென்றடைய உதவியது.
- அரசாங்கத்தின் முயற்சிகள் மற்றும் உட்கட்டமைப்பு நிதியுதவிகளில் பங்கேற்றமை, வங்கியின் தேசிய பங்களிப்பையும் சந்தை முன்னிலையையும் உறுதிப்படுத்தியது.

**தொடர்புடைய இடர்கள்** R1 R2

**தொடர்புடைய பொருண்மையுடைய விடயங்கள்** M3

### E பொருளாதார சூழல்

**பொருளாதார வளர்ச்சி:**

வேளாண்மை, கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகளின் வளர்ச்சியின் ஆதரவுடன், 2025 இன் முதல் ஒன்பது மாதங்களில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 5.4% சதவீதத்தினால் வளர்ந்தது.

**பணவீக்கம்:**

காலநிலை மாற்றங்களால் உணவுப் பொருட்கள் விலை அதிகரித்தாலும் பணவீக்கம் 2025 டிசெம்பரில் கொழும்பு 2.1% ஆக குறைவாகவே இருந்தது.

**வட்டி வீதங்கள்:**

விரிவாக்கமான நாணயக் கொள்கையின் கீழ் 2025 இல் சந்தை வட்டி வீதங்கள் குறைந்தன, இது கடன் வளர்ச்சியை ஆதரித்தது.

**வெளிநாட்டுத் துறை:**

உலகளாவிய நிச்சயமற்ற நிலைகளுக்கு மத்தியிலும் சுற்றுலா, பணவனுப்பல்கள் மற்றும் மேம்பட்ட வெளிநாட்டு ஒதுக்குகள் வெளிநாட்டுத் துறையை வலுப்படுத்தின.

**நாணய அசைவு:**

2025 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாய் தேய்மானமடைந்த போதிலும், நிலையாக இருந்தது.

**இறைச் செயலாற்றம்:**

மேம்பட்ட அரசிறை மற்றும் குறைக்கப்பட்ட பற்றாக்குறை ஆகியவை இறை உறுதிப்பாட்டையும் கொள்கை ஆதரவையும் மேம்படுத்தின.

**எமது மூலோபாயப் பதிலிறுப்பு:**

- மூலதனம் மற்றும் திரவத்தன்மை: வலுவான மூலதனப் போதுமானதன்மை மற்றும் திரவத்தன்மை இருப்புகளைப் பேணியமை.
- இடர் முகாமைத்துவம்: மேம்படுத்தப்பட்ட இடர் கட்டமைப்புகள் மற்றும் துறைசார் எல்லைகளுடன் கூடிய இடர்-உணர்திறன் கொண்ட கடன் மதிப்பீட்டைப் பேணியமை.
- கொடுகடன் விரிவாக்கம்: சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு, ஏற்றுமதி, சுற்றுலா, வாகன குத்தகை மற்றும் வீட்டு வசதி ஆகியவற்றிற்குத் தெரிவு செய்யப்பட்ட முறையில் கடன்களை அதிகரித்தல்.
- வெளிநாட்டுத் துறை அனுகூலம்: பணவனுப்பல் பங்களிப்புகள், டிஜிட்டல் தளங்கள் மற்றும் வர்த்தக நிதி மூலம் நடைமுறை சேமிப்பு வைப்புக்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையை அதிகரித்தல்.
- வளர்ச்சி இலக்கு: 2025 இல் வங்கிச் செயல்பாடுகளைத் தக்கவைத்து விரைவுபடுத்தியமை.

**தொடர்புடைய இடர்கள்** R1 R2 R3 R4

**தொடர்புடைய பொருண்மையுடைய விடயங்கள்** M3

### S சமூக சூழல்

**சனத்தொகை விபரங்கள்:**

இளைஞர்கள் மற்றும் 'GenZ' பிரிவினர் டிஜிட்டல் வங்கிச் சேவை, நிதி அறிவு மற்றும் இளைஞர்களுக்கான சேமிப்புத் தயாரிப்புகளுக்கான தேவையினைத் தூண்டுகின்றனர்.

**நகரமயமாக்கல் மற்றும் நகர்வுத்தன்மை:**

வளர்ந்து வரும் நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினர், சில்லறை மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் வங்கித் தேவைகளை அதிகரிக்கின்றது.

**பொதுமக்களின் எதிர்பார்ப்புகள்:**

நிறுவன சமூகப் பொறுப்பு, நிதி உள்ளடக்கம் மற்றும் நெறிமுறை சார்ந்த வங்கிச் சேவைகள் மீதான கவனம் அதிகரிப்பு.

**டிஜிட்டல் தழுவல்:**

சமூக வங்கிச் சேவைகள் குறிப்பாக தொழில்நுட்ப அறிவுள்ள இளைஞர்களிடையே வேகமெடுக்கின்றன.

**எமது மூலோபாயப் பதிலிறுப்பு:**

- நிதி அறிவு: சேமிப்பு, கடன்கள் மற்றும் டிஜிட்டல் நிதி குறித்து பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் விழிப்புணர்வுத் திட்டங்களை விரிவுபடுத்திய அதேவேளை, இளைஞர் கடன் வசதிகளையும் வழங்குதல்.
- டிஜிட்டல் வங்கிச் சேவை: தொழில்நுட்ப அறிவுள்ள மற்றும் நகர்ப்புற வாடிக்கையாளர்களுக்காக மொபைல் செயலிகள் மற்றும் இணையத் தளங்களை விரைவாக அறிமுகப்படுத்துதல்.
- உள்ளடக்கத் தயாரிப்புகள்: குறைந்த வருமானம் கொண்ட மற்றும் கிராமப்புறக் குழுக்களுக்காக (உதாரணமாக: அஸ்வெசும பயனாளிகள்) வடிவமைக்கப்பட்ட சேவைகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் நுண்நிதிக்கான ஆதரவு.
- சமூகத் தொடர்பு: பொது நம்பிக்கையை கட்டியெழுப்ப தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளுடன் இணைந்த திட்டங்களை வலுப்படுத்துதல்.
- தரவு சார்ந்த சேவைகள்: சமூகப் போக்குகளைக் கண்காணிக்கவும் வங்கிச் சேவைகளைத் தனிப்பயனாக்கவும் தரவு பகுப்பாய்வுகளைப் பயன்படுத்துதல்.

**தொடர்புடைய இடர்கள்** R1 R2 R3

**தொடர்புடைய பொருண்மையுடைய விடயங்கள்** M3 M8 M10

# தொழிற்பாட்டுச் சூழல்

## T தொழில்நுட்பச் சூழல்

**தேசிய டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்பு:**

'GovPay' உள்ளிட்ட அரசாங்கம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் முயற்சிகள், டிஜிட்டல் கொடுப்பனவுகள் மற்றும் நிதிச் சேவைத் தழுவலை விரைவுபடுத்துகின்றன.

**டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI):**

மேம்படுத்தப்பட்ட சேவைகள், தனிப்பயனாக்கம் மற்றும் செயல்பாட்டுத் திறன் ஆகியவற்றின் மூலம் வங்கித்தொழில் துறையில் மாற்றத்தை உந்துதல்.

**டிஜிட்டல் உட்கட்டமைப்பு:**

அதிகரித்து வரும் இணைய ஊடுருவல் மற்றும் மொபைல் இணைப்பு, டிஜிட்டல் வங்கிச் சேவைகளின் பரந்த பயன்பாட்டைச் சாத்தியமாக்குகிறது.

**பின்டெக் விரிவாக்கம்:**

மின்-பணப்பைகள், டிஜிட்டல் கொடுப்பனவுகள் மற்றும் மாற்று கடன் வழங்கும் தளங்களின் வளர்ச்சி, புத்தாக்கத்தையும் போட்டியையும் அதிகரிக்கின்றன.

**இணையப் பாதுகாப்பு மற்றும் AI அபாயங்கள்:**

தரவுப் பாதுகாப்பு மீதான அதிக கவனம், அதே வேளையில் செயற்கை நுண்ணறிவின் (AI) தவறான பயன்பாடு மற்றும் தவறான தகவல்களுடன் தொடர்புடைய வளர்ந்து வரும் அபாயங்கள்.

**எமது மூலோபாயப் பதிலிறுப்பு:**

- டிஜிட்டல் வங்கிச் சேவை: மேம்படுத்தப்பட்ட மொபைல் மற்றும் இணைய வங்கிச் சேவைகள்.
- தள ஒருங்கிணைப்பு: டிஜிட்டல் மற்றும் கொடுப்பனவு சுற்றுச்சூழல் அமைப்பு ஒருங்கிணைப்பை வலுப்படுத்தியமை.
- தன்னியக்கமாக்கல்: இணக்கப்பாடு மற்றும் கடன் செயல்முறைகளில் தன்னியக்கமாக்கலை அதிகரித்தல்.
- டிஜிட்டல் கொடுப்பனவுகள்: டிஜிட்டல் கொடுப்பனவு முறைகள் மற்றும் நிதி உள்ளடக்கத்தை ஊக்குவித்தல்.
- இணையப் பாதுகாப்பு: இணையப் பாதுகாப்பு மற்றும் தரவுப் பாதுகாப்பு கட்டமைப்புகளை வலுப்படுத்தியமை.
- செயல்திறன்: டிஜிட்டல் விரிவாக்கம் மூலம் செலவுத் திறன் மற்றும் அணுகல்தன்மையை மேம்படுத்தியமை.

**தொடர்புடைய இடர்கள்** R3

**தொடர்புடைய பொருண்மையுடைய விடயங்கள்** M3

## E சுற்றுச்சூழல் சூழல்

**காலநிலை அபாயங்கள்:**

சமூகம் மற்றும் வணிகங்களைப் பாதிக்கும் வெள்ளம், வறட்சி மற்றும் தீவிர வானிலை நிகழ்வுகளின் அதிகரிப்பு. டித்வா சூறாவளி காலநிலை பாதிப்புகள் குறித்த ஒரு கடுமையான நினைவூட்டலாக அமைந்தது.

**நிலைத்தன்மை மீதான கவனம்:**

பசுமை நிதி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை இணக்கப்பாடு ஆகியவற்றில் பொதுமக்களும் ஒழுங்குமுறை அமைப்புகளும் காட்டும் அதிக அக்கறை.

**வள முகாமைத்துவம்:**

எரிசக்தி திறன், நீர் சேமிப்பு மற்றும் கழிவு குறைப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் தேசிய முயற்சிகள்.

**நிறுவனப் பொறுப்புக்கூறல்:**

வங்கிகள் உள்ளிட்ட நிறுவனங்கள் தமது சுற்றுச்சூழல் பாதிப்புகளை வெளிப்படுத்த வேண்டும் மற்றும் பேண்தகு அபிவிருத்திக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற உயர்ந்த எதிர்பார்ப்பு.

**எமது மூலோபாயப் பதிலிறுப்பு:**

- இலங்கையின் மிகப்பெரிய பாசல் III இணக்கப்பாட்டுடனான நிலைத்தன்மை முறியை அறிமுகப்படுத்தியமை.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த, உயிரியல் ரீதியாக சிதையக்கூடிய வங்கி அட்டைகளை அறிமுகப்படுத்தியமை.
- கிளைகளில் புதுப்பிக்கத்தக்க வலு மற்றும் வலு திறன் நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
- சமூக சுற்றுச்சூழல் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு முன்னெடுப்புக்களில் ஈடுபாடு.
- SLFRS S1 மற்றும் S2 தரநிலைகளைத் தானாக முன்வந்து ஏற்றுக்கொண்டமை.

**தொடர்புடைய இடர்கள்** R1 R2 R3

**தொடர்புடைய பொருண்மையுடைய விடயங்கள்** M6 M7 M9

## L சட்டம் மற்றும் ஒழுங்குமுறைச் சூழல்

பராடே சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தல்: 2025 ஜூலை 1 முதல் அமுலுக்கு வந்தது.

மத்திய வங்கியின் நிலைத்தன்மை நிதி வழிகாட்டல்

நிலைத்தன்மை நிதியிடல், சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை இடர் முகாமைத்துவம் மற்றும் அறிக்கையிடல் ஆகியவற்றை வழிநடத்த வழிகாட்டல் (2025-2029) அறிமுகப்படுத்தப்பட்டது.

**ஏனைய ஒழுங்குமுறை இற்றைப்படுத்தல்கள்:**

- கொடுகடன் வளர்ச்சியை ஆதரிக்கும் இணக்கமான வட்டி வீதக் கொள்கைகள்.
- டிஜிட்டல் வங்கிச் சேவை மற்றும் இணையப் பாதுகாப்பு ஒழுங்குமுறைகள்.
- சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், நுண்நிதி மற்றும் கிராமப்புற வங்கிச் சேவைகளை ஊக்குவிக்கும் நிதி உள்ளடக்கக் கட்டளைகள்.

**எமது மூலோபாயப் பதிலிறுப்பு:**

- சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் இணக்கப்பாட்டுத் தேவைகளை உரிய காலத்தில் பின்பற்றுதல்.
- மத்திய வங்கியின் நிலைத்தன்மை வெளிப்படுத்தல் தேவைகளுக்கு இணங்க அறிக்கையிடல் அமைப்புகளை உருவாக்குதல்.
- வாடிக்கையாளர்களின் தரவுப் பாதுகாப்பை மேம்படுத்தி உறுதி செய்தமை.

**தொடர்புடைய இடர்கள்** R1 R3

**தொடர்புடைய பொருண்மையுடைய விடயங்கள்** M6 M7 M9

# பங்குதாரர் ஈடுபாடு

GRI 2-29

இலங்கை வங்கியின் பங்குதாரர்கள் ஒரு பன்முகத்தன்மை கொண்ட சமூகமாக விளங்குகின்றனர். ஒரு ரூபிக் கனசதுரத்தின் மாறிவரும் பக்கங்களைப் போலவே, ஒவ்வொரு தரப்பும் வங்கியின் முன்னேற்றத்திற்கான தனித்துவமான எதிர்பார்ப்புகள், முன்னுரிமைகள் மற்றும் பங்களிப்புகளைப் பிரதிபலிக்கின்றன. இந்தச் சிக்கலான தன்மையை உணர்ந்து, பங்குதாரர்களின் மாறிவரும் தேவைகளைப் புரிந்துகொள்ளவும், உறவுகளை வலுப்படுத்தவும் மற்றும் வங்கியின் மூலோபாய திசையைத் தீர்மானிக்கவும் வங்கி விரிவான மற்றும் நெகிழ்வான ஈடுபாட்டு வழிமுறைகளைக் கையாண்டு வருகின்றது. தொடர்ச்சியான உரையாடல், கருத்துப் பரிமாற்ற ஊடகங்கள் மற்றும் கூட்டுப் பங்களிப்புகள் மூலம், பங்குதாரர்களின் நுண்ணறிவுகள் வங்கியின் முடிவுகளை வடிவமைப்பதையும், பேண்தகு பெறுமதியை வழங்குவதற்கான வங்கியின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதையும் வங்கி உறுதி செய்கிறது.

### பங்குதாரர்கள் மற்றும் நிதி வழங்குநர்கள்

பங்குதாரர்களும் நிதி வழங்குநர்களும் வங்கியின் வளர்ச்சித் திறனுக்கு அடிப்படையாக அமைகின்றனர். மூலதனத்தின் முன்மதியுடைய முகாமைத்துவம் மற்றும் மூலோபாயத்தின் ஒழுக்கமான செயலாக்கத்தின் மூலம், வங்கி அவர்களின் நலன்களைப் பாதுகாக்கவும் நீண்டகால பெறுமதியை வழங்கவும் முயல்கிறது.

### வாடிக்கையாளர்கள் (Customers)

வாடிக்கையாளர்களைச் சேவைப் புத்தாக்கத்தின் முக்கிய உந்துசக்திகளாக வங்கி கருதுகிறது. அவர்களின் மாறிவரும் எதிர்பார்ப்புகள், தயாரிப்பு மேம்பாடு, விநியோகக் கட்டமைப்பு விரிவாக்கம் மற்றும் நம்பகமான, இலகுவாக அணுகக்கூடிய நிதித் தீர்வுகளை வழங்குவதற்கு வழிகாட்டுகின்றன.

### ஊழியர்கள்

ஊழியர்கள் வங்கியின் செயல்பாட்டு மற்றும் மூலோபாயத் திறனின் முதுகெலும்பாக அமைகின்றனர். ஊழியர்களின் திறன்கள், நல்வாழ்வு மற்றும் தொழில் வாழ்க்கைப் பாதைகளில் தொடர்ந்து முதலீடு செய்வதன் மூலம், ஊக்கமளிக்கப்பட்ட மற்றும் எதிர்காலத்திற்குத் தயாராக உள்ள ஒரு பணிக்குழுவை வங்கி ஆதரிக்கிறது.

### ஒழுங்குமுறைப்படுத்துநர்கள்

ஒரு நிலையான நிதிச் சூழலை உருவாக்குவதில் ஒழுங்குமுறை அமைப்புகள் மையப் பங்கு வகிக்கின்றன. வளர்ந்து வரும் தேவைகள் மற்றும் தொழில்துறை தரநிலைகளுடன் இணக்கத்தைப் பேணுவதை உறுதிப்படுத்தும் வகையில், ஒழுங்குமுறை ஈடுபாடுகளில் வங்கி ஒரு செயலூக்கமான மற்றும் கூட்டுறவு அணுகுமுறையைப் பின்பற்றுகிறது.




முன்னுரிமை

- உயர்வானது
- உயர்வானது முதல் மிதமானது

### சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்

சமூகமும் சுற்றுச்சூழலும் வங்கி இயங்கும் பரந்த சூழலைப் பிரதிபலிக்கின்றன. சமூக நல்வாழ்வு, சுற்றுச்சூழல் பொறுப்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய அபிவிருத்தியை முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு வங்கி முன்னுரிமை அளிக்கிறது.

### வணிகப் பங்காளிகள்

வணிகப் பங்காளிகள் வங்கியின் செயல்பாட்டுத் திறன் மற்றும் சேவை விரிவாக்கத்திற்குப் பங்களிக்கின்றனர். வங்கி வெளிப்படையான, கூட்டுறவு உறவுகளை வளர்ப்பதன் மூலம் பகிரப்பட்ட பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதுடன், வழங்கல் சங்கிலி முழுவதும் பெறுமதி உருவாக்கத்தை வலுப்படுத்துகிறது.

## பங்குதாரர் ஈடுபாட்டு வழிமுறை

பங்குதாரர் ஈடுபாட்டிற்காக வங்கி பின்பற்றும் கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

### 01 பங்குதாரர்களைப் புரிந்துகொள்ளுதல்

- முக்கிய பங்குதாரர் குழுக்களைக் கண்டறிந்து முன்னுரிமைப்படுத்துதல்.
- அவர்களின் நலன்கள், செல்வாக்கு மற்றும் எதிர்பார்ப்புகளை மதிப்பீடு செய்தல்.

### 02 ஈடுபாட்டை வடிவமைத்தல்

- ஈடுபாட்டின் நோக்கம் மற்றும் எதிர்பார்க்கப்படும் முடிவுகளைத் தீர்மானித்தல்.
- பொருத்தமான ஊடகங்கள், முறைகள் மற்றும் கால இடைவெளிகளைத் தெரிவு செய்தல்.

### 03 பெறுமதியை வழங்குதல்

- பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகள் மற்றும் பதிலிறுப்புகளை உருவாக்குதல்.
- பங்குதாரர் ஈடுபாட்டுச் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.

### 04 பொறுப்புக்கூறலை வெளிப்படுத்துதல்

- செயல்திறனை அளவிடுதல் மற்றும் முடிவுகளை மதிப்பீடு செய்தல்.
- நுண்ணறிவுகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து பங்குதாரர்களுக்கு அறிக்கையிடுதல்.
- எதிர்கால ஈடுபாடுகளை மேம்படுத்துவதற்காகக் கற்றுக்கொண்ட பாடங்களை ஒருங்கிணைத்தல்.

### பொருண்மையுடைய விடயங்களுடனான இணைப்பு

வங்கி இந்த ஆண்டில் ஒரு விரிவான பங்குதாரர் ஈடுபாட்டு ஆய்வை மேற்கொண்டது இது பத்து முக்கிய விடயங்களைக் கண்டறிவதற்கு நேரடியாகப் பங்களித்தது.

## வாடிக்கையாளர்கள்

**உறவின் பலம்: வலுவானது**

வங்கியானது சில்லறை, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வாடிக்கையாளர்களுக்குச் சேவையாற்றுகிறது. பல்வேறு நிதித் தேவைகளை ஆதரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட விரிவான நிதித் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை இது வழங்குகிறது.

**SDGs**

| எதிர்பார்ப்புகள் | ஈடுபாடு | | பதிலிறுப்பு: |
|---|---|---|---|
| • வேகமான மற்றும் வசதியான சேவை. | • கிளைகள் மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள் ஊடாக நேரடி ஈடுபாடு. | O | • வாடிக்கையாளர்களை மையமாகக்கொண்ட தீர்வுகளை வழங்குதல். |
| • நம்பகமான, பாதுகாப்பான மற்றும் எளிதில் அணுகக்கூடிய தளங்கள். | • இணையதளம் மற்றும் சமூக ஊடகத் தளங்கள். | O | • டிஜிட்டல் வங்கித்தொழில் திறன்களைத் தொடர்ச்சியாக மேம்படுத்துதல். |
| • வெளிப்படையான மற்றும் போட்டித்தன்மை மிக்க விலையிடல். | • வாடிக்கையாளர் உதவி மையம் மற்றும் சேவை மையங்கள். | O | • கொடுக்கலவாங்கல் காலத்தைக் குறைப்பதற்கான தன்னியக்கமாக்கல் முயற்சிகள். |
| • நியாயமான நடத்தல் மற்றும் பொறுப்பான வங்கித்தொழில். | • நிதி அறிவு ஊட்டல் திட்டங்கள். | O | • இணையப் பாதுகாப்பு மற்றும் தளங்களின் மீள்திறனை வலுப்படுத்துதல். |
| • நிதியுதவிக்கான அணுகல் மற்றும் ஆலோசனை ஆதரவு. | • சந்தைப்படுத்தல், விளம்பரம் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள். | O | • நிதி அறிவு மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். |
| | • சந்தைக் ஆய்வுகள் மற்றும் கருத்துப் பரிமாற்ற வழிமுறைகள். | P | |

### வழங்கப்பட்ட பெறுமதி

**வாடிக்கையாளர்களுக்கான மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள்: ரூ. 2.7 டிரில்லியன்.**

**வைப்புகளுக்கான வட்டி: ரூ. 260.6 பில்லியன்.**

**டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்கள்: ரூ. 419.4 மில்லியன்.**

*ஒவ்வொரு வாடிக்கையாளரின் பயணத்தையும் வடிவமைத்தல் (பக்கங்கள் 132-137).*
*டிஜிட்டல் அனுபவங்களை வலுப்படுத்துதல் (பக்கங்கள் 148-152).*

**மூலோபாயம் :**

### மூலதனப் பரிமாற்றங்கள்

**குறுகிய காலம்:** தொழில்நுட்பம் மற்றும் சேவை வழங்கலில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் பாதிக்கின்றவை.

**நீண்ட காலம்:** வாடிக்கையாளர் நம்பிக்கை, உள்ளடக்கம் மற்றும் டிஜிட்டல் திறன் ஆகியவை மேம்படுத்துவது.

**மீண்டெழுந்தன்மை கட்டியெழுப்பப்படுவது**

## ஊழியர்கள்

**உறவின் பலம்: வலுவானது**

இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள வங்கியின் பணியாளர்கள் அதன் செயல்பாடுகளுக்கும் நீண்டகால பெறுமதி உருவாக்கத்திற்கும் ஆதரவளிக்கின்றனர்.

**SDGs**

| எதிர்பார்ப்புகள் | ஈடுபாடு | | பதிலிறுப்பு: |
|---|---|---|---|
| • போட்டித்தன்மை மிக்க ஊதியம். | • பல்வேறு மட்டங்களிலான பணியாளர் கூட்டங்கள். | O | • தொடர்ச்சியான பயிற்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை வழங்குதல். |
| • தொழில்முறை வளர்ச்சி வாய்ப்புகள். | • திறந்த கலாச்சாரம் | O | • செயல்திறன் அடிப்படையிலான வெகுமதி மற்றும் ஊதியக் கட்டமைப்புகளை நடைமுறைப்படுத்துதல். |
| • திறன் மேம்பாடு. | • குறைகேள் வழிமுறைகள் | O | • உடல் மற்றும் மன நல்வாழ்வு முன்னெடுப்புக்களை அறிமுகப்படுத்துதல். |
| • பாதுகாப்பான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பணியிடம். | • இ-கற்றல் (ந-டுநயசniபெ) தளங்கள். | O | • ஓய்வூதிய மற்றும் பிந்தைய வேலைவாய்ப்பு நன்மைகளை மேம்படுத்துதல். |
| • வேலை பாதுகாப்பு மற்றும் ஓய்வூதிய நன்மைகள். | • செயல்திறன் மதிப்பீடுகள். | O | • மனிதவளக் கொள்கைகள் மற்றும் ஆளுகை கட்டமைப்புகளை அவ்வப்போது மதிப்பாய்வு செய்து வலுப்படுத்துதல். |
| | • தொழிற்சங்கங்கள் ஊடாக ஈடுபாடு. | O | |
| | • ஊழியர் திருப்தி ஆய்வுகள். | A | |

### வழங்கப்பட்ட பெறுமதி

மொத்த ஊழியர்கள்: 8,912

ஊழியர் தக்கவைப்பு விகிதம்: 97%

**ஊழியர் ஒருவருக்கான சராசரி பயிற்சி நேரம்: 28 மணித்தியாலங்கள்**

*நீடித்த செயல்திறனுக்காக அனைவரையும் உள்ளடக்கிய பணியாளர் குழு (பக்கங்கள் 138-147).*

**மூலோபாயம் :**

### மூலதனப் பரிமாற்றங்கள் (Capital Trade-offs):

**குறுகிய காலம்:** மனித மூலதனம் மற்றும் ஊதியக் கடப்பாடுகள் பாதிப்பது

**நீண்ட காலம்:** மேம்படுத்தப்பட்ட பணியாளர் திறன், கலாச்சாரம் மற்றும் தலைமைத்துவ ஆற்றல் ஆகியவை வலுப்படுத்துவது.

**மீண்டெழுந்தன்மை கட்டியெழுப்பப்படுவது**

ஈடுபாட்டு கால இடைவெளி **O** தொடர்ந்துகொண்டிருத்தல் **P** அவ்வப்போது **Q** காலாண்டு **B** அரையாண்டு **A** வருடாந்தம்

## பங்குதாரர்கள் மற்றும் நிதி வழங்குநர்கள்

**உறவின் பலம்: வலுவானது**

இலங்கை அரசாங்கம் வங்கியின் தனி உரிமையாளர் அந்தஸ்தைக் கொண்டுள்ளது. துணை படுகடன் கருவிகளை) வைத்திருப்போர் நிதி வழங்குநர்களாக உள்ளடங்குகின்றனர்.

SDGs

### எதிர்பார்ப்புகள்

- இடர் மற்றும் வாய்ப்புகளுக்கு ஏற்ப அமைந்த வருவாய்கள்.
- வெளிப்படையான மற்றும் சரியான நேரத்திலான அறிக்கையிடல்.
- வலுவான ஆளுகை மற்றும் இடர் மேற்பார்வை.
- பொறுப்பான நடத்தை மற்றும் அறநெறி சார்ந்த நடைமுறைகள்.
- அங்கீகாரம் மற்றும் நற்பெயர்.

### ஈடுபாடு

- இலங்கை வங்கியின் இணையதளம், வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய வெளியீடுகள். O
- முக்கிய பிரதிநிதிகளுடனான காலமுறை கூட்டங்கள் மற்றும் எழுத்து மூலமான தொடர்பாடல்கள். AO
- முக்கிய முதலீட்டாளர்களுடனான தனிப்பட்ட கலந்துரையாடல்கள். P
- சந்தை இடைத்தரகர்கள் மூலமான தொடர்புகள். P
- கொழும்பு பங்குச் சந்தை ஊடாக நிறுவன அறிவிப்புகள். P

### பதிலிறுப்பு:

- நிலையான மற்றும் பேண்தகு வருவாய்களை உருவாக்குவதில் கவனம் செலுத்துதல்.
- வலுவான நிதி நிலையைப் பேணுதல்.
- விதிகள் மற்றும் வழிகாட்டல்களைப் பின்பற்றுதல்.
- மூலதனத்தை வலுப்படுத்தும் தொடர்ச்சியான முயற்சிகள்.
- சரியான நேரத்திலான மற்றும் வெளிப்படையான சந்தை வெளிப்படுத்தல்கள்.

### வழங்கப்பட்ட பெறுமதி (Value Delivered):

மூலதனப் போதுமானதன்மை விகிதம்: 16.9%
உரிமை மீதான வருவாய் (ROE): 22.7%

கடன்தர மதிப்பீடு: AA-(lka)/Stable ஆக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

*நிதியியல் மீளாய்வு (பக்கங்கள் 108-114).*

**மூலோபாயம் :**

### மூலதனப் பரிமாற்றங்கள்

**குறுகிய காலம்:**

செயல்பாட்டு, இணக்கப்பாடு மற்றும் அறிக்கையிடல் அழுத்தங்கள் பாதிப்பது.

**நீண்ட காலம்:**

வலுவான ஆளுகை, நம்பிக்கை மற்றும் நிதி ஒழுக்கம் ஆகியவை மேம்படுத்துவது.

**மீண்டெழுந்தன்மை கட்டியெழுப்பப்படுவது**

## சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்

**உறவின் பலம்: வலுவானது**

வங்கி இயங்கும் சமூகங்கள், பொது மக்கள், மற்றும் இயற்கை சுற்றுச்சூழல்.

SDGs

### எதிர்பார்ப்புகள்

- வணிக மறுமலர்ச்சி மற்றும் பொருளாதார மீள்திறனுக்கான ஆதரவு.
- நிதித்துறை மீதான நம்பிக்கை மற்றும் உறுதிப்பாடு.
- தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளுடன் வங்கியின் மூலோபாயத்தை ஒருங்கிணைத்தல்.
- சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை விடயங்களில் அதிக முக்கியத்துவம் அளித்தல்.
- சமூக மேம்பாட்டு முயற்சிகளுக்கான பங்களிப்பு.
- பொறுப்பான வணிக நடைமுறைகள் மற்றும் நிதி உள்ளடக்கம்.

### ஈடுபாடு

- ஆண்டறிக்கை மற்றும் ஏனைய வெளியீடுகள் QA
- இலங்கை வங்கியின் இணையதளம் மற்றும் ஏனைய டிஜிட்டல் தளங்கள் P
- தொழில்துறை மன்றங்கள், மாநாடுகள் மற்றும் கொள்கை உரையாடல்கள் P
- கிளை வலையமைப்புகள் ஊடாக P
- சமூக முதலீட்டுத் திட்டங்கள் P
- ஊடக அறிக்கைகள் மற்றும் ஊடகப் பிரச்சாரங்கள் P

### பதிலிறுப்பு:

- இளைஞர்கள், பெண்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்காக இலக்கிடப்பட்ட கடன் திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.
- ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவ அமைப்புகளை வலுப்படுத்துதல்.
- வேலைவாய்ப்பு உருவாக்கத்தை ஊக்குவித்தல்.
- நாடு முழுவதும் நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துதல்.
- சமூக அபிவிருத்தியில் நீண்டகால முதலீடுகளைத் தக்கவைத்தல்.
- அரச முன்னுரிமைகளுக்கு பெறுமதியை வழங்குதல்
- பிரத்தியேக மறுமலர்ச்சிப் பிரிவுகளின் ஊடாக தேசிய பொருளாதார மீட்பு முயற்சிகளுக்கு ஆதரவளித்தல்.
- காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளில் கவனம் செலுத்துதல்.

### வழங்கப்பட்ட பெறுமதி (Value Delivered):

சமூக முதலீடு:
**ரூ. 780.5 மில்லியன்.**

சுற்றுச்சூழல் தாக்கம் (தவிர்க்கப்பட்ட $CO_2e$): **14.4 $tCO_2e$**

நிலைத்தன்மை எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல் (பக்கங்கள் 153-160).

**மூலோபாயம் :**

### மூலதனப் பரிமாற்றங்கள்

**குறுகிய காலம்:**

செயல்பாட்டுத் தடங்கல்கள், வள ஒதுக்கீடு மற்றும் திட்டங்களுக்கான முதலீடுகள் பாதிப்பது

**நீண்ட காலம்:**

சமூகம், அறிவு மற்றும் சுற்றுச்சூழல் ரீதியான நன்மைகள் மேம்படுத்துவது.

**மீண்டெழுந்தன்மை கட்டியெழுப்பப்படுவது**

## வணிகப் பங்காளர்கள் மற்றும் வழங்குநர்கள்

உறவின் பலம்: **வலுவானது**

வங்கியானது செயல்பாட்டு வழங்கலுக்கு ஆதரவளிக்கும் உள்ளூர் மற்றும் உலகளாவிய வழங்கல் தரப்பினர், சேவை வழங்குநர்கள் மற்றும் தொடர்பு வங்கிப் பங்காளர்களுடன் உறவுகளைப் பேணுகிறது.

SDGs

| எதிர்பார்ப்புகள் | ஈடுபாடு | பதிலிறுப்பு: |
|---|---|---|
| • வெளிப்படையான தெரிவு செயல்முறைகள்.<br>• போட்டித்தன்மை மிக்க மற்றும் நியாயமான விலையிடல்.<br>• சரியான நேரத்திலான கொடுப்பனவுகள்.<br>• அறநெறி சார்ந்த மற்றும் பொறுப்பான கொள்முதல்.<br>• கொடுக்கல்வாங்கல் எளிமை. | • தொடர்ச்சியான எழுத்து மூலமான தொடர்பாடல். O<br>• கிரமமான கூட்டங்கள். P<br>• காலமுறை ஏலச் செயல்முறைகள் P<br>• நிதி அறிக்கைகள் மற்றும் ஆண்டறிக்கைகள். QA<br>• செய்தி அறிவிப்புகள் மற்றும் வெளிப்படுத்தல்கள். O | • வெளிப்படையான ஒப்பந்த மற்றும் மதிப்பீட்டுச் செயல்முறைகளை நடைமுறைப்படுத்துதல்.<br>• நடப்பு ஆண்டில் கொடுப்பனவு முறிவுகள் எதுவும் இல்லை.<br>• கொள்முதல் செயல்முறைகளின் தன்னியக்கமாக்கல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல்.<br>• வழங்கல் தரப்பினர் மீதான ஆளுகை மற்றும் மேற்பார்வைக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துதல். |

| வழங்கப்பட்ட பெறுமதி | | | மூலோபாயம் : |
|---|---|---|---|
| வழங்கல் தரப்பினருக்கான மொத்தக் கொடுப்பனவுகள்: **ரூ. 10.7 பில்லியன்.** | செயலில் உள்ள வழங்கல் தரப்பினர் தளம்: **851.** | நிலைத்தன்மை *எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல் (பக்கங்கள் 153-160).* | |

| மூலதனப் பரிமாற்றங்கள் | | |
|---|---|---|
| **குறுகிய காலம்:** | **நீண்ட காலம்:** | **மீண்டெழுந்தன்மை கட்டியெழுப்பப்படுவது** |
| செயல்பாட்டுச் செலவுகள் மற்றும் நடைமுறை மூலதன ஒதுக்கீடு ஆகியவை பாதிப்பது | வலுப்படுத்தப்பட்ட வழங்கல் சங்கிலி மீள்திறன் மற்றும் உள்ளூர் பொருளாதாரப் பங்களிப்பு ஆகியவை மேம்படுத்துவது | |

## ஒழுங்குமுறைப்படுத்துநர்கள்

உறவின் பலம்: **வலுவானது**

வங்கியின் முக்கிய ஒழுங்குமுறை அமைப்புகளில் இலங்கை மத்திய வங்கி, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, கொழும்பு பங்குச் சந்தை மற்றும் தொடர்புடைய வெளிநாட்டு ஒழுங்குமுறை அதிகாரசபைகள் ஆகியவை உள்ளடங்குகின்றன.

SDGs

| எதிர்பார்ப்புகள் | ஈடுபாடு | பதிலிறுப்பு: |
|---|---|---|
| • ஒழுங்குமுறை இணக்கப்பாடு.<br>• வலுவான ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவம்.<br>• நிதி அமைப்பின் உறுதிப்பாடு.<br>• தேசிய பொருளாதார முன்னுரிமைகளுக்கான ஆதரவு. | • ஒழுங்குமுறை அறிக்கையிடல். OQ<br>• நேரடி மேற்பார்வைக் கூட்டங்கள். O<br>• தொழில்துறை மன்றங்களில் பங்கேற்பு. P<br>• ஆண்டறிக்கைகள் மற்றும் ஏனைய வெளியீடுகள். QA | • ஒழுங்குமுறை அறிக்கைகளைச் சரியான நேரத்தில் சமர்ப்பித்தல்.<br>• முன்மதியுடைய மற்றும் மூலதனத் தேவைகளைப் பின்பற்றுதல்.<br>• கட்டாய கடன் வழங்கல் வழிகாட்டல்களுக்கு இணங்குதல்.<br>• வலுப்படுத்தப்பட்ட ஆளுகை மற்றும் இடர் மேற்பார்வைக் கட்டமைப்புகள்.<br>• பாதிக்கப்படக்கூடிய மற்றும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய துறைகளுக்குத் தொடர்ச்சியான ஆதரவை வழங்குதல். |

| வழங்கப்பட்ட பெறுமதி | | | மூலோபாயம் : |
|---|---|---|---|
| தொழில்துறை ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தைப் பேணுதல். | முக்கியமான ஒழுங்குமுறை மீறல்கள்: ஏதுமில்லை. | *இணக்கப்பாட்டு இணைப்புகள் (பக்கங்கள் 405-454).* | |

| மூலதனப் பரிமாற்றங்கள் | | |
|---|---|---|
| **குறுகிய காலம்:** இணக்கப்பாடு மற்றும் மனிதவள ஆற்றலைக் கட்டியெழுப்புவதில் செய்யப்படும் முதலீடுகள் பாதிப்பது | **நீண்ட காலம்:** வாடிக்கையாளர் நம்பிக்கை, உள்ளடக்கம் மற்றும் டிஜிட்டல் திறன் ஆகியவை மேம்படுத்துவது | **மீண்டெழுந்தன்மை கட்டியெழுப்பப்படுவது** |

# பொருண்மை மதிப்பீடு

GRI 3-1,2

**வங்கியின் செயல்பாடுகள் தொடர்ந்து தேசிய பொருளாதார மற்றும் சமூக முன்னுரிமைகளை ஆதரிப்பதால், முக்கியமான நிலைத்தன்மை பொருண்மை விடயங்களைப் புரிந்துகொள்வதும் அவற்றை நிவர்த்தி செய்வதும் அதன் பெறுமதி உருவாக்கச் செயல்முறைக்கு அவசியமானதாக அமைகிறது. மாறிவரும் பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகள், ஒழுங்குமுறை முன்னேற்றங்கள் மற்றும் உலகளாவிய அறிக்கையிடல் தரநிலைகளுக்கு ஏற்ப, நிலைத்தன்மை தலைப்புகளை மீண்டும் பார்வையிடவும் முன்னுரிமைப்படுத்தவும் வங்கி இந்த ஆண்டில் ஒரு விரிவான பொருண்மை மதிப்பீட்டை மேற்கொண்டது. "இரட்டைப் பொருண்மை" (கொள்கையினால் வழிநடத்தப்பட்ட இந்த மதிப்பீடு, தாக்கப் பொருண்மை, வங்கியானது பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் சமூகம் ஆகியவற்றில் ஏற்படுத்தும் விளைவுகள், மற்றும் நிதிப் பொருண்மை, இந்த நிலைத்தன்மை காரணிகள் வங்கியின் செயல்திறன், மீள்திறன் மற்றும் நீண்டகால பெறுமதி உருவாக்கத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் ஆகிய இரண்டையும் கருத்தில் கொண்டது.**

நிதிப் பொருண்மை
(வெளியிலிருந்து - உள்ளே)

இரட்டைப் பொருண்மை

தாக்கப் பொருண்மை
(உள்ளிருந்து - வெளியே)

குறுகிய, நடுத்தர அல்லது நீண்ட காலத்தில் வங்கியின் நிதிச் செயல்திறன், நிலை, பணப்புழக்கம் அல்லது மூலதனத்திற்கான அணுகல் ஆகியவற்றைப் பாதிக்கக்கூடிய பேண்தகு சிக்கல்களிலிருந்து எழும் நிதி இடர்கள் மற்றும் வாய்ப்புகள்.

பொருளாதாரம், சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் முக்கிய பங்குதாரர் குழுக்கள் மீது இலங்கை வங்கியின் உண்மையான மற்றும் சாத்தியமான நேர்மறை மற்றும் எதிர்மறை விளைவுகள்.

## பொருண்மை மதிப்பீட்டு முறைமை

தொடர்பு மற்றும் முழுமையை உறுதி செய்வதற்காக இந்த மதிப்பீடு உள்நிலை பகுப்பாய்வையும் வெளிநிலை நுண்ணறிவுகளையும் இணைத்தது. முக்கிய படிகளில் துறைசார் மற்றும் பேரண்டப்பொருளாதாரப் போக்குகளின் மதிப்பாய்வு, சக நிறுவனங்களுடன் ஒப்பிடுதல் மற்றும் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், ஒழுங்குமுறை அமைப்புகள், பங்குதாரர்கள் மற்றும் நிதி வழங்குநர்கள், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் வணிகப் பங்காளர்கள் போன்ற பங்குதாரர்களுடனான ஈடுபாடு ஆகியவை உள்ளடங்கும். சாத்தியமான பேண்தகு விடயங்கள் பொருளாதாரம், சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை பரிமாணங்களில் கருத்திற்கொண்டு இரட்டைப் பொருண்மை நோக்கில் அவற்றின் முக்கியத்துவத்திற்காக மதிப்பிடப்பட்டன. பின்னர், தலைப்புகள் அவற்றின் ஒப்பீட்டுத் தாக்கம் மற்றும் நிதித் தொடர்பின் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தப்பட்டு தரமிடப்பட்டன. முடிவுகள் முகாமைத்துவச் செயற்குழுவினால் மதிப்பாய்வு செய்யப்பட்டு சரிபார்க்கப்பட்டதுடன், பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டன் இது வங்கியின் மூலோபாய திசை மற்றும் பெறுமதி உருவாக்க மாதிரியுடன் சீரமைக்கப்படுவதை உறுதி செய்தது.

### அடையாளங்காணுதல்:

உள் மற்றும் வெளிச் சூழல்களின் விரிவான மீளாய்வைப் பயன்படுத்தி அடையாளங்காணுதல்.

### முக்கியத்துவத்தை மதிப்பிடுதல்:

"வணிகத்திற்கான முக்கியத்துவம்", "பங்குதாரர்கள்" மற்றும் "பெறுமதிச் சங்கிலி" ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு தலைப்பும் வங்கிக்கு எவ்வளவு முக்கியமானது என்பதைக் கருத்திற்கொண்டு, வங்கி ஒவ்வொரு தலைப்பின் மூலோபாய முக்கியத்துவத்தையும் மதிப்பிடுகிறது.

### முன்னுரிமைப்படுத்துதல்:

ஒவ்வொரு பங்குதாரர் குழுவின் ஒப்பீட்டு முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்வதன் மூலமும், வங்கியின் பெறுமதி உருவாக்கம் மற்றும் நீண்டகாலப் பேண்தகைமை மீதான பொருளாதார, சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை விளைவுகள் உட்பட ஒவ்வொரு தலைப்பின் ஒட்டுமொத்த வணிகத் தாக்கத்தை மதிப்பிடுவதன் மூலமும் தலைப்புகள் முன்னுரிமைப்படுத்தப்படுகின்றன.

### கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல்:

செயல்பாட்டுச் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப வங்கி அதன் பொருண்மை தலைப்புகளைத் தொடர்ந்து மதிப்பாய்வு செய்வதுடன், முன்னேற்றத்தைப் பணிப்பாளர் சபைக்கும் பங்குதாரர்களுக்கும் அறிக்கையிடுகிறது.

## பொருண்மைத் தலைப்புகள்

2025 ஆம் ஆண்டில், நான்கு பொருளாதார, சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை பரிமாணங்களில் 10 முக்கிய பொருண்மை தலைப்புகளை வங்கி அடையாளங்கண்டுள்ளது. இவை வங்கியின் மிகவும் குறிப்பிடத்தக்க தாக்க மற்றும் செல்வாக்கு விடயங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், பங்குதாரர்களுடனான தொடர்பு மற்றும் நிதிச் செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளன.

நான்கு கருப்பொருள் கூட்டங்களைச் சுற்றி அமைக்கப்பட்ட முந்தைய கட்டமைப்போடு ஒப்பிடும்போது, திருத்தப்பட்ட இந்த மாதிரியானது செயல்திறன், ஆளுகை, பங்குதாரர் நம்பிக்கை மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்புகளை முன்னிலைப்படுத்தும் ஒரு ஒருங்கிணைந்த பொருளாதார, சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை நோக்கைக் கையாள்கிறது. இது சிக்கல் அடிப்படையிலான குழுவாக்கத்திலிருந்து பேண்தகைமை பற்றிய ஒரு முழுமையான பார்வைக்கான மூலோபாய மாற்றத்தைக் குறிக்கிறது மேலும் இது மீள்திறன், அறநெறி நடத்தை, பொறுப்பான நிதியளிப்பு மற்றும் கூட்டு முன்னேற்றம் ஆகியவற்றை வலியுறுத்துகிறது.

# பொருண்மை மதிப்பீடு

டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் உருமாற்றம், வணிக அறநெறிகள் மற்றும் ஒழுங்குமுறை இணக்கப்பாடு, பொறுப்பான நிதியளிப்பு, மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் பசுமை இல்ல வாயு உமிழ்வுகள் போன்ற முக்கிய கருப்பொருள்கள் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளன. இது வளர்ந்து வரும் இடர்கள், வாய்ப்புகள் மற்றும் மாறிவரும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுக்கு வங்கியின் ஆக்கபூர்வமான பதிலிறுப்பைப் பிரதிபலிக்கிறது. இந்த சுத்திகரிக்கப்பட்ட கட்டமைப்பானது, தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகள், உலகளாவிய தரநிலைகள் (GRI மற்றும் SLFRS S1 மற்றும் S2) மற்றும் பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகளுடனான சீரமைப்பை வலுப்படுத்துவதுடன், பேண்தகைமையை நீண்டகால பெறுமதி உருவாக்கத்தின் முக்கிய உந்துசக்தியாக நிலைநிறுத்துகிறது.




## பொருண்மை கட்டமைப்பின் பரிணாமம்

முந்தைய நான்கு கருப்பொருள் கூட்டங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட 10 பொருண்மை தலைப்புகளுக்கான மாற்றத்தை கீழே உள்ள வரைபடம் விளக்குகிறது. இது முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய பகுதிகளில் அதிக தெளிவு மற்றும் வரைவிலக்கணத்தை வழங்கும் அதேவேளையில், கவனத்தின் தொடர்ச்சியையும் வெளிப்படுத்துகிறது.

**M1** – மாற்றம்பெற்றுவரும் சூழலுக்கு ஏற்ப மாற்றியமைத்தல்

- பேரண்டப்பொருளாதார முன்னேற்றங்கள் மற்றும் கொள்கைப் போக்குகள்.
- வாடிக்கையாளர் அனுபவம்.
- வாடிக்கையாளர் தரவு தனியுரிமை மற்றும் இணையப் பாதுகாப்பு.
- டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தொழில்நுட்பம்.

**M2** – பொறுப்பான வளர்ச்சியைச் சாத்தியமாக்கல்

- பொறுப்பான வங்கித்தொழில்.
- வாடிக்கையாளர் ஆதரவு மற்றும் வணிக மறுமலர்ச்சி.
- வர்த்தகநாம நற்பெயர்.
- பொறுப்பான கொள்முதல்.
- இலஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் எதிர்ப்பு.
- ஒழுங்குமுறை, சுற்றுச்சூழல், ஆளுகை மற்றும் இணக்கப்பாடு.

**M3** – எமது மக்கள் மீது அக்கறை கொள்ளுதல்

- ஊழியர் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு.
- திறமை முகாமைத்துவம் மற்றும் தொழிலாளர் உறவுகள்.
- பல்வகைமை மற்றும் சம வாய்ப்புகள்.
- தொழிலாளர் உரிமைகள் (வெளி மூலங்களிலிருந்தானவர்கள்/ஒப்பந்தக்காரர்கள்).

**M4** – பேண்தகு வணிகச் செயல்பாடுகளை வளர்த்தெடுத்தல்

- நிதிச் செயலாற்றம்
- சமூக-பொருளாதார பங்களிப்பு மற்றும் நிதி உள்ளடக்கம்.
- காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் தடம்.

- **M1** பொருளாதாரச் செயலாற்றம்
- **M2** டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் உருமாற்றம்.
- **M3** வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் சந்தைப்படுத்தல்.
- **M4** வணிக அறநெறிகள் மற்றும் ஒழுங்குமுறை இணக்கப்பாடு.
- **M5** ஊழியர் உறவுகள்.
- **M6** பொறுப்பான நிதியளிப்பு.
- **M7** காலநிலை மாற்றம்/ பசுமை இல்ல வாயு (GHG) உமிழ்வுகள்.
- **M8** தொழில்துறை கூட்டாண்மைகள் மற்றும் ஒத்துழைப்புகள்.
- **M9** பொறுப்பான கொள்முதல் மற்றும் வள முகாமைத்துவம்.
- **M10** சமூக அபிவிருத்தி மற்றும் ஈடுபாடு.

**பரிமாணங்கள்:** பொருளாதாரம் | சுற்றுச்சூழல் | சமூகம் | ஆளுகை

## பொருண்மைத் தலைப்புகளும் இலங்கை வங்கியின் (BOC) மூலோபாயமும் GRI 3-3

வங்கியின் பரந்த நோக்கு மற்றும் பங்குதாரர்களுக்குப் பேண்தகு பெறுமதியை வழங்குவதற்கான அதன் உறுதிப்பாட்டுடன் சீரமைக்கப்பட்டுள்ள கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருண்மை தலைப்புகள், நீண்டகால செயல்திறன் மற்றும் மீள்திறனில் மிகவும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் பகுதிகளைப் பிரதிபலிக்கின்றன. இந்தப் பொருண்மை தலைப்புகள் வங்கியின் மூலோபாயம், வள ஒதுக்கீடு மற்றும் பேண்தகு பெறுமதியை உருவாக்குவதற்காக மேற்கொள்ளப்படும் முக்கிய முயற்சிகளையும் வடிவமைக்கின்றன. இந்தப் அட்டவணையானது ஒவ்வொரு முன்னுரிமையின் பின்னணியிலுள்ள தர்க்கம், மூலோபாய பதிலிறுப்பு மற்றும் பங்குதாரர் தொடர்பு ஆகியவற்றை ஒன்றிணைத்து, வங்கியின் மூலோபாய நிகழ்ச்சி நிரலுக்குள் பொருண்மை விடயங்கள் எவ்வாறு உள்வாங்கப்பட்டுள்ளன என்பதை விளக்குகிறது.

| பொருண்மைத் தலைப்புகள் | பொருண்மைக்கான காரணம் | மூலோபாய பதிலிறுப்பு | தாக்கத்திற்கு உள்ளாகும் மூலதனங்கள் | தாக்கத்திற்கு உள்ளாகும் பங்குதாரர்கள் | தாக்கத்திற்கு உள்ளாகும் SDG |
|---|---|---|---|---|---|
| M1<br>**பொருளாதாரச் செயல்திறன்**<br>*GRI 201, 202, 203* | இலாபத்தன்மை மற்றும் செயல்பாட்டுத் திறனைப் பேணுவது நிதி மீள்திறனை உறுதி செய்வதுடன், தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளை ஆதரிக்கிறது மற்றும் பங்குதாரர்களுக்கான நீண்டகால பெறுமதி உருவாக்கத்தைச் சாத்தியமாக்குகிறது. | பெறுமதி சேர் அறிக்கை (பக்கம் 74), முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு (பக்கங்கள் 107-160). | | | |
| M2<br>**டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் நிலைமாற்றம்**<br>*SASB FN-CB-230a.1, SASB FN-CB-230a.2, GRI 418* | டிஜிட்டல் முறைமைகளில் முதலீடு செய்வது செயல்பாட்டுத் திறன், வாடிக்கையாளர் வசதி மற்றும் இணையப் பாதுகாப்பை மேம்படுத்துகிறது. இது வேகமாக மாறிவரும் நிதிச் சூழலில் வங்கி போட்டித்தன்மையுடனும் மீள்திறனுடனும் இருக்க உதவுகிறது. | டிஜிட்டல் அனுபவங்களை இயலச்செய்தல் (பக்கங்கள் 148-152) | | | |
| M3<br>**வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் சந்தைப்படுத்தல்**<br>*GRI 418* | நியாயமான, வெளிப்படையான மற்றும் உடனடி பதிலிறுப்பு கொண்ட வாடிக்கையாளர் சேவையை வழங்குவது நம்பிக்கை மற்றும் விசுவாசத்தை வலுப்படுத்துகிறது அதே நேரத்தில் பொறுப்பான சந்தைப்படுத்தல் மற்றும் குறைகளை நிர்வகித்தல் ஆகியவை ஒருமைப்பாடு மற்றும் பொறுப்புக்கூறலைப் பேணுகின்றன. | ஒவ்வொரு வாடிக்கையாளரின் பயணத்தையும் வடிவமைத்தல் (பக்கங்கள் 132-137). | | | |
| M4<br>**வணிக அறநெறிகள் மற்றும் ஒழுங்குமுறை இணக்கப்பாடு**<br>*SASB FN-CB-510a.2*<br>*GRI 205, 207* | ஒருமைப்பாடு, வெளிப்படைத்தன்மை மற்றும் இணக்கப்பாட்டைப் பேணுவது பங்குதாரர்களின் நம்பிக்கையைப் பாதுகாக்கிறது, நற்பெயர் இடர்களைக் குறைக்கிறது மற்றும் மாறிவரும் ஒழுங்குமுறை நிலைமைகளின் கீழ் பேண்தகு வணிக வளர்ச்சியை உறுதி செய்கிறது. | ஆளுகை மற்றும் இடர் (பக்கங்கள் 162-179) | | | |
| M5<br>**ஊழியர் உறவுகள்**<br>*GRI 202, GRI 401, GRI 402, GRI 403, GRI 404, GRI 405, GRI 407, GRI 408, GRI 409* | ஊக்குவிக்கப்பட்ட மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பணியாளர் குழு, சிறந்த சேவை வழங்கலுக்கு மிக அவசியமானது. திறமைகளை ஈர்க்கவும், தக்கவைக்கவும் மற்றும் வலுப்படுத்தவும் நியாயமான வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு மற்றும் ஊழியர் நல்வாழ்வு ஆகியவற்றுக்கு வங்கி முன்னுரிமை அளிக்கிறது. | நீடித்த செயல்திறனுக்காக அனைவரையும் உள்ளடக்கிய தொழிற்படை (பக்கங்கள் 138-147). | | | |

# பொருண்மை மதிப்பீடு

| பொருண்மைத் தலைப்புகள் | பொருண்மைக்கான காரணம் | மூலோபாய பதிலிறுப்பு | தாக்கத்திற்கு உள்ளாகும் மூலதனங்கள் | தாக்கத்திற்கு உள்ளாகும் பங்குதாரர்கள் | தாக்கத்திற்கு உள்ளாகும் SDG |
|---|---|---|---|---|---|
| M6<br>பொறுப்பான நிதியிடல்<br>*GRI 406* | கடன் வழங்கல் மற்றும் முதலீட்டில் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை காரணிகளை ஒருங்கிணைப்பது, நிதி உள்ளடக்கம், பொறுப்பான கடன் நடைமுறைகள் மற்றும் சமூகம் சார்ந்த பேண்தகு பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிக்கிறது. | பேண்தகு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல் (பக்கங்கள் 153-160) | | | |
| M7<br>காலநிலை மாற்றம் மற்றும் பசுமை இல்ல வாயு உமிழ்வுகள்<br>*GRI 302*<br>*GRI 305* | காலநிலை இடர்களைக் கையாளுதல் மற்றும் பசுமை நிதியளிப்பை ஊக்குவித்தல் ஆகியவை தேசிய காபனகற்றல்இலக்குகளை ஆதரிப்பதுடன், வங்கியின் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு மற்றும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துகின்றன. | பேண்தகு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல் (பக்கங்கள் 153-160). | | | |
| M8<br>தொழில்துறை கூட்டாண்மைகள் மற்றும் ஒத்துழைப்புகள் | தொழில்துறை பங்குதாரர்களுடன் ஒத்துழைப்பது அறிவுப் பகிர்வு, புத்தாக்கம் மற்றும் துறை சார்ந்த பேண்தகைமையை ஊக்குவிப்பதுடன், கூட்டு முன்னேற்றத்தை முன்னெடுப்பதில் வங்கியின் பங்கை வலுப்படுத்துகிறது. | பங்குதாரர் ஈடுபாடு (பக்கங்கள் 57-60). | | | |
| M9<br>பொறுப்பான கொள்முதல் மற்றும் வள முகாமைத்துவம்<br>*GRI 306*<br>*GRI 204* | அறநெறி சார்ந்த கொள்முதல், திறமையான வளப் பயன்பாடு மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு ஆகியவை சுற்றுச்சூழல் தாக்கங்களைக் குறைப்பதுடன், பேண்தகு மற்றும் வெளிப்படையான வழங்கல் சங்கிலி நடைமுறைகளை உறுதி செய்கின்றன. | பேண்தகு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல் (பக்கங்கள் 153-160) | | | |
| M10<br>சமூக அபிவிருத்தி மற்றும் ஈடுபாடு<br>*SASB FN-CB-240a.1,*<br>*SASB FN-CB-240a.2,*<br>*SASB FN-CB-240a.3,*<br>*SASB FN-CB-240a.4,*<br>*GRI 413* | உள்ளடக்கிய நிதியளிப்பு மற்றும் சமூக முயற்சிகள் மூலம் பின்தங்கிய சமூகங்களை ஆதரிப்பது, சமத்துவம், வாழ்வாதார மேம்பாடு மற்றும் வங்கியின் பரந்த சமூகத் தாக்கத்தை முன்னெடுத்துச் செல்கிறது. | பேண்தகு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல் (பக்கங்கள் 153-160). | | | |

# மூலோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

வங்கியின் மூலோபாயத் திட்டமிடல் கட்டமைப்பானது, பங்குதாரர்களின் மாறிவரும் எதிர்பார்ப்புகள் மற்றும் மாறும் சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப சுறுசுறுப்பாகவும் பதிலிறுப்பு வழங்கக்கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு விரிவான ஐந்தாண்டு மூலோபாயத் திட்டத்தின் கீழ் இயங்கும் வங்கி, அதன் நீண்டகால உருமாற்ற நிகழ்ச்சி நிரலுடன் சீரமைக்கப்படுவதை உறுதி செய்வதற்காக திட்டமிடல், செயல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல் ஆகிய கட்டமைக்கப்பட்ட சுழற்சியைப் பின்பற்றுகிறது. இத்திட்டம் ஆண்டுதோறும் சுழற்சி முறையில் மதிப்பாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படுகிறது, மேலாண்மையின் நுண்ணறிவுகளை உள்ளடக்கி, பணிப்பாளர் சபையின் மேற்பார்வையின் கீழ் இது மேற்கொள்ளப்படுகிறது. கிளைத் தலைமைத்துவம், வணிகம் சாரா பிரிவுகளின் தலைவர்கள், சிரேஷ்ட தலைமைத்துவம் மற்றும் சபையின் முன்னிலையில் நடத்தப்படும் இதன் உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வு, அர்த்தமுள்ள உரையாடல், நிறுவன சீரமைப்பு மற்றும் பகிரப்பட்ட உரிமையை வளர்க்கிறது. இந்த உள்ளடக்கிய மற்றும் பங்கேற்பு அணுகுமுறை ஈடுபாட்டை வலுப்படுத்துவதுடன், மூலோபாய முன்னுரிமைகளை திறம்பட செயல்படுத்துவதற்கான கூட்டுப் பொறுப்புணர்வையும் உறுதிப்படுத்துகிறது.

இந்த நன்கு நிறுவப்பட்ட மற்றும் ஒழுக்கமான செயல்முறையானது, சீரான செயல்திறனைத் தக்கவைப்பதற்கும், நாட்டின் மிகப்பெரிய மற்றும் மிகவும் நம்பகமான வங்கி நிறுவனமாக வங்கியின் நிலையை வலுப்படுத்துவதற்கும் கருவியாக உள்ளது. வலுவான செயல்பாட்டை உறுதி செய்வதற்காக, பொது மேலாளர் தலைமையிலான மற்றும் கூட்டாண்மை மேலாண்மை குழுவை உள்ளடக்கிய கூட்டாண்மை மூலோபாய மதிப்பாய்வு குழு, மூலோபாய முயற்சிகளின் மீது செறிவான மேற்பார்வையை வழங்குகிறது. வாராந்த, மாதாந்த, காலாண்டு மற்றும் ஆண்டிற்கான மீளாய்வுகள் மூலம் சிரேஸ்ட மற்றும் செயல்பாட்டு மட்டங்களில் செயல்திறன் முறையாகக் கண்காணிக்கப்படுகிறது. இந்த ஆலோசனைக் கீழிருந்து மேலான ஆளுகை கட்டமைப்பானது, சந்தை முன்னேற்றங்களுக்கு வங்கி முன்கூட்டியே பதிலளிக்கவும், வளர்ந்து வரும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளவும், அதன் மூலோபாய நோக்கங்களை வெற்றிகரமாக நிறைவேற்றவும் உதவுகிறது, அதன் மூலம் வங்கித்தொழில் துறையில் தனது தலைமைத்துவ நிலையை வலுப்படுத்துகிறது.

## மூலோபாய சூழல் மற்றும் திசை

இலங்கை வங்கியின் மூலோபாய திசையானது அதன் நோக்கு, குறிக்கோள் மற்றும் அடிப்படை விழுமியங்களால் வழிநடத்தப்படுகிறது. இது அதன் நீண்டகால மூலோபாயத்தின் வளர்ச்சி மற்றும் பேண்தகு பெறுமதி உருவாக்க அணுகுமுறைக்கான அடித்தளத்தை வழங்குகிறது.

இந்த அடித்தளத்தின் மீது கட்டமைக்கப்பட்ட வங்கியின் மூலோபாயமானது, அதன் மூலோபாய முன்னுரிமைகள் மற்றும் செயல்பாட்டு கவனத்தை வரையறுக்கும் ஐந்து முக்கிய தூண்களில் நங்கூரமிடப்பட்டுள்ளது. இந்தத் தூண்கள் இலங்கையின் மிகப்பெரிய வர்த்தக வங்கி மற்றும் சந்தை சார்ந்த நிதி நிறுவனம் என்ற வங்கியின் இரட்டைப் வகிபாகங்களை பிரதிபலிக்கின்றன, அதே வேளையில் அதன் செயல்பாடுகள் முழுவதும் மீள்திறன், போட்டித்தன்மை மற்றும் நீண்டகால பெறுமதி உருவாக்கத்தை வலியுறுத்துகின்றன.

| உறுதிப்பாடு, ஆளுகை மற்றும் பேண்தகு வளர்ச்சி | வாடிக்கையாளர் அனுபவத்தில் சிறந்து விளங்குதல் | டிஜிட்டல் மேன்மை | நன்மை பயக்கும் கடன் கலாச்சாரம் மற்றும் ஆரோக்கியமான கடன் பட்டியல். | உயர் செயல்திறன் கொண்ட குழுவை உருவாக்குதல் |
|---|---|---|---|---|

## இலங்கை வங்கியின் மூலோபாயத்தை உந்தும் கொள்கைகள்

பேரண்டப்பொருளாதார மீட்புப் போக்குகள், மிதமான தனியார் துறை கடன் தேவை, மாறிவரும் ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் சந்தையில் அதிகரித்து வரும் போட்டி ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, 2024-2028 மூலோபாயத் திட்டத்தின் விரிவான மதிப்பாய்வைத் தொடர்ந்து வங்கியின் ஐந்தாண்டு மூலோபாயத் திட்டம் (2025-2029) முன்னோக்கி நகர்த்தப்பட்டது.

மேலே காணப்படும் நிறுவப்பட்ட ஐந்து தூண்களின் அடிப்படையில், 2026-2030 மூலோபாய வரைபடமானது ஆறாவது மூலோபாயத் தூணாக ஆளுகை மற்றும் இடர் என்பதை அறிமுகப்படுத்துகிறது இது மேற்பார்வை, பொறுப்புக்கூறல் மற்றும் இடர் முகாமைத்துவத்தை வலுப்படுத்துகிறது, இது நீண்டகால பெறுமதியைப் பாதுகாப்பதற்கான பங்குதாரர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. இது மாறிவரும் சந்தைகள், ஒழுங்குமுறை மாற்றங்கள் மற்றும் தொழில்நுட்ப இடையூறுகளுக்கு மத்தியில் வங்கி சுறுசுறுப்பாகச் செயல்பட உதவும்.



# மூலோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

## மூலோபாய திட்டமிடல் கட்டமைப்பு

வங்கியின் மூலோபாய திட்டமிடல் கட்டமைப்பானது ஒரு கட்டமைக்கப்பட்ட மற்றும் ஒழுக்கமான வழிமுறையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. இது நோக்கத்தின் தெளிவு, தகவலறிந்த நிறைவேற்றல், பயனுள்ள செயல்படுத்தல் மற்றும் தொடர்ச்சியான மேம்பாடு ஆகியவற்றை உறுதி செய்கிறது. ஒரு ஒருங்கிணைந்த ஆளுகை மற்றும் செயல்பாட்டு மாதிரியானது, மூலோபாயம் திறம்பட வழிநடத்தப்படுவதையும், கண்காணிக்கப்படுவதையும் மற்றும் சுத்திகரிக்கப்படுவதையும் உறுதி செய்கிறது.




## மூலோபாய நிலைப்படுத்தல் மற்றும் மூலோபாய பதிலிறுப்பு

### சூழலில் இருந்து நடவடிக்கையாக

வங்கியின் மூலோபாயமானது வெளிச் சந்தை நிலைமைகள் மற்றும் உள் யதார்த்தங்களின் சமநிலையான மதிப்பீட்டினால் வடிவமைக்கப்படுகிறது. மூலோபாய SWOT பகுப்பாய்வு செயல்பாட்டுச் சூழலைப் பாதிக்கும் முக்கிய காரணிகளை முன்னிலைப்படுத்துகிறது. அதேவேளையில், மூலோபாய பதிலிறுப்பு இந்த நுண்ணறிவுகள் எவ்வாறு செறிவான முன்னுரிமைகள், மூலதன ஒதுக்கீடு மற்றும் நிறைவேற்று ஒழுக்கம் ஆகியவற்றிற்கு மாற்றப்படுகின்றன என்பதை விளக்குகிறது.

## வங்கி எங்கே இருக்க விரும்புகிறது:

**சிறந்த வாடிக்கையாளர் சேவை:**
நேரடி மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள் ஊடாக சீரான, உயர்தர சேவையை வழங்குதல்.

**சந்தை தலைமைத்துவம்:**
வர்த்தகநாம வலிமை, அளவு மற்றும் வாடிக்கையாளர் சென்றடைவு ஆகியவற்றைப் பயன்படுத்தி தலைமைத்துவத்தை வலுப்படுத்துதல்.



**டிஜிட்டல் தலைமைத்துவம்:**
மேம்பட்ட டிஜிட்டல் தீர்வுகளின் மூலம் வாடிக்கையாளர் மற்றும் ஊழியர் அனுபவங்களை மேம்படுத்துதல்.

**பேண்தகு வங்கித்தொழில்:**
பொறுப்பான வங்கி நடைமுறைகள் மூலம் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ளுதல்.

## சூழலை அமைத்தல்:

### பலங்கள் - உள்ளக இயலச்செய்பவை

**வங்கி எதனால் வலுவான இருப்பிடத்தைக் கொண்டுள்ளது**

- இலாபம், சொத்துக்கள், கடன்கள் மற்றும் வைப்புகளில் சந்தை தலைமைத்துவத்துடன் கூடிய முதன்மை வர்த்தகநாமம்.
- அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனம் என்ற வகையில் பொதுமக்களின் அதிகப்படியான நம்பிக்கை.
- சுமார் 76% வாடிக்கையாளர் ஊடுருவலுடன் கூடிய பரந்த தயாரிப்பு சொத்துப்பட்டியல்.
- விரிவான உள்நாட்டுக் கிளைகள், சர்வதேசக் கிளைகள் மற்றும் தொடர்பு வங்கி வலையமைப்பு.
- சர்வதேச ரீதியாக தரம் நிர்ணயிக்கப்பட்ட ஒரே உள்நாட்டு வங்கி. இது நம்பகத்தன்மை மற்றும் மீள்திறனை வலுப்படுத்துகிறது.

### பலவீனங்கள் - உள்நிலைக் கட்டுப்பாடுகள்

**மாற்றத்தின் வேகம் மற்றும் வரிசைப்படுத்தலை வடிவமைப்பவை:**

- தொடர்ச்சியான மீட்பு கவனத்தை கோரும் உயர்ந்த மட்டத்திலான கட்டம் 3 வெளிப்பாடுகள்.
- வேகமான விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்தும் மூலதனக் கட்டுப்பாடுகள்.
- கடுமையான கொள்முதல் மற்றும் அனுமதி செயல்முறைகள்.
- செயல்திறனைப் பாதிக்கும் சிதறுப்பட்ட மற்றும் பழைய தகவல் தொழில்நுட்ப அமைப்புகள்.

### வாய்ப்புகள் - வெளிநிலை வளர்ச்சி உந்துசக்திகள்

**மூலோபாய கவனம் மற்றும் முதலீடு எங்கே செலுத்தப்படுகிறது:**

- டிஜிட்டல் சேவைகள், சுகாதாரம், சுற்றுலா, கட்டுமானம் மற்றும் உட்கட்டமைப்புத் துறைகளில் வளர்ச்சி
- வலுவான சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) எதிர்பார்ப்புகளால் அதிகரித்து வரும் ஆர்வம்
- பேண்தகு மற்றும் பசுமை நிதியுதவிக்கான விரிவடைந்து வரும் தேவை
- டிஜிட்டல் வங்கிச் சேவைகளை நோக்கிய வேகமான மாற்றம்
- பாரிய அளவிலான அபிவிருத்திகள் (உதாரணமாக: கொழும்பு துறைமுக நகரம்) மற்றும் பொருளாதார மீட்சி
- செயல்திறன் மற்றும் தீர்மானம் எடுப்பதை மேம்படுத்த செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் பகுப்பாய்வுக் கருவிகள்

### அச்சுறுத்தல்கள் - வெளிவாரியான இடர்கள்

**உந்துதலான கண்காணிப்பு மற்றும் தணிப்பு தேவைப்படுபவை:**

- அதிகரித்து வரும் இணையப் பாதுகாப்பு மற்றும் தரவு தனியுரிமை இடர்கள்
- வங்கிகள், நிதித் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் புதிய நுழைவாயில்களிடமிருந்து தீவிரமடையும் போட்டி
- உயர்வடைந்த நிதிக்குற்றங்கள் மற்றும் பணம் தூயதாக்குதல் இடர்கள்.
- சொத்துக்கள் மற்றும் நீண்டகால உறுதிப்பாட்டைப் பாதிக்கும் காலநிலை தொடர்பான இடர்கள்.

தொழிற்பாட்டு சூழல் பகுதியை பார்க்கவும் (பக்கம் 52-56)

## வங்கியின் மூலோபாய பதிலிறுப்பை நிறுவுதல்

### உறுதிப்பாடு, ஆளுகை மற்றும் பேண்தகு வளர்ச்சி

**மைய நடவடிக்கைகள்:**

- மூலதனம் மற்றும் திரவத்தன்மை மீள்திறனை வலுப்படுத்துகிறது.
- ஆளுகை ஒழுக்கம் மற்றும் இடர் மேற்பார்வையை உறுதிப்படுத்துகிறது.
- பேண்தகைமையை மூலோபாயம் மற்றும் செயல்பாடுகளில் ஒருங்கிணைக்கிறது.

### மேன்மையான வாடிக்கையாளர் சேவை

**மைய நடவடிக்கைகள்:**

- நேரடி மற்றும் டிஜிட்டல் ஊடகங்களில் சேவைத் தரத்தை மேம்படுத்துகிறது.
- அணுகல்தன்மை, வசதி மற்றும் பதிலிறுப்பு திறனை மேம்படுத்துகிறது.
- வாடிக்கையாளர் நம்பிக்கை, விசுவாசம் மற்றும் ஈடுபாட்டை ஆழமாக்குகிறது.

### டிஜிட்டல் மேன்மை

**மைய நடவடிக்கைகள்:**

- மையமான தளங்கள் மற்றும் டிஜிட்டல் சேனல்களை நவீனப்படுத்துகிறது
- இணையப் பாதுகாப்பு மற்றும் அமைப்பின் மீள்திறனை வலுப்படுத்துகிறது
- தரவு அடிப்படையிலான தீர்மானம் எடுத்தல் மற்றும் செயல்திறன் ஆதாயங்களைச் சாத்தியமாக்குகிறது

### நன்மை பயக்கும் கடன் கலாச்சாரம் மற்றும் ஆரோக்கியமான கடன் சொத்துப்பட்டியல்

**மைய நடவடிக்கைகள்:**

- முன்மதி மிக்க கடன் வழங்கல் மற்றும் சொத்து தர முகாமைத்துவத்தை ஊக்குவிக்கிறது
- மீட்புக் கட்டமைப்புகள் மற்றும் கண்காணிப்பை வலுப்படுத்துகிறது
- சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் முன்னுரிமைத் துறை கடன் வழங்கல் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஆதரிக்கிறது

### உயர் செயல்திறன் கொண்ட குழுவை உருவாக்குதல்

**மைய நடவடிக்கைகள்:**

- திறன்கள், தலைமைத்துவ ஆழம் மற்றும் ஈடுபாட்டைக் கட்டியெழுப்புதல்
- வாரிசுத் திட்டமிடல் மற்றும் செயல்திறன் கலாச்சாரத்தை வலுப்படுத்துகிறது
- வங்கி முழுவதும் நிறைவேற்றுத் திறனை மேம்படுத்துகிறது

# மூலோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

## நடவடிக்கையிலிருந்து தாக்கம் வரை - மூலோபாயத்தினூடாகப் பெறுமதியை உருவாக்குதல்

செறிவான முயற்சிகள் மற்றும் திட்டமிடப்பட்ட வள ஒதுக்கீடு ஆகியவற்றின் மூலம், வங்கி தனது மூலோபாயத்தை திடமான முடிவுகளாக மாற்றுகிறது. இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எவ்வாறு செயல்திறன், மீள்திறன் மற்றும் பேண்தகு பெறுமதி உருவாக்கத்திற்கு எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை ஒவ்வொரு தூணும் எடுத்துக்காட்டுகிறது.

### உறுதிப்பாடு, ஆளுகை மற்றும் பேண்தகு வளர்ச்சி

நீண்டகால நிதியியல் மீண்டெழுந்தன்மை, வலுவான ஆளுகை மற்றும் பேண்தகு பெறுமதி உருவாக்கத்தை உறுதி செய்கிறது.

**பொருண்மைத் தலைப்புகள்:** M1, M4, M6, M7, M9

**SDGs:** 9, 11, 13, 16

| வள ஒதுக்கீடு | | தோற்றப்பாடு |
|---|---|---|
| தொகுதிக்கடன்கள் மற்றும் பேண்தகுப் பிணையங்களை வெளியிடுவதன் மூலம் திரட்டப்பட்ட அடுக்கு II மூலதனம்: ரூ. 35.0 பில்லியன் | | **குறுகிய காலம்:** நிதிப் பல்வகைப்படுத்தல் மற்றும் ஐந்தொகை மீள்திறனை மேம்படுத்துவதற்காக, செலவு செயற்றிறனான AT1 மற்றும் Tier II வழங்கல்கள் மூலம் மூலதனத் தளத்தை வலுப்படுத்துதல் அத்துடன் பேண்தகைமையுடன் இணைக்கப்பட்ட கருவிகளை அறிமுகப்படுத்துதல். |
| சுற்றுச்சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ முறைமையில் பயிற்சி பெற்ற அதிகாரிகள்: 347 பேர் | | |
| 90,000 ஆண்டுகளுக்கும் மேலான மறைமுக அறிவு | | |
| சமூகம் மற்றும் பங்குதாரர் முன்னெடுப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட தொகை: ரூ. 780.5 மில்லியன் | | **நடுத்தர மற்றும் நீண்ட காலம்:** நீண்டகால மீள்திறன் மற்றும் பெறுமதியை வழங்குவதற்காக, பேண்தகு மற்றும் வெளிநாட்டு வளர்ச்சியை விரிவுபடுத்தும் அதேவேளையில் மூலதனத்தையும் ஆளுகையையும் வலுப்படுத்துதல். |
| வலு செயற்றிறன் கொண்ட கிளைகள்: 101. | | |
| **மூலதனப் பரிமாற்றங்கள்** — ST: - , + ; LT: + + + + + | அண்மைக்கால இலாபகரத்தன்மை மற்றும் விரிவாக்க அழுத்தங்கள், நீண்டகால மீண்டெழுந்தன்மை, திறன், நம்பிக்கை மற்றும் பேண்தகைமை ஆதாயங்களுக்கு எதிராக சமநிலைப்படுத்தப்படுகின்றன. | |

**மூலோபாய முன்னெடுப்புக்கள்**

- மூலதனம் மற்றும் திரவத்தன்மை மேம்படுத்தல் வலுப்படுத்துதல்
- பேண்தகு மற்றும் நிலைமாற்ற நிதியியலை விரிவாக்குதல்
- ஆளுகை, இணக்கப்பாடு மற்றும் உள்நாட்டுக் கட்டுப்பாடுகளை
- மூலோபாயத் திட்டமிடலில் காலநிலை இடர்களை உள்வாங்குதல்
- வெளிநாட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் செயல்பாடுகளின் வளர்ச்சி

#### மூலோபாய செயல்திறன் மற்றும் முன்னேற்றம்

| கவனப் பகுதி | முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள் | நிலை | சிறப்பம்சங்கள் மற்றும் சாதனைகள் |
|---|---|---|---|
| மூலதன வலிமை மற்றும் திரவத்தன்மை | மூலதனப் போதுமாந்தன்மை விகிதம், திரவத்தன்மை காப்பீடு விகிதம், தேறிய உறுதியான நிதியிடல் விகிதம் | இலக்கை விஞ்சியது | மூலதனப் போதுமாந்தன்மை விகிதம்: **16.9%**<br>திரவத்தன்மை காப்பீடு விகிதம்: **260.4%**<br>வணிகப் பெயர் பெறுமதி: **ரூ. 57.4 பில்லியன்**<br>வரிக்கு முன்னரான இலாபம்: **ரூ. 120.8 பில்லியன்**<br>பேண்தகு நிதியிடல்: **ரூ. 73.0 பில்லியன்** |
| ஆளுகை மற்றும் இணக்கம் | ஒழுங்குமுறைப்படுத்தல் இணக்கம் | சரியான பாதையில் | |
| பேண்தகு தன்மையின் ஒருங்கிணைப்பு | பேண்தகு நிதியிடல், கலநிலை ஆளுகை | செயற்பாட்டில் | |

**செயலாற்ற நிலைப்பாடு**

இலக்கை விஞ்சியது | சரியான பாதையில் | செயற்பாட்டில் | கவனஞ் செலுத்தப்பட வேண்டியவை

## சிறந்த வாடிக்கையாளர் சேவை

விசுவாசம் மற்றும் நீண்டகால போட்டித்தன்மையை வலுப்படுத்தும் சீரான, அணுகக்கூடிய மற்றும் நம்பகமான சேவையை வழங்குதல்

பொருண்மைத் தலைப்புகள்: M2, M3, M6

SDGs: 8, 9, 10

| வள ஒதுக்கீடு | | தோற்றப்பாடு |
|---|---|---|
| | கிளை நவீனமயமாக்கல், சேவை மறுவடிவமைப்பு மற்றும் வாடிக்கையாளர் அனுபவத் தளங்களில் முதலீடு செய்யப்பட்ட தொகை: ரூ. 3.1 பில்லியன் | **குறுகிய காலம்:** வரிசை முகாமைத்துவ அமைப்பை விரிவாக்குதல் மற்றும் வலையமைப்பு முழுவதும் சீரான தன்மை மற்றும் வாடிக்கையாளர் திருப்தியை உயர்த்த முறையான சேவைத் தரக் கண்காணிப்பை நடைமுறைப்படுத்துதல். **நடுத்தர மற்றும் நீண்ட காலம்:** தனிப்பயனாக்கப்பட்ட, நுண்ணறிவு சார்ந்த சேவை வழங்கல், ஆழமான வாடிக்கையாளர் உறவுகள் மற்றும் சீரான அனைத்து ஊடக அனுபவம். |
| | மேம்படுத்தப்பட்ட அல்லது இடமாற்றம் செய்யப்பட்ட கிளைகள்: 8. | |
| | சிறந்த சேவை மற்றும் உறவு முகாமைத்துவம் குறித்த பயிற்சி நேரங்கள்: 40,000 மணித்தியாலங்களுக்கும் அதிகம் | |
| | வாடிக்கையாளர் ஈடுபாடு, உள்ளடக்கம் மற்றும் நிதி கல்வியறிவு திட்டங்கள்: 3,000 க்கும் அதிகம் | |
| | புதிய பசுமைக் கட்டிடங்கள்: 2. | |
| மூலதனப் பரிமாற்றங்கள் | ST: − , + ; LT: + , + , + — நீண்டகால விசுவாசம், நம்பிக்கை மற்றும் வருவாய் மீள்திறனுக்கு எதிராக குறுகிய கால சேவை மற்றும் உட்கட்டமைப்புச் செலவுகளை சமநிலைப்படுத்தப்படுகின்றன. | |

**மூலோபாய முன்னெடுப்புக்கள்**

- வாடிக்கையாளர் பயணத்தின் முழுமையான மறுவடிவமைப்பு.
- செயல்முறை எளிமைப்படுத்தல் மூலம் பணிகளை முடிப்பதற்கான நேரத்தைக் குறைத்தல்.
- குறிப்பிட்ட பிரிவுகளில் கவனம் செலுத்தும் முன்மொழிவுகள் (சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், இளைஞர்கள், பெண்கள்)
- முன்னணி சேவை வழங்கல் திறனை உயர்த்துதல்.

**மூலோபாய செயல்திறன் மற்றும் முன்னேற்றம்**

| கவனப்பகுதி | முக்கிய செயல்திறன் காட்டிகள் | நிலை | சிறப்பம்சங்கள் மற்றும் சாதனைகள் |
|---|---|---|---|
| வாடிக்கையாளர் திருப்தி | NPS, CSS, CES | ■ | தேறிய ஆதரவாளர் மதிப்பீடு: **33%**<br>வாடிக்கையாளர் முயற்சி மதிப்பீடு: **74%**<br>வாடிக்கையாளர் திருப்தி மதிப்பீடு: **81%** |

## டிஜிட்டல் மேன்மை

**அளவிடக்கூடிய டிஜிட்டல் தளங்கள் மூலம் செயல்திறன், பாதுகாப்பு மற்றும் புத்தாக்கத்தை வலுப்படுத்துதல்**

பொருண்மைத் தலைப்புகள்: M1, M2

SDGs: 6, 9

| வள ஒதுக்கீடு | | தோற்றப்பாடு |
|---|---|---|
| | டிஜிட்டல் தளங்கள் மற்றும் இணையப் பாதுகாப்பில் முதலீடு செய்யப்பட்ட தொகை: ரூ. 3.3 பில்லியன் | **குறுகிய காலம்:** கட்டமைக்கப்பட்ட ஆவண முகாமைத்துவம் மற்றும் தன்னியக்கமாக்கப்பட்ட காப்புப்படி மற்றும் நகலாக்க அமைப்புகள் மூலம் தகவல் ஆளுகை மற்றும் செயல்பாட்டு மீள்திறனை வலுப்படுத்துதல். **நடுத்தர மற்றும் நீண்ட காலம்:** **தரவுகளினால் உந்தப்பட்ட வங்கித்தொழில், செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் தன்னியக்கமாக்கல் மற்றும் மிகச்சிறந்த முறைமைப் பாதுகாப்பு.** |
| | நிறுவப்பட்ட ஊசுஆ இயந்திரங்கள்/ முனையங்கள்: 29. | |
| | தன்னியக்கமாக்கப்பட்ட செயல்முறைகள்: 11 | |
| | டிஜிட்டல், தரவு மற்றும் இணையத் திறன்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்ட ஊழியர்கள்: 1,500 | |
| மூலதனப் பரிமாற்றங்கள் | ST: − , + , + ; LT: + , + , + — நீண்டகால செயல்திறன், மீள்திறன் மற்றும் அளவிடக்கூடிய தன்மைக்கு எதிராக உயர்வான ஆரம்பகால தொழில்நுட்ப முதலீடு சமநிலைப்படுத்தப்படுகிறது. | |

**மூலோபாய முன்னெடுப்புக்கள்**

- அடிப்படை முறைமை நவீனமயமாக்கல்.
- e/v KYC மற்றும் டிஜிட்டல் சரிபார்ப்பு
- விரிவுபடுத்தப்பட்ட டிஜிட்டல் உள்வாங்கல மற்றும் சுயசேவை
- இணையப் பாதுகாப்பு மற்றும் தரவுப் பாதுகாப்பை வலுப்படுத்துதல்.

**மூலோபாய செயல்திறன் மற்றும் முன்னேற்றம்**

| கவனப்பகுதி | முக்கிய செயல்திறன் காட்டிகள் | நிலை | சிறப்பம்சங்கள் மற்றும் சாதனைகள் |
|---|---|---|---|
| டிஜிட்டல் ஏற்பு | கிடைக்குந்தன்மை | ▣ | டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்கள்: **23%** வளர்ச்சி<br>டிஜிட்டல் தொடுபுள்ளிகள்: **1,510**<br>அறிவிக்கப்பட்ட சம்பவங்கள்: **எதுவுமில்லை** |
| கொடுக்கல்வாங்கல் அளவுகள் | இணையப் பாதுகாப்பு | □ | |
| தள மீள்திறன் | சம்பவங்கள | ■ | |

# மூலோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

## கடன் கலாசாரத்தை வெகுமதியளித்தல் மற்றும் ஆரோக்கியமான கொடுகடன் பட்டியல்

சொத்து தரம், முன்மதியுடைய வளர்ச்சி மற்றும் நிலையான கடன் விரிவாக்கத்தை உறுதி செய்கிறது.

வள ஒதுக்கீடு: M2, M3, M6, M10

SDGs: 1, 8, 10

| வள ஒதுக்கீடு | | தோற்றப்பாடு |
|---|---|---|
| | ஆண்டில் 2,500-க்கும் மேற்பட்ட வசதிகள் மறுசீரமைக்கப்பட்டன | **குறுகிய காலம்:** அர்ப்பணிக்கப்பட்ட வணிக நுண்ணறிவு திறன்கள் மற்றும் சிறப்பு வேளாண்மை வங்கி பிரிவை நிறுவுதல் மூலம் சொத்துப்பட்டியல் தரம் மற்றும் துறை கவனத்தை மேம்படுத்துதல். **நடுத்தர மற்றும் நீண்ட காலம்:** தேர்ந்தெடுக்கப்பட்ட வளர்ச்சி, நிலை 3 வெளிப்பாட்டை குறைத்தல், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள மற்றும் பேண்தகு நிதி பட்டியலை விரிவாக்குதல். |
| | கொடுகடன் மற்றும் மீட்டெடுப்பில் 42,850 பயிற்சி மணி நேரங்கள் | |
| | சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், முன்னுரிமை துறைகள் மற்றும் அபிவிருத்தி நிதியிடல் பட்டியல்: ரூ. 319.9 பில்லியன் | |
| மூலதனப் பரிமாற்றங்கள் | ST (-), LT (+, +, +) — பழமைவாத கடன் மதிப்பீடு மற்றும் மீட்பு மீதான கவனம், நீண்டகால முதலீட்டுத் தொகுப்பின் மீள்திறன் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றுடன் சமநிலைப்படுத்தப்படுகிறது. | |
| மூலோபாய முன்னெடுப்புக்கள் | • வலுப்படுத்தப்பட்ட கொடுகடன் இடர் மதிப்பீடு<br>• மீட்பு மற்றும் மறுகட்டமைப்பு ஆதரவு<br>• சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், முன்னுரிமை துறை மற்றும் பசுமை நிதி விரிவாக்கம் | |

**மூலோபாய செயல்திறன் மற்றும் முன்னேற்றம்**

| கவனப் பகுதி | முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள் | நிலை | சிறப்பம்சங்கள் மற்றும் சாதனைகள் |
|---|---|---|---|
| சொத்து தரம் | நிலை 3 | ☐ | நிலை 3 விகிதம்: 5.6% |
| கடன்கள் மற்றும் முன்பணங்கள் வளர்ச்சி | வளர்ச்சி வீதம் | ■ | கடன்கள் மற்றும் முன்பணங்கள்: ரூ. 2.7 டிறில்லியன், 9% வளர்ச்சி |
| மீட்பு | ஏற்பாட்டு காப்பீட்டு | ☐ | காப்பீட்டு விகிதம்: 57.9% |

## உயர் செயல்திறன் மிக்க குழுவை உருவாக்குதல்

செயல்படுத்தல் சிறப்பினை நிலைநிறுத்த திறன், ஈடுபாடு மற்றும் தலைமைத்துவ ஆழத்தை வளர்க்கிறது

வள ஒதுக்கீடு: M3, M5, M8

SDGs: 4, 5, 8, 10

| வள ஒதுக்கீடு | | தோற்றப்பாடு |
|---|---|---|
| | ரூ. 45.7 பில்லியன் ஊதியம் மற்றும் சலுகைகள் | **குறுகிய காலம்:** கட்டமைக்கப்பட்ட வெகுமதி முறைகள் மற்றும் நவீன, ஒருங்கிணைந்த பயிற்சி சுற்றுச்சூழல் மூலம் செயல்திறன் சார்ந்த கலாச்சாரத்தை உள்ளிணைத்தல். **நடுத்தர மற்றும் நீண்ட காலம்:** தக்கவைப்பை மேம்படுத்துதல், ஆழமான தலைமைத்துவ வளம், உற்பத்தித்திறன் உயர்வு மற்றும் ஊழியர் ஈடுபாட்டை நிலைநிறுத்துதல். |
| | 8,563 ஊழியர்களுக்கு பயிற்சி மற்றும் மறுதிறன் மேம்பாடு வழங்கப்பட்டது | |
| | ரூ. 348.0 மில்லியன் பயிற்சி மற்றும் மேம்பாட்டில் முதலீடு செய்யப்பட்டது | |
| | ரூ. 185.8 மில்லியன் நலன்புரி, ஈடுபாடு மற்றும் உள்ளடக்கல் முயற்சிகளுக்காக செலவிடப்பட்டது | |
| மூலதனப் பரிமாற்றங்கள் | ST (-, +), LT (+, +, +, +) — அதிகமான மக்கள் முதலீடு, நீண்டகால உற்பத்தித்திறன், தக்கவைப்பு மற்றும் தலைமைத்துவ தொடர்ச்சியுடன் சமநிலைப்படுத்தப்படுகிறது. | |
| மூலோபாய முன்னெடுப்புக்கள் | • டிஜிட்டல் மற்றும் இடர்நேர்வு துறைகளில் இலக்கிடப்பட்ட திறன் மேம்பாடு செயலாற்றத்துடன் இணைந்த வெகுமதிகள் மற்றும் தொழில் பாதைகள்<br>• தலைமைத்துவம் மற்றும் வாரிசு திட்ட வலுப்படுத்தல்<br>• நலன்புரி மற்றும் ஈடுபாட்டு திட்டங்கள் | |

**மூலோபாய செயல்திறன் மற்றும் முன்னேற்றம்**

| கவனப் பகுதி | முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள் | நிலை | சிறப்பம்சங்கள் மற்றும் சாதனைகள் |
|---|---|---|---|
| திறமை தக்கவைப்பு | திறன் வளர்ச்சி | ■ | தக்கவைப்பு: 97% |
| பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கல் | தக்கவைப்பு விகிதம் | ☐ | சராசரி பயிற்சி மணிநேரம்: 28 மணிநேரம் |
| ஊழியர் ஒருவருக்கான பயிற்சி மணிநேரம் | பிரதிநிதித்துவம் | ☐ | பெண் பிரதிநிதித்துவம்: 59% |

## மூலதன பரிமாற்ற வெப்ப வரைபடம்

மூலதன பரிமாற்ற வெப்ப வரைபடம், வங்கியின் மூலோபாய தூண்களில் பல்வேறு மூலதன வடிவங்கள் எவ்வாறு முன்னுரிமை அளிக்கப்படுகின்றன என்பதற்கான காட்சி சுருக்கத்தை வழங்குகிறது. இது முழுமையான முதலீட்டை விட ஒப்பீட்டு வலியுறுத்தலை எடுத்துக்காட்டுகிறது. மூலோபாய நோக்கத்தின்படி மூலதன கவனம் எவ்வாறு மாறுபடுகிறது என்பதை விளக்கி, கட்டுப்படுத்தப்பட்ட இயக்க சூழலில் உறுதிப்பாடு, உருமாற்றம் மற்றும் திறன் வளர்ச்சியை சமநிலைப்படுத்துவதற்கான வங்கியின் திட்டமிட்ட அணுகுமுறையை பிரதிபலிக்கிறது.

| மூலதனங்கள் / மூலோபாய தூண்கள் | | | | | | | ஒதுக்கீட்டு தர்க்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ●●● | ●●● | ●● | ●●● | ●● | ●● | நிதி மீள்திறன், ஆளுகை ஒழுக்கம், ஒழுங்குமுறை இணக்கம் மற்றும் நிலைத்தன்மை ஒருங்கிணைப்பை பாதுகாக்க மூலதனம் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இது நீண்டகால உறுதிப்பாட்டிற்கு அடித்தளத்தை உருவாக்குகிறது. |
| | ●● | ●●● | ●●● | ●● | ●●● | - | இயல்நிலை மற்றும் டிஜிட்டல் சேவை வழிகளில் அணுகல், நம்பகத்தன்மை மற்றும் சேவை தரத்தை மேம்படுத்த மக்கள், சேவை உட்கட்டமைப்பு மற்றும் உறவுகளில் முதலீடு செய்யப்படுகிறது. |
| | ●● | ●●● | ●● | ●● | ● | - | தொழில்நுட்பம் மற்றும் நவீனமயமாக்கல் செயல்பாடுகளை நவீனப்படுத்தவும், இணையபாதுகாப்பை வலுப்படுத்தவும், திறன் மற்றும் அளவிடுதிறனை மேம்படுத்தவும் தளங்கள், அமைப்புகள், தரவு மற்றும் திறன்களில் மூலதனம் செலுத்தப்படுகிறது |
| | ●●● | ● | ●●● | ●● | ●● | ● | முன்மதியுடைய கடன் வழங்கல், சொத்து தரம், மீட்பு முயற்சிகள் மற்றும் முன்னுரிமை துறை நிதியளிப்பை ஆதரிக்க நிதி மற்றும் அபாய சார்ந்த மூலதனம் வலியுறுத்தப்படுகிறது |
| | ●● | ● | ●●● | ●● | ●● | ● | செயல்படுத்தல் திறன், உற்பத்தித்திறன் மற்றும் நீண்டகால நிறுவன மீள்திறனை வலுப்படுத்த திறன்கள் மற்றும் தலைமைத்துவத்தை நோக்கி வளங்கள் வழிநடத்தப்படுகின்றன |

விளக்கக் குறியீடு : ●●● அதிக கவனம் ●● நடுத்தர கவனம் ● மட்டுப்படுத்தப்பட்ட கவனம் - மிகக் குறைந்த கவனம்

# பெறுமதி உருவாக்க மாதிரி

## உள்ளீடுகள்

| எமது முக்கிய வளங்கள் | கிடைக்கப்பெறும் தன்மையை எவ்வாறு முகாமை செய்வது |
|---|---|
| **நிதியியல் மூலதனம்**<br>**ரூபா 365.8 பில்லியன்** பங்குதாரர் நிதிகள்<br>**ரூபா 4.4 டிறில்லியன்** வாடிக்கையாளர் வைப்புகள்<br>**ரூபா 458.8 பில்லியன்** கடன்கள் | **நிதியியல் மூலதனம்**<br>**சவால்:** மூலதனத்தின் அதிகரிக்கும் செலவு வளர்ச்சியை மந்தப்படுத்தலாம். மூலோபாய மாற்றம்: நிதி மேலாண்மை மற்றும் திரவத்தன்மையை வலுப்படுத்துதல்.<br>நிதியியல் மீளாய்வு *பக்கங்கள் 108-114* |
| **உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்**<br>**2,413** வாடிக்கையாளர் தொடுமுனைகள்<br>**ரூபா 3.3 பில்லியன்** ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் முதலீடு | **உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்**<br>**சவால்:** தொழில்நுட்பம் வேகமாக மாறுவதுடன் வாடிக்கையாளர் தேவைகள் விரைவாக மாறுகின்றன. **மூலோபாய மாற்றம்:** சொத்துக்களை தொடர்ந்து மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல். **ஒவ்வொரு வாடிக்கையாளர் பயணத்தையும் வடிவமைத்தல்** *(பக்கங்கள் 132-137)* |
| **மனித மூலதனம்**<br>**8,912** தேர்ச்சியுடைய ஊழியர்கள<br>**ரூபா 348.0 மில்லியன்** பயிற்சி மற்றும் மேம்பாட்டில் முதலீடு | **மனித மூலதனம்**<br>**சவால்:** தேர்ச்சியுடைய திறமைகள் தட்டுப்பாடாக உள்ளன். மூலோபாய மாற்றம்: திறமையை வளர்த்தல் மற்றும் ஊழியர் நலனை ஆதரித்தல். **நீடித்த செயல்திறனுக்கான அனைவரையும் உள்ளடக்கிய பணிக்குழு** *(பக்கங்கள் 138-147)* |
| **அறிவுசார் மூலதனம்**<br>**முதலிடம் பெற்ற வணிகப்பெயர்**<br>**ரூ. 1.1 பில்லியன்** வணிகப்பெயர் மேம்பாட்டில் முதலீடு. **12 ஆண்டுகள் -** ஊழியர்களின் சராசரி சேவை காலம் | **அறிவுசார் மூலதனம்**<br>**சவால்:** விரைவான புத்தாக்கம் மற்றும் அறிவு இடைவெளிகள் போட்டித்திறனை சவாலுக்கு உள்ளாக்குகின்றன மூலோபாய மாற்றம்: டிஜிட்டல் தீர்வுகள், திறன் மேம்பாடு மற்றும் வணிகப்பெயர் கட்டமைப்பில் முதலீடு செய்தல். **டிஜிட்டல் அனுபவங்களை வலுப்படுத்துதல்** *(பக்கங்கள் 148-152)* |
| **சமூக மற்றும் உறவு மூலதனம்**<br>**16 மில்லியனுக்கு மேலதிகமான -** விசுவாசமான மற்றும் மக்கள்தொகை ரீதியாக பரவிய வாடிக்கையாளர் தளம்<br>**710 -** நிருபர் வங்கிகள்<br>**410 -** பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் | **சமூக மற்றும் உறவு மூலதனம்**<br>**சவால்:** பங்குதாரர் எதிர்பார்ப்புகள் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றன. **மூலோபாய மாற்றம்:** நம்பகத்தன்மை மற்றும் அர்த்தமுள்ள கூட்டாண்மைகளை கட்டியெழுப்புதல். **நிலைத்தன்மையான எதிர்காலத்தை உருவாக்குதல்** *(பக்கங்கள் 153-160)* |
| **இயற்கை மூலதனம்**<br>**26,809.7 MWh** வலு நுகர்வு<br>**ரூபா 573.0 மில்லியன்** சூரிய வலுசக்தியில் முதலீடு<br>**247,986.0 m³** நீர் நுகர்வு | **இயற்கை மூலதனம்**<br>**சவால்:** சுற்றுச்சூழல் அழுத்தங்கள் மற்றும் வள பற்றாக்குறை<br>**மூலோபாய மாற்றம்:** நிலையான நடைமுறைகளை ஊக்குவித்தல் மற்றும் வள பொறுப்புவகிப்பை மேம்படுத்துதல். **நிலையான எதிர்காலத்தை உருவாக்குதல்** *(பக்கங்கள் 153-160)* |

## பெறுமதி நிலைமாற்ற செயன்முறை

### எமது வணிக நடவடிக்கைகள்

எங்களின் வணிக நடவடிக்கைகள், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த நிதி நலனை வழங்குவதற்கும், மிகவும் நிலையான நடைமுறைகளை கடைப்பிடிப்பதற்கும், குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் எங்கள் பங்குதாரர்களுக்கு அர்த்தமுள்ள பெறுமதியை உருவாக்குவதற்கும் இயக்கப்படுகின்றன.

தொலைநோக்கு

பணி

நிதி இடைநிலை சேவை

வைப்பு திரட்டல் மற்றும் நிதியளிப்பு

கடன் வழங்கல் மற்றும் முதலீடுகள்

நிதி சார்ந்த மற்றும் கட்டணம் சார்ந்த நடவடிக்கைகள்

சில்லறை வங்கித்தொழில்

பெருநிறுவன மற்றும் கரைகடந்த வங்கித்தொழில்

பன்னாட்டு திறைசேரி, முதலீடு மற்றும் கரைகடந்த வங்கிதொழில்

எமது மூலோபாய தூண்கள்

நாம் வழங்கும் சேவைகள்:

- வைப்புக்களை ஏற்றல்
- கடன் வழங்கல்
- மீள்நிதியிடல்
- கொடுக்கல் வாங்கல் சார் வங்கித்தொழில் மற்றும் கட்டண சேவைகள்
- நிதி மேலாண்மை
- அறங்காவலர் பாதுகாவலர் மற்றும் சொத்துப்பட்டியல் மேலாண்மை சேவைகள்
- முதலீட்டு வங்கியியல்
- வெளிநாட்டுச் செலாவணி மற்றும் பத்திரங்கள் மேலாண்மை
- ஆலோசனை சேவைகள்
- வர்த்தக நிதியளிப்பு

ஆதரவு சேவைகள்

- தகவல் தொழில்நுட்பம்
- சட்ட சேவைகள்
- மனித வள மேலாண்மை
- நிர்வாக மற்றும் ஏனைய சேவைகள்

அடிப்படையாக கொண்டவை: மூலோபாயம் | வள ஒதுக்கீடு மற்றும் மூலதன பரிமாற்றம் | உறுதியான கூட்டாண்மை ஆளுகை | இடர்நேர்வு முகாமைத்துவம்

| வெளியீடுகள் | விளைவுகள் | பங்குதாரர்கள் மற்றும் SDGs இன் சாதகமான தாக்கம் |
|---|---|---|

## நாம் எதை உற்பத்தி செய்கிறோம்

### முக்கிய வணிகச் செயல்பாடு

**ரூ. 120.8 பில்லியன்** ஈட்டப்பட்ட இலாபம்

**ரூ. 2.7 ட்ரில்லியன்** மொத்தக் கடன்களும் முற்பணங்களும்

### நம்பகமான முதலீட்டுக் கொள்கை

**ரூ. 2.7 ட்ரில்லியன்** பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டுச் சொத்துப்பட்டியல்

**ரூ. 253.2 பில்லியன்** முதலீட்டு வருமானம்

### நிதிச் சேவைகளுக்கான அணுகல்

19 புனரமைக்கப்பட்ட/ உருமாற்றப்பட்ட கிளைகள்

88% டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்கள்

### ஊழியர் செலவினம் மற்றும் அபிவிருத்தி

**ரூ. 45.7 பில்லியன்** ஊழியர்களுக்கான ஊதியம் மற்றும் இழப்பீடுகள்

97% ஊழியர் தக்கவைப்பு விகிதம்

### டிஜிட்டல் வங்கிச் சேவை

23% டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களின் வளர்ச்சி

விளைவுகள்

## நாங்கள் எவ்வாறு பெறுமதியை உருவாக்குகிறோம் மற்றும் பாதுகாக்கிறோம்

### நிதி மூலதனம்

**ரூ. 2,987.9** ஒரு பங்கிற்கான வருவாய்

**ரூ. 5.5 ட்ரில்லியன்** ஐந்தொகையின் வலிமை

**ரூ. 89.4 பில்லியன்** அரசாங்கத்திற்கு வழங்கப்படும் பெறுமதி

### உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்

**ரூ. 46.1 பில்லியன்** காணி, கட்டடம் மற்றும் உபகரணங்கள்

76% வாடிக்கையாளர் ஊடுருவல்

### மனித மூலதனம்

431 பதவியுயர்வு பெற்ற ஊழியர்கள்

28 ஊழியர் ஒருவருக்கான சராசரி பயிற்சி நேரங்கள்

59:41 ஒட்டுமொத்த பாலின விகிதம் (பெண்:ஆண்)

### அறிவுசார் மூலதனம்

**ரூ. 57.4 பில்லியன்** வணிகப்பெயர் பெறுமதி

11 தானியக்கமாக்கப்பட்ட செயல்முறைகள்

71% டிஜிட்டல் வசதிபெற்ற வாடிக்கையாளர்கள்

34% மெய்நிகர் வசதிபெற்ற வாடிக்கையாளர்கள்

1,510 டிஜிட்டல் தொடர்பு புள்ளிகள்

### சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

33% நிகர ஊக்குவிப்பாளர் மதிப்பெண் விகிதம்

81% வாடிக்கையாளர் திருப்தி விகிதம்

**ரூ. 780.5 மில்லியன்** சமூகங்களுக்கான முதலீடு

### இயற்கை மூலதனம்

**ரூ. 322.6 பில்லியன்** சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ முறைமை இணக்கப்பாட்டின் கீழ் வழங்கப்பட்ட நிதியளிப்பு

**ரூ. 10.2 பில்லியன்** பசுமை நிதியளிப்பு

**5,650.2 மெகாவாட்** மணித்தியாலம் உற்பத்தி செய்யப்பட்ட சூரிய சக்தி

# பெறுமதிசேர் கூற்று

GRI 201-1

வங்கியின் பெறுமதி உருவாக்கம் மற்றும் முக்கிய பங்குதாரர் குழுக்களிடையே அதன் ஒதுக்கீடு குறித்த பகுப்பாய்வு கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

| | 2025 ரூ. மில்லியன் | 2024 ரூ. மில்லியன் | மாற்றம் % |
|---|---|---|---|
| **பெறுமதி சேர்ப்பு** | | | |
| வங்கிச் சேவைகளை வழங்குவதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் | 540,654 | 485,126 | 11 |
| சேவைகளுக்கான செலவு | (294,766) | (304,383) | (3) |
| வங்கிச் சேவைகளால் கூட்டப்பட்ட பெறுமதி | 245,888 | 180,743 | 36 |
| வங்கிச் சாரா வருமானம் | 7,970 | 280 | 2,746 |
| கடன்கள் மற்றும் ஏனைய இழப்புகளுக்கான குறைபாட்டுக் கட்டணங்கள்/ மீளப்பெறல்கள் | (21,110) | 20,343 | (204) |
| மொத்தக் கூட்டப்பட்ட பெறுமதி | 232,748 | 201,366 | 16 |
| | | | |
| **பெறுமதி ஒதுக்கீடு** | | | |
| ஊழியர்களுக்கு | | | |
| சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஏனைய நன்மைகள் | 45,689 | 40,287 | 13 |
| | | | |
| அரசாங்கத்திற்கு | | | |
| இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட இலாபப்பங்கு | 5,000 | - | - |
| வருமான வரி | 52,514 | 36,053 | 46 |
| மேலதிக வரி | - | 1,483 | (100) |
| நிதிச் சேவைகள் மீதான வரிகள் | 31,881 | 28,395 | 12 |
| | 89,395 | 65,931 | 36 |
| | | | |
| சமூகத்திற்கு | | | |
| சமூகப் பொறுப்புத் திட்டங்கள் | 781 | 207 | 277 |
| | | | |
| வெளி நிதி வழங்குநர்களுக்கு | | | |
| ஏனைய கடன்கள் மீதான வட்டி | 18,095 | 12,070 | 50 |
| வெளியிடப்பட்ட படுகடன் மீதான வட்டி | 10,452 | 9,307 | 12 |
| | 28,547 | 21,377 | 34 |
| | | | |
| விரிவாக்கம் மற்றும் வளர்ச்சிக்கு | | | |
| நிறுத்திவைக்கப்பட்ட இலாபம் | 71,007 | 64,387 | 10 |
| மேலதிக கட்டண வரி | - | (1,483) | 100 |
| தேய்மானம் மற்றும் கடன்தீர்வு | 5,023 | 4,195 | 20 |
| பிற்போடப்பட்ட வரியியல் | (7,694) | 6,465 | (219) |
| | 68,336 | 73,564 | (7) |
| **ஒதுக்கப்பட்ட மொத்தப் பெறுமதி** | 232,748 | 201,366 | 16 |

# நிலைத்தன்மை ஒருங்கிணைத்தல்

**இலங்கை வங்கியில், பேண்தகைமையானது வங்கியின் செயல்பாட்டு முறையுடன் ஆழமாக இணைக்கப்பட்டுள்ளதுடன், வங்கி முழுவதும் எடுக்கப்படும் தீர்மானங்களிலும் செல்வாக்கு செலுத்துகிறது. நீண்டகால பெறுமதி உருவாக்கத்தை ஆதரிப்பதற்காக ஆளுகை, மூலோபாயம், இடர் முகாமைத்துவம் மற்றும் செயல்திறன் ஆகிய ஒன்றோடொன்று இணைந்த கூறுகள் எவ்வாறு சீரமைக்கப்பட்டுள்ளன என்பதை இந்தப் பிரிவு விளக்குகிறது.**

## பேண்தகைமை ஆளுகை GRI 2-12,14

இலங்கை வங்கியின் பேண்தகைமை ஆளுகையானது பணிப்பாளர் சபை மட்டத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளது இது மூலோபாய ஆளுகை, இடர் முகாமைத்துவம் மற்றும் நீண்டகால பெறுமதி உருவாக்கத்தில் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (நுளுபு) காரணிகளின் ஒருங்கிணைப்பைப் பிரதிபலிக்கிறது. சபை மற்றும் மேலாண்மை மட்டக் குழுக்களின் ஊடாக மேற்பார்வை செய்யப்படுவதுடன், பிரத்யேக பேண்தகைமை மற்றும் வெளிப்படுத்தல் கட்டமைப்புகளால் இது ஆதரிக்கப்படுகிறது. வளங்களின் பொறுப்பான பயன்பாடு மற்றும் பேண்தகைமை விளைவுகளுக்கான பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதற்காக செயல்திறன் கண்காணிப்பு வழிமுறைகள் நடைமுறையில் உள்ளன. இந்தக் கட்டமைப்பானது ஆளுகை, நிதியளிப்பு, செயல்பாடுகள் மற்றும் அறிக்கையிடல் செயல்முறைகள் முழுவதும் பேண்தகைமை அம்சங்கள் முறையாக உள்வாங்கப்படுவதையும் பேணப்படுவதையும் உறுதி செய்கிறது.

**ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவத்துடனான தொடர்பு:**

பேண்தகைமை ஆளுகை பற்றிய கூடுதல் தகவலுக்கு, பக்கம் 162-179 வரையிலான இலங்கை வங்கியின் ஆளுகை அறிக்கையைப் பார்க்கவும்.

பேண்தகைமை மற்றும் காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளின் மேற்பார்வை பற்றிய கூடுதல் தகவலுக்கு, பக்கம் 88-106 வரையிலான “SLFRS பேண்தகைமை தொடர்பான நிதி வெளிப்படுத்தல்களைப் பார்க்கவும்.




**பணிப்பாளர் சபை:**
மூலோபாய திசை | ESG மேற்பார்வை | நீண்டகால பெறுமதி உருவாக்கம்.

**ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு:**
பேண்தகைமை மற்றும் காலநிலை தொடர்பான இடர்களின் மேற்பார்வை | ERM சீரமைப்பு

**பேண்தகைமைக் குழு:**
கொள்கை மேற்பார்வை | பேண்தகைமை மூலோபாயம் | செயல்திறன் கண்காணிப்பு.

**பேண்தகைமைத் துணைக் குழு:**
நுளுபு இடர் மதிப்பாய்வு | கடன் வழங்கல் தொடர்பான | உரிய ஆய்வு மேற்பார்வை.

**பேண்தகு வங்கிப் பிரிவு:**
பேண்தகு நிதியியல் | பொறுப்பான வங்கி முயற்சிகள் | சக்தி மற்றும் வள முகாமைத்துவம் | சொத்துப்பட்டியல் மேற்பார்வை | கிளை மட்டச் செயல்படுத்தல்.

**SLFRS S1 மற்றும் S2 பணிக்குழு:**
ஆளுகை, மூலோபாயம், இடர் முகாமைத்துவம் மற்றும் அறிக்கையிடல் ஆகியவற்றில் பேண்தகைமை மற்றும் காலநிலை தொடர்பான வெளிப்படுத்தல்களை ஒருங்கிணைத்தல்

**கிளை மட்டம்**
பேண்தகைமை ஆளுகை மற்றும் கொள்கைகளால் | வழிநடத்தப்படும் அன்றாட தீர்மானம் எடுத்தல் | செயல்திறன் கண்காணிப்பு | வள மேம்படுத்தல் | அறிக்கையிடல்

**ESG குறுக்கு-செயல்பாட்டு குழு:**
துறைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு | செயல்பாட்டு ஆதரவு | உள்நிலை ஈடுபாடு | பேண்தகைமை முயற்சிகளின் ஒருங்கிணைப்பு.

# நிலைத்தன்மை ஒருங்கிணைத்தல்

## வங்கி முழுவதும் பேண்தகைமையை உள்வாங்குதல்

இலங்கை வங்கியில் பேண்தகைமையானது, வங்கி முழுவதும் ஒன்றிணைந்து செயல்படும் கொள்கைகள், மூலோபாயங்கள், இடர் முகாமைத்துவ செயல்முறைகள் மற்றும் நிதியளிப்பு கட்டமைப்புகள் ஆகியவற்றின் மூலம் உள்வாங்கப்பட்டுள்ளது. இந்த வழிமுறைகள் பேண்தகைமை உறுதிப்பாடுகளை சீரான தீர்மானம் எடுத்தல் மற்றும் அளவிடக்கூடிய விளைவுகளாக மாற்றுகின்றன.

**மூலோபாயம் மற்றும் திசை**
முன்னுரிமைகள் மற்றும் எதிர்கால கவனத்தை நிர்ணயிக்கிறது

- பெருநிறுவன மூலோபாயம்
- இலங்கை மத்திய வங்கியின் பேண்தகு நிதியியல் வழிகாட்டல்

**கொள்கைகள் மற்றும் கட்டமைப்புகள்**
எதிர்பார்ப்புகள் மற்றும் அளவுருக்களை நிர்ணயிக்கிறது

- பேண்தகைமைக் கொள்கை
- சுற்றுச்சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ அமைப்பு
- பேண்தகு நிதியியல் கட்டமைப்பு

**நிதியளிப்பு மற்றும் மூலதன ஒதுக்கீடு**
பேண்தகைமையை நிதித் தீர்மானங்களாக மாற்றுகிறது

- பொறுப்பான வங்கித்தொழில் கொள்கைகள்
- பேண்தகு நிதியியல் கவனப் பகுதிகள்
- சொத்துப்பட்டியல் மட்டத்திலான மேற்பார்வை

**செயல்திறன் மற்றும் வெளிப்படுத்தல்**
விளைவுகளைக் கண்காணிக்கிறது, அளவிடுகிறது மற்றும் தொடர்பு கொள்கிறது

- பசுமை இல்ல வாயு (GHG) உமிழ்வுகள் உட்பட பேண்தகைமை செயல்திறன் கண்காணிப்பு
- SLFRS S1 மற்றும் S2 வெளிப்படுத்தல்கள்
- நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் (SDG) சீரமைத்தல்
- GRI அறிக்கையிடல்
- SASB தரநிலைகள்

**இடர் மற்றும் மீள்திறன்**
இடர் கண்டறிதல், தணிப்பு மற்றும் வணிகத் தொடர்ச்சியை ஆதரிக்கிறது

- நிறுவன இடர் முகாமைத்துவம்
- காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள் (ஊசுசுமுள) உட்பட நுளபு தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள்
- வணிகத் தொடர்ச்சி மற்றும் மீள்திறன் திட்டமிடல்

## செயல்திறன் கண்காணிப்பு, கணக்காய்வுகள் மற்றும் வெளிப்படுத்தல் உறுதிப்படுத்தல்

வங்கி முழுவதும் நிதிச் சாரா தரவுகளைச் சேகரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல் ஆகியவற்றை ஆதரிக்கும் உள்நாட்டு அமைப்புகளின் மூலம் பேண்தகைமை செயல்திறன் கண்காணிக்கப்படுகிறது. இந்த அமைப்புகள் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை ஆகிய கவனப் பகுதிகளில் சீரான செயல்திறன் கண்காணிப்பு, மேலாண்மை மேற்பார்வை மற்றும் தகவலறிந்த தீர்மானம் எடுத்தல் ஆகியவற்றைச் சாத்தியமாக்குகின்றன.

இந்த ஆண்டில், வளத் திறனை மதிப்பிடுவதற்கும் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளைக் கண்டறிவதற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்பாடுகளில் ஆற்றல் கணக்காய்வுகள் மற்றும் உணவு கழிவு கணக்காய்வுகள் உள்ளிட்ட செயல்பாட்டுக் கணக்காய்வுகள் நடத்தப்பட்டன. இந்தக் கணக்காய்வுகளின் கண்டுபிடிப்புகள் செயல்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்காக, பேண்தகைமை வெளிப்படுத்தல்கள் சுயாதீனமான உறுதிப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றன இது அறிக்கையிடப்பட்ட தகவல்களின் துல்லியம் மற்றும் முழுமை குறித்து கூடுதல் நம்பிக்கையை வழங்குகிறது.

**உறுதிப்படுத்தல் நோக்கம் மற்றும் முடிவுகளின் விவரங்கள் 86-87 மற்றும் 456-459 ஆம் பக்கங்களில் உள்ள சுயாதீன உறுதிப்படுத்தல் அறிக்கைகளில் வழங்கப்பட்டுள்ளன.**

## திறன் விருத்தி

வங்கி முழுவதும் பேண்தகைமை மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக இடர் முகாமைத்துவ நடைமுறைகளை திறம்பட செயல்படுத்துவதற்குத் திறன் மேம்பாடு அடித்தளமாக அமைகிறது. இந்த ஆண்டில், பேண்தகைமைக் கொள்கைகள், சுற்றுச்சூழல் மற்றும் சமூக இடர் கண்டறிதல் மற்றும் உள்நாட்டுக் கட்டமைப்புகள் மற்றும் கொள்கைகளின் சீரான பயன்பாடு குறித்த ஊழியர்களின் புரிதலை வலுப்படுத்துவதற்காக இலக்கு வைக்கப்பட்ட பயிற்சி மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்த முயற்சிகள் அன்றாட செயல்பாடுகள் மற்றும் நிதித் தீர்மானங்களில் பேண்தகைமை அம்சங்களை உள்வாங்குவதை ஆதரிக்கின்றன, வணிக மற்றும் செயல்பாட்டுப் பிரிவுகளில் பொறுப்புக்கூறல் மற்றும் சீரான செயல்பாட்டை வலுப்படுத்துகின்றன.

**ESMS பயிற்சி:**

**347** ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது

**பேண்தகைமைப் பயிற்சி:**

**1,149** ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது

**1,836** பயிற்சி மணித்தியாலங்கள்

**27** திட்டங்கள்

## பேண்தகைமைக் கொள்கை மற்றும் மூலோபாய நங்கூரமிடல்

வங்கியின் பேண்தகைமை அணுகுமுறையானது ஒரு விரிவான பேண்தகைமைக் கொள்கையினால் வழிநடத்தப்படுகிறது. இது தீர்மானம் எடுத்தலில் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் பொருளாதாரக் காரணிகளை ஒருங்கிணைப்பதற்கான மேலோட்டமான கட்டமைப்பை வழங்குகிறது. இக்கொள்கையானது மும்முனை அடிப்படை முன்னோக்கைக் கொண்டுள்ளது இது பொருளாதாரச் செயல்திறன், சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றில் பெறுமதி உருவாக்கம் சமநிலையில் இருப்பதை உறுதி செய்கிறது.

ஆண்டுக்காலப்பகுதியில், வளர்ந்து வரும் பேண்தகைமை அம்சங்கள், மாறிவரும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகள் மற்றும் வங்கியின் மூலோபாய முன்னுரிமைகளைப் பிரதிபலிக்கும் வகையில் இக்கொள்கை புதுப்பிக்கப்பட்டது. இது பேண்தகைமை ஒருங்கிணைப்புக்கான வழிகாட்டும் கட்டமைப்பாக அதன் பொருத்தப்பாட்டை வலுப்படுத்துகிறது.

### பேண்தகைமைக் கொள்கை கட்டமைப்பு - மும்முனை அடிப்படை

**E — பொருளாதாரம்**

*பெறுமதி உருவாக்கம், ஆளுகை மற்றும் மீள்திறன்*

**முக்கிய கவனப் பகுதிகள்:**

- அறநெறி மற்றும் பொறுப்பான வங்கித்தொழில்
- முன்மதி மிக்க இடர் முகாமைத்துவம்
- பொறுப்பான கடன் வழங்கல் மற்றும் முதலீடு
- நிதி உள்ளடக்கம
- வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்

**E — சுற்றுச்சூழல்**

*சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் காலநிலை நடவடிக்கை*

**முக்கிய கவனப் பகுதிகள்:**

- செயல்பாடுகளில் வளத் திறன்
- காலநிலை நடவடிக்கை, உமிழ்வு முகாமைத்துவம் மற்றும் ஆற்றல் திறன்
- திறன் மேம்பாடு மற்றும் பாதுகாப்பான பணியிடங்கள்
- பசுமை வங்கி மற்றும் பேண்தகு நிதியியல்
- பல்லுயிர் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு
- சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் கல்வியறிவு



**S — சமூகம்**

*மக்கள், சமூகங்கள் மற்றும் உள்ளடக்கம்*

**முக்கிய கவனப் பகுதிகள்**

- ஊழியர் நலன், பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம்
- சமூக மேம்பாடு மற்றும் வாழ்வாதாரங்கள்
- கல்வி மற்றும் சுகாதார முயற்சிகள்
- பின்தங்கிய பிரிவினருக்கான நிதி அணுகல்

**ஆளுகை மற்றும் மேற்பார்வை**
சபை | IRMC | பேண்தகைமைக் குழுக்கள்

**தரவு மற்றும் வெளிப்படுத்தல்**
நிதிச் சாரா தரவு | SLFRS S1 மற்றும் S2 | பசுமை இல்ல வாயு கணக்கீடு

**கூட்டுப்பணிகள்**
ஒழுங்குமுறை அமைப்புகள் | அபிவிருத்தி பங்காளிகள் | அரச சார்பற்ற நிறுவனங்கள் தொழில் நிறுவனங்கள்

**இடர் மற்றும் கட்டுப்பாடுகள்**
ESMS | SRROs மற்றும் CRROs | சொத்துப்பட்டியல் இடர் ஒருங்கிணைப்பு

**மக்கள் மற்றும் திறன்**
பயிற்சி | ESG பணிக்குழுக்கள் | கிளை சக்தி முகாமையாளர்கள்

# நிலைத்தன்மை ஒருங்கிணைத்தல்

## பேண்தகைமைச் செயல்திறன்

பேண்தகைமைக் கொள்கையின் கவனப் பகுதிகளுடன் சீரமைக்கப்பட்ட முயற்சிகளைச் செயல்படுத்துவதன் மூலம் வங்கி தனது பேண்தகைமைச் செயல்திறனைக் கண்காணிக்கிறது. இந்த ஆண்டின் முன்னேற்றமானது சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் பொருளாதார பரிமாணங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பிரதிபலிக்கிறது. இவை ஆளுகை மேற்பார்வை மற்றும் செயல்திறன் கண்காணிப்பு வழிமுறைகளால் ஆதரிக்கப்படுகின்றன. விரிவான தகவல்கள் இந்த அறிக்கையின் தொடர்புடைய பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ளன.

### E பொருளாதாரம்

| கவனப் பகுதி | 2025 இல் முக்கிய முன்னெடுப்புக்கள் | முன்னேற்றம் / சிறப்பம்சங்கள் |
|---|---|---|
| **அறநெறி மற்றும் பொறுப்பான வங்கித்தொழில்** | அறநெறி நடத்தை, ஆளுகை கட்டமைப்புகள் மற்றும் பொறுப்பான வங்கி நடைமுறைகளை வலுப்படுத்துதல். | • வங்கி முழுவதும் மூஜகள், அளவீடுகள் மற்றும் இலக்குகளை உள்ளடக்கிய ESG கொள்கை மற்றும் வரைபடத்தின் தொடர்ச்சியான செயல்படுத்தல்.<br>• ஒழுங்குமுறைகள்.'.நடத்தைக்கோவை மீறல்கள் எதுவும் பதிவாகவில்லை |
| **முன்மதி மிக்க இடர் முகாமைத்துவம்** | நிறுவன இடர் முகாமைத்துவத்தில் பேண்தகைமை தொடர்பான இடர்களை ஒருங்கிணைத்தல். | • IRMC மூலம் பேண்தகைமை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள் (SRROs) குறித்த சபை மட்ட மேற்பார்வை.<br>• இடர் முகாமைத்துவக் கட்டமைப்பிற்குள் சுற்றுச்சூழல் மற்றும் சமூக இடர்கள் உள்வாங்கப்பட்டுள்ளன |
| **பொறுப்பான கடன் வழங்கல் மற்றும் முதலீடு** | பேண்தகு மற்றும் பொறுப்பான நிதியளிப்பு அணுகுமுறைகளை உருவாக்குதல். | • பேண்தகு பிணை வெளியீடுகள் உட்பட பேண்தகு நிதியளிப்பு நடவடிக்கைகளை ஆதரிக்க பேண்தகு நிதியியல் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.<br>• 1,172 கடன் வசதிகள் சுற்றுச்சூழல் மற்றும் சமூக அளவுகோல்களின் கீழ் பரிசோதிக்கப்பட்டன. |
| **நிதி உள்ளடக்கம்** | வங்கிச் சேவை மற்றும் கடனுக்கான அணுகலை ஆதரிக்கும் அனைவரையும் உள்ளடக்கிய நிதி முயற்சிகள் | • நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிதியளிப்பு 'ரூ. 319.9 பில்லியனாக இருந்தது, இது 1.0 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களை ஆதரிக்கிறது.<br>• சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், கிராமப்புற மற்றும் பின்தங்கிய பிரிவினருக்கான நிதியளிப்பு திட்டங்களின் விரிவாக்கம்.<br>• நாடு முழுவதும் 3,000 க்கும் மேற்பட்ட "BOC மித்ரு" குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. |
| **வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்** | பேண்தகைமை அறிக்கையிடல் மற்றும் வெளிப்படுத்தல் நடைமுறைகளை வலுப்படுத்துதல். | • SLFRS S1 மற்றும் SLFRS S2 ஆகியவற்றின் ஆரம்பகால தழுவல், பேண்தகைமை மற்றும் காலநிலை தொடர்பான வெளிப்படுத்தல்களின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துகிறது |

தாக்கம்கொண்டிருந்த மூலதனங்கள்

மூலோபாயத்துடனான தொடர்பு

### E சுற்றுச்சூழல்

| கவனப் பகுதி | 2025 இல் முக்கிய முன்னெடுப்புக்கள் | முன்னேற்றம் / சிறப்பம்சங்கள் |
|---|---|---|
| **செயல்பாடுகளில் வளச் செயற்திறன்** | பயன்பாட்டைக் குறைக்க ஆற்றல் கணக்காய்வுகள், மறுசுழற்சி, உணவு கழிவு குறைப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல். | • 14.4 மெட்ரிக் தொன் காகிதம் மறுசுழற்சி செய்யப்பட்டது.<br>• காகித நுகர்வில் 60% குறைப்பு. |
| **காலநிலை நடவடிக்கை, உமிழ்வு மற்றும் வலுவின் செயற்திறன்** | தளத்திலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி விரிவாக்கம், வலுச் செயற்திறன் நடவடிக்கைகள் மற்றும் உமிழ்வு முகாமைத்துவம். | • 101 சூரியசக்தி மூலம் இயங்கும் கிளைகள்.<br>• 4.3 மெ.வா. நிறுவப்பட்ட சூரியசக்தி திறன்.<br>• 5,650.2 மெ.வா. சூரியசக்தி உற்பத்தி.<br>• 14.4 $tCO_2e$ உமிழ்வு குறைப்பு. |
| **பசுமை வங்கி மற்றும் பேண்தகு நிதியியல்** | பசுமை கடன்கள், பசுமை குத்தகை, பேண்தகு நிதி தயாரிப்பு வழங்கல்கள் மற்றும் ஆலோசனை ஆதரவு. | • ரூ. 73.0 பில்லியன் பெறுமதியான பேண்தகு நிதியியல் சொத்துப்பட்டியல்.<br>• ரூ. 20.0 பில்லியன் பெறுமதியான பேண்தகு பிணைமுறி வெளியீடு.<br>• ரூ. 78.9 மில்லியன் பசுமை வைப்புத் தளம்.<br>• மக்கும் தன்மையுடைய அட்டை அறிமுகப்படுத்தப்பட்டது |
| **பல்லுயிர் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு** | பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள் | • தொடர்ச்சியான கடற்கரை சுத்திகரிப்பு பணிகள்<br>• பல்லுயிர் பெருக்கம் தொடர்பான கொள்கை மேம்பாடுகள் |
| **சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் கல்வியறிவு** | வாடிக்கையாளர் விழிப்புணர்வு திட்டங்கள் மற்றும் பிரச்சாரங்கள் | • வாடிக்கையாளர்களுக்கான ESMS இணக்கப்பாடு மற்றும் பசுமை தயாரிப்புகள் குறித்த ஆலோசனை மற்றும் விழிப்புணர்வு அமர்வுகள் |

தாக்கம்கொண்டிருந்த மூலதனங்கள்

மூலோபாயத்துடனான தொடர்பு

## சமூகம்

| கவனப் பகுதி | 2025 இல் முக்கிய முன்னெடுப்புக்கள் | முன்னேற்றம் / சிறப்பம்சங்கள் |
|---|---|---|
| **ஊழியர் நலன், பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம்** | அனைவரையும் உள்ளடக்கிய பணியாளர் நடைமுறைகள், பாலின சமத்துவம் மற்றும் நலன்புரி முயற்சிகள் | • 8,912 ஊழியர் தளம்<br>• 59% பெண் பணியாளர்கள்<br>• மகப்பேறு விடுப்புக்குப் பிறகு மீண்டும் பணிக்குத் திரும்பியோர் விகிதம் 100மூ<br>• ஊழியர் நலனுக்காக ரூ. 185.8 மில்லியன் முதலீடு |
| **திறன் மேம்பாடு மற்றும் பாதுகாப்பான பணியிடங்கள்** | பயிற்சி, திறன் விருத்தி மற்றும் தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு முயற்சிகள் | • 236,387 பயிற்சி மணித்தியாலங்கள் வழங்கப்பட்டன<br>• பணியிட விபத்துக்கள் எதுவுமில்லை<br>• பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணியிடங்களைப் பேணுவதில் தொடர்ச்சியான கவனம் |
| **சமூக மேம்பாடு மற்றும் வாழ்வாதாரங்கள்** | வாழ்வாதார ஆதரவு, சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் சமூக முதலீட்டு முயற்சிகள் | • சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் ரூ. 780.5 மில்லியன் முதலீடு செய்யப்பட்டது<br>• இந்த ஆண்டில் வாழ்வாதார மற்றும் சமூகத் திட்டங்கள் மூலம் 4,600 க்கும் மேற்பட்ட பயனாளிகள் ஆதரிக்கப்பட்டனர் |
| **கல்வி மற்றும் சுகாதார முயற்சிகள்** | புலமைப்பரிசில்கள், கல்வி ஆதரவு மற்றும் ஆரோக்கியம் தொடர்பான சமூகத் திட்டங்கள் | • “BOC ஹபன“ மற்றும் “BOC Qhd[a“ திட்டங்களின் கீழ் 10,825 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.<br>• 700 க்கும் மேற்பட்ட கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் திட்டங்கள் நடத்தப்பட்டன.<br>• கல்வி மற்றும் சுகாதார மேம்பாட்டில் சுமார் ‘ரூ. 130.0 மில்லியன் முதலீடு செய்யப்பட்டது. அபேக்ஷா (வைத்தியசாலையில் ஒரு தொகுதியின் நிர்மாணிப்பு |
| **பின்தங்கிய பிரிவினருக்கான நிதி அணுகல்** | அனைவரையும் உள்ளடக்கிய வங்கிச் சேவை மற்றும் சமூகப் பாதுகாப்பு தொடர்பான முயற்சிகள் | • அசுவெசும தொடர்பான முயற்சிகள் மூலம் 700,000 க்கும் மேற்பட்ட தனிநபர்கள் ஆதரிக்கப்பட்டனர்.<br>• நடமாடும் வங்கிச் சேவை, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் கிராமப்புற விழிப்புணர்வுத் திட்டங்கள். |

**தாக்கம்கொண்டிருந்த மூலதனங்கள்** | **மூலோபாயத்துடனான தொடர்பு**

### நிதியளிப்புத் தீர்மானங்களில் பேண்தகைமையை ஒருங்கிணைத்தல்

வங்கி எவ்வாறு மூலதனத்தை ஒதுக்குகிறது மற்றும் நிதி இடர்களை நிர்வகிக்கிறது என்பதில் பேண்தகைமை அம்சங்கள் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக அமைகின்றன. இந்த அம்சங்கள் சபை அங்கீகாரம் பெற்ற கொள்கைகள், நிறுவன இடர் முகாமைத்துவ செயல்முறைகள் மற்றும் மேலாண்மை மட்ட மேற்பார்வை ஆகியவற்றின் மூலம் நிதியளிப்புத் தீர்மானங்களில் உள்வாங்கப்பட்டுள்ளன இது வங்கியின் மூலோபாயங்கள் மற்றும் இடர் விருப்பத்துடன் சீரமைக்கப்படுவதை உறுதி செய்கிறது. பேண்தகு பிணை வெளியீடுகள் உட்பட பேண்தகு நிதியளிப்பு நடவடிக்கைகளை ஆதரிப்பதற்காக பேண்தகு நிதியியல் கட்டமைப்பை உருவாக்கியதன் மூலம், இந்த ஆண்டில் வங்கி இந்த அணுகுமுறையை மேலும் வலுப்படுத்தியது. நுளைபு மற்றும் காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள் நிதியளிப்புச் சுழற்சி முழுவதும் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

இது மூலோபாயத் திட்டமிடல் மற்றும் கொள்கை வகுப்பதில் இருந்து நிதியளிப்புத் தீர்மானங்கள், சொத்துப்பட்டியல் மட்டத்திலான கண்காணிப்பு மற்றும் வெளிப்படுத்தல்கள் வரை நீடிக்கிறது.



# நிலைத்தன்மை ஒருங்கிணைத்தல்

## சுற்றுச்சூழல் மற்றும் சமூக இடர் முகாமைத்துவம் மற்றும் பேண்தகு நிதியியல் நடைமுறைகள்

சுற்றுச்சூழல் மற்றும் சமூக அம்சங்கள் என்பவை கட்டமைக்கப்பட்ட பரிசோதனை, திறன் விருத்தி மற்றும் பொறுப்பான தயாரிப்பு வழங்கல்கள் மூலம் வங்கியின் நிதியளிப்பு நடவடிக்கைகளில் உள்வாங்கப்பட்டுள்ளன. இந்த நடைமுறைகள் முன்மதி மிக்க இடர் முகாமைத்துவம், ஒழுங்குமுறை இணக்கப்பாடு மற்றும் பேண்தகு பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றை ஆதரிக்கின்றன.

### சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பரிசோதனை

நிதியளிப்பு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சுற்றுச்சூழல் மற்றும் சமூக இடர்கள் வங்கியின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ அமைப்பின் மூலம் மதிப்பிடப்படுகின்றன. இது ஒழுங்குமுறை மற்றும் உள்நாட்டுக் கொள்கை எதிர்பார்ப்புகளுடன் சீரமைக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைகளைப் பயன்படுத்துகிறது.

**முக்கிய கூறுகள்:**

- வணிகத்திற்காக வழங்கப்படும் கடன் வசதிகளின் சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பரிசோதனை.
- தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு இணங்க மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரைகள் மற்றும் அனுமதிகளைப் பின்பற்றுதல்.
- வாடிக்கையாளர் மற்றும் கடன் வசதி மட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் சமூக இடர்களைக் கண்டறிதல் மற்றும் நிர்வகித்தல்.
- பரிசோதிக்கப்பட்ட கடன் வசதிகளைத் தொடர்ச்சியாகக் கண்காணித்தல்.

| ESMS இணக்கப்பாடு: | |
|---|---|
| வழங்கப்பட்ட கடன் வசதிகளின் எண்ணிக்கை: | 1,165 |
| வழங்கப்பட்ட கடன் வசதிகளின் பெறுமதி: ரூ.பில்லியன் | 322.6 |

சுற்றுச்சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ அமைப்பின் (ESMS) சீரான பயன்பாடானது, உள்நிலைத் திறன் கட்டியெழுப்புதல் மற்றும் பயிற்சித் திட்டங்கள் மூலம் ஆதரிக்கப்படுகிறது.

### ஆலோசனை மற்றும் ஆதரவு சேவைகள்

**நிதியளிப்பிற்கு மேலதிகமாக, வாடிக்கையாளர்களிடையே மேம்பட்ட சுற்றுச்சூழல் செயல்திறன் மற்றும் ஒழுங்குமுறை இணக்கப்பாட்டை ஊக்குவிக்க வங்கி ஆலோசனை ஆதரவை வழங்குகிறது.**

**முக்கிய கூறுகள்:**

- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரைகளைக் கண்காணித்தல் மற்றும் பின்தொடர்தல்.
- மேம்பட்ட சுற்றுச்சூழல் நடைமுறைகளை ஆதரிப்பதற்கான ஆலோசனை சேவைகள்.
- ஒழுங்குமுறை இணக்கப்பாடு மற்றும் சுற்றுச்சூழல் இடர் தணிப்பு குறித்த வழிகாட்டல்.

### வழங்குநர் மற்றும் பங்காளர் பரிசோதனை

பெறுமதிச் சங்கிலி முழுவதும் பொறுப்பான நடைமுறைகளை ஊக்குவிப்பதற்காக, சுற்றுச்சூழல் மற்றும் சமூகக் கருத்தாய்வுகள் வங்கியின் வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

**முக்கிய கூறுகள்:**

- அடிப்படை சுற்றுச்சூழல் மற்றும் சமூக அளவுகோல்களின் கீழ் வழங்குநர்களைப் பரிசோதித்தல்.
- ஒழுங்குமுறை இணக்கப்பாடு, தொழிலாளர் நடைமுறைகள் மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளுதல்.
- வழங்குநர் ஈடுபாடு மற்றும் மேற்பார்வையில் பேண்தகைமை அம்சங்களை ஒருங்கிணைத்தல்.

851 வழங்குநர்கள் சுற்றுச்சூழல் மற்றும் சமூக அளவுகோல்களின் கீழ் பரிசோதிக்கப்பட்டனர்.

### பேண்தகு நிதியியல் முயற்சிகள்

பேண்தகு பொருளாதார நடவடிக்கை மற்றும் பொறுப்பான நுகர்வை ஆதரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட பல்வேறு நிதியியல் தீர்வுகளை வங்கி வழங்குகிறது.

**முக்கிய கூறுகள்:**

- பேண்தகு மற்றும் பொறுப்பான நிதித் தயாரிப்புகள்.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் வள-திறன் மிக்க முதலீடுகளை ஆதரிக்கும் பசுமைக் கடன்கள் (வட்டப் பொருளாதாரத்தை ஊக்குவித்தல்).
- பசுமை குத்தகை தீர்வுகள்.
- சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்க மக்கும் தன்மையுடைய (Biodegradable) அட்டைகளை அறிமுகப்படுத்துதல்.
- மூலதனச் சந்தைத் தயாரிப்புகள்.

| பேண்தகு தயாரிப்புகள் | (ரூ. பில்லியன்) |
|---|---|
| பேண்தகு கடன் வழங்கல்: | 73.0 |
| பேண்தகு பிணைமுறிகள | 20.0 |

## 2025 ஆம் ஆண்டின் மேம்படுத்தல்கள் மற்றும் செழுமைப்படுத்தல்கள்

**ஆளுகை மற்றும் மேற்பார்வை**

- ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் ஊடாக, காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளுக்கான சபை மட்டத்திலான மேற்பார்வையை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்துதல்.
- SLFRS S1 மற்றும் SLFRS S2 ஆகியவற்றை முன்கூட்டியே ஏற்றுக்கொண்டதன் மூலம் காலநிலை தொடர்பான விடயங்களில் ஆளுகை, இடர் முகாமைத்துவம் மற்றும் வெளிப்படுத்தல் தயார்நிலை ஆகியவற்றை வலுப்படுத்துதல்.
- பேண்தகைமை மற்றும் காலநிலை தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு ஆதரவளிப்பதற்காக SLFRS S1 மற்றும் SLFRS S2 ஆகியவற்றுக்கான பிரத்தியேகமான ஒரு பணிக்குழுவை நிறுவுதல்.
- பேண்தகு நிதியியல் கட்டமைப்பை உள்நாட்டிலேயே உருவாக்குதல் இதன் மூலம் பேண்தகு பிணை வழங்கல்களை இலங்கை மத்திய வங்கியின் இலங்கை பசுமை நிதியியல் வகைப்பட்டியல் (மே 2022) மற்றும் ஐஊஆயு வழங்கிய பசுமைப் பிணைக் கொள்கைகள் - ஜூன் 2025, சமூகப் பிணைக் கொள்கைகள் - ஜூன் 2025 உள்ளடங்கலான சர்வதேச தரநிலைகளுடன் சீரமைத்தல்.
- வங்கியின் முக்கிய செயல்பாடுகளில் பேண்தகைமை முன்னுரிமைகளைச் செயல்படுத்துவதற்கும், சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை கொள்கை மற்றும் வீதி வரைபடத்தை அமுல்படுத்துவதற்கும் ஏதுவாக ESG முக்கிய செயல்திறன் காட்டிகள் (KPIs), இலக்குகள் மற்றும் செயல் திட்டங்களை உருவாக்குதல்.

*(பக்கங்கள் 85-106 இல் உள்ள SLFRS நிலைத்தன்மை தொடர்பான நிதியியல் வெளிப்பாடுகளைப் பார்க்கவும்).*

**ஒழுங்குமுறை சீரமைத்தல்**

- நிதியளிக்கப்பட்ட உமிழ்வுகளை (Financed emissions) அளவிடும் மற்றும் வெளிப்படுத்தும் வங்கியின் திறனை வலுப்படுத்துவதற்காக கார்பன் கணக்கியல் நிதியியல் கூட்டாண்மை உடன் பதிவு செய்தல்.
- இலங்கை நிலைபேறுதகு வலு அதிகாரசபையினால் வெளியிடப்பட்ட குறிப்பிட்ட எரிசக்தி அளவுகோல் ஒழுங்குமுறையை (2023 இன் இலக்கம் 01) நடைமுறைப்படுத்துதல் இதில் பரிந்துரைக்கப்பட்ட செயல்திறன் அளவுகோலுக்கு எதிராக எரிசக்திச் செயல்திறனைக் கண்காணிக்க கிளைகள் முழுவதும் எரிசக்தி முகாமைத்துவ அதிகாரிகளை நியமிப்பதும் உள்ளடங்கும்.
- பேண்தகைமை செயல்திறன் கண்காணிப்பு மற்றும் வெளிப்படுத்தல்களுக்கு ஆதரவாக, வங்கியின் உள்நிலை நிதி சாரா தரவு முகாமைத்துவ அமைப்புகளை வலுப்படுத்துதல்.

*பக்கங்கள் 85-106 இல் உள்ள SLFRS நிலைத்தன்மை தொடர்பான நிதியியல் வெளிப்பாடுகளைப் பார்க்கவும்).*

**பொருண்மை மற்றும் பங்குதாரர் ஈடுபாடு**

- பேண்தகைமை மூலோபாயம் மற்றும் வெளிப்படுத்தல்களை வழிநடத்துவதற்காக, 42 துணைத் தலைப்புகளால் ஆதரிக்கப்படும் 10 முக்கிய பொருண்மை தலைப்புகளை அடையாளம் கண்டு, வங்கியின் பொருண்மை விடயங்கள் கட்டமைப்பை நிறுவுதல்.
- வாடிக்கையாளர்கள், சபை உறுப்பினர்கள், மேலாண்மை, ஒழுங்குபடுத்துநர்கள், கொடை முகவர் நிலையங்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர் குழுக்களின் கருத்துக்களை உள்வாங்கி, பங்குதாரர் ஈடுபாடு மற்றும் பொருண்மை மதிப்பீட்டுச் செயல்பாட்டை நிறைவு செய்தல்.
- முக்கியமான பேண்தகைமை முன்னுரிமைகளை வங்கியின் மூலோபாய திட்டமிடல் செயல்முறையுடன் ஒருங்கிணைத்தல் இது ESG நோக்கங்களுக்கும் நீண்டகால வணிக மூலோபாயத்திற்கும் இடையிலான சீரமைப்பை வலுப்படுத்துகிறது.

*(பக்கங்கள் 57-60 இல் உள்ள பங்குதாரர் ஈடுபாடு மற்றும் பக்கங்கள் 61-64 இல் உள்ள பொருண்மை மதிப்பீடு ஆகியவற்றைப் பார்க்கவும்).*

# நிலைத்தன்மை ஒருங்கிணைத்தல்

## முன்னோக்கிய பாதை

இந்த ஆண்டில் நிறுவப்பட்ட பலப்படுத்தப்பட்ட ஆளுகை, கட்டமைப்புகள் மற்றும் திறன்களின் அடிப்படையில், வங்கி தனது மூலோபாயம், செயல்பாடுகள் மற்றும் நிதியளிப்பு நடவடிக்கைகள் முழுவதும் பேண்தகைமையை ஆழமாக உள்வாங்குவதைத் தொடரும். முக்கிய கவனப் பகுதிகள் பின்வருமாறு:

### ஒருங்கிணைந்த நுளுபு கட்டமைப்பிற்கு மாறுதல்

- புதிய சபை மட்ட பேண்தகைமைக் குழுவின் ஊடாக ஆளுகை கட்டமைப்பை மேம்படுத்துதல்.
- தற்போதுள்ள பேண்தகைமைக் கொள்கையை (விரிவான மற்றும் பரந்த அளவிலானதாக மேலும் வலுப்படுத்துதல்.

### ESG மூலோபாயம் மற்றும் வரைபடம் (2026–2030)

- ஒருங்கிணைந்த சிந்தனைக்கான எமது உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையிலும், எமது மூலோபாய முன்னுரிமைகள் மற்றும் செயல்திறனை ESG கருத்தாய்வுகள் வழிநடத்துவதை உறுதிசெய்யும் வகையிலும், ESG வரைபடத்தை வங்கியின் 2026-2030 மூலோபாயத் திட்டத்தின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக இணைத்தல்.

### அறிக்கையிடல் மற்றும் வெளிப்படுத்தல்களை வலுப்படுத்துதல்

- SLFRS பேண்தகைமை தொடர்பான தரநிலைகளுடன் சீரமைக்கப்பட்ட, நிதியளிக்கப்பட்ட உமிழ்வுகள் (Financed emissions) உள்ளிட்ட காலநிலை மற்றும் பேண்தகைமை தொடர்பான அளவீடுகளை படிப்படியாக உருவாக்குதல்.
- சீரான அளவீடு மற்றும் அறிக்கையிடலை ஆதரிப்பதற்காக உள்நாட்டுத் தரவு அமைப்புகளைத் தொடர்ந்து வலுப்படுத்துதல்.

### பேண்தகு நிதியியல் மற்றும் உள்ளடக்கத்தை ஆழமாக்கல்

- ஒழுங்குமுறை வழிகாட்டல்கள் மற்றும் தேசிய முன்னுரிமைகளுக்கு ஏற்ப, பேண்தகு நிதியியல் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வங்கி முயற்சிகளைத் தொடர்ந்து விரிவாக்குதல்.
- நிதியளிப்புத் தீர்மானங்கள் மற்றும் சொத்துப்பட்டியல் மட்டத்திலான கண்காணிப்பில் ESG அம்சங்களை மேலும் ஒருங்கிணைத்தல்.

### நிறுவனம் முழுவதும் ESG செயல்திறனை உள்வாங்குதல் புதிய சபை மட்ட பேண்தகைமைக் குழுவின் மூலம் ஆளுகை கட்டமைப்பை மேம்படுத்துதல்.

- தற்போதுள்ள பேண்தகைமைக் கொள்கையை விரிவான மற்றும் பரந்த அளவிலானதாக மேலும் வலுப்படுத்துதல்.
- கணக்காய்வு மற்றும் உறுதிப்படுத்தல் (Audit and Assurance) தேவைகளுடன் இணக்கப்பாட்டை உறுதி செய்தல்.
- பரந்த செயல்திறன் முகாமைத்துவ நடைமுறைகளின் ஒரு பகுதியாக, கிளை வலையமைப்பு முழுவதும் பேண்தகைமைச் செயல்திறனை அங்கீகரிப்பதற்கும் வலுப்படுத்துவதற்குமான வழிமுறைகளை ஆராய்தல்.
- செயல்பாட்டு எரிசக்தி கணக்காய்வுகளின் அடிப்படையில், இலக்கு வைக்கப்பட்ட எரிசக்தி திறன் மேம்பாடுகளைச் செயல்படுத்துதல்.

## ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

உள்நாட்டு ரீதியாக முறைமை ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வங்கி என்ற வகையில், இலங்கை வங்கி தனது நிதியளிப்பு நடவடிக்கைகள், செயல்பாடுகள் மற்றும் ஆளுகை நடைமுறைகள் ஊடாக தேசிய மற்றும் உலகளாவிய நிலையான அபிவிருத்தி முன்னுரிமைகளுக்குப் பங்களிப்பு செய்கிறது. இந்த ஆண்டில், வங்கியின் பேண்தகைமை முயற்சிகள் ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கு ஆதரவளித்ததுடன், ஒரு பொறுப்பான நிதி நிறுவனம் என்ற வகையில் அதன் பங்கின் அளவையும் பரப்பையும் வெளிப்படுத்தின.

கீழே உள்ள அட்டவணையானது, இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய முயற்சிகள் மற்றும் அவை தொடர்புடைய நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் இலக்குகளுடன் எவ்வாறு சீரமைக்கப்பட்டுள்ளன என்பதை ஒரு ஒருங்கிணைந்த வரைபடமாக வழங்குகிறது. இந்த வரைபடமானது பங்களிப்பு மற்றும் சீரமைப்பின் பகுதிகளை விளக்குகிறது. ஒவ்வொரு இலக்கிற்கும் இடையிலான பங்களிப்பின் தன்மை மற்றும் ஆழம் மாறுபடலாம் என்பதையும், தரவு அமைப்புகள் மற்றும் வழிமுறைகள் தொடர்ந்து முதிர்ச்சியடையும் போது பாதிப்பு அளவீடு படிப்படியாக மேம்படுத்தப்படும் என்பதையும் இது அங்கீகரிக்கிறது.

## நிலையான அபிவிருத்தி இலக்குகள் பங்களிப்பு வரைபடம்

| | நிலையான அபிவிருத்தி இலக்கு | முக்கிய முன்னெடுப்புக்கள் | தொடர்புடைய SDG இலக்குகள் | பங்களிப்பின் தன்மை |
|---|---|---|---|---|
| 1 NO POVERTY | வறுமையின்மை | • சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் கிராமப்புற விழிப்புணர்வு உள்ளிட்ட நிதி உள்ளடக்கல் முயற்சிகள்<br>• அசுவெசும தொடர்பான திட்டங்கள் | 1.4 – நிதிச் சேவைகளுக்கான அணுகல் | 🟢 🟠 |
| 2 ZERO HUNGER | பசியின்மை | • சமூக மேம்பாடு மற்றும் வாழ்வாதார ஆதரவு திட்டங்கள் | 2.3 - சிறு அளவிலான உற்பத்தியாளர்களின் வருமானம் | 🟢 🟠 |
| 3 GOOD HEALTH AND WELL-BEING | நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு | • ஊழியர் நலத்திட்டங்கள்<br>• சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் சுகாதார உட்கட்டமைப்பு ஆதரவு (புற்றுநோய் வார்டு முதலீடுகள் உள்ளடங்கலாக)<br>• சமூக சுகாதார முயற்சிகள் | 3.4, 3.8 - மன ஆரோக்கியம், தரமான சுகாதாரச் சேவைக்கான அணுகல் | 🟢 🟠 |
| 4 QUALITY EDUCATION | தரமான கல்வி | • புலமைப்பரிசில்கள் மற்றும் கல்வி ஆதரவு திட்டங்கள் | 4.3, 4.4 - கல்வி மற்றும் திறன்களுக்கான அணுகல் | 🟢 |
| 5 GENDER EQUALITY | பாலின சமத்துவம் | • பணியாளர்களிடையே பாலின சமத்துவம், பாகுபாடற்ற கொள்கை<br>• உள்ளடக்கிய மற்றும் டிஜிட்டல் நிதி முயற்சிகள் மூலம் பெண் தொழில்முனைவோருக்கான ஆதரவு | 5.1, 5.5 - பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டு வருதல், பெண்களின் பங்கேற்பு | 🟢 🟠 🟣 |
| 6 | சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம் | • நீர் தொடர்பான உட்கட்டமைப்பு மேம்பாடு | 6.1 - பாதுகாப்பான குடிநீருக்கான அணுகல் | 🟢 🟠 |
| 7 AFFORDABLE AND CLEAN ENERGY | மலிவான மற்றும் சுத்தமான எரிசக்தி | • சூரிய சக்தி நிறுவல்கள்<br>• பசுமை நிதியியல்<br>• புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீட்டிற்கான ஆதரவு | 7.2, 7.3 - புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, எரிசக்தி திறன் | 🟢 🟠 |
| 8 DECENT WORK AND ECONOMIC GROWTH | கௌரவமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி | • சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிதியளிப்பு<br>• திறன் மேம்பாடு<br>• பாதுகாப்பான பணியிடங்கள் | 8.3, 8.5, 8.8 - உற்பத்தித் திறன் கொண்ட வேலைவாய்ப்பு, தொழிலாளர் தரநிலைகள் | 🟢 🟠 |
| 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE | தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு | • டிஜிட்டல் நிதி உட்கட்டமைப்பு மேம்பாடுகள்<br>• BOC கம்மன<br>• தொழில்நுட்பம் சார்ந்த சேவை வழங்கல்<br>• பேண்தகு நிதியியல் | 9.1, 9.5 - மீள்திறன் கொண்ட உட்கட்டமைப்பு, புத்தாக்கம் | 🟢 🟠 |
| 10 REDUCED INEQUALITIES | குறைக்கப்பட்ட சமத்துவமின்மை | • டிஜிட்டல் அணுகல் முயற்சிகள்<br>• பின்தங்கிய பிரிவினருக்கான உள்ளடக்கிய வங்கிச் சேவை<br>• பெண் தொழில்முனைவோருக்கான விழிப்புணர்வு | 10.2, 10.3 - சமூக மற்றும் பொருளாதார உள்ளடக்கம் | 🟢 🟠 |

# நிலைத்தன்மை ஒருங்கிணைத்தல்

| | நிலையான அபிவிருத்தி இலக்கு | முக்கிய முன்னெடுப்புக்கள் | தொடர்புடைய SDG இலக்குகள் | பங்களிப்பின் தன்மை |
|---|---|---|---|---|
| 11 | பேண்தகு நகரங்கள் மற்றும் சமூகங்கள் | • பசுமைக் கட்டிடங்கள்<br>• சமூக மேம்பாட்டு முயற்சிகள்<br>• பேரிடர் மீள்திறன் ஆதரவு<br>• பேரிடர் மீள்திறன் திட்டங்களில் பங்காளராக இருத்தல் | 11.3, 11.5 – உள்ளடக்கிய சமூகங்கள், மீள்திறன் | 🟢 🟠 |
| 12 | பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி | • வளத் திறன் முயற்சிகள்<br>• கழிவு குறைப்பு<br>• மக்கும் தன்மையுடைய அட்டைகள் | 12.2, 12.5, 12.6 – வளத் திறன், கழிவு குறைப்பு | 🟢 🟠 |
| 13 | காலநிலை நடவடிக்கை | • செயல்பாட்டு உமிழ்வு குறைப்பு முயற்சிகள்<br>• காலநிலை இடர் ஒருங்கிணைப்பு<br>• நிதியளிக்கப்பட்ட உமிழ்வு தயார்நிலை (ஊயுகு-உடன் சீரமைக்கப்பட்டது) | 13.2, 13.3 – காலநிலை ஒருங்கிணைப்பு மற்றும் விழிப்புணர்வு | 🟢 🟠 🟣 |
| 14 | நீருக்கடியிலான வாழ்க்கை | • கடற்கரை சுத்திகரிப்பு திட்டங்கள்<br>• கடல்சார் பாதுகாப்பு கூட்டணிகள் மற்றும் விழிப்புணர்வு முயற்சிகள் | 14.1 – கடல் மாசடைதலைக் குறைத்தல் | 🟢 |
| 15 | நிலத்திலான வாழ்க்கை | • பல்லுயிர் பாதுகாப்பு முயற்சிகள்<br>• மரம் நடுதல்<br>• சுற்றுச்சூழல் பாதுகாப்பு | 15.1, 15.5 – சுற்றுச்சூழல் பாதுகாப்பு | 🟢 |
| 16 | அமைதி, நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள் | • அறநெறி சார்ந்த வங்கி நடைமுறைகள்<br>• ஆளுகை கட்டமைப்புகள்<br>• வெளிப்படைத்தன்மை மற்றும் வெளிப்படுத்தல்கள் | 16.5, 16.6 – பொறுப்புக்கூறல் மற்றும் நிறுவனங்கள் | 🟣 |
| 17 | இலக்குகளுக்கான பங்காளர்கள் | • ஒழுங்குமுறை அமைப்புகள், அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழில் அமைப்புகள் மற்றும் அபிவிருத்தி பங்காளர்களுடனான ஒத்துழைப்பு | 17.16, 17.17 – பலதரப்பு பங்குதாரர் கூட்டணிகள் | 🟢 🟣 |

குறியீடு - பங்களிப்பின் தன்மை 🟢 செயல்பாட்டு ரீதியானது 🟠 நிதியிடல் ரீதியானது 🟣 ஆளுகை ரீதியானது

# SLFRS நிலைம்மன்மை தொடர்பான நிதியியல் வெளிப்படுத்தல்கள்

## இலங்கை வங்கியின் SLFRS S1 மற்றும் S2 என்பவையின் தழுவல் பயணம்




2025 ஆம் ஆண்டில், இலங்கை வங்கியானது SLFRS S1 பேண்தகைமை தொடர்பான நிதித் தகவல்களை வெளிப்படுத்துவதற்கான பொதுவான தேவைகள் மற்றும் SLFRS S2 காலநிலை தொடர்பான வெளிப்படுத்தல்கள் ஆகிய பேண்தகைமை தொடர்பான நிதி வெளிப்படுத்தல் தரநிலைகளுடன் தானாகவே முன்வந்து சீரமைக்கத் தொடங்கியது. இது வெளிப்படையான, சீரான மற்றும் உயர்தர காலநிலை தொடர்பான நிதி வெளிப்படுத்தல்களுக்கான வங்கியின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. இந்த ஆரம்ப கட்டமானது, SLFRS S2 இன் தேவைகளுக்கு ஏற்ப, காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளை அடையாளம் காணுதல், மதிப்பிடுதல் மற்றும் வெளிப்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

2025 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில், வங்கி தனது தற்போதைய ஆளுகை, இடர் முகாமைத்துவம் மற்றும் பேண்தகைமை கட்டமைப்புகளின் ஆதரவுடன், காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளை மதிப்பிடுவதற்கு முன்னுரிமை அளித்தது.

இந்தத் தரநிலைகளை நடைமுறைப்படுத்துவதில், தரவுத் தரம், வழிமுறைகள் மற்றும் உள்நிலை அமைப்புகளைப் படிப்படியாக வலுப்படுத்துவதற்காக, SLFRS S1 மற்றும் S2 இன் கீழ் கிடைக்கும் இடைக்கால நிவாரண ஏற்பாடுகளைப் பயன்படுத்தி, வங்கி ஒரு படிநிலையான மற்றும் விகிதாசார அணுகுமுறையைக் கையாண்டது.

இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக, இலங்கை வங்கி 2025 இல் கார்பன் கணக்கியல் நிதியியல் கூட்டாண்மை (PCAF) அமைப்பில் இணைந்தது. இது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளைப் பயன்படுத்தி, நிதியளிக்கப்பட்ட உமிழ்வுகளை அளவிடும் மற்றும் நிர்வகிக்கும் வங்கியின் திறனை மேம்படுத்துகிறது. காலநிலை தொடர்பான அளவீடுகள் மற்றும் இலக்குகளை படிப்படியாக விரிவுபடுத்துவதற்கு இம்மாற்றம் ஒரு வலுவான அடித்தளத்தை வழங்குகிறது.

2026 ஆம் ஆண்டில், வங்கி காலநிலைக்கும் அப்பாற்பட்டு, அதன் எதிர்கால வாய்ப்புகளைப் பாதிக்கக்கூடிய பிற பொருண்மை சார்ந்த பேண்தகைமை இடர்கள் மற்றும் வாய்ப்புகளை (SRROs) படிப்படியாக அடையாளம் கண்டு வெளிப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

2027 ஆம் ஆண்டு முதல், வங்கி **கட்டம்** 3 நிதியளிக்கப்பட்ட உமிழ்வுகளை வெளிப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இது SLFRS S2 இன் கீழ் அதன் காலநிலை தொடர்பான வெளிப்படுத்தல்களின் முழுமை மற்றும் சீரான தன்மையை மேலும் மேம்படுத்தும்.

SLFRS S1 மற்றும் S2 இன் இக்கட்டமைக்கப்பட்ட மற்றும் படிநிலையான ஏற்பின் மூலம், இலங்கை வங்கி பேண்தகைமை மற்றும் காலநிலை விடயங்களை தனது ஆளுகை, மூலோபாயம் மற்றும் இடர் முகாமைத்துவ செயல்முறைகளில் தொடர்ந்து ஒருங்கிணைத்து வருவதுடன், நீண்டகால மீள்திறன் மற்றும் பொறுப்பான வங்கித்தொழிலை ஆதரிக்கிறது.

# SLFRS நிலைத்தன்மை தொடர்பான நிதியியல் வெளிப்படுத்தல்கள்

EY
Shape the future with confidence

Ernst & Young
Chartered Accountants
Rotunda Towers
No. 109, Galle Road
P.O. Box 101
Colombo 03, Sri Lanka

Tel: +94 11 246 3500
Fax: +94 11 768 7869
Email: eysl@lk.ey.com
ey.com

## இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபைக்கு சுயாதீன நிபுணரால் வழங்கப்படும் 2025 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த வருடாந்த அறிக்கை மீதான உறுதிப்பாட்டு அறிக்கை

### எல்லை (Scope)

2025 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த இலங்கை வங்கியின் ("நிறுவனம்") ஒருங்கிணைந்த வருடாந்த அறிக்கையில் ("அறிக்கை") உள்ளடக்கப்பட்டுள்ள "SLFRS பேண்தகைமை தொடர்பான நிதி வெளிப்படுத்தல்கள்" ("கருப்பொருள் விடயம்") குறித்து அறிக்கையிடுவதற்காக, இலங்கை உறுதிப்பாட்டு நிச்சயித்தல் தரநிலைகளின்படி வரையறுக்கப்பட்ட "வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு நிச்சயித்தல் ஈடுபாட்டை" மேற்கொள்வதற்கு இலங்கை வங்கியினால் நாங்கள் நியமிக்கப்பட்டுள்ளோம்.

எமது பணிப்பகுதியின் எல்லையை வரையறுக்கும் முன்னைய பந்தியில் விவரிக்கப்பட்டுள்ளதைத் தவிர, அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள் குறித்து நாங்கள் உறுதிப்பாட்டு நடைமுறைகளைச் செய்யவில்லை எனவே, அந்தத் தகவல்கள் குறித்து நாங்கள் எந்த முடிவையும் தெரிவிக்கவில்லை.

### இலங்கை வங்கியினால் பயன்படுத்தப்பட்ட அளவுகோல்கள்

கருப்பொருள் விடயத்தைத் தயாரிப்பதில், இலங்கை வங்கி இலங்கை பேண்தகைமை வெளிப்படுத்தல் தரநிலைகளான SLFRS S1 "பேண்தகைமை தொடர்பான நிதித் தகவல்களை வெளிப்படுத்துவதற்கான பொதுவான தேவைகள் மற்றும் SLFRS S2" காலநிலை தொடர்பான வெளிப்படுத்தல்கள் ("அளவுகோல்கள்") ஆகியவற்றைப் பயன்படுத்தியுள்ளது.

இந்த அளவுகோல்கள், பொது நோக்கத்திற்கான நிதி அறிக்கைகளின் முதன்மை பயனர்கள் நிறுவனத்திற்கு வளங்களை வழங்குவது தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு பயனுள்ள காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள் பற்றிய பொருண்மை தகவல்களை வெளிப்படுத்துவதற்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, இந்தக் கருப்பொருள் தகவல் மற்றொரு நோக்கத்திற்குப் பொருத்தமானதாக இல்லாமலிருக்கலாம்.

### இலங்கை வங்கியின் பொறுப்புகள்

அளவுகோல்களைத் தெரிவு செய்வதற்கும், அனைத்து பொருண்மை அம்சங்களிலும் அந்த அளவுகோல்களுக்கு இணங்க கருப்பொருள் விடயத்தை முன்வைப்பதற்கும் இலங்கை வங்கியின் முகாமைத்துவப் பொறுப்பாகும். மோசடி அல்லது பிழை காரணமாக ஏற்படுபவை உட்பட, பொருண்மை தவறான கூற்றுகள் இல்லாத வகையில் கருப்பொருள் விடயத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல், போதுமான பதிவுகளைப் பராமரித்தல் மற்றும் மதிப்பீடுகளைச் செய்தல் ஆகியவையும் இந்தப் பொறுப்பில் அடங்கும்.

### ஏர்ன்ஸ்ட் அண்ட் யங் (Ernst & Young) இன் பொறுப்புகள்

நாங்கள் பெற்ற சான்றுகளின் அடிப்படையில் கருப்பொருள் விடயத்தின் சமர்ப்பிப்பு குறித்து ஒரு முடிவைத் தெரிவிப்பதே எமது பொறுப்பாகும்.

வரலாற்று நிதித் தகவல்களின் தணிக்கைகள் அல்லது மதிப்பாய்வுகள் தவிர்ந்த ஏனைய உறுதிப்பாட்டு ஈடுபாடுகளுக்கான இலங்கை தரநிலைக்கு (SLSAE 3000 (திருத்தப்பட்டது)) இணங்கவும், 2026 மார்ச் 06 அன்று இலங்கை வங்கியுடன் உடன்படிக்கப்பட்ட பணி நிபந்தனைகளுக்கு அமைவாகவும் எமது பணியை முன்னெடுத்தோம். கருப்பொருள் விடயமானது அளவுகோல்களுக்கு இணங்க அமைவதற்குத் தேவையான ஏதேனும் பொருண்மை மாற்றங்கள் குறித்து நாங்கள் அறிந்திருக்கின்றோமா என்பது குறித்து ஒரு முடிவைத் தெரிவிப்பதற்கும், அறிக்கை ஒன்றை வெளியிடுவதற்கும் எமது பணியைத் திட்டமிட்டுச் செயல்படுத்துவதை அந்தத் தரநிலைகள் கோருகின்றன. நடைமுறைகளின் தன்மை, காலம் மற்றும் அளவு ஆகியவை எமது தொழில்முறைத் தீர்மானத்தைப் பொறுத்தது இதில் மோசடி அல்லது பிழை காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மை தவறான கூற்றுகளின் இடர் மதிப்பீடும் அடங்கும்.

எமது வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு முடிவுகளுக்கு ஒரு அடிப்படையை வழங்குவதற்கு நாங்கள் பெற்ற சான்றுகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என நாங்கள் நம்புகிறோம்.

### எமது சுயாதீனம் மற்றும் தர முகாமைத்துவம்

நாங்கள் எமது சுயாதீனத்தைப் பேணியுள்ளதுடன், இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தினால் (CA Sri Lanka) வெளியிடப்பட்ட தொழில்முறை கணக்காளர்களுக்கான அறநெறிக் கோவையின் தேவைகளை நாங்கள் பூர்த்தி செய்துள்ளோம் என்பதையும், இந்த உறுதிப்பாட்டுப் பணியைச் செய்வதற்குத் தேவையான திறன்களையும் அனுபவத்தையும் கொண்டுள்ளோம் என்பதையும் உறுதிப்படுத்துகிறோம்.

EY நிறுவனம் தர முகாமைத்துவத் தரநிலைகளைப் பின்பற்றுகிறது இது அறநெறித் தேவைகள், தொழில்முறைத் தரநிலைகள் மற்றும் பொருந்தக்கூடிய சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுடன் கூடிய இணக்கப்பாடு தொடர்பான கொள்கைகள் அல்லது நடைமுறைகள் உள்ளிட்ட தர முகாமைத்துவ அமைப்பை வடிவமைத்து, செயல்படுத்தி மற்றும் இயக்குவதை எமக்கு அவசியமாக்குகிறது.

### மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் விவரிப்பு

வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டுப் பணியில் மேற்கொள்ளப்படும் நடைமுறைகள், நியாயமான உறுதிப்பாட்டுப் பணியிலிருந்து தன்மை மற்றும் கால அளவில் வேறுபடுவதுடன், அளவில் குறைந்தவையாகவும் இருக்கும். அதன் விளைவாக, வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டுப் பணியில் பெறப்படும் உறுதிப்பாட்டின் அளவு, ஒரு நியாயமான உறுதிப்பாட்டுப் பணி செய்யப்பட்டிருந்தால்

EY
Shape the future
with confidence

பெறப்பட்டிருக்கக்கூடிய உறுதிப்பாட்டை விட கணிசமாகக் குறைவானதாகும். எமது நடைமுறைகள் ஒரு வரையறுக்கப்பட்ட அளவிலான உறுதிப்பாட்டைப் பெறுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன் இவை ஒரு நியாயமான அளவிலான உறுதிப்பாட்டை வழங்குவதற்குத் தேவையான அனைத்து சான்றுகளையும் வழங்காது.

எமது நடைமுறைகளின் தன்மை மற்றும் அளவைத் தீர்மானிக்கும் போது மேலாண்மையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயல்திறனை நாங்கள் கருத்தில் கொண்ட போதிலும், எமது உறுதிப்பாட்டுப் பணியானது உள்ளகக் கட்டுப்பாடுகள் குறித்து உறுதிப்பாட்டை வழங்குவதற்காக வடிவமைக்கப்படவில்லை. எமது நடைமுறைகளில், கட்டுப்பாடுகளைச் சோதிப்பதோ அல்லது தகவல் தொழில்நுட்ப (IT) அமைப்புகளுக்குள் தரவுகளின் தொகுப்பு அல்லது கணக்கீடுகளைச் சரிபார்ப்பது தொடர்பான நடைமுறைகளைச் செய்வதோ உள்ளடக்கப்படவில்லை.

ஒரு வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டுப் பணியானது, முதன்மையாகக் கருப்பொருள் விடயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல்களைத் தயாரிப்பதற்குப் பொறுப்பான நபர்களிடம் விசாரணைகளை மேற்கொள்வது மற்றும் பகுப்பாய்வு மற்றும் பிற பொருத்தமான நடைமுறைகளைப் பயன்படுத்துவது ஆகியவற்றை உள்ளடக்கியது.

## எமது நடைமுறைகளில் பின்வருவன அடங்கும்:

நிறுவனத்தின் வணிகம், பெறுமதித் தொடர் மற்றும் பேண்தகைமை அறிக்கையிடல் செயல்முறை ஆகியவற்றைப் புரிந்துகொள்வதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய மேலாண்மைப் பணியாளர்கள் மற்றும் தொடர்புடைய ஊழியர்களுடன் நேர்காணல்களை நடத்தினோம்.

தரவுகளின் பகுப்பாய்வு நடைமுறைகளை மேற்கொண்டதுடன், நாங்கள் கண்டறிந்த ஏதேனும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளுக்கான விளக்கங்களைப் பெறுவதற்கு மேலாண்மையிடம் விசாரணைகளை மேற்கொண்டோம்.

நியாயமான சமர்ப்பிப்பு, பொருண்மை, அறிக்கையிடும் நிறுவனம் மற்றும் இணைக்கப்பட்ட தகவல்கள் உள்ளிட்ட SLFRS S1 இன் கருத்தியல் அடித்தளம் (Conceptual Foundation) தொடர்பான நிறுவனத்தின் வெளிப்படுத்தல்களைப் புரிந்துகொள்வதற்கான நடைமுறைகளைச் செய்தோம்.

காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளைக் கண்காணிக்கவும், நிர்வகிக்கவும் மற்றும் மேற்பார்வையிடவும் நிறுவனத்தால் பயன்படுத்தப்படும் ஆளுகை செயல்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகளைப் பொருத்தமான சான்றுகளின் ஆதரவுடன் புரிந்துகொள்வதற்கான நடைமுறைகளை முன்னெடுத்தோம்.

ஆளுகை தொடர்பான வெளிப்படுத்தல்களின் உள்ளடக்கத்துடன் இணக்கப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக, நிதியாண்டின் பணிப்பாளர் சபை மற்றும் சபை கணக்காய்வு குழு கூட்டங்களின் அறிக்கைகளை (Minutes) ஆய்வு செய்தோம்.

அடையாளம் காணப்பட்ட காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளை நிர்வகிப்பதற்கான நிறுவனத்தின் மூலோபாயத்தைப் பொருத்தமான சான்றுகள் மற்றும் கணக்கீடுகளின் ஆதரவுடன் புரிந்துகொள்வதற்கான நடைமுறைகளை நடத்தினோம்.

காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளை அடையாளம் காணுதல், மதிப்பிடுதல், முன்னுரிமை அளித்தல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றுக்கான நிறுவனத்தின் செயல்முறைகள், ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவக் கட்டமைப்பில் அவற்றின் ஒருங்கிணைப்பு உட்பட, குறித்த விளக்கங்கள் மற்றும் ஆதரவுச் சான்றுகளைப் பெறுவதற்குப் பகுப்பாய்வு நடைமுறைகளை மேற்கொண்டோம்.

அடையாளம் காணப்பட்ட காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள் தொடர்பிலான நிறுவனத்தின் செயல்திறனை மதிப்பிடுவதற்கும், உறுதிப்பாட்டுப் பணியின் போது நிறுவனம் நிர்ணயித்த ஏதேனும் இலக்குகளை நோக்கிய முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கும் விளக்கங்கள் மற்றும் ஆதரவுச் சான்றுகளைத் திரட்ட பகுப்பாய்வு நடைமுறைகளை நடத்தினோம்.

நிறுவனத்தின் பேண்தகைமை தொடர்பான நிதி வெளிப்படுத்தல்களைத் தயாரிக்கும் செயல்முறையிலுள்ள தீர்மானங்கள் (துரனபஅநவெள) மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் குறித்த வெளிப்படுத்தல்களை மதிப்பிடுவதற்கான நடைமுறைகளை மேற்கொண்டோம்.

சூழ்நிலைகளுக்கு அவசியமென நாங்கள் கருதிய பிற நடைமுறைகளையும் நாங்கள் செய்தோம்.

## விடயத்தின் முக்கியத்துவம்

பொருளாதார, சுற்றுச்சூழல், சமூக மற்றும் அறிவுசார் மூலதன முகாமைத்துவத் தரவுகள்.'. தகவல்கள் அவற்றின் தன்மை மற்றும் அத்தகைய தரவுகளைத் தீர்மானிக்க, கணக்கிட மற்றும் மதிப்பிடப் பயன்படுத்தப்படும் முறைகளைக் கருத்தில் கொள்ளும்போது உள்ளார்ந்த வரம்புகளுக்கு உட்பட்டவை. இத்தகைய உள்ளார்ந்த வரம்புகள் இலங்கையில் பொதுவானவை.

மேலும், நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள எதிர்காலத் தகவல்களின் ஊகங்கள் மற்றும் அவற்றை அடையக்கூடிய தன்மை குறித்து நாங்கள் எந்த உறுதிப்பாட்டையும் வழங்கவில்லை.

## முடிவு

எமது நடைமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில், 2025 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த இலங்கை வங்கியின் ஒருங்கிணைந்த வருடாந்த அறிக்கையில் உள்ள தகவல்கள், அளவுகோல்களுக்கு இணங்க அமைவதற்கு ஏதேனும் பொருண்மை மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பது குறித்து எமது கவனத்திற்கு எதுவும் வரவில்லை.

## கட்டுப்படுத்தப்பட்ட பயன்பாடு

இந்த அறிக்கையானது, அளவுகோல்களின் அடிப்படையில் கருப்பொருள் விடயம் குறித்து ஓர் உறுதிப்பாட்டு முடிவை வழங்கும் நோக்கத்திற்காக இலங்கை வங்கியின் தகவல் மற்றும் பயன்பாட்டிற்காக மட்டுமே வழங்கப்படுகிறது மேலும் இது குறிப்பிடப்பட்ட தரப்பினரைத் தவிர வேறு எவராலும் பயன்படுத்தப்பட வேண்டிய ஒன்றல்ல.

Ernst + Young

2026 மார்ச் 27
கொழும்பு

# SLFRS நிலைத்தன்மை தொடர்பான நிதியியல் வெளிப்படுத்தல்கள்

## SLFRS பேண்தகைமை தொடர்பான நிதி வெளிப்படுத்தல்கள்

### தயாரிப்பு அடிப்படை

#### 1. அறிக்கையிடும் நிறுவனம், நிறுவன எல்லை மற்றும் பெறுமதித் தொடர்

இந்த பேண்தகைமை தொடர்பான நிதி வெளிப்படுத்தல்கள், இலங்கை வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களுக்காக (ஒட்டுமொத்தமாக "குழுமம்" என அழைக்கப்படும்) தயாரிக்கப்பட்டுள்ளன. இது 2025 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட நிறுவன எல்லைக்கு இணங்க அமைந்துள்ளது.

இந்த வெளிப்படுத்தல்கள் வங்கியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் உள்ளக மற்றும் வெளிநாட்டுச் செயல்பாடுகளின் விரிவான பார்வையை வழங்குவதுடன், வங்கியின் முக்கிய வங்கித்தொழில் செயல்பாடுகளான சில்லறை, கார்ப்பரேட் மற்றும் கருவூலச் செயல்பாடுகள், முதலீட்டு நடவடிக்கைகள் மற்றும் ஆதரவுப் பணிகளை உள்ளடக்கியுள்ளன.

**பெறுமதித் தொடர்**

ஏடுகுசுளு பேண்தகைமை தொடர்பான நிதி வெளிப்படுத்தல்களைத் தயாரிப்பதில், காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளை அடையாளம் காண்பதற்கும் மதிப்பிடுவதற்கும் பொருத்தமான அளவில் வங்கியின் பெறுமதித் தொடரை வங்கி கருத்தில் கொண்டுள்ளது. ஒரு நிதி இடைத்தரகர் என்ற வங்கியின் பங்கைக் கருத்தில் கொள்ளும்போது, பேண்தகைமை தொடர்பான தாக்கங்கள் முதன்மையாக வைப்புச் சேகரிப்பு, நிதியளிப்பு, கடன் வழங்கல், முதலீடு மற்றும் கருவூல நடவடிக்கைகள் மற்றும் செயல்பாட்டுத் தடயங்கள் மூலம் ஏற்படுகின்றன. வங்கியின் பெறுமதித் தொடர் மூன்று பரந்த கூறுகளாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது:

**உள்ளீடு மற்றும் சாத்தியப் படுத்தும் செயல்பாடுகள்** → மேல்நிலை → **முக்கிய வங்கித்தொழில் செயல்பாடுகள்** → கீழ்நிலை → **நிதி மற்றும் பொருளாதார தாக்க வழித்தடம்**

**உள்ளீடு மற்றும் சாத்தியப் படுத்தும் செயல்பாடுகள்**

**வங்கியின் செயல்பாடுகளைச் சாத்தியப்படுத்தும் வளங்கள் மற்றும் உறவுகள்:**

- நிதி வழங்குநர்கள் மற்றும் வைப்பாளர்கள்
- தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் சேவை வழங்குநர்கள்
- சொத்து மற்றும் உட்கட்டமைப்பு சேவைகள்
- வெளிக்கள மற்றும் தொழில்முறை சேவை வழங்குநர்கள்
- ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை அதிகாரசபைகள்

**முக்கிய வங்கித்தொழில் செயல்பாடுகள்**

**உள்ளக மற்றும் வெளிநாட்டு வங்கிச் செயல்பாடுகள் மற்றும் ஆதரவுப் பணிகள் வைப்புத் திரட்டல்**

- வைப்புத் திரட்டல்
- தனிநபர்கள், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் நிறுவனங்களுக்குக் கடன் வழங்குதல்
- கருவூலம் மற்றும் முதலீட்டுச் செயல்பாடுகள்
- வர்த்தக நிதி மற்றும் அந்நியச் செலாவணி சேவைகள்
- கிளை மற்றும் டிஜிட்டல் வங்கிச் செயல்பாடுகள்
- இடர் முகாமைத்துவம், இணக்கப்பாடு, ஆளுகை மற்றும் ஏனைய ஆதரவுப் பணிகள்

**நிதி மற்றும் பொருளாதார தாக்க வழித்தடம்**

**வங்கியின் நிதியளிப்பு மற்றும் முதலீட்டுச் செயல்பாடுகளால் செல்வாக்கு செலுத்தப்படும் வாடிக்கையாளர்கள், மறு தரப்பினர்கள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள்**

- கடன் வாங்குபவர்கள் மற்றும் நிதியளிக்கப்பட்ட நிறுவனங்கள்
- சில்லறை வாடிக்கையாளர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள்
- கூட்டாண்மை மற்றும் நிறுவன வாடிக்கையாளர்கள்
- அரசாங்க நிதியளிப்பு முதலீட்டு ஈடுபாட்டாளர்கள்

#### 2. பொருண்மை அடிப்படை

பேண்தகைமை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளை அடையாளம் காண்பதில், SLFRS S1-க்கு இணங்க நிதி சாா்ந்த பொருண்மை கோணத்தை வங்கி பயன்படுத்துகிறது. ஒரு தகவலைத் தவிர்ப்பது, தவறாகக் குறிப்பிடுவது அல்லது தெளிவற்றதாக்குவது போன்றவை பொது நோக்க நிதி அறிக்கைகளின் முதன்மை பயனர்களின் தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தும் என எதிர்பார்க்கப்பட்டால், அத்தகவல் பொருண்மை வாய்ந்ததாகக் கருதப்படும். பேண்தகைமை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள் குறுகிய, நடுத்தர அல்லது நீண்ட காலத்தில் பின்வரும் அம்சங்களைப் பாதிக்கும் என எதிர்பார்க்கப்படும் போது அவை பொருண்மை வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

**உயர்ந்தது: மதிப்பிடப்பட்ட தாக்கம் வரிக்கு முன்னரான இலாபத்தில் 1%-க்கும் அதிகமாக இருக்கும் போது.**

**நடுத்தரமானது : தாக்கம் வரிக்கு முன்னரான இலாபத்தில் 0.6% முதல் 1% வரை இருக்கும் போது.**

**குறைவானது : தாக்கம் வரிக்கு முன்னரான இலாபத்தில 0% முதல் 0.5% வரை இருக்கும் போது.**

இந்த அணுகுமுறையானது, பேண்தகைமை தொடர்பான இடர் அடையாளப்படுத்தலுக்கும் வங்கியின் பரந்த நிறுவன இடர் முகாமைத்துவக் கட்டமைப்பிற்கும் இடையே சீரான தன்மையை உறுதி செய்கிறது.

##### அளவுகோல் சார்ந்த பொருண்மை

வங்கி தனது குழுமத்தின் வரிக்கு முந்தைய இலாபத்திற்கு எதிராக ஒரு அளவுகோல் வரம்பைப் பயன்படுத்துகிறது.

1% எனும் இந்த அளவுகோலானது, உள்ளக நிதி இடர் மதிப்பீட்டு நடைமுறைகளுடன் ஒத்துப்போவதுடன், வருவாய் ஈட்டல், மூலதனத் திட்டமிடல் அல்லது நிதி மீள்திறன் குறித்த முதலீட்டாளர் மதிப்பீடுகளில் செல்வாக்கு செலுத்தக்கூடிய மட்டத்தைப் பிரதிபலிக்கிறது.

### பண்புசார் பொருண்மை

நிதி வரம்புகளுக்கு மேலதிகமாக, காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள் பின்வரும் பண்புசார் அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன:

**மூலோபாய சீரமைப்பு:**

வங்கியின் வணிக மாதிரி, நீண்டகால மூலோபாயம் மற்றும் பெறுமதி உருவாக்க நோக்கங்களுடனான தொடர்பு.

**நற்பெயர் தாக்கம்:**

பங்குதாரர்களின் நம்பிக்கை, வர்த்தகநாம பெறுமதி மற்றும் சந்தை நிலைப்படுத்தல் ஆகியவற்றில் ஏற்படக்கூடிய தாக்கம்.

**ஒழுங்குமுறை மற்றும் கொள்கை இணக்கம்:**

ஒழுங்குமுறை, மேற்பார்வை அல்லது சட்ட ரீதியான விளைவுகளுக்கான வெளிப்பாடுகள்.

**பங்குதாரர் உணர்திறன்:**

பங்குதாரர்களின் எதிர்பார்ப்பு, ஆய்வு அல்லது அழுத்தத்தின் அளவு.

பொருண்மை மதிப்பீடுகள் வங்கியின் நிறுவன இடர் முகாமைத்துவ கட்டமைப்பிற்குள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன் மேலும் இவை சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் மேற்பார்வைக்கு உட்பட்டவை.

### 3. செயல்பாட்டு நாணயம்

பேண்தகைமை தொடர்பான அனைத்து நிதித் தகவல்களும் வெளிப்படுத்தல்களும், வங்கியின் செயல்பாட்டு மற்றும் முன்வைப்பு நாணயத்திற்கு இணங்க இலங்கை ரூபாயில் வழங்கப்படுகின்றன.

### 4. வழிகாட்டுதல் ஆதாரங்கள்

இந்த பேண்தகைமை தொடர்பான நிதி வெளிப்படுத்தல்கள், இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட ஏடுகுசுஏ பேண்தகைமை தொடர்பான நிதி வெளிப்படுத்தல் தரநிலைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, வங்கி SLFRS S1 பேண்தகைமை தொடர்பான நிதித் தகவல்களை வெளிப்படுத்துவதற்கான பொதுவான தேவைகள் மற்றும் SLFRS S2 காலநிலை தொடர்பான வெளிப்படுத்தல்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தியுள்ளது.

இத்தரநிலைகளைப் பயன்படுத்துகையில், வெளிப்படுத்தல்கள் தொழில்துறை நடைமுறைகள், தேசிய காலநிலை முன்னுரிமைகள் மற்றும் மேற்பார்வை எதிர்பார்ப்புகளுடன் சீரமைக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, வணிக வங்கிகளுக்கான ளுயுளுடீ தரநிலை, இலங்கையின் தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள் (னுனுஊ 3.0) மற்றும் இலங்கை வங்கித்தொழில் துறைக்கு பொருந்தக்கூடிய ஒழுங்குமுறை வழிகாட்டல்களையும் வங்கி கருத்தில் கொண்டுள்ளது.

| பிரயோகப்படுத்தப்பட்ட முதன்மை தரநிலைகள் | | பிரயோகப்படுத்தப்பட்ட மேலதிக வழிகாட்டிகள் | | |
|---|---|---|---|---|
| SLFRS S1- நிலைத்தன்மை தொடர்பான நிதி தகவல்களை வெளிப்படுத்து வதற்கான பொதுவான தேவைகள் | SLFRS S2 காலநிலை தொடர்பான வெளிப்பாடுகள் | SASB தரநிலை - வணிக வங்கிகள் | இலங்கையின் தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள் (NDC 3.0) | இலங்கை வங்கித் துறைக்கு பொருந்தும் தொடர்புடைய ஒழுங்குமுறை வழிகாட்டுதல். |

### 5. அறிக்கையிடும் காலம்

இந்த பேண்தகைமை தொடர்பான நிதி வெளிப்படுத்தல்கள் 2025 சனவரி 1 முதல் 2025 டிசம்பர் 31 வரையிலான நிதியாண்டை உள்ளடக்கியதுடன், வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகளின் அறிக்கையிடும் காலத்துடன் சீரமைக்கப்பட்டுள்ளன.

### 6. கால எல்லைகள்

காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளை மதிப்பிடுவதில், நிதி மற்றும் செயல்பாட்டுத் தாக்கங்களை முறையாக மதிப்பீடு செய்வதற்காக வங்கி வரையறுக்கப்பட்ட கால எல்லைகளைப் பயன்படுத்துகிறது. இக்கால எல்லைகள் வங்கியின் மூலோபாய திட்டமிடல் சுழற்சிகள், மூலதனத் திட்டமிடல் கட்டமைப்பு, கடன் சொத்துப்பட்டியல் மதிப்பீட்டுக் காலங்கள் மற்றும் நீண்டகால வணிகக் கண்ணோட்டம் ஆகியவற்றுடன் சீரமைக்கப்பட்டுள்ளன.

| கால எல்லை | வரையறை | ஆண்டுகள் |
|---|---|---|
| குறுகிய காலம் | 1 – 2 ஆண்டுகள் | 2025 – 2026 |
| நடுத்தர காலம் | 3 – 5 ஆண்டுகள் | 2027 – 2029 |
| நீண்ட காலம் | 5 ஆண்டுகளுக்கு மேல் | 2030 மற்றும் அதற்கு மேல் |

### 7. இணைக்கப்பட்ட தகவல்கள்

SLFRS S1-க்கு இணங்க, பேண்தகைமை தொடர்பான நிதி வெளிப்படுத்தல்கள் ஆளுகை கட்டமைப்புகள், மூலோபாயம், இடர் முகாமைத்துவ செயல்முறைகள் மற்றும் நிதி அறிக்கையிடல் ஆகியவற்றுடன் தெளிவான தொடர்பைப் பிரதிபலிக்கும் வகையில் வழங்கப்படுவதை வங்கி உறுதி செய்துள்ளது.

காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள், வங்கியின் தற்போதைய ஆளுகை கட்டமைப்பிற்குள் பணிப்பாளர் சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் (IRMC) மேற்பார்வை உட்பட மற்றும் நிறுவப்பட்ட நிறுவன இடர் முகாமைத்துவ செயல்முறைகள் ஊடாகக் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

# SLFRS நிலைத்தன்மை தொடர்பான நிதியியல் வெளிப்படுத்தல்கள்

காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள், வங்கியின் தற்போதைய ஆளுகை கட்டமைப்பிற்குள் பணிப்பாளர் சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் (IRMC) மேற்பார்வை உட்பட மற்றும் நிறுவப்பட்ட நிறுவன இடர் முகாமைத்துவ செயல்முறைகள் ஊடாகக் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

அடையாளம் காணப்பட்ட காலநிலை தொடர்பான இடர்கள், வங்கியின் மூலோபாய முன்னுரிமைகள், மூலதனத் திட்டமிடல் பரிசீலனைகள் மற்றும் ஒட்டுமொத்த இடர் விபரங்கள் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பை வெளிப்படுத்தும் வகையில் இந்த வெளிப்படுத்தல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த புரிதல் மற்றும் வெளிப்படைத்தன்மைக்கு ஆதரவளிப்பதற்காக, நிறுவன ஆளுகை அறிக்கை, இடர் முகாமைத்துவ அறிக்கை மற்றும் நிதி அறிக்கைகள் உட்பட வருடாந்த அறிக்கையின் ஏனைய பகுதிகளுக்கான குறுக்குக் குறிப்புகள் தேவையான இடங்களில் வழங்கப்பட்டுள்ளன.

## 8. இடைக்கால நிவாரணம்

இந்த அறிக்கையிடும் காலத்திற்கான பேண்தகைமை மற்றும் காலநிலை தொடர்பான வெளிப்படுத்தல்களைத் தயாரிப்பதில், ஆரம்பகால ஏற்பு காலப்பகுதியில் தரநிலைகளை ஒரு படிநிலையான மற்றும் கட்டமைக்கப்பட்ட முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக, SLFRS S1 மற்றும் SLFRS S2 ஆகியவற்றின் கீழ் அனுமதிக்கப்பட்ட இடைக்கால நிவாரணத்தை வங்கி பயன்படுத்தியுள்ளது.

வங்கியின் முதலாம் ஆண்டு அணுகுமுறையானது, ஆளுகை மேற்பார்வை, இடர் அடையாளப்படுத்தல் செயல்முறைகள், வெளிப்படுத்தல் கட்டுப்பாடுகள் மற்றும் பல்வேறு துறைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு வழிமுறைகளை நிறுவுவதற்கு முன்னுரிமை அளித்துள்ளது. அளவுகோல் மற்றும் பகுப்பாய்வு சார்ந்த மேம்படுத்தல்கள், பொருந்தக்கூடிய இடைக்கால நிவாரண காலப்பகுதிக்குள் படிப்படியாக உள்வாங்கப்படும்.

### பேண்தகைமை தொடர்பான வெளிப்படுத்தல்களின் கட்டம் வாரியான நோக்கம்

**காலநிலை சார்ந்த ஆரம்பப் பொருத்தப்பாடு**

ஆரம்ப அமுலாக்கத்தின் போது பொருந்தக்கூடிய இடைக்கால விதிகளின்படி, இந்த அறிக்கையிடும் காலத்திற்கான வங்கியின் வெளிப்படுத்தல்கள் காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. காலநிலைக்கும் அப்பால் உள்ள பேண்தகைமை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள் இந்த நிலையில் வெளிப்படுத்தப்படவில்லை.

இந்த அணுகுமுறையானது, SLFRS S1 மற்றும் S2 ஐ நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு அடிப்படை நடவடிக்கையாக, காலநிலை தொடர்பான விடயங்களுக்கான ஆளுகை, இடர் மதிப்பீடு மற்றும் அறிக்கையிடல் செயல்முறைகளை வலுப்படுத்துவதற்கு வங்கி அளித்துள்ள முன்னுரிமையை பிரதிபலிக்கிறது. பரந்த பேண்தகைமை தொடர்பான வெளிப்படுத்தல்கள் அடுத்த அறிக்கையிடும் காலத்திலிருந்து (நிதி ஆண்டு 2026) சேர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது

**ஒப்பீட்டுத் தகவல**

SLFRS S1 மற்றும் S2 ஆகியவற்றின் கீழ் வங்கி அறிக்கையிடும் முதல் ஆண்டு இது என்பதால், முந்தைய காலங்களுக்கான ஒப்பீட்டு பேண்தகைமை மற்றும் காலநிலை தொடர்பான வெளிப்படுத்தல்கள் வழங்கப்படவில்லை.

அடுத்த அறிக்கையிடும் காலத்திலிருந்து (நிதி ஆண்டு 2026) ஒப்பீட்டுத் தகவல்கள் சேர்க்கப்படும்.

**எதிர்பார்க்கப்படும் நிதி விளைவுகள்**

தற்போதைய அறிக்கையிடும் காலத்தில் காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளின் எதிர்பார்க்கப்படும் நிதி விளைவுகள் குறித்த பண்புசார் அல்லது அளவுகோல் தகவல்களை வங்கி வெளிப்படுத்தவில்லை

எனவே, 2025 நிதி ஆண்டுக்கான தற்போதைய வெளிப்படுத்தல்கள், அடையாளம் காணப்பட்ட இடர்கள் மற்றும் வாய்ப்புகள், ஆளுகை ஏற்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ செயல்முறைகள் ஆகியவற்றின் பண்புசார் விளக்கங்களில் கவனம் செலுத்துகின்றன. அனுமதிக்கப்பட்ட இரண்டு ஆண்டு கால இடைக்கால நிவாரணத்திற்குள் (நிதி ஆண்டு 2027), எதிர்பார்க்கப்படும் நிதி விளைவுகளை முறையாக மதிப்பீடு செய்யத் தேவையான வழிமுறைகள், உள்நிலைத் தரவு கட்டமைப்புகள் மற்றும் பகுப்பாய்வுத் திறன்களை வங்கி படிப்படியாக மேம்படுத்தி வருகிறது.

**கட்டம் 3 பசுமை இல்ல வாயு உமிழ்வுகள்**

வங்கியின் கடன் வழங்கல் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளால் ஏற்படும் நிதியளிக்கப்பட்ட உமிழ்வுகள் உள்ளிட்ட Scope 3 பசுமை இல்ல வாயு உமிழ்வுகள், SLFRS S2 இன் கீழ் உள்ள இடைக்கால நிவாரண விதிகளின்படி தற்போதைய அறிக்கையிடும் காலத்தில் வெளிப்படுத்தப்படவில்லை.

சொத்துப்பட்டியல் மட்டத்திலான தரவு சேகரிப்பு, அளவீட்டு முறைகள் மற்றும் உள்நிலை அமைப்புகளை வலுப்படுத்தும் பணியில் வங்கி ஈடுபட்டுள்ளது. இந்த வெளிப்படுத்தல்கள் அனுமதிக்கப்பட்ட இடைக்கால நிவாரண காலப்பகுதிக்குள் படிப்படியாக சேர்க்கப்பட்டு, 2027 நிதி ஆண்டளவில் முழுமையாக வெளிப்படுத்தப்படுவதை வங்கி உறுதி செய்யும்.

**காலநிலை மீள்திறன் மற்றும் சூழல் பகுப்பாய்வு**

இந்த அறிக்கையிடும் காலத்தில் காலநிலை மீள்திறன் மற்றும் சூழல் பகுப்பாய்வு ஆகியவை வெளிப்படுத்தப்படவில்லை. காலநிலை மீள்திறன் மற்றும் வங்கியின் இடர் விபரங்களில் ஏற்படக்கூடிய தாக்கங்களை மதிப்பீடு செய்வதில் சூழல் பகுப்பாய்வு (ஒரு முக்கியமான கருவியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முறையான சூழல் சார்ந்த மதிப்பீடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான உள்நிலைத் திறன், தரவு உள்ளீடுகள் மற்றும் பகுப்பாய்வு கட்டமைப்புகளை வங்கி உருவாக்கி வருகிறது. இவை முதலாம் அறிக்கையிடும் காலத்திலிருந்து அனுமதிக்கப்பட்ட இரண்டு ஆண்டு கால இடைக்கால நிவாரணத்திற்குள் (நிதி ஆண்டு 2027) சேர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 9. குறிப்பிடத்தக்க தீர்மானங்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள்

பேண்தகைமை தொடர்பான நிதி வெளிப்படுத்தல்களைத் தயாரிப்பதற்கு தொழில்முறைத் தீர்மானங்களைப் பயன்படுத்துவது அவசியமாகும் குறிப்பாக காலநிலை தொடர்பான இடர்களின் வருங்கால நோக்குத் தன்மையைக் கருத்தில் கொள்ளும்போது இது மிக முக்கியமானது.

**முக்கிய தீர்மானப் பகுதிகள்**

- பொருண்மை வாய்ந்த காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளை அடையாளம் காணுதல்
- பொருத்தமான பண்புசார் வெளிப்படுத்தல்களைத் தீர்மானித்தல்
- மூலோபாயம் மற்றும் நிதிச் செயல்திறனுடனான தொடர்புகளை மதிப்பிடுதல்
- பொருண்மை வரம்புகளைத் தெரிவு செய்தல்

**நிச்சயமற்ற தன்மை களுக்கான ஆதாரங்கள்**

- வருங்கால நோக்குடைய பொருளாதார மற்றும் காலநிலை கணிப்புகள்
- தரவு கிடைக்கும்தன்மை மற்றும் வழிமுறை சார்ந்த வரம்புகள்
- ஒழுங்குமுறை மற்றும் சந்தை முன்னேற்றங்கள்

## 10. விகிதாசாரக் கொள்கை

இந்த வெளிப்படுத்தல்களைத் தயாரிப்பதில், தேவையற்ற செலவு அல்லது முயற்சியின்றி, அறிக்கையிடும் திகதியில் கிடைக்கக்கூடிய நியாயமான மற்றும் ஆதரவுடைய தகவல்களை முகாமைத்துவம் பயன்படுத்தியுள்ளது.

வங்கி விகிதாசாரக் கொள்கையைப் பயன்படுத்தியுள்ளது. இதன் மூலம் வெளிப்படுத்தல்கள் நிறுவனத்தின் அளவு, சிக்கல்தன்மை மற்றும் இடர் விபரங்களுக்குப் பொருத்தமானதாக இருப்பதை உறுதி செய்வதுடன், முதன்மை பயனர்களின் தீர்மானம் எடுத்தலுக்கு பயனுள்ளதாகவும் அமைகின்றன.

## 11. இணக்கப்பாட்டு அறிக்கை

இந்த பேண்தகைமை தொடர்பான நிதி வெளிப்படுத்தல்கள், 2025 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களின் ("குழுமம்") முழுமையான பேண்தகைமை தொடர்பான நிதி வெளிப்படுத்தல்களைப் பிரதிபலிக்கின்றன.
இவை இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட SLFRS பேண்தகைமை தொடர்பான நிதி வெளிப்படுத்தல் தரநிலைகளுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன.

## ஆளுகை

வங்கியின் பேண்தகைமை மற்றும் காலநிலை தொடர்பான ஆளுகையானது, கட்டமைக்கப்பட்ட மற்றும் அடுக்கு முறையிலான மேற்பார்வைக் கட்டமைப்பின் ஊடாகச் செயல்படுகிறது. இது வரையறுக்கப்பட்ட அறிக்கையிடல் வழிகள், பொறுப்புக்கூறல் வழிமுறைகள் மற்றும் நிறுவன இடர் முகாமைத்துவ கட்டமைப்பிற்குள்ளான ஒருங்கிணைப்பு ஆகியவற்றால் ஆதரிக்கப்படுகிறது. காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள் செயல்பாட்டு மட்டங்களில் அடையாளம் காணப்பட்டு, மேலாண்மை மட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டு மீளாய்வு செய்யப்படுகின்றன் மேலும் இவை சபை மட்டத்தில் மூலோபாய மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுகின்றன.

ஒரு விரிவான பேண்தகைமை ஆளுகை மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பானது, பேண்தகைமை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள் மற்றும் காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள் ஆகியவை சபை, மேலாண்மை மற்றும் செயல்பாட்டு மட்டங்களில் எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றன என்பதற்கான படிநிலை அமைப்பை வரையறுக்கிறது. இந்த ஒருங்கிணைந்த கட்டமைப்பானது ஆளுகை, மூலோபாயம், இடர் முகாமைத்துவ அளவீடுகள், இலக்குகள் மற்றும் SLFRS S1 மற்றும் S2 ஆகியவற்றிற்கு இணங்க அறிக்கையிடல் ஆகியவற்றுக்கிடையேயான சீரமைப்பைச் சாத்தியமாக்குகிறது.

**ஆளுகை மற்றும் மேற்பார்வை - முக்கிய அம்சங்கள்**

- குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூடும் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் ஊடாகச் செயல்படுத்தப்படும் சபை மட்ட மேற்பார்வை
- நிறுவன இடர் முகாமைத்துவம் மற்றும் மூலோபாயத் திட்டமிடலில் காலநிலை தொடர்பான இடர்களை ஒருங்கிணைத்தல்
- பேண்தகைமைக் குழுவின் ஊடாக முறையான முகாமைத்துவம் மேற்பார்வை
- செயல்பாட்டு மட்டங்களிலிருந்து சபைக்கு கட்டமைக்கப்பட்ட அறிக்கையிடல் மற்றும் விடயங்களை முன்னகர்த்துதல்
- வரையறுக்கப்பட்ட முக்கிய செயல்திறன் காட்டிகள் மூலம் நிறைவேற்று பொறுப்புக்கூறல்

பக்கங்கள் 75-84 இல் உள்ள பேண்தகைமை ஒருங்கிணைப்பு பகுதியில் உள்ள பேண்தகைமை ஆளுகை மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பைப் பார்க்கவும்

### சபை மேற்பார்வை

உயர்மட்டத்தில், பணிப்பாளர் சபையானது மூலோபாய வழிகட்டல் வழங்குவதுடன், நீண்டகால பெறுமதி உருவாக்கம், இடர் நாட்டம் மற்றும் மூலோபாயத் திட்டமிடல் செயல்முறைகளில் பேண்தகைமைப் பரிசீலனைகளை ஒருங்கிணைப்பதை உறுதி செய்கிறது.

பேண்தகைமை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள் மற்றும் காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள் மீதான மேற்பார்வையானது, 2025 டிசம்பர் 31 வரை சபையின் சார்பில் செயற்பட்ட ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவினால் முன்னெடுக்கப்பட்டது. பேண்தகைமை மற்றும் காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள், வங்கியின் நிறுவன இடர் முகாமைத்துவம் மற்றும் வெளிப்படுத்தல் செயல்முறைகளில் ஒருங்கிணைக்கப்படுவதை சரியான நேரத்தில் மேற்பார்வை செய்வதை உறுதிப்படுத்த IRMC குறைந்தது காலாண்டுக்கு ஒருமுறை கூடியது

# SLFRS நிலைத்தன்மை தொடர்பான நிதியியல் வெளிப்படுத்தல்கள்

## ஊதியம்

பேண்தகைமை மற்றும் காலநிலை தொடர்பான விடயங்கள் தற்போது சபை ஊதியக் கட்டமைப்புகளில் சேர்க்கப்படவில்லை. வங்கியின் ஊதிய ஆளுகை தொடர்பான விவரங்கள் இந்த வருடாந்த அறிக்கையின் 179 ஆம் பக்கத்தில் “இலங்கை வங்கியின் ஆளுகை“ பிரிவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### ஆளுகை மேம்படுத்தல்

2026 ஆம் ஆண்டு முதல், வங்கி ஒரு பிரத்யேக சபை மட்ட பேண்தகைமைக் குழுவை நிறுவியுள்ளது. இந்த மேம்படுத்தலானது, சபை மட்டத்தில் பேண்தகைமை மற்றும் காலநிலை தொடர்பான விடயங்களின் முறையான மேற்பார்வையை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இது வளர்ந்து வரும் ஒழுங்குமுறை மற்றும் சந்தை எதிர்பார்ப்புகளைப் பிரதிபலிக்கிறது.

## ESG விடயங்களில் சபையின் திறன்கள் மற்றும் தகைமைகள்

பேண்தகைமை மற்றும் காலநிலை தொடர்பான இடர்களை திறம்பட மேற்பார்வையிட, பொருத்தமான சபை மட்ட நிபுணத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவு அவசியமாகும். சபையானது ஒட்டுமொத்தமாக வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள், இடர் முகாமைத்துவம், நிதிச் சந்தைகள், நிறுவன ஆளுகை, டிஜிட்டல் மாற்றம் மற்றும் பேண்தகைமை சார்ந்த மூலோபாய மேற்பார்வை ஆகியவற்றில் அனுபவத்தைக் கொண்டுள்ளது

SLFRS S1 மற்றும் அமலாக்கத்திற்கு ஆதரவளிக்க, முகாமைத்துவ குழுக்களுக்குக் கட்டமைக்கப்பட்ட பயிற்சிகளை வழங்க மெஸ்ஸ ர்ஸ் ஏர்ன்ஸ்ட் அண்ட் யங் நிறுவனத்தை வங்கி ஈடுபடுத்தியது. அத்துடன், ஆளுகை பொறுப்புகள், காலநிலை தொடர்பான இடர் மேற்பார்வை மற்றும் வெளிப்படுத்தல் கடப்பாடுகள் குறித்த புரிதலை வலுப்படுத்த பணிப்பாளர் சபைக்கு ஒரு பிரத்யேக விழிப்புணர்வு அமர்வு நடத்தப்பட்டது.

பக்கங்கள் 34-39 மற்றும் 169 இல் உள்ள சபையின் திறன் கட்டமைப்பைப் பார்க்கவும்.

## முகாமைத்துவம மேற்பார்வை

முகாமைத்துவ மட்டத்திலான மேற்பார்வை பேண்தகைமைக் குழுவின் ஊடாகச் செயல்படுத்தப்படுகிறது. முகாமைத்துவம் பின்வருவனவற்றிற்குப் பொறுப்பாகும்:

- சபையின் வழிகாட்டல்களை செயல்பாட்டு நடவடிக்கைகளாக மாற்றுதல்.
- பேண்தகைமை தொடர்பான செயல்திறன் காட்டிகளைக் கண்காணித்தல்.
- சொத்துப்பட்டியல் முழுவதும் காலநிலை தொடர்பான இடர் வெளிப்பாடுகளை மதிப்பிடுதல்.
- கடன் வழங்கல் மற்றும் முதலீட்டுச் செயல்முறைகளில் ESG பரிசீலனைகளை ஒருங்கிணைப்பதற்கு ஆதரவளித்தல்.
- பேண்தகைமை தொடர்பான வெளிப்படுத்தல்களின் சீரான தன்மை, முழுமை மற்றும் தரத்தை உறுதி செய்தல்.

## நிறைவேற்றுப் பொறுப்புக்கூறல்

நிலைத்தன்மை வங்கிப்பிரிவு, பிரதான நிதியியல் அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் இயங்குகிறது. இது பேண்தகைமை செயல்திறன் மற்றும் வெளிப்படுத்தல்களின் நம்பகத்தன்மைக்கான நிர்வாக மட்டப் பொறுப்புக்கூறலை வலுப்படுத்துகிறது. பிரதான நிதியியல் அதிகாரி மற்றும் உதவிப் பொது முகாமையாளர் ஆகியோரின் செயல்திறன் மதிப்பீட்டு கட்டமைப்புகளுக்குள் பேண்தகைமை தொடர்பான முக்கிய செயல்திறன் காட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த சீரமைப்பானது ஆளுகை மேற்பார்வை, செயல்பாட்டுச் செயலாக்கம் மற்றும் செயல்திறன் பொறுப்புக்கூறல் ஆகியவற்றிற்கு இடையேயான சீரான தன்மையை ஆதரிக்கிறது

## நிறைவேற்றல் மற்றும் நடைமுறைப்படுத்தலின் ஒருங்கிணைப்பு

செயலாக்கமானது பேண்தகைமை வங்கிப் பிரிவு மற்றும் SLFRS S1 மற்றும் S2 பணிக்குழு உள்ளிட்ட சிறப்புப் பிரிவுகளால் ஆதரிக்கப்படுகிறது

செயல்பாட்டு மட்டத்தில், பேண்தகைமை தொடர்பான பரிசீலனைகள் கடன் வழங்கல், முதலீடு மற்றும் வணிகத் தீர்மானம் எடுக்கும் செயல்முறைகளில் உள்வாங்கப்பட்டுள்ளன. இந்த மட்டத்தில் உருவாக்கப்படும் தகவல்கள், ஆளுகை கட்டமைப்பின் ஊடாக ஒருங்கிணைப்பு, மதிப்பாய்வு மற்றும் மேற்பார்வைக்காக மேல்நோக்கி நகர்கின்றன.மேற்பார்வைக்காக மேல்நோக்கி நகர்கின்றன.

### செயல்பாடுகளில் ESG விடயங்களை ஒருங்கிணைத்தல்:

- வங்கித்தொழில் நடவடிக்கைகளில் பேண்தகைமை மற்றும் காலநிலை தொடர்பான பரிசீலனைகளை ஒருங்கிணைத்தல்.
- தரவு சேகரிப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் சரிபார்த்தல்.
- SLFRS S1 மற்றும் SLFRS S2 ஆகியவற்றிற்கு இணங்க வெளிப்படுத்தல்களைத் தயாரித்தல்.
- இடர், மூலோபாயம், நிதி மற்றும் செயல்பாட்டுக் குழுக்களிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல்.

.

## தகவல் பாய்ச்சல் மற்றும் வெளிப்படுத்தல் ஒருங்கிணைப்பு

காலநிலை தொடர்பான தகவல்கள் வணிகப் பிரிவுகளிலிருந்து முகாமைத்துவ குழுக்களுக்கும், பின்னர் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவிற்கும் கொண்டு செல்லப்படுகின்றன. ESG மற்றும் பேண்தகைமை விடயங்கள் IRMC கூட்டங்களின் நிலையான நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளன் இது அவ்வப்போது மதிப்பாய்வு செய்தல், சவால்களை எதிர்கொள்ளுதல் மற்றும் மூலோபாய ரீதியாகப் பரிசீலித்தல் ஆகியவற்றை உறுதி செய்கிறது.

ESG மற்றும் பேண்தகைமை விடயங்கள் IRMC-இன் காலாண்டு நிகழ்ச்சி நிரலில் ஒரு நிலையான விடயமாக இருக்கும். மேலதிகமாக, ஆண்டுக்கு ஒரு முறையாவது IRMC கூட்டமொன்று பேண்தகைமை மற்றும் காலநிலை சார்ந்த விடயங்களுக்காக செயல்திறன் கண்காணிப்பு, ஒழுங்குமுறை முன்னேற்றங்கள், வெளிப்படுத்தல் தேவைகள் மற்றும் உருவாகி வரும் இடர்கள் உட்பட விடயங்களுக்கு பிரத்தியேகமாக ஒதுக்கப்படும்.

முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப பணிக்குழுக்களால் தயாரிக்கப்பட்ட வெளிப்படுத்தல் வரைபுகள் முகாமைத்துவ மட்டத்தில் மதிப்பாய்வு செய்யப்பட்டு, பின்னர் வருடாந்த அறிக்கையில் சேர்க்கப்படுவதற்கு முன்னதாக IRMC-ஆல் பரிசீலிக்கப்படுகின்றன. இது பொது வெளிப்படுத்தல்கள், ஆளுகை மேற்பார்வை, மூலோபாய சீரமைப்பு மற்றும் வங்கியின் இடர் முகாமைத்துவ கட்டமைப்பிற்குள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்கிறது.

**1. அடையாளம் காணுதல் மற்றும் கண்காணித்தல்**

**வணிகப் பிரிவுகள் மற்றும் செயல்பாடுகள்**

- இடர் அடையாளப்படுத்தல்
- சொத்துப்பட்டியல் கண்காணிப்பு
- ESG தரவு சேகரிப்பு
- செயல்பாட்டுப் பேண்தகைமை அளவீடுகள்

↓

**2. ஒருங்கிணைப்பு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீடு**

**பேண்தகைமை வங்கிப் பிரிவு மற்றும் பணிக்குழு**

- தரவு ஒருங்கிணைப்பு
- காலநிலை இடர் மதிப்பீடு
- வெளிப்படுத்தல் வரைபு தயாரித்தல்
- அளவீடுகளைச் சரிபார்த்தல்

↓

**3. மேலாண்மை மதிப்பாய்வு**

**மேலாண்மைக் குழுக்கள்**

- காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளை (CRROs) மதிப்பாய்வு செய்தல்
- முக்கிய செயல்திறன் காட்டிகளுக்கு எதிரான செயல்திறன்
- பொருண்மை விடயங்களை முன்னகர்த்துதல்
- மூலோபாயத்துடன் சீரமைத்தல்

↓

**4. சபை மட்ட மேற்பார்வை**

**ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு**

- பேண்தகைமை மற்றும் காலநிலை விடயங்களை மேற்பார்வையிடல்
- வெளிப்படுத்தல்களை மதிப்பாய்வு செய்தல்
- மூலோபாய சீரமைப்பு
- சபைக்கு அறிக்கையிடல்

↓

**5. பொது வெளிப்படுத்தல்**

**வருடாந்த அறிக்கை - SLFRS S1 மற்றும் S2**

- ஆளுகை
- மூலோபாயம்
- இடர் முகாமைத்துவம்
- அளவீடுகள் மற்றும் இலக்குகள்

## தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் மேம்படுத்தல்

ஆளுகை மற்றும் அறிக்கையிடல் கட்டமைப்பானது ஒரு தொடர்ச்சியான சுழற்சியாகச் செயல்படுகிறது. சபை விவாதங்கள் மற்றும் முகாமைத்துவ மதிப்பாய்வுகளிலிருந்து பெறப்படும் கருத்துக்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள், தரவு அமைப்புகள், வழிமுறைகள் மற்றும் பகுப்பாய்வுத் திறனை மேம்படுத்த உதவுகின்றன. இது காலப்போக்கில் பேண்தகைமை தொடர்பான ஆளுகை மற்றும் வெளிப்படுத்தல் நடைமுறைகளைப் படிப்படியாக வலுப்படுத்த ஆதரவளிக்கிறது.

## மூலோபாயம்

காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள் வங்கியின் மூலோபாயத் திட்டமிடல், கடன் இடர் முகாமைத்துவம், மூலதன ஒதுக்கீடு மற்றும் செயல்பாட்டு மீள்திறன் செயல்முறைகளுக்குள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. காலநிலை தொடர்பான முன்னேற்றங்கள் கடனின் தரம், உட்கட்டமைப்பு முதலீடு, சொத்துப்பட்டியல் கட்டமைப்பு மற்றும் நீண்டகால பெறுமதி உருவாக்கம் ஆகியவற்றில் செல்வாக்கு செலுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை இப் பரிசீலனைகள் அங்கீகரிக்கின்றன.

SLFRS S1 மற்றும் SLFRS S2 ஆகியவற்றின் கீழான வங்கியின் முதலாம் ஆண்டு அறிக்கையிடலின் ஒரு பகுதியாக, காலநிலை தொடர்பான விடயங்கள் தற்போதுள்ள நிறுவன இடர் முகாமைத்துவ (ERM) செயல்முறைகளுக்குள் இணைக்கப்பட்டுள்ளன. அடையாளம் காணப்பட்ட காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள், வங்கியின் நிறுவப்பட்ட சாத்தியக்கூறு, தாக்கம் மற்றும் கால எல்லை அளவுருக்களைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்யப்படுகின்றன.

வங்கியின் முக்கிய காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள், அவற்றுடன் தொடர்புடைய மூலோபாய பதிலிறுப்புகள் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன

# SLFRS நிலைத்தன்மை தொடர்பான நிதியியல் வெளிப்படுத்தல்கள்

## காலநிலை தொடர்பான இடர்கள்

| CRRO 1 – சீரற்ற காலநிலை நிகழ்வுகள் | |
|---|---|
| **கண்ணோட்டம்** | |
| **விளக்கம்** | அதீத காலநிலை நிகழ்வுகள் மற்றும் பரந்த காலநிலை மாற்ற தாக்கங்கள் வங்கியின் செயல்பாடுகள் மற்றும் அதன் வாடிக்கையாளர்களின் நிதி உறுதிப்பாடு ஆகிய இரண்டையும் மோசமாகப் பாதிக்கலாம். இத்தகைய நிலைமைகள் சொத்துக்களுக்கு ஏற்படும் நேரடிச் சேதங்களின் சாத்தியக்கூறுகளை அதிகரிப்பதுடன், கடன் இடரையும் உயர்த்துகின்றன. இது வங்கியின் நிதி வாய்ப்புகள் மற்றும் ஒட்டுமொத்த செயல்திறனில் செல்வாக்கு செலுத்தக்கூடும். |
| **CRRO-இன் தன்மை** | நேரடி இடர் (Physical Risk) |
| **கால எல்லை** | குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலம |
| **கால எல்லை வரையறை** | பக்கம் 89 ஐப் பார்க்கவும். |
| **வணிக மாதிரி மற்றும் பெறுமதிச் சங்கிலி** | |
| **நடப்பு ஆண்டு தாக்கங்கள்** | |
| **செயல்பாட்டு இடையூறு மற்றும் நேரடித் தாக்கங்கள்** | இந்த ஆண்டில் ஏற்பட்ட டித்வா சூறாவளி உள்ளிட்ட சீரற்ற காலநிலை நிகழ்வுகள், வங்கியின் கிளை வலையமைப்பு மற்றும் தொடர்புடைய சொத்துக்களில் செயல்பாட்டு இடையூறுகளையும் நேரடிச் சேதங்களையும் ஏற்படுத்தியதுடன், வங்கியின் உட்கட்டமைப்பைப் பாதித்தன. வெள்ளம் மற்றும் மோசமான காலநிலை காரணமாக கிளைகள் தற்காலிகமாக மூடப்பட்டதால், நேரடிச் சேவை வழங்கல் பாதிக்கப்பட்டதுடன், செயல்பாட்டுத் தொடர்ச்சி மற்றும் வருவாய் ஈட்டலில் குறுகிய காலத் தாக்கங்கள் ஏற்பட்டன. |
| **கடன் இடர் பரிசீலனைகள்** | நேரடி மற்றும் செயல்பாட்டுத் தாக்கங்களுக்கு மேலதிகமாக, டிட்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் மற்றும் சொத்துப்பட்டியல்கள் தொடர்பாக ஏற்படக்கூடிய கடன் இடர் விளைவுகளையும் வங்கி மதிப்பிட்டுள்ளது. குறிப்பாக விவசாயம், சிறு வணிகம் மற்றும் சில்லறை விற்பனைப் பிரிவுகளில் உள்ள வாடிக்கையாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. இது திருப்பிச் செலுத்துவதில் தாமதம் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறும் சாத்தியக்கூறுகளை அதிகரித்ததுடன், கட்டம் 3 கடன்கள் மற்றும் முற்பணங்களின் அளவை உயர்த்தியது. சூறாவளியால் ஏற்பட்ட கடன் இடர் தாக்கங்களை அடையாளம் காணவும், மதிப்பிடவும் மற்றும் கண்காணிக்கவும் மாகாண ரீதியிலான கடன் இடர் மதிப்பீட்டை வங்கி நடத்தியது. |
| **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** | |
| **கடன் இடர் முகாமைத்துவம்** | வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் அல்லது காலநிலை மாற்றங்களால் எளிதில் பாதிக்கப்படக்கூடிய துறைகளில் செயல்படும் கடன் வாங்குபவர்களை சீரற்ற காலநிலை நிகழ்வுகள் மோசமாகப் பாதிக்கலாம். வணிகச் செயல்பாடுகள் மற்றும் வருவாய் ஈட்டலுக்கு ஏற்படும் இடையூறுகள் கடன் வாங்குபவர்களின் திருப்பிச் செலுத்தும் திறனை வலுவிழக்கச் செய்து, கடனை மறுசீரமைக்க வேண்டிய நிலையை அல்லது கடன் இழப்பு அபாயத்தை உருவாக்கி, வங்கியின் கடன் இடர் வெளிப்பாட்டை அதிகரிக்கும். |
| **செயல்பாட்டு இடர் முகாமைத்துவம்** | கிளை வளாகங்கள் மற்றும் ஆதரவு உட்கட்டமைப்புகளுக்கு ஏற்படும் நேரடிச் சேதங்கள், தற்காலிக கிளை மூடல் மற்றும் பணியாளர்கள் பற்றாக்குறை ஆகியவற்றால் வங்கித்தொழில் சேவைகளை வழங்குவதில் இடையூறுகள் ஏற்படலாம். இத்தகைய இடையூறுகள் சேவைத் தொடர்ச்சியைப் பாதிப்பதுடன், பழுதுபார்ப்பு மற்றும் செயல்பாடுகளை மீட்டெடுப்பதற்கான கூடுதல் செலவுகளுக்கு வழிவகுக்கும். |
| **சொத்துத் தரம் மற்றும் பிணைய மதிப்பீடு** | அடமானக் கடன்கள் மற்றும் விவசாயம் சார்ந்த கடன்களுக்காகப் பிணையாக வைக்கப்பட்ட சொத்துக்களுக்கு அதீத காலநிலை நிகழ்வுகள் நேரடிச் சேதங்களை ஏற்படுத்தக்கூடும். பிணைச் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதம் அவற்றின் பெறுமதியைக் குறைப்பதுடன், கடன் வாங்குபவர் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறினால் ஏற்படும் இழப்புகளை அதிகரிக்கக்கூடும். |
| **இடர் செறிவு** | |
| **செயல்பாட்டு இடர்** | சீரற்ற காலநிலை நிகழ்வு இடரானது வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் அமைந்துள்ள கிளைகளில் செறிவூட்டப்பட்டுள்ளது. |
| **கடன் இடர்** | வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற சீரற்ற காலநிலை நிகழ்வுகளால் பாதிக்கப்படக்கூடிய விவசாயம் சார்ந்த கடன்கள் மற்றும் அடையாளம் காணப்பட்ட அபாய வலயங்களில் அமைந்துள்ள அடமானக் கடன் வசதிகள் ஆகியவற்றில் இடர் செறிவூட்டப்பட்டுள்ளது. |

<table>
<tr><th colspan="2">CRRO 1 – சீரற்ற காலநிலை நிகழ்வுகள்</th></tr>
<tr><th colspan="2">மூலோபாயம் மற்றும் தீர்மானம் எடுத்தல்</th></tr>
<tr><th colspan="2">பதிலளிப்பதற்கான திட்டங்கள்:</th></tr>
<tr><td>செயல்பாட்டு மீள்திறன்</td><td>வங்கியின் மூலோபாய மற்றும் செயல்பாட்டுத் தீர்மானங்களை எடுக்கும்போது கிளைகளை இடமாற்றுதல் மற்றும் நிறுவுதல் உட்பட, வெள்ள அபாய வரைபடங்கள், மண்சரிவு அபாய வரைபடங்கள் மற்றும் வரலாற்று காலநிலை தரவுகளைப் பயன்படுத்தி காலநிலை தொடர்பான நேரடி இடர்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. காலநிலை இடையூறுகளின் போது சேவைத் தொடர்ச்சியை ஆதரிக்க, வங்கி தனது டிஜிட்டல் வங்கித்தொழில் தளங்களையும், "Branch on Wheels" (நடமாடும் வங்கி) போன்ற நெகிழ்வான சேவை வழங்கல் வழிமுறைகளையும் வலுப்படுத்தியுள்ளது. கிளை வளாகங்கள் மற்றும் தொடர்புடைய சொத்துக்களுக்கு ஏற்படக்கூடிய நேரடிச் சேதங்கள், பொருத்தமான இடங்களில் காப்புறுதி ஊடாகக் குறைக்கப்படுகின்றன.<br><br>காலநிலை இடையூறுகளுக்கான செயல்பாட்டு மீள்திறனானது, வங்கியின் வணிகத் தொடர்ச்சித் திட்டமிடல் (BCP) கட்டமைப்பின் மூலம் ஆதரிக்கப்படுகிறது. இதில் அவ்வப்போது நடத்தப்படும் BCP ஒத்திகைகள் மற்றும் சீரற்ற காலநிலை நிகழ்வுகளின் போது முக்கியமான செயல்பாடுகளின் தயார்நிலை மற்றும் தொடர்ச்சியை உறுதி செய்வதற்கான பணியாளர் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள் உள்ளடங்கும்.</td></tr>
<tr><td>கடன் இடர் ஒருங்கிணைப்பு</td><td>நிறுவப்பட்ட கடன் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மூலம் வங்கி காலநிலை தொடர்பான நேரடி இடர்களை நிர்வகிக்கிறது. மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்ட இடங்களில் கடன் முன்மொழிவுகளுக்காக, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து (NBRO) அல்லது தொடர்புடைய அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகள் வாடிக்கையாளர்களிடமிருந்து கோரப்படுகின்றன. அடமான வசதிகளுக்கான சொத்து மதிப்பீட்டு அறிக்கைகளில் வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாயக் காரணிகள் சேர்க்கப்படுகின்றன் மேலும் அடமானப் பிணைகளுக்காக காப்புறுதி பெறப்படும்போது, காலநிலை தொடர்பான நேரடி இடர்கள் காப்புறுதி மதிப்பீட்டில் கணக்கில் கொள்ளப்படுகின்றன.</td></tr>
<tr><th colspan="2">வளப்படுத்தல்</th></tr>
<tr><td>செயல்பாட்டு மீள்திறன் நடவடிக்கைகள்</td><td>அதிக பாதிப்புக்குள்ளாகக்கூடியவை என அடையாளம் காணப்பட்ட கிளைகளை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுவது குறித்து வங்கி பரிசீலித்து வருகிறது. அத்துடன், நேரடி இடர்களுக்கான வெளிப்பாட்டை மேலும் குறைக்க, வெள்ளத்தினால் பாதிக்கப்படாத பெட்டகங்களை (Flood-proof vaults) அறிமுகப்படுத்துதல் மற்றும் முக்கியமான பாதுகாப்பு ஆவணங்களை பாதுகாப்பான இடங்களில் சேமித்தல் போன்ற நடவடிக்கைகள் பரிசீலிக்கப்படுகின்றன.</td></tr>
<tr><td>மனித வளம் மற்றும் திறன்</td><td>பேண்தகைமை மற்றும் காலநிலை தொடர்பான நடவடிக்கைகளை ஆதரிக்க பிரத்யேக மனித வளங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் காலநிலை தாக்க அறிக்கையிடல் மற்றும் தொடர்புடைய பணிகளை ஆதரிக்க நிலைத்தன்மை வங்கிப் பிரிவுக்கு ஒரு சிரேஷ்ட முகாமையாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.</td></tr>
<tr><td>சேவைத் தொடர்ச்சி நடவடிக்கைகள்</td><td>காலநிலை இடையூறுகளின் போது சேவையைத் தொடர, டிஜிட்டல் தளங்கள் மற்றும் "Branch on Wheels" உள்ளிட்ட மாற்று சேவை வழங்கல் வழிகளை வங்கி பயன்படுத்துகிறது.</td></tr>
<tr><td>திறன் கட்டியெழுப்புதல</td><td>காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் தாக்கங்களை நிர்வகிப்பதில் நிறுவனத் திறனை வலுப்படுத்துவதற்காக, கடன் உத்தியோகத்தர்களுக்கான ESMS ஸ்கிரீனிங் பயிற்சி மற்றும் புதிதாக பதவி உயர்வு பெற்ற அதிகாரிகளுக்கான பேண்தகைமை பயிற்சி உள்ளிட்ட உள்நிலைத் திறன் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு வங்கி தொடர்ந்து வளங்களை ஒதுக்குகிறது.</td></tr>
<tr><th colspan="2">முன்னேற்றம்</th></tr>
<tr><td colspan="2">வெள்ள அபாய வரைபடங்கள், மண்சரிவு அபாய வரைபடங்கள், வரலாற்று வானிலை தரவுகள் மற்றும் “டிட்வா“ சூறாவளி உள்ளிட்ட சமீபத்திய நிகழ்வுகளின் தாக்கங்களைப் பயன்படுத்தி, கிளை இடங்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் மீதான நேரடித் தாக்கங்களை மதிப்பீடு செய்வதன் மூலம் அதீத காலநிலை தொடர்பான இடர்களை அடையாளம் காணும் முறையை வங்கி மேம்படுத்தியுள்ளது. இவ் மதிப்பீடுகள் புவியியல் ரீதியான வெளிப்பாடுகள் மற்றும் தொடர்புடைய கடன் இடர் குறிப்பாக காலநிலை பாதிப்புக்குள்ளாகக்கூடிய துறைகள் மற்றும் இடங்களில் குறித்த வங்கியின் புரிதலை மேம்படுத்தியுள்ளன. முந்தைய மதிப்பீடு ஆரம்ப மட்டத்தில் நடத்தப்பட்டது இந்த ஆரம்ப பகுப்பாய்வின் அடிப்படையில் அதீத காலநிலை நிகழ்வுகளுடன் தொடர்புடைய வாடிக்கையாளர் மட்டத்திலான கடன் இடர் மதிப்பீட்டை மேலும் விரிவுபடுத்த வங்கி திட்டமிட்டுள்ளது.<br><br>தொடர்ச்சியான முன்னேற்றத்தின் ஒரு பகுதியாக, அதிக இடர் கொண்ட கடன் வசதிகளுக்கு சுற்றுச்சூழல் மற்றும் சமூக பரிசோதனை (Environmental and social screening) செய்தல், சொத்து மதிப்பீடு மற்றும் காப்புறுதி செயல்முறைகளில் காலநிலை காரணிகளைச் சேர்த்தல் மற்றும் வணிகத் தொடர்ச்சி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல் போன்ற மூலோபாயங்களை வங்கி தொடர்ந்து வலுப்படுத்தும்.</td></tr>
<tr><th colspan="2">நிதி விளைவுகள்</th></tr>
<tr><td>நடப்பு ஆண்டு நிதி விளைவுகள்</td><td>டிட்வா சூறாவளியைத் தொடர்ந்து பல கிளைகள் மற்றும் வெளிக்கள இடங்களில் நேரடிச் சேதங்கள் பதிவாகியுள்ளன. எனினும், மதிப்பிடப்பட்ட நேரடிச் சேதமானது நடப்பு ஆண்டு நிதி விளைவுகளில் பொருண்மை வாய்ந்ததாக இருக்கவில்லை.<br><br>காலநிலை நிகழ்வுகளால் கடன் சொத்துப்பட்டியலில் ஏற்படக்கூடிய கடன் இழப்பிற்காக ஒதுக்கீடுகளைச் செய்வதில் வங்கி ஒரு விவேகமான அணுகுமுறையைக் கையாள்கிறது. இதனடிப்படையில், டிட்வா சூறாவளியால் ஏற்படக்கூடிய கடன் இடர் தாக்கம் கருத்தில் கொள்ளப்பட்டு, அதற்கேற்ப முகாமைத்துவ மேலடுக்குகள் (Management overlays) பயன்படுத்தப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. (நிதி அறிக்கைகளின் 28.2 குறிப்பைப் பார்க்கவும்).</td></tr>
<tr><td>எதிர்பார்க்கப்படும் நிதி விளைவுகள்</td><td>பக்கம் 90 – இடைக்கால நிவாரணத்தைப் பார்க்கவும்.</td></tr>
</table>

# SLFRS நிலைத்தன்மை தொடர்பான நிதியியல் வெளிப்படுத்தல்கள்

| CRRO 1 – சீரற்ற காலநிலை நிகழ்வுகள் | |
|---|---|
| **அடுத்த வருடாந்த அறிக்கையிடல் காலத்தில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் இருப்புப் பெறுமதிகளில் குறிப்பிடத்தக்க பொருண்மை சரிசெய்தலுக்கான இடர்.** | குறிப்பிடத்தக்க பொருண்மை சரிசெய்தல்கள் எதுவும் அடையாளம் காணப்படவில்லை. |
| **காலநிலை மீள்திறன்** | |
| **காலநிலை மீள்திறன்** | பக்கம் 90 – இடைக்கால நிவாரணத்தைப் பார்க்கவும். |
| **சூழல் பகுப்பாய்வு** | பக்கம் 90 – இடைக்கால நிவாரணத்தைப் பார்க்கவும். |
| **தீர்மானங்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள்** | |
| **தீர்மானங்கள்** | வங்கியின் எதிர்கால வாய்ப்புகளைப் பாதிக்கும் என எதிர்பார்க்கப்படும் இடர்களை அடையாளம் காண்பதிலும் மதிப்பிடுவதிலும் வங்கி தனது தொழில்முறைத் தீர்மானங்களைப் பயன்படுத்துகிறது. வெள்ள அபாய வரைபடங்கள், மண்சரிவு அபாய வரைபடங்கள் மற்றும் கடந்தகால நிகழ்வுகளின் தரவுகளின் அடிப்படையில் எவ்வகையான புவியியல் பகுதிகள் மற்றும் கிளை இடங்கள் அபாயத்திற்கு உள்ளாகின்றன என்பதைத் தீர்மானிப்பது இதில் முக்கியமானது. மேலும், நேரடிச் சேதங்கள், செயல்பாட்டு இடையூறுகள் மற்றும் கடன் இடர் தாக்கங்களின் பொருண்மைத் தன்மையை மதிப்பிடுவதற்கும் இத்தீர்மானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. |
| **நிச்சயமற்ற தன்மைகள்** | அதீத காலநிலை நிகழ்வுகளின் நிதித் தாக்கங்களை, குறிப்பாக கட்டிடங்கள், உபகரணங்கள் மற்றும் மின்னணு சொத்துக்களுக்கு ஏற்படும் நேரடிச் சேதங்களை மதிப்பிடுவதில் அளவீட்டு நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது. இந்த மதிப்பீடுகள் அறிக்கையிடல் திகதியில் கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் அமைந்தவை பழுதுபார்ப்பு மற்றும் மீட்புப் பணிகள் முன்னேறும்போது இவை மாறக்கூடும். அத்துடன், குறிப்பாக விவசாயம் போன்ற துறைகளில் கடன் வாங்குபவர்களின் திருப்பிச் செலுத்தும் நடத்தை மற்றும் எதிர்கால கடன் செயல்திறனை இக்காலநிலை நிகழ்வுகள் எந்த அளவிற்குப் பாதிக்கும் என்பதை அறிக்கையிடல் திகதியில் உறுதியாகத் தீர்மானிக்க முடியாது |

| CRRO 2 – குறைந்த கார்பன் மாற்றத்தினால் அதிகரிக்கும் செலவுகள் | |
|---|---|
| **கண்ணோட்டம்** | |
| **விளக்கம்** | இலங்கையின் தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள், பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைப்பதற்கும் குறைந்த கார்பன் பொருளாதாரத்தை நோக்கிய மாற்றத்தை முன்னெடுப்பதற்கும் உறுதியளித்துள்ளன. இத்தேசிய உறுதிப்பாடுகள், நிதி நிறுவனங்கள் காலநிலை சார்ந்த முதலீடுகளுக்கு ஆதரவளிக்கவும், அதிக உமிழ்வை ஏற்படுத்தும் செயல்பாடுகளுக்கான நிதியளிப்பைக் குறைக்கவும் வேண்டுமென்ற எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளன. வங்கியினைப் பொறுத்தவரை, குறைந்த கார்பன் மாற்றத் தேவைகளுடன் தொடர்புடைய அதிகரித்த செலவுகள் மற்றும் அதிக உமிழ்வு கொண்ட துறைகளிலிருந்து வருவாய் குறைவதற்கான வாய்ப்புகள் ஆகியவை இலாபத்தன்மை மற்றும் வளர்ச்சி வாய்ப்புகளில் அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும். |
| **CRRO-இன் தன்மை** | மாற்ற இடர் |
| **கால எல்லை** | நடுத்தர மற்றும் நீண்ட காலம்கால |
| **எல்லை வரையறை** | பக்கம் 89 ஐப் பார்க்கவும் |
| **வணிக மாதிரி மற்றும் பெறுமதிச் சங்கிலி** | |
| **நடப்பு ஆண்டு தாக்கங்கள்** | |
| 2025 ஆம் ஆண்டின் போது, வங்கி தனது கிளைகளுக்கு சூரிய சக்தியைப் பயன்படுத்துதல் மற்றும் எரிசக்தி அமைப்பு மேம்படுத்தல்கள் உள்ளிட்ட எரிசக்தி செயல்திறன் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முயற்சிகளை மேற்கொண்டது. இச்செயல்பாடுகள், செயல்பாட்டுத் தீர்மானம் எடுத்தலில் குறைந்த கார்பன் பரிசீலனைகளின் ஆரம்ப கட்ட ஒருங்கிணைப்பைப் பிரதிபலிக்கின்றன. | |
| **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** | |
| **செயல்பாட்டு மற்றும் மூலதனச் செலவினங்கள்** | எரிசக்தி செயல்திறன் மேம்படுத்தல்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தீர்வுகள் மற்றும் பிற குறைந்த கார்பன் முயற்சிகளில் முதலீடு செய்வது மாற்றக் கட்டத்தில் அதிக செலவுகளை ஏற்படுத்தக்கூடும். இது நீண்டகாலச் செலவு சேமிப்பிற்கான சாத்தியக்கூறுகள் இருந்தபோதிலும், குறுகிய மற்றும் நடுத்தர காலத்தில் இலாபத்தன்மை மற்றும் வளர்ச்சியில் அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும். |
| **பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் துறைசார் மாற்றங்கள்** | அதிக உமிழ்வு கொண்ட துறைகளில் ஈடுபடுதல் மற்றும் கடன் சொத்துப்பட்டியலை படிப்படியாக கார்பன் நீக்கம் செய்தல் ஆகியவை தயாரிப்பு வழங்கல்கள், துறைசார் வெளிப்பாடுகள் மற்றும் மூலதன ஒதுக்கீட்டுத் தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும். |

| CRRO 2 – குறைந்த கார்பன் மாற்றத்தினால் அதிகரிக்கும் செலவுகள் | |
|---|---|
| **கண்ணோட்டம்** | |
| **இடர் செறிவூட்டல்** | |
| **செயல்பாட்டு இடர்** | வங்கியின் உட்கட்டமைப்பு உபகரணங்கள் மற்றும் செயல்முறைகளை எரிசக்தி திறன்மிக்க உபகரணங்கள் மற்றும் அமைப்புகளுக்கு மேம்படுத்த வேண்டிய தேவை ஏற்படலாம். |
| **கடன் இடர்** | குறைந்த கார்பன் மாற்றத் தேவைகள் வங்கியின் கடன் சொத்துப்பட்டியல் கட்டமைப்பில் செல்வாக்கு செலுத்தக்கூடும், குறிப்பாக அதிக உமிழ்வு கொண்ட துறைகளுக்கான நிதியளிப்பு தொடர்பில் இது அமையும். |
| **மூலோபாயம் மற்றும் தீர்மானம் எடுத்தல்** | |
| **பதிலளிப்பதற்கான திட்டங்கள்** | |
| **பசுமை நிதியளிப்பு** | சுற்றுச்சூழல் ரீதியாக நிலையான மற்றும் குறைந்த கார்பன் நடவடிக்கைகளுக்கான நிதியளிப்பை விரிவுபடுத்துவதன் மூலம் வங்கி பசுமை நிதியளிப்பில் கவனம் செலுத்துகிறது. |
| **மாற்றத் திட்டமிடல்** | ஒரு மாற்றத் திட்டத்தை உருவாக்குவதற்கும், கார்பன் கணக்கியல் நிதியியல் கூட்டாண்மை வழிமுறைக்கு இணங்க நிதியளிக்கப்பட்ட உமிழ்வுகளை அளவிடுவதற்கும் வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது. |
| **வள ஒதுக்கீடு** | |
| புதுமையான பேண்தகைமை வங்கித்தொழில் தயாரிப்புகள் மற்றும் எரிசக்தி சேமிப்பு மேம்பாட்டு முயற்சிகளை உருவாக்குவதற்கும் செயல்படுத்துவதற்கும் வங்கி பிரத்யேக வளங்களை ஒதுக்குகிறது. பேண்தகைமை வங்கிப் பிரிவுக்கு ஊழியர்களை நியமிப்பதன் மூலமும், ஊழியர் பயிற்சித் திட்டங்கள் மூலமும் மனித வளம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், "பேண்தகைமைப் பிணைமுறி போன்ற பத்திரங்கள் மூலம் நிதி திரட்டப்பட்டு, பேண்தகைமை கடன் வழங்கலை விரிவுபடுத்த வங்கி திட்டமிட்டுள்ளது. | |
| **முன்னேற்றம்** | |
| **புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீடுகள்** | கிளைகளுக்கு சூரிய சக்தியைப் பயன்படுத்தும் முயற்சிகளுக்கு வங்கி தொடர்ந்து வளங்களை ஒதுக்குகிறது இவ்வருடத்தில் 28 புதிய கிளைகள் 'ரூ. 149.6 மில்லியன் முதலீட்டில் சூரிய சக்தியாக்கப்பட்டுள்ளன. |
| **பசுமை கட்டிடச் சான்றிதழ்** | ஜா-எல மற்றும் குருணாகல் 2வது நகரக் கிளைகள் பசுமை கட்டிட சான்றிதழைப் பெற்றுள்ளன. |
| **நிதியளிக்கப்பட்ட உமிழ்வுகள்** | நிதியளிக்கப்பட்ட உமிழ்வுகளை அளவிடவும் வெளிப்படுத்தவும் வங்கி PCAF அமைப்பில் இணைந்துள்ளது. |
| **பசுமை நிதியளிப்பு நடவடிக்கை** | இவ்வருடத்தில் ரூ. 1.2 பில்லியன் பசுமை நிதியளிப்பு வழங்கப்பட்டுள்ளது. |
| **பேண்தகைமைப் பிணைமுறி வெளியீடு** | தனது பசுமை மற்றும் பேண்தகைமை கடன் சொத்துப்பட்டியலை விரிவுபடுத்துவதற்காக 2025 இல் ரூ. 20.0 பில்லியன் பெறுமதியான பேண்தகைமைப் பிணையை வங்கி வெளியிட்டது. |
| **நிதி விளைவுகள்** | |
| **நடப்பு ஆண்டு நிதி விளைவுகள்** | வங்கியின் நிர்ணயிக்கப்பட்ட பொருண்மை வரம்புகளுக்கு இணங்க, குறைந்த கார்பன் மாற்றத் தேவைகளால் ஏற்பட்ட செலவுகள் லாப நட்டக் கணக்கு அல்லது ஐந்தொகையில் எவ்வித பொருண்மை தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. |
| **எதிர்பார்க்கப்படும் நிதி விளைவுகள்** | பக்கம் 90 – இடைக்கால நிவாரணத்தைப் பார்க்கவும். |
| **அடுத்த வருடாந்த அறிக்கையிடல் காலத்தில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் இருப்புப் பெறுமதிகளில் குறிப்பிடத்தக்க பொருண்மை சரிசெய்தலுக்கான இடர்.** | குறிப்பிடத்தக்க பொருண்மை சரிசெய்தல்கள் எதுவும் அடையாளம் காணப்படவில்லை. |
| **காலநிலை மீள்திறன்** | |
| **காலநிலை மீள்திறன் வெளிப்படுத்தல்** | பக்கம் 90 – இடைக்கால நிவாரணத்தைப் பார்க்கவும். |
| **சூழல் பகுப்பாய்வு வெளிப்படுத்தல்** | பக்கம் 90 – இடைக்கால நிவாரணத்தைப் பார்க்கவும். |
| **தீர்மானங்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள்** | |
| **தீர்மானங்கள்** | வங்கியின் உட்கட்டமைப்பில் எரிசக்தி திறன் மேம்பாடுகள் தேவைப்படும் செயல்பாட்டுப் பகுதிகளை அடையாளம் காண்பதில் தீர்மானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இச்செலவுகள் வங்கியின் நிதி பொருண்மை வரம்புகளுடன் ஒப்பிடுகையில் முக்கியத்துவமானவையா என்பதைத் தீர்மானிக்கவும் தொழில்முறைத் தீர்மானங்கள் அவசியமாகின்றன. |
| **நிச்சயமற்ற தன்மைகள்** | **உணரப்பட்ட செலவு சேமிப்பில் நிச்சயமற்ற தன்மை**<br>எரிசக்தி திறன் மேம்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் செலவு சேமிப்பு, உண்மையான செயல்பாட்டுத் திறன் மற்றும் பயன்பாட்டு முறைகளைப் பொறுத்து ஆரம்ப மதிப்பீடுகளிலிருந்து மாறுபடலாம்.<br><br>**மூலதனச் செலவு மதிப்பீடுகளில் நிச்சயமற்ற தன்மை**<br>தொழில்நுட்பக் குறிப்புகள், கொள்முதல் செலவுகள் மற்றும் அமலாக்க நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக மாற்ற முயற்சிகளுக்கான செலவு மதிப்பீடுகளில் நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது. |

# SLFRS நிலைத்தன்மை தொடர்பான நிதியியல் வெளிப்படுத்தல்கள்

| CRRO 3 – புதுமையான பேண்தகைமை வங்கித்தொழில் தயாரிப்புகள் | |
|---|---|
| **கண்ணோட்டம்** | |
| **விளக்கம்** | பேண்தகைமை வைப்புகள், பேண்தகைமை கடன்கள் மற்றும் பேண்தகைமை முதலீடுகள் உள்ளிட்ட புதுமையான பேண்தகைமை வங்கித்தொழில் தயாரிப்புகளை விரிவுபடுத்துவதன் மூலம் தனது வணிக மாதிரியை வலுப்படுத்துவதற்கான வாய்ப்பை வங்கி அடையாளம் கண்டுள்ளது. இந்தத் தயாரிப்புகள் குறைந்த கார்பன் மற்றும் பேண்தகைமை நடவடிக்கைகளை நோக்கி நிதியைத் திரட்ட உதவுவதுடன், காலநிலை சார்ந்த நிதித் தீர்வுகளுக்கான வளர்ந்து வரும் சந்தை தேவையையும் பூர்த்தி செய்கின்றன. நிதி ரீதியாக, இந்த வழங்கல்கள் நிலையான நிதியளிப்பு, சொத்துப்பட்டியல் வளர்ச்சி, வருவாய் பன்முகத்தன்மை மற்றும் மூலதனச் சந்தை நிதிக்கான அணுகல் ஆகியவற்றை ஆதரிப்பதோடு, பேண்தகைமை நிதியியலில் வங்கியின் நிலையை மேம்படுத்துகின்றன. |
| **CRRO-இன் வகை** | வாய்ப்பு (Opportunity) |
| **கால எல்லை** | குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலம் |
| **கால எல்லை வரையறை** | பக்கம் 89 ஐப் பார்க்கவும். |
| **வணிக மாதிரி மற்றும் பெறுமதிச் சங்கிலி** | |
| **நடப்பு ஆண்டு தாக்கங்கள்** | |
| **தயாரிப்பு அறிமுகம் மற்றும் நிதித் திரட்டல்** | வங்கியின் நிதியளிப்பு, கடன் வழங்கல் மற்றும் மூலதனச் சந்தை நடவடிக்கைகளில் பேண்தகைமைப் பரிசீலனைகள் மென்மேலும் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன. இது சொத்துப்பட்டியல் பன்முகத்தன்மையை ஆதரிப்பதுடன், பேண்தகைமை நிதி பெறுமதித் தொடரில் வங்கியின் பங்கினை வலுப்படுத்துகிறது.<br><br>இவ்வருடத்தில், வங்கி "BOC Green Loans",உயிரியல் ரீதியாக சிதைவடையக்கூடிய டெபிட் கார்டு ஆகியவற்றை அறிமுகப்படுத்தியதுடன், ஒரு “பேண்தகைமைப் முறியை (Sustainability Bond) வெளியிட்டது. |
| **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** | |
| **வருவாய் மற்றும் சொத்துப்பட்டியல் வளர்ச்சி** | பேண்தகைமை நிதித் தயாரிப்புகளுக்கான அதிகரித்த தேவையானது, பேண்தகைமை கடன் வழங்கல் அளவு மற்றும் அதனுடன் தொடர்புடைய வட்டி வருவாய் வளர்ச்சியை ஆதரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. |
| **நிதியளிப்பு மற்றும் மூலதனச் சந்தை அணுகல்** | பேண்தகைமைப் பிணைகளை வெளியிடுதல் மற்றும் பேண்தகைமை வைப்புகளைத் திரட்டுதல் ஆகியவை பேண்தகைமை சார்ந்த நிதி ஆதாரங்களை அணுகும் வங்கியின் திறனை மேம்படுத்தும். இது நிதியளிப்பு பன்முகத்தன்மையை ஆதரிப்பதுடன், மூலதனச் சந்தையில் வங்கியின் நிலையை வலுப்படுத்தும். |
| **வாடிக்கையாளர் மற்றும் சந்தை நிலைப்படுத்தல்** | புதுமையான பேண்தகைமை தயாரிப்புகளை வழங்குவது, சுற்றுச்சூழல் உணர்வுள்ள வாடிக்கையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடனான உறவை வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. |
| **செறிவூட்டல்** | |
| **பேண்தகைமை நிதியளிப்பு** | பேண்தகைமை நிதியளிப்பு: புதுமையான பேண்தகைமை வங்கித்தொழில் தயாரிப்புகள் மூலமான காலநிலை தொடர்பான வாய்ப்புகள் வங்கியின் முக்கிய பெறுமதி உருவாக்கும் செயல்பாடுகளுக்குள் செறிவூட்டப்பட்டுள்ளன.<br><br>இம்முயற்சிகள் சுற்றுச்சூழலுக்கு உகந்த துறைகளுக்கான நிதி வழங்கலை அதிகரிப்பதன் மூலம் சொத்துப்பட்டியல் பன்முகத்தன்மைக்கு பங்களிக்கின்றன.<br><br>பேண்தகைமை நிதி வழங்கல்களின் விரிவாக்கமானது வங்கியின் சந்தை இருப்பை வலுப்படுத்துவதுடன், பேண்தகைமை நிதி பெறுமதித் தொடரில் அதன் நிலையை உறுதிப்படுத்துகிறது. |
| **மூலோபாயம் மற்றும் தீர்மானம் எடுத்தல்** | |
| **பதிலளிப்பதற்கான திட்டங்கள்** | |
| **பேண்தகைமை நிதி மூலோபாயம்** | வங்கி தனது வணிக மூலோபாயத்தின் ஒரு முக்கிய அங்கமாக பேண்தகைமை நிதி வழங்கல்களை முறையாக விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது. இதில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, பசுமை மற்றும் சமூகக் கடன்கள், பசுமை கட்டிடங்கள் மற்றும் எரிசக்தி திறன் நிதியளிப்பு, பேண்தகைமை விவசாயம், கழிவுநீர் மேலாண்மை, தூய்மையான போக்குவரத்து, வட்டப் பொருளாதாரம் (Circular economy) மற்றும் உணவுப் பாதுகாப்பு முயற்சிகள் போன்ற கடன் தயாரிப்புகளை வலுப்படுத்துவதும் மேம்படுத்துவதும் அடங்கும்<br><br>அதேவேளையில், பேண்தகைமை வைப்புத் தயாரிப்புகள் மூலம் வணிக மாதிரியின் நிதியளிப்புப் பக்கத்தை வலுப்படுத்தவும், கருப்பொருள் பிணைகள் (Thematic bonds) மூலம் மூலதனச் சந்தை இருப்பை மேம்படுத்தவும் வங்கி திட்டமிட்டுள்ளது.<br><br>புதுமையான பேண்தகைமை தயாரிப்புகளிலிருந்து எழும் வாய்ப்புகளை ஆதரிப்பதற்காக, வங்கி தனது பரந்த நுளுபு கட்டமைப்பிற்குள் பேண்தகைமை தொடர்பான முக்கிய செயல்திறன் காட்டிகளை (KPIs) நிறுவியுள்ளது. |

| CRRO 3 – புதுமையான பேண்தகைமை வங்கித்தொழில் தயாரிப்புகள் | | |
|---|---|---|
| **வள ஒதுக்கீடு** | | |
| புதுமையான பேண்தகைமை வங்கித்தொழில் தயாரிப்புகளை உருவாக்குவதற்கும் செயல்படுத்துவதற்கும் வங்கி பிரத்யேக வளங்களை ஒதுக்குகிறது. பேண்தகைமை வங்கிப் பிரிவுக்கு ஊழியர்களை நியமிப்பதன் மூலமும், பேண்தகைமை மற்றும் பசுமை நிதியியலில் உள்நிலைத் திறனை மேம்படுத்துவதற்கான இலக்கு சார்ந்த ஊழியர் பயிற்சித் திட்டங்கள் மூலமும் மனித வளம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. மேலதிகமாக, பேண்தகைமைப் பிணைமுறி போன்ற பத்திரங்கள் மூலம் நிதி திரட்டப்படுவதால், வங்கி தனது பேண்தகைமை கடன் வழங்கலை விரிவுபடுத்தவும், காலநிலை சார்ந்த முதலீட்டு நடவடிக்கைகளை ஆதரிக்கவும் முடிகிறது. | | |
| **முன்னேற்றம்** | | |
| **பசுமை வைப்புகள்** | 2025 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பசுமை வைப்பு மீதி ரூ. 78.9 மில்லியனாகக் காணப்பட்டது. | |
| **பசுமை நிதியளிப்பு மீதி** | 2025 டிசம்பர் 31 ஆம் திகதியன்று வங்கியின் பசுமை நிதியளிப்பு சொத்துப்பட்டியல் ரூ. 10.2 பில்லியனாக இருந்தது இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 67% அதிகரிப்பாகும். | |
| **பேண்தகைமைப் பிணை வெளியீடு** | வங்கி 2025 இல் ரூ. 20.0 பில்லியன் பெறுமதியான BOC பேண்தகைமைப் பிணைமுறியை அறிமுகப்படுத்தியது. இது வங்கியின் பேண்தகைமை நிதித் தளத்தை வலுப்படுத்துவதுடன், பசுமை மற்றும் சமூகத் திட்டங்களின் விரிவாக்கத்திற்கு ஆதரவளிக்கிறது. | |
| **நிதி விளைவுகள்** | | |
| **நடப்பு ஆண்டு நிதி விளைவுகள்** | பேண்தகைமை கடன்கள் மீதி: ரூ. 73.0 பில்லியன் (நிதி அறிக்கைகளின் குறிப்பு 28.1 ஐப் பார்க்கவும்).<br>பசுமை வைப்பு மீதி ரூ. 78.9 மில்லியன் (நிதி அறிக்கைகளின் குறிப்பு 42 ஐப் பார்க்கவும்).<br>பேண்தகைமை முதலீட்டு மீதி: ரூ. 20.0 பில்லியன் (நிதி அறிக்கைகளின் குறிப்பு 49.1 ஐப் பார்க்கவும்). | |
| **எதிர்பார்க்கப்படும் நிதி விளைவுகள்:** | பக்கம் 90 - இடைக்கால நிவாரணத்தைப் பார்க்கவும். | |
| **அடுத்த வருடாந்த அறிக்கையிடல் காலத்தில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் இருப்புப் பெறுமதிகளில் குறிப்பிடத்தக்க பொருண்மை சரிசெய்தலுக்கான இடர்.** | | குறிப்பிடத்தக்க பொருண்மை சரிசெய்தல்கள் எதுவும் அடையாளம் காணப்படவில்லை. |
| **காலநிலை மீள்திறன்** | | |
| **காலநிலை மீள்திறன் வெளிப்படுத்தல்** | பக்கம் 90 – இடைக்கால நிவாரணத்தைப் பார்க்கவும | |
| **சூழல் பகுப்பாய்வு வெளிப்படுத்தல்** | பக்கம் 90 – இடைக்கால நிவாரணத்தைப் பார்க்கவும். | |
| **தீர்மானங்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள** | | |
| **தீர்மானங்கள்** | புதுமையான பேண்தகைமைத் தயாரிப்புகளிலிருந்து எழும் வாய்ப்புகள் தொடர்பில், இலங்கை மத்திய வங்கியின் பசுமை வகைப்பட்டியலை முதன்மை வழிகாட்டியாகக் கொண்டு, எவ்வகையான தயாரிப்புகள் மற்றும் வெளிப்பாடுகள் பசுமை எனத் தகுதிபெறுகின்றன என்பதைத் தீர்மானிக்க வங்கி தனது தொழில்முறைத் தீர்மானத்தைப் பயன்படுத்துகிறது. | |
| **நிச்சயமற்ற தன்மைகள்** | சந்தை தேவை, வாடிக்கையாளர்களின் தயார்நிலை, ஒழுங்குமுறை முன்னேற்றங்கள் மற்றும் பொருளாதார நிலைமைகளைப் பொறுத்து பேண்தகைமை நிதியியலின் உண்மையான வளர்ச்சி மாறுபடலாம். மேலும், வாடிக்கையாளர் நடத்தை மற்றும் விலையிடல் மாற்றங்கள் இலாபங்களை ஈட்டும் காலப்பகுதியில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்பதால் நிதி விளைவுகள் குறித்த நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது. | |

## இடர் முகாமைத்துவம்

வங்கி தனது தற்போதைய நிறுவன இடர் முகாமைத்துவ கட்டமைப்பின் மூலம் காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளை நிர்வகிக்கிறது. இது கட்டமைக்கப்பட்ட அடையாளம் காணுதல், மதிப்பீடு செய்தல், முன்னுரிமை அளித்தல் மற்றும் கண்காணித்தல் செயல்முறைகளால் ஆதரிக்கப்படுகிறது. இதற்கான மேற்பார்வை நிறுவப்பட்ட மேலாண்மைக் குழுக்கள் மற்றும் சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (IRMC) ஆகியவற்றால் வழங்கப்படுகிறது.

### காலநிலை தொடர்பான இடர்களை அடையாளம் காணுதல் தொடர்பான செயல்முறைகள் மற்றும் கொள்கைகள்

காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளை அடையாளம் காணவும் மதிப்பீடு செய்யவும் வங்கி உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட ஒரு செயல்முறையைப் பயன்படுத்துகிறது. இடர் மதிப்பீடானது கட்டமைக்கப்பட்ட தரவு உள்ளீடுகள், வரையறுக்கப்பட்ட மதிப்பீட்டு அளவுகோல்கள் மற்றும் அவ்வப்போது நடைபெறும் குழு மதிப்பாய்வுகளின் அடிப்படையில் அமைகிறது

**காலநிலை தொடர்பான இடர்களை அடையாளம் காணப் பயன்படுத்தப்படும் உள்ளீடுகள் மற்றும் அளவுருக்கள்**

அடையாளம் காணும் செயல்முறையானது உள்ளக செயற்பாட்டு, கடன், நிதி மற்றும் மாற்றத் திட்டமிடல் தகவல்களை அடிப்படையாகக் கொண்டது இது பொருத்தமான வெளிநாட்டுத் தரவு ஆதாரங்களால் துணைபுரிகிறது

# SLFRS நிலைத்தன்மை தொடர்பான நிதியியல் வெளிப்படுத்தல்கள்

| இடர் வகை | இடர் விதம் | கருத்திற்கொள்ளப்பட்ட முக்கிய உள்ளீடுகள் | ஆதார வகை |
|---|---|---|---|
| பௌதிக இடர் | அதீத காலநிலை நிகழ்வுகள் | • கிளைகளில் ஏற்பட்ட மோசமான காலநிலை தாக்கங்களின் பதிவுகள்<br>• கிளை மற்றும் மாகாண மட்டங்களில் ஏற்பட்ட நேரடிச் சேதச் சம்பவங்கள்<br>• மோசமான காலநிலை காரணமாக மூடப்பட்ட கிளைகளின் தரவுத்தளம் (2023 முதல் பராமரிக்கப்படுகிறது)<br>• காலநிலை இடையூறுகளுடன் தொடர்புடைய வணிக இழப்பு மதிப்பீடுகள்<br>• காலநிலை தாக்கங்களால் வாடிக்கையாளர் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் ஏற்படும் அழுத்தக் காட்டிகள்<br>• வெள்ள அபாயம் உள்ள பகுதிகளில் அமைந்துள்ள கிளைகளின் விவரங்கள்<br>• பாதிக்கப்பட்ட இடங்களில் விவசாயக் கடன் சொத்துப்பட்டியல்களின் இழப்பு சதவீதங்கள்<br>• இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வெள்ள வரைபடங்கள்<br>• இடர் முகாமைத்துவ நிலையத்தின் (DMC) நிலைமை அறிக்கைகள் | உள்ளகப் பதிவுகள்<br>வெளிநாட்டு பொது ஆதாரங்கள் |
| மாற்ற இடர் | குறைந்த கார்பன் மாற்றத் தேவைகளால் அதிகரிக்கும் செலவுகள் | • அதிக உமிழ்வு கொண்ட துறைகளுக்கான கடன் சொத்துப்பட்டியல் வெளிப்பாடு<br>• வளாகத் திணைக்களம் மற்றும் BOC சொத்து மேம்பாட்டு வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் (PDL)<br>• எரிசக்தித் திறன் மற்றும் அமைப்பு மேம்பாட்டுப் பரிந்துரைகள்<br>• குறைந்த கார்பன் மேம்படுத்தல்களுக்காக மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவினங்கள்<br>• கணிக்கப்பட்ட செயல்பாட்டு மற்றும் பராமரிப்புச் செலவு மாற்றங்கள்<br>• அதிக உமிழ்வு செயல்பாடுகளிலிருந்து விலகுவதால் ஏற்படும் வருவாய் விளைவுகள் | உள்ளகச் சொத்துப் பட்டியல் தரவுகள்<br>உள்ளக அறிக்கைகள்,<br>உள்ளக எறிவுகள்<br>உள்ளக பகுப்பாய்வு |

## காலநிலை தொடர்பான சூழல் பகுப்பாய்வு

முன்னோக்கிய இடர் முகாமைத்துவத்தை வலுப்படுத்துவதில் காலநிலை தொடர்பான சூழல் பகுப்பாய்வின் முக்கியத்துவத்தை வங்கி அங்கீகரிக்கிறது. காலநிலை தொடர்பான சூழல் பகுப்பாய்வு தற்போது ஆரம்ப கட்டத்தில் உள்ளதுடன், வழக்கமான அழுத்தச் சோதனை அல்லது ஆளுகை செயல்முறைகளில் இன்னும் முழுமையாக இணைக்கப்படவில்லை.

உள்ளகத் திறன்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன அத்துடன் 2027 ஆம் ஆண்டு முதல் வங்கியின் அழுத்தச் சோதனை கட்டமைப்பில் காலநிலை சூழல் பகுப்பாய்வை ஒருங்கிணைக்கவும், அதன் முக்கிய முடிவுகளை உள்ளக மூலதனப் போதுமைத்தன்மை மதிப்பீட்டுச் செயல்முறையில் பிரதிபலிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### காலநிலை சூழல் பகுப்பாய்வு - முக்கிய அம்சங்கள்

- வங்கி ஒரு கட்டமைப்பை உருவாக்கும் பணியில் உள்ளது.
- 2027 நிதி ஆண்டு முதல் அழுத்தச் சோதனையில் படிப்படியாக ஒருங்கிணைக்கப்படும்.
- முக்கிய முடிவுகள் ICAAP செயல்முறைகளில் பிரதிபலிக்கப்படும்.
- அனுமதிக்கப்பட்ட இடைக்கால நிவாரண காலப்பகுதிக்குள் முழுமையாக சீரமைக்கப்படும்.

## இடர் மதிப்பீடு

அடையாளங்காணப்பட்ட காலநிலை தொடர்பான இடர்களை மதிப்பிடுவதற்கு வங்கி ஒரு கட்டமைக்கப்பட்ட மதிப்பீட்டுக் கட்டமைப்பைப் பயன்படுத்துகிறது. ஒவ்வொரு இடரும் அதன் தன்மை, சாத்தியக்கூறு, நிதித் தாக்கத்தின் அளவு மற்றும் கால எல்லை தொடர்பான வரையறுக்கப்பட்ட அளவுருக்களைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகிறது. இந்த மதிப்பீட்டுச் செயல்முறையானது உள்ளக நிதி பொருண்மை வரம்புகளுடன் சீரமைக்கப்படுவதை உறுதி செய்வதுடன், முன்னுரிமை அளித்தல் மற்றும் ஆளுகை மேற்பார்வைக்கும் ஆதரவளிக்கிறது.

| மதிப்பீட்டுக் கூறு | வங்கியினால் பயன்படுத்தப்படும் அணுகுமுறை |
|---|---|
| இடரின் தன்மை | காலநிலை தொடர்பான இடர்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன:<br>• நேரடி இடர்கள் (உதாரணம்: அதீத காலநிலை நிகழ்வுகள்)<br>• மாற்ற இடர்கள் (உதாரணம்: குறைந்த கார்பன் மாற்றத் தேவைகளால் ஏற்படும் செலவு அதிகரிப்பு) |
| தாக்கப் பரிசீலனைகள் | மதிப்பீடானது பின்வருவனவற்றில் ஏற்படக்கூடிய தாக்கங்களைக் கருத்திற்கொள்கிறது<br>• வங்கியின் செயற்பாடுகள்<br>• வாடிக்கையாளர்கள்<br>• கடன் சொத்துப்பட்டியல்கள்<br>• செலவுக் கட்டமைப்பு<br>• நீண்டகால வாய்ப்புகள் |

| மதிப்பீட்டுக் கூறு | வங்கியினால் பயன்படுத்தப்படும் அணுகுமுறை |
|---|---|
| **பௌதிக இடர் மதிப்பீட்டு உள்ளீடுகள்** | • பாதகமான வானிலை நிகழ்வுகளால் கிளைகள் மூடப்பட்டதால் கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட வரலாற்று நிதி இழப்பு தரவு.<br>• வெள்ள அபாயம் உள்ள பகுதிகளில் அமைந்துள்ள கிளைகளின் விவரங்கள்.<br>• காலநிலை உணர்திறன் கொண்ட பிராந்தியங்களில் உள்ள விவசாயக் கடன் சொத்துப்பட்டியல்களின் இழப்பு சதவீதங்கள். |
| **நிலைமாற்ற இடர் மதிப்பீட்டு உள்ளீடுகள்** | அதிக உமிழ்வு (High-emission) கொண்ட துறைகளுக்கான சொத்துப்பட்டியல் வெளிப்பாடு.<br>நிலைமாற்றம் தொடர்பான முன்னேற்றங்களால் ஏற்படக்கூடிய உத்தேசித செலவு தாக்கங்கள். |
| **நிகழ்தகவு** | மூன்று அடுக்கு நிகழ்தகவு அளவுகோலைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகிறது:<br>● உயர் (61–100%) ● நடுத்தரம் (41–60%) ● குறைவு (0–40%)<br>வரலாற்றுத் தரவு, அவதானிக்கப்பட்ட போக்குகள் மற்றும் மேலாண்மை நிபுணர்களின் தீர்மானத்தைப் பயன்படுத்தி நிகழ்தகவு மதிப்பீடுகள் தீர்மானிக்கப்படுகின்றன. |
| **அளவு / வெளிப்பாடு** | வங்கியின் நிதி பொருண்மை அளவுகோல்களுடன் சீரமைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட தீவிர வாசல்களைப் பயன்படுத்தி, செயல்பாட்டு லாபத்தின் மீதான சாத்தியமான நிதி விளைவுகளின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது.<br>வெளிப்பாடானது பின்வருவனவற்றில் கவனத்தில் கொள்ளப்படுகிறது:<br>• செயல்பாடுகள் • கடன் இடர் • மூலதனச் செலவு • இலாபத்தன்மை |
| **கால எல்லை** | பக்கம் 89ஐப் பார்க்கவும் |

## இடர் முன்னுரிமைப்படுத்தல்

காலநிலை தொடர்பான இடர்கள், ஏனைய பொருண்மை இடர்களின் மதிப்பீட்டிற்கு இணங்க, வங்கியின் நிறுவப்பட்ட உள்நாட்டு இடர் மதிப்பீடு மற்றும் ஆளுகை செயல்முறைகளைப் பயன்படுத்தி முன்னுரிமைப்படுத்தப்படுகின்றன.

கட்டமைக்கப்பட்ட மதிப்பீடு மற்றும் ஆளுகை மீளாய்வுக்கு முன்னர் SLFRS S1 மற்றும் S2 பணிக்குழு மூலம் இடர் தகவல்கள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. .

## காலநிலை இடர் முன்னுரிமைப்படுத்தல் செயல்முறை

| | |
|---|---|
| 1. இடர் ஒருங்கிணைப்பு: | காலநிலை தொடர்பான இடர் தகவல்கள், இடர் முகாமைத்துவப் பிரிவு, நிதி கணக்கியல் பிரிவு, பேண்தகு வங்கிப் பிரிவு மற்றும் தொடர்புடைய துணை நிறுவனங்களிடமிருந்து SLFRS S1 மற்றும் S2 பணிக்குழு மூலம் சேகரிக்கப்படுகின்றன. |
| 2. இடர் மதிப்பீடு: | அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு இடரும் பின்வருவனவற்றின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது:<br>• நிகழ்வதற்கான நிகழ்தகவு • நிதித் தாக்கத்தின் தீவிரம் • கால எல்லை<br>• பண்புசார் பரிசீலனைகள் (நற்பெயர் மற்றும் சட்ட இடர் உட்பட) |
| 3. ஆளுகை மதிப்பாய்வு: | மதிப்பிடப்பட்ட இடர்கள் முறையான ஆளுகை மதிப்பாய்விற்கு உட்படுத்தப்படுகின்றன. முன்னுரிமைப்படுத்தல் முடிவுகள் மேலாண்மை குழுக்களால் மதிப்பாய்வு செய்யப்பட்டு சரிபார்க்கப்படுவதுடன், ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவினால் (IRMC) மேற்பார்வையிடப்படுகின்றன. |
| 4. ERM உடன் ஒருங்கிணைத்தல்: | வங்கியின் ஒட்டுமொத்த இடர் மதிப்பீட்டுக் கட்டமைப்பிற்குள் ஏனைய இடர் வகைகளுடன் காலநிலை தொடர்பான இடர்களும் பரிசீலிக்கப்படுகின்றன. |

## கண்காணிப்பு

காலநிலை தொடர்பான இடர்கள் வங்கியின் ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவக் கட்டமைப்பிற்குள், ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் கொள்கை மற்றும் அழுத்த சோதனை கொள்கைக்கு இணங்க கண்காணிக்கப்படுகின்றன.

காலநிலை இடர் தகவல்கள் SLFRS S1 மற்றும் S2 பணிக்குழுவினால் ஒருங்கிணைக்கப்பட்டு, வரையறுக்கப்பட்ட நிகழ்தகவு, தீவிரம் மற்றும் கால எல்லை அளவுகோல்களைப் பயன்படுத்தி அவ்வப்போது மீண்டும் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அவதானிப்புகள் மேலாண்மை குழுக்கள் ஊடாக மேற்பார்வைக்காக IRMC இற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

# SLFRS நிலைத்தன்மை தொடர்பான நிதியியல் வெளிப்படுத்தல்கள்

## காலநிலை இடர் கண்காணிப்பு கட்டமைப்

| | |
|---|---|
| **கட்டமைப்பு ஒருங்கிணைப்பு:** | ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் கொள்கை மற்றும் அழுத்த சோதனை செயல்முறைகளுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. |
| **ஒருங்கிணைப்பு:** | முக்கிய உள்நாட்டுப் பிரிவுகளிடமிருந்து காலநிலை இடர் தரவுகள் SLFRS S1 மற்றும் S2 பணிக்குழுவினால் சேகரிக்கப்படுகின்றன. |
| **மீள்-மதிப்பீடு:** | நிகழ்தகவு, தீவிரம் மற்றும் கால எல்லை அளவுகோல்களைப் பயன்படுத்தி அவ்வப்போது மீண்டும் மதிப்பீடு செய்யப்படுகிறது.மேற்பார்வை |
| **உயர்வு:** | கண்டறியப்பட்ட முடிவுகள் மேலாண்மை குழுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவிற்கு (IRMC) அறிக்கையிடப்படுகின்றன. |

## கண்காணிப்பு குறிகாட்டிகள்

காலநிலை தொடர்பான இடர் வெளிப்பாடுகள் மற்றும் முன்னேற்றங்களைக் கண்காணிக்க பின்வரும் குறிகாட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன:

| கண்காணிப்பு பகுதி | குறிகாட்டி |
|---|---|
| **இடரை அடையாளங்காணல்** | காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளை அடையாளம் காணுதல் மற்றும் அறிக்கையிடல். |
| **சொத்துப்பட்டியல் வெளிப்பாடு:** | நிதித் தாக்கத்தைத் தீர்மானிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் வழங்கல் சொத்துப்பட்டியல்களின் இடர் மதிப்பீடு. |
| **செயல்பாட்டுத் தாக்கம்:** | முக்கிய செயல்பாட்டுப் பகுதிகளில் காலநிலை மாற்றத் தாக்கங்களின் மதிப்பீடு. |
| **சொத்து வெளிப்பாடு:** | காலநிலை வெளிப்பாட்டை மதிப்பிடுவதற்கு முக்கிய பௌதிக சொத்துக்களின் சொத்து மதிப்பீட்டு பகுப்பாய்வு. |
| **முன்னோக்கிய ஒருங்கிணைப்பு:** | அழுத்த சோதனை செயல்முறைகளுக்குள் காலநிலை தொடர்பான சூழ்நிலை பகுப்பாய்வை உள்வாங்குதல். |

### முன்னைய அறிக்கையிடல் காலத்துடன் ஒப்பிடுகையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

2025 ஆம் ஆண்டில், வங்கி தனது காலநிலை இடர் முகாமைத்துவ அணுகுமுறையை பின்வருமாறு வலுப்படுத்தியது:

- காலநிலை தொடர்பான இடர் அபாயங்களை (CRROs) அடையாளம் காணுதல், மதிப்பிடுதல், முன்னுரிமை அளித்தல் மற்றும் கண்காணிப்பதற்கான ஒரு முறைப்படுத்தப்பட்ட செயல்முறையை அறிமுகப்படுத்தல்
- வங்கியின் ஒட்டுமொத்த இடர் மேலாண்மைக் கட்டமைப்பில் காலநிலை தொடர்பான இடர்களை ஒருங்கிணைத்தல்
- தரப்படுத்தப்பட்ட நிகழ்தகவு, தீவிரம் மற்றும் கால எல்லை அளவுகோல்களைப் பயன்படுத்துதல்
- காலநிலை தொடர்பான இடர்களின் சாத்தியமான தாக்கத்தை மதிப்பிடுவதற்கு ஒரு அழுத்தச் சோதனையை நடத்துதல்

## காலநிலை வாய்ப்புக்கள் தொடர்பான செயல்முறைகள் மற்றும் கொள்கைகள்

காலநிலை தொடர்பான வாய்ப்புகள் குறித்த செயல்முறைகள் மற்றும் கொள்கைகள்பேண்தகைமை நோக்கங்கள் மற்றும் வளர்ந்து வரும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுடன் சீரமைக்கப்பட்ட காலநிலை தொடர்பான வாய்ப்புகளை அடையாளம் காணவும், மதிப்பிடவும், முன்னுரிமைப்படுத்தவும் மற்றும் கண்காணிக்கவும் வங்கி ஒரு கட்டமைக்கப்பட்ட உள்நாட்டுச் செயல்முறையைப் பயன்படுத்துகிறது. காலநிலை இடர்களைப் போலவே, இதற்கான மேற்பார்வையும் வங்கியின் தற்போதைய ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பிற்குள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

## ஒட்டுமொத்த ERM உடன் ஒருங்கிணைத்தல்

காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள் வங்கியின் ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் தற்போதைய இடர் மதிப்பீட்டு செயல்முறைகளில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

(பக்கங்கள் 196-197 ஐப் பார்க்கவும்).

## அளவீடுகள் மற்றும் இலக்குகள்

வங்கியின் மூலோபாயத் திட்டமிடல், கடன் இடர் முகாமைத்துவம், மூலதன ஒதுக்கீடு மற்றும் செயல்பாட்டு மீள்திறன் செயல்முறைகளில் காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. இக்கருத்தாய்வுகள் காலநிலை தொடர்பான முன்னேற்றங்கள் கடனின் தரம், உட்கட்டமைப்பு முதலீடு, சொத்துப்பட்டியல் அமைப்பு மற்றும் நீண்டகால பெறுமதி உருவாக்கம் ஆகியவற்றில் செல்வாக்கு செலுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை அங்கீகரிக்கின்றன.

## பல்வேறு தொழில் துறையிற்கிடையிலான அளவீடுகள்

### பசுமை இல்ல வாயு (GHG) உமிழ்வுகள்

#### நிறுவன மற்றும் செயல்பாட்டு எல்லை:

வங்கி தனது பசுமை இல்ல வாயு உமிழ்வுகளுக்கான நிறுவன மற்றும் செயல்பாட்டு எல்லைகளை ISO 14064-1:2018 மற்றும் GHG நெறிமுறை ஆகியவற்றிற்கு இணங்க, நிதி கட்டுப்பாட்டு அணுகுமுறையைப் பயன்படுத்தி வரையறுக்கிறது. இந்த அணுகுமுறையின் கீழ், வங்கியின் நிதி கட்டுப்பாட்டில் உள்ள செயல்பாடுகளின் உமிழ்வுகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

தற்போதைய அறிக்கையிடல் சுழற்சியில், வங்கியின் கார்பன் தடம் மதிப்பீடு உள்நாட்டுச் செயல்பாடுகளை உள்ளடக்கியது மற்றும் துணை நிறுவனங்களையும் உள்ளடக்கியது இக்காலப்பகுதியில் வெளிநாட்டுச் செயல்பாடுகள் விலக்கப்பட்டுள்ளன.

வங்கி ஸ்கோப் 1 மற்றும் ஸ்கோப் 2 (Scope 1 & 2) உமிழ்வுகளை அளவிட்டுள்ளது.

SLFRS S1 மற்றும் SLFRS S2 இன் கீழ் உள்ள நிலைமாற்ற நிவாரண விதிகளுக்கு இணங்க, அனைத்து ஸ்கோப் 3 (Scope 3) உமிழ்வுகளும் தற்போதைய அறிக்கையிடல் காலத்தில் சேர்க்கப்படவில்லை.

## பசுமை இல்ல வாயு (GHG) அளவீட்டு முறைமை

பசுமை இல்ல வாயு (GHG) உமிழ்வுகள் ISO 14064-1:2018 மற்றும் GHG புரோட்டோகால் ஆகியவற்றிற்கு இணங்க அளவிடப்படுகின்றன. கார்பன் டை ஆக்சைடு ($CO_2$), மீத்தேன் ($CH_4$) மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு ($N_2O$) உமிழ்வுகள், IPCC இன் ஆறாவது மதிப்பீட்டு அறிக்கையில் வெளியிடப்பட்ட புவி வெப்பமடைதல் சாத்தியக்கூறு (GWP) மதிப்புகளைப் பயன்படுத்தி $CO_2e$ ஆக மாற்றப்படுகின்றன. உமிழ்வு காரணிகள் IPCC அறிக்கைக்கு இணங்கப் பயன்படுத்தப்படுகின்றன.

**செயல்பாட்டு தரவு மூலங்கள்**

- மத்திய தரவுத்தளங்கள்
- பயன்பாட்டுக் கட்டணப் பட்டியல்கள்
- எரிபொருள் பதிவுகள்
- விலைப்பட்டியல்கள்
- செயல்பாட்டு தினசரி பதிவேடுகள்

**தரவு முகாமைத்துவக் கட்டுப்பாடுகள்**

- முழுமைச் சோதனைகள்
- துல்லியம் சரிபார்த்தல்
- இரட்டை எண்ணிக்கையைத் தடுத்தல்
- முறையான ஆவணத் தக்கவைப்பு
- உள்நாட்டு மதிப்பாய்வு நடைமுறை

பசுமை இல்ல வாயு மதிப்பீடு பூர்த்தியானதைத் தொடர்ந்து, வங்கியின் பசுமை இல்ல வாயு இருப்புப்பட்டியல் ஒரு சுயாதீன மூன்றாம் தரப்பு சரிபார்ப்புக்கு உட்படுத்தப்பட்டது. இது அறிக்கையிடப்பட்ட உமிழ்வு தரவுகளின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மை குறித்த கூடுதல் உறுதியை வழங்குகிறது.

### பசுமை இல்ல வாயு உமிழ்வுகளின் சுருக்கம்

| விபரம் | 2025 ($MtCO_2e$) |
|---|---|
| கட்டம் 1 | 1,251.9 |
| கட்டம் 2 | 11,187.7 |
| **மொத்தம்** | **12,439.6** |

### GHG கட்டம் 1 மற்றும் கட்டம் 2

| விபரம் | பசுமை இல்ல வாயு உமிழ்வுகள் 2025 ($MtCO_2e$) | | |
|---|---|---|---|
| | கட்டம் 1 | கட்டம் 2 | மொத்தம் |
| ஒருங்கிணைந்த கணக்கியல் குழு | 1,251.9 | 11,187.7 | 12,439.6 |
| ஏனைய முதலீட்டாளர் (தொடர்புடைய நிறுவனங்களில் முதலீடு) | N/A | N/A | N/A |
| **மொத்தம் (நிதி கட்டுப்பாட்டு அணுகுமுறை)** | **1,251.9** | **11,187.7** | **12,439.6** |

### பசுமை இல்ல வாயு அளவீட்டின் முக்கிய அனுமானங்கள் மற்றும் மூலங்கள்

| கட்டம் | உமிழ்வு துணை வகை | செயல்பாடு | தரவு மூலம் | உமிழ்வு காரணி மூலம் | GWP மதிப்புகளின் மூலம் |
|---|---|---|---|---|---|
| கட்டம் 1 | நிலையான எரிப்பு தயார்நிலை | மின்பிறப் பாக்கிகள் | கணக்குப் புத்தகம் / எரிபொருள் கொள்முதல் பதிவேடு | IPCC - 2006 | IPCC 6வது அறிக்கை புவி வெப்பமடைதல் சாத்தியமான மதிப்புகள் |
| கட்டம் 1 | நடமாடும் எரிப்பு | நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்கள், பணியாளர் பயணம் (கட்டணம் செலுத்தப்பட்டது), வணிகப் பயணம் - வாடகை | எரிபொருள் அட்டை / மத்திய தரவுத்தளம் | IPCC - 2006 | IPCC 6வது அறிக்கை புவி வெப்பமடைதல் சாத்தியமான மதிப்புகள் |
| கட்டம் 1 | தப்பும் உமிழ்வுகள் | குளிரூட்டி கசிவு, தீயணைப்பான்கள், சமையல் எரிவாயு | சேவை வழங்குநர்களின் தரவுத்தளம் | IPCC - 2006 | IPCC 6வது அறிக்கை புவி வெப்பமடைதல் சாத்தியமான மதிப்புகள் |
| கட்டம் 2 | மின்சார நுகர்வு | மின் விநியோகக் கட்டமைப்பு | மின்சாரம் (Grid) மின்சாரக் கட்டணப் பட்டியல்கள் | இலங்கை நிலையான எரிசக்தி அதிகாரசபையின் இலங்கை எரிசக்தி சமநிலை அறிக்கை | IPCC 6வது அறிக்கை புவி வெப்பமடைதல் சாத்தியமான மதிப்புகள் |

# SLFRS நிலைத்தன்மை தொடர்பான நிதியியல் வெளிப்படுத்தல்கள்

## காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புகளுக்கான வெளிப்பாடு

| | |
|---|---|
| **காலநிலை தொடர்பான பௌதிக இடர்கள் (CRRO 1):** | காலநிலை தொடர்பான பௌதிக இடர்களால் பாதிக்கப்படக்கூடிய சொத்துக்கள் அல்லது வணிக நடவடிக்கைகளின் சதவீதத்தை வங்கி இதுவரை அளவுசார் மதிப்பீடு செய்யவில்லை. |
| **காலநிலை தொடர்பான நிலைமாற்ற இடர்கள் (CRRO 2)** | காலநிலை தொடர்பான நிலைமாற்ற இடர்களால் பாதிக்கப்படக்கூடிய சொத்துக்கள் அல்லது வணிக நடவடிக்கைகளின் சதவீதத்தை வங்கி இதுவரை அளவுசார் மதிப்பீடு செய்யவில்லை. |
| காலநிலை தொடர்பான வாய்ப்புகள் (CRRO 3) | காலநிலை தொடர்பான வாய்ப்புகள் பின்வருவன உள்ளிட்ட பேண்தகு நிதியியல் நடவடிக்கைகளின் விரிவாக்கத்தில் பிரதிபலிக்கின்றன:<br>• பசுமைக் கடன்கள் (ரூ. 10.2 பில்லியன்). • பசுமை வைப்புகள் (ரூ. 78.9 மில்லியன்).<br>• பேண்தகு கடன் வழங்கலை ஆதரிப்பதற்காக வெளியிடப்பட்ட பேண்தகுப் பிணைய முறிகள் (ரூ. 20.0 பில்லியன்).<br>இந்த நடவடிக்கைகள் குறைந்த காா்பன் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த திட்டங்களுக்கு நிதியளிக்க உதவுகின்றன மற்றும் காலநிலை சார்ந்த நிதிச் சந்தைகளில் வங்கியின் பங்கேற்பை வலுப்படுத்துகின்றன. |
| **மூலதனப் பயன்பாடு:** | அறிக்கையிடப்பட்ட காலத்தில் காலநிலை தொடர்பான மூலதனப் பயன்பாடானது, கிளை வலையமைப்பு முழுவதும் நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கட்டமைப்புகளை உள்ளடக்கியது இதற்கான மொத்தச் செலவு ரூ. 149.6 மில்லியன் ஆகும். காலநிலை சார்ந்த மூலதன ஒதுக்கீடு தற்போது வங்கியின் பரந்த மூலதனத் திட்டமிடல் மற்றும் நிதியியல் கட்டமைப்பிற்குள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உள்நாட்டுக் கண்காணிப்பு வழிமுறைகள் முதிர்ச்சியடையும் போது, எதிர்கால அறிக்கையிடல் காலங்களில் காலநிலை தொடர்பான மூலதனச் செலவினங்களின் அளவுசார் வகைப்படுத்தல் படிப்படியாக மேம்படுத்தப்படும். |
| **உள்ளக காா்பன் விலை நிர்ணயம்:** | வங்கி தற்போது உள்நாட்டு காா்பன் விலை நிர்ணய முறையைப் பயன்படுத்தவில்லை. இது இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள ஒழுங்குமுறைச் சூழலைப் பிரதிபலிக்கிறது இலங்கையில் தற்போது கட்டாய காா்பன் விலை நிர்ணயம் அல்லது உமிழ்வு வா்த்தகக் கட்டமைப்பு செயல்பாட்டில் இல்லை. |
| **ஊதியம் (Remuneration):** | காலநிலை தொடர்பான அளவீடுகள் தற்போது சபை அல்லது நிா்வாக அதிகாரிகளின் ஊதியக் கட்டமைப்புகளுடன் இணைக்கப்படவில்லை. |

## துறை சார்ந்த அளவீடுகள் பேண்தகு

### கணக்கியல் தரநிலைகள் சபை

### வணிக வங்கிகளின் பேண்தகைமை கணக்கியல் தரநிலை (பதிப்பு 2023-12)

#### அட்டவணை 1. பேண்தகைமை வெளிப்படுத்தல் தலைப்புகள் மற்றும் அளவீடுகள்

| தலைப்பு | அளவீடு | வகை | அளவீட்டு அலகு | குறியீடு | பக்கக் குறிப்பு/ வெளிப்பாடு |
|---|---|---|---|---|---|
| **தரவுப் பாதுகாப்பு** | (1) தரவு மீறல்களின் எண்ணிக்கை, (2) தனிப்பட்ட தரவு மீறல்களின் சதவீதம், (3) பாதிக்கப்பட்ட கணக்கு வைத்திருப்பவா்களின் எண்ணிக்கை. | அளவுசார் எண்ணிக்கை | சதவீதம் (%) | FN-CB-230a.1 | பக்கம் 151 |
| | தரவுப் பாதுகாப்பு இடர்களை அடையாளம் காணுதல் மற்றும் கையாளுதல் | கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு | பொருந்தாது | FN-CB-230a.2 | பக்கம் 151-152 |
| **நிதியியல் உள்ளடக்கம் மற்றும் திறன் மேம்பாடு** | (1) சிறு வணிகம் மற்றும் சமூக மேம்பாட்டை ஊக்குவிக்கும் திட்டங்களுக்குத் தகுதியான கடன்களின் எண்ணிக்கை மற்றும் (2) மீதமுள்ள கடன் தொகை | அளவுசார் எண்ணிக்கை | சமா்ப் பிக்கப்பட்ட நாணயம் | FN-CB-240a.1 | பக்கம் 78-79 |
| | (1) சிறு வணிகம் மற்றும் சமூக மேம்பாட்டை ஊக்குவிக்கும் திட்டங்களுக்குத் தகுதியான, தவணை கடந்த மற்றும் வட்டி திரட்டப்படாத கடன்கள் அல்லது சலுகை வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை மற்றும் (2) தொகை. | அளவுசார் எண்ணிக்கை | சமா்ப் பிக்கப்பட்ட நாணயம் | FN-CB-240a.2 | பக்கம் 136 |
| | இதற்கு முன் வங்கிச் சேவையைப் பெறாத அல்லது குறைந்த அளவில் பெற்ற வாடிக்கையாளா்களுக்கு வழங்கப்பட்ட கட்டணமற்ற சில்லறை கேள்விக் கணக்குகளின் எண்ணிக்கை. | அளவுசார் எண்ணிக்கை | இல | FN-CB-240a.3 | பக்கம் 24 |
| | வங்கிச் சேவையைப் பெறாத அல்லது குறைவாகப் பெற்ற வாடிக்கையாளா்களுக்கான நிதி கல்வியறிவு முயற்சிகளில் பங்கேற்றவா்களின் எண்ணிக்கை. | அளவுசார் எண்ணிக்கை | இல | FN-CB-240a.4 | பக்கம் 137 |
| **கொடுகடன் பகுப்பாய்வில் ESG காரணிகளை ஒருங்கிணைத்தல்** | கடன் பகுப்பாய்வில் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) காரணிகளை ஒருங்கிணைக்கும் அணுகுமுறையின் விபரம் | கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு | பொருந்தாது | FN-CB-410a.2 | பக்கம் 80 |

| தலைப்பு | அளவீடு | வகை | அளவீட்டு அலகு | குறியீடு | பக்கக் குறிப்பு/ வெளிப்பாடு |
|---|---|---|---|---|---|
| **நிதியளிக்கப்பட்ட உமிழ்வுகள்** | (1) கட்டம் 1, (2) கட்டம் 2 மற்றும் (3) கட்டம் 3 என வகைப்படுத்தப்பட்ட மொத்த நிதியளிக்கப்பட்ட உமிழ்வுகள் | அளவுசார் | மெட்ரிக் தொன் (t) $Co_2$-e | FN-CB-410b.1 | The Bank will apply the two year transitional relief under SFRS S1 and S2 for financed emission disclosures. |
| | சொத்து வகைகளின் அடிப்படையில் ஒவ்வொரு தொழில்துறைக்குமான மொத்த வெளிப்பாடு | அளவுசார் | சமர்ப்பிக்கப்பட்ட நாணயம் | FN-CB-410b.2 | |
| | நிதியளிக்கப்பட்ட உமிழ்வு கணக்கீட்டில் சேர்க்கப்பட்டுள்ள மொத்த வெளிப்பாட்டின் சதவீதம் | அளவுசார் | சதவீதம் (%) | FN-CB-410b.3 | |
| | நிதியளிக்கப்பட்ட உமிழ்வைக் கணக்கிடப் பயன்படுத்தப்பட்ட முறைமையின் விபரம். | கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு | பொருந்தாது | FN-CB-410b.4 | |
| **வணிக விழுமியங்கள்** | வணிக நன்னெறி மோசடி, உள் வர்த்தகம், முற்றுரிமை எதிர்ப்பு, போட்டி எதிர்ப்பு நடத்தை, சந்தை கையாளுதல், முறைகேடு அல்லது ஏனைய நிதித்துறை சட்டங்கள் அல்லது விதிமுறைகள் தொடர்பான சட்ட நடவடிக்கைகளின் விளைவாக ஏற்பட்ட மொத்த நிதி இழப்புகள். | அளவுசார் | சமர்ப்பிக்கப்பட்ட நாணயம் | FN-CB-510a.1 | பக்கம் 177 |
| | இரகசியத் தகவல் வழங்குவோர் தொடர்பான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் விபரம் - | கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு | பொருந்தாது | FN-CB-510a.2 | பக்கம் 177 |
| **முறையான இடர் முகாமைத்துவம்** | வகை வாரியாக உலகளாவிய ரீதியில் முறையான முக்கியத்துவம் வாய்ந்த வங்கி (G-SIB) மதிப்பீடு | அளவுசார் | அடிப்படை புள்ளிகள் (bps) | FN-CB-550a.1 | வங்கி ஒரு G-SIB ஆக வகைப்படுத்தப் படவில்லை எனினும், இது உள்நாட்டளவில் முறையான முக்கியத்துவம் வாய்ந்த வங்கியாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது. பக்கம் 10 |
| | கட்டாய மற்றும் தன்னார்வ அழுத்த சோதனைகளின் முடிவுகளை மூலதனப் போதிய அளவு திட்டமிடல், நீண்டகால நிறுவன மூலோபாயம் மற்றும் ஏனைய வணிக நடவடிக்கைகளில் ஒருங்கிணைக்கும் அணுகுமுறை பற்றிய விபரம். | கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு | பொருந்தாது | FN-CB-550a.2 | பக்கங்கள் 201-202 |

## அட்டவணை 02: செயல்பாட்டு அளவீடுகள்

| செயல்பாட்டு அளவீடு | வகை | அளவீட்டு அலகு | குறியீடு | பக்கக் குறிப்பு/வெளிப்பாடு |
|---|---|---|---|---|
| **துறை வாரியாக (அ) தனிநபர் மற்றும் (ஆ) சிறு வணிகம்: (1) எண்ணிக்கை மற்றும் (2) நடைமுறை மற்றும் சேமிப்பு கணக்குகளின் பெறுமதி** | அளவுசார் | எண்ணிக்கை, சமர்ப்பிக்கப்பட்ட நாணயம் | FN-CB-000.A | பக்கம் 338. வணிக ரீதியான உணர்திறன் காரணமாக, வங்கி வைப்பு கணக்குகளின் எண்ணிக்கையை பகிரங்கமாக வெளிப்படுத்துவதில்லை. |
| **துறை வாரியாக (அ) தனிநபர், (ஆ) சிறு வணிகம் மற்றும் (இ) கூட்டாண்மை: (1) எண்ணிக்கை மற்றும் (2) கடன்களின் பெறுமதி.** | அளவுசார் | எண்ணிக்கை, சமர்ப்பிக்கப்பட்ட நாணயம் | FN-CB-000.B | பக்கம் 294. வணிக ரீதியான உணர்திறன் காரணமாக, வங்கி கடன் கணக்குகளின் எண்ணிக்கையை பகிரங்கமாக வெளிப்படுத்துவதில்லை. |

# SLFRS நிலைத்தன்மை தொடர்பான நிதியியல் வெளிப்படுத்தல்கள்

## காலநிலை தொடர்பான இலக்குகள்

### பசுமை இல்ல வாயு உமிழ்வு தொடர்பான இலக்கு 1

### CRRO 2 – குறைந்த கார்பன் நிலைமாற்றத் தேவைகளால் அதிகரித்த செலவுகள்

| வகை | வெளிப்படுத்தல் |
|---|---|
| அளவீடு/ முக்கிய செயல்திறன் காட்டி (KPI) | வங்கியின் சொந்தமான 128 கிளைகளில் சூரிய ஒளி மின்சார கட்டமைப்புகளை நிறுவி முடித்தல் |
| நோக்கம் | புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பயன்பாட்டை அதிகரிப்பதன் மூலம் செயல்பாட்டு (Scope 2) பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைத்தல் |
| விபர எல்லை | உள்நாட்டு கிளை வலையமைப்பிற்குள் வங்கிக்குச் சொந்தமான 128 கிளைகளுக்குப் பொருந்தும் |
| காலப்பகுதி | 2023 – 2027 |
| அடிப்படை ஆண்டு | 2023 (53 கிளைகளில் சூரிய ஒளி மின்சாரம் பொருத்தப்பட்டது) |
| முக்கிய கட்டங்கள் மற்றும் இடைக்கால இலக்குகள் | 2024 - 20 கிளைகள்<br>2025 - 28 கிளைகள் |
| இலக்கு வகை | அளவுசார் - முழுமையான (நிறைவு செய்வதன் அடிப்படையிலான) இலக்கு |
| அதிகார வரம்புசார் கடப்பாடுகளுடன் இணக்கம் | சதவீதத்தைப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்து பெறுவது உள்ளிட்ட இலங்கையின் தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளுடன்இணங்கிச் செல்கிறது. வங்கியின் கிளைகளில் சூரிய ஒளி மின்சாரத்தைப் பயன்படுத்தும்இந்த முயற்சியானது, தற்போதைய கொள்கை வழிகாட்டல்கள் மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகளுடன் ஒத்துப்போகும் அதேவேளையில், தனது செயல்பாடுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பங்கினை அதிகரிப்பதன் மூலம் இந்த நிலைமாற்றத்திற்கு ஆதரவளிக்கிறது. |
| சரிபார்ப்பு | இந்த இலக்கு மற்றும் முறைமை வெளிவாரியாகச் சரிபார்க்கப்படவில்லை |
| மதிப்பாய்வு செயல்முறை | ஆண்டு முன்னேற்றம் உள்நாட்டளவில் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்படுகிறது |
| முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கான அளவீடுகள் | 1. சூரிய ஒளி மின்சாரம் பொருத்தப்பட்ட வங்கியின் சொந்தமான கிளைகளின் எண்ணிக்கை<br>2. சூரிய ஒளி மின்சாரக் கட்டமைப்புகள் செயல்பாட்டில் உள்ள வங்கியின் சொந்தமான கிளைகளின் விகிதம்<br>3. நிறுவப்பட்ட மொத்த சூரிய சக்தி திறன்<br>4. மொத்த சூரிய சக்தி உற்பத்தி |
| திருத்தம் | அறிக்கையிடல் காலப்பகுதியில் இலக்கில் எந்தத் திருத்தங்களும் செய்யப்படவில்லை |
| ஆண்டின் அடைவு மற்றும் ஆண்டு முடிவில் நிலை | அறிக்கையிடல் காலப்பகுதியில், வங்கிக்குச் சொந்தமான 28 கிளைகளில் சூரிய ஒளி மின்சாரம் பொருத்தப்பட்டது. இது 2027 ஆம் ஆண்டிற்குள் வங்கிக்குச் சொந்தமான 128 கிளைகளிலும் சூரிய ஒளி மின்சாரத்தைப் பொருத்தி முடிக்கும் இலக்கை நோக்கிய முன்னேற்றத்திற்குப் பங்களிப்பு செய்துள்ளது. |

# முகாமைத்துவ ஆய்வு கலந்துரையாடல்

## செயல்திறன் மற்றும் வணிக நுண்ணறிவுகள்

பொருளாதாரம், சமூகம், டிஜிட்டல், மனிதவளம், சுற்றுச்சூழல் மற்றும் ஆளுகை ஆகிய பரிமாணங்களில், வங்கி தனது நுண்ணறிவுகளை ஆக்கபூர்வமான செயல்பாடுகளாக மாற்றுகிறது. இதன் மூலம் பங்குதாரர்களுக்கும் நாட்டிற்கும் நிலையான முன்னேற்றத்தை வழங்குகிறது.

**ஒரு ரூபிக் கனசதுரத்தை சரியாக அடுக்குவதற்கு, அதன் முழுமையான வடிவத்தைப் புரிந்துகொள்வதும், ஒவ்வொரு பகுதியும் ஒன்றோடொன்று எவ்வாறு தொடர்பு கொள்கிறது என்பதை அறிந்துகொள்வதும், ஒவ்வொரு நகர்வையும் துல்லியமாக மேற்கொள்வதும் அவசியமாகும்.**

# நிதியியல் மீளாய்வு

## நிதியியல் மூலதனம் குறித்த மூலோபாய நோக்கம்

வங்கியின் நிதி மூலதனம் என்பது அதன் பங்குதாரர், நிதி வழங்குநர்கள் மற்றும் வைப்பாளர்களால் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்ட நிதியைக் குறிக்கிறது. இது வங்கியின் நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சிக்கான அடித்தளமாக அமைகிறது. இது வங்கியானது கடன் வழங்கவும், மூலோபாய முன்னுரிமைகளில் முதலீடு செய்யவும் மற்றும் நிதிநிலை அறிக்கையின் வலிமையைப் பேணிக்கொண்டு இடர்களை எதிர்கொள்ளவும் உதவுகிறது. ஒழுக்கமான ஒதுக்கீடு மற்றும் விவேகமான முகாமைத்துவமானது மூலோபாயச் செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதுடன், நிலையான நீண்டகால பெறுமதி உருவாக்கத்தையும் ஆதரிக்கிறது.

### உறுதிப்பாடு, ஆளுகை மற்றும் பேண்தகு வளர்ச்சி

வரிக்குப் பின்னரான இலாபம்: **ரூ. 76.0** பில்லியன் (2024: ரூ. 64.4 பில்லியன்)

மொத்த சொத்துக்கள்: **ரூ. 5.5** டிரில்லியன் (2024: ரூ . 4.9 டிரில்லியன்)

பங்குதாரர் பெறுமதி: ரூ. **365.8** பில்லியன் (2024: ரூ. 302.6 பில்லியன்)

மூலதனப் போதுமாந்தன்மை விகிதம்: **16.9%** (2024: 16.6%)

### சிறந்த வாடிக்கையாளர் சேவை

வைப்பு வளர்ச்சி: **4%** (2024: 8%)

CASA விகிதம்: **33.2%** (2024: 27.0%)

தேறிய வட்டி வருமானம் **ரூ. 206.9** பில்லியன் (2024: ரூ. 167.6 பில்லியன்)

### டிஜிட்டல் மேன்மை

அட்டைச் சொத்துப்பட்டியல் மீதான கட்டண வருமான வளர்ச்சி: **18%** (2024: 25%)

சில்லறை வங்கிச் சேவைகளின் கட்டண வருமான வளர்ச்சி: **30%** (2024: 45%)

### வெகுமதியளிக்கும் கடன் கலாச்சாரம் மற்றும் ஆரோக்கியமான கடன் பட்டியல்

மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களின் வளர்ச்சி: **9%** (2024: -1% )

3 ஆம் கட்ட கடன் விகிதம்: **5.6%** (2024: 7.2%)

3 ஆம் ஏற்பாடு காப்பீடு: **57.9%** (2024: 53.6%)

### உயர் செயல்திறன் கொண்ட குழுவை உருவாக்குதல்

செலவுக்கும் வருமானத்திற்குமான விகிதம் **33.0%** (2024: 40.1%)

ஒரு ஊழியருக்கான வருமானம்: ரூ. **61.6** மில்லியன் (2024: ரூ. 59.1 மில்லியன்)

**நிதி மூலதனம் குறித்த இந்த அத்தியாயமானது, ஆண்டின் வங்கியின் நிதிச் செயல்திறன் பற்றிய விரிவான பகுப்பாய்வை முன்வைக்கிறது. வங்கியின் மூலோபாயம் மற்றும் பிற மூலதனங்களுக்கிடையிலான தொடர்பின் மூலம் நிதி உள்ளீடுகள் எவ்வாறு பங்குதாரர்களுக்கான நிலையான, நீண்டகால விளைவுகளாக மாற்றப்பட்டன என்பதை இது விளக்குகிறது. ஆண்டின் பெறுமதி உருவாக்கம் குறித்த முழுமையான புரிதலைப் பெற, இந்த அத்தியாயத்தை பக்கம் 52 முதல் 56 வரையிலான "தொழிற்பாட்டுச் சூழல்" மற்றும் பக்கம் 115 முதல் 131 வரையிலான "வணிகப் பிரிவுகளின் செயல்திறன்" ஆகியவற்றுடன் இணைத்துப் படிக்க வேண்டும்.**

## செயல்பாட்டிற்கான சூழல்

மேம்பட்டு வரும் பேரண்டப்பொருளாதார நிலைமைகள் மற்றும் பலப்படுத்தப்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கை ஆகியவற்றின் ஆதரவுடன், இந்த ஆண்டில் செயல்பாட்டுச் சூழல் பரந்த அளவில் சாதகமாக இருந்தது.

| குறிகாட்டி | இலங்கை வங்கி மீதான தாக்கம் | குறிகாட்டி | இலங்கை வங்கி மீதான தாக்கம் |
|---|---|---|---|
| பொருளாதார வளர்ச்சி | ▲ | சாதகமான இறை நிலை | ▲ |
| வட்டி வீதங்கள் | ▲ | வெளிநாட்டுத் துறை | ▲ |
| பணவீக்கம் | ▲ | காலநிலை மாற்றத்தின் பௌதிக இடர்கள் | ▼ |
| வைப்புகள் மற்றும் நிதியுதவி மீதான போட்டி அழுத்தம் | ▼ | புதிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் | ● |

▲ நேர்கணியமானது ▼ எதிர்கணியமானது ● நடுநிலையானது

## மூலோபாய உத்வேகம், பலம் மற்றும் உறுதிப்பாடு

வட்டி வருமானத்தின் வலுவான வளர்ச்சி மற்றும் படிப்படியாக பன்முகப்படுத்தப்பட்ட வருவாய் தளம் ஆகியவற்றின் ஊடாக வங்கி இந்த ஆண்டில் ஒரு சிறந்த நிதிச் செயல்திறனை வழங்கியுள்ளது. அதேவேளையில், வருவாய் மீள்திறன் மற்றும் சொத்து நிலைத்தன்மையை வலுப்படுத்தும் வகையில் விவேகமான சொத்துப்பட்டியல் தரத்தைப் பேணி வருகின்றது. இதற்கிடையில், தொடர்ச்சியான வைப்பு வளர்ச்சி மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி அமைப்பு ஆகியவற்றின் மூலம் நிதி நிலைத்தன்மை மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், மூலதனத் தாங்கிகள் ஒழுங்குமுறை வரம்புகளுக்கு மேல் வசதியாகப் பேணப்படுகின்றன. ஒட்டுமொத்தமாக, இந்தச் சாதனைகள் வங்கியை ஒரு உறுதியான மற்றும் நிலையான அடித்தளத்தில் நிறுத்தியுள்ளதுடன், வரவிருக்கும் ஆண்டுகளில் நிலையான வளர்ச்சியைத் தொடரத் தயார்படுத்தியுள்ளன. கீழே உள்ள சங்கீ வரைபடமானது, வட்டி, கட்டணம் மற்றும் தரகு வருமானம், வர்த்தகம் மற்றும் ஏனைய வருமானம் போன்ற முக்கிய ஆதாரங்களிலிருந்து வரும் வருமானமானது, எவ்வாறு அரசாங்கத்திற்கான வரி செலுத்துதல்கள், வைப்பாளர்கள் மற்றும் கடன் வாங்குபவர்களுக்கான வட்டிச் செலவு, ஊழியர்களுக்கான பணியாளர் செலவுகள் மற்றும் சப்ளையர்களுக்கான கொடுப்பனவுகள் போன்ற பங்குதாரர் பெறுமதியாக மாற்றப்பட்டது என்பதைக் காட்டுகிறது.




சங்கீ வரைபடமானது, இந்த ஆண்டில் வங்கி எவ்வாறு பெறுமதியை உருவாக்கியது என்பதற்கான ஒரு காட்சிப் பிரதிநிதித்துவத்தை வழங்குகிறது. ஒவ்வொரு பாய்ச்சலின் அகலமும் சம்பந்தப்பட்ட தொகையின் அளவைப் பிரதிபலிக்கிறது, இது வங்கியினால் உருவாக்கப்பட்ட பெறுமதி எவ்வாறு பங்குதாரர்களுக்கான விளைவுகளாக மாற்றப்படுகிறது என்பதை வாசகர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவுகிறது.

### நிதிச் செயலாற்றும்

முறையான முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிதி நிறுவனம் மற்றும் "தேசத்திற்கான வங்கி" என்ற வகையில், BOC ஆனது பங்குதாரர்களுக்கு வலுவான நிதி வருவாயை வழங்குவதோடு, நாட்டின் நீண்டகால பொருளாதார செழிப்பு மற்றும் சமூக மீள்திறனை வலுப்படுத்தும் நிலையான வளர்ச்சியை மேம்படுத்தும் இரட்டைப் பொறுப்புடன் செயல்படுகிறது. இந்த பின்னணியில், நாட்டின் மிகவும் லாபகரமான நிறுவனங்களில் ஒன்றாகத் தனது நிலையைத் தக்கவைத்துக் கொள்ளும் வங்கியின் திறன் குறிப்பிடத்தக்கது.

### நிதி சார்ந்த வருமானம்

வங்கியின் நிதி சார்ந்த வருமானம் என்பது கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குதல் என்ற அடிப்படை வணிகத்திலிருந்து பெறப்படும் வட்டி வருமானம் மற்றும் வங்கியின் முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் இருந்து உருவாக்கப்படும் வட்டி வருமானம் ஆகியவற்றை உள்ளடக்கியது. மொத்த இன் மொத்த வருமானத்தில் 90% ஆக உள்ள வட்டி வருமானம், வட்டி ஈட்டும் சொத்துக்களின் 10% விரிவாக்கத்தால் ஆண்டுக்கு ஆண்டு 8% வளர்ச்சியடைந்து ரூ. 496.2 பில்லியனாகப் பதிவாகியுள்ளது. கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டியானது வங்கியின் மொத்த வட்டி வருமானத்தில் 49% ஆகும் (முன்னைய ஆண்டில் 55%). எவ்வாறாயினும், வங்கியின் விவேகமான முதலீட்டு மூலோபாயம் மற்றும் வருவாய் விவரங்களின் அதிகரித்த பன்முகத்தன்மையை பிரதிபலிக்கும் வகையில், முதலீட்டிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானம் 21% அதிகரித்துள்ளது.

அதேவேளையில், வட்டிச் செலவுகள் 2% குறைந்து ரூ. 289.2 பில்லியனாக இருந்தன. வங்கியின் வைப்புத் தளம் 4% அதிகரித்த போதிலும், வைப்புகள் மீதான வட்டி 4% குறைந்துள்ளது இது வைப்புகளுக்கான வட்டி விகிதங்களின் குறைப்பைப் பிரதிபலிப்பதோடு, வங்கியின் CASA விகிதத்தை முன்னைய ஆண்டின் 27.0% இலிருந்து 33.2% ஆக விரிவுபடுத்தும் திறனையும் காட்டுகிறது. வட்டிச் செலவுகளின் உகப்பாக்கம் என்பது வங்கியின் நிதி விவரங்களின் ஒரு மூலோபாய மறுசீரமைப்பைக் குறிக்கிறது. இதன் விளைவாக, வங்கி நிகர வட்டி வருமானத்தில் 24% வளர்ச்சியை ரூ. 206.9 பில்லியனாகப் பதிவு செய்துள்ளது.

வங்கியின் தேறிய வட்டி எல்லை முன்னைய ஆண்டின் 3.6% உடன் ஒப்பிடுகையில் 4.0% ஆக விரிவடைந்துள்ளது இது நிலையான விலை நிர்ணய ஒழுக்கம் மற்றும் செயலூக்கமான மறுசீரமைப்பு நடவடிக்கைகளை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.




### நிதி சாராத வருமானம்

நிதி சாராத வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இரண்டு மடங்கிற்கும் மேலாக அதிகரித்து ரூ. 39.9 பில்லியனை எட்டியுள்ளது (2024 இல் ரூ. 14.5 பில்லியன்). வருமான வழிகளைப் பன்முகப்படுத்துவதில் வங்கியின் மூலோபாய முக்கியத்துவம் உறுதியான முடிவுகளை அளித்துள்ளதுடன், கட்டணம் மற்றும் தரகு வருமானம் 17% அதிகரித்து ரூ. 35.7 பில்லியனாக உயர்ந்துள்ளது. வங்கியின் வரவு மற்றும் கடன் அட்டைகள் பட்டியலின் ஆழமான ஊடுருவலால் இது உந்தப்பட்டதுடன், டிஜிட்டல் புத்தாக்கம் மற்றும் சேவை செயல்திறன் மேம்பாடுகள் மூலம் சில்லறை வங்கிச் சேவைகளை வலுப்படுத்துவதில் வங்கி காட்டிய தொடர்ச்சியான கவனம், சில்லறை வங்கிச் சேவைகளின் கட்டண வருமானத்தை இந்த ஆண்டில் 30% அதிகரிக்கச் செய்துள்ளது.

# நிதியியல் மீளாய்வு

இதற்கிடையில், கட்டணம் மற்றும் தரகுச் செலவுகள் 29% அதிகரித்து ரூ. 12.6 பில்லியனாக உயர்ந்தன. இதன் விளைவாக, டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மற்றும் வணிக ஓட்டங்களை ஊக்குவிப்பதில் வங்கியின் மூலோபாய முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கும் வகையில், நிகர கட்டணம் மற்றும் தரகு வருமானம் 12% வளர்ச்சியுடன் ஆண்டிற்கு ரூ. 23.1 பில்லியனாகப் பதிவாகியுள்ளது. வர்த்தகத்தின் மூலம் ஈட்டப்பட்ட நிகர லாபம் ரூ. 5.8 பில்லியனாக இருந்ததுடன், இது வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகத்தின் ஆதரவைப் பெற்றிருந்தது. பங்குகள், யூனிட் ட்ரஸ்ட்கள் மற்றும் கடன் ஆவணங்களில் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து ரூ. 1.6 பில்லியன் (2024: ரூ. 1.5 பில்லியன்) உணரப்படாத நிகர லாபம் ஆண்டிற்காகப் பதிவாகியுள்ளது. அத்துடன், நிதிச் சொத்துக்களை விடுவித்ததன் (Derecognition) மூலம் ரூ. 1.7 பில்லியன் நிகர லாபம் கிடைத்துள்ளது (2024 இல் ரூ. 3.6 பில்லியன் நிகர இழப்பு). மேலும், ஏனைய செயல்பாட்டு வருமானம் ரூ. 7.6 பில்லியனாகப் பதிவாகியதுடன், இதில் முதன்மையாக வெளிநாட்டுச் செலாவணி லாபம், லாபப்பங்கு வருமானம் மற்றும் வாடகை வருமானம் ஆகியவை உள்ளடங்கியிருந்தன.

**நிதியல்லா அடிப்படையிலான வருமானம்**




## மொத்த செயல்பாட்டு வருமானம்

வங்கியின் மொத்த செயல்பாட்டு வருமானம் 36% வளர்ச்சியடைந்து ரூ. 246.8 பில்லியனை எட்டியுள்ளது இது நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத வருவாய் வழிகளின் பரந்த அடிப்படையிலான வளர்ச்சியால் உந்தப்பட்டது. நிகர வட்டி வருமானம் மொத்த செயல்பாட்டு வருமானத்தில் 84% பங்களித்த போதிலும், வங்கியின் வருவாய் கலவைஇந்த ஆண்டில் மாற்றமடைந்ததால், அதன் ஒப்பீட்டுப் பங்களிப்பு கடந்த ஆண்டின் 92% உடன் ஒப்பிடுகையில் குறைந்துள்ளது. நிதி சாராத வருமானத்தின் அதிகரித்த பங்களிப்பானது நிகர கட்டணம் மற்றும் தரகு வருமானத்தின் வலுவான வேகத்தையும், ஏனைய நிதி சாராத ஆதாரங்களின் பங்களிப்பையும் பிரதிபலிக்கிறது. இது வருமான விவரங்களைப் பன்முகப்படுத்துவதிலும் மீள்திறன் கொண்ட ஈட்டங்களை உருவாக்குவதிலும் வங்கி அடைந்துள்ள முன்னேற்றத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

## குறைபாட்டுக் கட்டணங்கள் மற்றும் இழப்புகள்

இந்த ஆண்டில் நிலவிய சாதகமான பேரினப் பொருளாதார சூழல் வலுவான கடன் மீள்செலுத்தல் போக்குகளுக்கும் பட்டியல் தரம் படிப்படியாக வலுவடைவதற்கும் ஆதரவளித்தது. அதேவேளையில், மேம்படுத்தப்பட்ட கடன் வசூலிப்பு முயற்சிகள், இலக்கு வைக்கப்பட்ட வணிக மறுமலர்ச்சி முயற்சிகள் மற்றும் வலுவான கடன் கண்காணிப்பு ஆகியவை அனைத்து பிரிவுகளிலும் கடன் இடர் அளவீடுகளை நிலைப்படுத்துவதற்குப் பங்களித்தன. தனிப்பட்ட ரீதியில் குறிப்பிடத்தக்க கடன் (ISL) வெளிப்பாடுகள், ஒரு கட்டமைக்கப்பட்ட மூன்று அடுக்கு மதிப்பாய்வு செயல்முறை மூலம் கடுமையான காலாண்டு மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டன. சுதந்திரமான ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவப் பிரிவின் (IIRMD) கடன் இடர் பிரிவு ஒவ்வொரு ISL வாடிக்கையாளரையும் சுதந்திரமாக மதிப்பீடு செய்தது. இந்த வலுப்படுத்தப்பட்ட மேற்பார்வைக் கட்டமைப்பானது குறைபாடுகளை அடையாளம் காண்பதில் நடுநிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதுடன் அதன் வலுவான தன்மையை மேம்படுத்துகிறது. வங்கியின் பட்டியல் தரம் மேம்பட்டுள்ளதை 3 ஆம் கட்ட கடன் விகிதம் 7.2% இலிருந்து 5.6% ஆகக் குறைந்துள்ளமை நிரூபிக்கிறது.

நடப்பு ஆண்டின் குறைபாட்டுக் கட்டணமானது எதிர்பார்த்த கடன் இழப்பு கட்டமைப்பின் கீழ் வங்கியின் ஒழுக்கமான நிதி ஒதுக்கீட்டு நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கிறது. வங்கி தனது நிதிநிலை அறிக்கையின் மீள்திறனை உறுதிப்படுத்தும் அதேவேளையில், நிலையான சொத்துப்பட்டியல் வளர்ச்சியை ஆதரிப்பதற்காகவும் எதிர்கால கடன் இழப்புகளை எதிர்கொள்வதற்காகவும் போதுமான நிதி ஒதுக்கீட்டுத் தாங்கிகளைத் தொடர்ந்து பேணி வருகின்றது. அந்த வகையில், டித்வா சூறாவளியினால் ஏற்படக்கூடிய சாத்தியமான இழப்புகளும் கருத்தில் கொள்ளப்பட்டன. அதற்கமைய, கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான மொத்த குறைபாட்டுக் கட்டணங்கள் ரூ. 20.7 பில்லியனாக இருந்தன (2024 உடன் ஒப்பிடுகையில் 66% அதிகரிப்பு). முதலீடுகள் மற்றும் ஏனைய இழப்புகளுக்காக ரூ. 445.1 மில்லியன் நிகர குறைபாட்டுக் கட்டணம் ஒதுக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக, ஆண்டிற்கான கடன்கள் மற்றும் முதலீடுகளுக்கான மொத்த குறைபாடு கடந்த ஆண்டின் ரூ. 20.3 பில்லியன் தேறிய மீள்திருப்பலுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு ரூ. 21.1 பில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

## செயல்பாட்டுச் செலவுகள்

செலவுக்கும் வருமானத்திற்குமான விகிதம் 2024 இல் இருந்த 40% இலிருந்து 2025 இல் 33% ஆக மேம்பட்டுள்ளது. வங்கியின் வருவாய் வளர்ச்சி செயல்பாட்டுச் செலவுகளின் அதிகரிப்பை விட அதிகமாக இருந்தது, இது பயனுள்ள செலவு முகாமைத்துவத்தைப் பிரதிபலிக்கிறது. ஒட்டுமொத்த செலவு அதிகரிப்பானது வாடிக்கையாளர் அனுபவத்தை உயர்த்துதல் மற்றும் டிஜிட்டல் மேன்மையை மேம்படுத்துதல் ஆகிய வங்கியின் மூலோபாய முன்னுரிமைகளுடன் இணங்கிச் செல்கிறது. இது செயல்பாட்டுத் திறன் மற்றும் நீண்டகால போட்டித்தன்மையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தொழில்நுட்பத் தளங்கள், மனித மூலதனம் மற்றும் சேவை உட்கட்டமைப்புகளில் செய்யப்பட்ட இலக்கு முதலீடுகளால் உந்தப்பட்டது. அதற்கமைய, மொத்த செயல்பாட்டுச் செலவுகள் இந்த ஆண்டில் 9% அதிகரித்து ரூ. 73.0 பில்லியனாக இருந்தன.

**செலவு முகாமைத்துவம்**



மிக முக்கியமான செலவுக் காரணியாகத் தொடர்ந்து இருந்து வரும் பணியாளர் செலவுகள், திறமைசாலிகள் மீதான முதலீடு, திறன் மேம்பாடு மற்றும் செயல்திறன் சீரமைப்பு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் 13% அதிகரித்து ரூ. 45.7 பில்லியனாக உயர்ந்தன. தேய்மானம் மற்றும் கடன்தீர்ப்புச் செலவுகள் இந்த ஆண்டில் ரூ. 828.0 மில்லியன் அதிகரித்து ரூ. 5.0 பில்லியனை எட்டின. அதேவேளையில், நிர்வாகச் செலவுகள் மற்றும் நிலையான சொத்துப் பராமரிப்புச் செலவுகளை உள்ளடக்கிய ஏனைய செயல்பாட்டுச் செலவுகள் 2% சரிந்து ரூ. 22.3 பில்லியனாகக் குறைந்தன் இது விருப்பத்திற்கேற்ற செலவினங்களில் கடைப்பிடிக்கப்பட்ட செலவுக் கட்டுப்பாட்டை வெளிப்படுத்துகிறது

## வரிவிதிப்பு GRI 207-1

அரசாங்கத்திற்கான வங்கியின் தொடர்ச்சியான வரிப் பங்களிப்பானது, வலுவான நிதிச் செயல்திறனைப் பேணுவதோடு தேசிய வரி வருவாயை ஆதரிப்பதில் BOC வகிக்கும் முக்கிய பங்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. வருமான வரி, நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி (VAT) மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி (SSCL) ஆகியவற்றை உள்ளடக்கிய வங்கியின் ஆண்டிற்கான மொத்த வரிச் செலவுகள் ரூ. 76.7 பில்லியனாக இருந்தன இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8% அதிகரிப்பாகும். இந்த ஆண்டில் 37% பயனுள்ள வருமான வரி விகிதத்துடன், நிதிச் சேவைகள் மீதான வரிகள் உயர் செயல்பாட்டு லாபத்திற்கு ஏற்ப 12% அதிகரித்து ரூ. 31.9 பில்லியனாக இருந்தன. வருமான வரியானது ரூ. 44.8 பில்லியனாக இருந்ததுடன், இது முன்னைய ஆண்டை விட 5% வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.

## இலாபகரத்தன்மை

மதிப்பாய்விற்கு உட்பட்ட இந்த ஆண்டில், வங்கியின் வரிக்கு முன்னரான இலாபம் 13% அதிகரித்து ரூ. 120.8 பில்லியனாகவும், வரிக்குப் பின்னரான லாபம் 18% அதிகரித்து ரூ. 76.0 பில்லியனாகவும் பதிவாகியுள்ளன. இது வலுவான அடிப்படை வருவாய்கள் மற்றும் ஒழுக்கமான நிதி நிர்வாகத்தைப் பிரதிபலிக்கிறது. இதற்கிடையில், வங்கி 2.3% சொத்து மீதான வருவாயையும் (ROA) மற்றும் 22.7% பங்கு மீதான வருவாயையும் (ROE) பதிவு செய்துள்ளது இது நாட்டின் பரந்த பொறுப்புகளை நிறைவேற்றும் அதேவேளையில் பங்குதாரர்களுக்குச் சிறந்த வருவாயை வழங்கும் வங்கியின் திறனை உறுதிப்படுத்துகிறது.

### இலாபத்தன்மை




## ஏனைய விரிவான வருமானம்

வங்கியின் OCI மீதான தேறிய இழப்பு 2024 இல் ரூ. 12.1 பில்லியன் இழப்புடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் ரூ. 7.8 பில்லியனாகக் குறைந்துள்ளது. இதற்கு முதன்மையாக, வெளிநாட்டுச் செயல்பாடுகளின் மாற்றத்தின் மூலம் கிடைத்த ரூ. 577.3 மில்லியன் வெளிநாட்டுச் செலாவணி இலாபம் காரணமாக அமைந்தது. அதேவேளையில், இந்த ஆண்டில் SWAP ஒப்பந்தங்களின் தீர்வு காரணமாக பணப்பாய்ச்சல் பாதுகாப்பு இழப்புகள் முன்னைய ஆண்டை விட கிட்டத்தட்ட ரூ. 2.9 பில்லியன் குறைந்தன. இது OCI இல் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இவற்றுக்கு இணையாக, வங்கி தனது வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்களில் ரூ. 13.1 பில்லியன் தேறிய கணிப்பீட்டு இழப்பைப் பதிவு செய்துள்ளது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5% குறைவு ஆகும்.

## நிதி வலிமை மற்றும் உறுதிப்பாடு

### சொத்துக்கள்

வங்கியின் அளவிலான போட்டித் திறனை அதிகரித்து, உள்நாட்டு வங்கிச் சூழலில் முன்னிலை வகிக்கும் நிலையை உறுதிப்படுத்தும் வகையில், மொத்த சொத்துக்கள் இந்த ஆண்டில் 10% வளர்ச்சியடைந்து ரூ. 5.5 டிரில்லியன் என்ற மைல்கல்லை எட்டியுள்ளன. சொத்துக்களின் இந்த விரிவாக்கமானது ஒரு நிலைபெற்று வரும் செயல்பாட்டுச் சூழலில் நிதிநிலை அறிக்கையின் அளவிடப்பட்ட வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. இந்த வளர்ச்சி முதன்மையாகக் கடன் மற்றும் ஏனைய ஆவணங்களிலான முதலீடுகளின் மூலோபாய அதிகரிப்பால் (11% வளர்ச்சி - ரூ. 2.7 டிரில்லியன்) உந்தப்பட்டதுடன், தேறிய கடன்கள் மற்றும் முற்பணங்களும் 9% அதிகரித்து ரூ. 2.4 டிரில்லியனாக உயர்ந்தன. இதனால் சொத்துக் கலவையானது கடன் மற்றும் ஏனைய முதலீட்டு ஆவணங்களை நோக்கி நகர்ந்துள்ளதுடன், இவை மொத்த சொத்துக்களில் 48% ஆக உள்ளன. இத்தகைய மறுசீரமைப்பு, வங்கியின் ஒழுக்கமான சொத்து ஒதுக்கீட்டு அணுகுமுறையை அடிக்கோடிட்டுக் காட்டுவதுடன், வருவாய் ஈட்டும் திறனைப் பாதுகாக்கும் அதேவேளையில் பன்முகப்படுத்தல் மூலம் சொத்துப்பட்டியல் மீள்திறனை மேம்படுத்துகிறது.

### கடன்கள் மற்றும் முற்பணங்கள்

வங்கித்தொழில்துறை வரலாற்றிலேயே மிகப்பெரிய கடன் சொத்துப்பட்டியலை தொடர்ந்து நிர்வகித்து வருவதன் மூலம், வங்கி சந்தையில் அதிக பங்கைப் பெற்றுள்ளதுடன் தனது தலைமைத்துவத்தையும் உறுதிப்படுத்துகிறது. ஆண்டின் முதல் பாதியில் அளவிடப்பட்ட விரிவாக்கத்தைத் தொடர்ந்து, இரண்டாம் பாதியில் மூலோபாய விவேகம் துரிதப்படுத்தல் மூலம் வளர்ச்சி, முகாமைத்துவம் செய்யப்பட்டது. இது சந்தை வாய்ப்புகளையும் விவேகமான இடர் முகாமைத்துவத்தையும் சமநிலைப்படுத்தும் வங்கியின் ஒழுக்கமான அணுகுமுறையைப் பிரதிபலிக்கிறது.

### சொத்துக் கட்டமைப்பு




பொருளாதாரத்தின் உற்பத்தித் துறைகளுக்கு ஆதரவளிப்பதில் வங்கியின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கும் வகையில், மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூ. 218.1 பில்லியனால் அதிகரித்து ரூ. 2.7 டிரில்லியனை எட்டியுள்ளன.

தொழிற்துறையின் மிகப்பெரிய கடன்கள் மற்றும் முற்பணங்கள் பட்டியலை நிர்வகிப்பதன் மூலம், BOC தனது சந்தை தலைமைத்துவ நிலையைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில், வங்கி ஆண்டின் முதல் பாதியில் எச்சரிக்கையுடனான வளர்ச்சியைப் பின்பற்றியதுடன், ஆண்டின் பிற்பகுதியில் அதன் விரிவாக்க வேகத்தைப் படிப்படியாகத் துரிதப்படுத்தியது. மொத்தக் கடன்களில் 53% என்ற மிகப்பெரிய பங்கைத் தவணைக்கடன்கள் கொண்டிருந்ததுடன், அவை இந்த ஆண்டில் 4% அதிகரித்தன. தவணைக்கடன்

# நிதியியல் மீளாய்வு

நிதியளிப்பு மீதான இந்தத் தொடர்ச்சியான முக்கியத்துவம், நீண்டகால மூலதன உருவாக்கத்தை எளிதாக்குவதிலும் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலும் வங்கியின் பங்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. தனியார் துறைக்கான கடன் வழங்கல் 16% அதிகரித்துள்ளது, இது வணிக மறுமலர்ச்சி மற்றும் நிறுவன வளர்ச்சிக்கு வங்கியின் பங்களிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. இதில் சிறு மற்றும் நடுத்தர அளவிலான (SME) துறைக்கான கடன் வழங்கல் ஆண்டுக்கு ஆண்டு (YoY) 28% அதிகரித்து ரூ. 319.9 பில்லியனாக இருந்தது இது உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் தொழில்முனைவோர் சூழலை வளர்ப்பதில் வங்கியின் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது. தனிநபர் கடன்கள் உள்ளிட்ட நுகர்வோர் கடன் வழங்கல் இந்த ஆண்டில் கணிசமாக அதிகரித்துள்ளது. படிப்படியான மீட்சி ஏற்பட்டு வரும் ஒரு ஆண்டில், குடும்பங்கள் மற்றும் குறுந்தொழில் முனைவோருக்குத் தேவையான பணப்புழக்க ஆதரவை வழங்குவதில் வங்கியின் வளர்ந்து வரும் பங்கை இந்த வளர்ச்சி பிரதிபலிக்கிறது.

**மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள்**




அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்களுக்கான வெளிப்பாடு 2% குறைந்துள்ளதுடன், இது மொத்த கடன் சொத்துப்பட்டியலில் 29% ஆகும் (2024 இறுதியில் இது 32% ஆக இருந்தது). ஒட்டுமொத்த கடன் புத்தகமானது கூட்டாண்மை, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் சில்லறைப் பிரிவுகளில் ஆரோக்கியமான பன்முகத்தன்மையைத் தொடர்ந்து வெளிப்படுத்துகிறது.

## சொத்துத் தரம்

மேம்பட்டு வரும் பேரண்டப்பொருளாதார அடிப்படைகள் மற்றும் படிப்படியாக நிலைபெற்று வரும் செயல்பாட்டு நிலைமைகளுக்கு மத்தியில் இந்த ஆண்டில் சொத்துத் தரக் குறிகாட்டிகள் மேம்பட்டுள்ளன. இருப்பினும், டித்வா சூறாவளியின் மோசமான தாக்கம் உட்பட, துறை சார்ந்த இடையூறுகளால் ஏற்படக்கூடிய சாத்தியமான பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு, குறைபாட்டுக் கொடுப்பனவு வழங்கலில் வங்கி வேண்டுமென்றே ஒரு விவேகமான அணுகுமுறையைக் கடைப்பிடித்தது.

கடன் இடரின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு (SICR) குறித்த கடுமையான மதிப்பீடு, குறிப்பாக ISL வாடிக்கையாளர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டது. குறைபாட்டிற்கான சான்றுகளைக் கொண்ட கடன்கள், கணக்கியல் தரநிலைகளின் தேவைகளுக்கு ஏற்ப உயர் நிலைகளுக்கு மாற்றப்பட்டன. மாதிரி முடிவுகளில் முழுமையாகப் பிரதிபலிக்காத வளர்ந்து வரும் இடர்களை எதிர்கொள்ள வங்கி முகாமைத்துவ அடுக்கு உபாய முறையைப் பேணியதுடன், அதிக இடர் கொண்ட துறைகளின் வெளிப்பாடுகளைச் செயலூக்கத்துடன் 2 ஆம் கட்டத்திற்கு மாற்றியது. அத்துடன் டித்வா சூறாவளியால் ஏற்படக்கூடிய கடன் இழப்புகளைத் தணிக்கக் குறிப்பிட்ட நிதி ஒதுக்கீடுகளை வங்கி அங்கீகரித்தது.

சூறாவளியினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் மற்றும் அதிகரித்த கடன் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, 1 ஆம் கட்டத்தின் கீழ் குறைபாட்டுக் கொடுப்பனவு 39% அதிகரித்துள்ளது அதேவேளையில் 2 ஆம் கட்டக் கொடுப்பனவுகள் 28% உயர்ந்துள்ளன. 3 ஆம் கட்டக் கொடுப்பனவு 2% என்ற மிதமான உயர்வைப் பதிவு செய்துள்ளது. அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பு இந்த ஆண்டில் ஒரு தொடர்ச்சியான செயல்முறையாக இருந்ததுடன், பல நிலுவையிலுள்ள கடன்கள் அதன் கீழ் பரிசீலிக்கப்பட்டன. இருப்பினும், வங்கி ஒரு விவேகமான அணுகுமுறையை ஏற்றுக்கொண்டுள்ளதுடன், இந்த வசதிகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் இன்னும் மீளப்பெறப்படவில்லை மறுசீரமைப்பிற்குப் பின்னரான கண்காணிப்பு முடிந்ததும் அவை பரிசீலிக்கப்படும். இத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இருந்தபோதிலும், இந்த ஆண்டில் சொத்துத் தர அளவீடுகள் மேம்பட்டுள்ளன் 3 ஆம் கட்டக் கடன் விகிதம் 2024 இல் இருந்த 7.2% இலிருந்து 5.6% ஆகக் குறைந்துள்ளது. இது கடன் வசூலிப்பு முயற்சிகளின் செயல்திறனையும் ஒழுக்கமான கடன் கண்காணிப்பையும் பிரதிபலிக்கிறது. இதற்கிடையில், 3 ஆம் கட்ட ஒதுக்கீட்டு வழங்கல் விகிதம் 57.9% ஆக வலுவடைந்துள்ளது.

**3ஆம் கட்ட கடன்கள் விகிதம்**




## நிதியளிப்பு விவரம்

வங்கியின் நிதியளிப்பு முறையானது வாடிக்கையாளர் வைப்புகளாலேயே ஆதிக்கம் செலுத்தப்பட்டது இது இந்த ஆண்டில் மொத்த சொத்துக்களில் 80% இற்கு நிதியளித்துள்ளது. இது வங்கியின் பரந்த புவியியல் இருப்பு, நிறுவப்பட்ட சாதனைப் பதிவு மற்றும் அதன் வாடிக்கையாளர் உறவுகளின் வலிமையைப் பிரதிபலிக்கிறது. இந்த ஆண்டில், வங்கி மூலோபாய ரீதியாக உகந்த நிதியளிப்பு கலவையைப் பேணியுள்ளதுடன், கடன்பெறுதல்கள் 2025 இறுதிக்குள் சொத்துத் தளத்தின் 8% இற்கு நிதியளிக்கப் பங்களித்துள்ளன.

## வைப்புகள்

வங்கியின் நிதியளிப்பு மூலோபாயத்தின் முக்கிய தூணாக வாடிக்கையாளர் வைப்புகள் தொடர்ந்து விளங்குகின்றன. இந்த ஆண்டில் மொத்த வைப்புகள் 4% அதிகரித்து ரூ. 4.4 டிரில்லியனை எட்டியுள்ளன. வங்கியின் பரந்த புவியியல் இருப்பு, பிராண்ட் மீதான நிலையான நம்பிக்கை மற்றும் வாடிக்கையாளர் வசதியை மேம்படுத்தும் டிஜிட்டல் திறன்களின் தொடர்ச்சியான வளர்ச்சி ஆகியவையே இந்த உயர்வுக்குக் காரணமாகும். குறிப்பிடத்தக்க வகையில், கேட்பு மற்றும் சேமிப்பு வைப்புகள் 28% என்ற வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. இதன் விளைவாக, CASA விகிதம் முன்னைய ஆண்டின் 27.0% இலிருந்து 33.2% ஆக மேம்பட்டுள்ளதுடன், வங்கியின் குறைந்த செலவிலான நிதியாதாரத்தை இது வலுப்படுத்தியுள்ளது. வங்கியின் மூலோபாயத்திற்கு ஏற்ப, வைப்பு கலவையை (Deposit mix) செலவு குறைந்த ஆதாரங்களை நோக்கி மாற்றியமைத்ததன் விளைவாக, கால வைப்புகள் இந்த ஆண்டில் 5% குறைந்துள்ளன. இதற்கிடையில், புலம்பெயர்ந்த சமூகத்தினர் BOC மீது கொண்டுள்ள நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் வகையில், வெளிநாட்டு நாணய வைப்புகள் இந்த ஆண்டில் 8% அதிகரித்து ரூ. 918.8 பில்லியனாக உயர்ந்துள்ளன.




## திரவத்தன்மை

இந்த ஆண்டில் திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கியின் முக்கிய கவனமாக இருந்ததுடன், சொத்து மற்றும் பொறுப்பு குழு கட்டமைப்பு மற்றும் உள்முறை நடைமுறைகள் மூலம் இது செயலூக்கத்துடன் கண்காணிக்கப்பட்டது. வைப்புத் திரட்டலை விட கடன் வளர்ச்சி அதிகமாக இருந்தபோதிலும், ஒழுக்கமான நிதியளிப்பு மூலோபாயங்கள் மற்றும் விவேகமான நிதிநிலை அறிக்கை முகாமைத்துவம் மூலம் வங்கி போதுமான பணப்புழக்கத் தாங்கிகளை வெற்றிகரமாகப் பேணியுள்ளது. நிகர நிலையான நிதியளிப்பு விகிதம் 156.6% ஆக இருந்ததுடன், இது 100% என்ற குறைந்தபட்ச ஒழுங்குமுறைத் தேவையை விட அதிகமாகும். அதேபோல், அனைத்து நாணயங்களுக்குமான பணப்புழக்க பாதுகாப்பு விகிதம் 260.4% ஆகப் பேணப்பட்டது. இது வங்கியின் வலுவான குறுகிய கால பணப்புழக்க நிலையையும் சாத்தியமான நிதி அழுத்தங்களுக்கு எதிரான மீள்திறனையும் உறுதிப்படுத்துகிறது.

## மூலதனம்

வங்கியின் மூலதன முகாமைத்துவமானது அதன் உள் மூலதனப் போதிய அளவு மதிப்பீட்டுச் செயல்முறை மற்றும் கட்டமைக்கப்பட்ட மூலதன அதிகரிப்புத் திட்டத்தின் மூலம் தொடர்ந்து வழிநடத்தப்பட்டது. இதன் மூலம், மாறிவரும் இடர் சூழல் மற்றும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப மூலதனத் தாங்கிகள் பேணப்படுவது உறுதி செய்யப்பட்டது. வங்கியின் மொத்த உரிமையாண்மை 21% அதிகரித்து ரூ. 365.8 பில்லியனாக உயர்ந்தது. இதற்குப் பிரதானமாக வலுவான இலாபத்தைத் தக்கவைத்தமை காரணமாக அமைந்ததுடன், தக்கவைக்கப்பட்ட வருவாய்கள் 11% அதிகரித்து ரூ. 204.4 பில்லியனாக உயர்ந்தன. இதற்கிடையில், ஏனைய ஒதுக்கீடுகள் 55% அதிகரித்து ரூ. 116.5 பில்லியனாக விரிவடைந்தன. இது இறையாண்மை கடன் மறுசீரமைப்பு முன்னேற்றங்களுக்கு மத்தியில் நிதிநிலை அறிக்கையைப் பாதுகாப்பதற்கான விவேகமான அணுகுமுறையைப் பிரதிபலிக்கிறது. மூலதனப் போதுமாந்தன்மை விகிதங்கள் ஒழுங்குமுறை வரம்புகளுக்கு மேல் வசதியாகப் பேணப்பட்டன. வங்கியின் தொடர்ச்சியான மூலதன மீள்திறனைப் பிரதிபலிக்கும் வகையில், பொதுப் பங்கு நிலை 1 விகிதம் 11.4% ஆகவும், மொத்த மூலதன விகிதம் 16.9% ஆகவும் பதிவாகியுள்ளன.




## பங்குதாரர் பெறுமதி உருவாக்கம்

முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு நிறுவனம் என்ற ரீதியில், BOC தனது ஒரே பங்குதாரரான இலங்கை அரசாங்கத்திற்கு நிலையான வருவாயைத் தொடர்ந்து வழங்கி வருவதுடன், தேசிய வளர்ச்சிக்கும் பங்களிப்பு செய்கிறது. இந்த ஆண்டில், ஒரு பங்கிற்கான வருவாய் (EPS) 16% அதிகரித்துள்ளதுடன், ஒரு பங்கிற்கான தேறிய சொத்துப் பெறுமதி (NAVPS) 18% உயர்ந்துள்ளது. கூடுதலாக, வங்கி அரசாங்கத்திற்கு ரூ. 5.0 பில்லியனை இலாபப்பங்காக அறிவித்து வழங்கியுள்ளது. இது நிதி வலிமையைப் பேணுவதோடு பொருளாதார முன்னேற்றத்தை ஆதரிக்கும் வங்கியின் இரட்டைப் பொறுப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

| | 2025 | 2024 | 2023 | 2022 | 2021 |
|---|---|---|---|---|---|
| ஒரு பங்கிற்கான வருவாய் (ரூபா) | 2,987.9 | 2,575.5 | 1,067.7 | 1,278.9 | 1,503.6 |
| ஒரு பங்கிற்கான தேறிய சொத்துப் பெறுமதி (ரூபா) | 14,216.9 | 12,102.4 | 10,068.6 | 10,167.4 | 8,030.4 |
| ஒரு பங்கிற்கான இலாபப்பங்கு (ரூபா) | 194.3 | - | 6.9 | 13.9 | 73.9 |
| உரிமை மீதான வருவாய் (%) | 22.7 | 23.2 | 10.6 | 14.1 | 21.0 |

# நிதியியல் மீளாய்வு

## குழுமச் செயல்பாடு மற்றும் கரைகடந்த செயல்பாடுகள்

2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள், வங்கி ஒன்பது துணை நிறுவனங்களையும் நான்கு இணை நிறுவனங்களையும் கொண்டிருந்தது. இவை நிதிச் சேவைகள், சொத்து முகாமைத்துவம் மற்றும் ஓய்வுக்கால முகாமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ளன. ஐரோப்பிய சந்தைகளுக்கான அணுகலை எளிதாக்கும் வகையில் ஐக்கிய இராச்சியத்தில் ஒரு வெளிநாட்டுத் துணை நிறுவனத்தையும் வங்கி இயக்குகிறது. இது வங்கியின் சர்வதேச இருப்பை வலுப்படுத்துவதுடன், ஊழியர்களுக்கு மதிப்புமிக்க வெளிநாட்டு அனுபவத்தையும் மேம்பாட்டு வாய்ப்புகளையும் வழங்குகிறது.

அனைத்து துணை நிறுவனங்களும் ஒரு முறையான துணை நிறுவன சாசனத்தின் கீழ் நிர்வகிக்கப்படுவதுடன், ஆண்டுதோறும் விரிவான செயல்திறன் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுகின்றன. அவற்றின் நிதி மற்றும் செயல்பாட்டு செயல்திறன் வங்கியினால் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகிறது. ஒவ்வொரு துணை நிறுவனத்தின் இடர் அறிக்கைகளும் குழுமத்தின் ஒட்டுமொத்த இடர் விருப்பத்தேர்வு மற்றும் விவேகமான இடர் அளவுருக்களுடன் சீரமைக்கப்படுவதை உறுதி செய்ய வங்கியின் பிரதான இடர் அதிகாரியினால் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

இந்த ஆண்டில், BOC Management and Support Services (Private) Limited (MSS) நிறுவனம் தழுவிய டிஜிட்டல் மயமாக்கலை நோக்கிய அதன் மூலோபாய கவனத்திற்கு ஏற்ப BOC IT Solutions (Private) Limited என மறுபெயரிடப்பட்டதுடன், அதற்கு ரூ. 25.0 மில்லியன் மூலதனமும் வழங்கப்பட்டது. குழுமத்தின் ஒட்டுமொத்த சொத்துக்களில் சுமார் 98% வங்கியையே சார்ந்துள்ளது. இந்த ஆண்டில் குழுமத்தின் வரிக்கு முன்னைய இலாபம் 18% அதிகரித்து ரூ. 76.5 பில்லியனை எட்டியுள்ளது.

## முன்னோக்கிய மூலோபாய மாற்றம்

முன்னேற்றம் என்பது தனிமைப்படுத்தப்பட்ட நகர்வுகளால் அல்ல, மாறாக ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட பல பரிமாணங்களின் மாறும் சீரமைப்பின் மூலமே அடையப்படுகிறது. மாறிவரும் சூழலில், நிதி வலிமை, செயல்பாட்டுச் சிறப்பு மற்றும் நீண்டகால நிலைத்தன்மை ஆகியவை ஒத்திசைவாக நகர்வதை உறுதி செய்யும் வகையில் வங்கி தனது மூலோபாய முன்னுரிமைகளை மறுசீரமைத்து வருகிறது.

மேம்பட்ட அரசியல் நிலைத்தன்மை, அதிகரித்த கொள்கை ஒருமைப்பாடு மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கையின் படிப்படியான மீட்சி ஆகியவற்றின் ஆதரவுடன், செயல்பாட்டுச் சூழல் ஒரு புதுப்பித்தல் கட்டத்திற்கு மாறியது. இருப்பினும், தொடரும் உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகளும் புவிசார் அரசியல் நிகழ்வுகளும் தொடர்ந்து விழிப்புணர்வையும் கட்டுக்கோப்பான செயல்பாட்டையும் கோருகின்றன. இந்தச் சூழலில், வங்கி தனது முக்கிய பலங்களை வலுப்படுத்துவதிலும், நம்பிக்கையுடனும் தெளிவுடனும் உருவாகும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் தன்னை நிலைநிறுத்திக்கொள்வதிலும் கவனம் செலுத்துகிறது.

### குறுகிய காலம்

குறுகிய காலத்தில், மீள்திறனை வலுப்படுத்துதல், நிதி நிலைத்தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

- ஒழுக்கமான கடன் மதிப்பீடு மற்றும் விவேகமான இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மூலம் சொத்துப்பட்டியல் தரத்தைப் பேணுதல்
- சேவைச் சிறப்பினைப் பேணிக்கொண்டு, லாபத்தை ஈட்டுவதற்காக செலவுக் கட்டுப்பாடு மற்றும் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை (KPIs) மேம்படுத்துதல்.
- கடன் வளர்ச்சியை ஆதரிக்க, நிலையான வைப்புத் தளம் மற்றும் நன்கு சமநிலையான நிதியளிப்பு கலவையைப் பேணுவதற்கு வாடிக்கையாளர் நம்பிக்கையைப் பயன்படுத்துதல்.
- ஒழுங்குமுறை இணக்கத்தை உறுதிப்படுத்தவும், வளர்ந்து வரும் வணிகத் தேவைகளை ஆதரிக்கவும் மனித மற்றும் டிஜிட்டல் மூலதனத்தை வலுப்படுத்துதல்.

### நடுத்தர முதல் நீண்ட காலம்

நடுத்தர முதல் நீண்ட காலத்தில், வங்கி மிகவும் நிலையான, உள்ளடக்கிய மற்றும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட எதிர்காலத்தை நோக்கிய ஒரு திட்டமிட்ட மாற்றத்தை முன்னெடுத்து வருகிறது.

- சுற்றுச்சூழலுக்குப் பொறுப்பான நிதியுதவிக்கான ஆதரவை விரிவுபடுத்துதல் மற்றும் உள்ளடக்கிய நிதித் தீர்வுகளுக்கான அணுகலை விரிவுபடுத்துதல்.
- வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தவும், செயல்பாட்டுத் திறனை அதிகரிக்கவும் நிறுவனம் தழுவிய டிஜிட்டல் மயமாக்கலைத் துரிதப்படுத்துதல்.
- பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கும் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான ஆதரவை வலுப்படுத்துதல்.
- SLFRS S1 மற்றும் S2 ஆகியவற்றைப் பின்பற்றுவதன் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துதல்.
- வங்கியின் ஒட்டுமொத்த இடர் விருப்பத்துடன் சீரமைக்கப்பட்ட முறையான ஆளுகை கட்டமைப்புகள் மற்றும் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ கட்டமைப்புகள் மூலம் துணை நிறுவனங்களின் மேற்பார்வையை மேம்படுத்துதல்.

# வணிகப் பிரிவுகளின் செயலாற்றம்

## சில்லறை வங்கித்தொழில்

**நாடு தழுவிய விரிவான கிளை வலையமைப்பு மற்றும் விரிவடைந்து வரும் டிஜிட்டல் கட்டமைப்பின் ஆதரவுடன், சில்லறை வங்கிச் சேவையானதுஇலங்கை வங்கியின் வணிக உரிமையின ஒரு முக்கிய தூணாகத் தொடர்ந்து விளங்குகின்றது. அணுகக்கூடிய மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட நிதித் தீர்வுகளின் மூலம், இப்பிரிவு தனிநபர்களின் நிதி மீள்திறனை வலுப்படுத்துகிறது, நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துகிறது மற்றும் நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் முறையான பொருளாதாரத்தில் இன்னும் தீவிரமாகப் பங்கேற்க வழிவகுக்கிறது.**

### முக்கிய பலங்கள்

- நாடு தழுவிய விரிவான கிளைகள் மற்றும் சேவை வலையமைப்பின் மூலம் சேவை பெறும் வலுவான வாடிக்கையாளர் தளம்.
- தொழில்முனைவோர் மற்றும் பிராந்திய வளர்ச்சியை ஆதரிக்கும் வகையில், MSMEகள் மற்றும் அபிவிருத்தி வங்கிச் சேவையில் கொண்டுள்ள வலுவான தலைமைத்துவம்.
- தனிநபர்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் MSMEகளுக்குச் சேவை செய்யும் பன்முகப்படுத்தப்பட்ட சில்லறை கடன் வழங்கல் பட்டியல்.
- அணுகல் மற்றும் சேவைத் திறனை மேம்படுத்தும் ஒருங்கிணைந்த “கிளை-டிஜிட்டல்“ வங்கி மாதிரி.
- இலக்கு வைக்கப்பட்ட சமூகம் சார்ந்த முயற்சிகள் மூலம் நிதி உள்ளடக்கத்தில் (தொடர்ந்து கவனம் செலுத்துதல்.
- ESG (சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை) கொள்கைகளுடன் இணைந்த கட்டமைக்கப்பட்ட மற்றும் பொறுப்பான கடன் வழங்கல்.

### வெளியீடுகள்

- வைப்புகள்
- கடன்கள் மற்றும் முற்பணங்கள்
- பரிவர்த்தனை வங்கிச் சேவை
- அபிவிருத்தி கடன் வழங்கல்
- நிதி உள்ளடக்கம்

### தொழிற்பாட்டுச் சூழல்

2025 ஆம் ஆண்டில், ஒரு கொந்தளிப்பான காலப்பகுதியைத் தொடர்ந்து ஏற்பட்ட விரிவான பேரண்டப்பொருளாதார நிலைத்தன்மையின் ஆதரவுடன், சில்லறை வங்கிச் சூழல் ஒரு நிலையான மீட்சியைப் பிரதிபலித்தது. குறைந்து வரும் பணவீக்க அழுத்தம் மற்றும் சாதகமான நாணயக் கொள்கை நிலைமைகள் ஆகியவை நுகர்வோர் மத்தியில் படிப்படியான முன்னேற்றத்திற்குப் பங்களித்தன் இது தனிநபர் மற்றும் MSME நிதியுதவிக்கான தேவையில் ஒரு அளவிடப்பட்ட வளர்ச்சியை ஏற்படுத்தியது

நம்பிக்கை மீண்டும் கட்டியெழுப்பப்பட்டதால், குறிப்பாகத் தனிப்பட்ட வாடிக்கையாளர்கள் மற்றும் நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களிடையே சில்லறை கடன் வழங்கல் நடவடிக்கைகள் மீண்டும் வேகம் பெற்றன. இருப்பினும், கடன் வழங்கும் முடிவுகளை எடுப்பதில் வாடிக்கையாளர்களின் திருப்பிச் செலுத்தும் திறன் மற்றும் வளர்ந்து வரும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகள் ஆகியவை முதன்மையாகக் கருதப்பட்டன.

முன்னரான காலப்பகுதிகளில் நிலவிய உயர்ந்த வட்டி விகிதங்கள் மற்றும் அதிகரித்த வாழ்க்கைச் செலவுகளின் தாக்கத்தால், வாடிக்கையாளர்கள் தங்களது நிதிப் பொறுப்புகளை நிர்வகிப்பதில் தொடர்ந்து விவேகத்துடன் செயல்பட்டனர். இந்த பின்னணியில், சில்லறை வங்கிப் பிரிவானது ஒரு சமநிலையான மற்றும் தொலைநோக்கு அணுகுமுறையை ஏற்றுக்கொண்டது இது சொத்துத் தரம் மற்றும் நீண்டகால மீள்திறனைப் பாதுகாப்பதற்காக ஒழுக்கமான கடன் வழங்கல் தரநிலைகள், மேம்படுத்தப்பட்ட இடர் மதிப்பீட்டுக் கட்டமைப்புகள் மற்றும் விழிப்புடனான சொத்துப்பட்டியல் கண்காணிப்பு ஆகியவற்றைப் பேணுவதன் மூலம் வளர்ச்சியை முன்னெடுத்தது.

கடன் நிலைத்தன்மை மற்றும் பட்டியல் மீள்திறன் ஆகியவை இந்த ஆண்டில் சில்லறை வங்கி முன்னுரிமைகளில் மையமாக இருந்தன. தரவு உந்தப்பட்ட கடன் மதிப்பீட்டு கருவிகளின் ஆதரவுடன் மேம்படுத்தப்பட்ட உட்புற இடர் கட்டமைப்புகள், சொத்துப்பட்டியலில் ஏற்படக்கூடிய அழுத்தங்களை முன்கூட்டியே கண்டறிய உதவியதுடன், சரியான நேரத்தில் இலக்கு வைக்கப்பட்ட தலையீடுகளை மேற்கொள்ளவும் அனுமதித்தன.

# வணிகப் பிரிவுகளின் செயலாற்றும்

அதேவேளையில், வலுப்படுத்தப்பட்ட வைப்புத் திரட்டல் மற்றும் நிலையான CASA வளர்ச்சி ஆழுகியவை நிதியளிப்பு நிலைத்தன்மையை அதிகரித்ததுடன், ஒட்டுமொத்த நிதிநிலை அறிக்கையின் (Balance sheet) மீள்திறனையும் வலுப்படுத்தின. சில்லறை கடன் வழங்கல் முடிவுகளில் நிலைத்தன்மை குறித்த விடயங்கள் ஒருங்கிணைந்த பகுதிகளாக இருந்தன் இது கடன் விரிவாக்கமானது பொறுப்புமிக்க வங்கி நடைமுறைகள் மற்றும் தேசிய வளர்ச்சி முன்னுரிமைகளுடன் சீரமைக்கப்படுவதை உறுதி செய்தது.

இந்த ஆண்டில், டித்வா சூறாவளியானது சில்லறை வங்கிச் சேவைக்கு குறிப்பிடத்தக்க செயல்பாட்டு சவால்களை ஏற்படுத்தியது. உள்கட்டமைப்பு சேதங்கள் மற்றும் மின்சாரம் துண்டிப்பு காரணமாகப் பல பிராந்தியங்களில் உள்ள கிளைச் செயல்பாடுகள் தற்காலிகமாகப் பாதிக்கப்பட்டதுடன், அத்தியாவசிய வங்கிச் சேவைகளுக்கான வாடிக்கையாளர் அணுகலும் மட்டுப்படுத்தப்பட்டது. இதற்குப் பதிலளிக்கும் விதமாக, நடமாடும் வங்கி அலகுகளைப் பயன்படுத்துதல், டிஜிட்டல் தளங்களை விரிவுபடுத்துதல் மற்றும் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு இலக்கு வைக்கப்பட்ட நிவாரணங்களை வழங்குதல் உள்ளிட்ட அவசரகால நடவடிக்கைகளை வங்கி விரைவாகச் செயல்படுத்தியது. இந்த அனுபவமானது, குறிப்பாகக் காலநிலை தொடர்பான இடையூறுகளின் போது, நிதி உள்ளடக்கம் மற்றும் நம்பிக்கையைப் பாதுகாப்பதில் மீள்திறன் மிக்க செயல்பாட்டுக் கட்டமைப்புகள் மற்றும் செயலூக்கமான வாடிக்கையாளர் ஈடுபாட்டின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டியது.

## மூலோபாயத்திற்கு எதிரான செயல்திறன்

| மூலோபாயத் தூண் | இடர்கள் | வாய்ப்புகள் | மூலோபாயப் பதிலிறுப்பு | மூலோபாய விளைவு |
|---|---|---|---|---|
| | • வைப்புத் தக்கவைப்பில் அதிக போட்டி<br>• சுற்றுச்சூழல் மற்றும் ஏனைய வெளிப்பகக் காரணிகளால் ஏற்படும் இடையூறுகள் | • சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், பெண்கள் தலைமையிலான வணிகங்கள் மற்றும் இளைஞர் தொழில்முனைவோர் பிரிவுகளில் வளர்ச்சி சாத்தியம்.<br>• நிலையான நிதியளிப்பு மற்றும் வைப்பு தயாரிப்புகளுக்கான அதிக கேள்வி. | • இளைஞர்கள் மற்றும் பெண்கள் தலைமையிலான வணிகங்களுக்கு வசதிகளை விரிவாக்குதல்<br>• சில்லறை கடன் வழங்கல் மற்றும் சொத்துப்பட்டியல் ஆளுகையில் நிலைத்தன்மைக் கொள்கைகளை ஒருங்கிணைத்தல்.<br>• பன்முகப்படுத்தப்பட்ட துறைசார் வெளிப்பாடு மற்றும் விவேகமான மூலதன ஒதுக்கீடு மூலம் ஐந்தொகையில் மீள்திறன் பாதுகாக்கப்பட்டது | • சில்லறை கடன் வளர்ச்சியை அடைந்து, நிதி உள்ளடக்கத்தை விரிவுபடுத்தி, பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளித்தல்<br>• தேசிய மீட்பு முன்னுரிமைகளுடன் இணைந்த அபிவிருத்தி கடன் வழங்கல் விரிவாக்கப்பட்டது<br>• குறைந்த செலவிலான வைப்புத்தொகைகளை அதிகரித்ததன் விளைவாக CASA விகிதம் மேம்பட்டது |
| | • வணிக விரிவாக்கம் நிதிச் சேவைத் துறையில் அதிகரித்த போட்டி | • வணிக நம்பிக்கையில் படிப்படியான முன்னேற்றம் | • இளைஞர்கள், பெண்கள் மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி பிரிவுகளில் வடிவமைக்கப்பட்ட சில்லறை தயாரிப்புகளை விரிவாக்குதல்<br>• சேவை வழங்கலை மேம்படுத்தக் கிளை மற்றும் டிஜிட்டல் ஒருங்கிணைப்பை அதிகரித்தல்<br>• மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் ஈடுபாட்டு முயற்சிகள் | • BOC இளைஞர் கடன் திட்டத்தின் கீழ் ரூ. 9.0 பில்லியனுக்கும் அதிகமான தொகை வழங்கப்பட்டு 19,400 க்கும் மேற்பட்ட இளம் தொழில்முனைவோர் ஆதரிக்கப்பட்டனர்.<br>• BOC மிதுரு மற்றும் BOC ரண்லியா திட்டங்களின் கீழ் பெண்கள் சார்ந்த கடன் வழங்கல் தொடர்ந்தது.<br>• சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான ஆலோசனைக் தளங்களை நடத்தியதுடன், வர்த்தகக் கண்காட்சிகள் மூலம் சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.<br>• BizPlus கடன் அட்டை மற்றும் BizLift கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. |
| | • டிஜிட்டல் மயமாக்கல் இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களின் இடர் | • டிஜிட்டல் மயமாக்கல் இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களின் இடர் | • சேவை அணுகலை அதிகரிக்க டிஜிட்டல் சேனல்களை விரிவாக்குதல்<br>• சில்லறை மற்றும் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளிலன் கடன் செயலாக்கப் பணிமுறைமைகளில் தானியங்கி முறையை விரிவுபடுத்துதல்<br>• டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் தரவு ஆளுகை கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் | • மொபைல் மற்றும் இணைய வங்கித் தளங்களில் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல் அளவுகளின் அதிகரிப்பு<br>• செயல்முறை தானியங்கி மூலம் நுகர்வோர் கடன் செயலாக்க நேரம் ஒரு வேலை நாளாகக் குறைக்கப்பட்டது. |

| மூலோபாயத் தூண் | இடர்கள் | வாய்ப்புகள் | மூலோபாயப் பதிலிறுப்பு | மூலோபாய விளைவு |
|---|---|---|---|---|
| | • திருப்பிச் செலுத்தும் திறனைப் பாதிக்கும் வெளிப்புற இடையூறுகள் மற்றும் காலநிலை தொடர்பான பாதிப்புகள் | • பேரண்டப் பொருளாதார மற்றும் வணிகச் சூழலில் ஏற்பட்டுள்ள படிப்படியான முன்னேற்றங்கள். | • கடன் கண்காணிப்பு மற்றும் முன்கூட்டிய எச்சரிக்கை வழிமுறைகளை வலுப்படுத்துதல்<br>• கடன் நிலைத்தன்மையை மேம்படுத்தச் சாத்தியமான கடன் வாங்குபவர்களுக்குத் தொடர்ச்சியான கட்டமைக்கப்பட்ட திருப்பிச் செலுத்தல் ஆதரவை வழங்குதல்<br>• இலங்கை மத்திய வங்கியினால அறிவுறுத்தப்பட்ட சலுகைக்கால நிவாரணங்களைச் செயல்படுத்தியதுடன், பேரழிவினால் பாதிக்கப்பட்ட மற்றும் பொருளாதார ரீதியாகப் பின்னடைவைச் சந்தித்த கடன் வாங்குபவர்களுக்கு மேலதிக சலுகை ஆதரவுகளை வழங்கியது. | • 3 ஆம் கட்ட கடன்கள் குறைக்கப்பட்டன<br>• மாகாண மட்டத்தில் 10 SME கிளினிக்குகளை நடத்தி ஆலோசனை மற்றும் நிதி ஆதரவு வழங்கப்பட்டது<br>• சில்லறை வர்த்தக வாடிக்கையாளர்கள் வெற்றிகரமாக மீட்டெடுக்கப்பட்டனர். |
| | • பணியாளர் தக்கவைப்பு | • சிறந்த திறமையாளர்களை ஈர்க்கும் திறன்<br>• திறன் மேம்பாடு மற்றும் கொள்ளளவு உருவாக்கம் | • நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான ஆலோசனை, டிஜிட்டல் சேவை வழங்கல், ESG சரிபார்ப்பு மற்றும் இடர் மதிப்பீடு ஆகியவற்றில் ஊழியர்களுக்குத் தொடர்ச்சியான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குதல்<br>• கிளை மற்றும் தலைமை அலுவலகக் குழுக்களுக்கு இடையே பல்துறை ஒத்துழைப்பை ஊக்குவித்தது. | • மேம்பட்ட திறன்கள் மற்றும் அனுபவத்தைக் கொண்ட தகுதியான குழுக்கள் உருவாக்கப்பட்டன.<br>• புத்தாக்கத்திற்கான தலைவரின் விருது அறிமுகப்படுத்தப்பட்டது |

## கடன்கள் மற்றும் முற்பணங்கள்

இந்த ஆண்டில், வீடமைப்பு, தனிநபர், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் அபிவிருத்திப் பிரிவுகளில் சில்லறை கடன் வழங்கல் சீரான வளர்ச்சியை வெளிப்படுத்தியது. இது இலக்கு வைக்கப்பட்ட சலுகை மற்றும் மறுமலர்ச்சியை மையமாகக் கொண்ட நிதித் திட்டங்களால் உந்தப்பட்டது. டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட வணிகங்களுக்கு உதவ, வங்கி சலுகைக்கால நிவாரணம் மற்றும் குறைந்த வட்டி கடன் திட்டங்களை வழங்கியது. அதேவேளையில் “BOC BizLift“ மற்றும் “SMELoC“ போன்ற முயற்சிகள் மூலம் கட்டமைக்கப்பட்ட மூலதனச் செலவு நிதியுதவியைத் தொடர்ந்து வழங்கியது. கூடுதலாக, நெல் ஆலை உரிமையாளர்களுக்கு வட்டி மானியக் கடன்கள் மற்றும் துறை சார்ந்த நிதியுதவிகள் வழங்கப்பட்டமை விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்ததுடன் தேசிய உணவுப் பாதுகாப்பையும் பலப்படுத்தியது.

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பின்வரும் முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டன:

- பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு நீட்டிக்கப்பட்ட சலுகைக்காலங்கள் மற்றும் சலுகை விலை நிர்ணயம்.
- “BOC BizLift“ மூலதனச் செலவு நிதியுதவியைச் சலுகை வட்டி விகிதங்களில் வழங்குதல்.
- விவசாய உற்பத்தித்திறனை மேம்படுத்த நெல் ஆலை உரிமையாளர்களுக்கு வட்டி மானிய நிதியுதவி அளித்தல்.
- பாதிக்கப்பட்ட கடன் வாங்குபவர்களுக்கு, ஒவ்வொரு கடனையும் தனித்தனியாகப் பரிசீலித்து, கடன் தவணைகளை மீள அட்டவணைப்படுத்துதல் மற்றும் கடன் மறுசீரமைப்பு ஆகியவற்றிற்கான ஆதரவை வழங்கியது.

வங்கியின் கொடுகடன் ஒப்புதலளித்தல் கட்டமைப்பிற்குள் ESG விடயங்கள் முறையாக இணைக்கப்பட்டுள்ளன. சில்லறை மற்றும் அபிவிருத்தி சொத்துப்பட்டியல் முழுவதும் ESMS (சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை அமைப்பு) நடைமுறைகள் மேலும் நிறுவனமயமாக்கப்பட்டன.

## அபிவிருத்தி கடன்வழங்கல்

2025 ஆம் ஆண்டில், சில்லறை வங்கிப் பிரிவானது MSMEகள், இளைஞர்கள் மற்றும் பெண்கள் தொழில்முனைவோர், பசுமை வணிகங்கள் மற்றும் பேரழிவினால் பாதிக்கப்பட்ட நிறுவனங்களை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தேசிய திட்டங்கள் மூலம் தனது அபிவிருத்தி கடன் பட்டியலை விரிவுபடுத்தியது.

# வணிகப் பிரிவுகளின் செயலாற்றும்

### தேசிய மற்றும் அபிவிருத்தி சார்ந்த திட்டங்கள்

- தேசிய கடன் உத்தரவாத கடன் திட்டம்
- இளைஞர் தொழில்முனைவோர் அபிவிருத்தி (விவசாயம் மற்றும் கைத்தொழில்)
- SMELoC2 சுழற்சி நிதித் திட்டம்
- MSME பேரிடர் நிவாரணத் திட்டம் - பாதிப்புக்குள்ளான நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்குச் சலுகை அடிப்படையிலான நடைமுறை மூலதன ஆதரவு.

### புத்தாக்கம் மற்றும் வளர்ந்து வரும் துறைசார் நிதியளிப்பு

- BizLift கடன் திட்டம்
- BOC E-Creator கடன் திட்டம் - சமூக ஊடகத் தொழில்முனைவோருக்காக.
- BOC பசுமை கடன் திட்டம் - புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மறுசுழற்சி, கழிவுப் பயன்பாடு மற்றும் சூழல் நட்புத் தொழில்களுக்கான நிதியுதவி.
- BOC இளைஞர் கடன் திட்டம் - இளம் தொழில்முனைவோருக்கான பிணையில்லா ஆரம்பக்கட்ட நிதியுதவி.

புதிய விரிவான கிராமிய கடன் திட்டமான (NCRCS) "சருசார", கிராமிய மற்றும் விவசாய நிதியுதவியை வலுப்படுத்தும் வகையில் மேம்படுத்தப்பட்டது. அதே நேரத்தில், வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கான செயல்பாட்டு மூலதன அணுகலை மேம்படுத்தும் வகையில், பண்டங்கள் கொள்முதலுக்கான அடமான வசதிகள் நெறிப்படுத்தப்பட்டன.

### சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் வளர்ச்சியை வலுப்படுத்துதல்

ஆலோசனைகள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் சந்தை வாய்ப்புகளை வசதிப்படுத்தல் போன்ற நிதி சாரா சேவைகளின் மூலம் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறைக்கு ஆதரவளிப்பதில் வங்கி தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. இத்தகைய ஒருங்கிணைந்த அணுகுமுறை ஒத்துழைப்புப் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தியுள்ளதுடன், ஆண்டிறுதியில் வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் கடன் சொத்துப்பட்டியல் ரூ. 319.9 பில்லியனைத் தாண்டியுள்ளது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 28% குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும்.

BOC SME Circle ஆனது நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான பிரத்யேக ஆலோசனை மற்றும் நிதித் தளமாகத் தொடர்ந்து இயங்கி வருகிறது. இதன் மூலம் தொழில்முனைவோர் வணிகத் திட்டமிடல், சந்தை விரிவாக்கம் மற்றும் செயல்பாட்டு சவால்கள் குறித்த தொழில்முறை வழிகாட்டல்களைப் பெற முடியும். மேலும், ஏற்றுமதி மேம்பாட்டுச் சபை, தொழில் அபிவிருத்திச் சபை மற்றும் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபை (NEDA) போன்ற அரசு நிறுவனங்களுடன் ஒத்துழைப்புகளை இணைப்பதன் மூலம் வங்கிச் சேவைக்கு அப்பால் அவர்களுக்குத் தேவையான வளங்களைப் பெற்றுக்கொள்ளவும் இந்தத் தளம் வழிவகுக்கிறது.

2025 ஆம் ஆண்டில், வங்கி மாகாணங்கள் முழுவதும் 10 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான மையங்களை நடத்தியது. தனிப்பட்ட ஆலோசனைகள் மூலம் 2,000 க்கும் மேற்பட்ட தொழில்முனைவோருக்கு அவர்களின் குறிப்பிட்ட வணிகப் பிரச்சினைகளைத் தீர்க்க இலக்கு வைக்கப்பட்ட தீர்வுகள் வழங்கப்பட்டன.

இதற்கு இணையாக, அபிவிருத்தி வங்கிப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட மூன்று நாள் SME வர்த்தகக் கண்காட்சியில் 50 க்கும் மேற்பட்ட பெண் தொழில்முனைவோர் பங்கேற்றுத் தங்களது சந்தை வாய்ப்புகளை அதிகரித்துக் கொண்டனர்.

### இளைஞர் தொழில்முனைவோரை வலுப்படுத்துதல்

BOC இளைஞர் கடன் திட்டம் என்பது இளம் தொழில்முனைவோருக்கு நிதி உதவி, நடைமுறை வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு சிறப்புத் திட்டமாகும். இத்திட்டமானது வேலை வாய்ப்பு உருவாக்கம், புத்தாக்கம், கிராமப்புற வளப் பயன்பாடு மற்றும் இறக்குமதிக்கு மாற்றீடான பொருட்களின் உற்பத்தி ஆகியவற்றை ஊக்குவித்துள்ளது.

மூலதனத்திற்கு அப்பால், இத்திட்டமானது வணிகத் திட்டமிடல், நிதி மேலாண்மை மற்றும் ஒழுங்குமுறை இணக்கம் ஆகியவற்றில் வாடிக்கையாளர்களுக்கு உதவி வழங்குகிறது. WhatsApp மற்றும் YouTube போன்ற தளங்கள் ஊடாக இணையவழி தொழில்முனைவோர் மேம்பாட்டு அமர்வுகளை நடத்துவதன் மூலம், இளம் கடன் பெறுபவர்கள் தங்களது வணிகங்களை நிலையான முறையில் வளர்த்தெடுக்க வங்கி உதவுகிறது.

2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள், இத்திட்டம் 19,400 க்கும் மேற்பட்ட இளைஞர் தலைமையிலான நிறுவனங்களுக்கு ஆதரவளித்துள்ளது. நிதியுதவி மற்றும் வழிகாட்டல்களை இணைத்து வழங்குவதன் மூலம், இலங்கை வங்கி (BOC) வெறும் கடன் வழங்குநராக மட்டுமன்றி, அடுத்த தலைமுறை இலங்கைத் தொழில்முனைவோரை வளர்க்கும் நீண்டகாலப் பங்காளராகவும் தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

## பெண் தொழில்முனைவோரை ஆதரித்தல்

பெண் தொழில்முனைவோரை ஆதரிப்பது வங்கியின் ஒரு மூலோபாய முன்னுரிமையாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. BOC **ரண்லியா**, சிறிலிய சவிய மற்றும் மிதுரு போன்ற இலக்கு வைக்கப்பட்ட கடன் திட்டங்கள் மூலம், உற்பத்தி, சேவைகள், சுற்றுலா மற்றும் ஏற்றுமதி சார்ந்த துறைகளில் உள்ள பெண் தலைமையிலான SMEகளுக்கு வங்கி அத்தியாவசிய நிதியுதவிகளை வழங்கியது. இது புதிய வணிகங்களைத் தொடங்கவும், விரிவாக்கவும் மற்றும் பொருளாதார சவால்களுக்கு மத்தியில் மீள்திறனைப் பேணவும் உதவியது.

நிதியுதவிக்கு அப்பால், BOC SME Circle உள்ளிட்ட ஆலோசனை மற்றும் திறன் மேம்பாட்டுத் தளங்கள் ஊடாகப் பயிற்சி, வழிகாட்டல் மற்றும் சந்தை வாய்ப்புகளுக்கான ஆதரவு வழங்கப்பட்டது

இலங்கையில் பெண் தொழில்முனைவோருக்கான நிதிச் சட்டக்கோவையில் ஒரு பங்கேற்பாளராக, உலகளாவிய ரீதியில் நிதித்துறையில் தலைமைத்துவம், தரவு மற்றும் செயல்பாடுகளை வலுப்படுத்துவதன் மூலம் பெண் தலைமையிலான நிறுவனங்களுக்கான நிதியுதவியை விரைவுபடுத்த வங்கி உறுதிபூண்டுள்ளது.

## பசுமை மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி நிதியளிப்பு

2025 ஆம் ஆண்டில் பசுமை மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி நிதியளிப்பு வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்தது. சூரிய சக்தி கட்டமைப்புகளை நிறுவுவதற்கான வீட்டுக்கூரை சூரியசக்தி கடன் திட்டம் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான கடன் திட்டம், 'E-friends' கடன் திட்டம், BOC பசுமை கடன் திட்டம் மற்றும் மின்சார வாகன (EV) குத்தகை வசதி போன்ற பிரத்யேகத் திட்டங்கள் மூலம் இலங்கையின் எரிசக்தி நிலைமாற்றத்திற்கு வங்கி ஆதரவளித்தது. இந்த முயற்சிகள் கார்பன் உமிழ்வைக் குறைக்கவும், தூய்மையான எரிசக்தி தீர்வுகளை ஊக்குவிக்கவும் மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாகப் பொறுப்பான முதலீடுகளை வலுப்படுத்தவும் உதவின.

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SME) மற்றும் அபிவிருத்தி வங்கிச் சேவைகளில் வங்கியின் தொடர்ச்சியான தலைமைத்துவம், இந்த ஆண்டில் பல தேசிய விருதுகள் மூலம் அங்கீகரிக்கப்பட்டது. இது அதன் வலுவான தாக்கம், புத்தாக்கம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது.

## வைப்புகள்

சில்லறை மற்றும் SME பிரிவுகள் முழுவதும் நீடித்த வைப்புத்தொகை திரட்டலால் ஆதரிக்கப்பட்டு, 2025-ல் சில்லறை வைப்புத்தொகைகள் நிலையாக இருந்தன. வலுப்படுத்தப்பட்ட உறவுமுறை வங்கிச் சேவை மற்றும் அதிகரித்த பரிவர்த்தனை ஈடுபாடு ஆகியவை தொடர்ச்சியான CASA வளர்ச்சியைத் தூண்டின. இது கட்டுப்பாடான கடன் விரிவாக்கத்துடன் நிதி செயல்திறனை வலுப்படுத்தியது.

சில்லறைப் பிரிவு வங்கியின் நிதி ஆதாரத்திற்குத் தொடர்ந்து அடித்தளமாக இருந்தது, இது மொத்த வைப்புகளில் 63% ஆகும். இதில் 82% உள்ளூர் நாணய (LCY) சேமிப்பு வைப்புக்களும், 77% உள்ளூர் நாணய கேள்வி வைப்புக்களும் அடங்கும். இதன் விளைவாக, 81% உள்ளூர் நாணய CASA சில்லறை வங்கிப் பிரிவால் நிர்வகிக்கப்படுகிறது. இப்பிரிவு, ஆண்டுக்கு ஆண்டு 31% என்ற வலுவான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இது, நீடித்த உத்வேகத்தையும் அதன் வாடிக்கையாளர் தளத்தின் வலிமையையும் பிரதிபலிக்கிறது.

BOC மிதுரு குழுமங்கள், பின்தங்கிய சமூகங்களிடையே நிதி உள்ளடக்கத்தையும் சேமிப்புப் பழக்கங்களையும் மேம்படுத்துவதற்கான ஒரு உந்துதலை வழங்கின. BOC கனெக்ட் முகவர்கள் மற்றும் இலங்கை அஞ்சல் துறையுடனான கூட்டாண்மைகள் மூலம், பின்தங்கிய சமூகங்களுக்கு வைப்புத்தொகை வசதியும் விரிவுபடுத்தப்பட்டது. இது வங்கியின் அணுகலை விரிவுபடுத்தி, நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துகிறது.

வங்கியானது, தனது முன்னோடியான இஸ்லாமிய வங்கிச் செயல்பாடுகள் மூலம், தனது பல்வகை வைப்புச் சேவைகளைத் தொடர்ந்து வலுப்படுத்தியது. BOC அன்-நூர், பெருநிறுவன, நிறுவன மற்றும் தனிநபர் வாடிக்கையாளர்களுக்கு இலாபப் பகிர்வு வைப்புத்தொகை மற்றும் நிதியளிப்புத் தீர்வுகளை வழங்குகிறது. அனைத்துத் தயாரிப்புகளும் ஷரியா இணக்கத்திற்காகச் சான்றளிக்கப்பட்டு, அனைத்து மத நம்பிக்கையுடைய வாடிக்கையாளர்களுக்கும் கிடைக்கின்றன. இது, நெறிமுறை சார்ந்த, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பெறுமதி அடிப்படையிலான வங்கி நடைமுறைகளுக்கான வங்கியின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது.

இந்த ஆண்டில், இஸ்லாமிய வங்கிப் பிரிவு, நிதிசார் அறிவினை மேம்படுத்துதல், ஊக்குவித்தல் ஆகிய நோக்கங்களுடன், வாடிக்கையாளர் விழிப்புணர்வு முன்னெடுப்புகள் மற்றும் சமூக முதலீட்டுத் திட்டங்கள் போன்ற தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

## பரிவர்த்தனை வங்கிச் சேவை

2025 ஆம் ஆண்டில், சில்லறை வங்கிப் பிரிவு பரிவர்த்தனை வங்கித் திறன்களைத் தொடர்ந்து வலுப்படுத்தியதுடன், நாடு முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களுக்குப் பின்வரும் முயற்சிகள் மூலம் வசதியையும் சேவைத் திறனையும் மேம்படுத்தியது:

- வங்கிச் சேவைகள் குறைவாக உள்ள பகுதிகளில் நிதி அணுகலை மேம்படுத்த BOC Connect முகவர் வலையமைப்பு மற்றும் தபால் அலுவலகக் கூட்டாண்மைகளை விரிவாக்கியது.
- டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல் அளவுகளை அதிகரிக்கும் வகையில் இணைய மற்றும் மொபைல் வங்கிப் பயன்பாட்டை வலுப்படுத்தியது.
- நுகர்வோர் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன் பணிப்பாய்வுகளில் செயல்முறை தானியங்கி முறையை மேம்படுத்தி, செயலாக்க நேரத்தைக் குறைத்தது.
- தகுதியான பிரிவினருக்கு இலவசக் கணக்குத் தொடக்கம் மற்றும் டெபிட் கார்டு வழங்கல் மூலம் நிதி உள்ளடக்கத்தை ஊக்குவித்தது.
- விற்பனை முனையங்கள் மற்றும் டிஜிட்டல் கொடுப்பனவு சேனல்கள் உள்ளிட்ட காசோலையற்ற (Cashless) உள்கட்டமைப்பைத் தொடர்ந்து விரிவுபடுத்தியது.
- பாதுகாப்பான பரிவர்த்தனை வளர்ச்சியை ஆதரிக்க டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் தரவு ஆளுகை கட்டமைப்புகளை வலுப்படுத்தியது.

# வணிகப் பிரிவுகளின் செயலாற்றம்

பின்வரும் இலக்கு வைக்கப்பட்ட முயற்சிகள் ஒன்றிணைந்து, அட்டை தொடர்பான வணிகத்தில் ஆண்டுக்கு ஆண்டு 34% வலுவான வளர்ச்சியை வழங்கியுள்ளன. இது கொடுப்பனவுத்துறையில் வங்கியின் விரிவடைந்து வரும் இருப்பை உறுதிப்படுத்துகிறது.

- நாடெங்கிலும் உள்ள தொழில்முனைவோரின் அன்றாட வணிகப் பரிவர்த்தனைகளை எளிதாக்கவும், நடைமுறை மூலதன நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கவும், அவர்களின் வளர்ச்சி அபிலாசைகளை ஆதரிக்கவும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை மையமாகக் கொண்ட 'BizPlus' கடன் அட்டையை அறிமுகப்படுத்தியது.

- தொழில்முறை வல்லுநர்கள், உயர் தேறிய சொத்து மதிப்புள்ள வாடிக்கையாளர்கள் மற்றும் பிரீமியர் கிளைகளின் வாடிக்கையாளர்களுக்காக பிரத்யேக சலுகைகளை வழங்கும் 'Prestige' கடன் அட்டையை வடிவமைத்தது.
- கவர்ச்சிகரமான வெகுமதிகள் மூலம் அட்டைப் பயன்பாட்டை ஊக்குவிக்கவும், வாடிக்கையாளர் திருப்தியை மேம்படுத்தவும் 'BOC Rewardz Plus' விசுவாசத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

## எமது எதிர்கால இலக்கு

### வாய்ப்புகள்

- நிறுவனங்களின் மீள்திறனை மேம்படுத்த, பெறுமதிச் சங்கிலி மற்றும் துறை சார்ந்த நிதியளிப்பு முயற்சிகளை விரிவுபடுத்துதல்.
- வர்த்தக நிதி, பரிவர்த்தனை வங்கிச் சேவை மற்றும் டிஜிட்டல் கொடுப்பனவு தீர்வுகளின் விரிவாக்கம் மூலம் கட்டணம் சார்ந்த வருமானத் வலுப்படுத்துதல
- பசுமைச் சில்லறை கடன் வழங்கலை (சூரிய சக்தி, EV குத்தகை) அதிகரித்தல் மற்றும் இறக்குமதி மாற்றீடு மற்றும் சுழற்சிப் பொருளாதார வணிகங்களுக்கான நிதியுதவியை விரிவுபடுத்துதல்.
- நிதி சாரா ஆதரவு மற்றும் சந்தை இணைப்புகளுக்காக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கட்டமைப்புப் பங்காளிகளுடன் (EDB> IDB> NEDA> SED> ITI) உறவுகளை ஆழப்படுத்துதல்.

### இடர்கள்

- கொள்வனவுத் திறன் அழுத்தங்கள் மற்றும் கடன் பெறுபவர்களின் எச்சரிக்கையான நடத்தை காரணமாகச் சில்லறை கடன் தேவை மற்றும் திருப்பிச் செலுத்தும் திறன் மட்டுப்படுத்தப்படலாம்.
- ஒழுங்குமுறை இறுக்கங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் மாறிவரும் கொள்கைத் தேவைகள்.
- பாதிக்கப்படக்கூடிய நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் பேரிடரால் பாதிக்கப்பட்ட பிரிவினரிடமிருந்து ஏற்படும் கடன் இடர் அழுத்தங்கள்.
- அதிகரித்து வரும் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களுக்கு மத்தியில் இணையப் பாதுகாப்புஇடர்கள்.

## முன்னோக்கிய மூலோபாய மாற்றம்

### குறுகிய காலம்

- விவசாய வங்கி அலகை நிறுவுவதன் மூலம் பால் உற்பத்தி, விவசாயம் மற்றும் கைத்தொழில் உள்ளிட்ட முன்னுரிமைத் துறைகளில் பெறுமதிச் சங்கிலி நிதியுதவியை அதிகரித்தல்.
- அதிக நிதியியல் உள்ளடக்கத்தை உருவாக்க, தொழில்முனைவோர் மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்காக ஆதரிப்பதற்காக ஒவ்வொரு மாகாணத்திலும் தொழில்முனைவோர் மையங்களை நிறுவுதல்.
- ஆலோசனை மற்றும் பரிவர்த்தனை திறனை ஆழப்படுத்துவதற்காக ஒவ்வொரு மாகாணத்திலும் வர்த்தக நிதி அலகுகளை நிறுவுதல்.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மின்சார வாகனங்கள் மற்றும் கழிவு மேலாண்மை தீர்வுகளுக்கான நிலையான நிதியுதவியை வலுப்படுத்துதல்.

### நடுத்தர முதல் நீண்ட காலம்

- அதிக வளர்ச்சியைக் கொண்ட தொழில்துறைகளுக்கு இலக்கு வைக்கப்பட்ட நிதியுதவி மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட தீர்வுகளை வழங்க, வளர்ந்து வரும் துறைகள் சார்ந்த கவனத்தை ஈர்த்தல்
- விரைவான செயலாக்கம், மேம்பட்ட வாடிக்கையாளர் ஈடுபாடு மற்றும் வடிவமைக்கப்பட்ட சேவை வழங்கல்கள் மூலம் சேவையின் தரத்தை அதிகரித்தல்.
- தானியங்கி கண்காணிப்பு முறையுடன் கூடிய டிஜிட்டல் மற்றும் காகிதமற்ற கடன் செயலாக்கத்தைத் துரிதப்படுத்துதல்.

# கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கிச் சேவை

இலங்கை வங்கியின் கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கிப் பிரிவானது, வணிக விரிவாக்கம், வர்த்தகம் மற்றும் மூலோபாய தேசிய திட்டங்களை முன்னெடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட நிதித் தீர்வுகளின் மூலம் இலங்கையின் தனியார் துறை, பெரிய நிறுவனங்கள் மற்றும் அரச துறை நிறுவனங்களை வலுப்படுத்துகிறது. துறைசார் நிபுணத்துவம், ஒழுக்கமான இடர் முகாமைத்துவம் மற்றும் டிஜிட்டல் சிறப்பினை இணைப்பதன் மூலம், வங்கி தனது வாடிக்கையாளர்களின் வளர்ச்சியை உறுதி செய்வதோடு நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும் பங்களிக்கிறது.

### முக்கிய பலங்கள்

- இலங்கை பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் ஆழமான ஊடுருவலைக் கொண்ட சந்தையில் முன்னணியில் இருக்கும் கூட்டாண்மை கடன் வழங்குநர்.
- கரைகடந்த வர்த்தகம், வெளிநாட்டு நாணய நிதியளிப்பு மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களை ஆதரிக்கும் வலுவான வெளிக்கடல் வங்கித் திறன்கள்.
- அரச நிறுவனங்கள், பெருநிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்களுடன் கொண்டுள்ள நிலையான கூட்டாண்மை.
- கட்டமைக்கப்பட்ட வர்த்தக நிதி (Trade finance), சிண்டிகேட்டட் கடன் வழங்கல் மற்றும் திட்ட நிதியுதவி ஆகியவற்றில் அங்கீகரிக்கப்பட்ட தலைமைத்துவம்.
- பட்டியல் முடிவுகளில் நிலைத்தன்மையை உட்பொதிக்கும் கட்டாய ESG சரிபார்ப்பு முறைமை.
- ஒழுக்கமான கண்காணிப்பு, அழுத்தச் சோதனை மற்றும் துறைசார் இடர் மதிப்பீட்டுக் கட்டமைப்புகளால் ஆதரிக்கப்படும் வலுவான சொத்துப்பட்டியல் ஆளுகை.

### வெளியீடுகள்

- கூட்டாண்மை கடன் வழங்கல்
- கரைகடந்த வங்கிச் சேவை
- திட்ட நிதியுதவி
- வர்த்தக நிதி மற்றும் சேவைகள்
- வாடிக்கையாளர் வைப்புகள்
- பிரீமியர் வங்கிச் சேவை
- அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள்

## தொழிற்பாட்டுச் சூழல்

2025 ஆம் ஆண்டில், வட்டி விகிதங்களின் குறைப்பு மற்றும் மேம்பட்டு வரும் வெளிநாட்டு வர்த்தக நிலைமைகளின் ஆதரவுடன், செயல்பாட்டுச் சூழல் படிப்படியான பேரண்டப்பொருளாதார நிலைத்தன்மையைப் பிரதிபலித்தது. இருப்பினும், உலகளாவிய பொருளாதார ஏற்ற இறக்கங்கள், புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் வளர்ந்து வரும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் தனியார் துறை முதலீட்டு உணர்வு அளவிடப்பட்டதாகவே இருந்தது. கூட்டாண்மை கடன் தேவை தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருந்ததுடன், வர்த்தக நிதி மற்றும் நடைமுறை மூலதன வசதிகளில் வலுவான வேகம் காணப்பட்டது.

வழங்கல் சங்கிலிகள் சீரடைந்ததாலும் சர்வதேச தேவை அதிகரித்ததாலும், ஏற்றுமதி சார்ந்த வணிகங்கள் மற்றும் BOI அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் மீண்டும் சுறுசுறுப்பான செயல்பாடுகளை வெளிப்படுத்தின. அதிகரித்த ஒழுங்குமுறை ஒழுக்கம் மற்றும் ஆளுகை மேற்பார்வை ஆகியவை கடன் வழங்கும் முடிவுகளில் தொடர்ந்து செல்வாக்கு செலுத்தின. பெரிய அளவிலான கடன் வெளிப்பாடுகள் (Large exposures) மேம்பட்ட இடர் மதிப்பீடுகள் மற்றும் ESG சரிபார்ப்புக்கு உட்படுத்தப்பட்டன் இது விவேகமான சொத்துப்பட்டியல் முகாமைத்துவத்தை வலுப்படுத்தியதுடன் சொத்துத் தரத்தையும் பாதுகாத்தது.

எச்சரிக்கையான முதலீட்டுச் சூழல் நிலவியபோதிலும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மருந்து உற்பத்தி, சுற்றுலா, உள்கட்டமைப்பு மற்றும் ஏற்றுமதி சார்ந்த தொழில்கள் உள்ளிட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த துறைகளுக்குக் கட்டமைக்கப்பட்ட திட்ட நிதியுதவித் தீர்வுகளின் மூலம் தனது மூலோபாய அர்ப்பணிப்பை வங்கி தொடர்ந்தது. அதேவேளையில், கரைகடந்த வங்கிச் செயல்பாடுகள் பிராந்திய இணைப்பை வலுப்படுத்தியதுடன், தடையற்ற எல்லை கடந்த பரிவர்த்தனைகளை எளிதாக்கியது

# வணிகப் பிரிவுகளின் செயலாற்றம்

## மூலோபாயத்திற்கு அமைவான பெறுபேறுகள்

| மூலோபாயத் தூண் | இடர்கள் | வாய்ப்புகள் | மூலோபாயப் பதிலிறுப்பு | மூலோபாய விளைவு |
|---|---|---|---|---|
| | • உலகளாவிய மற்றும் உள்நாட்டு வர்த்தக பாய்ச்சல்களில் நிலவும் குழப்பங்கள்<br>• ஒழுங்குமுறை மாற்றங்கள்<br>• பெருமளவிலான கடன் வழங்கல்களில் நிலவும் செறிவு இடர் | • பொருளாதார மறுமலர்ச்சி<br>• வணிகச் சூழலில் மீண்டும் கட்டியெழுப்பப் பட்டுள்ள நம்பிக்கை<br>• பொது நிதி மற்றும் ஆளுகையை வலுப்படுத்துதல் | • கடன் அனுமதிகள் மற்றும் கொடுப்பனவு கண்காணிப்பில் ஆளுகையை வலுப்படுத்துதல்<br>• துறை ரீதியான கடன் வெளிப்பாடுகளைப் பன்முகப்படுத்துதல்<br>• ஒழுக்கமான மூலதன ஒதுக்கீட்டைப் பேணுதல்<br>• செயல்பாடுகளுக்கான ஒருங்கிணைந்த சாத்தியக்கூறு மற்றும் நிலைத்தன்மை மதிப்பீடுகள் | • தனியார் துறை கடன் சொத்துப்பட்டியலில் வளர்ச்சி<br>• மேம்படுத்தப்பட்ட வர்த்தக நிதிச் செயல்பாடுகள்<br>• முறையான பயிற்சி மற்றும் ESMS இணக்கமான கடன்கள் மூலம் ESG விழிப்புணர்வு அதிகரிப்பு. |
| | • பெருநிறுவன வாடிக்கை யாளர்களின் அதிக பேரம் பேசும் திறன்<br>• சுறுசுறுப்பான நிதி நிறுவனங்களிடமிருந்து ஏற்படும் போட்டி | • கட்டமைக்கப்பட்ட மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட தீர்வுகளுக்கான பன்முகப்படுத்தப்பட்ட தயாரிப்பு மற்றும் சேவைத் தொகுப்பு<br>• தொழில்முறை மற்றும் வாடிக்கையாளர் உறவுகள் மூலமான வளர்ச்சி வாய்ப்புகள் | • வலுப்படுத்தப்பட்ட துறை சார்ந்த உறவு முகாமைத்துவம்<br>• நெறிப்படுத்தப்பட்ட ஒப்புதல் மற்றும் சேவை செயல்முறைகள்<br>• முக்கிய தொழில் கூட்டாண்மைகளுடனான ஈடுபாட்டை ஆழப்படுத்துதல்<br>• கவனம் செலுத்திய விரிவான பெறுமதி சங்கிலி தீர்வுகள்<br>• தொழில்நுட்பத்தின் மூலம் சேவை வழங்கலை மேம்படுத்துதல்<br>• வாடிக்கையாளர் உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் பல வாடிக்கையாளர் பாராட்டு விழாக்களையும் கௌரவிப்பு நிகழ்ச்சிகளையும் நடத்தியது. | • BizLift கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியது<br>• 'Export Circle மூலம் புதிய வாடிக்கையாளர்கள் இணைக்கப்பட்டனர்<br>• பிற வங்கிகள் மீது எடுக்கப்பட்ட ஏற்கப்பட்ட ஏற்றுமதி உண்டியல்களைத் தள்ளுபடி செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.<br>• ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களின் செயல்திறனை அதிகரிக்க ஏற்றுமதி மேம்பாட்டுச் சபை மற்றும் சுங்கத் திணைக்களத்துடன் ஒத்துழைப்பை வலுப்படுத்தியது. |
| | • அதிக செயல்பாட்டுச் செலவுகள்<br>• இணையப் பாதுகாப்பு இடர்கள் | • டிஜிட்டல் வர்த்தகம் மற்றும் பணம் அடிப்படையிலான தீர்வுகளுக்கான கேள்வி<br>• தடையற்ற சந்தை அணுகல் | • வளர்ந்து வரும் கேள்வியைப் பூர்த்தி செய்ய மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் தயாரிப்புத் தொகுப்பு<br>• தானியங்கி கடன் செயலாக்கம் மற்றும் சொத்துப்பட்டியல் கண்காணிப்பு<br>• முனையிலிருந்து முனை வரையான வர்த்தகச் சேவைகளை வழங்க ஒருங்கிணைந்த வர்த்தக நிதிச் சேனல்கள் | • ஏற்றுமதியாளர்களுக்காக 'BizPlus' கடன் அட்டையை அறிமுகப்படுத்தியது<br>• அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான 'Fuel Card' அறிமுகப்படுத்தப்பட்டது.<br>• வர்த்தகச் செயல்பாடுகளுக்காக SWIFT ISO இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொண்டது. |

| மூலோபாயத் தூண் | இடர்கள் | வாய்ப்புகள் | மூலோபாயப் பதிலிறுப்பு | மூலோபாய விளைவு |
|---|---|---|---|---|
| | • பெரிய அளவிலான கடன் வெளிப்பாடுகளில் அதிகரித்துள்ள கடன் இடர்<br>• துறை சார்ந்த இடர்கள் | • பேரண்டப் பொருளாதார நிலையில் ஏற்பட்டுள்ள படிப்படியான முன்னேற்றம் மற்றும் அதிகரித்துள்ள கடன் தேவை<br>• சொத்துத் தரம் குறித்த ஒழுங்குமுறை ஆய்வுகள்<br>• ESG இணக்கமான கடன் கொள்கைகளுக்கான தேவை | • முன்கூட்டிய எச்சரிக்கை மற்றும் இடர் மறுஆய்வு வழிமுறைகளை வலுப்படுத்துதல்<br>• கட்டமைக்கப்பட்ட சொத்துப்பட்டியல் கண்காணிப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆளுகை மேற்பார்வை<br>• கடன் மதிப்பீட்டிற்கு ESG அளவுகோல்களைப் பயன்படுத்துதல் | • 3 ஆம் கட்ட (Stage 3) கடன்கள் குறைக்கப்பட்டன<br>• நீண்டகாலமாக நிலுவையிலிருந்த அரச நிறுவனங்களின் (SOE) வசதிகள் வெற்றிகரமாக மறுசீரமைக்கப்பட்டன<br>• ESMS கட்டமைப்பின் ஊடாக கடன் வசதிகளைச் சரிபார்த்தல்<br>• இணக்கப்பாட்டை உறுதிப்படுத்த கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களை மீளாய்வு செய்தல் |
| | • திறமையாளர்களைத் தக்கவைத்துக் கொள்வதில் உள்ள சவால்கள்<br>• கொடுக்கல் வாங்கல்களில் அதிகரித்துவரும் சிக்கல்தன்மை | • உயர் திறன்கள் மற்றும் ஆளுமை கொண்ட மனித வளங்கள்<br>• புதிய ஆட்சேர்ப்பு மூலம் குழுக்களை வலுப்படுத்துதல் | • தொடர்ச்சியான கொள்ளளவு உருவாக்கத்தில் முதலீடு செய்தல்<br>• வணிக மற்றும் இடர் குழுக்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்<br>• செயல்திறன் பொறுப்புக்கூறல் மற்றும் சேவைச் சிறப்பினை உறுதிப்படுத்துதல் | • தொழில்நுட்ப மற்றும் திறன் மேம்பாடு குறித்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள்<br>• அனைத்து கடன் அதிகாரிகளுக்கும் கடன் முன்மொழிவுகளின் சுற்றுச்சூழல் சரிபார்ப்பு குறித்த திறன் மேம்பாடு |

## கூட்டாண்மை மற்றும் கரைகடந்த வங்கிச் சேவை

கூட்டாண்மை வங்கிப் பிரிவானது வங்கியின் கூட்டாண்மை வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது. கரைகடந்த வங்கிப் பிரிவானது, கப்பல் போக்குவரத்து, ஆடை உற்பத்தி, மருந்துகள் மற்றும் பிற வர்த்தகம் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள இலங்கையின் முக்கிய ஏற்றுமதி மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதில் ஒரு முக்கிய தூணாகத் திகழ்கிறது. இப்பிரிவு, வெளிநாட்டு நாணய ஓட்டங்களை வினைத்திறனாக நிர்வகிக்கவும், எல்லை கடந்த கொடுக்கல்வாங்கல்களை எளிதாக்கவும் மற்றும் கட்டமைக்கப்பட்ட வர்த்தக நிதி தீர்வுகளைப் பெறவும் இலங்கை வங்கியின் பிரத்யேக கரைகடந்த வங்கிச் சேவைகளை நம்பியுள்ளது.

இந்தச் சேவைகளின் மூலம், நிறுவனங்கள் தங்களது உலகளாவிய போட்டித்தன்மையை வலுப்படுத்தவும், நடைமுறை மூலதனத்தை மேம்படுத்தவும் மற்றும் ஏற்றுமதி சார்ந்த தொழில்களில் நிலையான வளர்ச்சிக்காக நாணய இடர்களைக் குறைக்கவும் வங்கி உதவுகிறது. இப்பிரிவுக்குச் சேவை செய்வதன் மூலம், வங்கி செயல்பாட்டு மீள்திறனை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி ஈட்டல் மற்றும் பொருளாதார நிலைத்தன்மைக்கும் நேரடியாகப் பங்களிக்கிறது.

நம்பிக்கைக்குரிய நிதிப் பங்காளராக, இலங்கை வங்கியின் கரைகடந்த வங்கிச் செயல்பாடுகள் உலகளாவிய சந்தைகளுடனான இலங்கையின் ஈடுபாட்டைத் தொடர்ந்து வலுப்படுத்துவதுடன், மூலோபாயத் தொழில்துறைகளை ஆதரிப்பதோடு சர்வதேச வர்த்தகச் சிறப்பிற்கான வங்கியின் அர்ப்பணிப்பையும் உறுதிப்படுத்துகின்றன. 2025 ஆம் ஆண்டில், தேசிய வளர்ச்சியை ஆதரிக்கும் வகையில் வங்கி தனது கடன் பட்டியலை மூலோபாய ரீதியாக வழிநடத்தியது. தனியார் துறை கடன் வழங்கலில் அதிக கவனம் செலுத்தியதன் மூலம் ஏற்றுமதி, இறக்குமதி மாற்றீடுகள் மற்றும் விவசாயம் போன்ற உற்பத்தித் துறைகளுக்கு நிதி வழங்கப்பட்டது இது வேலைவாய்ப்புகளை உருவாக்கியதுடன் பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டியது.

வணிகங்கள் எதிர்கொள்ளும் சவால்களைக் கருத்திற்கொண்டு, வங்கி திரவத்தன்மை அடிப்படையிலான கடன் வழங்கும் கட்டமைப்பை அறிமுகப்படுத்தியது. இது சாத்தியமான நிறுவனங்கள் தங்களது நிலைத்தன்மையை மீண்டும் பெறவும், கடன் திருப்பிச் செலுத்தும் திறனின் அடிப்படையில் கடன்களைப் பெற்றுக்கொள்ளவும் அனுமதித்தது. புதிய அமெரிக்க வரி விதிப்புகளுக்கு மத்தியில், சரியான நேரத்திலான நிதி உதவி மற்றும் ஆலோசனை ஆதரவு பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் தங்களது வணிகத்தைத் தடையின்றித் தொடர உதவியது.

தேசிய முன்னுரிமைகளுடன் இணங்கி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மருந்துகள், ஆடைத் தொழில் மற்றும் சுற்றுலா உள்ளிட்ட நீண்டகால வளர்ச்சித் திறன் கொண்ட துறைகளுக்கு நிதியளிப்பதில் முன்னுரிமை அளிக்கப்பட்டது. இறக்குமதி கட்டுப்பாடுகளின் படிப்படியான தளர்வுகளுடன், வங்கி முன்னுரிமை இறக்குமதிகளுக்கான ஆதரவை விரிவுபடுத்தியது இது அரசாங்க வருவாய்க்குப் பங்களித்ததுடன் பரந்த பொருளாதார மற்றும் சமூக நிலைத்தன்மையை வளர்த்தது. செயல்பாட்டுத் திறன் மற்றும் இடர் மேலாண்மையை மேம்படுத்த, கடன் வழங்கல் மற்றும் வர்த்தக நிதிச் செயல்பாடுகள் முழுவதும் தொழில்நுட்பம் மற்றும் செயல்முறை மேம்பாடுகளை வங்கி செயல்படுத்தியுள்ளது.

# வணிகப் பிரிவுகளின் செயலாற்றும்

இதற்கு இணையாக, BOC BizLift கடன் திட்டத்தின் அறிமுகமானது, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களின் விரிவாக்கம், நவீனமயமாக்கல் மற்றும் நிலையான வளர்ச்சி மாதிரிகளை நோக்கிய மாற்றத்திற்கு ஆதரவளிக்கும் ஒரு மூலோபாய முயற்சியாக அமைந்தது. இத்திட்டமானது வணிகங்கள் தங்களது செயல்பாட்டுத் திறனை வலுப்படுத்தவும், போட்டித்தன்மையை அதிகரிக்கவும் மற்றும் மாறிவரும் சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப மூலோபாய ரீதியாக வளரவும் வழிவகுக்கிறது.

இத்தகைய நடவடிக்கைகள் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட துறைசார் ஆதரவுகள், தனியார் துறை கடன் சொத்துப்பட்டியலில் வலுவான வளர்ச்சியை ஏற்படுத்தியதுடன், நிலையான பொருளாதார மேம்பாட்டிற்கான ஒரு ஊக்கியாக வங்கியின் பங்கினை உறுதிப்படுத்தின.

பொறுப்பான மற்றும் நிலையான கடன் வழங்கலை ஊக்குவிப்பதற்காக, வங்கி தனது கடன் பகுப்பாய்வில் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) காரணிகளை ஒருங்கிணைக்கிறது.

## திட்ட நிதியுதவி

திட்ட நிதியுதவிப் பிரிவானது எரிசக்தி, உற்பத்தி, விவசாயம், சுற்றுலா உள்கட்டமைப்பு மற்றும் ஏற்றுமதி சார்ந்த தொழில்களில் பெரிய அளவிலான திட்டங்களுக்கு நீண்டகால நிதியுதவியை வழங்குவதன் மூலம் தேசிய வளர்ச்சிக்குத் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பொறுப்பான திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதுடன், மருந்து உற்பத்தி போன்ற மூலோபாயத் துறைகளுக்குத் தனிப்பயனாக்கப்பட்ட நிதித் தீர்வுகள் வழங்கப்பட்டன.

### நிதியளிக்கப்பட்ட முக்கிய திட்டங்கள்:

இந்த முயற்சிகள் தனியார் துறையின் அதிகப்படியான பங்கேற்பை எளிதாக்கியதுடன், வேலைவாய்ப்புகளை உருவாக்கி, பிராந்திய பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டி, வெளிநாட்டுச் செலாவணி வருவாயை அதிகரித்தன. இப்பிரிவானது திட்ட மதிப்பீடு மற்றும் செயல்பாட்டை வலுப்படுத்தியதுடன், தேசிய நிலைத்தன்மை இலக்குகளுடன் இணக்கமான வளர்ச்சியை உறுதி செய்தது.

## வர்த்தக நிதியளிப்பு

இந்த ஆண்டில், வர்த்தக நிதிச் செயல்பாடுகள் வலுவான செயல்திறனை வெளிப்படுத்தின. ஏற்றுமதி அளவில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மற்றும் வரலாற்றிலேயே அதிக எண்ணிக்கையிலான கடன் கடிதங்கள் திறக்கப்பட்டமை இதன் சிறப்பம்சங்களாகும். புதிய ஏற்றுமதியாளர்களை வெற்றிகரமாக இணைத்துக்கொண்டதன் மூலம், சர்வதேச வர்த்தகத்தை எளிதாக்குவதில் நம்பிக்கைக்குரிய பங்காளராக வங்கியின் நிலை உறுதிப்படுத்தப்பட்டது.

வங்கியின் BOC Export Circle ஆனது புதிய வாடிக்கையாளர்கள், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வணிகங்கள் மற்றும் ஏற்றுமதி சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை இணைப்பதில் முக்கிய பங்கு வகித்தது. உலகளாவிய தேவை மற்றும் தேசிய ஏற்றுமதி முன்னுரிமைகளுடன் இணங்கிச் செல்லும் சூழல் நட்பு தயாரிப்புகள், இயற்கை மற்றும் உலர்த்தப்பட்ட உணவுகள் மற்றும் ஆயுர்வேத மூலிகை தயாரிப்புகள் போன்ற உயர் பெறுமதி கூட்டப்பட்ட துறைகளுக்கு விசேட முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

ஏற்றுமதியாளர்களை நேரடியாகச் சந்தித்தல் மற்றும் விரைவான கடன் அனுமதி செயல்முறைகள் மூலம் ரூ. 700.0 மில்லியனுக்கும் அதிகமான புதிய ஏற்றுமதி வசதிகள் மற்றும் கடன்கள் வழங்கப்பட்டன. இந்தத் தலையீடுகள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் தங்களது உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், நடைமுறை மூலதனத்தை மேம்படுத்தவும் உதவின. இந்த ஆண்டில் வசதிப்படுத்தப்பட்ட ஏற்றுமதி பணம் அனுப்பல்கள் குறிப்பிடத்தக்க உயர்வை எட்டியுள்ளன, இது வெளிநாட்டு நாணய வரவுக்கு இந்த முயற்சிகளின் பங்களிப்பைப் பிரதிபலிக்கிறது.

தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் உயர்தர சேவை வழங்கலை உறுதி செய்யும் வகையில், கட்டமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள் மூலம் ஊழியர்களின் திறன்களை வங்கி மேம்படுத்தியது. அத்துடன், பரிவர்த்தனை வினைத்திறன் மற்றும் வாடிக்கையாளர் வசதியை மேம்படுத்துவதற்காக, noc வர்த்தக வழிமுறையின் பயன்பாடு அதிகளவில் ஊக்குவிக்கப்பட்டது.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் முக்கிய அமைச்சின் பங்குதாரர்களுடன் இணைந்து நடத்தப்பட்ட வர்த்தக கண்காட்சிகள் மற்றும் பட்டறைகள் வங்கியின் வர்த்தக நாமத்தின் செல்வாக்கை மேலும் வலுப்படுத்தின. இம்முயற்சிகள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செயலாக்க வினைத்திறனை மேம்படுத்தியதுடன், வாடிக்கையாளர்களின் விநியோகச் சங்கிலிகளுடனான ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்தின. மேலும், முதலீட்டுச் சபை அங்கீகாரம் பெற்ற மற்றும் சர்வதேச அளவில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கான வெளிநாட்டு வர்த்தகச் சேவைகளையும் இவை வலுப்படுத்தின.

2025 ஆம் ஆண்டில், ஏனைய வங்கிகள் மீது வரையப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றுமதி உண்டியல்களைத் தள்ளுபடி செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டமையானது, ஏற்றுமதியாளர்களின் பணப்புழக்க அணுகலை மேம்படுத்தியது. இது முழுமையான வர்த்தக நிதித் தீர்வுகளை வழங்குவதில் வங்கியின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தியது.

இத்தகைய ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம், Export Circle ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சியின் மூலோபாய உந்துசக்தியாகத் தனது பங்கினை வலுப்படுத்தியுள்ளது. வங்கியின் இலக்கு வைக்கப்பட்ட முயற்சிகள் அதன் ஏற்றுமதி பட்டியலை விரிவுபடுத்துவதற்கும், செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கும் மற்றும் இலங்கையின் சர்வதேச வர்த்தகத்தின் முக்கிய ஊக்கியாக அதன் நிலையை உறுதிப்படுத்துவதற்கும் பங்களித்தன.

## அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுடனான உறவுகள்

வலு, போக்குவரத்து, பொதுப் பயன்பாடுகள் மற்றும் பிற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் இயங்கும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள், இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக உள்கட்டமைப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த நிறுவனங்களின் நீண்டகால நிதிப் பங்காளராக, அவற்றின் செயல்பாட்டுத் தொடர்ச்சி மற்றும் மூலோபாய வளர்ச்சிக்கு வங்கி ஆதரவளித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வழங்கிய வங்கிச் சட்ட வழிகாட்டல்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள சமீபத்திய திருத்தங்கள், அரசாங்கம் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுடனான கடன் வெளிப்பாடுகளை நிர்வகிக்கும் ஒழுங்குமுறை மற்றும் ஆளுகை கட்டமைப்பை வலுப்படுத்துவதில் ஒரு முக்கியமான படியாகும். இத்தகைய நடவடிக்கைகள் நிதி அமைப்பானது வெளிப்படைத்தன்மை, மீள்திறன் மற்றும் விவேகமான ஒழுக்கம் ஆகியவற்றை நோக்கித் தொடர்ந்து பரிணமிப்பதைக் காட்டுகின்றன.

இந்தத் திருத்தப்பட்ட ஒழுங்குமுறைச் சட்டக் கட்டமைப்பு, நிதியியல் ஏற்பாடுகளை வடிவமைப்பதற்கான தெளிவான அளவுருக்களை வழங்குகிறது குறிப்பாகக் கடன் பெறுபவர் அரசாங்கமாகவோ அல்லது அரச நிறுவனமாகவோ இருக்கும் சந்தர்ப்பங்களில் இது முக்கியத்துவம் பெறுகிறது. இச்சூழலில், வலுப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைச் சூழலுக்கு இணங்கக்கூடிய விவேகமான இடர் மேலாண்மை அணுகுமுறைகளையும், கட்டமைக்கப்பட்ட நிதியியல் தீர்வுகளையும் பின்பற்றுவதற்கு வங்கிகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

நாட்டின் பொருளாதார மற்றும் சமூகக் உள்கட்டமைப்பிற்கு அவசியமான முக்கிய துறைகளைத் தக்கவைப்பதில் அரச நிறுவனங்கள் மிக முக்கிய பங்காற்றுகின்றன.

தேசிய வளர்ச்சி, பொருளாதாரத் தொடர்ச்சி மற்றும் பொதுச் சேவை வழங்கலுக்கு அவசியமான எரிசக்தி, நீர், சுகாதாரம், கட்டுமானம் மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட முக்கிய துறைகளைத் தக்கவைப்பதில் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவற்றின் மூலோபாய முக்கியத்துவத்தை அங்கீகரித்து, ஒழுங்குமுறை கட்டமைப்பிற்கு உட்பட்டு நன்கு கட்டமைக்கப்பட்ட, பொறுப்பான மற்றும் நிலையான நிதித் தீர்வுகளின் மூலம் பொருளாதாரத்தின் இந்த அத்தியாவசியப் பிரிவுகளுக்கு ஆதரவளிக்க வங்கி உறுதிபூண்டுள்ளது.

செயல்பாட்டுத் திறன் மற்றும் திரவத்தன்மை முகாமைத்துவத்தை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட SOE Fuel Card போன்ற புதுமையான முயற்சிகள் உட்பட, அரசு நிறுவனங்களுக்குத் தனிப்பயனாக்கப்பட்ட நிதித் தீர்வுகளை வங்கி வழங்கியது. சில அரசு நிறுவனங்களை மறுசீரமைப்பதில் வங்கி தீவிர பங்கு வகித்தமை, பொதுத்துறையில் நிறுவனச் செயல்திறனை வலுப்படுத்துவதற்கும் நிலையான வளர்ச்சியை ஆதரிப்பதற்கும் அதன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது.

இலங்கை தனது நிதிக் குறியீடுகளின் சீராக்கம் மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தச் செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வரும் நிலையில், வங்கி இந்த வலுப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைச் சூழலுக்குள் ஆக்கபூர்வமாகச் செயற்படும். அதேவேளையில், பொருளாதார உறுதிப்பாடு மற்றும் நீண்டகால தேசிய முன்னேற்றத்தை உந்தித் தள்ளும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த துறைகளுக்குத் தனது ஆதரவைத் தொடர்ந்து வழங்கும்.

## எமது எதிர்கால இலக்கு

### வாய்ப்புகள்

- முதலீட்டுச் சுழற்சிகள் வேகம் பெறுவதால், தனியார் துறை கடன் தேவையில் படிப்படியான மீட்சி.
- சுற்றுலாப் பயணிகளின் வருகையில் நிலவும் தொடர்ச்சியான வேகம் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள்.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, கைத்தொழில் மற்றும் முன்னுரிமைத் துறை திட்டங்களுக்கான நிதியுதவி வளர்ச்சி

### இடர்கள்

- உலகளாவிய தளம்பல்கள் புவிசார் அரசியல் பதற்றங்கள், வரி விதிப்புகள்/வர்த்தகத் தடைகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி மாற்றங்கள் வர்த்தக ஓட்டங்களையும் கடன் பெறுபவர்களின் நம்பிக்கையையும் பாதிக்கலாம்.
- கடன் விரிவாக்கத்தைப் பாதிக்கும் பெரிய அளவிலான கூட்டாண்மைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் நிலவும் மந்தநிலை.
- அரச துறை மற்றும் பெரிய கடன் வெளிப்பாடு சொத்துப்பட்டியல்களில் நிலவும் செறிவு இடரை நிர்வகித்தல்

## முன்னோக்கிய மூலோபாய மாற்றம்

### குறுகிய காலம்

- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் ஏற்றுமதி சார்ந்த வணிகங்களில் அதிக கவனம் செலுத்துதல்
- செயலாக்க நேரம் மற்றும் சேவைத் திறனை மேம்படுத்த கடன் மேலாண்மை தானியங்கி முறையை துரிதப்படுத்துதல்.
- கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்குப் பண முகாமைத்துவ தீர்வு அறிமுகப்படுத்துதல்
- மாகாண மட்டத்திலான ஏற்றுமதி மன்றங்கள் மூலம் Export Circle சேவைகளை விரிவுபடுத்துதல்

### மத்திய முதல் நீண்ட காலம்

- வளர்ந்து வரும் ஏற்றுமதியாளர்களுடன் ஈடுபாட்டை ஆழப்படுத்துவதற்கு Export Circle கட்டமைப்பை விரிவுபடுத்துதல் அதேவேளையில் கட்டமைக்கப்பட்ட வர்த்தக ஆலோசனை மற்றும் எல்லை கடந்த வசதியளிக்கும் திறன்களை மேம்படுத்துதல்
- மூலதன ஒதுக்கீட்டைத் தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் நிலையான பொருளாதார மாற்றத்துடன் இணைத்து, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் மூலோபாய உற்பத்தித் திட்ட நிதியுதவியில் தீவிர கவனம் செலுத்துதல்
- இலங்கை வங்கியை ஒரு பிராந்திய கூட்டாண்மை வங்கிப் பங்காளராக நிலைநிறுத்த, கரைகடந்த வர்த்தக மற்றும் கருவூலத் திறன்களை மேம்படுத்துதல்.
- நாட்டின் மூலோபாய முதலீட்டு நகர்வுகள் மூலம் வணிக வாய்ப்புகளை அதிகரித்தல்.

# வணிகப் பிரிவுகளின் செயலாற்றம்

## சர்வதேசம், திறைசேரி, முதலீடுகள் மற்றும் கரைகடந்த செயற்பாடுகள்

**இந்தக் கூட்டமைப்பு வங்கியின் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள், திரவத்தன்மை மற்றும் நிதி மேலாண்மை ஆகியவற்றைக் கையாள்வதுடன், நிதி மீள்திறனை வலுப்படுத்தும் அதேவேளையில் மூலோபாய முதலீடுகளை முன்னெடுக்கிறது. இது வங்கியின் சர்வதேச இருப்பை விரிவுபடுத்தும் வெளிநாட்டுக் கிளைகளின் வலையமைப்பையும் மேற்பார்வை செய்கிறது. இச்செயல்பாடுகள் ஒன்றிணைந்து செயல்பாட்டுச் சிறப்பு மற்றும் நிலையான பெறுமதி உருவாக்கத்தை உறுதி செய்கின்றன.**

### முக்கிய பலங்கள்

- அரச பிணையங்கள் மற்றும் நிலையான கடன்-வைப்பு விகிதங்களால் ஆதரிக்கப்படும் வலுவான கையிருப்புகளுடன் கூடிய ஆரோக்கியமான திரவத்தன்மை.
- விவேகமான முதலீடு மற்றும் இடர் தடுப்பு மூலோபாயங்கள்.
- மிகப்பெரிய சந்தைப் பங்கைக் கொண்ட பணப்பரிமாற்ற சந்தை முன்னணியாளர்.
- செலவு குறைந்த எல்லை கடந்த பரிவர்த்தனைகளை எளிதாக்க 800-க்கும் மேற்பட்ட சர்வதேச வங்கிகளுடனான உலகளாவிய இணைப்பு.
- வசதியான மற்றும் தடையற்ற வர்த்தகக் கொடுப்பனவுகளை (Trade settlements) வசதிப்படுத்தல்.
- அடுக்கு II மூலதனத்தை திரட்டுவதன் மூலம் நிரூபிக்கப்பட்ட முதலீட்டு வங்கியியல் வலிமை:
  - o ரூ. 15.0 பில்லியன் பெறுமதியான பாசெல் III இணக்கமான தொகுதிக்கடன்கள்.
  - o ரூ. 20.0 பில்லியன் பெறுமதியான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த BASEL III இணக்கமான நிலைத்தன்மை முறிகள்:
- மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் தீர்வுகள் மூலம் வேகமான மற்றும் எளிதில் அணுகக்கூடிய வாடிக்கையாளர் மைய வங்கிச் சேவை.

### வெளியீடுகள்

- திரவத்தன்மை முகாமைத்துவம்
- சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவம்
- முதலீட்டு வங்கிச் சேவைகள்
- வைப்புகள் மற்றும் உள்வரும் பணப்பரிமாற்றங்கள்
- திறைசேரி தயாரிப்புகள்
- வெளிநாட்டுச் செயல்பாடுகள்

### தொழிற்பாட்டுச் சூழல்

முன்னைய ஆண்டில் எட்டப்பட்ட உறுதித்தன்மையைத் தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டு இலங்கையின் நிதித்துறைக்கு ஒரு ஒருங்கிணைப்பு மற்றும் அளவிடப்பட்ட விரிவாக்கக் காலமாக அமைந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் கீழ் பொருளாதார சீர்திருத்தங்கள் வேகம் பெற்ற நிலையில், செயல்பாட்டுச் சூழலானது மீட்சி நிலையிலிருந்து வளர்ச்சி நிலையை நோக்கி நகர்ந்தது. இது மேம்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கை, குறைந்து வரும் வெளித்துறை அழுத்தங்கள் மற்றும் வலுவடைந்து வரும் பேரண்டப்பொருளாதார அடிப்படைகளால் ஆதரிக்கப்பட்டது.

எனவே, பொருளாதார நிலப்பரப்பானது வெளித்துறை மீட்சி மற்றும் கட்டமைப்பு ரீதியான பாதிப்புகளுக்கு இடையிலான ஒரு நுணுக்கமான சமநிலையால் தொடர்ந்து வடிவமைக்கப்படுகிறது. செலாவணி வீதமானது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் சந்தையினால் தீர்மானிக்கப்படும் ஒன்றாகத் தொடர்கிறது. குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்குப் பிறகு, இலங்கை ரூபா ஒப்பீட்டளவில் உறுதித்தன்மையைக் காட்டிய போதிலும், இறக்குமதி தேவை மற்றும் உலகளாவிய டொலரின் வலிமை ஆகியவற்றிற்கு ஏற்ப அது உணர்திறன் மிக்கதாகவே உள்ளது.

பல்முனை நிறுவனங்களின் நிதி வரவு மற்றும் வலுவான நடப்புக் கணக்குச் செயல்பாடு ஆகியவற்றால் வெளிநாட்டுச் செலாவணி கையிருப்பு நெருக்கடி நிலையிலிருந்து முன்னேறியுள்ளது. இருப்பினும், கையிருப்பின் போதுமான தன்மையைப் பேணுவது ஒரு மூலோபாய முன்னுரிமையாகத் தொடர்கிறது. வெளிநாட்டுத் தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையின் ஒரு முக்கியமான தூணாக மீண்டும் உருவெடுத்துள்ளன. சுற்றுலா வருவாயின் மீட்சியுடன் இணைந்து, இந்தப் பணப்பரிமாற்றங்கள் சந்தை நம்பிக்கையை மேம்படுத்தி, கையிருப்பு சேமிப்பிற்கு ஆதரவளித்ததுடன் நாணயத்தின் மீதான அழுத்தத்தைக் குறைத்துள்ளன.

இச்சூழலில், திறைசேரி மற்றும் சர்வதேச வங்கிச் செயல்பாடுகள், வெளிநாட்டுச் செலாவணி பணப்புழக்க மீள்திறன், விவேகமான இருப்புநிலை முகாமைத்துவம், சந்தை ஏற்ற இறக்கங்களின் தீவிர கண்காணிப்பு மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட வங்கி உறவுகளுக்கு முன்னுரிமை அளிக்கும் ஒரு கட்டமைப்பிற்குள் இயங்குகின்றன. நிதியளிப்புச் செலவுகளை நிர்வகித்தல், அழுத்தமான சூழ்நிலைகளில் உயிர்வாழும் கால எல்லையைப் பாதுகாத்தல் மற்றும் வலுவான இடர் ஆளுகையைப் பேணுதல் ஆகியவை முன்னோக்கிச் செல்லும் திரவத்தன்மை முகாமைத்துவத்துக்கு மையமாக உள்ளன.

## மூலோபாயத்திற்கு எதிரான செயல்திறன்

| மூலோபாயத் தூண் | இடர்கள் | வாய்ப்புகள் | மூலோபாயப் பதிலிறுப்பு | மூலோபாய விளைவு |
|---|---|---|---|---|
| | • உலகளாவிய சந்தையின் பாதகமான நகர்வுகள்<br>• ஒழுங்குமுறை கட்டமைப்புகள் மற்றும் செயல்பாட்டுச் சிக்கல்களைக் கையாள்வதில் உள்ள சவால்கள்<br>• காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் இடையூறுகள் | • சந்தை நிலைமைகளில் உறுதிப்பாடு<br>• முறையான வழிகள் ஊடாக பணவனுப்பல் உட்பாய்ச்சல்களுக்கான அதிகரித்த கேள்வி<br>• சர்வதேச உறவுகள் மற்றும் நிதி வரவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்<br>• நிலைத்தன்மை தொடர்பான கடன் பத்திரங்களுக்கான அதிக கேள்வி<br>• வெளிநாட்டுச் சந்தைகளில் ஏற்படும் வளர்ச்சிகளின் கீழ் உள்ள வாய்ப்புகள் | • வட்டி விகிதச் சுழற்சிகள் மற்றும் நிதியளிப்பு இயக்கவியலுக்கு ஏற்ப ஐந்தொகை மூலோபாயங்களை அமைப்பதன் மூலம் ஒழுக்கமான சொத்து-பொறுப்பு மேம்படுத்தல்<br>• நெறிப்படுத்தப்பட்ட செயல்பாடுகள், டிஜிட்டல் மாற்றம் மற்றும் வலுவான ஆளுகை<br>• சந்தை நிலைமைகள், சொத்துப்பொறுப்புக் கூற்றின் அளவு மற்றும் இடர் எடுக்கும் திறன் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் எல்லைக் கட்டமைப்புகள் மீளாய்வு செய்யப்பட்டு மீள்சீரமைக்கப்பட்டன.<br>• நிதியளிப்பு மூலோபாயத்தில் நிலைத்தன்மைக் கொள்கைகளை ஒருங்கிணைத்தல்.<br>• தரப்படுத்தப்பட்ட செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள் மூலம் வெளிநாட்டு கிளைகளின் செயல்திறனை மேம்படுத்துதல். | • கடினமான வட்டி விகிதச் சூழலுக்கு மத்தியில் தேறிய வட்டி இலாப வரம்பு மேம்படுத்தப்பட்டது<br>• நாணயமாற்று விகித ஏற்ற இறக்கங்களுடன் தொடர்புடைய இடர்கள் வெற்றிகரமாக நிர்வகிக்கப்பட்டன<br>• ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு மேலாக வலுவான மூலதனக் கையிருப்புகள் பேணப்பட்டன<br>• ரூ. 20.0 பில்லியன் பெறுமதியான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த BASEL III இணக்கமான நிலைத்தன்மை முறிகளை வெளியிட்டது. |
| | • அதிகரித்த போட்டித் தன்மை | • புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் வேகமான மற்றும் திறமையான உத்தியோகபூர்வ வழிகள் ஊடாகப் பணம் அனுப்பக் காட்டும் ஆர்வம்<br>• முதலீட்டாளர் நம்பிக்கையை வலுப்படுத்துதல்<br>• புதுமையான முதலீடு மற்றும் திறைசேரி தயாரிப்புகள் மற்றும் சேவைகள் | • முன்மதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கட்டமைக்க வங்கிகளுக்கு இடையிலான பிரிவுகளுடன் அதிக ஒத்துழைப்பு<br>• பணப்பரிமாற்றக் கட்டமைப்பை வலுப்படுத்துதல்<br>• முதலீட்டு வங்கிச் சேவைகளை மேம்படுத்துதல்<br>• வலுவடைந்த கரைகடந்த வாடிக்கையாளர் உறவுகள் | • உள்வரும் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களின் அளவு மற்றும் பெறுமதியில் அதிகரிப்பு<br>• மாலைதீவு, சீசெல்ஸ் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் கடன் வசதிகள் விரிவாக்கப்பட்டன<br>• வாடிக்கையாளர் ஈடுபாட்டு நடவடிக்கைகள் மூலம் வலுவான உறவுகள் வளர்க்கப்பட்டன |
| | • வெளிநாட்டுச் சூழல்களில் IT திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள சவால்கள்<br>• இணையப் பாதுகாப்பு மற்றும் தரவுப் பாதுகாப்பு இடர்கள் | • முடிவெடுப்பதற்கு AI மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வுகளைப் பயன்படுத்துதல்<br>• டிஜிட்டல் மயமாக்கலுக்கான வாடிக்கையாளர்களின் அதிக தழுவல் | • டிஜிட்டல் மயமாக்கலை வாடிக்கையாளர்கள் அதிகளவில் ஏற்றுக்கொள்வது<br>• திறைசேரி மேலாண்மை அமைப்பு மற்றும் நிகழ்நேரத் தரவுப்பலகைகளை அறிமுகப்படுத்துதல்<br>• வெளிநாட்டுக் கிளைகளில் சேவை வழங்கலை மேம்படுத்த கணினி தரமுயர்த்தல்கள் | • மேம்பட்ட செயல்திறன், இடர் மேற்பார்வை மற்றும் சரியான நேரத்திலான திரைசேரி நுண்ணறிவுகள்<br>• 'Smart Remit Mobile App' அறிமுகப்படுத்தப்பட்டது<br>• சென்னை - இந்தியாவில் உள்ள ஏனைய வங்கிகளுடனான நிலையான கட்டளை நடைமுறையைத் தானியங்கிமயமாக்குதல்<br>• மாலைதீவு - FTI முறைமையின் ஊடாக உள்வரும் பணப் பரிமாற்றங்களைத் தானியங்கி மயமாக்குதல்<br>• மாலைதீவு மற்றும் சீஷெல்ஸ் கிளைகளுக்கான விரிவான பணத் தூய்மையாக்கல் எதிர்ப்பு (AML) மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுக்கும் (CFT) முறைமைத் தீர்வுகள். |
| | • பாதகமான உள்ளூர் மற்றும் உலகளாவிய பொருளாதாரச் சூழல்<br>• கடன் மற்றும் நிதி வரவுகளுக்கான எல்லை கடந்த கட்டுப்பாடுகள் | • புலம்பெயர்ந்த தொழிலாளர் மற்றும் உயர் நிகர சொத்து மதிப்புள்ள பிரிவுகளில் கடன் வளர்ச்சி<br>• கரைகடந்த கடன் சொத்துப்பட்டியலின் விரிவாக்கம் | • புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் உயர் நிகர சொத்து மதிப்புள்ள வாடிக்கையாளர்களுக்கான கடன் வசதிகளை விரிவுபடுத்துதல்<br>• மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் சூழலமைப்பு பணப் பரிமாற்றம்<br>• வெளிநாட்டுக் கிளைகளில் கட்டம் 3 கடன்களின் கண்காணிப்பை வலுப்படுத்துதல் | • புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக 5,000-க்கும் மேற்பட்ட வெளிநாடு செல்வதற்கு முன்னரான கடன்கள் வழங்கப்பட்டன<br>• ஒட்டுமொத்த கடன் சொத்துப்பட்டியலில் வளர்ச்சி<br>• வெளிநாட்டுக் கிளைகளில் கட்டம் 3 கடன் சொத்துப்பட்டியல் குறைப்பு |

# வணிகப் பிரிவுகளின் செயலாற்றம்

| மூலோபாயத் தூண் | இடர்கள் | வாய்ப்புகள் | மூலோபாயப் பதிலிறுப்பு | மூலோபாய விளைவு |
|---|---|---|---|---|
| | • திறமையாளர்களைத் தக்கவைத்தல் மற்றும் ஈர்த்தல் | • உயர் தொழில்நுட்ப மற்றும் நிபுணத்துவ மனித வளங்களின் இருப்பு | • ஊழியர்களின் திறன்களை மேம்படுத்தவும் தகுதிகளை வளர்க்கவும் பிரத்யேகப் பயிற்சிகளை வழங்குதல்<br>• வழக்கமான உற்பத்தித்திறன் மேம்பாட்டு முயற்சிகள் | • வெளிநாட்டுக் கிளைகளில் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது<br>• இலங்கை வங்கி குழுமத்தின் நிபுணத்துவம் மற்றும் திறன்கள் மேம்படுத்தப்பட்டன |

## சர்வதேசப் பிரிவு

வங்கியின் சர்வதேசப் பிரிவானது, வெளிநாட்டு நாணய வரவைப் பாதுகாத்தல், உலகளாவிய நிதி இணைப்பை வலுப்படுத்துதல் மற்றும் தடையற்ற எல்லை கடந்த பரிவர்த்தனைகளை எளிதாக்குதல் ஆகியவற்றின் மூலம் தேசிய இலக்குகளை முன்னெடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இப்பிரிவானது வெளிநாட்டு நாணயப் பணப்புழக்கத்தின் சீரான இருப்பை உறுதி செய்கிறது இது வங்கியின் செயல்பாட்டு மீள்திறனுக்கு மட்டுமல்லாமல் இலங்கையின் வெளித்துறை ஸ்திரத்தன்மைக்கும் மிக அவசியமானது.

இலங்கை வங்கி, உலகம் முழுவதும் 800-க்கும் மேற்பட்ட தொடர்பாளர் வங்கி வலையமைப்புக்களைக் கொண்டு நாட்டின் மிகப்பெரிய சர்வதேச வங்கி வலையமைப்பைப் பேணி வருகின்றது. இந்த விரிவான வலையமைப்பானது இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் தங்களது சர்வதேசப் பரிவர்த்தனைகளைச் சுமுகமாக மேற்கொள்ளவும், தேசிய வர்த்தக ஓட்டங்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி சுழற்சியை வலுப்படுத்தவும் உதவுகிறது.வணிக நோக்கங்களுக்கு அப்பால், வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு ஆதரவளிக்க வங்கி ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் உள்ளது. 11 நாடுகளில் 30-க்கும் மேற்பட்ட வணிக மேம்பாட்டு அதிகாரிகள் பணியமர்த்தப்பட்டுள்ள நிலையில், சர்வதேசப் பிரிவானது புலம்பெயர்ந்தோர் சமூகத்திடையே நிதி உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதுடன், ஆலோசனை ஆதரவையும் பொறுப்பான நிதி மேலாண்மை நடைமுறைகளையும் ஊக்குவிக்கிறது.

2025 ஆம் ஆண்டில், உள்வரும் பணப்பரிமாற்றங்களில் குறிப்பிடத்தக்க சந்தைப் பங்கைப் பெற்று வங்கி தனது முன்னிலையை உறுதிப்படுத்தியது. இந்தச் செயல்பாடு, உலகம் முழுவதும் உள்ள இலங்கையர்கள் இலங்கை வங்கி மீது வைத்துள்ள நம்பிக்கையை அடிக்கோடிட்டுக் காட்டுவதுடன், வங்கியின் இலக்கு வைக்கப்பட்ட சந்தை மூலோபாயங்கள் மற்றும் சேவை மேம்பாடுகளின் வினைத்திறனையும் பிரதிபலிக்கிறது.

இந்த ஆண்டில், சர்வதேசப் பிரிவானது தனது உலகளாவிய தடயத்தை விரிவுபடுத்தியதுடன், முன்னுரிமை அளிக்கப்படும் பிராந்தியங்கள் முழுவதும் பணப் பரிமாற்ற வழிமுறைகளை பல்வகைப்படுத்தியது. Smart Remit மொபைல் தளம் மூலம் டிஜிட்டல் பணப்பரிமாற்றத் திறன்களை மேம்படுத்தியமை, வாடிக்கையாளர்கள் சர்வதேச அட்டை வலையமைப்புகள் ஊடாக எளிதாகப் பணம் அனுப்ப வழிவகுத்தது. மேலும், பணப்பரிமாற்றச் செயலாக்கம் மற்றும் வர்த்தகக் கொடுப்பனவு செயல்பாடுகளின் தானியங்கி முறைமை செயலாக்க நேரத்தைக் குறைத்ததுடன் துல்லியத்தன்மையையும் அதிகரித்தது. அதற்கு இணையாக, சர்வதேசப் பிரிவானது பல நாணயப் பயண அட்டைகள் தலைமையகத்தில் உள்ள பயணச் சேவைப் பிரிவு மற்றும் இலங்கையின் சர்வதேச விமான நிலையங்களில் உள்ள நாணய மாற்று நிலையங்கள் ஆகியவற்றின் மூலம் வாடிக்கையாளர் வசதிகளை மேம்படுத்துகிறது.

வாடிக்கையாளர் ஈடுபாட்டை வலுப்படுத்தும் நோக்கில் பிட-பிட ரட்ட தேகி – சீசன் 4 போன்ற ஊக்கத்தொகைத் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் இணைந்து நடத்தப்படும் 'BOC ரண் கஹவனு', "எதெர மெதெர" போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் உத்தியோகபூர்வ வழிகளைப் பயன்படுத்துவது ஊக்குவிக்கப்பட்டது.

வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட நிதிப் பங்காளர் என்ற வகையில், புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு என பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட விரிவான நிதித் தீர்வுகளை வங்கி தொடர்ந்து வழங்கியது. வெளிநாடு செல்வதற்கு முன்னர் வழங்கப்படும் 5,000-க்கும் மேற்பட்ட கடன் வசதிகள், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் வங்கியின் ஆதரவை உறுதி செய்தன. இந்தக் கட்டமைக்கப்பட்ட வசதிகள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தங்களின் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு வலுவூட்டுவதுடன், இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கவும் வழிவகுக்கின்றன.

சர்வதேசப் பிரிவின் பிரத்யேக வாடிக்கையாளர் சேவை அலகான Foreign Circle, இந்த ஆண்டில் "எனது இலங்கை வைப்புத் திட்டத்தை" மீளுருவாக்கம் செய்ததன் மூலமும், வாடிக்கையாளர் விசாரணைகளை உடனுக்குடன் கையாள்வதன் மூலமும், புதிய வாடிக்கையாளர்களை இணைத்துக் கொள்வதன் மூலமும் தனது சேவைச் சிறப்பை மேலும் மேம்படுத்தியது. துரிதமக்கய மற்றும் உறவுமுறை சார்ந்த ஈடுபாட்டின் மூலம், உலகெங்கிலும் உள்ள இலங்கையர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த வங்கி அனுபவத்தை வழங்குவதற்கான இலங்கை வங்கியின் அர்ப்பணிப்பை Foreign Circle மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

## திறைசேரி

வங்கியின் நிதி ஸ்திரத்தன்மை, திரவத்தன்மை வலிமை மற்றும் இடர் மீள்திறனைப் பாதுகாப்பதில் திறைசேரி பிரிவு முக்கிய பங்கு வகிக்கிறது. 2025 ஆம் ஆண்டில், படிப்படியாக ஸ்திரமடைந்து வரும் பேரண்டப்பொருளாதார நிலப்பரப்பிற்கு மத்தியில், தேசிய பொருளாதார முன்னுரிமைகளை ஆதரிக்கும் அதேவேளையில் இருப்புநிலையை மேம்படுத்துவதில் திறைசேரி பிரிவு ஒரு ஊக்கியாகச் செயல்பட்டது.

இலங்கை மத்திய வங்கியின் இணக்கமான கொள்கைக் கட்டமைப்பிற்குள் இயங்கும் திறைசேரியானது, நிலையான மற்றும் மிதக்கும் வட்டி விகிதக் கருவிகளுக்கு இடையிலான மூலோபாய மாற்றங்கள் மூலம் சொத்து விளைச்சலையும் நிதியளிப்புச் செலவுகளையும் சுறுசுறுப்பாக நிர்வகித்தது. வட்டி உணர்திறன் கொண்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் மூலோபாய மறுவிலையிடல், நிகர வட்டி வருமானத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு வழிவகுத்தது. சொத்து மற்றும் பொறுப்புக் குழுவின் மேற்பார்வையின் கீழ், வட்டி விகித வெளிப்பாடுகள் இடைவெளி பகுப்பாய்வு மற்றும் கால அளவு கண்காணிப்பு மூலம் தொடர்ந்து மதிப்பிடப்பட்டு, வட்டிச் சுழற்சிகளுக்கு மத்தியில் ஒழுக்கமான இருப்புநிலை நிலைப்படுத்தல் உறுதி செய்யப்பட்டது.

வங்கி தனது மூலதன விகிதங்களை ஒழுங்குமுறை வரம்புகளுக்கு மேல் வசதியாகப் பேணியது இது வளர்ச்சியின் வேகத்தைத் தக்கவைக்கும் அதேவேளையில் அதிர்ச்சிகளைத் தாங்கும் திறனை வலுப்படுத்தியது. திரவத்தன்மை கையிருப்புகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் இரண்டிலும் வலுவாக இருந்தன, இது சந்தை ஏற்ற இறக்கங்களின் போதும் செயல்பாட்டு நிலைத்தன்மை மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கையைப் பாதுகாத்தது. முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் நாணய அசைவுகளில் காணப்பட்ட ஒப்பீட்டளவிலான உறுதிப்பாடு, திறைசேரியை மிகவும் வினைத்திறனுடன் மேம்படுத்துவதற்கு வழிவகுத்தது. அதேவேளையில், வெளிநாட்டு நாணயப் பணப்புழக்கம் மற்றும் வெளிநாட்டுத் துறை நிலைத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான தேசிய முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கப்பட்டது.

ஆண்டு முழுவதும், திறைசேரியானது சொத்து-பொறுப்பு மேம்படுத்தலில் தீவிர கவனம் செலுத்தியது. திரவத்தன்மை காப்பு விகிதம் மற்றும் தேறிய நிலையான நிதியளிப்பு விகிதம் ஆகியவை ஒழுங்குமுறைத் தேவைகளை விட அதிகமாக இருந்தன. இது விவேகமான மேலாண்மை மற்றும் மீள்திறன் கொண்ட திரவத்தனமை முகாமைத்துவத்தைப் பிரதிபலிக்கிறது. இந்த வலுப்படுத்தப்பட்ட அடித்தளமானது, முன்னுரிமை அளிக்கப்படும் பொருளாதாரத் துறைகளில் அளவிடப்பட்ட கடன் விரிவாக்கத்திற்கு ஆதரவளித்தது.

அரசாங்கப் பிணையங்கள் மற்றும் மறுவிற்பனை உடன்படிக்கைகளின் கீழ் உள்ள பிணையங்களிலான முதலீடுகள், சொத்து வளர்ச்சி மற்றும் பணப்புழக்க வலிமையைத் தொடர்ந்து உறுதிப்படுத்தின. வட்டி விகித இடரைக் குறைக்கும் அதேவேளையில் விளைவை மேம்படுத்த, குறுகிய மற்றும் நடுத்தர கால கருவிகளுக்கு இடையில் கால அளவு கவனமாகச் சமநிலைப்படுத்தப்பட்டது. மாற்று விகித ஏற்ற இறக்கங்களை நிர்வகிக்கவும் பரிவர்த்தனை ஓட்டங்களைப் பாதுகாக்கவும் முன்னோக்கிய ஒப்பந்தங்கள் மற்றும் நாணய சுவப்கள் ஆகியவை தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டன இது சர்வதேசக் கடப்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வங்கியின் திறனை உறுதி செய்தது.இயற்கையான இடர் காப்புறுதியை அடைவதற்கும், கடன் புதுப்பித்தல் அபாயத்தைக் குறைப்பதற்கும், வெளிநாட்டு நாணயச் சொத்து வளர்ச்சிக்கு ஏற்பத் தெரிவு செய்யப்பட்ட சந்தை நிதியளிப்புடன் கூடிய நிலையான வாடிக்கையாளர் வைப்புத் தளத்தின் அடிப்படையில் நிதியாதார மேம்படுத்தல் அமைந்திருந்தது.

வட்டி விகிதம், அந்நியச் செலாவணி, பங்குச் சந்தை மற்றும் கடன் சந்தைகள் ஆகியவற்றின் இடர் வெளிப்பாடுகளை ஒரு விரிவான சந்தை இடர் கட்டமைப்பு நிர்வகித்தது. இக்கட்டமைப்பானது அழுத்தச் சோதனை , இடர் மதிப்பீடு கண்காணிப்பு, இழப்புத் தடுப்பு வரம்புகள் மற்றும் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இடர் எடுக்கும் அளவுருக்கள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கிறது. திறைசேரி, ஒருங்கிணைந்த இடர் மேலாண்மைத் திணைக்களம் மற்றும் சொத்து பொறுப்புக் குழு ஆகியவற்றிற்கு இடையேயான நெருக்கமான ஒருங்கிணைப்பு, மாறிவரும் மேக்ரோ பொருளாதார மற்றும் ஒழுங்குமுறை நிலைமைகளுக்கு ஏற்ப துரிதமாகச் செயற்பட வழிவகுத்தது.

திறைசேரி, ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவத் திணைக்களம் மற்றும் ALCO ஆகியவற்றிற்கு இடையிலான நெருக்கமான ஒருங்கிணைப்பு, மாறிவரும் பேரண்டப்பொருளாதார மற்றும் ஒழுங்குமுறை நிலைமைகளுக்கு சுறுசுறுப்பான பதில்களை வழங்க உதவியது. இந்த ஆண்டில், மேற்பார்வை மற்றும் முடிவெடுத்தலை மேலும் மேம்படுத்துவதற்காக விரிவான கருவூல மேலாண்மை அமைப்பு மற்றும் நிகழ்நேரத் தரவுப்பலகைகள் (Dashboards) அறிமுகப்படுத்தப்பட்டன.

## முதலீட்டு வங்கிச் சேவை

முதலீட்டு வங்கிப் பிரிவானது புதுமையான நிதித் தீர்வுகளை வழங்குவதில் உறுதியாக இருந்தது. இலங்கையின் மூலதனச் சந்தைகளை ஆழப்படுத்துவதிலும் வங்கியின் நிதி அடித்தளத்தை வலுப்படுத்துவதிலும் இலங்கை வங்கியின் மூலோபாயத் தலைமைத்துவத்தை உறுதிப்படுத்தும் மைல்கல் சாதனைகளை இந்த ஆண்டு பதிவு செய்தது.

இப்பிரிவானது அறங்காவலர்-பாதுகாவலர், செல்வ மேலாண்மை மற்றும் வங்கியின் சொந்த முதலீட்டு நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு பன்முகப்படுத்தப்பட்ட சொத்துப்பட்டியலை நிர்வகிக்கிறது. ஒழுக்கமான ஆலோசனை மற்றும் சொத்துப்பட்டியல் மேலாண்மை மூலோபாயங்களின் ஆதரவுடன் செல்வ மேலாண்மைப் பிரிவுகள் சீரான வளர்ச்சியைப் பதிவு செய்தன. அறங்காவலர் மற்றும் பாதுகாப்பாளர் சேவைகள் ஒரு முக்கிய பலமாகத் தொடர்ந்ததுடன், வாடிக்கையாளர்களின் வலுவான நம்பிக்கையையும் நீண்டகால அதிகார ஆணைகளையும் பிரதிபலித்தன. பங்குகள், கடன்பத்திரங்கள், பிணைகள் மற்றும் யூனிட் ட்ரஸ்ட்கள் ஆகியவற்றிலான தனியுரிமை முதலீடுகள் ஆக்கபூர்வமாக நிர்வகிக்கப்பட்ட அதேவேளையில், முறையான ஆலோசனை மற்றும் சொத்துப்பட்டியல் மேலாண்மை மூலோபாயங்களின் ஆதரவுடன் செல்வ மேலாண்மை சொத்துப்பட்டியல்கள் ஒரு சீரான வளர்ச்சியைப் பதிவு செய்தன.

அதற்கு இணையாக, இப்பிரிவானது நிறுவன நிதி ஆலோசனை உரிமத்தின் ஶ்ரீகீழ் நிறுவன ஆலோசனைச் சேவைகளை வழங்குகிறது. அத்துடன், இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட முதலீட்டு முகாமையாளர் உரிமத்தின் (Investment Manager Licence) கீழ் செல்வ மேலாண்மைச் சொத்துப்பட்டியல்களை ஆக்கபூர்வமாக நிர்வகிப்பதுடன், முறையான சொத்துப்பட்டியல் உருவாக்கம், விவேகமான இடர் மேலாண்மை மற்றும் வாடிக்கையாளர்களுக்கான நிலையான பெறுமதி உருவாக்கம் ஆகியவற்றை உறுதிப்படுத்துகிறது.

இத்துறையின் வளர்ச்சியை முடுக்கிவிடுவதற்காக, நிபுணத்துவம் வாய்ந்த ஒரு விசேட குழுவின் ஆதரவுடன் பிரத்யேகமான செல்வ மேலாண்மை அலகு ஒன்று நிறுவப்பட்டது. இந்த மூலோபாய மேம்பாடு, ஆலோசனைத் திறனை ஆழப்படுத்தியதுடன், அதிக சொத்து மதிப்புள்ள மற்றும் நிறுவன வாடிக்கையாளர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட முதலீட்டுத் தீர்வுகளை விரிவுபடுத்தியது.

இப்பிரிவானது CSE Clear (Pvt) Ltd இன் தொழில்முறை தீர்வக உறுப்பினர் அந்தஸ்தைப் பெற்றதன் மூலம் மூலதனச் சந்தையில் தனது பிரசன்னத்தை மேலும் வலுப்படுத்தியது. இது செயல்பாட்டுத் திறன், செயலாக்கத் திறன்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் ஆகியவற்றை மேம்படுத்தியுள்ளது

# வணிகப் பிரிவுகளின் செயலாற்றம்

2025 ஆம் ஆண்டில் இப்பிரிவின் முக்கிய மைல்கல், Basel III இணக்கமான நிலைத்தன்மை பிணைப்பத்திரத்தை வெளியிட்டதாகும். இது புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, எரிசக்தி திறன், நிலையான நீர் மற்றும் கழிவு மேலாண்மை போன்ற பசுமைத் திட்டங்களுக்கும், விவசாயம், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிதியுதவி, சுகாதாரம், கல்வி மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு போன்ற சமூகத் துறைகளுக்கும் நிதியளிப்பதற்காக வெற்றிகரமாக ரூ. 20.0 பில்லியனைத் திரட்டியது. இதற்கு முன்னதாக, வங்கி ரூ. 15.0 பில்லியன் பெறுமதியான அடுக்கு II பிணையற்ற கடன் பத்திரங்களை வெளியிட்டு தனது மூலதனக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தியது.

இப்பிரிவானது கொழும்பு பங்குச் சந்தை, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றின் ஒழுங்குமுறை கட்டமைப்புகளுக்கு உட்பட்டு, வெளிப்படையான வணிக நடைமுறைகளைப் பேணுவதில் உறுதியாக உள்ளது.

முதலீட்டு தீர்மானங்களில் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகைஇடர் மதிப்பீடுகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. இச்சாதனைகள் மூலதனச் சந்தை மேம்பாட்டில் முதலீட்டு வங்கிப் பிரிவின் முக்கிய பங்கினை மீண்டும் உறுதிப்படுத்துகின்றன. இந்த ஆண்டில், வங்கியின் நிலைபேண்தகு நிதிச் சட்டக்கட்டமைப்பிற்கு இணங்க, நிலைபேண்தகு பிணை வழங்கலை இப்பிரிவு வெற்றிகரமாக வடிவமைத்தது. இது பொறுப்புவாய்ந்த நிதியியலில் வங்கியின் தலைமைத்துவத்தை வெளிப்படுத்தியதுடன், நிலைபேண்தகு மூலதனச் சந்தை மேம்பாட்டிற்கான வங்கியின் அர்ப்பணிப்பையும் மீண்டும் உறுதிப்படுத்தியது.

ஒட்டுமொத்தமாக, இந்தச் சாதனைகள் மூலதனச் சந்தை மேம்பாட்டின் மூலோபாய ஊக்கியாகவும், பங்குதாரர்களின் நீண்டகாலப் பெறுமதி உருவாக்கத்தில் முக்கிய பங்களிப்பாளராகவும் முதலீட்டு வங்கிப் பிரிவின் வகிபாகத்தை மீண்டும் உறுதிப்படுத்துகின்றன.

## வெளிநாட்டு கிளைகள்

இலங்கை வங்கியின் சென்னை, மாலைதீவு மற்றும் சீசெல்ஸ் ஆகிய நாடுகளில் உள்ள மூலோபாய கிளைகள், வங்கியின் சர்வதேச இருப்பை வலுப்படுத்துவதுடன் உலகளாவிய இணைப்பை மேம்படுத்துகின்றன.

### சென்னை கிளை

சென்னை கிளையானது இந்தியாவில் தனது 30 ஆண்டுகாலத் தொடர்ச்சியான செயல்பாடுகளை நிறைவு செய்தது. இதனை முன்னிட்டு சர்வ மத ஆசீர்வாதங்கள், நிலைத்தன்மையை வலியுறுத்தும் மரம் நடுதல் மற்றும் இரத்த தான முகாம் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆண்டுவிழாவைக் குறிக்கும் வகையில் விசேட நிலையான வைப்புத் தயாரிப்புகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

செயல்பாட்டு ரீதியாக, திண்டிவனம் சிப்காட் தொழிற்பேட்டையில் நவீன முந்திரி பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி நிலையத்தை நிறுவுவதற்கான திட்ட நிதியுதவி உள்ளிட்ட முக்கிய தொழில்துறை வளர்ச்சிக்கு இக்கிளை ஆதரவளித்தது. இந்தியாவில் உள்ள ஒரே இலங்கை வங்கிக் கிளை இதுவாகும

இந்த ஆண்டில், கிளை தனது தொழில்நுட்ப மற்றும் செயல்பாட்டுக் கட்டமைப்பை வலுப்படுத்தியது. இதற்காகப் பேரிடர் மீட்புத் தளம் அமுல்படுத்தப்பட்டதுடன், பணமோசடி தடுப்பு மற்றும் கட்டமைக்கப்பட்ட நிதிச் செய்தி முறைமை ஆகியவை மேம்படுத்தப்பட்டன. அத்துடன், இந்தியாவில் உள்ள ஏனைய வங்கிகளுடனான நிலையான கட்டளை நடைமுறை தானியங்கி மயமாக்கப்பட்டதுடன், காசோலைத் தீர்வகச் செயல்பாடுகள் இந்திய ரிசர்வ் வங்கியின் தொடர்ச்சியான காசோலைத் தீர்வகச் சட்டக்கட்டமைப்புடன் இணக்கப்பாடாக்கப்பட்டன.

சென்னை கிளையானது வங்கியின் சர்வதேசச் செயல்பாடுகளின் ஒரு முக்கிய தூணாகவும், ,ந்தியாவில் உள்ள ஒரேயொரு இலங்கை வங்கிப் பிரசன்னமாகவும் உருவெடுத்துள்ளது. மூன்று தசாப்தங்களாக, இது வர்த்தகம், முதலீடு மற்றும் பணப் பரிமாற்றங்களுக்கான நம்பகமான ஊடகமாகச் செயற்பட்டு வருவதுடன், சுமூகமான நிதிப் புழக்கத்திற்கும் ஆழமான பிராந்திய ஒருங்கிணைப்பிற்கும் வழிவகுக்கிறது.

### மாலைதீவு கிளை

2025 ஆம் ஆண்டில், நிலவிய பொருளாதாரச் சூழலுக்கு ஏற்ப, மாலைதீவு கிளை விவேகமான இருப்புநிலை மேலாண்மை நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதில் வைப்புப் பொறுப்புகளுக்கான விலைகளை மறுநிர்ணயம் செய்தல், அரசாங்கப் பிணையங்களின் சொத்துப்பட்டியலை மேம்படுத்துதல் மற்றும் நீண்டகால நிதி ஆதாரங்களை வலுப்படுத்துதல் ஆகியவை உள்ளடங்கும். கடன் வழங்கலானது லாபகரமான சுற்றுலாத்துறை, நிலம் மற்றும் கட்டிட விற்பனை மற்றும் உட்கட்டமைப்புத் திட்டங்களில் கவனம் செலுத்தியதுடன், உல்லாச வைவிடுதி மற்றும் அபிவிருத்தி நிதியளிப்பில் வங்கியின் தலைமைத்துவத்தை மீண்டும் உறுதிப்படுத்தியது.

இந்த ஆண்டில் பல பெரிய அளவிலான உபசரித்தல் மற்றும் வணிக மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியளிக்கப்பட்டது. இது மாலைதீவின் சுற்றுலா சார்ந்த பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பங்காளராக இக்கிளையின் நிலையை மேலும் பலப்படுத்தியது. அதேவேளையில், பணமோசடி தடுப்பு மற்றும் இணக்கப்பாட்டு மேம்பாடுகள், பணப் பரிமாற்றங்களைத் தானியங்கி மயமாக்குதல் மற்றும் சுவிப்ட் இணக்கப்பாடு உள்ளிட்ட முறைமை மேம்பாடுகள், செயல்பாட்டு மீள்திறன் மற்றும் ஒழுங்குமுறை சீரமைப்பை வலுப்படுத்தின.

வெளிநாட்டு நாணயக் கட்டுப்பாடுகள் மற்றும் பணத்தை மீண்டும் தாய்நாட்டிற்கு கொண்டு செல்வதில் சவால்கள் இருந்தபோதிலும், இக்கிளை வலுவான நிதிச் செயல்பாட்டை வெளிப்படுத்தியதுடன், குழுமத்தின் வெளிநாட்டு லாபத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்கியது. புலம்பெயர்ந்த தொழிலாளர் பணப் பரிமாற்றங்கள், வர்த்தக மற்றும் அட்டைச் செயல்பாடுகள், கடலோர வங்கி ஒருங்கிணைப்புகள், ஏற்றுமதி வட்டம் மற்றும் கூட்டு நிதியளிப்பு ஆகியவை இலங்கைக்குத் தொடர்ந்து அர்த்தமுள்ள பெறுமதியை உருவாக்கின.

### சீசெல்ஸ் கிளை

சீசெல்ஸ் கிளையானது மூலோபாய வாடிக்கையாளர் மேலாண்மை, பங்குதாரர்களின் ஈடுபாடு மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஆகியவற்றின் ஊடாகத் தனது செயல்பாடுகளை வலுப்படுத்தியது.

வங்கியின் முக்கிய அதிகாரிகள் சீசெல்ஸிற்கு விஜயம் செய்து, ஒழுங்குமுறை அதிகாரிகள், அதிக சொத்து மதிப்புள்ள வாடிக்கையாளர்கள், இலங்கை உயர்ஸ்தானிகர், சக வங்கிகள் மற்றும் ஏனைய பங்குதாரர்களைச் சந்தித்ததன் மூலம் சீசெல்ஸில் தனது பிரசன்னத்தையும் உறவுகளையும் இக்கிளை மேலும் உறுதிப்படுத்தியது. இந்தத் தொடர்புகள் நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தியது மட்டுமன்றி, ஒரு செயலூக்கமுள்ள மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட நிறுவனம் என்ற கிளையின் நற்பெயரையும் வலுப்படுத்தின.

ஒழுங்குமுறை மற்றும் தொழில்நுட்பத் தேவைகளுக்கு இணங்க, பணமோசடி தடுப்பு கண்காணிப்பை மேம்படுத்த இக்கிளை ஒரு புதிய AML தீர்வை (AML Solution) அமுல்படுத்தியது. அத்துடன், சீசெல்ஸ் மத்திய வங்கியின் தானியங்கி மயமாக்கல் செயல்முறைக்கு இணங்க, MT இலிருந்து MX செய்தி முறைமைக்கான மாற்றத்தை வெற்றிகரமாக முடித்தது. இது RTGS முறைமை மற்றும் SEFT MQ மேம்படுத்தல் ஆகியவற்றைச் செயல்படுத்த வழிவகுத்தது.

இலங்கை-சீசெல்ஸ் நட்பு சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாம் மற்றும் கடற்கரை சுத்திகரிப்புத் திட்டம் ஆகியவற்றின் மூலம் சமூக ஈடுபாடானது இந்த ஆண்டிலும் கிளையின் செயல்பாடுகளில் ஒரு முக்கிய பகுதியாகத் தொடர்ந்தது. கூடுதலாக, வாடிக்கையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வுகளும் நடத்தப்பட்டன. இது தனது வாடிக்கையாளர்களை அங்கீகரிப்பதில் கிளை கொண்டுள்ள அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது.

## எமது எதிர்கால இலக்கு

### வாய்ப்புகள்

- புதிய மற்றும் தோற்றம்பெற்று வரும் சந்தைகளில் வாய்ப்புகளைக் கண்டறிந்து வங்கியின் சர்வதேச இருப்பை விரிவுபடுத்துதல்.
- தரவு சார்ந்த நுண்ணறிவுகள் மூலம் திரவத்தன்மையை முன்கணிக்கும் திறனை மேம்படுத்தி, அறிவார்ந்த முடிவெடுத்தலை முன்னெடுத்தல்.
- மூலதனச் சந்தை ஆலோசனைச் சேவைகள் மற்றும் பட்டியல் முகாமைத்துவத் தீர்வுகளை உயர்த்துவதற்கு நிதி நிபுணத்துவத்தைப் பயன்படுத்துதல்.

### இடர்கள்

- உலகளாவிய வணிக ஏற்ற இறக்கங்கள் மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்கள்.
- உலகளாவிய திரவத்தன்மை கட்டுப்பாடுகள் மற்றும் பொருளாதார மந்தநிலை காரணமாக மூலதனப் போதுமான தன்மை மீதான அழுத்தங்கள்.
- இறக்குமதி/ ஏற்றுமதி கொள்கைகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள்.

## முன்னோக்கிய மூலோபாய மாற்றம்

### குறுங்காலம்

- இலங்கை ரூபாய் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலரில் குறித்துரைக்கப்பட்ட கடன் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் வங்கியின் மூலதன நிலையை வலுப்படுத்துதல்.
- மேம்படுத்தப்பட்ட தேறிய வட்டி எல்லைகள் மற்றும் பயனுள்ள பணப்புழக்க மேலாண்மை ஆகியவற்றின் மூலம் திறைசேரி ஆற்றல்களை மேம்படுத்துதல்.
- Smart Remit Mobile App சேவையை வெளிநாட்டுக் கிளைகளுக்கு விரிவுபடுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்கள் பாதுகாப்பான, நிகழ்நேரப் பணப்பரிமாற்றச் சேவைகளைப் பெற வழிவகுத்தல்.
- தகவலறிந்த முடிவெடுத்தலை ஆதரிப்பதற்காக டிஜிட்டல் ஆற்றல்களை மேம்படுத்துதல்.
- வெளிநாட்டுக் கிளைகளில் 'Flex App' பயன்பாட்டை மேம்படுத்துதல்.

### நடுத்தர முதல் நீண்ட காலம்

- ஒழுங்குமுறைத் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யும் அதேவேளையில், பன்முகப்படுத்தப்பட்ட பட்டியல் மூலம் வலுவான பணப்புழக்க நிலையைப் பேணுதல்.
- முதலீட்டு வங்கித் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை விரிவுபடுத்துதல்.
- நிலைபேண்தகு வளர்ச்சியைத் தூண்டுவதற்கும், ஒழுங்குமுறை இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் நீண்டகால நிதி ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதற்கும் வெளிநாட்டுக் கிளைகளுக்கான மூலதன ஒதுக்கீட்டை மேம்படுத்துதல்.
- புதிய வெளிநாட்டுக் கிளைகளை நிறுவுவதன் மூலமும், இதுவரை நுழையாத சர்வதேச சந்தைகளுக்குள் பிரவேசிப்பதன் மூலமும் வங்கியின் உலகளாவிய இருப்பை வலுப்படுத்துதல்.

# ஒவ்வொரு வாடிக்கையாளர் பயணத்தையும் வடிவமைத்தல்

GRI 3-3

| 2,413 | 76% | 16 | 81% | 33% |
|---|---|---|---|---|
| நேரடி வாடிக்கையாளர் தொடுமுனைகள் | வாடிக்கையாளர் ஊடுருவல் | அறிமுகப் படுத்தப்பட்ட புதிய தயாரிப்புகள் | வாடிக்கையாளர் திருப்தி விகிதம் | தேறிய ஊக்குவிப்பாளர் மதிப்பெண் |

ஒரு ரூபிக் கனசதுரத்தின் ஒவ்வொரு அசைவும் அதன் முழு வடிவத்தையும் தீர்மானிப்பதைப் போலவே, எமது வாடிக்கையாளர் அனுபவ மூலோபாயமும் நம்பிக்கை, அணுகல்தன்மை, நம்பகத்தன்மை, புத்தாக்கம் மற்றும் சேவைச் சிறப்பு ஆகிய ஒன்றோடொன்று இணைந்த பரிமாணங்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது. எமது நேரடி மற்றும் டிஜிட்டல் தொடர்பு மையங்களில் நிகழும் ஒவ்வொரு தொடர்பாடலும் இந்த அடிப்படைப் பரிமாணங்களைப் பிரதிபலிக்கும் வகையிலும் வலுப்படுத்தும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டும், எமது நிலையான சேவைச் சிறப்பு ஆணையின் வழிகாட்டலுடனும், ஒவ்வொரு வாடிக்கையாளர் ஈடுபாட்டையும் வெறும் ஒரு பரிவர்த்தனையாகப் பார்க்காமல் ஒரு பொறுப்பாகவே நாங்கள் கருதுகிறோம். நிதிப் பாதுகாப்பைத் தேடும் தனிநபர்கள் முதல் வளர்ச்சியை நோக்கிய நிறுவனங்கள் மற்றும் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் சமூகங்கள் வரை, எமது தீர்வுகள் நம்பகமான மற்றும் உள்ளடக்கிய நிதி ஆதரவை வழங்கும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளன.

தொழில்நுட்பம், சேவைச் சிறப்பு மற்றும் நிறுவன பலம் ஆகியவற்றை ஒருங்கிணைப்பதன் மூலம், ஒவ்வொரு தொடர்பு மையமும் நிலையான தேசிய முன்னேற்றத்திற்குப் பங்களிப்பதை நாங்கள் உறுதி செய்கிறோம்.

**SDGs தாக்கம்**

1, 8, 9, 10, 11, 12

**பொருண்மை தலைப்பு**: M3

**மூலோபாய தூண்**

## 2025 ஆம் ஆண்டிற்கான சூழல்

- நிலைத்தன்மைக்கு பிந்தைய பொருளாதார சூழல்: முறையான அழுத்தங்களுக்குப் பிந்தைய படிப்படியான பொருளாதார நிலைத்தன்மையானது, நம்பகத்தன்மை, விவேகம் மற்றும் நிலையான சேவை வழங்கல் குறித்த வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளை உருவாக்கியுள்ளது.
- மாறிவரும் வாடிக்கையாளர் நடத்தை மற்றும் டிஜிட்டல் எதிர்பார்ப்புகள்: நேரடி மற்றும் டிஜிட்டல் அலைவரிசைகளில் வேகமான, எளிமையான மற்றும் தடையற்ற அனுபவங்களுக்கான எதிர்பார்ப்புகள் அதிகரித்து வருகின்றன.
- அதிகரித்த போட்டி மற்றும் சேவைத் திறன்கள்: சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்கான போட்டி மற்றும் திறன்கள் அதிகரித்துள்ளன.
- நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் நிதியியல் அழுத்தம் மற்றும் வணிகத் தொடர்ச்சித் தேவைகள்: நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர் பிரிவினரிடையே நிலவும் தொடர்ச்சியான நிதி அழுத்தங்களுக்குச் சீரான மீட்சி மற்றும் ஆலோசனை ஆதரவு தேவைப்படுகிறது.
- சேவைத் தரம், வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பிக்கை: தொடர்பாடல் தெளிவு, நெறிமுறை நடத்தை மற்றும் உடனடிப் பதில் வழங்கல் ஆகியவற்றில் வாடிக்கையாளர்களின் உணர்திறன் அதிகரித்துள்ளது.
- நிதியியல் உள்ளடக்கப் பொறுப்பு: கிராமப்புற, போதிய வசதியற்ற மற்றும் மாற்றமடைந்து வரும் வாடிக்கையாளர் பிரிவினருக்கான அணுகலை உள்ளடக்கிய சேவை வழங்கல் மாதிரிகள் மூலம் விரிவுபடுத்துவதில் தொடர்ச்சியான முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

## மூலோபாயத் தூண்

### வாடிக்கையாளர் அனுபவத்தில் சிறந்து விளங்குதல்

எமது வாடிக்கையாளர் மூலோபாயமானது நிதி அணுகல்தன்மை, சேவைச் சிறப்பு மற்றும் பொறுப்பான வங்கிச் செயல்முறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. இந்த பரிமாணங்கள் ஒன்றிணைந்து, இலங்கை வங்கி நாடெங்கிலும் உள்ள தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு நம்பிக்கைக்குரிய நிதிப் பங்காளராகச் செயல்பட உதவுகிறது இது நிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் நீண்டகால மீள்திறனை ஆதரிக்கிறது.

### முன்னுரிமைப் பகுதிகள்:

- நிதிச் சேவைகளுக்கான அணுகலை விரிவுபடுத்துதல்
- தனித்துவமான வாடிக்கையாளர் மதிப்பை வழங்குதல்
- பொறுப்பான வங்கி நடைமுறைகளைப் பேணுதல்

**முன்னுரிமைப் பகுதி 01**

## நிதிச் சேவைகளுக்கான அணுகலை விரிவுபடுத்துதல்

### ஒவ்வொரு சமூகத்திலும், ஒவ்வொரு பிரிவினருக்கும் சேவை செய்தல்

இலங்கை மற்றும் சர்வதேச சந்தைகளில் உள்ள பல்வேறுபட்ட வாடிக்கையாளர் தளங்களுக்கு நிதிச் சேவைகளுக்கான அணுகலை விரிவுபடுத்துவதில் இலங்கை வங்கி உறுதியுடன் உள்ளது. 16.0 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்யும் வங்கி, ஒரு விரிவான தேசிய கட்டமைப்பு மற்றும் உலகளாவிய உறவுகளின் மூலம் தனிநபர்கள், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், பெரிய நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கிறது.

வாடிக்கையாளர்களை வலுப்படுத்துவதும், பங்குதாரர்களுக்கு மதிப்பை உருவாக்குவதுமான திறமையான, வாடிக்கையாளர் மையப்பட்ட, தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட மற்றும் மீள்திறன் கொண்ட நிதித் தீர்வுகளை வழங்குவதே இந்த பணியின் மையமாகும்.

பல்வேறு புவியியல் பகுதிகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்யும் வங்கியின் திறன், நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட கிளை வலையமைப்பு, நடமாடும் வங்கி அலகுகள், விரிவடைந்து வரும் டிஜிட்டல் கட்டமைப்பு மற்றும் சர்வதேச வங்கித் தொடர்புகள் மூலம் சாத்தியமாகிறது.

2025 ஆம் ஆண்டில், குறிப்பாக கிராமப்புற மற்றும் போதிய வசதியற்ற சமூகங்களில் அணுகலுக்கான தடைகளை நீக்குவதன் மூலம், நாட்டின் எளிதில் அணுகக்கூடிய நிதி நிறுவனம் என்ற தனது நிலையை வங்கி மேலும் வலுப்படுத்தியது. இது சேமிப்பு கலாச்சாரத்தை ஊக்குவிப்பதோடு கடன் வசதிகளையும் விரிவுபடுத்தியது. தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடனான மூலோபாயப் பங்களிப்புகள், எல்லை கடந்த வங்கித் திறன்களை மேலும் வலுப்படுத்தியதுடன், தேசிய நிதி உள்ளடக்க இலக்குகளை முன்னெடுக்கும் அதேவேளையில் உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிதித் தேவைகளையும் ஆதரித்தன.

**வாடிக்கையாளர்களின் புவியியல் பரம்பல்**




### இணைக்கப்பட்ட மற்றும் அணுகக்கூடிய சேவை வலையமைப்பை உருவாக்குதல்

வங்கி 2,400-க்கும் மேற்பட்ட நேரடி வாடிக்கையாளர் தொடுமுனைகளைக்கொண்ட ஒரு விரிவான வலையமைப்பைப் பேணி வருகிறது. இந்த ஒருங்கிணைந்த கட்டமைப்பு, உள்ளடக்கிய சேவை வழங்கல் மற்றும் நிலையான வாடிக்கையாளர் ஈடுபாட்டை உறுதி செய்வதில் இலங்கை வங்கியின் தொடர்ச்சியான கவனத்தைப் பிரதிபலிக்கிறது.

2025 ஆம் ஆண்டில், கிளை வலையமைப்பு, சுய-சேவை உள்கட்டமைப்பு, நடமாடும் அலகுகள் மற்றும் டிஜிட்டல் தளங்கள் ஆகியவற்றில் பரந்துபட்ட வாடிக்கையாளர் தொடர்பு மையங்களை மேம்படுத்தி ஒருங்கிணைப்பதன் மூலம் வங்கி தனது வாடிக்கையாளர் ஈடுபாட்டுக் கட்டமைப்பைத் தொடர்ந்து வலுப்படுத்தியது.

# ஒவ்வொரு வாடிக்கையாளர் பயணத்தையும் வடிவமைத்தல்

வாடிக்கையாளர் தொடர்புகளின் முதன்மையான மையமாக விளங்கும் கிளை வலையமைப்பானது, “பிரீமியர் கிளை” எண்ணக்கருவைக் கண்டி பிராந்தியத்திற்கு விரிவுபடுத்தியதன் மூலமும், சிறந்த தெரிவுநிலை மற்றும் அணுகல்தன்மையை மேம்படுத்துவதற்காக எட்டு கிளைகளை இடமாற்றம் செய்ததன் மூலமும் மேம்படுத்தப்பட்டது. மேலதிகமாக, பண்டாரவளை, அக்குரெகொட மற்றும் பேராதனை ஆகிய முக்கியமான இடங்களில் மூன்று மட்டுப்படுத்தப்பட்ட சேவை கிளைகள் திறக்கப்பட்டன. இம்மேம்படுத்தல்களுடன் சுயசேவை உள்கட்டமைப்பும் விரிவுபடுத்தப்பட்டது. வாடிக்கையாளர் பரிவர்த்தனைகளை வினைத்திறனாக்கவும், பாரம்பரிய கருமபீடங்கள் மீதான தங்கியிருப்பைக் குறைக்கவும் 29 பணச் சுழற்சி இயந்திரங்கள் மற்றும் எட்டு Smart Zones ஆகியவை வலையமைப்பு முழுவதும் நிறுவப்பட்டன. மேலும் 100 கிளைகளுக்கு வரிசை முகாமைத்துவ முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், சீரான வாடிக்கையாளர் ஓட்டத்தை உறுதிப்படுத்த அவை தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன.

நிதிச் சேவைகளுக்கான அணுகலை விரிவுபடுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, இலங்கைத் தபால் திணைக்களத்துடன் இணைந்து வங்கியின் முகவர் வங்கித் தீர்வான BOC Connect இந்த ஆண்டில் மேலும் வலுப்படுத்தப்பட்டது. இக்கூட்டுறவானது நாடு முழுவதிலுமுள்ள தபால் வலையமைப்பைப் பயன்படுத்தி கிராமப்புற மற்றும் புவியியல் ரீதியாகத் தனிமைப்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு முறையான வங்கிச் சேவைகளை வழங்குகிறது. அனலைதீவு மற்றும் மாது கங்கை தீவு போன்ற வங்கிச் சேவைகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்ட தொலைதூரப் பகுதி மக்கள் இதன் மூலம் பெரிதும் பயனடைந்தனர். BOC Connect ஊடாக வாடிக்கையாளர்கள் வைப்புச் செய்தல், பணம் எடுத்தல், கடன் மீள்செலுத்துதல் மற்றும் பயன்பாட்டுக் கட்டணங்களைச் செலுத்துதல் போன்ற அத்தியாவசியச் சேவைகளைத் தமது இருப்பிடங்களுக்கு அருகிலேயே பெற்றுக்கொள்ள முடிகிறது.

BOC கனெக்ட் மூலம், வாடிக்கையாளர்கள் வைப்புக்கள், மீளப்பெறுதல், கடன் திருப்பிச் செலுத்துதல், பயன்பாட்டு கொடுப்பனவுகள் மற்றும் பணம் அனுப்புதல் தொடர்பான பரிவர்த்தனைகள் உள்ளிட்ட அத்தியாவசிய வங்கி சேவைகளை அருகாமையில் அணுக முடியும். டுயமெயஞசு ரின் ஒருங்கிணைப்பு சிறு வணிகர்கள் மற்றும் நுண் தொழில்முனைவோருக்கு பாதுகாப்பான டிஜிட்டல் கொடுப்பனவுகளில் பங்கேற்கவும், உள்ளூர் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கவும் உதவியது.

ஒவ்வொரு பகுதியிலும் 40 புதிய கிளைகளை அறிமுகப்படுத்துவதன் மூலமும், வாடிக்கையாளர் தொடர்புகளில் நிலைத்தன்மையை வலுப்படுத்துவதன் மூலமும், முன்னணி ஊழியர்களுக்கான வேலை திறன் மேம்பாட்டிற்கு ஆதரவளிப்பதன் மூலமும் மாதிரி கிளை கருத்துரு அனைத்து மாகாணங்களிலும் தொடர்ந்து வெளியிடப்பட்டது.

இளம் வாடிக்கையாளர் பிரிவுகளுடனான ஈடுபாட்டை ஆழப்படுத்த, வங்கி தனது கல்வியுடன் இணைக்கப்பட்ட வங்கி இருப்பை கிட்டத்தட்ட 1,600 பாடசாலை சஞ்சய அலகுகள் மற்றும் 1,000க்கும் மேற்பட்ட நடமாடும் பள்ளி சேமிப்புத் நிகழ்ச்சி திட்டங்கள் மூலம் விரிவுபடுத்தி, ஆரம்பகால நிதி உள்ளடக்கம் மற்றும் சேமிப்பு நடத்தையை ஊக்குவித்தது.

கிளை வலையமைப்புக்கள் முழுவதும் இஸ்லாமிய வங்கி சேவைகளை ஆதரிக்கும் வாடிக்கையாளர் தொடு முனைகளை வங்கி மேம்படுத்தியது, அதே நேரத்தில் சேவை விநியோகத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் டிஜிட்டல் வழிமுறைகளின் பயன்பாட்டை ஊக்குவித்தது.




* மட்டுப்படுத்தப்பட்ட சேவை கிளைகள் உள்ளடங்கலாக

**முன்னுரிமைப் பகுதி : 02**

## தனித்துவமான வாடிக்கையாளர் பெறுமதியை வழங்குதல்

### புத்தாக்கத்தின் மூலம் தயாரிப்புத் தொகுப்பை மேம்படுத்தல்

இலங்கை வங்கியின் மூலோபாயத்தில் புத்தாக்கம் தொடர்ந்து ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. இது பல்வேறுபட்ட வாடிக்கையாளர் தளத்தின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட நிதித் தயாரிப்புகளின் உருவாக்கம் மற்றும் மேம்பாட்டிற்கு வழிகாட்டுகிறது. வங்கியின் தயாரிப்பு மேம்பாட்டு அணுகுமுறையானது முக்கிய வாடிக்கையாளர் பிரிவுகளுடன் இணக்கப்பாடாக்கப்பட்டு, ஒருங்கிணைந்த வணிகப் பிரிவுகளின் ஊடாக வழங்கப்படுகிறது. இது சரியான நேரத்தில் பொருத்தமான மற்றும் பயனுள்ள நிதித் தீர்வுகளை உறுதிப்படுத்துகிறது.

### புதிய வைப்புத் தயாரிப்புக்கள்

- Prosperity வைப்புத் திட்டம்
- Flex Saver
- மூத்த பிரஜைகளுக்கான விசேட நிலையான வைப்புத் திட்டம்
- அந்-நூர் நடைமுறை வைப்பு
- இலங்கை வங்கியின் My Srilanka நிலையான வைப்பு

### கடன் தயாரிப்புக்கள்

- இலங்கை வங்கி E-Creator
- இலங்கை வங்கி பசுமை கடன்

## புதிய கடன் தயாரிப்புக்கள்

**BizLift கடன் திட்டம்**

**விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகளில் இளைய தொழில்முனைவோரின் அபிவிருத்தி**

**டித்வா நிவாரணக் கடன்**

**ReMSME பேரிடர் நிவாரணக் கடன்**

## புதிய டிஜிட்டல் தயாரிப்புக்கள்

**BizPlus கடன் அட்டை**



**பிரீமியர் வாடிக்கையாளர்களுக்கான Prestige அட்டை**

**இலங்கை வங்கி எரிபொருள் அட்டை**

## புதிய டிஜிட்டல் தளங்கள்

**BOC Flex செயலி**

**BOC Smart Remit மொபைல் செயலி**

2025 ஆம் ஆண்டில், தனிநபர்கள், வணிகங்கள் மற்றும் முன்னுரிமை அளிக்கப்படும் வாடிக்கையாளர் பிரிவுகளின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப, செறிவான மற்றும் பொருத்தமான நிதித் தீர்வுகளை வழங்கியதன் மூலம் இலங்கை வங்கி (Bank of Ceylon) தனித்துவமான வாடிக்கையாளர் பெறுமதியை வழங்கியது. வங்கியின் வாடிக்கையாளர் முன்மொழிவானது பொருத்தப்பாடு, நம்பிக்கை மற்றும் நீண்டகாலக் கூட்டாண்மை ஆகியவற்றை வலியுறுத்தியதுடன், வாடிக்கையாளர்களின் உடனடித் தேவைகள் மற்றும் நீண்டகால நிதி இலக்குகள் ஆகிய இரண்டிற்கும் ஆதரவளிக்கும் நிதிச் சேவைகளில் அவர்கள் ஈடுபடுவதற்கு வழிவகுத்தது.

இந்த ஆண்டில், சேமிப்புத் திரட்டல், திரவத்தன்மை முகாமைத்துவம் மற்றும் நிதிப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு ஆதரவளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட பல்வேறு வைப்பு, கடன் மற்றும் பரிவர்த்தனை தயாரிப்புகளை வங்கி அறிமுகப்படுத்தியது. நீடிக்கப்பட்ட சுபீட்ச வைப்புத் திட்டங்கள் நீண்டகால நிதி ஒழுக்கத்தை ஊக்குவிக்கின்றன, அதே நேரத்தில் Flex Saver கணக்குகள் கிளைகளுக்குச் செல்லாமலேயே கணக்குகளைத் திறக்கும் வசதியை வழங்குகின்றன. ஓய்வு பெற்றவர்களுக்காகச் சிறந்த வருமானத்தை வழங்கும் மூத்த பிரஜைகளுக்கான விசேட நிலையான வைப்புத் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அத்துடன், An-noor இஸ்லாமிய வங்கிச் சேவையின் கீழ் சரியா முறைமைக்கு இணங்க தனிநபர் மற்றும் கூட்டாண்மை நடைமுறைக்கணக்கு வசதிகள் வழங்கப்படுகின்றன. பொருளாதார மறுமலர்ச்சிக்கு அவசியமான வெளிநாட்டுப் பணப்பரிமாற்றங்களை ஊக்குவிக்கும் வகையில் BOC My Sri Lanka நிலையான வைப்புத் திட்டங்கள் புதிய அம்சங்களுடன் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டன.

தனிநபர்கள், வணிகங்கள் மற்றும் முன்னுரிமை அளிக்கப்படும் வாடிக்கையாளர் பிரிவுகளின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப, செறிவான மற்றும் பொருத்தமான கடன் தயாரிப்புகளை வழங்கியதன் மூலம் வங்கி தனித்துவமான வாடிக்கையாளர் பெறுமதியை வழங்கியது. டிஜிட்டல் தொழில்முனைவோருக்காக BOC E-Creator கடன் திட்டமும், சூழல் நட்பு திட்டங்களுக்காக BOC Green Loan வசதியும் வழங்கப்படுகின்றன. BizLift கடன் திட்டமானது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் பெரிய நிறுவனங்களுக்குத் தேவையான நடைமுறை மூலதனத்தை வழங்கி வணிகத் தொடர்ச்சியை உறுதி செய்கிறது.

முக்கிய துறைகளில் தொடங்குவதற்கு இல்லாவிடில் வர்த்தகத்தை வளர்ப்பதற்கு விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகளில் இளைஞர் தொழில்முனைவோரின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டதினூடாக ஊக்குவிக்கச் சலுகை வட்டியுடனான கடன்கள் வழங்கப்படுகின்றன. மேலும், டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட வணிகங்கள் மற்றும் தனிநபர்கள் மீண்டெழ டித்வா நிவாரணக் கடன் இலக்கு வைக்கப்பட்ட ஆதரவை வழங்கியது. இத்தகைய கடன் தயாரிப்புகள் உள்ளடக்கிய பொருளாதாரப் பங்கேற்பை வலுப்படுத்துகின்றன. ஒட்டுமொத்தமாக, இந்தக் கடன் தயாரிப்புகள் நிதி அணுகலை மேம்படுத்துவதுடன், வணிக மறுமலர்ச்சியை ஊக்குவிப்பதுடன், உள்ளடக்கிய பொருளாதாரப் பங்களிப்பை வலுப்படுத்துகின்றன. இளைஞர்கள், பெண்கள், மூத்த பிரஜைகள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் மற்றும் டிஜிட்டல் ரீதியாகச் செயல்படும் பிரிவுகள் உள்ளிட்ட வாடிக்கையாளர் குழுக்களின் தனித்துவமான தேவைகளுக்கு ஏற்ப தயாரிப்புகளும் சேவைகளும் அமைந்திருப்பதை உறுதிசெய்து, பிரிவு சார்ந்த ஈடுபாட்டின் மூலம் வங்கி தனது பெறுமதி முன்மொழிவை மேலும் வலுப்படுத்தியது. ஒட்டுமொத்தமாக, இந்தக் கடன் தயாரிப்புகள் நிதி அணுகலை மேம்படுத்துவதுடன், வணிக மறுமலர்ச்சியை ஊக்குவிப்பதுடன், உள்ளடக்கிய பொருளாதாரப் பங்களிப்பை வலுப்படுத்துகின்றன.

இளைஞர்கள், பெண்கள், மூத்த பிரஜைகள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் மற்றும் டிஜிட்டல் ரீதியாகச் செயல்படும் பிரிவுகள் உள்ளிட்ட வாடிக்கையாளர் குழுக்களின் தனித்துவமான தேவைகளுக்கு ஏற்ப தயாரிப்புகளும் சேவைகளும் அமைந்திருப்பதை உறுதிசெய்து, பிரிவு சார்ந்த ஈடுபாட்டின் மூலம் வங்கி தனது பெறுமதி முன்மொழிவை மேலும் வலுப்படுத்தியது.

## வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தல்

2025 ஆம் ஆண்டில், கிளை வலையமைப்பு மற்றும் முக்கிய சேவை வழிமுறைகளின் சேவையின் தரம் மற்றும் உடனடிப் பதிலளிப்புத் தன்மையை வலுப்படுத்துவதில் வங்கி கவனம் செலுத்தியது. பிராந்தியங்கள் மற்றும் வாடிக்கையாளர் பிரிவுகளுக்கிடையில் சேவைத் தரங்கள் சீராக இருப்பதை உறுதிப்படுத்தும் அதேவேளையில், வாடிக்கையாளர்கள் வங்கியுடன் தொடர்பு கொள்ளும் இடங்களில் அவர்களது அனுபவத்தை மேம்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

கிளைகளில் வரிசை முகாமைத்துவம் முறைமைகள், டிஜிட்டல் மேசைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்பக் (IT) கட்டமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் சேவைத் திறன் மேம்படுத்தப்பட்டது. .து காத்திருப்பு நேரத்தைக் குறைப்பதற்கும், கருமபீட மற்றும் தனிப்பட்ட வங்கிச் சேவைகளுக்கான செயலாக்க நேரத்தை மேம்படுத்துவதற்கும் உதவியது. சுமூகமான செயல்பாடுகள் மற்றும் சிக்கல்களுக்குத் சரியான நேரத்தில் தீர்வு காண்பதை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான கண்காணிப்பின் மூலம் இந்த மேம்பாடுகள் ஆதரிக்கப்பட்டன.

உறவுமுறை சார்ந்த ஈடுபாடானது இலங்கை வங்கியின் ஒரு முக்கிய தனித்துவமான அடையாளமாகத் தொடர்ந்து திகழ்ந்தது. தொடர்பு அதிகாரிகள் மற்றும் பிரீமியர் வங்கி மையங்கள் முன்னுரிமை அளிக்கப்படும் வாடிக்கையாளர் பிரிவுகளுக்குத் தனிப்பயனாக்கப்பட்ட சேவைகளை வழங்கிய அதேவேளையில், வர்த்தக அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூகக் குழுக்களுடனான கட்டமைக்கப்பட்ட தொடர்புகள் நம்பிக்கை மற்றும் நீண்டகாலக் கூட்டாண்மையை வலுப்படுத்தின.

# ஒவ்வொரு வாடிக்கையாளர் பயணத்தையும் வடிவமைத்தல்

- **வாட்ஸ்அப் வங்கி மூலம் காசோலை விசாரணை:** வாடிக்கையாளர்கள் இப்போது வசதியான ஒரு சுயசேவை தொடர்பு புள்ளியாக விளங்கும் வாட்ஸ்அப் வங்கிச் சேவை மற்றும் BOC Meta Banking ஊடாக காசோலைகளின் நிலவரம் (Cheque status) குறித்த விபரங்களை அறிந்துகொள்ள முடியும்.
- **அரச நிறுவனங்களுக்கான எரிபொருள் அட்டை:** முக்கிய தேசிய நிறுவனங்களுக்கான டிஜிட்டல் கொடுப்பனவு தீர்வுகளை விரிவுபடுத்தும் வகையில், அரசிற்கு சொந்தமான நிறுவனங்களுக்கு என பிரத்யேக எரிபொருள் அட்டை அறிமுகப்படுத்தப்பட்டது.
- **வரிசை முகாமைத்துவ அமைப்பு:** கிளைகளின் சேவை வினைத்திறனையும் வாடிக்கையாளர் அனுபவத்தையும் மேம்படுத்தும் நோக்கில், நாடளாவிய ரீதியில் 100 புதிய கிளைகளில் நிறுவப்பட்டது.

## டிஜிட்டல் இணைவு

வாடிக்கையாளர்களை உள்வாங்கும் செயல்முறைகளை எளிதாக்குவதற்காக, டிஜிட்டல் சரிபார்ப்பு மற்றும் தொலைதூர அங்கீகார தொழில்நுட்பங்களை வங்கி பயன்படுத்தியது. e/v KYC (மின்னணு/காணொளி வாடிக்கையாளரை அறிதல்) அடிப்படையிலான தொலைதூர வாடிக்கையாளர் உள்வாங்கல் வசதியானது, வாடிக்கையாளர்கள் கிளைகளுக்குச் செல்ல வேண்டிய தேவையின்றி, முழுமையாக காணொளி மூலமான KYC ஊடாக கணக்குகளைத் திறக்க வழிவகை செய்கிறது. இத்தகைய முயற்சிகள் கணக்குத் திறக்கும் செயல்முறையை விரைவுபடுத்தியதுடன், வசதிகளை மேம்படுத்தி, வங்கி முழுவதும் டிஜிட்டல் பயன்பாட்டின் உயர் மட்டத்திற்கு பங்களிப்பு செய்துள்ளன.

**372,000 +**
ஸ்மார்ட் கணக்குப் புத்தகங்கள்

**1.4 மில்லியன் +**
BOC Flex/ B app/ ஸ்மார்ட் இணைய வங்கிச் சேவை

**143,000 +**
Smart Pay

**17,000 +**
BOC Meta banking

**முன்னுரிமைப் பகுதி : 02**

## அளவிடக்கூடிய உள்கட்டமைப்பு மற்றும் செயல்முறைகள்

வங்கியின் டிஜிட்டல் வளர்ச்சியை ஆதரிப்பதில் செயல்பாட்டு மீள்திறனும் அளவிடக்கூடிய தன்மையும் அடிப்படையாக அமைந்திருந்தன. இவ்வருடத்தில், அதிகளவிலான பரிவர்த்தனைகள், அதிகரித்து வரும் டிஜிட்டல் பயன்பாடு மற்றும் மிகவும் மேம்பட்ட டிஜிட்டல் சேவைகளை வழங்குதல் ஆகியவற்றுக்கு ஆதரவளிக்கும் வகையில் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மேலும் நவீனமயமாக்கப்பட்டது.

மெய்நிகராக்கப்பட்ட உள்கட்டமைப்பு சூழல்களின் மேம்பாடுகள், வலையமைப்பு மற்றும் பயன்பாட்டுத் தளங்களின் தரமுயர்த்தல்கள் மற்றும் மேம்பட்ட கணினி கண்காணிப்பு தீர்வுகளை நிலைநிறுத்துதல் ஆகியவை இதில் உள்ளடங்கிய முக்கிய முயற்சிகளாகும்.

முதலீடுகள் அமைப்பின் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்தியதுடன், செயல்திறனை மேம்படுத்தி, நடுத்தர காலத்தில் அதிகளவிலான கணினி இருப்புத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை இலக்குகளை நோக்கிய முன்னேற்றத்திற்கு ஆதரவளித்தன.

வங்கியின் டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப சூழலின் நவீனமயமாக்கலை விரைவுபடுத்துவதற்காக, டிஜிட்டல் உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல், தகவல் தொழில்நுட்ப செயல்பாடுகளை நிர்வகித்தல் மற்றும் மேம்பட்ட தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப தீர்வுகளை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, முழுமையாகச் சொந்தமான புத்துயிர் பெற்ற துணை நிறுவனமான BOC IT Solutions (Private) Limited நிறுவனத்தை வங்கி நிறுவியது.

இதற்கு இணையாக, நிறுவனம் முழுவதும் தகவல் தொழில்நுட்ப சேவை கோரிக்கைகளைக் கையாள்வதை முறைப்படுத்துவதற்காக, வங்கி உள்வாரி தகவல் தொழில்நுட்ப சேவை மேலாண்மை தளத்தை அறிமுகப்படுத்தியது. இந்த ITSM கருவியானது சம்பவங்கள் குறித்த அறிக்கையிடல், சேவை கோரிக்கைகள் மற்றும் கணினி ஆதரவு ஆகியவற்றிற்கு ஒரு கட்டமைக்கப்பட்ட மற்றும் வெளிப்படையான பணிப்பாய்வை வழங்குகிறது இது கிளைகள் மற்றும் செயல்பாட்டு பிரிவுகளில் விரைவான பதிலளிப்பு நேரத்தையும், மேம்பட்ட சேவை கண்காணிப்பையும் மற்றும் சீரான சேவை வழங்கலையும் சாத்தியமாக்குகிறது.

## தள நவீனமயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப மேம்படுத்தல்

வங்கியின் முக்கிய தொழில்நுட்ப தளங்கள் வலுவாகவும், அளவிடக்கூடியதாகவும், எதிர்கால டிஜிட்டல் தேவைகளை ஆதரிக்கும் திறன் கொண்டதாகவும் இருப்பதை உறுதி செய்வதற்காக அவற்றை வங்கி தொடர்ந்து தரம் உயர்த்தியது. அதிகரித்த தரவு அளவுகள் மற்றும் மாறிவரும் பயன்பாட்டு வடிவங்களுக்கு ஏற்ப வலையமைப்பு மற்றும் பாதுகாப்பு தளங்கள் வலுப்படுத்தப்பட்டதுடன், பதிலளிப்புத் திறன் மற்றும் மீள்திறனை மேம்படுத்துவதற்காக பயன்பாட்டு சூழல்களும் உகந்ததாக்கப்பட்டன.

மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் எச்சரிக்கை வழிமுறைகள், சாத்தியமான கணினி சிக்கல்களை முன்கூட்டியே கண்டறிய உதவியதுடன், விரைவான தீர்வு நேரத்திற்கும், முக்கியமான டிஜிட்டல் சேவை வழிகளில் சேவை இடையூறுகள் குறைவதற்கும் ஆதரவளித்தன. இவ்வருடத்தில் நிறைவு செய்யப்பட்ட முக்கிய உள்கட்டமைப்பு முதலீடுகளில் கடன் அட்டை கணினி வன்பொருள் தரமுயர்த்தல்கள், தானியங்கி வங்கி இயந்திர சுவிட்ச் இடமாற்றம், சுற்றளவு / பயர்வால் மாற்றீடு, ஒருங்கிணைந்த காப்புப்பிரதி (Backup) தீர்வுகள், மெய்நிகர் தள தரமுயர்த்தல்கள் மற்றும் புதிய CEFT சுவீகரிப்பு சுவிட்ச் ஆகியவை அடங்கும்.

## செயல்முறை மறுவடிவமைப்பு மற்றும் பணிப்பாய்வு தானியக்கமாக்கல்

செயல்முறை மறுவடிவமைப்பானது இவ்வருடத்தில் ஒரு முக்கிய கவனம் செலுத்தும் பகுதியாக இருந்தது. கட்டமைக்கப்பட்ட பணிப்பாய்வு தானியக்கமாக்கல் முயற்சிகள் மூலம், வாடிக்கையாளர் உள்வாங்கல் , கணக்குகள் திறப்பு, பயனர் சுயவிவர மேலாண்மை, தரவு சேகரிப்பு, வெளிப்புற அறிக்கையிடல் உள்ளிட்ட மத்தியமயமாக்கப்பட்ட செயல்பாடுகளில் உள்ள முக்கிய செயல்முறைகளை வங்கி எளிமையாக்கியதுடன் டிஜிட்டல் மயமாக்கியது.

இம்முயற்சிகள் காகிதப் பயன்பாடு, செயலாக்கத் திருப்புமுனை நேரம் மற்றும் மனிதத் தலையீடுகள் ஆகியவற்றில் அளவிடக்கூடிய குறைப்புகளை ஏற்படுத்திய அதேவேளையில், செயல்பாட்டு வெளிப்படைத்தன்மையையும் கட்டுப்பாட்டையும் மேம்படுத்தின. டிஜிட்டல் மயமாக்கப்பட்ட பணிப்பாய்வுகள் வாடிக்கையாளர்களுக்கு விரைவான சேவை வழங்கலுக்கு பங்களித்ததுடன், உள்வாரி குழுக்களிடையே உற்பத்தித்திறனையும் சீரான தன்மையையும் மேம்படுத்தின.

**11**
புதிய சேவை வழிமுறைகள் தானியங்கப்படுத்தப்பட்டவையின் எண்ணிக்கை

**ரூ. 116.5 மில்லியன +**
சேவை வழிமுறைகள் தானியங்கப்படுத்தப் பட்டதன் மூலம் அடையப்பட்ட மொத்தச் செலவு சேமிப்பு

**6.6 மில்லியன +**
சேமிக்கப்பட்ட காகிதங்கள்

**101,000 +**
சேவை வழிமுறைகள் தானியங்கப்படுத்தப் பட்டதன் மூலம் மூலம் சேமிக்கப்பட்ட ஊழியர்களின் வேலை நேரம்

## கிளவுட் தயார்நிலை மற்றும் எதிர்காலக் கட்டமைப்பு

வங்கி தனது கிளவுட்-தயாரநிலை (Cloud-readiness) உத்தியை, ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் இடர் மேலாண்மைக் கருத்தாய்வுகளுக்கு இணங்க முன்னெடுத்தது. வெளிப்புற அனுமதிகள் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான காலக்கெடுவை நிர்ணயிப்பதில் தொடர்ந்து செல்வாக்குச் செலுத்தும் அதேவேளையில், எதிர்கால நெகிழ்வுத்தன்மையை உறுதி செய்வதற்காக உள்வாரி அமைப்புகள் கிளவுட்-தயாரநிலை கட்டமைப்புகளைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டன.

மனிதவளத் தளங்களில் (Human resource platforms) இருந்து தொடங்கி, வாடிக்கையாளர் அல்லாத தரவு அமைப்புகளை திட்டமிட்டபடி படிப்படியாக கிளவுட் முறைக்கு மாற்றுவது, கிளவுட் பயன்பாட்டை நோக்கிய ஒரு அளவிடப்பட்ட மற்றும் இடர்-இணைந்த அணுகுமுறையைப் பிரதிபலிக்கிறது. இந்த அணுகுமுறையானது, ஒழுங்குமுறை அனுமதிகள் பெறப்பட்டவுடன், தரவுப் பாதுகாப்பு அல்லது செயல்பாட்டு ஒருமைப்பாட்டில் எவ்வித சமரசமும் இன்றி, கிளவுட் ஆற்றல்களை வங்கி திறம்படப் பயன்படுத்துவதற்குத் தயாராக இருப்பதை உறுதி செய்கிறது.

- **இணையப் பாதுகாப்பு அல்லது தரவு மீறல் சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை.**
- **தொழில்நுட்பம் மற்றும் மீள்திறன் தணிக்கைகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன.**
- **இணக்கப்பாட்டு மதிப்பெண்கள் (Compliance scores) மேம்படுத்தப்பட்டுள்ளன.**

முன்னுரிமைப் பகுதி: 03

## பாதுகாப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆளுகையை வலுப்படுத்துதல்

வங்கிச் செயல்பாடுகள் பெருகிய முறையில் டிஜிட்டல் மயமாக்கப்பட்டதாகவும், ஒன்றோடொன்று இணைக்கப்பட்டதாகவும் மாறிவரும் நிலையில், நிலையான டிஜிட்டல் முன்னேற்றத்திற்கு வலுவான இணையப் பாதுகாப்பு மற்றும் ஒழுக்கமைக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப ஆளுமை என்பன இன்றியமையாததாக விளங்குகின்றன. தனது டிஜிட்டல் உருமாற்றத் திட்டத்தின் ஒரு பகுதியாக, அமைப்புகள், தரவுகள் மற்றும் பங்குதாரர்களின் நம்பிக்கையைப் பாதுகாப்பதற்காக, வங்கி தொடர்ந்து ஒரு கட்டமைக்கப்பட்ட, இடர்-இணைந்த அணுகுமுறையைக் கையாண்டு வருகிறது.

இவ்வருடத்தில், வலுவான இணையப் பாதுகாப்பு கட்டமைப்புகள், தரவுத் தனியுரிமைக் கட்டுப்பாடுகள் மற்றும் ஆளுமை நடைமுறைகள் ஆகியவை டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்பு முழுவதும் மேலும் ஆழமாகப் புகுத்தப்பட்டன. இத்தகைய நடவடிக்கைகள் புதுமைப் புனைவுகள், கூட்டாண்மைகள் மற்றும் டிஜிட்டல் விரிவாக்கம் ஆகியவை மீள்திறன், ஒழுங்குமுறை இணக்கம் மற்றும் வலுவான பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் மூலம் ஆதரிக்கப்படுவதை உறுதி செய்கின்றன் இது வங்கியின் தொழில்நுட்பம் சார்ந்த செயல்பாட்டு மாதிரியின் மீதான நம்பிக்கையை மேலும் வலுப்படுத்துகிறது.

# டிஜிட்டல் அனுபவங்களை வலுப்படுத்தல்

## வாடிக்கையாளர் தனியுரிமை GRI 418-1

இவ்வருடத்தில் வாடிக்கையாளர் தனியுரிமை மீறல்கள் தொடர்பாக ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்பட்ட புகார்கள் எதுவும் பதிவாகவில்லை.

2025 ஆம் ஆண்டில், வாடிக்கையாளர் தரவுக் கசிவுகள், திருட்டுகள் அல்லது தரவு இழப்புகள் எதுவும் கண்டறியப்பட்டுப் பதிவாகவில்லை.

## தரவுப் பாதுகாப்பு

2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தரவுப் பாதுகாப்புச் சட்டத்திற்கு இணங்க, வங்கியின் தரவுப் பாதுகாப்பு அதிகாரி, வங்கி முழுவதும் தரவுத் தனியுரிமை நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதையும் நடைமுறைப்படுத்துவதையும் தொடர்ந்து மேற்பார்வையிட்டார். இவர் பொது மேலாளருக்கு நேரடியாகவும் சுயாதீனமாகவும் அறிக்கையிடுகிறார்.

இவ்வருடத்தில், வாடிக்கையாளர் விபரங்களைப் பாதுகாப்பதற்கான விரிவான தரவுக் கையாளுதல் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உருவாக்குவதற்கும் பராமரிப்பதற்கும் தரவுப் பாதுகாப்பு அதிகாரி தொடர்ந்து பொறுப்பாக இருந்தார். தரவுப் பாதுகாப்பு கடப்பாடுகள் குறித்த பணியாளர்களின் புரிதலை வலுப்படுத்துவதற்காக வழக்கமான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள் நடத்தப்பட்டன. அத்துடன், ஒழுங்குமுறை இணக்கத்தை மதிப்பிடுவதற்கும் தரவு மீறல் இடர்களைக் குறைப்பதற்கும் வங்கி அவ்வப்போது தணிக்கைகளையும் ஆய்வுகளையும் மேற்கொண்டது.

## பாதுகாப்பு கட்டமைப்புகள்

வங்கி தனது டிஜிட்டல் பாதுகாப்பு நிலையை மேலும் வலுப்படுத்த, தொழில்துறையில் அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்புக் கட்டமைப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களைத் தொடர்ந்து பின்பற்றியது. வாடிக்கையாளர் நம்பிக்கை மற்றும் இரகசியத்தன்மையின் மிக உயர்ந்த தரத்தைப் பேணுவதற்காக, தரவு இழப்புத் தடுப்பு மேம்படுத்தல்கள் மற்றும் பகுப்பாய்வு புதுப்பிப்புகள் போன்ற நடவடிக்கைகள் இந்த ஆண்டில் பலப்படுத்தப்பட்டன.

## தகவல் தொழில்நுட்பம் ஆளுகை மற்றும் தரநிலைகளுடனான இணக்கம்

அமைப்பின் ஒருமைப்பாடு, ஒழுங்குமுறை இணக்கம் மற்றும் வணிகத் தொடர்ச்சி ஆகியவற்றைப் பாதுகாக்கும் அதேவேளையில், தொழில்நுட்ப முதலீடுகள், டிஜிட்டல் கூட்டாண்மைகள் மற்றும் தள ஒருங்கிணைப்புகள் ஆகியவை வங்கியின் மூலோபாய நோக்கங்களுடன் சீரமைந்திருப்பதை உறுதி செய்வதற்காக, வங்கி தனது தகவல் தொழில்நுட்ப ஆளுகைக் கட்டமைப்பைத் தொடர்ந்து வலுப்படுத்தியது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் மூலோபாயத்தின் மேற்பார்வையானது, முறையான மேலாண்மை மற்றும் பணிப்பாளர் சபை மட்டத்திலான குழுக்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. தகவல் தொழில்நுட்பம் ஆளுகை கட்டமைப்பானது மத்திய வங்கியின் 2021 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தொழில்நுட்ப இடர் மேலாண்மை வழிகாட்டலுக்கு இணங்க அமைக்கப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் இணைய அச்சுறுத்தல்கள் மற்றும் ஒழுங்குமுறை சிக்கல்களுக்குப் பதிலளிக்கும் விதமாக, வங்கி ஊழுஜைவு 2019 அடிப்படையிலான ஒரு நிறுவன தகவல் தொழில்நுட்பம் ஆளுகை கட்டமைப்பை செயல்படுத்துவதை நோக்கி முன்னேறியது. இது பின்வரும் சர்வதேச தரநிலைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் சீரமைக்கப்பட்டுள்ளது:

- தர மேலாண்மை அமைப்புகள் (ISO 9001)
- சேவை மேலாண்மை அமைப்புகள் (ISO 20000-1)
- தகவல் தொழில்நுட்பம் உள்கட்டமைப்பு நூலகம் (ITIL) சிறந்த நடைமுறைகள்
- இடர் மேலாண்மை (ISO 31000)
- தகவல் பாதுகாப்பு மேலாண்மை அமைப்புகள் (ISO 27001)
- திட்ட மேலாண்மை அறிவுத் தொகுதி (PMBOK)

## முன்னோக்கிய மூலோபாய மாற்றம்

இலங்கை வங்கி தனது டிஜிட்டல் மாற்றத்தை முன்னெடுக்கும் வேளையில், இந்த ஆண்டு எட்டப்பட்ட முன்னேற்றங்களைக் கொண்டு தனது டிஜிட்டல் சூழல் முழுவதும் மீள்திறன், அணுகல்தன்மை மற்றும் நம்பிக்கையை மேம்படுத்தும் முயற்சிகளைத் தொடரும்.

### குறுகிய காலம்

- தொடர்புடைய திறன் கொண்ட நிபுணர்களை ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் டிஜிட்டல் மாற்றத்தை விரைவுபடுத்துதல்.
- BOC Flex செயலியை அரசாங்கத்தின் இலத்திரனியல் வழிகாட்டல் மற்றும் மத்திய வங்கியின் டிஜிட்டல் வழிகாட்டல்களுடன் சீரமைக்கப்பட்ட கூடுதல் சேவைகளைக் கொண்ட ஒரு “சூப்பர் ஆப்” ஆக மேம்படுத்துதல்.
- வெளிநாட்டுக் கிளை வாடிக்கையாளர்களுக்காக ஒரு “சூப்பர் ஆப்” உருவாக்குதல்.
- வாடிக்கையாளர் பதிலளிப்புத் தன்மையை மேம்படுத்த செயற்கை நுண்ணறிவு திறன்களுடன் கூடிய புதிய தொடர்பு மையத் தீர்வை அறிமுகப்படுத்துதல்.
- செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தனிப்பயனாக்கப்பட்ட வங்கிச் சேவைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் நிதி அணுகலுக்கான டிஜிட்டல் கடன் வழங்கும் தளங்களை விரிவுபடுத்துதல்.
- தற்போதுள்ள பிரதான வங்கி முறைமையை மேம்பட்ட அம்சங்களுடன் புதுப்பித்தல்.
- பணியாளர் வினைத்திறனை வலுப்படுத்த புதிய “கிளவுட்” அடிப்படையிலான மனிதவளத் தீர்வை செயல்படுத்துதல்.

### நடுத்தர முதல் நீண்ட காலம்

- அளவிடக்கூடிய தன்மை, நம்பகத்தன்மை மற்றும் வினைத்திறனுக்காக கிளவுட்-அடிப்படையிலான உட்கட்டமைப்பு மாற்றத்தை முன்னெடுத்தல்.
- வாடிக்கையாளர் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் தொடர்ந்து ஒழுங்குமுறை இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும் இணையப் பாதுகாப்பு, மோசடி கண்காணிப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆளுகை கட்டமைப்புகளை மேம்படுத்துதல்.
- சேவை வழங்கல் மற்றும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்த, வலுவான நெறிமுறைப் பாதுகாப்புகளுடன் கூடிய பகுப்பாய்வு, செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு ஆளுகையை ஆழப்படுத்துதல்.

# நிலைத்தன்மையான எதிர்காலத்தை உருவாக்குதல்

GRI 3-3



| ரூ. 73.0 பில்லியன் | 28 | 4.3 மெகாவாட் | இரண்டு | ரூ. 780.5 மில்லியன் | இரண்டு |
|---|---|---|---|---|---|
| பேண்தகு தன்மையுடைய நிதியளிப்பு | புதிய சூரிய சக்தியூட்டப்பட்ட கிளைகள் | நிறுவப்பட்ட சூரிய சக்தி இயலளவு | புதிய பசுமைக் கட்டிடங்கள் | சமூக முதலீடு | புதிய "பி.ஓ.சி கமமான" திட்டங்கள் |

ஒரு ரூபிக் கனசதுரத்தைத் தீர்ப்பதைப் போலவே, நிலையான முன்னேற்றத்திற்கும் ஒவ்வொரு முடிவும் ஒட்டுமொத்த அமைப்பை எவ்வாறு பாதிக்கிறது என்பதைப் புரிந்துகொள்வதும், பல்வேறு கூறுகளை ஒரு பொதுவான இலக்கை நோக்கி ஒருங்கிணைப்பதும் அவசியமாகும். இலங்கை வங்கியில், நிலைத்தன்மை என்பது வங்கியின் மூலோபாயக் கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டு நெறிமுறைகளில் ஆழமாகப் பதிந்துள்ளது. இது நிறுவனம் முழுவதும் முடிவெடுத்தல், இடர் மேலாண்மை மற்றும் மதிப்பு உருவாக்கம் ஆகியவற்றை வடிவமைக்கிறது. தேசிய முன்னேற்றம் மற்றும் பொறுப்பான நிதி மேலாண்மைக்கான நீண்டகால அர்ப்பணிப்பால் வழிநடத்தப்படும் வங்கி, சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) கொள்கைகளை தனது பிரதான வணிக மாதிரியில் ஒருங்கிணைக்கிறது. இதன் மூலம், மீள்திறன், பொறுப்புக்கூறல் மற்றும் நீண்டகால சமூகத் தாக்கம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி வளர்ச்சியினை முன்னெடுக்கிறது.

ஆளுகை கட்டமைப்புகள், தயாரிப்பு புத்தாக்கம் மற்றும் பங்குதாரர்களின் ஈடுபாடு ஆகியவற்றில் நிலைத்தன்மையை உட்பொதிப்பதன் மூலம், வளர்ந்து வரும் உலகளாவிய மற்றும் உள்ளூர் சவால்களை நிலையான வளர்ச்சிக்கான வாய்ப்புகளாக வங்கி தொடர்ந்து மாற்றுகிறது.

### SDGs இன் தாக்கம்

### பொருண்மை தலைப்பு

## 2025 ஆம் ஆண்டிற்கான சூழல்

- காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வளக் கட்டுப்பாடுகள் வங்கியின் செயல்பாட்டு மீள்திறன், செலவுக் கட்டமைப்புகள் மற்றும் நீண்டகால நிதி உறுதிப்பாட்டினை தொடர்ந்து பாதித்தன. இது வினைத்திறனான வள மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்பின் அவசியத்தை வலியுறுத்தியது.
- வளர்ந்து வரும் ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் பங்குதாரர்களின் அதிகரித்த எதிர்பார்ப்புகள் காரணமாக, நிலைத்தன்மை ஆளுகை, காலநிலை தொடர்பான வெளிப்பாடுகள் மற்றும் முடிவெடுத்தலில் சுற்றுச்சூழல் மற்றும் சமூகக் காரணிகளை ஒருங்கிணைப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

- தற்போதைய சமூக-பொருளாதார அழுத்தங்கள், வாழ்வாதாரங்கள் மற்றும் தேசிய மீள்திறனை ஆதரிப்பதில் நிதி உள்ளடக்கல், சமூக மேம்பாடு மற்றும் பொறுப்பான வங்கி நடைமுறைகளின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டின.
- செயல்பாட்டு வினைத்திறன் மற்றும் செலவுக் கட்டுப்பாட்டிற்கு (Cost discipline) வழங்கப்பட்ட அதிக முக்கியத்துவம், சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கும் அதேவேளையில் உற்பத்தித்திறனை வலுப்படுத்துவதில் எரிசக்தி வினைத்திறன், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தானியங்கி முறை ஆகியவற்றின் பங்கினை வெளிப்படுத்தியது.
- விநியோகச் சங்கிலிகள் மற்றும் கொள்முதல் நடைமுறைகள் மீதான தீவிரக் கண்காணிப்பு, பொறுப்பான மூலப்பொருள் திரட்டல், நெறிமுறை சார்ந்த தொழிலாளர் தரநிலைகள் மற்றும் மூன்றாம் தரப்பு உறவுகளில் மேம்படுத்தப்பட்ட வெளிப்படைத்தன்மை ஆகியவற்றின் அவசியத்தை உறுதிப்படுத்தியது.

# நிலைத்தன்மையான எதிர்காலத்தை உருவாக்குதல்

## மூலோபாயத் தூண்

### உள்ளடக்கிய மற்றும் நிலையான தேசிய வளர்ச்சியை ஊக்குவித்தல்

உள்நாட்டு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிதி நிறுவனம் என்ற வகையில், இலங்கையின் பொருளாதார மீள்திறன் மற்றும் நீண்டகால வளர்ச்சியை முன்னெடுப்பதில் இலங்கை வங்கி முக்கிய பங்கு வகிக்கிறது. பொறுப்பான வங்கிச் செயல்பாட்டுக் கொள்கைகளின் வழிகாட்டுதலுடன், வங்கி தனது செயல்பாடுகளில் சமூகத் தாக்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மூலோபாயக் கூட்டாண்மைகளை ஒருங்கிணைக்கிறது. அபிவிருத்திக் கடன்கள், சமூக முதலீடு மற்றும் நிலையான நிதியளிப்பு ஆகியவற்றின் மூலம், வங்கி உற்பத்தித் துறைகளை ஆதரிப்பதுடன், சமூகங்களை வலுப்படுத்தி, உள்ளடக்கிய மற்றும் நிலையான தேசிய பொருளாதாரத்திற்குப் பங்களிக்கிறது.

### முன்னுரிமைப் பகுதிகள்:

- பொருளாதார உறுதிப்பாடு மற்றும் சமூக வலிமையை வளர்த்தல்
- தொழில்துறை மற்றும் பங்காளர் வலையமைப்புகளுக்கு இடையே வலுவான ஒத்துழைப்பை உருவாக்குதல்.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கார்பன் முகாமைத்துவம் மற்றும் பாதிப்புகளைக் குறைத்தல்.

**முன்னுரிமைப் பகுதி : 01**

## பொருளாதார உறுதிப்பாடு மற்றும் சமூக வலிமையை வளர்த்தல்

### தேசிய பொருளாதார உறுதிப்பாடு மற்றும் வளர்ச்சியை ஆதரித்தல்

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனம் என்ற வங்கியின் பங்களிப்பில் சமூக-பொருளாதார உறுதிப்பாடு மிக முக்கியமானது. குடும்பங்கள், நிறுவனங்கள் மற்றும் பொது உள்கட்டமைப்புகளுடன் கொண்டுள்ள ஆழமான தொடர்புகளின் மூலம், நிதியுதவிக்கான அணுகலை வழங்குதல், உற்பத்தித் துறைகளை ஆதரித்தல் மற்றும் தேசிய மீட்பு மற்றும் மேம்பாட்டு முயற்சிகளுக்குப் பங்களிப்பதன் மூலம் பொருளாதார மீள்திறனை வங்கி தொடர்ந்து ஆதரித்தது.

இலங்கையின் முன்னேற்றப் பயணத்தில் ஒரு உறுதியான பங்காளராக, இலங்கை வங்கி சமூகங்களை வடிவமைக்கும், உள்ளூர் உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் முயற்சிகளை முன்னெடுக்கிறது. வங்கியின் மூலோபாய முதலீடுகள் உடனடித் தாக்கத்திற்கு அப்பால், நீண்டகால பொருளாதார உறுதிப்பாட்டினை வளர்ப்பதுடன் இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றன. இம்முயற்சிகள் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும், மீள்திறனை வளர்ப்பதிலும் மற்றும் நிலையான செழிப்பை நோக்கிய தேசத்தின் பாதையை வலுப்படுத்துவதிலும் நீடித்ததொரு முத்திரையைப் பதிக்கின்றன.

### முக்கிய துறைகளுக்கான நிதியளிப்பு:

| | |
|---|---|
| ரூ. 493.4 பில்லியன் | வீடமைப்பு மற்றும் கட்டடவாக்கம் |
| ரூ. 159.7 பில்லியன் | விவசாயம் மற்றும் மீன்பிடி |
| ரூ. 206.9 பில்லியன் | தயாரிப்புத் துறை |
| ரூ. 109.5 பில்லியன் | சுற்றுலாத் துறை |

### அபிவிருத்தி நிதி மூலம் சமூகங்களை வலுப்படுத்துதல் GRI 413-1, 203-1,2

இலங்கை வங்கி நீண்டகாலமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு தூணாக விளங்கி வருகிறது. முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய துறைகளுக்கு கடனுதவி வழங்குவதில் முன்னுரிமை அளிப்பதன் மூலம் அந்தந்த துறைகளின் வளர்ச்சியை வங்கி ஊக்குவிக்கிறது.

### அபிவிருத்திக் கடன்கள்

அபிவிருத்திக் கடன்கள் மூலம், விவசாயம், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் உட்கட்டமைப்பு போன்ற அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் துறைகளுக்கு வங்கி மூலோபாய ரீதியாக கடன்களை வழங்குகிறது. இந்த இலக்கு வைக்கப்பட்ட முதலீடுகள் அந்தந்த துறைகளை விரிவுபடுத்துவது மட்டுமல்லாமல், வேலைவாய்ப்புகளை உருவாக்கி, உற்பத்தித்திறனை அதிகரித்து, பிராந்திய வளர்ச்சியைத் தூண்டுகின்றன.

**அபிவிருத்திக் கடன் பட்டியல்:** %




- விவசாயம்
- சுற்றுலா மற்றும் பயணம்
- ஆடைத் தொழில்
- உணவு பதப்படுத்துதல்
- ஏனையவை (உள்ளூர் கைவினைப்பொருட்கள், மட்பாண்டங்கள் போன்றவை)
- பசுமை வணிகங்கள்
- நுண்நிதி

### நுண்நிதி மூலம் அடிமட்ட மக்களை சென்றடைதல்

தனது பேரியல் மட்டத்திலான முன்முயற்சிகளுக்கு மேலதிகமாக, வங்கி உள்ளடக்கிய நிதியியலில் அர்ப்பணிப்புடன் உள்ளதுடன், போதிய வசதியற்ற சமூகங்களுக்கு நிதிச் சேவைகளைக் கொண்டு சேர்க்கிறது. பாதுகாப்பான சேமிப்பு, நிதியைப் பெற்றுக்கொள்வதில் எளிமை மற்றும் பரந்த பொருளாதார வாய்ப்புகளில் பங்கேற்பது ஆகியவற்றை இந்த அணுகல் சாத்தியமாக்குவதுடன், நீண்டகால நிதி மீள்திறனுக்கான அடித்தளத்தையும் உருவாக்குகிறது.

**நுண் நிதி**

**ரூபா 25.9 பில்லியன்**
புதிய கடன்கள்

**ரூபா 7.2 பில்லியன்**
பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான கடன்கள்

### இலங்கை வங்கியின் மித்துரு GRI 413-1

அடிமட்ட அளவில், வங்கி "மித்துரு" குழுக்களை உருவாக்குகிறது. இவை சமூக அடிப்படையிலான கடன் வழங்கும் வட்டங்களாகும். இவை போதிய வசதியற்ற குழுக்களுக்குக் கூட்டு ஆதரவு, பகிரப்பட்ட வளங்கள் மற்றும் நிதி அணுகலை வழங்குகின்றன. இம்முயற்சிகள் சமூகங்களுக்குள் ஒற்றுமை, நம்பிக்கை மற்றும் நிலையான பொருளாதார நடவடிக்கைகளை வளர்க்கின்றன.

**பி.ஓ.சி மித்துரு குழுக்கள்:** %




### வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் வாழ்க்கையை வலுப்படுத்துதல்

வங்கியின் கடன் வழங்கும் சுற்றுச்சூழல் அமைப்பானது, நிதி அறிவை நோக்கிய தங்களின் முதல் அடிகளை எடுத்து வைக்கும் மாணவர்கள் முதல் உள்ளூர் வளர்ச்சியை முன்னெடுக்கும் சமூக தொழில்முனைவோர் வரை, அவர்களின் நிதிப் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவினரதும் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப தயாரிப்புகளையும் திட்டங்களையும் வடிவமைப்பதன் மூலம், நிதி உள்ளடக்கல் மற்றும் அதிகாரமளித்தல் ஆகியன வெறும் கருத்துக்கள் மட்டுமல்ல, அவை இலங்கை முழுவதும் உறுதியான யதார்த்தங்கள் என்பதை வங்கி உறுதிப்படுத்துகிறது.

### அடுத்த தலைமுறையை வளர்த்தல்

இலங்கை வங்கி மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தையும் நிதி விழிப்புணர்வையும் சிறுவயதிலேயே வளர்க்க உதவுகிறது. ஐந்தாம் தர ஹுபன புலமைப்பரிசில் திட்டம் மற்றும் கருத்தரங்குகள் மூலம் 15,000-க்கும் மேற்பட்ட தகுதியான மாணவர்களுக்குக் கல்வி வாய்ப்புகள் வழங்கப்பட்டன. அதேபோல், பி.ஓ.சி சன்சத (பாடசாலைச் சேமிப்பு அலகுகள் சிறுவயதிலிருந்தே பொறுப்பான பண முகாமைத்துவக் கலாச்சாரத்தைப் புகுத்துகின்றன. நஜைய தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் போன்ற விழிப்புணர்வு திட்டங்களின் ஊடாக, 6,000 இற்கும் மேற்பட்ட பதின்ம வயது இளைஞர்கள் தங்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை முன்னேற்றத்திற்கான புதிய வழிகளை ஆராய்வதற்காக, அவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனைகளும் நிதி வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

### இளைஞர்களின் அபிலாசைகளை ஆதரித்தல்

இளைஞர்களின் அபிலாசைகளும் ஆற்றல்களும் இலங்கையின் நீண்டகால சமூக-பொருளாதார முன்னேற்றத்திற்கு மிக முக்கியமானவை என்பதை உணர்ந்து, கல்வி மற்றும் நிதி அதிகாரமளித்தல் சார்ந்த பல்வேறு முயற்சிகள் ஊடாக இளைஞர்களின் மேம்பாட்டிற்கு வங்கி தொடர்ந்து ஆதரவளித்து வந்தது.

இம்முயற்சிகளுக்குத் துணையாக, டீமுஊ இளைஞர் கடன்கள் தொழில்முனைவு, திறன் மேம்பாடு மற்றும் ஆரம்பகட்ட வணிக முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட நிதி வசதிகளை இளம் வயதினருக்கு வழங்குகின்றன. இந்த நிதித் தீர்வுகளின் மூலம், நாடளாவிய ரீதியில் 19,000 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் தங்களது கருத்துக்களை சாத்தியமான வணிகங்களாக மாற்றுவதற்கும், புதுமைப் புனைவுகளை வளர்ப்பதற்கும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் மற்றும் நாட்டின் பொருளாதாரப் பங்களிப்பில் ஈடுபடுவதற்கும் வங்கி வழிவகுத்துள்ளது.

மேலதிகமாக, "Dream Builders" (கனவு உருவாக்குபவர்கள்) முன்முயற்சியானது, இளைஞர்கள் தங்களின் தொழில்முறை இலக்குகளை நம்பிக்கையுடன் கற்பனை செய்து, அதனை நோக்கிப் பயணிப்பதை ஊக்குவிப்பதன் மூலம், அவர்களிடையே தொழில்முனைவோர் சிந்தனையையும் லட்சியத்தையும் வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறது.

### சமூகத் தாக்கத்தை மையமாகக் கொள்ளல் GRI 413-1

வங்கி தனது பெருநிறுவன நோக்கத்தின் தூண்களாக சமூக மேம்பாட்டையும் திறன் மேம்பாட்டையும் தொடர்ந்து உள்வாங்கிச் செயல்படுகிறது. வங்கியின் நிலைபேற்றுத்தன்மைக் கட்டமைப்பில் வேரூன்றியுள்ள இம்முயற்சிகள், பாரம்பரிய நிதிச் சேவைகளுக்கு அப்பாற்பட்டு, இலங்கை முழுவதும் உள்ள சமூகங்களுக்கு அதிகாரமளித்தல், வாழ்வாதாரங்களை வலுப்படுத்துதல் மற்றும் சமூக மீள்திறனைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றை நோக்கியதாக விரிவடைந்துள்ளன. மூலோபாய சமூக முதலீடுகள், பணியாளர்களினால் முன்னெடுக்கப்படும் முயற்சிகள் மற்றும் உள்ளடக்கிய வங்கித் தீர்வுகள் ஆகியவற்றின் மூலம் வங்கி உறுதியான சமூகத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இலங்கை வங்கி கம்மான முன்னெடுப்பு போதிய வசதியற்ற கிராமப்புற சமூகங்களை முழுமையாக மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு முன்னோடித் திட்டமாகும். இந்த ஆண்டில், தென் மாகாணத்தின் தெய்யந்தர, கொம்பத்தல பகுதியிலும், ஊவா மாகாணத்தின் பிபிலை, நாகல பகுதியிலும் இரண்டு புதிய இலங்கை வங்கி கம்மான திட்டங்கள் நிறுவப்பட்டு, 4,600-க்கும் மேற்பட்ட பயனாளிகள் வலுப்படுத்தப்பட்டனர். இந்த முன்முயற்சியானது நீண்டகால பொருளாதார நிலைபேற்றுத்தன்மையை வளர்க்கும் அதேவேளையில், உள்கட்டமைப்பு மேம்பாடு, நிதி அறிவு மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைக்கிறது.

**முக்கிய சிறப்பம்சங்கள்:**

- சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அமைப்புகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகள் போன்ற அத்தியாவசியச் சமூக உள்கட்டமைப்புகளை மேம்படுத்தல்.
- கணினி ஆய்வகங்கள், ஸ்மார்ட் வகுப்பறைகள் மற்றும் நூலகங்கள் உள்ளிட்ட கல்வி வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் டிஜிட்டல் அறிவை வளர்த்தல்.
- இலங்கை வங்கி மித்துரு குழுக்கள் மற்றும் "ரண கெக்குளு சன்சத" சேமிப்புத் திட்டங்கள் மூலம் குறிப்பாக சிறுவர்கள் மற்றும் பெண்களிடையே நிதி அறிவை வலுப்படுத்துதல்.
- மரம் நடுதல், வீதி பெயர்ப்பலகைகள் மற்றும் பொது இடங்களை அழகுபடுத்துதல் மூலம் சமூகப் பெருமிதத்தை ஊக்குவித்தல்.

# நிலையான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல்

இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறையானது, மேம்பாட்டுச் செயல்பாடுகள் அனைவரின் பங்களிப்புடனும், நிலைத்தன்மை கொண்டதாகவும், நிதி உள்ளடக்கல் இலக்குகளுடன் சீரமைக்கப்பட்டதாகவும் இருப்பதை உறுதி செய்கிறது.

2025 ஆம் ஆண்டில், சூறாவளி நிவாரணம், சுகாதாரம் மற்றும் கல்வி முதல் சமூக உள்கட்டமைப்பு வரையிலான பல்வேறு முயற்சிகளுக்காக வங்கி ரூபா 780.5 மில்லியனைப் பங்களித்தது. இதன் மூலம் சமூகப் பொறுப்புள்ள மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு நிறுவனம் என்ற தனது நிலையை மீண்டும் உறுதிப்படுத்தியது. இதில் சமீபத்திய டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் நிவாரணம், மீட்பு மற்றும் மறுவாழ்வு முயற்சிகளுக்காக “இலங்கையைக் கட்டியெழுப்புவோம்” (நிதிக்கு வங்கி வழங்கிய ரூபா 500.0 மில்லியன் பங்களிப்பும் அடங்கும்.

### ஊழியர்களின் தன்னார்வத் தொண்டு அர்ப்பணிப்பைச் செயலாக மாற்றுதல்

வங்கியின் சமூக இலக்குகளை அளவிடக்கூடிய முடிவுகளாக மாற்றுவதில் ஊழியர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். 2025 ஆம் ஆண்டில், ஊழியர்கள் பல மணிநேரங்களை பின்வரும் பணிகளுக்காக அர்ப்பணித்தனர்:

**முக்கிய குறிப்புக்கள்**

- கிராமப்புற மக்களுக்குச் சேமிப்பு, வரவு செலவுத் திட்டம் மற்றும் சிறுதொழில் மேலாண்மை ஆகியவற்றுக்கு வழிகாட்டும் நிதி அறிவுத் திட்டங்கள்.
- குறுதொழில் உரிமையாளர்களுக்குச் செயல்பாட்டு மற்றும் மூலோபாயத் திட்டமிடலில் ஆதரவளிக்கும் தொழில்முனைவோர் வழிகாட்டல்.
- பள்ளிப் புனரமைப்புகள், சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பிரசாரங்கள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடுகள் உள்ளிட்ட சமூக சேவைத் திட்டங்கள்.
- மாகாணங்கள் முழுவதும் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 50.0 மில்லியன் இலங்கை ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் நன்கொடை

ஊழியர்களின் தன்னார்வத் தொண்டு BOC இன் பச்சாத்தாபம் மற்றும் சேவை கலாச்சாரத்தை உள்ளடக்கியது, இது வங்கியின் கிளைகளுக்கு அப்பால் அதன் வரம்பை பெருக்குகிறது.

**முன்னுரிமைப் பகுதி : 02**

## தொழில்துறை மற்றும் பங்காளர் வலையமைப்புகளுக்கு இடையே வலுவான ஒத்துழைப்பை உருவாக்குதல்

### கூட்டு ஈடுபாடுகள்

சமூகத்தின் குறிப்பிட்ட தேவைகளை நிவர்த்தி செய்யும் முன்முயற்சிகளை வடிவமைத்துச் செயல்படுத்த, அரசாங்க நிறுவனங்கள், சிவில் சமூகம் மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் வங்கி நெருக்கமாகப் பணியாற்றுகிறது. கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையுடன்இணைந்து முன்னெடுக்கப்படும் “எமது கடற்கரைக்கு உயிர் கொடுப்போம்” கடற்கரை சுத்தம் செய்தல் திட்டம், மனித-யானை மோதலைக் குறைப்பதில் கவனம் செலுத்தும் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்துடனான “வனவிலங்கு தின“ நினைவேந்தல் மற்றும் ஜோன் கீல்ஸ் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும் பிளாஸ்டிக் மறுசுழற்சி திட்டம் ஆகியவை சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக ஈடுபாட்டில் வங்கியின் ஒருங்கிணைந்த அணுகுமுறையை வெளிப்படுத்துகின்றன.

சுற்றுச்சூழல் சார்ந்த ஈடுபாட்டின் ஒரு பகுதியாக, தேசிய காலநிலை மற்றும் காடு வளர்ப்பு முயற்சிகளுக்கு இணங்க முன்னெடுக்கப்பட்ட மரநடுகை முன்முயற்சிக்கு ஆதரவளிப்பதற்காக வங்கி, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் கூட்டு சேர்ந்தது. இது நீண்டகால கார்பன் குறைப்பு மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு மறுசீரமைப்புக்கான வங்கியின் அர்ப்பணிப்பை மேலும் வலுப்படுத்துகிறது.

### தாக்கத்தை ஏற்படுத்தும் பங்காண்மைகளை உருவாக்குதல்

GRI 2-28

முக்கிய தொழில்துறை சங்கங்கள், தொழில்முறை அமைப்புகள் மற்றும் கூட்டுத் தளங்களில் கொண்டுள்ள அங்கத்துவங்களின் ஊடாக, இலங்கையின் நிதிச் சேவை சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்துவதில் வங்கி தொடர்ந்து ஒரு முக்கிய பங்கை வகித்து வருகிறது. இந்த கூட்டாண்மைகள் அறிவுப் பகிர்வு, ஒழுங்குமுறை ஈடுபாடுகள் மற்றும் கூட்டு முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதுடன், வங்கித் துறையினதும் பரந்த பொருளாதாரத்தினதும் ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சிக்கு பங்களிக்கின்றன.

இந்த நிறுவனங்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதன் மூலம், வங்கியானது பகிரப்பட்ட நிபுணத்துவம், தொழில்துறை நுண்ணறிவுகள் மற்றும் கூட்டுப்பணிகளுக்கான வாய்ப்புகளிலிருந்து பயனடைகிறது. இவை வங்கியின் ஆற்றல்களை மேம்படுத்துவதுடன், பொறுப்பான மற்றும் முற்போக்கான வங்கி நடைமுறைகளுக்கான அர்ப்பணிப்பை மேலும் வலுப்படுத்துகின்றன.

இந்த ஆண்டில் வங்கி பின்வரும் நிறுவனங்களில் செயலில் உறுப்பினராக இருந்தது:

#### தொழில்துறை சங்கங்கள்:

- இலங்கை வங்கிகள் சங்கம் (SLBA), (உத்தரவாத) லிமிடெட்
- இலங்கையின் தேசிய வர்த்தக சபை,
- சிலோன் வர்த்தக சபை,
- ஆசிய பசிபிக் கிராமப்புற மற்றும் விவசாய கடன் சங்கம் (APRACA)

#### தொழில்முறை மற்றும் துறை சார்ந்த அமைப்புகள்:

- இலங்கை வங்கிகளின் இணக்கப்பாட்டு உத்தியோகத்தர்கள் சங்கம்
- இலங்கை வங்கித் துறை இடர் நிபுணர்கள் சங்கம்.

#### ஆளுகை மற்றும் நிறுவன அமைப்புகள்:

- இலங்கையின் நிதி ஒம்புட்ஸ்மேன் (உத்தரவாத) லிமிடெட்
- இலங்கை சட்ட நூலகம்
- இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

#### நிலைத்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் தளங்கள்:

- இலங்கையின் பசுமைக் கட்டிடக் கழகம்
- பல்லுயிரியம், இலங்கை

### உள்ளூர் வழங்குநர்களை ஆதரித்தல்

GRI 204-1

இலங்கை வங்கியில், உள்ளூர் வழங்குநர்களை ஆதரிப்பது எமது பொறுப்பான மற்றும் நிலையான வணிக அர்ப்பணிப்பின் ஒரு முக்கிய பகுதியாகும். உள்ளூர் மூலப்பொருள் திரட்டலுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், இலங்கைப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கும் மீள்திறனுக்கும் பின்வருமாறு பங்களிக்கிறோம்:

**முக்கிய குறிப்புக்கள்:**

- **உள்ளூர் வணிகங்களை வலுப்படுத்துதல்:** கொள்முதல் ஒப்பந்தங்கள் மூலம் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் உள்ளூர் விற்பனையாளர்களை ஈடுபடுத்தி, அவர்கள் வளரவும் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் உதவுதல்.
- **பேண்தகு விநியோகச் சங்கிலி:** சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பொறுப்புள்ள நடைமுறைகளைப் பின்பற்றுமாறு வழங்குநர்களை ஊக்குவித்தல்.

- **பொருளாதாரத் தாக்கம்:** நாட்டின் வணிகப் பெறுமதியை நாட்டிற்குள்ளேயே தக்கவைத்தல், சமூக மேம்பாட்டை வளர்த்தல் மற்றும் இறக்குமதிகள் மீதான தேவையைக் குறைத்தல்.
- **கூட்டாண்மை மற்றும் வளர்ச்சி:** பொறுப்புள்ள ஒரு நிறுவனம் என்ற வங்கியின் பங்களிப்பை உறுதிப்படுத்தும் வகையில், பரஸ்பர நன்மையளிக்கும் நீண்டகால உறவுகளைக் கட்டியெழுப்புதல்.

இந்த முன்னெடுப்புக்களின் மூலம், உள்ளூர் விநியோகஸ்தர்களுடனான ஒவ்வொரு கூட்டாண்மையும் பரந்த பொருளாதார மீள்திறன் மற்றும் நிலைத்தன்மைக்கு ஆதரவளிப்பதை வங்கி உறுதி செய்கிறது.

உள்ளூர் விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுப்பனவுகள்

**ரூபா 9.0 பில்லியன்**

மொத்த வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகளில் **84%**

முன்னுரிமைப் பகுதி : 03

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கார்பன் முகாமைத்துவம் மற்றும் பாதிப்புகளைக் குறைத்தல்

### கார்பன் மற்றும் வள நுகர்வைக் குறைத்தல்

GRI 302-1| 305-4

டிஜிட்டல் நிலைமாற்றம், ஆற்றல் தணிக்கைகள் மற்றும் பசுமைக் கட்டிட நடைமுறைகள் ஆகியன வங்கிச் செயல்பாடுகள் முழுவதிலும் வளங்களின் தீவிரப் பயன்பாட்டைத் தொடர்ந்து குறைத்து வருகின்றன. தானியக்கமாக்கல் மற்றும் காகிதமற்ற செயல்முறைகள் செயல்பாட்டுத் திறனை வலுப்படுத்திய அதேவேளையில், ஆற்றல் வினைத்திறனையும் மேம்படுத்தியுள்ளன.

மேம்படுத்தப்பட்ட வினைத்திறன் மற்றும் குறைக்கப்பட்ட ஆற்றல் தீவிரத்திற்கான வாய்ப்புகளைக் கண்டறிவதற்காக, இலங்கை வங்கியின் தலைமை அலுவலகக் கட்டிடத்தில் விரிவான ஆற்றல் தணிக்கை ஒன்று நடத்தப்பட்டது. இதன் மூலம் பெறப்பட்ட பரிந்துரைகள் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன், இவை செயல்பாட்டுத் திறன் மற்றும் செலவுக் கட்டுப்பாடுகளில் அளவிடக்கூடிய மேம்பாடுகளுக்கு ஆதரவளிக்கின்றன.

தலைமையகக் கட்டிடத்தில் விரிவான எரிசக்தி தணிக்கை நடத்தப்பட்டு, அதன் பரிந்துரைகள் கட்டம் கட்டமாகச் செயல்படுத்தப்படுகின்றன. இந்த ஆண்டில், வங்கியின் மொத்த எரிசக்தி நுகர்வு 177.5 TJ ஆக இருந்ததுடன் இதில் 81.0 TJ எரிபொருள் நுகர்வுக்கு வகை கூறியது.

தள மட்டத்தில் பொறுப்புக்கூறலை வலுப்படுத்துவதற்காக, இலங்கை நிலைபெறுதகு ஆற்றல் அதிகாரசபையின் ஆற்றல் தரக்குறியீட்டு ஒழுங்குமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இணங்க, கிளை நெட்வொர்க் முழுவதும் ஆற்றல் மேலாண்மை அதிகாரிகள் (Energy Management Officers) நியமிக்கப்பட்டனர். இந்த அதிகாரிகள் ஆற்றல் நுகர்வைக் கண்காணிப்பதற்கும், ஆண்டிற்கு ஒரு சதுர மீட்டருக்கு 180 kWh என பரிந்துரைக்கப்பட்ட வினைத்திறன் தரக்குறியீட்டுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்கும் பொறுப்பானவர்கள் ஆவர். இக்கண்காணிப்பானது மின்சாரத்திற்கு அப்பாற்பட்டு, நீர் பயன்பாடு மற்றும் எரிபொருள் நுகர்வு ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக விரிவடைந்து, செயல்பாட்டு வள தீவிரத்தன்மை பற்றிய ஒரு விரிவான பார்வையை வழங்குகிறது.

இதற்கு இணங்க, கிளை நெட்வொர்க் முழுவதிலும் உள்ள சுற்றுச்சூழல் செயல்திறன் தரவுகளை மத்திய மயமாக்கப்பட்ட முறையில் சேகரிப்பதை சாத்தியமாக்குவதற்காக, உள்வாரியாக உருவாக்கப்பட்ட நிதி-சாரா தரவு மேலாண்மை அமைப்பு ஒன்றின் மேம்பாட்டை வங்கி தொடங்கியது. இந்த அமைப்பானது கைமுறை தரவு சேகரிப்பில் இருந்து கட்டமைக்கப்பட்ட, கணினி சார்ந்த அறிக்கையிடலுக்கு மாறுவதன் மூலம், தரவுகளின் கண்டறியும் தன்மையை வலுப்படுத்துகிறது, உள்வாரி கட்டுப்பாடுகளை மேம்படுத்துகிறது மற்றும் தணிக்கை தயார்நிலையை உயர்த்துகிறது.

ஒட்டுமொத்தமாக, இந்நடவடிக்கைகள் செயல்பாட்டு கார்பன் மேலாண்மைக்கான மிகவும் ஒழுக்கமைக்கப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் பிரதிபலிப்பதுடன், வங்கி முழுவதும் அன்றாட முடிவெடுப்பதில் ஆற்றல் செயல்திறன் மேற்பார்வையை ஆழமாகப் புகுத்துகின்றன.

| | 2025 | 2024 | மாற்றம் % |
|---|---|---|---|
| மின்சார நுகர்வு (MWh) | 26,809 | 25,820 | 4 |
| எரிபொருள் நுகர்வு ($m^3$) | 959 | 233 | 312 |
| புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் % | 21 | 18 | |

வணிகச் செயல்பாடுகளின் விரிவாக்கத்திற்கு ஏற்ப, இந்த ஆண்டில் எரிபொருள் நுகர்வு அதிகரித்துள்ளது.

### நிலையான உட்கட்டமைப்பு மற்றும் எரிசக்தி பயன்பாடு

வங்கியினால் மேற்கொள்ளப்படும் அனைத்து புதிய கட்டுமானத் திட்டங்களும் பசுமைக் கட்டிடக் பேரவையின் தரநிலைகளுக்குத் தொடர்ந்து இணங்கி நடப்பதுடன், இது ஆற்றல்-வினைத்திறன் மிக்க உட்கட்டமைப்பு மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பொறுப்பான வடிவமைப்பு மீதான நீண்டகால அர்ப்பணிப்பை வலுப்படுத்துகிறது. இந்த அர்ப்பணிப்பானது பல ஆண்டுகளாக பசுமைக் கட்டிடக் பேரவையின் பசுமை வணிகத் தலைமைத்துவ விருதின் மூலம் தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்டு வந்துள்ளது.

இதுவரை, பசுமைக் கட்டிடக் பேரவையின் சான்றிதழின் கீழ் 12 கிளைகள் சுற்றுச்சூழலுக்கு உகந்த கட்டிடங்களாக நியமிக்கப்பட்டுள்ளன.

இவ்வருடத்தில் பசுமை ஆற்றல் பயன்பாடு தொடர்ந்து விரிவடைந்ததுடன், 101 கிளைகள் கூரைமேல் சூரிய சக்தி உள்கட்டமைப்புகளுடன் வசதிப்படுத்தப்பட்டு, வங்கியின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தளத்தை வலுப்படுத்தும் வகையில் மொத்தம் 4.3 ஆறு கொள்ளளவைக் கொண்டிருந்தன. தளத்திலான சூரிய சக்தி உற்பத்தியின் இந்த விரிவாக்கமானது, மின்சார விநியோகக் கட்டமைப்பிலான தங்கியிருப்பைக் குறைப்பதுடன், குறைவான செயல்பாட்டு உமிழ்வுகளுக்குப் பங்களிக்கிறது மற்றும் கிளை நெட்வொர்க் முழுவதும் அதிக ஆற்றல் பாதுகாப்பிற்கு ஆதரவளிக்கிறது.

புதுப்பிக்கத்தக்க ஆற்றலைத் தனது உள்கட்டமைப்பு உத்தியுடன் ஒருங்கிணைப்பதன் மூலம், வங்கி தனது சுற்றுச்சூழல் தடயத்தைக் குறைப்பது மட்டுமல்லாமல், நீண்டகால செலவு ஸ்திரத்தன்மையை மேம்படுத்துகிறது மற்றும் பிராண்ட் நற்பெயரையும் உயர்த்துகிறது. சூரிய சக்தி உற்பத்தியானது எதிர்கால மின்சார விலை ஏற்ற இறக்கங்களின் தாக்கத்தைக் குறைக்கும் அதேவேளையில், புவியியல் ரீதியாக பரந்துள்ள வசதிகள் முழுவதும் செயல்பாட்டு மீள்திறனை மேம்படுத்துகிறது.

### உமிழ்வுகள்

GRI 305 - 1, 2, 3, 4, 5, 6

தேசிய மற்றும் சர்வதேச தரநிலைகளுக்கு இணங்க வங்கி பசுமைக்குடில் வாயு உமிழ்வுகளை மேலாண்மை செய்கிறது. இதற்கான அளவீடு மற்றும் அறிக்கையிடல் வழிகாட்டுதல்கள் ISO 14064-1 இன் படி அமைந்திருப்பதுடன், 2021 ஆம் ஆண்டு அடிப்படை ஆண்டாக (Base year) பராமரிக்கப்படுகிறது. உமிழ்வு கணக்கீடுகள் IPCC வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதுடன், துல்லியம் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக IPCC இன் ஆறாவது மதிப்பீட்டு அறிக்கையிலிருந்து பெறப்பட்ட உலக வெப்பமயமாதல் சாத்தியக்கூறு (GWP) மதிப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வருடத்தில், வங்கியானது தனது துணை நிறுவனங்களை நிறுவன எல்லைக்குள் இணைப்பதன் மூலம் உமிழ்வு எல்லை மற்றும் தரவு ஒருமைப்பாட்டை வலுப்படுத்தியதுடன், 2026 ஆம் ஆண்டிலிருந்து வெளிநாட்டு கிளைகளுக்கும் இந்த எல்லைப் பரப்பை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது.

இதற்கு இணையாக, கைமுறை தரவு ஒருங்கிணைப்பில் இருந்து உள்வாரியாக உருவாக்கப்பட்ட கணினி சார்ந்த நிதி-சாரா அறிக்கையிடல் தளத்திற்கு மாறியமையானது, கிளை வலையமைப்பு முழுவதும் உமிழ்வு தரவுகளின் சீரான தன்மை, கண்டறியும் தன்மை மற்றும் தணிக்கை செய்யும் திறன் ஆகியவற்றை மேம்படுத்தியுள்ளது. சுற்றுச்சூழல் செயல்திறன் தரவுகள் உள்வாரி தணிக்கை மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன், இது விபரங்கள் வெளிப்படுத்தலின் நம்பகத்தன்மையை வலுப்படுத்துவதுடன் மேம்பட்ட வெளிப்புற உத்தரவாதத் தேவைகளுக்கான தயார்நிலைக்கு ஆதரவளிக்கிறது.

# நிலையான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல்



**244** முதிர்ந்த மரங்களைப் பாதுகாப்பதற்குச் சமம்

**57,440 KWh** எரிசக்தியைச் சேமிப்பதற்குச் சமம்

**456,361** லீற்றர் தண்ணீரைச் சேமிப்பதற்குச் சமம்

நிலப்பரப்பில் கழிக்கப்படும் கழிவுகளில் **43 $m^3$** குறைப்பிற்குச் சமம்.

2025 ஆம் ஆண்டில் வங்கியின் உமிழ்வு விவரம் பின்வருமாறு:

| | 2025 | 2024 | மாற்றம் % |
|---|---|---|---|
| கட்டம் 1 உமிழ்வு ($tCO_2e$) | 1,251.9 | 1,120.7 | 12 |
| கட்டம் 2 உமிழ்வு ($tCO_2e$) | 11,187.7 | 11,047.1 | 1 |
| உமிழ்வு தீவிரம்-கட்டம் 1 மற்றும் கட்டம் 2 (வருவாயின் ஒரு மில்லியனுக்கு) | 0.02 | 0.02 | - |

2025 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வான்வழி உமிழ்வுகளில் 1,063.01 மெட்ரிக் தொன் $CO_2$, 6.56 மெட்ரிக் தொன் $CH_4$, 8.98 மெட்ரிக் தொன் $N_2O$ மற்றும் 173.32 மெட்ரிக் தொன் ர்குளஎ ஆகியவை அடங்கும். எரிசக்தி வினைத்திறன் நடவடிக்கைகள், தூய்மையான தொழில்நுட்பங்கள் மற்றும் வலுவான ஒழுங்குமுறை இணக்கப்பாட்டின் மூலம் உமிழ்வைக் குறைப்பதற்கு வங்கி தொடர்ந்து முன்னுரிமை அளித்தது. ஓசோன் படலத்தைப் பாதிக்கும் பொருட்களைக் குறைப்பதற்கும், குளிர்விப்புச் செயல்பாடுகளில் இருந்து வெளியேறும் உமிழ்வைக் குறைப்பதற்கும் சுற்றுச்சூழலுக்கு உகந்த குளிரூட்டிகளுக்கு வங்கி மாறியுள்ளது.

## மூலப்பொருள் நுகர்வு GRI 306-1, 3, 4

தகவல் தொழில்நுடபம் உபகரணங்கள், குளிரூட்டிகள் மற்றும் UPS அமைப்புகள் உட்பட அனைத்து மூலப்பொருள் கொள்முதல்களிலும் வங்கி நிலையான கொள்முதல் தரநிலைகளைப் பின்பற்றுகிறது. கொள்முதல் முடிவுகளில் எரிசக்தி வினைத்திறன் கொண்ட தயாரிப்புகள் மற்றும் மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இது சுழற்சிப் பொருளாதாரக் கொள்கைகளை ஆதரிப்பதுடன், ஒட்டுமொத்த மூலப்பொருள் தேவையையும் குறைக்கிறது. ஜோன் கீல்ஸ் நிறுவனத்துடனான கூட்டாண்மை மூலம் பிளாஸ்டிக் மறுசுழற்சி முயற்சிகளை வங்கி இந்த ஆண்டு வலுப்படுத்தியது.

கட்டமைக்கப்பட்ட மீள்சுழற்சி மற்றும் கழிவு மேலாண்மை கூட்டாண்மை மூலம் கொள்முதல் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் வள மேற்பார்வை விரிவடைகிறது. இந்த ஆண்டில், வங்கி தனது பிளாஸ்டிக் மறுசுழற்சி முயற்சிகளை ஜான் கீல்ஸ் ஹோல்டிங்ஸுடன் இணைந்து வலுப்படுத்தியது, இதனால் பிளாஸ்டிக் கழிவுகளை முறையாக சேகரித்து பொறுப்பான செயலாக்கம் செய்ய முடிந்தது.

மேலும், தலைமையகத்தில் உணவு வீணாவதைக் கண்டறிய ஒரு கணக்காய்வு நடத்தப்பட்டது. அதன் முடிவுகள் உள்ளக கழிவு மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்தவும் வளச் செயற்திறனை வலுவூட்டுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

22025 ஆம் ஆண்டில், நிலையான தன்மைக்கான (எரளவயயெடைவைல) தேவைகள் நிலையான கொள்முதல் விவரக்குறிப்புகளில் மேலும் இணைக்கப்பட்டன. இதன் மூலம், எதிர்கால இருப்பு நிரப்பல்கள் மற்றும் கிளை செயல்பாடுகளுக்கு மக்கும் தன்மையுடைய மாற்றுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவது உறுதிசெய்யப்பட்டது. பொருட்களின் பயன்பாட்டைக் கண்காணித்தல் மற்றும் மேம்படுத்தப்பட்ட கழிவு பிரித்தெடுக்கும் நடைமுறைகள் ஆகியவை வசதிகள் முழுவதும் ஒருங்கிணைக்கப்பட்டன் இது சப்ளையர்களின் பொறுப்புணர்வை வலுப்படுத்தியதுடன், கொள்முதல் தொடர்பான கழிவுகளில் அளவிடக்கூடிய குறைப்புகளுக்கும் ஆதரவளித்தது.

அத்துடன் பௌதிக உட்கட்டமைப்பு தீர்மானங்களில் சுற்றுச்சூழல் இடர் கரிசனைகள் விரிவாக்கப்பட்டுள்ளன. புதிய கிளைகளைத் திறக்கும்போது அல்லது இடமாற்றம் செய்யும்போது, அவை சுற்றுச்சூழலுக்கு உணர்திறன் கொண்ட அல்லது பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாதிருப்பதை உறுதி செய்ய “பாதுகாக்கப்பட்ட பகுதி மற்றும் பல்லுயிர் பரிசோதனைக் கொள்கை“ அறிமுகப்படுத்தப்பட்டது.

டிஜிட்டல் மயமாக்கலை (மின்னணு மயமாக்கல்) நோக்கிய வங்கியின் பயணம், நாம் வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்யும் முறையை மறுவரையறை செய்துள்ளதுடன், அதே வேளையில் நமது சுற்றுச்சூழல் பாதிப்பையும் குறைத்துள்ளது. காகிதமற்ற பரிவர்த்தனைகளைக் கையாள்வதன் மூலம், வங்கி சிக்கலான படிவங்களையும் மனித உழைப்பிலான செயல்முறைகளையும் நீக்கியுள்ளது இது தடையற்ற நிதிப் பரிமாற்றங்கள், மின்னணு கணக்கு அறிக்கைகள் மற்றும் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட இணைய வங்கி தீர்வுகளை சாத்தியமாக்கியுள்ளது.

இந்த மாற்றம் வெறும் வசதிக்கானது மட்டுமல்ல, இது செயல்பாட்டுத் திறனில் ஏற்பட்டுள்ள ஒரு மூலோபாய பாய்ச்சலாகும். பாரம்பரிய காகித வேலைகளுக்குப் பதிலாக டிஜிட்டல் செயல்முறைகள் மாற்றப்பட்டுள்ளதால், ஊழியர்கள் அதிக மதிப்புமிக்க சேவைகளில் கவனம் செலுத்த முடிகிறது, வாடிக்கையாளர்கள் வேகமான மற்றும் நம்பகமான வங்கிச் சேவையைப் பெறுகின்றனர், மேலும் வங்கி அதன் பௌதிக வளங்களின் மீதான தேவையைக் கணிசமாகக் குறைத்துக் கொள்கிறது.

காகிதமற்ற சூழலை நோக்கிய இந்த மாற்றம், நிலைத்தன்மைக்கான ஒரு அர்ப்பணிப்பும் ஆகும். காகிதப் பயன்பாட்டைக் குறைப்பதன் மூலம், இலங்கை வங்கி செலவுகளை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், பொறுப்பான வங்கிச் சேவையின் உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் இணங்கி, சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதில் தீவிரமாகப் பங்களிக்கிறது.

நெப்டியூன் பேப்பர்ஸ் நிறுவனத்துடனான கூட்டாண்மை மூலம் காகித மறுசுழற்சி முயற்சிகள் தொடர்ந்தன் இது நிலப்பரப்புகளில் கழிவுகள் குவிப்பதைத் தவிர்ப்பதற்கும், செயல்பாடுகள் முழுவதும் சுழற்சிப் பொருள் ஓட்டத்தை வலுப்படுத்துவதற்கும் உதவியது. மறுசுழற்சி செய்யப்பட்ட கழிவுக் காகிதத்தின் அளவு ஆண்டுக்கு ஆண்டு 60% குறைந்துள்ளதானது, இயற்கையைப் பாதுகாப்பதில் வங்கி கொண்டுள்ள அர்ப்பணிப்பின் ஒரு தெளிவான அறிகுறியாகும்.

இந்த டிஜிட்டல் பரிணாம வளர்ச்சியின் மூலம், கண்டுபிடிப்பு, செயல்திறன் மற்றும் நிலைத்தன்மை ஆகியவை ஒன்றோடொன்று கைகோர்த்துச் செல்ல முடியும் என்பதை வங்கி தொடர்ந்து நிரூபித்து வருகிறது் இது வங்கியும் அதன் வாடிக்கையாளர்களும் ஒரு நவீன, இணைக்கப்பட்ட உலகில் செழிக்க அதிகாரம் அளிக்கிறது.

இலங்கை வங்கி நாம் கூட்டங்களை நடத்தும் முறை மற்றும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் விதம் உட்பட, தனது செயல்பாடுகளின் ஒவ்வொரு அம்சத்திலும் நிலைத்தன்மையை இணைக்க உறுதிபூண்டுள்ளது. ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக் பயன்பாட்டைக் உணர்வுபூர்வமாகக் குறைப்பதன் மூலமும், பாட்டில் குடிநீர் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதன் மூலமும், வங்கி சுற்றுச்சூழல் பாதிப்பைத் தீவிரமாகக் குறைக்கிறது் அதே வேளையில் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் கூட்டாளர்களிடையே பொறுப்பான நடைமுறைகளை ஊக்குவிக்கிறது.

இந்தத் திட்டமிட்ட நடவடிக்கைகள் மூலம், நிலைத்தன்மை என்பது ஒரு கொள்கை மட்டுமல்ல, அது ஒரு மனப்பாங்கு என்பதை வங்கி நிரூபிக்கிறது. இது தினசரி செயல்பாடுகள் மற்றும் பகிரப்பட்ட அனுபவங்களில் ஒருங்கிணைக்கப்பட்டு, இத்துறை முழுவதும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நடைமுறைகளுக்கான ஒரு தரநிலையை அமைக்கிறது.

## பேண்தகு நிதியளிப்பு

புதுப்பிக்கத்தக்க சக்தி, ஆற்றல்-திறன்மிக்க உட்கட்டமைப்பு மற்றும் சமூகப் பொறுப்புணர்வுமிக்க நிறுவனங்கள் உள்ளடங்கலாக, சுற்றுச்சூழல் அல்லது சமூக நன்மைகளை வழங்கும் திட்டங்களுக்கு இலங்கை வங்கியின் கடன் சொத்துப்பட்டியல் பெருகிய முறையில் முன்னுரிமை அளிக்கிறது. நிலைத்தன்மையுடன் பிணைக்கப்பட்ட கடன்கள், சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை நோக்கங்களுடன் ஒத்திசையும் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளதுடன், பசுமையான மற்றும் சமூகப் பொறுப்புணர்வுமிக்க வணிக நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு வாடிக்கையாளர்களை ஊக்குவிக்கின்றன.

வாடிக்கையாளர்கள் தங்களது சேமிப்புகளை நேர்மறையான சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தாக்கங்களை ஏற்படுத்தும் திட்டங்களை நோக்கி வழிப்படுத்துவதற்கு ஏதுவாக, வங்கியானது நிலையான வைப்புத் திட்டங்களையும் வழங்குகிறது. இத்தயாரிப்புகள், பொறுப்பான முதலீட்டுப் பழக்கங்களை மேம்படுத்துவதற்கும், சமூகங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு அளவிடக்கூடிய நன்மைகளை உருவாக்குவதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

வங்கியின் முதலீட்டு உத்தியானது பசுமைப் பத்திரங்கள், காலநிலை-மீள்திறன்மிக்க உட்கட்டமைப்பு மற்றும் சமூகப் பொறுப்புணர்வுமிக்க நிதியங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, நுளுபு கொள்கைகளை ஒருங்கிணைக்கிறது. நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதாரத்திற்கான மாற்றத்திற்கு ஆதரவளிக்கும் வகையில், நிதி வருவாயையும் அளவிடக்கூடிய சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தாக்கத்தையும் சமநிலைப்படுத்துவதற்காக இந்தச் சொத்துப்பட்டியல் தீவிரமாக நிர்வகிக்கப்படுகிறது.

இவ்முயற்சிகளின் மூலம், சுற்றுச்சூழல் மற்றும் சமூகக் காரணிகளைத் தனது செயல்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர் தயாரிப்புகளின் ஒவ்வொரு அம்சத்திலும் உட்புகுத்தி, நிலையான நிதியியலில் தனது தலைமைத்துவத்தை இலங்கை வங்கி தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது.

குறைந்த தாக்கத்தைக் கொண்ட மற்றும் அதிக மீள்திறனுடைய பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதில் வங்கியின் பங்களிப்பை உறுதிப்படுத்தும் வகையில், நிதியளிப்பு மற்றும் செயல்பாட்டுத் தீர்மானங்களில் நிலைத்தன்மைக் காரணிகள் உட்பொதிக்கப்பட்டுள்ளன. நிதியளிப்புச் செயல்பாடுகள் பொறுப்பான கடன் வழங்கும் கொள்கைகளுடன் ஒத்திசைவதை உறுதிசெய்யும் பொருட்டு, சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை அமைப்பின் கீழ் வரையறுக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் சமூக அளவுகோல்களுக்கு எதிராக அனைத்துக் கடன் வழங்கல்களும் மதிப்பிடப்படுகின்றன.

2025 ஆம் ஆண்டில், வங்கியானது ஒரு உள்வாரி பேண்தகு நிதி கட்டமைப்பு உருவாக்கியதன் மூலம் தனது நிலையான நிதியியல் கட்டமைப்பை வலுப்படுத்தியது. இது பசுமை மற்றும் நிலைத்தன்மையுடன் பிணைக்கப்பட்ட நிதியளிப்புச் செயல்பாடுகளுக்கான கொள்கைகள், தகுதி அளவுகோல்கள் மற்றும் ஆளுகை வழிமுறைகளை நிறுவுகிறது. இந்தச் சட்டகத்தின் மீது சுயாதீன கணக்காய்வு உறுதிப்பாடு பெறப்பட்டதுடன், இது நிலையான நிதியியல் வெளிப்பாடுகளில் வெளிப்படைத்தன்மையையும் நம்பகத்தன்மையையும் மேலும் வலுப்படுத்துகிறது.

### 2025 ஆம் ஆண்டின் நிலைத்தன்மை மைல்கற்கள்

#### இலங்கையின் மிகப்பெரிய நிலைத்தன்மை முறியின் வழங்கல்




- **முன்னோடி நடவடிக்கை:** நிதி நிறுவனம் ஒன்றினால் வெளியிடப்பட்ட மிகப்பெரிய நிலைத்தன்மை முறி இதுவாகும்.
- **எதிர்காலத்திற்கான நிதி முதலீடு:** இதில் 75% வரை சமூகத் திட்டங்களுக்கும், எஞ்சிய பகுதி தகுதியுடைய பசுமைத் திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.
- **உலகளாவிய தரநிலைகளுடன் இணக்கம்:** இது ICMA பசுமை மற்றும் சமூக முறிவுக் கொள்கைகள் (ICMA Green & Social Bond Principles) மற்றும் நிலைத்தன்மை முறி வழிகாட்டல்களுக்கு இணங்க அமைந்துள்ளது.
- **உள்நாட்டு இணக்கப்பாடு:** இலங்கை பசுமை நிதி வகைப்பாட்டியல் தரநிலைகளைப் பூர்த்தி செய்கிறது.
- **பொறுப்பான நிதியியலை ஊக்குவித்தல்:** இலங்கை வங்கியின் ஒட்டுமொத்த சொத்துப்பட்டியலில் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை ஒருங்கிணைப்பை வலுப்படுத்துகிறது.
- **மாற்றத்திற்கான அதிகாரம் அளித்தல்:** சமூகங்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் பயனளிக்கும் திட்டங்களுக்கு ஆதரவளிக்கிறது.

#### இலங்கையின் முதலாவது மக்கும் தன்மையுடைய பற்று அட்டை

- **86 ஆவது ஆண்டு நிறைவு கண்டுபிடிப்பு:** சுற்றுச்சூழல் பொறுப்புணர்வுடன் வங்கியியலை மறுவரையறை செய்தல்.
- **சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருள்:** PVC இற்கு மாற்றீடாக, புதுப்பிக்கத்தக்க மற்றும் உண்ண முடியாத சோளத்தில் இருந்து தயாரிக்கப்படும் PLA மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.
- **மக்கும் சுழற்சி :** கைத்தொழில் ரீதியாக மக்கும் தன்மையுடையது, இது நீண்ட கால பிளாஸ்டிக் கழிவுகளைக் குறைக்கிறது.
- **செயல்வடிவ நிலைத்தன்மை:** பொறுப்பான நடைமுறைகளை உள்வாங்குவதற்கான இலங்கை வங்கியின் பரந்த நிகழ்ச்சி நிரலின் ஒரு அங்கமாகும்.
- **மாற்றத்திற்கான அதிகாரம் அளித்தல்:** அன்றாட வங்கியியல் செயல்பாடுகள் இப்போது பசுமையாகவும் விழிப்புணர்வுடனும் மாற்றப்பட்டுள்ளன.
- **பிளாஸ்டிக் கழிவுகளைக் கட்டுப்படுத்துதல்:** புதைபடிவ எரிபொருள் பிளாஸ்டிக்குகளிலான தங்கியிருப்பைக் குறைப்பதுடன், பொறுப்பான கழிவு முகாமைத்துவத்திற்கு ஆதரவளிக்கிறது.

# நிலையான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல்

தனது கடன் வழங்கல் மற்றும் முதலீட்டுச் சொத்துப்பட்டியல்கள் மூலம் வெளியேறும் உமிழ்வுகளை அளவிடுவதற்காக, கார்பன் கணக்கியல் நிதி கூட்டாண்மையில் வங்கியானது பதிவு செய்துள்ளது. இது வங்கியின் செயல்பாட்டு உமிழ்வுகளை நிர்வகிப்பதில் இருந்து, சொத்துப்பட்டியல் மட்டத்திலான காலநிலைத் தாக்கத்தை மதிப்பீடு செய்யும் நோக்கிய மாற்றத்தைக் குறிக்கிறது. இது SLFRS S2 தரநிலைகளுக்கு இணங்க காலநிலை இடர் மதிப்பீடு மற்றும் வெளிப்பாடுகளை வலுப்படுத்துவதற்கான ஒரு முக்கியமான நடவடிக்கையாகும்.

நிதி வழங்குவதற்கு அப்பால், 30 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற காலநிலை நடவடிக்கை மற்றும் பேரிடர் தயார்நிலை உச்சிமாநாட்டில் பங்கேற்பதன் மூலம் தேசிய மற்றும் பிராந்திய காலநிலை உரையாடல்களில் வங்கி தீவிரமாகப் பங்களித்தது. ஒட்டுமொத்தமாக, இம்முயற்சிகள் மூலதன ஒதுக்கீடு மற்றும் இடர் மதிப்பீட்டில் சுற்றுச்சூழல் காரணிகளை ஒருங்கிணைத்து, மிகவும் கட்டமைக்கப்பட்ட காலநிலை சீரமைப்பை நோக்கிய மாற்றத்தை வெளிப்படுத்துகின்றன.

கூட்டாக, இந்த முயற்சிகள் மிகவும் கட்டமைக்கப்பட்ட காலநிலை சீரமைப்பை நோக்கிய மாற்றத்தைக் காட்டுகின்றன் மேலும் இவை சுற்றுச்சூழல் சார்ந்த அம்சங்களை மூலதன ஒதுக்கீடு, இடர் மதிப்பீடு மற்றும் நீண்ட கால மூலோபாய நிலைப்படுத்தல் ஆகியவற்றில் ஒருங்கிணைக்கின்றன.

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு

வங்கி தனது செயல்பாட்டு எல்லைகளுக்கு அப்பாற்பட்ட, கட்டமைக்கப்பட்ட சமூக ஈடுபாடு மற்றும் பல்லுயிர் பெருக்கத்தை மையமாகக் கொண்ட முயற்சிகளின் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஆதரிக்கிறது. இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கூட்டுத் திட்டங்கள், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் அமைப்பு பாதுகாப்பு மற்றும் பொறுப்பான தள மேம்பாட்டு நடைமுறைகளை வலுப்படுத்தின.

சமூக அடிப்படையிலான முயற்சிகளுடன் கூடுதலாக, பாதுகாக்கப்பட்ட பகுதி ஸ்கிரீனிங் கொள்கையின் மூலம் உள்கட்டமைப்பு திட்டமிடலுக்குள் பல்லுயிர் பெருக்கம் சார்ந்த அம்சங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இது தன்னார்வ சுற்றுச்சூழல் செயல்பாட்டிலிருந்து, செயல்பாட்டு முடிவெடுத்தலுக்குள் கட்டமைக்கப்பட்ட பல்லுயிர் இடர் மேலாண்மையை நோக்கிய மாற்றத்தைப் பிரதிபலிக்கிறது.

ஒன்றாக, இந்த முயற்சிகள் செயல்பாட்டு ஒழுக்கத்தை சுற்றுச்சூழல் அமைப்புப் பொறுப்புடன் இணைக்கும் ஒரு சமநிலையான அணுகுமுறையை நிரூபிக்கின்றன் மேலும் இது நீண்ட கால சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான வங்கியின் அர்ப்பணிப்பை வலுப்படுத்துகிறது.

## முன்னோக்கிய மூலோபாய மாற்றம்

எமது பயணத்தின் அடுத்த கட்டத்திற்குத் திரும்பும் போது, ஒவ்வொரு நகர்வும் எமது வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் நிலைத்தன்மை ஆகிய தூண்களைச் சீரமைக்கும் வகையில் மிகத் திட்டமிட்டதாக அமைகிறது. இந்த மூலோபாய மாற்றம் என்பது வெறும் முன்னேற்றம் மட்டுமல்ல் இது ஒருங்கிணைந்த செயல்பாடு, அளவிடக்கூடிய தாக்கம் மற்றும் எதிர்காலத்திற்கான தொலைநோக்குப் பார்வை ஆகியவற்றிற்கான எமது அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது.

### குறுங்காலம்

- வங்கியின் 2026-2030 நிறுவன மூலோபாயத்திற்கு ஏற்ப, சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுமை கொள்கை மற்றும் சாலை வரைபடத்தை நடைமுறைப்படுத்துதல் இதில் துறைகள் முழுவதும் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை முறைப்படுத்துதல் மற்றும் செயல்பாட்டு மட்டத்தில் பொறுப்புக்கூறலை வலுப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.
- SLFRS S1 மற்றும் SLFRS S2 தேவைகளுக்கு இணங்க கடன் மதிப்பீடு, கடன்வழங்கல் தொகுப்பு கண்காணிப்பு மற்றும் நிறுவன இடர் மேலாண்மை ஆகியவற்றில் காலநிலை சார்ந்த இடர் காரணிகளைப் படிப்படியாக ஒருங்கிணைத்தல்.
- பேண்தகு நிதிக் கட்டமைப்பிறகுக் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட மூலதன ஒதுக்கீட்டின் ஆதரவுடன், பசுமை மற்றும் நிலைத்தன்மை சார்ந்த நிதி தயாரிப்புகளின் தொடர்ச்சியான மேம்பாடு.
- செயல்பாட்டு உமிழ்வைக் குறைப்பதற்கும் ஆற்றல் மீள்தன்மையை வலுப்படுத்துவதற்கும் கிளைக் கட்டமைப்பு முழுவதும் தொடர்ச்சியான சூரிய ஆற்றல் மயமாக்கல், ஆற்றல் திறன் மேம்பாடுகள் மற்றும் வளச் சீரமைப்பு.
- வழங்குநர்களின் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுமை பரிசீலனைச் சரிபார்ப்பை அமல்படுத்துதல் மற்றும் புதிய கிளை மேம்பாடுகளுக்கான பல்லுயிர் பாதுகாப்புச் சரிபார்ப்பு நெறிமுறைகளைத் தொடர்ந்து செயல்படுத்துதல்.

### நடுத்தர மற்றும் நீண்ட கால அளவிலான திட்டங்கள்:

- மேம்படுத்தப்பட்ட காலநிலை வெளிப்படைத்தன்மைக்கு அடிப்படையாக அமையும் வகையில், கடன் வழங்குதல் மற்றும் முதலீட்டுத் தொகுப்புகள் முழுவதிலும் நிதியளிக்கப்பட்ட உமிழ்வை அளவிடுவதற்கு PCAF-சீரமைக்கப்பட்ட வழிமுறைகளைச் செயல்பாட்டுக்குக் கொண்டுவருதல்.
- நிலைத்தன்மை வெளிப்பாடுகளின் துல்லியம், ஒப்பீட்டுத் தன்மை மற்றும் தணிக்கை தயார்நிலை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக, நிதி சாரா தரவு மேலாண்மை அமைப்பை முழுமையாகப் பயன்படுத்துதல்.

# ஆளுகை மற்றும் இடர்

## நேர்மை மற்றும் பொறுப்புக்கூறலை நிலைநிறுத்துதல்

நிலையான கையுடன், வெளிப்படைத்தன்மையான மேற்பார்வையுடன் மற்றும் அசைக்கவியலா நெறிமுறையான பாரபத்தியத்துடன் ஒவ்வொரு அசைவும் பங்காளிகள் நம்பிக்கையினை பலப்படுத்துவதனை உறுதிசெய்வதற்காக சிக்கல்களுக்கு நாம் ஒழுங்குமுறையினை கொண்டுவருகின்றோம்.

**எமது செயற்பாட்டுச் சூழலில் பில்லியன் கணக்காக நகரும் கலவைகளுக்கு மத்தியில், வங்கியானது ரூபிக் கனசதுரத்தின் உள்ளார்ந்த தர்க்கத்தைப் போன்று, ஒவ்வொரு தீர்மானத்தையும் நேர்மை மற்றும் நோக்கத்துடன் வழிநடத்துவதற்கு ஒரு தெளிவான கட்டமைப்பில் தங்கியுள்ளது.**

**ஒரு ரூபிக் கனசதுரம் ஆனது ஒவ்வொரு முகமும் நிதானமான சிந்தனை, ஒழுக்கமான திருப்பத்தினூடாக சீரமையும்போது மாத்திரமே அதன் தீர்வினை வெளிப்படுத்துகின்றது. ஆளுகை வித்தியாசமானதல்ல.**

# இலங்கை வங்கியின் ஆளுகை

## கூட்டாண்மை ஆளுகை குறித்த தலைவரின் செய்தி

GRI 2-22

இலங்கை வங்கியின் வலுவான கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகள், உயர்வடைந்த செயற்பாட்டு சவால்களின் பின்னணிக்கு எதிராக பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதியியல் முறைமை ஸ்திரத்தன்மை என்பவற்றுக்கு துணையளிப்பதில் ஒரு நிலைப்படுத்தும் நங்கூரமாக தொடர்ந்தும் சேவையாற்றின. தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் மேற்பார்வை மையத்தினுள் உட்பதிக்கப்பட்டுள்ள வங்கியின் ஆளுகை கட்டமைப்பானது வினைத்திறனான தலைமைத்துவம், தெளிவான பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையான அறிக்கையிடலை இயலுமையாக்கும்வேளை நேர்மை மற்றும் மீளெழுச்சிக் கலாச்சாரத்தினை வளர்க்கின்றது.

### சபையின் கவனக்குவிப்பு

இவ்வாண்டின்போது சபையானது பரிணமிக்கின்ற உள்ளகத் தேவைப்பாடுகள் மற்றும் வெளிவாரி செயற்பாட்டுச் சூழல் இரண்டினையும் பிரதிபலிக்கும் முன்னுரிமைப் பிரிவுகளில் அதன் கவனத்தை செலுத்தியது. வங்கியின் ஐந்து வருட உருள்கின்ற மூலோபாயத் திட்டத்தின் அங்கீகாரத்துடன், வங்கியின் பொறுப்பாணை மற்றும் இடர் ஆர்வத்துடன் சீரமைவாக தெளிவான மத்திய கால திசையினை வழங்கும் மூலோபாய மேற்பார்வையானது ஒரு முக்கிய கவனக்குவிப்பாக காணப்பட்டது.

துரிதமாக பரிணமிக்கின்ற நிலத்தோற்றத்தில் எதிர்கால தயார்நிலையினை உறுதிசெய்வதற்கு நிறுவனக் கட்டமைப்பினை சீர்திருத்துவதிலும் சபை முன்னிறுத்தம் செய்தது. டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் சைபர் பாதுகாப்பு என்பன முக்கிய முன்னுரிமைகளாகக் காணப்பட்டன. இது அனைத்து மூலோபாய தூண்களிடையே செயற்பாட்டு வினைத்திறன், மேம்பட்ட சேவை வழங்கல் மற்றும் நிறுவன மீளெழுச்சி என்பவற்றின் ஒரு முக்கிய இயக்கியாக டிஜிட்டல் ஆற்றல்களை இனங்கண்டாகும்.

புலப்படும் சாதாரண உரித்துவத்திலான (ROTCE) விளைவினை பலப்படுத்துவதில் ஒரு முன்னிறுத்தமான வலியுறுத்தல் உள்ளடங்கலான விளைவுகளை மேம்படுத்துதல் சபையின் ஒரு முக்கிய அக்கறையுடைய பிரிவாகக் காணப்பட்டது. இடர் முகாமைத்துவம் தொடர்ந்தும் உயர்ந்த முன்னிறுத்தத்தை பெற்றதுடன், வணிகத் தொடர்ச்சி, பணியாட்கள் பாதுகாப்பு மற்றும் உட்கட்டமைப்பு மீளெழுச்சி என்பவற்றிலான வலியுறுத்தலுடன் குறிப்பாக டிட்வா புயலின் தாக்கம் உள்ளடங்கலான வெளிவாரி அதிர்வுகளை முகாமைப்படுத்துவதில் முன்னிறுத்தம் செய்தது.

நோக்கம் சார்ந்த ஒரு நிறுவனமாக நிதியியல் உள்ளடக்கத்தினை இயக்குதல் ஒரு முக்கிய முன்னுரிமையாகவும், அத்துடன் பணியாட்கள் திறன் அபிவிருத்தி மற்றும் ஆற்றல் கட்டியெழுப்புவதிலான ஒரு தொடர்ச்சியான முன்னிறுத்தமும் காணப்பட்டது. இதற்கு இணையாக முக்கிய தீர்மானம் மேற்கொள்வதில் சபையானது நிலைபேறுடைமை மற்றும் சூ.ச.ஆ. சிந்தனைகளை ஒருங்கிணைப்பதில் முன்னேற்றம் கண்டதுடன், இவை தனியான முன்னெடுப்புகளாகக் கவனிக்கப்படாது நீண்டகால பெறுமதி உருவாக்கத்தினுள் உட்பொதிந்துள்ளதை உறுதிசெய்கின்றது.

### சபையின் புத்துணர்ச்சி

சபையின் கூட்டான திறன்கள் மற்றும் நிபுணத்துவமானது ஆறு புதிய பணிப்பாளர்களது நியமனத்துடன் இவ்வாண்டின்போது கணிசமாக பலப்படுத்தப்பட்டது. இவர்கள் வங்கியியல் மற்றும் நிதியியல், கணக்கீடு, பெருநிறுவன ஆளுகை, விஞ்ஞானம் மற்றும் பொறியியல் மற்றும் நிலைபேறுடைய அபிவிருத்தி போன்ற பிரிவுகளில் ஒரு பன்முகமான மற்றும் அனுபவத்தில் நிரப்புநிலை கலவையினையும் கொண்டு வருகின்றார்கள். இந்த மேம்படுத்தப்பட்ட திறன் தொகுப்பானது வினைத்திறனான மேற்பார்வை மற்றும் மூலோபாய வழிகாட்டலை வழங்குவதற்கு சபையின் ஆற்றலை மேலும் பலப்படுத்துகின்றது.

நாம் தொடர்ந்தும் வங்கியினை முன்னோக்கி வழிநடத்தும்போது எனது சக பணிப்பாளர்களுடனும் அவர்கள் கொண்டுவருகின்ற கண்ணோட்டங்களுடனும் நெருக்கமாக செயலாற்றுவதற்கு நான் எதிர்பார்க்கின்றேன்.

இந்த சந்தர்ப்பத்தில் நான் இவ்வாண்டின்போது சபையிலிருந்து விலகிய திரு. ஜயமின் பெல்பொல அவர்களுக்கு அவரது பெறுமதிமிக்க பங்களிப்பிற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

### நெறிமுறைகளும் நேர்மையும்

சபையானது தலைமையில் பொதுவான உணர்வினை உருவாக்கியதுடன் வங்கியின் நன்கு நிறுவப்பட்ட நிறுவன விழுமியங்கள் மற்றும் கலாச்சாரத்தினை வலியுறுத்தியது. வங்கியின் நடத்தை விதிமுறை மற்றும் நெறிமுறைகள், பணிப்பாளர்கள், முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் அனைத்து பணியாட்களுக்கும் பொருந்துவதுடன், உள்ளக மற்றும் வெளிவாரி பங்காளிகளுடனான ஈடுபாட்டில் தன்னடத்தை மற்றும் தொழில்சார் நியமங்களிலான எதிர்பார்ப்புகள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வாண்டின்போது, நேர்மை மற்றும் நெறிமுறையான நடத்தையில் வங்கியின் கட்டமைப்பினை பலப்படுத்துவதற்கு மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவை ஒரு பிரதான நேர்மை அதிகாரியின் நியமனம் மற்றும் லஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான தொடர்ச்சியான விழிப்புணர்வுத் திட்டங்களையும் உள்ளடக்கின.

### இணக்கப்பாட்டு பிரகடனம்

இந்த அறிக்கையுடன் பக்கங்கள் 405 -454 வரை காணப்படும் இணக்கப்பாட்டு பின் இணைப்புகளும் சேர்த்து, ஆளுகை மற்றும் பொருத்தமான முறைமைப்படுத்தல் மற்றும் மனமுவந்த தேவைப்பாடுகளுடனான தொடர்ச்சியான இணக்கப்பாட்டிற்கு வங்கியின் அணுகுமுறையினை விளக்குகின்றது.

2025 ஆம் ஆண்டின்போது சபையானது அதன் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை திருப்திகரமாக நிறைவேற்றியது என்பதை நான் இத்தால் உறுதிசெய்வதுடன், வங்கியின் சபைச் சாசனத்தின் தேவைப்பாடுகளுடனும் இணங்கியுள்ளது. சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகளில் எவ்விதமான பொருண்மையான மீறல்களும் காணப்படவில்லை, அல்லது மீளாய்வாண்டின்போது ஏதேனும் மீறல்களுக்காக வங்கியில் எவ்விதமான பொருண்மையான அபராதங்களோ தண்டங்களோ விதிக்கப்படவில்லை.

**காவிந்த டி சொய்சா**
தலைவர்

24 பெப்ரவரி 2026
கொழும்பு

### சபையின் தொகுப்பு

ஆறு புதிய பணிப்பாளர்களின் சேர்க்கையுடன் சபை பலப்படுத்தப்பட்டதுடன் இது மேம்பட்ட திறன் தோற்றுருவும், பரந்த கண்ணோட்டங்கள் மற்றும் மேம்பட்ட பன்முகத்தன்மையினையும் விளைவித்தது.

**11**
பணிப்பாளர்கள்

### உப குழுக்கள்

உரிமமளிக்கப்பட்ட வங்கிகளுக்கான புதிய பெருநிறுவன ஆளுகை விதிகளுடனான சீரமைவினை உறுதிசெய்வதற்காக உபகுழுக்களின் மீளுருவாக்கம் மற்றும் உபகுழுக்களின் TOR இன் திருத்தம்.

### சபையின் முன்னிறுத்தம்

- மூலோபாயங்களின் நிறைவேற்றலும் கண்காணிப்பும்
- இடர் முகாமைத்துவம்
- டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் சைபர் பாதுகாப்பு
- நிலைபேறுடைமை மற்றும் சூ.ச.ஆ.

**2025 இன் சிறப்பம்சம்**

### கொள்கை புதுப்பிப்பு

கொள்கை கட்டமைப்பின் மீளாய்வும் திருத்தமும்.

இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட புதிய கொள்முதல் வழிகாட்டிகளுடன் கொள்முதல் செயன்முறைகள் திருத்தப்பட்டு சீரமைக்கப்பட்டன.

இவ்வாண்டின்போது கூட்டாண்மை ஆளுகைக் கொள்கை மற்றும் நிலைபேறுடைமை கொள்கை என்பன மேம்படுத்தப்பட்டன.

**புதிய கொள்கைகள்**

- சபை குழுக்களிலான கொள்கை
- வங்கியின் சொத்துக்கள் மற்றும் பங்குதாரர் முதலீடுகளது கட்டுப்பாடு மற்றும் மேலாண்மையிலான கொள்கை
- திரும்பப்பெறுதல் கொள்கை
- நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பு கொள்கை
- அணுகல் மற்றும் பாகுபாடற்ற தன்மையிலான கொள்கை
- கொடுக்கல் வாங்கல் கண்காணிப்புக் கொள்கை

## பெருநிறுவன ஆளுகையிலான புதிய பணிப்புறுத்தல்களுடனான இணக்கப்பாடு

இலங்கை மத்திய வங்கியானது மேற்பார்வை மற்றும் பொறுப்புமிக்க வங்கியியல் நடைமுறைகள் ஊக்கமளிக்கப்படுவதனை மேம்படுத்துவதற்கு கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகளை பலப்படுத்தும் நோக்கில் செப்டம்பர் 2024 இல் உரிமமளிக்கப்பட்ட வங்கிகளுக்கு பெருநிறுவன ஆளுகையில் 2024 இன் 5 ஆம் இலக்க வங்கியியல் சட்ட பணிப்புரையினை வழங்கியது. புதிய பணிப்புரையானது 01 ஜனவரி 2025 முதல் அமுலுக்கு வந்ததுடன், தேவைப்பாடுகளுடனான BOC இன் சீரமைவானது கீழ்காணும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன. புதிய தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாட்டில் விரிவான வெளிப்படுத்தல்களுக்கு தயவு செய்து பக்கங்கள் 411 முதல் 435 வரை பார்க்கவும்.

| தேவைப்பாட்டின் பொழிப்பு | இணக்கப்பாட்டு மட்டம் | விபரங்கள் |
|---|---|---|
| மேம்பட்ட சபையின் பொறுப்புக்கள் | ✔ இணங்கியுள்ளது | இவ்வாண்டின்போது இடர் மற்றும் இணக்கப்பாடு, மூலோபாய அமுலாக்கல் மற்றும் நெறிமுறைகளில் சபையின் மேற்பார்வையானது பலப்படுத்தப்பட்டது |
| சபையின் தொகுப்பு, சுயாதீனத்தன்மை மற்றும் பன்முகத்தன்மை | ✔ இணங்கியுள்ளது | இ.ம.வ. பணிப்புரைகளின் பிரகாரம் டிசம்பர் 2025 இன் இறுதியில் 11 பணிப்பாளர்கள், அவர்களுள் ஆறு சுயாதீன பணிப்பாளர்கள் மற்றும் கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் பிரகாரம் 10; ஒரு பெண் பணிப்பாளர் |
| தலைவர் மற்றும் பி.நி.அ. இன் பங்குகளின் வேறாக்கல் | ✔ இணங்கியுள்ளது | சபையான ஒரு நிறைவேற்றுனரல்லா தலைவரினால் தலைமை தாங்கப்பட்டு, வங்கியின் நிறைவேற்றல் செயற்பாடுகள் பொது முகாமையாளரினால் தலைமை தாங்கப்படுகின்றன. |
| கட்டாயமாக்கப்பட்ட சபை குழுக்கள் | ✔ இணங்கியுள்ளது | இவ்வாண்டின்போது திருத்தியமைக்கப்பட்டு சபைக்கான புதிய நியமனங்களுடன் மீளுருவாக்கப்பட்டன |
| பலப்படுத்தப்பட்ட இடர், இணக்கப்பாடு மற்றும் கணக்காய்வுச் செயற்பாடுகள் | ✔ இணங்கியுள்ளது | ஏனையவற்றுக்கிடையில் இணக்கப்பாடு, இடர் முகாமைத்துவம் மற்றும் சைபர் பாதுகாப்பிலான வலியுறுத்தல் |
| நெறிமுறைகள், வெளிப்படைத்தன்மை, மற்றும் நிலைபேறுடைமையிலான முன்னிறுத்தம் | ✔ இணங்கியுள்ளது | ஊழல் மற்றும் லஞ்சம் எதிரான கொள்கை பலப்படுத்துப்பட்டு ஒரு பிரதான நேர்மை அதிகாரியின் நியமனம் |

# இலங்கை வங்கியின் ஆளுகை

## ஆளுகைச் சூழல்

மாலைதீவு, இந்தியா மற்றும் சீஷெல்சிலான மூன்று வெளிநாட்டு கிளைகள் மற்றும் ஐ.இ. இல் முழுவதும் உடைமையான ஒரு துணைநிறுவனம் என்பவற்றுக்கிடையேயான BOC இன் செயற்பாடுகள் பல நாட்டு இணக்கப்பாட்டிற்கு உட்படுகின்றன. வெளிநாட்டு கிளைகள் ஒரு "வெளிநாட்டு கிளைகள் சாசனத்தினூடாக" ஆளுகை செய்யப்படுவதுடன், காலாண்டு அறிக்கையிடலினூடாக மேற்பார்வை உறுதிசெய்யப்பட்டு மூலோபாய மட்டத்திலான தீர்மானங்கள் சபைக்கு கொண்டு செல்லப்படுகின்றன. அதேசமயம், இக்கிளைகளின் செயற்திறன், இணக்கப்பாடு மற்றும் கணக்காய்வு என்பன ஒரு வழமையான அடிப்படையில் BOC தலைமைக் காரியாலயத்தினால் கண்காணிக்கப்படும்வேளை தேசிய கணக்காய்வு அலுவலகமானது வங்கியின் வருடாந்த கணக்காய்விற்கு ஏற்ப கணக்காய்வு செயன்முறைகளில் ஈடுபடுகின்றது. உரிய ஒழுங்குவிதிகளுக்கு சீரமைவாக செயலாற்றப்படும் நாடுகளில் சுயாதீன வெளிவாரி கணக்காய்வுகள் நடாத்தப்படுகின்றன.

## கூட்டாண்மை ஆளுகைக்கான அணுகுமுறை

GRI 2-9

பெருநிறுவன ஆளுகைக்கான BOC இன் அணுகுமுறையானது உயர்மட்டத்தில் நிறுவப்பட்டுள்ள உளப்பாங்கில் பிரதிபலிக்கின்றது. இது நோக்கம் சார்ந்த தலைமைத்துவம் மற்றும் இயக்காற்றலான மற்றும் பரிணமிக்கின்ற செயற்பாட்டு நிலத்தோற்றத்தில் வங்கி செழிப்படைவதனை இயலுமையாக்கும் மனப்பான்மை என்பவற்றை உட்பதித்துள்ளது. தேசத்திற்கான வங்கியாளர்களாக, BOC இன் சபையானது அனைத்து பங்காளிகளுக்கும் நிலைபேறுடைய பெறுமதியினை வழங்குவதற்கு முயற்சிக்கின்றது. இது வங்கியின் வணிக மாதிரியின் நிலைபேறுடைமையினை உறுதிசெய்யும் மூலோபாயத்தினை நிறைவேற்றும் வேளை வெளிப்படைத்தன்மை, நெறிமுறையான வணிகம் மற்றும் நேர்மையில் உயர்ந்த நியமங்களையும் பராமரிக்கும்போதாகும். வங்கியின் பெருநிறுவன ஆளுகை கட்டமைப்பானது கட்டாய இணக்கப்பாட்டிற்கு அப்பால் அதன் செயற்பாடுகளின் அனைத்து செயலெல்லைகளிலும் மனமுவந்த நியமங்கள் மற்றும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளை கடைப்பிடிப்பதற்கு நீடிக்கப்பட்டுள்ளன.

### ஆளுகை கட்டமைப்புகளும் விளைவுகளும்

**வெளியக கட்டமைப்புகள்**

- 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் ("கட்டளைச் சட்டம் என குறிப்பிடப்படுகின்றது") மற்றும் அதன் திருத்தங்கள்.
- 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதன்பின்னரான திருத்தங்கள்.
- 2007 இன் 11 ஆம் இலக்க பணிப்புரையினை கலைக்கும் பெருநிறுவன அளுகையிலான 2024 இன் 5 ஆம் இலக்க வங்கியியல் சட்டப் பணிப்புரை.
- கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகள்.
- 2021 இன் 19 அம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்.
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பெருநிறுவன ஆளுகையிலான சிறந்த நடைமுறைக் கோவை (2023).
- உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்பினால் வழங்கப்பட்ட GRI நியமங்கள்.
- IIRC இனால் வழங்கப்பட்ட IR கட்டமைப்பு.
- ISACA இனால் வழங்கப்பட்டCOBIT 2019 கட்டமைப்பு.
- SLFRS S1 மற்றும் S2 நிலைபேறுடைமை வெளிப்படுத்தல் நியமங்கள். Standards.
- ISO 27001.
- நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகள் (SDGs).

**உள்ளக பொறிமுறைகள்**

சாசனங்களும் கொள்கைகளும்

- சபை சாசனம்
- உபகுழு சாசனங்கள்
- துணைநிறுவன முகாமைத்துவ சாசனம்
- வாடிக்கையாளர் சாசனம்
- கொள்கைகள் மற்றும் செயன்முறைகளின் விரிவான தொகுப்பு

நெறிமுறைகளும் கலாச்சாரமும்

- பணிப்பாளர்களுக்கான வணிக நடத்தை மற்றும் நெறிமுறையிலான கோவை
- பணியாட்களுக்கான நெறிமுறைக் கோவை
- லஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்புக் கொள்கை
- எமது விழுமியங்கள்

ஆளுகைக் கொள்கைகள்

- தலைமைத்துவ ஆற்றல்கள்
- கட்டமைப்புகளும் ஒப்படைப்புகளும்
- பயனுறுதியான கட்டுப்பாடுகள்
- பங்குதாரர் ஈடுபாடு

**ஆளுகை விளைவுகள்**

| | | | |
|---|---|---|---|
| பொறுப்புக்கூறல் உடன் மக்கள் வலுவளிக்கப் பட்டுள்ளார்கள் | நேர்மையுடன் விரைவூக்கத்தை செயன் முறையாக்கல் | நோக்கத்துடனான நோக்க வழிகாட்டல் | மீளெழுச்சி மற்றும் ஒழுக்கமான செயற்திறன் |

## 2025 இல் சபையின் கவனக்குவிப்பு பிரிவுகள்

பரிணமிக்கும் உள்வாரி முன்னுரிமைகள் மற்றும் வெளிவாரி செயற்பாட்டு நிலைமைகளுக்கு பதிலளிக்கும் விதமாக 2025 இல் சபையானது பின்வரும் பிரிவுகளில் அதன் முன்னிறுத்தத்தினை கூர்மையாக்கியது. பின்வரும் பிரிவில் கலந்துரையாடல்கள் விளக்கப்பட்டுள்ளதுடன், இந்த அறிக்கையின் பக்கங்கள் 108 முதல் 160 வரை காணப்படும் முகாமைத்தவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வில் மேலதிக விளக்கம் விபரிக்கப்பட்டுள்ளன.

### 01 மூலோபாயத்தின் அங்கீகாரம் மற்றும் செயற்திறன் மீளாய்வு

முகாமைத்துவ அணியுடனான ஆழ்ந்த கலந்துரையாடல்களைத் தொடர்ந்து சபையானது வங்கியிக் ஐந்து வருட உருளும் மூலோபாய திட்டத்தினை அங்கிகரித்தது. மூலோபாய நிறைவேற்றல், இலக்குகளுக்கு எதிராக செயற்திறனை வழக்கமாக கண்காணித்தல் மற்றும் செயற்பாட்டு சூழலிலிருந்து எழுகின்ற வெளிவாரி அபிவிருத்திகளின் சாத்தியமான தாக்கங்கள்.

பங்குதாரர் அக்கறைகள்: பங்குதாரர்கள், நிதி வழங்குனர்கள்; வாடிக்கையாளர்; பணியாட்கள்

தாக்கமடைந்த மூலதனங்கள்: நிதியியல் மூலதனம்; மனித மூலதனம்; அறிவுசார் மூலதனம்

### 02 இடர் முகாமைத்துவம்

வணிகத் தொடர்ச்சி, பணியாட்கள் நல்வாழ்வு மற்றும் முக்கியமான உட்கட்டமைப்பின் நேர்மை என்பவற்றிலான உடனடி முன்னிறுத்தத்துடன் சபையானது டிட்வா புயலின் சாத்தியமான தாக்கங்களை முன்முயற்சியுடன் மீளாய்வு செய்தது. மத்திய கால தாக்கங்கள் தொடர்பாக சபையானது கடன் மற்றும் செயற்பாட்டு இடர்கள் உள்ளடங்கலான வாடிக்கையாளர்களில் சாத்தியமான மத்திய கால தாக்கங்களையும் பாதிக்கப்பட்ட பிரிவுகளுக்கு துணையளிப்பதற்கு தேவையான தணித்தல் செயற்பாடுகளையும் மதிப்பீடு செய்தது.

பங்குதாரர் அக்கறைகள்: பங்குதாரர்கள், நிதி வழங்குனர்கள்; வாடிக்கையாளர்; பணியாட்கள்; சமூகம் மற்றும் சூழல்

தாக்கமடைந்த மூலதனங்கள்: நிதியியல் மூலதனம்; உற்பத்தி செய். மூலதனம்; மனித மூலதனம்; சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்; இயற்கைட மூலதனம்

### 03 டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் சைபர் பாதுகாப்பு

தொழில்நுட்பத்தின் பயன்பாட்டினூடாக மற்றும் டிஜிட்டல்மயமாக்கலினூடாக செயன்முறை வினைத்திறன் மற்றும் நேர்மையினை மேம்படுத்தும் வாடிக்கையாளர் மதிப்பு முன்மொழிவினை மேம்படுத்துவதில் சபையானது உயர்ந்த கவனத்தை செலுத்தியது. இவ்வாண்டின்போது, வங்கியின் பரிணமிக்கின்ற டிஜிட்டல் தேவைப்பாடுகளை சந்திப்பதற்கு ஒரு புதிய துணைநிறுவனம் உருவாக்கப்பட்டது.

பங்குதாரர் அக்கறைகள்: வாடிக்கையாளர்; பணியாட்கள்; வணிகப் பங்காளிகள்

தாக்கமடைந்த மூலதனம்: நிதியியல் மூலதனம்; அறிவுசார் மூலதனம்; சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்; மனித மூலதனம்

### 04 நிலைபேறுடைமை மற்றும் சூ.ச.ஆ. (ESG)

இவ்வாண்டின்போது வங்கியின் நிலைபேறுடைமை கொள்கை மற்றும் ஆளுகை பொறிமுறைகள் பலப்படுத்தப்பட்டன. நிலைபேறுடைமை வெளிப்படுத்தல் நியமங்களான SLFRS S1 மற்றும் S2 இன் முற்றான கடைப்பிடித்தலுக்கு தயாராக சபையானது நடைமுறையிலுள்ள வணிக செயன்முறைகளினுள் சூ.ச.ஆ. இடர்களின் இனங்காணுதலையும் பணிப்பாளர்கள் சபைக்கு மேம்படுத்தப்பட்ட சூ.ச.ஆ. அறிக்கையிடலையும் ஒருங்கிணைப்பதற்கு முயற்சித்தது.

பங்குதாரர் அக்கறைகள்: பங்குதாரர்கள், நிதி வழங்குனர்கள்; பணியாட்கள; வணிகப் பங்காளிகள்; சமூகம் மற்றும் சூழல்

தாக்கமடைந்த மூலதனம்: நிதியியல் மூலதனம்; உற்பத்தி செய். மூலதனம; மனித மூலதனம்; சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்; இயற்கை மூலதனம்

# இலங்கை வங்கியின் ஆளுகை

## ஆளுகை விளைவுகள்

BOC இல் வினைத்திறனான ஆளுகையானது வலுவளிக்கப்பட்ட மக்கள், விரைவூக்கமான செயன்முறைகள் மற்றும் மீளெழுச்சியான செயற்திறனுக்கு மாற்றமடைவதுடன், இவை ஒரு தெளிவான உணர்வுடைய இயக்கத்தினால் வழிநடத்தப்படுகின்றன. வரையறையான கட்டமைப்புகள், தெளிவான ஒப்படைப்பு மற்றும் வலுவான நெறிமுறை நியமங்கள் என்பன பொறுப்புக்கூறலை ஊக்கமளித்து வலுவான தீர்மானம் மேற்கொள்ளலுக்கு துணையளித்து நிறுவனம் முழுவதும் நிலையான நிறைவேற்றலுக்கு அடித்தளமிடுகின்றது. இந்த அத்தியாயத்தின் எஞ்சிய பிரிவுகள் இவ்வாண்டின் போதான இந்த முக்கிய ஆளுகை விளைவுகளை யும் பெறுமதி உருவாக்கத்திற்கு அவற்றின் பங்களிப்பினையும் விளக்குகின்றது.




### மக்கள்: பொறுப்புக்கூறலுடன் வலுவளிக்கப்பட்டது

வங்கியின் வலுவான ஆளுகைக் கட்டமைப்பானது ஒழுக்கமான ஒப்படைப்பிற்கு துணையளிப்பதுடன், நிறுவப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கூறல் கட்டமைப்புகளினுள் தீர்மானமாக செயலாற்றுவதற்கு பணியாட்களுக்கு வலுவளிக்கின்றது. இந்த பங்குத் தெளிவு மற்றும் நியாயமான வலுவளித்தலானது உடைமை, நெறிமுறையான நடத்தை மற்றும் வங்கி முழுவதும் வினைத்திறனான தீர்மானம் மேற்கொள்வதை உறுதிசெய்கின்றது.

## திறன்படைத்த மற்றும் பன்முகமான சபை

கலந்துரையாடல்களின் தரம் மற்றும் ஆழத்தை மேம்படுத்தக்கூடிய பொருத்தமான திறன்கள், அனுபவம் மற்றும் பன்முகமான பார்வையினைக் கொண்டவர்களை பணிப்பாளர்கள் சபையானது உள்ளடக்குகின்றது. உரிமமளிக்கப்பட்ட வங்கிகளுக்கான (2024 இன் 3 ஆம் இலக்க வங்கியியல் சட்ட தீர்மானம்) பெருநிறுவன ஆளுகை தேவைப்பாடுகளுக்கு சீரமைவாக, பணிப்பாளர்களது எண்ணிக்கையானது 11 அங்கத்தவர்களாக அதிகரிக்கப்பட்டதுடன், இது ஒரு பாரிய மற்றும் சிக்கலான வங்கியின் கேள்விகளை பிரதிபலிக்கின்றது. 11 பணிப்பாளர்களுள், இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரையின் பிரகாரம் ஆறுபேர் சுயாதீனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளவேளை எஞ்சிய பணிப்பாளர்கள் சுயாதீனமற்ற பணிப்பாளர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் நிதிக்கு பொறுப்பான அமைச்சரினால் தெரிவுசெய்து நியமிக்கப்பட்டுள்ளார்கள். எவ்வாறாயினும், கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் பிரகாரம், பதவிவழி பணிப்பாளர்கள் தவிர்த்த அனைத்து பணிப்பாளர்களும் சுயாதீனமானவர்களாக கருதப்படுகின்றார்கள். இவ்வாண்டின்போது பணிப்பாளர்களின் சுயாதீனத்தன்மையினை பாதிக்கக்கூடிய அல்லது பாதிப்பதாகத் தோன்றும் எவ்விதமான உறவுகள் அல்லது சூழ்நிலைகள் காணப்படவில்லை என சபையானது திருப்தியடைகின்றது.

### சபையின் சமநிலை

சபையானது 10 சுயாதீன, நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்கள் மற்றும் சுயாதீனமற்ற நிறைவேற்றுனரல்லா பதவிவழி பணிப்பாளரையும் (கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் அடிப்படையில்) கொண்டுள்ளதுடன். இதன்மூலம் பணிப்பாளர்கள் சபைக்கு புறநிலையான நியாயப்பாட்டினை கொண்டுவருகின்றது. இ.ம.வ. இன் பணிப்புரையின் பிரகாரம் சுயாதீனத்தன்மையினை தீர்மானிப்பதற்கான அளவுகோலின் அடிப்படையில், ஆறு பணிப்பாளர்கள் சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்களாக உள்ளவேளை, ஐந்து பணிப்பாளர்கள் சுயாதீனமற்ற நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.




### சபை புத்துணர்ச்சியும் பதவிக் காலத்தின் பன்முகத்தன்மையும்

| (31.12.2025 இல் உள்ளவாறானது) | சேவை வருடங்கள் | பணிப்பாளர் எண்ணிக். |
|---|---|---|
| | < 3 | 11 |
| | 5-9 | 1 |

சபை புத்துணர்ச்சியானது சபையின் கூட்டுத் திறன்கள் மற்றும் நிபுணத்துவத்தினை பலப்படுத்தியுள்ளதுடன், வினைத்திறனான தீர்மானம் மேற்கொள்வதற்கு துணையளிக்கும் புதிய கண்ணோட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

## திறன் தொகுப்பு

### சபைத் திறன்களின் சுயவிபரம்




## வயது பன்முகத்தன்மை

### Age Profile




வயது தோற்றுருவங்களிலான பன்முகத்தன்மை அனுபவத்தை சமகால கண்ணோட்டங்களுடன் இணைப்பதன் மூலம் தீர்மானம் மேற்கொள்வதனை பலப்படுத்துகின்றது.

## மூலோபாய அபிலாஷைகளுக்கான இணைப்பு

ஸ்திரத்தன்மை, ஆளுகை மற்றும் நிலைபேறுடைய வளர்ச்சி

வாடிக்கையாளர் அனுபவத்தில் தனிச்சிறப்பு

டிஜிட்டல் தனிச்சிறப்பு

வெகுமதியளிக்கும கடன் கலாச்சாரம் மற்றும் ஆரோக்கியமான தேக்கத் தரம்

ஒரு உயர் செயற்திறனான அணியினை கட்டியெழுப்புதல்

## பாலினப் பன்முகத்தன்மை

**10** ஆண்கள்

**1** பெண்

## சபையின் பொறுப்புக்கள் GRI 2-12

சபையானது அதன் பொறுப்புக்களை நிறைவேற்றும்போது பொறுப்புணர்வு மற்றும் விசுவாசக் கடமையினை கடைப்பிடிப்பதுடன், இது வங்கியின் உறுதி மற்றும் அனைத்து பங்காளிகளுக்கும் தொடர்ச்சியான பெறுமதி உருவாக்கத்தினை உறுதிசெய்யும் நோக்கத்திலாகும். சபையின் பொறுப்புக்கள் சபையின் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அவை பின்வருவனவற்றை (ஆனால் இவற்றுக்கு வரையறைசெய்யப்படவில்லை) உள்ளடக்குகின்றன:

- வங்கியின் மூலோபாயத் திட்டத்தின் அமுலாக்கத்தினை அங்கீகரித்து மேற்பார்வை செய்தல்.
- ஒட்டுமொத்த இடர் கொள்கை மற்றும் செயன்முறைகளை அங்கீகரித்தல், இடர் ஆர்வ மட்டங்களை வரையறைசெய்தல் மற்றும் ஒரு இடர் உணர்வுள்ள கலாச்சாரத்தினை வளர்த்தல் என்பவற்றினூடாக வினைத்திறனான இடர்களின் முகாமைத்துவத்தினை உறுதிசெய்தல்.
- வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் போதுமை மற்றும் நேர்மையினை உறுதிசெய்தல்.
- ஊதியத்தின் கண்காணிப்பு மற்றும் மீளாய்வு உள்ளடங்காலான ஊதியத்திலான மேற்பார்வை.
- வங்கி முழுவதும் தொழில்முறையான, நெறிமுறையான மற்றும் விவேகமான நடத்தை என்பவற்றை புகுத்தும் ஒரு வலுவான பெருநிறுவன கலாச்சாரத்தினை வளர்த்தல்.
- வங்கியின் செயன்முறைகள், மூலோபாயம் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளுதல் முழுவதிலும் சூ.ச.ஆ. (ESG) கருத்துக்களை உட்புகுத்தல்.

# இலங்கை வங்கியின் ஆளுகை

## பணிப்பாளர் அறிமுகத்திட்டம் GRI 2-17

வங்கியின் கட்டமைக்கப்பட்ட மற்றும் விரிவான பணிப்பாளர் அறிமுகத் திட்டமானது ஆரம்பத்திலிருந்தே புதிய பணிப்பாளர்கள் வினைத்திறனாக பங்களிப்பு செய்வதனை அனுமதிக்கின்றது. இத்திட்டமானது வங்கியின் செயற்பாட்டு நிலத்தோற்றம், முறைமைப்படுத்தல் சூழல், இடர் தோற்றுருவம் மற்றும் சபையின் பொறுப்புக்கள் மற்றும் நெறிமுறை நியமங்களுடனான சீரமைவிற்கான மூலோபாயம் மற்றும் உறுதிசெய்தல் என்பவற்றைப் புரிந்துகொள்வதில் பணிப்பாளர்களுக்கு துணைபுரிவதற்காக வடிவமைக்கப்பட்டது. பணிப்பாளர் அறிமுகத்திட்டத்தின் முக்கிய கூறுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

**அறிமுகப்படுத்தல் பொதி**

- வங்கியின் மேலோட்டம்
- முறைமைப்படுத்தல் நிலத்தோற்றம்
- ஆளுகைக் கட்டமைப்பின் விபரங்கள்
- சபை உறுதுணை கட்டமைப்பு

**முன்னிலைப்படுத்தல்கள்**

பின்வருவனவற்றில் பொது முகாமையாளர் மற்றும் பி.பொ.மு. களின் முன்னிலைப்படுத்தல்,

- வணிக மாதிரி
- நிறுவனக் கட்டமைப்பு
- வணிகப் பிரிவுகள்
- துணைச் சேவைகள்

**கூட்டங்களும் விஜயங்களும்**

தேவையானவாறு நேரடி கூட்டங்கள் மற்றும் திணைக்கள விஜயங்கள் அட்டவணைப்படுத்தப்படுகின்றன.

## பணிப்பாளர் பயிற்சி GRI 2-17

பணிப்பாளர்களுக்கு தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திக்கான அணுகுதல் வழங்கப்படுவதுடன், இது அவர்களது கடமைகளை பயனுறுதியாக நிறைவேற்றுவதனை இயலுமையாக்குகின்றது. பயிற்சியானது பொதுவாக பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளிலான மாற்றங்கள், செயற்பாட்டு நிலத்தோற்றத்தில் வெளிவருகின்ற இயக்கவியல் மற்றும் ஏனைய பொருத்தமான விடயங்கள் என்பவற்றிலாகும். பணிப்பாளர்கள் அந்தந்த தொழில்சார் நிறுவனங்களின் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி தேவைப்பாடுகளுடனும் இணங்குகின்றார்கள். சுயாதீன தொழில்சார் ஆலோசனைக்கான பணிப்பாளர்களின் அணுகுதலுக்கான கொள்கைக்கு சீரமைவாக, வங்கியின் செலவில் வெளிவாரி நிபுணத்துவ உள்ளீடுகளுக்கான அணுகுதலுக்கான வாய்ப்பானது பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றது.

**பொருண்மையான விடயங்களுக்கான இணைப்பு**

**2025 இல் பணிப்பாளர் பயிற்சி**

ஒரு தொடர்ச்சியான முன்னெடுப்பின் ஒரு பகுதியாக நான்கு நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்கள் இங்கிலாந்து மற்றும் வேல்சின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்திடமிருந்து நேனு பயிற்சி மற்றும் சான்றளிப்பினை பெற்றார்கள்.

- நிதியியல் குற்றம் தடுப்பு
- நிதிச் சேவைகளில் உட்குறை உரைத்தல்
- இடர் முகாமைத்துவம்
- SLFRS நிலைபேறுடைமை வெளிப்படுத்தல் நியமங்கள்
- தொழில்நுட்பம் மற்றும் செ.நு.

## சபை புத்துணர்ச்சி மற்றும் தொடர்வுத் திட்டம் GRI 2-10

பொறுப்புக்கூறல் மற்றும் பயனுறுதித்தன்மையினை உறுதிசெய்வதற்காக, சபையானது புதிய நியமனங்கள், இளைப்பாறுதல்கள் மற்றும் பதவி விலகல்களூடாக காலாகாலம் புத்துணர்ச்சியினை பெறுகின்றது. சபை நியமனங்களுக்கான ஒரு முறையான மற்றும் வெளிப்படைத்தன்மையான பொறிமுறை காணப்படுகின்றது; சபை நியமன மற்றும் ஆளுகைக் குழுவானது இ.ம.வ. மற்றும் கொ.ப.ப. இன் "தகுதியும் பொருத்தமும்" அளவுகோல்களுக்கு எதிராக சாத்தியமான வேட்பாளரை மதிப்பீடு செய்கின்றது. இவை நேர்மை, தொழில்சார் தகைமை, சுயாதீனத்தன்மை மற்றும் முரண்பாட்டு அக்கறையின்மை என்பவற்றை உள்ளடக்குகின்றன. இலங்கை வங்கிக்கு பணிப்பாளர்களின் நியமனத்திலான திருத்தியமைக்கப்பட்ட கொள்கையின் பிரகாரம், குழுவானது சபையின் அங்கீகாரத்திற்காக ஒரு குறுகிய பட்டியலை சமர்ப்பித்தல் வேண்டும். இது அதன்பின்னர் 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களது ஏற்பாடுகளின் பிரகாரம், நியமிக்கும் அதிகாரத்தினைக் கொண்ட நிதி தலைப்பிற்கு பொறுப்பான அமைச்சருக்கு, முறையான நியமனத்திற்காக அனுப்பிவைக்கப்படுகின்றது. அமைச்சர் ஒரே பங்குதாரராக இலங்கை அரசாங்கத்தினை பிரதிநிதித்துவம் செய்யும் பதவிவழி பணிப்பாளரையும் நியமிக்கின்றார். வங்கியானது ஒரு சந்தை இடையீட்டாளராகச் செயலாற்றுவதனால் புதிய சபை நியமனங்களை இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவும் அங்கீகரிக்கின்றது.

இவ்வாண்டின்போது கீழே விளக்கமளிக்கப்பட்டுள்ளவாறு ஆறு புதிய பணிப்பாளர்களின் நியமனத்துடன் சபையானது கணிசமாக பலப்படுத்தப்பட்டது.

| | | |
|---|---|---|
| **திரு. தா்ஷன குணசேகர**<br>**13 ஆகஸ்ட் 2025 இல் ஒரு சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளராக நியமிக்கப்பட்டாா்** | **திரு. துல்சி அலுவிஹார**<br>**16 செப்டம்பா் 2025 இல் ஒரு சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளராக நியமிக்கப்பட்டாா்** | **அம்மணி ஃரமினி ரத்வத்தே**<br>**16 செப்டம்பா் 2025 இல் ஒரு சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளராக நியமிக்கப்பட்டாா்** |
| திறமையும் அனுபவமும்<br>• பெருநிறுவன நிதியளித்தலும் கணக்கீடும்<br>• வணிக உருமாற்றல்<br>• நிறுவன இடா் முகாமைத்துவம்<br>• நெறிமுறையும் ஆளுகையும் | திறமையும் அனுபவமும்<br>• முதலீட்டு வங்கியியல்<br>• பெருநிறுவன மீள்கட்டமைப்பு<br>• இணைப்புகளும் பொறுப்பேற்றல்களும் | திறமையும் அனுபவமும்<br>• நிதி மற்றும் முகாமைத்துவம்<br>• நிலைபேறுடைய அபிவிருத்தி |
| **திரு. தா்ஷன் ஜயாரத்ன**<br>**26 செப்டம்பா் 2025 இல் ஒரு சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளராக நியமிக்கப்பட்டாா்** | **திரு. சுனிமல் வீரசூரிய**<br>**7 ஒக்டோபா் 2025 இல் ஒரு சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளராக நியமிக்கப்பட்டாா்** | **பொறி.பேரா.ஆனந்த ஜயவா்தன**<br>**14 நவம்பா் 2025 இல் ஒரு சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளராக நியமிக்கப்பட்டாா்** |
| திறமையும் அனுபவமும்<br>• வங்கியியல்<br>• நிதியியல் சந்தைகள் முகாமைத்துவம்<br>• முதலீட்டு முகாமைத்துவம் | திறமையும் அனுபவமும்<br>• தகவல் பாதுகாப்பு<br>• டிஜிட்டல் நிலைமாற்றம்<br>• தொழில்நுட்ப முகாமைத்துவம்<br>• தொழில்நுட்ப மாற்றல் | திறமையும் அனுபவமும்<br>• பெருநிறுவன ஆளுகை<br>• இடா் முகாமைத்துவம்<br>• விஞ்ஞானமும் பொறியியலும் |

## அதிகாரச் சமநிலை GRI 2-12

சபை சாசனமானது சபையின் பங்குகள் மற்றும் பொறுப்புக்களை தெளிவாக வரையறை செய்வதுடன், எந்த ஒரு தனிநபரோ / தனிநபா் குழுவோ தடையற்ற அதிகாரங்களை கொண்டிருக்காததனை உறுதிசெய்கின்றது. தலைவா் மற்றும் பொது முகாமையாளாின் பங்கானது வேறாக்கப்பட்டுள்ளது; தலைவா் ஒரு நிறைவேற்றுனரல்லா பணிப்பாளராக செயலாற்றுகின்றாா் மற்றும் சபைக்கான தலைமைத்துவத்தினை வழங்கும்வேளை பொது முகாமையாளா் முகாமைத்துவ அணிக்கு தலைமை தாங்குகின்றாா்.

### தலைவரின் பங்கு

- சபைக்கு தலைமைத்துவத்தினை வழங்குதல் மற்றும் அனைத்து சபை செயன்முறைகளும் பின்பற்றப்படுவதனை உறுதிசெய்தல்.
- சிறந்த ஆளுகை நடைமுறைகள் கலாச்சாரத்தினை ஊக்குவித்தல் மற்றும் நோ்மையில் உயா்ந்த நியமங்களை பராமாித்தல்.
- நிறைவேற்றுனரல்லா பணிப்பாளா்களது பங்களிப்பிற்கு வசதியளித்தல்.
- சபை அங்கத்தவா்களினால் தொிவிக்கப்படும் பன்முகமான கருத்துக்களை ஊக்கமளிப்பதன் மூலம் ஒரு உள்ளடக்கமான கலாச்சாரத்தினை வளா்த்தல் மற்றும் கலந்துரையாடல்களின்போது அனைத்து பணிப்பாளா்களதும் பங்குபற்றலை உறுதிசெய்தல்.
- பொருத்தமான அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாட்டினை உறுதிசெய்தல்.
- பங்குதாரா் அக்கறைகள் பொருத்தமானவாறு விளித்துரைக்கப்படுவதனை உறுதிசெய்தல்.

### பொது முகாமையாளரின் பங்கு

- சபையினால் நிறுவப்பட்டுள்ள நிதியியல் மற்றும் நிதியல்லாத இலக்குகளுக்கு சீரமைவாக வங்கியின் மூலோபாயத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூலோபாய நிகழ்ச்சிநிரலை நிறைவேற்றுதல்.
- வங்கியின் செயற்திறனை கண்காணித்து சபைக்கு அறிக்கையிடுதல்.
- வங்கியின் வணிகத்திற்கு பொருண்மையான இடா்களை இனங்கண்டு முகாமைப்படுத்துவதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வுகள் உள்ளடங்கலான ஒரு முறைமையினை அமுலாக்குதல்.
- சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கான தொடா்வுத் திட்டத்தினை விருத்திசெய்தல்.

தலைவா் மற்றும் பொது முகாமையாளாின் சுய விபரங்கள் இந்த அறிக்கையின் பக்கங்கள் 34 மற்றும் 42 இல் குறிப்பிப்பட்டுள்ளன. மீளாய்வாண்டின்போது தலைவா், பொது முகாமையாளா் மற்றும் ஏனைய பணிப்பாளா்களிடையே எவ்விதமான பொருண்மையான / தொடா்புடைய நிதியியல், வணிகம், குடும்பம் அல்லது ஏனைய உறவுமுறைகளோ காணப்படவில்லை.

# இலங்கை வங்கியின் ஆளுகை

## சபை மதிப்பீடு

ஒரு முறைசார் சுய மதிப்பீட்டு பொறிமுறையினூடாக சபையானது அதன் செயற்திறனை ஆண்டுக்கு இருமுறை மதிப்பிடுகின்றது. இங்கு மேம்பாட்டிற்கான பிரிவுகள் இனங்காணப்பட்டு மேலதிக நடவடிக்கைக்காக செறிவாக்கப்படுகின்றது. சுய மதிப்பீடானது நியமன மற்றும் ஆளுகை குழுவினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாண்டின்போது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் பதிவுகள் சபைக்கான செயலாளரினால் பராமரிக்கப்படுகின்றன. 2025 இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளிலான முக்கிய கண்டுபிடிப்புகள் அருகிலுள்ள இணைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### சபையின் சுய மதிப்பீட்டின் கண்டுபிடிப்புகள்

2025 இன் முக்கிய வலிமைகள்
(90 % இற்கு மேலான புள்ளிகள்)

- சபையின் தலைவர்
- மூலோபாய சிந்தனையும் திட்டமிடலும்
- சட்ட மற்றும் நெறிமுறை இணக்கப்பாடு
- சபைக்கும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கும் இடையேயான உறவுமுறை
- நடைமுறைகளை கண்காணித்துல் மதிப்பிடுதல்
- சபை கூட்டங்கள்

முன்னேற்றத்திற்கான பிரிவுகள்
(90 % இற்கு குறைவான புள்ளிகள்)

- சபை கட்டமைப்பும் நடைமுறைகளும்

## சபைக்கான செயலாளர்

சபைக்கான செயலாளர், செல்வி. ஜானகி சேனாநாயக்க சிறிவர்தன அவர்கள் வங்கியியல் சட்டத்தின் பிரிவு 43 இன் ஏற்பாடுகள் மற்றும் பொருத்தமான திருத்தங்களைத் திருப்திபடுத்துகின்றார். இவர் சபை செயன்முறைகள் மற்றும் ஆளுகை விடயங்கள் ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள் மற்றும் பொருத்தமான சபை குழுச் சாசனங்கள் மற்றும் செயன்முறைகளுக்கு இணங்கி நடாத்தப்படுவதனை உறுதிசெய்கின்றார். சபைக்கான செயலாளரது சேவைகள் மற்றும் ஆலோசனைக்கான அணுகுதலை அனைத்து பணிப்பாளர்களும் கொண்டுள்ளார்கள். சபைக்கான செயலாளரின் முக்கிய பொறுப்புக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- வங்கியின் பெருநிறுவன ஆளுகைக் கட்டமைப்பினை அமுலாக்குதல்.
- வங்கியின் ஆளுகைக் கட்டமைப்பினை வழக்கமாக மீளாய்வு செய்து முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள், பங்காளிகளது தேவைகள் மற்றும் வளர்ந்துவரும் சிறந்த நடைமுறைகளுடனான சீரமைவினை உறுதிசெய்தல்.
- பணிப்பாளர்களுக்கான தொழில்சார் அபிவிருத்தித் திட்டங்களில் நியமன மற்றும் ஆளுகை குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்துதல்.
- சபை கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகளை பராமரித்தல் மற்றும் நியாயமான அறிவித்தலின் பிரகாரம் யாரேனும் பணிப்பாளருக்கு அல்லது முறைமைப்படுத்துவருக்கு அணுகுதலை வழங்குதல்.

## செயன்முறைகள்: நேர்மையுடனான விரைவூக்கம்

வங்கியின் ஆளுகைச் செயன்முறைகள் செயற்பாட்டு விரைவூக்கத்துடன் திடமான மேற்பார்வையினை பயனுறுதியாக சமநிலைப்படுத்துவதுடன், சரியான நேரத்தில் மற்றும் நன்கு அறிவுபூர்வமான தீர்மானம் மேற்கொள்வதை இயலுமையாக்குதல். தெளிவான பொறுப்புக்கூறல் கட்டமைப்புகள் மற்றும் வலுவான உறுதியளித்தல் பொறிமுறைகள் அனைத்து செயற்பாடுகளிலும் நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் நிலைத்தன்மையினை உறுதிசெய்கின்றன.

## கட்டமைப்புகளும் ஒப்படைப்பும்

GRI 2-9

வங்கியின் ஆளுகைக் கட்டமைப்பானது தேசத்திற்கான வங்கியாக அதன் அதிகரிக்கும் சிக்கல் மற்றும் தகைமையினை பிரதிபலிப்பதற்கான தொடர்ந்தும் பரிணமிக்கின்றது. கீழே விளக்கப்பட்டுள்ளவாறு, சபை கட்டமைப்புகள் முக்கிய பிரிவுகளில் முன்னிறுத்தமான மேற்பார்வையினை வழங்கி, பொருத்தமான ஒப்படைப்பினை இயலுமையாக்கி BOC போன்ற பாரிய மற்றும் ஆழமான ஒரு நிறுவனத்தினை வினைத்திறனான ஆளுகை செய்வதற்கான விரைவூக்கத்தினை தக்கவைக்கின்றது.




*1.1.2026 முதல் மீளுருவாக்கப்பட்டது

** புதிதாக ஒருங்கிணைக்கப்பட்டது.

## சபை உபகுழுக்கள்

சபையானது 2025 ஆம் ஆண்டில் ஆறு உபகுழுக்களை நியமித்ததுடன் இது 2026 இன் ஆரம்பத்தில் எட்டு உபகுழுக்களாக உயர்வடைந்தது. இவை அவற்றின் மேற்பார்வை பொறுப்புக்களை பயனுறுதியாக நிறைவேற்றுவதை உறுதிசெய்வதுடன் கணக்கீடு, தொழில்நுட்பம், இடர் முகாமைத்துவம் மற்றும் நிலைபேறுடைமை போன்ற விசேட பிரிவுகளில் பணிப்பாளர்களது நிபுணத்துவத்தினை பயன்படுத்துவதனை இயலுமையாக்குகின்றது.

குழுக்களை தொகுப்பதில், சபையானது பொருத்தமான முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள், அங்கத்தவர்களின் திறன்கள் மற்றும் அனுபவத்தையும் ஒவ்வொரு குழுவினது பொறுப்பாணையினையும் கருத்திலெடுக்கின்றது. ஒவ்வொரு சபை உபகுழுவும் மீளாய்வு செய்யப்பட்ட குறிப்பு விதிமுறைகளைக் கொண்டுள்ளதுடன் அவை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றன.

உபகுழுக்களின் குறிப்பு விதிமுறைகள் பெருநிறுவன ஆளுகையில் புதிய வங்கியியல் சட்ட பணிப்புரைகள் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளுக்கு சீரமைவாயிருப்பதை உறுதிசெய்வதற்காக திருத்தியமைக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டன. கணக்காய்வு, மனித வளங்கள் மற்றும் ஊதியம், நியமனம் மற்றும் ஆளுகை மற்றும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழுக்களும், பட்டியலிடல் விதிகளின் விதி இலக்கம் 9.3 இற்கு அமைவாக மீளுருவாக்கப்பட்டன. 2025 ஆம் ஆண்டில் உபகுழுக்களினால் செயலாற்றப்பட்ட நடவடிக்கைகள் இவ்வறிக்கையின் பக்கங்கள் 180 முதல் 190 வரை விபரிக்கப்பட்டுள்ளன.

### கணக்காய்வுக் குழு
(குழுவின் அறிக்கையினை பக்கம் 180 -181 இல் பார்வையிடவும்)

- நிதிக் கூற்றுக்களின் நேர்மை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமையினை மதிப்பிடுகின்றது
- வெளிவாரி கணக்காய்வு
- உள்ளகக் கணக்காய்வு

மூலோபாயத்துடன் இணைப்பு

பெறுமதி உருவாக்கத்துடன் இணைப்பு

இடம்பெற்ற கூட்டங்களின் எண். - ஒன்பது

திறன் கலவை 1 2 1 2 1 1

### ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு
(குழுவின் அறிக்கையினை பக்கம் 182-183 இல் பார்வையிடவும்))

- கடன், சந்தை, செயற்பாடு, திரவத்தன்மை சைபர்/த.தொ., மூலோபாய இடர்கள், சுசஆ இடர் உள்ளடங்கலான இடர் முகாமைத்துவம்
- இடர் முகாமைத்துவ கொள்கை கட்டமைப்பு மற்றும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாட்டினை உறுதிசெய்தல்

மூலோபாயத்துடன் இணைப்பு

பெறுமதி உருவாக்கத்துடன் இணைப்பு

இடம்பெற்ற கூட்டங்களின் எண். - எட்டு

திறன் கலவை 1 3 2 1 1

### மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு
(குழுவின் அறிக்கையினை பக்கம் 184-185 இல் பார்வையிடவும்)

- ஊதியக் கொள்கை மற்றும் பொருத்தமான ம.வ. கொள்கைகளை அங்கீகரித்தல்
- நிறுவன கட்டமைப்பு
- முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான குறிக்கோள்களும் இலக்குகளும்
- செயற்திறன் மதிப்பிடல்

மூலோபாயத்துடன் இணைப்பு

பெறுமதி உருவாக்கத்துடன் இணைப்பு

இடம்பெற்ற கூட்டங்களின் எண். - எட்டு

திறன் கலவை 1 1 2 1 1

### நியமனம் மற்றும் ஆளுகைக் குழு
(குழுவின் அறிக்கையினை பக்கம் 186-187 இல் பார்வையிடவும்)

- முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் நியமனம்
- புதிய பணிப்பாளர்களது நியமனத்திற்கான செயன்முறையுடன் இணக்கப்பாட்டினை உறுதி செய்தல்
- தொடர்வுத் திட்டமிடல்
- நெறிமுறைக் கோவை
- சபை மற்றும் அதன் உபகுழுக்களின் பயனுறுதித்தன்மை

மூலோபாயத்துடன் இணைப்பு

பெறுமதி உருவாக்கத்துடன் இணைப்பு

இடம்பெற்ற கூட்டங்களின் எண். - 14

திறன் கலவை 3 2 1 1

### தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழு
(குழுவின் அறிக்கையினை பக்கம் 188-189 இல் பார்வையிடவும்)

- டிஜிட்டல் மூலோபாயத்தின் அமுலாக்கத்தில் மேற்பார்வை
- டிஜிட்டல் கருவிகள், சேவைகள், உட்கட்டமைப்பு மற்றும் கொள்கைகள்

மூலோபாயத்துடன் இணைப்பு

பெறுமதி உருவாக்கத்துடன் இணைப்பு

இடம்பெற்ற கூட்டங்களின் எண். - 10

திறன் கலவை 1 2 1 2 1 1

### தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வுக் குழு
(குழுவின் அறிக்கையினை பக்கம் 190 இல் பார்வையிடவும்)

- முறைமைப்படுத்தல் மற்றும் ஏனைய அறிக்கையிடல் தேவைப்பாடுகளின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுவதற்காக பயனுறுதியான கட்டுப்பாட்டு முறைமைகளை அமுலாக்குதல்

மூலோபாயத்துடன் இணைப்பு

பெறுமதி உருவாக்கத்துடன் இணைப்பு

இடம்பெற்ற கூட்டங்களின் எண் -ஐந்து

திறன் கலவை 2 1 1 1

● விவசாயம் ● வங்கியியல் / IB ● IT / பின்டெக் ● நிதி மற்றும் கணக்கீடு ● பொருளியல் ● நிலைத்தன்மை வளர்ச்சி ● சந்தைப்படுத்தல்

# இலங்கை வங்கியின் ஆளுகை

மேலே பட்டியலிடப்பட்ட சபை உபகுழுக்களுக்கு மேலாக வங்கியானது பல நிறைவேற்று மட்டத்திலான குழுக்களை, சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவம், கடன், மூலோபாய மீளாய்வு, வணிகத் தொடர்ச்சி மற்றும் த.தொ. போன்ற முக்கிய பிரிவுகளில் நிறுவியுள்ளது. இக்குழுக்கள் சபை அங்கீகரிக்கப்பட்ட மூலோபாயங்கள், கொள்கைகள் மற்றும் இடர் ஆர்வத்தினை செயலாற்றக்கூடிய தீர்மானங்களாக மாற்றுகின்றன.

## நிறைவேற்றுக் குழுக்கள்

| | | | |
|---|---|---|---|
| சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு (ALCO) | பெருநிறுவன தகவல் பாதுகாப்புக் குழு | செயலற்ற நிலையிலுள்ள சொத்துக்கள் குழு | தேக்க முகாமைத்துவக் குழு |
| கிளைகள் பிரிவு கடன் குழு | பெருநிறுவன முகாமைத்துவக் குழு | உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயன்முறை (ICAAP) மற்றும் மீட்டல் திட்ட (PCP) வழிநடத்தல் குழு | வெகுமதி மற்றும் அங்கீகரித்தல் கொள்கை குழு (RRPC) |
| வணிகத் தொடர்வு ஒருங்கிணைத்தல் குழு | பெருநிறுவன மூலோபாய மீளாய்வுக் குழு | முதலீட்டுக் குழு | புலமைத் திட்டத் தெரிவுக் குழு (மீளாய்வுக் குழு) |
| வணிகத் தொடர்வு அமுலாக்கல் குழு | கடன் குழு | த.தொ.வழிநடத்தல் குழு | உதவித்தொகை குழு |
| வணிகத் தொடர்வு முகாமைத்துவ வழிநடத்தல் குழு (BCMAC) | சேத மதிப்பீடு மற்றும் மீட்டமைத்தல் குழு (DARC) | சந்தைப்படுத்தல் குழு | tvBOC இன் வழிநடத்தல் குழு |
| நீண்டகாலமாக நிலுவையிலுள்ள கடன் மீதிகளைக் கையாளும் குழு | வெளிநாட்டு நாணய வெளிப் பாய்ச்சல் முகாமைத்துவக் குழு | மொபைல் வங்கியியல் வழிநடத்தல் குழு | நிலைபேறுடைமை குழு |
| செயற்பாட்டு இழப்புகளை கையாளும் குழு | மோசடி இடர் முகாமைத்துவக் குழு | செயற்திறனற்ற சொத்துக்கள் மீளாய்வுக் குழு (NPAC) | தொழில்நுட்ப மற்றும் செயற்பாட்டு குழு |
| அரசாங்கப் பிணையங்களில் முதலிடுவதற்கான குழு | மனித வளக் கொள்கை குழு(HRPC) | செயற்பாட்டு இடர் முகாமைத்துவ நிறைவேற்றுக் குழு | tvBOC இன் செயற்குழு |

## சபை கூட்டங்கள்

இவ்வாண்டின்போது சபையானது 26 தடவைகள் கூடியது. இவை ஏனையவற்றுக்கிடையில் மூலோபாய நிறைவேற்றல், வணிகச் செயற்திறன், மூலதனப் போதுமை, இடர் முகாமைத்துவம் மற்றும் பங்காளிகள் தேவைப்பாடுகள் என்பவற்றை மையப்படுத்திய தொடர்ச்சியான நிகழ்ச்சிநிரல் உறுப்படிகளுடனாகும். கட்டமைக்கப்படாத நேரமும் சபைக் கூட்டங்களில் கருத்திலெடுக்கப்பட்டு தற்காலிக விடயங்கள் எழும்போது அவற்றிலான கலந்துரையாடலை இயலுமையாக்குகின்றது. சபை மற்றும் உபகுழு கூட்டங்கள் நேரகாலத்துடன் அட்டவணைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் பணிப்பாளர்களுக்கு உரியவாறு அறிவிக்கப்படுகின்றது.

### சபைக் கூட்டத்திற்கு முன்னர்

சபை மற்றும் உபகுழு கூட்டங்களுக்கான நாளேடு நிறுவப்படுகின்றது

பணிப்பாளர்கள் விடயங்களை முன்மொழியும் நெகிழ்வுடன் சபையின் செயலாளரினால் சபை நிகழ்ச்சிநிரல் நிறுவப்படுகின்றது

சபை ஆவணங்களின் சுற்றோட்டம்

### சபைக் கூட்டங்கள்

செயற்திறன் இற்றைப்படுத்தல்கள், ஆளுகை விடயங்கள் மற்றும் உபகுழு பரிந்துரைகளின் கலந்துரையாடல்

தேவையாயின், முகாமைத்துவத்திடமிருந்து மேலதிகத் தகவல்கள் கேட்கப்படுகின்றன

### சபை கூட்டத்திற்கு பின்னர்

நிகழ்ச்சிக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டு கூட்டம் இடம்பெற்று 10 நாட்களுள் ஒரு பாதுகாப்பான இ - தீர்வினூடாக பணிப்பாளர்களிடையே சுற்றறிக்கையிடப்படுகின்றது.

அடுத்துவரும் சபைக் கூட்டத்தில் நிகழ்ச்சிக் குறிப்புகள் அங்கீகரிக்கப்படுகின்றன

நிலுவையிலுள்ள விடயங்களில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது

சபை நிகழ்ச்சிக் குறிப்புகள் போதுமான விபரத்துடன் பதிவுசெய்யப்படுவதுடன், ஆலோசனைகள், தீர்மானங்கள், செயல்களில் ஒரு தெளிவான மற்றும் துலலியமான பதிவினை வழங்குகின்றன. சபையினால் அதன் ஆலோசகைளில் பயன்படுத்தும் தகவல்களின் பொழிப்பு, சபையினால் கருத்திலெடுக்கப்பட்ட விடயங்கள், மற்றும் ஏனையவற்றுக்கிடையில் வங்கி வெளிப்பாட்டினைக் கொண்ட முக்கிய இடர்களில் சபையின் புரிந்துணர்வு என்பவற்றிலான தகவல்களை உள்ளடக்குகின்றன.

## 2025 காலப்பகுதியில் சபை மற்றும் உபகுழு கூட்டங்களின் பணியாளர்களது வருகை

2025 இல் சபை மற்றும் குழு கூட்டங்களில் பணிப்பாளர்களது வருகை பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| பணிப்பாளரின் பெயர் | சபை கூட்டம் | AC | HR&RC | N&GC | IRMC | ICTC | RPTRC | Joint AC/ IRMC/ ICTC |
|---|---|---|---|---|---|---|---|---|
| திரு. காவிந்த டி சொய்சா[1] தலைவர் | 26/26 | N/A | 8/8 | 14/14 | 7/7 | 8/10 | N/A | **1/1** |
| கலாநிதி. கபில சேனாநாயக்க[2] பதவிவழி பணிப்பாளர் | 21/26 | 5/9 | 7/8 | 1/1 | 0/1 | 4/6 | 5/5 | **1/1** |
| திரு. ஜெஹான் இஸ்மாயில்[3] நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் | 25/26 | 9/9 | 8/8 | 13/14 | 4/5 | N/A | N/A | **1/1** |
| திரு. ஜயமின் பெல்பொல[4] நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் | 11/11 | 3/3 | N/A | N/A | 3/4 | 4/4 | N/A | **N/A** |
| கலாநிதி. அமல் இலேசிங்க[5] நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் | 26/26 | 6/6 | N/A | N/A | N/A | 10/10 | 5/5 | **1/1** |
| திரு. ஆர்.எம்.பி. ரத்னாயக்க[6] நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் | 26/26 | N/A | N/A | 13/13 | 7/7 | N/A | 5/5 | **1/1** |
| திரு. தர்ஷன குணசேகர[7] நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் | 7/8 | 5/5 | N/A | N/A | N/A | N/A | N/A | **N/A** |
| திரு. துல்சி அலுவிஹார[8] நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் | 6/6 | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | **N/A** |
| அம்மணி. ஷர்மினி ரத்வத்தே[9] நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் | 6/6 | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | **N/A** |
| திரு. தர்ஷன் ஜயரத்ன[10] நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் | 5/5 | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | **N/A** |
| திரு. சுனிமல் வீரசூரிய[11] நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் | 5/5 | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | **N/A** |
| பொறியியலாளர் பேராசிரியர் ஆனந்த ஜயவர்தன[12] நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் | 2/2 | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | **N/A** |

கணக்காய்வுக் குழு (AC)
மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு (HR&RC)
நியமன மற்றும் ஆளுகைக் குழு (N&GC)
ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (IRMC)
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழு (ICTC)
தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வுக் குழு (RPTRC)

1 03.02.2025 முதல் IRMC இற்கு நியமிக்கப்பட்டார்

2 03.02.2025 இல் N&GC இலிருந்து பதவி விலகினார்
03.02.2025 இல் IRMC இலிருந்து பதவி விலகினார்
03.02.2025 இல் ICTC இலிருந்து பதவி விலகி 23.06.2025 இல் மீள நியமிக்கப்பட்டார்

3 03.02.2025 இல் IRMC இலிருந்து பதவி விலகி 23.06.2025 இல் மீள நியமிக்கப்பட்டார்

4 30.05.2025 இல் சபையிலிருந்து பதவி விலகினார்
30.05.2025 இல் AC இலிருந்து பதவி விலகினார்
30.05.2025 இல் IRMC இலிருந்து பதவி விலகினார்
03.02.2025 இல் ICTC இற்கு நியமிக்கப்பட்டு 30.05.2025 இல் பதவி விலகினார்

5 23.06.2025 முதல் AC இற்கு நியமிக்கப்பட்டார்

6 03.02.2025 முதல் N&GC இற்கு நியமிக்கப்பட்டார்
03.02.2025 முதல் IRMC இற்கு நியமிக்கப்பட்டார்

7 13.08.2025 முதல் சபைக்கு நியமிக்கப்பட்டார்
15.08.2025 முதல் AC இற்கு நியமிக்கப்பட்டார்

8 16.09.2025 முதல் சபைக்கு நியமிக்கப்பட்டார்

9 16.09.2025 முதல் சபைக்கு நியமிக்கப்பட்டார்

10 26.09.2025 முதல் சபைக்கு நியமிக்கப்பட்டார்

11 07.10.2025 முதல் சபைக்கு நியமிக்கப்பட்டார்

12 14.11.2025 முதல் சபைக்கு நியமிக்கப்பட்டார்

# இலங்கை வங்கியின் ஆளுகை

## வினைத்திறனான கட்டுப்பாடுகள் GRI 2-23, 24

வலுவான கொள்கைகள், ஒழுக்கமான இடர் முகாமைத்துவம் மற்றும் விரிவான இணக்கப்பாட்டு பொறிமுறைகள் என்பன வங்கி முழுவதும் வினைத்திறனான கட்டுப்பாடுகளை உறுதிசெய்கின்றன. இந்த நடவடிக்கைகள் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள், நெறிமுறையான நியமங்கள் மற்றும் வங்கியின் மூலோபாய குறிக்கோள்களுடன் சீரமைவாக செயற்பாடுகள் இருப்பதனை உறுதிசெய்வதில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றன.

## கொள்கை கட்டமைப்பு

வங்கியின் வலுவான கொள்கைக் கட்டமைப்பானது நிறுவனம் முழுவதும் தீர்மானம் மேற்கொள்வதற்கு ஒரு நிலைத்தன்மையான மற்றும் பொறுப்புக்கூறும் அணுகுமுறையினை உறுதிசெய்வதற்கான அடித்தளமாக சேவையாற்றுகின்றது. அனைத்து கொள்கைகளும் அவை மாற்றமடையும் செயற்பாட்டு இயக்காற்றல்களுக்கு பொருத்தமாக இருப்பதனை உறுதிசெய்வதற்காக ஆகக் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவையேனும் மீளாய்வு செய்யப்பட்டு திருத்தியமைக்கப்படுகின்றன. வங்கியானது பெருநிறுவன ஆளுகை தொடர்பான பல கொள்கைகளை பெருநிறுவன ஆளுகையில் புதிய வங்கியியல் சட்டத்தின் பணிப்புரைகளது தேவைப்பாடுகளுக்கு அமைவாக திருத்தியமைத்தது. வங்கியில் செயற்பாட்டிலுள்ள கொள்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன (ஆனால் இவற்றுக்கு மாத்திரம் வரையறை செய்யப்படவில்லை):

**2025 இல் திருத்தியமைக்கப்பட்ட பாரிய கொள்கைகள்**

- கொள்முதல் வழிகாட்டிகள்
- நிலைபேறுடைமை கொள்கை
- சபைக்கு பணிப்பாளர்களது நியமனத்திலான கொள்கை

### கூட்டாண்மை ஆளுகை

- பணிப்பாளர்கள் சபை தொடர்பான விடயங்களில் கொள்கை (சபை சாசனம்)
- சபை குழுக்களிலான கொள்கை
- பெருநிறுவன ஆளுகையிலான கொள்கை (பெருநிறுவன ஆளுகைக் கொள்கை)
- இலங்கை வங்கியின் சுயாதீன தொழில்சார் ஆலோசனையினை பணிப்பாளர்கள் அணுகுவதிலான கொள்கை
- பணிப்பாளர்களது முரண்பாட்டு அக்கறைகளிலான கொள்கை

### மனித வளம் மற்றும் ஊதியம்

- மனித வளக் கொள்கை
- பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கொள்கை
- ஆட்சேர்த்தல் திட்டம்
- வீட்டிலிருந்து தொழில்புரிதல் கொள்கை
- தலைவர் மற்றும் பணிப்பாளர்கள் சபைக்கான ஊதியக் கொள்கை
- வெளிவாரி நேர்காணல் கொள்கை
- பணியாள் மனக்குறை கையாளுதல் கொள்கை
- முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான ஊதியக் கொள்கை

### இடர் முகாமைத்துவம்

- கடன் இடர் முகாமைத்துவக் கொள்கை
- நாட்டின் இடர் முகாமைத்துவ கொள்கை
- அழுத்தப் பரிசீலனை கொள்கை
- ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கொள்கை
- ICAAP கொள்கை (உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயன்முறை)
- செயற்பாட்டு இடர் முகாமைத்துவம்
- மோசடி இடர் முகாமைத்துவம்
- தகவல் பாதுகாப்பு கொள்கை

### பங்காளி முகாமைத்துவம்

- வாடிக்கையாளர் முறையீடு கையாளுதல் கொள்கையும் செயன்முறையும்
- தொடர்பாடல் கொள்கை
- பங்குதாரர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடனான உறவுகளில் கொள்கை
- பெருநிறுவுன வெளிப்படுத்தல் கொள்கை
- கொள்முதல் கையேடு

### நெறிமுறைகளும் கலாச்சாரமும்

- லஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்புக் கொள்கை
- உட்குறை உரைப்பதிலான கொள்கை
- பாலினக் கொள்கை

### சூழல், சமூகம், ஆளுகை (ESG)

- சூ.ச.ஆ. மற்றும் நிலைபேறுடைமையிலான கொள்கை
- ESMS கொள்கை
- இ-கழிவு முகாமைத்துவக் கொள்கை

## ஆர்வ முரண்பாட்டு GRI 2-15

வங்கியின் ஆர்வ முரண்பாட்டு கொள்கையானது பணிப்பாளர்கள் ஏனைய பங்காளிகளுடனான அதன் நடவடிக்கைகளில் முரண்பாடுகள் / சாத்தியமான முரண்பாட்டு அக்கறைகளை தவிர்ப்பதனை உறுதிசெய்கின்றது. கொள்கையானது, மெய்யான, சாத்தியமான அல்லது உணரப்பட்ட முரண்பாட்டு அக்கறைகளின் முகாமைத்துவம் தொடர்பாக தெளிவான விதிகள், கட்டுப்பாடுகள் மற்றும் வழிகாட்டிகளை நிறுவியுள்ளது. ஒவ்வொரு சபை கூட்டத்திலும் ஒரு பழக்கமாக பணிப்பாளர்கள் ஒப்பந்தங்கள் / புதிய நியமனங்களில் ஏதேனும் அக்கறைகளை பிரகடனப்படுத்தல் வேண்டும். முரண்பாட்டு அக்கறை காணப்படுமிடத்து பணிப்பாளர்கள் தகவல்களை பெறுவதில், கலந்துரையாடல்களில் கலந்து கொள்வதில், அவர்களது அபிப்பிராயத்தினை தெரிவிப்பதில் அல்லது சூழ்நிலைகளை அங்கீகரிப்பதில் இருந்து விலகியிருத்தல் வேண்டும்.

## இணக்கப்பாடு GRI 2-27

ஒரு வலுவான நெறிமுறை மற்றும் இணக்கப்பாட்டு கலாச்சாரமானது பொருத்தமான முறைமைப்படுத்தல் கட்டமைப்புகளுடனான சீரமைவினை உறுதிசெய்யும்வேளை வங்கியின் நற்பெயரினை பாதுகாத்து பங்காளிகளது நம்பிக்கையினை பலப்படுத்துகின்றது. வங்கியியல் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக BOC ஒரு சுயாதீன இணக்கப்பாட்டு அலகினை நிறுவியுள்ளது. இது அனைத்து பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாட்டில் ஒரு உயர் மட்டத்திலான நேர்மையுடன் வங்கி செயலாற்றுவதனை உறுதிசெய்யும் பொறுப்பினைக் கொண்டுள்ளது. சபையானது பிரதம இணக்கப்பாட்டு அதிகாரி மற்றும் முகாமைத்துவ அணியிடமிருந்து வழக்கமாக இற்றைப்படுத்தல்களை பெறுகின்றது. இவை ஏதேனும் முறைமைப்படுத்தல் மீறுகைகள், வலியுறுத்தல் நடவடிக்கைகள் அல்லது வெளித்தோன்றும் இணக்கப்பாட்டு சிக்கல்கள் உள்ளடங்கலான இணக்கப்பாட்டு நிலைமையிலாகும்.

> அறிக்கையிடும் காலத்தின்போது வங்கி பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாடற்ற எவ்வித சந்தர்ப்பங்களையும் பதிவு செய்யவில்லை மற்றும் எவ்விதமான பணவகையான அபராதம் அல்லது தண்டனைக்கு ஆட்படவில்லை.

## நெருக்கடியான கரிசனைகளின் தொடர்பாடல் GRI 2-16, 26

பணிப்பாளர்கள் சபைக்கு நெருக்கடியான அக்கறைகளை அறிவிப்பதற்கு வசதியளிப்பதற்காக பின்வரும் பொறிமுறைகள் காணப்படுகின்றன.

- சபை மற்றும் சபை உபகுழுக்களின் கூட்டங்கள்: நெருக்கடியான அக்கறைகள் பொருத்தமான உப குழுக்களூடாக சபைக்கு எழுப்பப்படலாம்.
- சபையின் செயலாளர் முகாமைத்துவத்திற்கும் சபைக்கும் இடையே ஒரு கால்வாயாக செயலாற்றுகின்றார்.
- பொது முகாமையாளரினால் நேரடியான அறிக்கைகள்
- பணிப்பாளரின் விசேட வேண்டுதல்கள்
- உட்குறை உரைப்பவர்: பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வுக் குழுவின் தலைவரினூடாக.

> அறிக்கையிடும் காலத்தின்போது எவ்விதமான நெருக்கடியான அக்கறைகளும் வங்கியின் உயர் ஆளுகை அங்கத்திற்கு அறிவிக்கப்படவில்லை

## இடர் ஆளுகை

வங்கியானது அதன் இடர் வெளிப்பாடுகளை பயனுறுதியான இனங்கண்டு, மதிப்பிட்டு, முகாமைப்படுத்துவதற்கு முறையான செயன்முறைகளைக் கொண்டுள்ளதுடன், இதன் மூலம் அதன் ஒட்டுமொத்த மீளெழுச்சியினை பலப்படுத்துகின்றது. இடர் ஆராய்வுகள் ஒட்டுமொத்த தீர்மானம் மேற்கொள்வதில் பதிக்கப்பட்டுள்ளதுடன், இடர் வெகுமதி இயக்காற்றலுக்கு இடையே ஒரு உகப்பாக்கமான சமநிலை நோக்கி முயற்சிப்பதனை இயலுமையாக்குகின்றது. ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவும் கணக்காய்வுக் குழுவும் சபைக்கு அதன் இடர் முகாமைத்துவ மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு துணை புரிகின்றன.

| கொள்கைக் கட்டமைப்பு | மூலோபாய சீரமைவு | இணக்கப்பாடு | இடர் முகாமைத்துவம் |
|---|---|---|---|
| தகவல் பாதுகாப்புக் கொள்கை, நியமங்கள் மற்றும் செயன்முறைகள் | குழுமத்தின் ஒட்டுமொத்த வணிக குறிக்கோளுடன் சீரமைவு | தரவுப் பாதுகாப்பு சட்டங்கள் உள்ளடங்கலான ஒழுங்குவிதிகளும் இணக்கப்பாட்டு நியமங்கள் | த.தொ. தொடர்பான இடர்களை இனங்காணுதல், கண்காணித்தல் மற்றும் முகாமைப்படுத்தல் (பக்கம் 212 ) |

ஆளுகைக் கட்டமைப்பு

முக்கிய இடர் தொடர்பான முன்னேற்றங்கள் இடர் முகாமைத்துவ அறிக்கை (பக்கங்கள் 191-216), கணக்காய்வுக் குழு அறிக்கை (பக்கங்கள் 180-181) மற்றும் IRMC அறிக்கை (பக்கங்கள் 182-183) என்பவற்றில் விபரமாக கலந்துரையாடப்பட்டுள்ளன.

## ICT ஆளுகை

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழுவின் துணையுடன் பணிப்பாளர்கள் சபையானது வங்கியில் தொழில்நுட்ப கடைப்பிடிப்பினை ஆளுகை செய்வதற்கான உயர்ந்த பொறுப்பினைக் கொண்டுள்ளது. வங்கியின் சைபர்பாதுகாப்பு இடர் முகாமைத்துவக் கொள்கையினை செயற்படுத்துவதற்கு ஒரு பிரதம தகவல் பாதுகாப்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். வங்கியின் நிறுவன த.தொ. ஆளுகைக் கட்டமைப்பானது 2019 COBIT இன் அடிப்படையிலாகும் மற்றும் இது ஏனையவற்றுக்கிடையில் கட்டுப்பாட்டு நடைமுறைகள், குறிக்கோள்கள், செயன்முறைகள் முதிர்வு மாதிரிகள் மற்றும் வணிக இலக்குகளுடன் சார்பிடல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. கவனமான தொழில்நுட்ப ஆளுகை மற்றும் மூலோபாய மேற்பார்வை ஊடாக வங்கியானது இவ்வாண்டின்போது செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் மீளெழுச்சியினை மேம்படுத்துவதற்காக அதன் டிஜிட்டல் முதலீடுகளை வெற்றிகரமாக பயன்படுத்தியுள்ளது.

### 2025 இல் முக்கிய இடர் தொடர்பான அபிவிருத்திகள்

- டிட்வா புயலின் நடைமுறை மற்றும் எதிர்கால விளைவுகளை மதிப்பிடுதல்
- SLFRS S1 மற்றும் S2 நிலைபேறுடைமை வெளிப்படுத்தல் நியமங்களின் பிரகாரம் நிலைபேறுடைமை மற்றும் காலநிலை தொடர்பான இடர்களை உள்ளடக்கும் இடர் கருத்தினை விரிவாக்குதல்
- சைபர் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் இடர் வெளிப்பாட்டிலான முன்னிறுத்தம்

# இலங்கை வங்கியின் ஆளுகை

## நோக்கம் : நோக்கத்துடனான வழிகாட்டல்

நெறிமுறை மற்றும் நேர்மையில் உயர்ந்த நியமங்களை நிலைநிறுத்துவதன் மூலம் சபையானது உயர் மட்டத்தில் மனப்போக்கினை நிறுவுவதுடன், நிறுவனம் முழுவதும் எதிர்பார்க்கும் நடத்தைகளில் தெளிவான திசையினை வழங்குகின்றது. ஆளுகைக் கட்டமைப்புகள், கொள்கைகள் மற்றும் மேற்பார்வை பொறிமுறைகளினூடாக இந்த கொள்கைகள் தீர்மானம் மேற்கொள்வதில் உட்பதிக்கப்பட்டுள்ளதுடன், நடத்தையினை வடிவமைக்கும், நம்பிக்கையினை பலப்படுத்தும் மற்றும் நிலைபேறுடைய பெறுமதி உருவாக்கத்திற்கு துணையளிக்கும் ஒரு நெறிமுறையான அடித்தளத்தினை உருவாக்குகின்றன.

### பெறுமதிகள்

- வாடிக்கையாளர் மையப்படுத்தி இருத்தல்
- அனைத்து விதமான பன்முகத் தன்மைக்கு மதிப்பளித்தல்
- உயர் மட்டத்திலான நெறிமுறைகள், ஆளுகை மற்றும் தொழில்துறைமைத் திறம் நோக்கிய கடப்பாடு
- விரைவூக்கம் மற்றும் புத்தாக்கம் நோக்கிய முன்னிறுத்தம்
- எமது அனைத்த செயற்பாடுகளுக்கும் பொறுப்பாயிருத்தல்

### ஆளுகை பொறிமுறைகள்

- நியமனம் மற்றும் ஆளுகைக் குழு
- கணக்காய்வுக் குழு
- ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு
- மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு
- தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வுக் குழு

### ஒழுங்குமுறை மற்றும் தன்னார்வ கட்டமைப்புகள்

- 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் ("கட்டளைச் சட்டம்" என குறிப்பிடப்படுகின்றது)
- 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதன்பின்னரான திருத்தங்கள்
- பெருநிறுவன ஆளுகையில் 2024 இன் 5 ஆம் இலக்க வங்கியியல் சட்ட பணிப்புரைகள்
- கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தொடர்ச்சியான பட்டியலிடல் தேவைப்பாடுகள்
- பெருநிறுவன ஆளுகையில் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சிறந்த நடைமுறைக் கோவை (2023)

### கொள்கைகள்

- நடத்தை மற்றும் நெறிமுறைக் கோவை
- லஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்புக் கொள்கை
- தகவல் தெரிவிப்பு கொள்கை

## நிறுவனக் கலாச்சாரம்

அமைப்புரீதியாக முக்கியமான ஒன்றாக அரச உடைமை நிறுவனங்கள் மற்றும் தேசத்திற்கான வங்கியாளர்களாக BOC இன் பொறுப்பாணை ஆனது வர்த்தகச் செயற்பாட்டிற்கு அப்பால் விரிவான தேசிய தாக்கத்திற்கு நீடிக்கப்படுகின்றது. அதன் பெருநிறுவன கலாச்சாரமானது பாரம்பரிய விழுமியங்களில் ஒரு சமநிலை, பொது பொறுப்புக்கூறல் மற்றும் வினைத்திறன் என்பவற்றை பிரதிபலிப்பதுடன், நெறிமுறையான தலைமைத்துவம் மற்றும் ஒழுக்கமான ஆளுகை இரண்டிற்கும் துணையளிக்கின்றது. வங்கியின் நிறுவன கலாச்சாரத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு;

- தனிப்பட்ட சேவைகளை வழங்குதல் மற்றும் நீண்டகால உறவுகளை வளர்ப்பதன் மூலமான வாடிக்கையாளர் மையத்தன்மை
- தேசிய அக்கறை மற்றும் சூழல் அபிவிருத்திக்கு முன்னுரிமை அளித்தல்
- தீர்மானம் மேற்கொள்வதில் சூழல் மற்றும் சமூக ஆராய்வினை சமநிலைப்படுத்தும் நிலைபேறுடைய வளர்ச்சியில் முன்னிறுத்தம்
- எமது வழங்கல்களில் புத்தாக்கம் மற்றும் நவீனமயப்படுத்தல், தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் உருமாற்றலை ஒருங்கிணைத்தல்

## நடத்தை மற்றும் நெறிமுறைகள் கோவை

நடத்தை மற்றும் நெறிமுறைகள் கோவையானது வங்கியின் நெறிமுறைக்கான ஒரு மூல வரைபடமாக சேவையாற்றுவதுடன், உத்தியோகபூர்வ கடமைகளில், வெளிவாரி ஈடுபாடுகளில் அல்லது பொது அமர்வுகளில் பணியாட்கள் மற்றும் அதிகாரிகள் ஈடுபடும்போது எதிர்பார்க்கப்படும் வழக்கமான நடத்தையினை தெளிவாகக் குறிப்பிடுகின்றது. பணிப்பாளர்கள் சபைக்கு ஒரு நடத்தை மற்றும் நெறிமுறைக் கோவையானது பொருந்துகின்றது. தனிப்பட்ட நடவடிக்கைகள் வங்கியின் நற்பெயரில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பதை அறிந்துகொண்டு பெருநிறுவன முகாமைத்துவ அணி மற்றும் அனைத்து பணியாட்களுக்கும் பொருத்தமான ஒரு தனியான நெறிமுறைக் கோவை காணப்படுகின்றது.

### வணிக நடத்தை மற்றும் நெறிமுறைகளில் பணிப்பாளர்களுக்கான கோவை

**கோவையுடனான ஏற்பாடுகளுடன் அவர்களது இணக்கப்பாட்டில் பணிப்பாளர்கள் ஒரு வருடாந்த உறுதிப்பாட்டினை சமர்ப்பித்தல் வேண்டும். இக்கோவையானது நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழல் எதிர்ப்பு என்பவற்றில் ஒரு வலுவான கலாச்சாரத்தினை பரப்புவதற்கு முனையும்வேளை வங்கியின் சிறந்த அக்கறைகளுடன் பணிப்பாளர்கள் செயலாற்றுவதனை ஊக்கமளிக்கின்றது.**

### பணியாட்களது நெறிமுறைக் கோவை

**இது அனைத்து பணியாட்களுக்கும் பொருந்தும் என்பதுடன், உள்ளக மற்றும் வெளிவாரி பங்காளிகளுடன் ஈடுபடுதல், நடத்தை, லஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்பு என்பவற்றில் வங்கியின் எதிர்பார்ப்பினை தெளிவாகக் குறிப்பிடுகின்றது.**

## லஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்பு

GRI 205-2

வங்கியின் லஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்புக் கொள்கையானது லஞ்சம் மற்றும் ஊழலுக்கு ஒரு பூச்சியமான சகிப்புத்தன்மை அணுகுமுறையினை வெளிப்படையாக குறிப்பிடுவதுடன், இந்த இடர்களின் முகாமைப்படுத்தலானது நிறுவனத்தின் செயன்முறைகள், கட்டமைப்புகள் மற்றும் நியமங்கள் முழுவதும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. அறிமுகத் திட்டத்தின்போது அனைத்து பணியாட்களுக்கும் இக்கொள்கையானது தெளிவாக அறிவிக்கப்படுவதுடன், வழக்கமான பயிற்சி மற்றும் உள்ளக தொடர்பாடல்கள் ஊடாக வலியுறுத்தப்படுகின்றது. 2003 இன் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் அமுலாக்கத்தினைத் தொடர்ந்து வங்கியானது அதன் நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கு முனைந்துள்ளது. இதன் பிரகாரம், ஒரு தனிப்பயனாக்கப்பட்ட "நேர்மை அதிகாரி" நியமிக்கப்பட்டார். இவ்வாண்டின்போது பலதரப்பட்ட பயிற்சித் திட்டங்களின் அறிமுகத்துடன் வங்கியின் லஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்பு கட்டமைப்பினை மேற்பார்வை செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## பங்குதாரர் ஈடுபாடு

நீண்டகால பெறுமதி உருவாக்கம் மற்றும் பொறுப்புக்கூறலுக்கு துணையளிக்கும் விதத்தில் அதன் ஆறு முக்கிய பங்காளிகள் குழுக்களின் தேவைகளை வங்கி முறையாக இனங்கண்டு, ஈடுபட்டு மற்றும் பதிலளிப்பதனை உறுதிசெய்வதற்கு சபையானது பொறுப்பாயுள்ளது. இதன் பிரகாரம், சபையானது பின்வருவனவற்றில் ஈடுபட்டது:

- பங்காளிகளுடனான ஊடாட்டத்தை வழிநடத்தும் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை அங்கீகரித்தல்
- ஈடுபாட்டு விளைவுகளில் மேற்பார்வையினை வழங்கி மூலோபாயம் மற்றும் தீர்மானம் மேற்கொள்வதில் பங்காளிகள் உள்ளுணர்வுகள் பொருத்தமானவாறு கருத்திலெடுக்கப்படுவதனை உறுதிசெய்தல்
- அடிக்கடி போட்டியிடும் பங்காளிகளது அக்கறைகளை சமநிலைப்படுத்துவதில் நியாயத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையினை பாதுகாத்தல்
- பங்காளிகள் ஈடுபாட்டுச் செயன்முறைகள் மற்றும் எழுப்பப்பட்ட முக்கிய விடயங்களில் தெளிவான, சமநிலையான அறிக்கையிடலில் பொருத்தமான வெளிப்படுத்தலை உறுதிசெய்தல்

இவ்வாண்டின்போது எழுப்பப்பட்ட முக்கிய ஈடுபாட்டு பொறிமுறைகள் மற்றும் பங்காளி அக்கறைகள் இவ்வறிக்கையின் பக்கங்கள் 57-60 வரை பட்டியலிடப்பட்டுள்ளன.

## தகவல் தெரிவிப்பு கொள்கை GRI 2-26

வங்கியின் சபை அங்கீகரிக்கப்பட்ட உட்குறை உரைத்தல் கொள்கையானது, சாத்தியமான நெறிமுறையற்ற அல்லது சட்டவிரோதமான நடத்தை தொடர்பாக எழுப்பப்பட்ட அக்கறைகளுக்கு உள்ளக மற்றும் வெளிவாரி பங்காளிகளுக்கான ஒரு வினைத்திறனான பொறிமுறையினை வழங்குகின்றது. கொள்கையானது இரகசியத்தன்மையினை உறுதிசெய்வதுடன், களவு, மோசடி, ஊழல், வங்கியின் சொத்துக்களது துஷ்பிரயோகம் மற்றும் ஏனையவர்களிடையே ஊழல் போன்ற கரிசனைகளை அறிக்கையிடுவதனை ஊக்கப்படுத்துகின்றது. கொள்கையின் முக்கிய சிறப்பம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

### வழிமுறைகள்

**பங்காளிகள் அவர்களது அக்கறைகள் / முறையீடுகளை நேரடியாக, வட்ஸ்அப், தபால், மின்னஞ்சல், தொலைபேசி, தொலைநகல், இணையம், அழைப்பு மையம் அல்லது முகப்புத்தக அரட்டை மூலம் தெரியப்படுத்தலாம்.**

### செயன்முறை

**முறையீடுகள் பிரதம உள்ளகக் கணக்காய்வாளருக்கு அனுப்பப்படுகின்றன. பி.பொ.மு. தரம் அல்லது அதற்கு மேற்பட்ட பணியாட்களுக்கு எதிரான முறையீடுகள் கணக்காய்வுக் குழுவின் தலைவருக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. ஒரு ஆரம்ப மீளாய்வு மற்றும் மதிப்பீட்டினைத் தொடர்ந்து அனைத்து முறையீடுகளையும் 21 நாட்களுக்குள் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

### பாதுகாப்பினை உறுதிசெய்தல்

**செயன்முறை பூராவும் இரகசியத்தன்மை மற்றும் அநாமதேயத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படுகின்றது.**

மீளாய்வாண்டின்போது, மோசடி, உள்ளுறைபவர் வர்த்தகம், நம்பிக்கை எதிர்ப்பு, போட்டித்தன்மைக்கு எதிரான நடத்தை, சந்தைக் கையாளுகை, முறைகேடு அல்லது ஏனைய தொடர்புடைய நிதியியல் துறை சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகளுடன் இணைந்துள்ள சட்ட நடவடிக்கைகளின் விளைவாக எவ்விதமான பணரீதியான இழப்புகளும் ஏழவில்லை.

# இலங்கை வங்கியின் ஆளுகை

## செயற்திறன்: மீளெழுச்சி மற்றும் ஒழுக்கம் GRI 2-18

வங்கியின் வலுவான பெருநிறுவன ஆளுகைக் கட்டமைப்புகள் மற்றும் அமைப்புகள் ஒழுக்கமான தீர்மானம் மேற்கொள்வதற்கு ஒரு வலுவான அடித்தளத்தை வழங்கியுள்ளதுடன், இது பரிணமிக்கின்ற செயற்பாட்டு நிலைமைகளுக்கு மத்தியில் விரைவூக்கமாகவும் மீளெழுச்சியாகவும் இருப்பதற்கு நிறுவனத்தை இயலுமையாக்கியுள்ளது.

## வணிகத்துடனான சபையின் ஈடுபாடு

BOC அதன் மூலோபாய நிகழ்ச்சி நிரலினை இயக்கும்போது விழுமியத்தினை உறுதிசெய்வதில் மற்றும் பாதுகாப்பதில் பணிப்பாளர்கள் சபையானது வணிகத்துடன் நெருக்கமாக ஈடுபடுகின்றது. தெளிவாக வரையறை செய்யப்பட்ட அறிக்கையிடல் கட்டமைப்புகள் மற்றும் சபை செயன்முறைகள் என்பன வங்கியின் மூலோபாய அமுலாக்கலின் வினைத்திறனான மேற்பார்வையினை இயலுமையாக்குகின்றது, பொறுப்புமிக்க தலைமைத்துவத்திற்கு துணையளிக்கின்றது, மற்றும் வங்கியானது அதன் வளர்ச்சி அபிலாஷைகளை தொடரும்போது பங்காளிகள் அக்கறைகளையும் பாதுகாக்கின்றது. சபையானது பின்வரும் பொறிமுறைகளூடாக வணிகத்துடன் ஈடுபடுகின்றது:

- ஆறு சபை உபகுழுக்களின் நடவடிக்கைகளினூடாக குறிப்பிட்ட விடயங்களில் பணிப்பாளர்கள் ஆழமான நுண்ணறிவினை பெறுகின்றார்கள் (2026 இல் எட்டு உபகுழுக்கள்)
- தலைமைத்துவ அணியினால் செயற்திறன் மற்றும் ஏனைய பொருத்தமான விடயங்களில் மாதாந்த இற்றைப்படுத்தல்கள்
- தேவைப்படும்போது விசேட கூட்டங்கள்

இவ்வறிக்கையின் பக்கம் 165 இல் மேலும் விளக்கப்பட்டுள்ளவாறு இவ்வாண்டின்போதான சபையின் முக்கியமான முன்னிறுத்தப் பிரிவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:




## சிரேஷ்ட முகாமைத்துவத்தில் சபையின் மேற்பார்வை

வணிக மூலோபாயங்கள், இடர் முகாமைத்துவச் செயன்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மற்றும் சபையினால் வழங்கப்பட்டுள்ள தீர்மானங்களின் அடிப்படையில் நிறுவனக் கலாச்சாரம் என்பவற்றை அமுலாக்குவதற்கு சிரேஷ்ட முகாமைத்துவம் பொறுப்பாயுள்ளது. அணியானது வங்கி பூராவும் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையினை ஊக்குவிக்கும் ஒரு பொருத்தமான நிறுவனக் கட்டமைப்பின் நிறுவுதலை உறுதிசெய்யும்வேளை, பொருண்மையான அபிவிருத்திகளில் சபை மற்றும் உபகுழுக்களை வழக்கமாக இற்றைப்படுத்துகின்றது. சபையானது பின்வரும் பொறிமுறைகளூடாக சிரேஷ்ட முகாமைத்துவ அணியிலான மேற்பார்வையினை வழங்குகின்றது.

- மூலோபாய குறிக்கோள்களுக்கு எதிராக முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதில் வழக்கமாக சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் ஈடுபடல்
- **சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் வழங்கப்படும் விளக்கங்கள் மற்றும் தகவல்களை விமர்சனரீதியாக மீளாய்வு செய்தல்**
- **சிரேஷ்ட முகாமைத்துவத்தின் கூட்டு அறிவு மற்றும் நிபுணத்துவம் என்பன வங்கியின் பருமன் மற்றும் சிக்கலுடன் சீரமைவாக உள்ளனவா என்பதனை மதிப்பீடு செய்தல்**
- **சிரேஷ்ட முகாமைத்துவத்தினை அவர்களது நடவடிக்கைகளுக்கு பொறுப்பாளியாக்குதல்**

## சூ.ச.ஆ. (ESG) தாக்கங்களில் நிலைபேறுடைமையும் முகாமைத்துவமும் GRI 2-13

சூ.ச.ஆ. தாக்கங்களின் முகாமைப்படுத்தலானது சூழல் பாரபத்தியம் மற்றும் சமூகப் பெறுமதி உருவாக்கம் என்பவற்றிலான முன்னிறுத்தம் ஊடாக வங்கியின் மையமான மூலோபாயத்துடன் ஒருங்கிணைப்படுகின்றது. பக்கங்கள் 75-84 இல் மேலும் கலந்துரையாடப்பட்டுள்ளவாறு வங்கியின் நிலைபேறுடைமை அபிலாஷைகள் பசுமை நிதியளித்தல் ஊடான நாட்டின் குறைந்த கரிம உருமாற்றலுக்கு துணையளித்தல் மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் வலுவளிப்பிற்கு துணையளிப்பதற்கு நிதியியல் உள்ளடக்கத்தினை இயக்குதல் என்பவற்றை மையப்படுத்தியுள்ளன. வங்கியின் நிலைபேறுடைமை நிகழ்ச்சிநிரலும் ஐ.நா. நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளுடன் சீரமைவாயுள்ளது. நிலைபேறுடைமை சிந்தனைகள் நிறுவனம் பூராவும் உட்பதிக்கப்படுவதனை உறுதிசெய்வதற்கான உச்சநிலை பொறுப்பினை வைத்துள்ளதுடன், சூ.ச.ஆ. அம்சங்கள் தொடர்பான வங்கியின் மூலோபாயங்கள், கொள்கைகள் மற்றும் இலக்குகளுக்கு எதிரான முன்னேற்றத்தினை அங்கீகரித்து காலாகாலம் மீளாய்வு செய்கின்றது.

வாடிக்கையாளர்கள், பணியாட்கள் மற்றும் சமூகங்களுடன் முறையான பங்காளிகள் ஈடுபாட்டு பொறிமுறைகள் காணப்படுவதுடன், இது வங்கியின் சூ.ச.ஆ. தாக்கங்களை முகாமைப்படுத்தும்போது பங்காளிகள் கருத்துக்கள் வேண்டப்படுவதனை உறுதிசெய்வதற்காகும். பணிப்பாளர்கள் சபையானது வங்கியின் குறிக்கோள்கள், கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் அதன் பணிநோக்கு, விழுமியங்கள் மற்றும் நீண்டகால நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகள் என்பன பங்காளிகள் ஈடுபாடு, மூலோபாயத் திட்டமிடல் மற்றும் நிலைபேறுடைமை முன்னெடுப்புகள் என்பவற்றின் விளைவுகளை மீளாய்வு செய்து மதிப்பிடுகின்றது. இந்த செயன்முறைகளின் நுண்ணறிவுகள் மற்றும் பின்னூட்டம் என்பன சபை கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளல், இடர் முகாமைத்துவம் மற்றும் கொள்கை இற்றைப்படுத்தல்கள் என்பவற்றுள் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

### 2025 இல் முக்கிய தலையீடுகள்

- இவ்வாண்டின்போது நிலைபேறுடைமை கொள்கை மறுசீரமைக்கப்பட்டது
- நிலைபேறுடைமை மற்றும் காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புக்களை உள்ளடக்குவதனை விரிவாக்கும் IRMC இன் பொறுப்பாணை
- SLFRS S1 மற்றும் S2 நிலைபேறுடைமை வெளிப்படுத்தல் நியமங்களில் பணிப்பாளர்களுக்கான பயிற்சி
- 01.01.2026 முதல் சபை நிலைபேறுடைமை குழுவின் நிறுவுதல்

## நிலைபேறுடைமை குழு

குழுவின் மீளாய்வு பொறிமுறைகள் கடன் முன்மொழிவுகள் வங்கியின் நிலைபேறுடைமை குறிக்கோள்களுடன் சீரமைவானதாகவும் வங்கியின் வணிக நடவடிக்கைகளுடன் இணைந்துள்ள சூழல் மற்றும் சமூக இடர்கள் நியாயமான சாத்தியமான அளவிற்கு தணிக்கப்படுவதனையும் உறுதிப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. நிலைபேறுடைமை குழுவின் பொறுப்பாணையானது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

1. முன்மொழியப்படும் வணிக நடவடிக்கைகளின் சாத்தியமான சூழல் மற்றும் சமூக தாக்கங்களை மதிப்பிடுவதற்கு ESDD அறிக்கைகளில் ஒரு விரிவான மீளாய்வினை நடாத்துதல்.
2. கடன் பிரேரணைகளில் தகவலறிந்த பின்னூட்டத்தினை வழங்குதல், அனைத்து உணரப்படும் சூழல் மற்றும் சமூக இடர்கள் உரியவாறு கருத்திலெடுக்கப்படுவதனை உறுதிசெய்தல்.
3. இந்த இடர்களை மதிப்பிடுவதற்கும் முகாமைப்படுத்துவதற்குமான கட்டமைப்பாக வங்கியின் சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ முறைமையினை (ESMS) இனை பயன்படுத்துதல்.

## ஊதிய மீளாய்வு

GRI 2-19, 20

வங்கியின் ஊதியக் கட்டமைப்பானது, வெகுமதிகளை மூலோபாய குறிக்கோள்களை அடைவதுடன் சீரமைத்தல், விவேகமான இடர் முகாமைத்துவம் மற்றும் நீண்டகால பெறுமதி உருவாக்கம் என்பவற்றின் மூலம் நிலைபேறுடைய செயற்திறனுக்கு துணையளிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. அது நிறுவனம் முழுவதும் நியாயத்தன்மை மற்றும் சமத்துவத்தினை ஊக்குவிக்கும்வேளை அளவுக்கு அதிகமான இடர் பொறுப்பேற்பினை ஊக்குவிக்காதிருப்பதற்கான பாதுகாப்பு அரண்களை ஒருங்கிணைத்துள்ளது.

## ஊதிய ஆளுகை

சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுவானது ஊதியம் தொடர்பான விடயங்களில் மேற்பார்வையினை வழங்குகின்றது. கொள்கைக் கட்டமைப்பானது பணிப்பாளர்களின் ஊதியக் கொள்கை மற்றும் மு.மு.ஆ. இற்கான ஊதியக் கொள்கை என்பவற்றை உள்ளடக்குகின்றன. முன்னையது இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்களது விபரங்கள் மற்றும் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களை பிரதிபலிக்கின்றன. எந்தவொரு பணிப்பாளரும் அவரது ஊதியத்தை தீர்மானிப்பதில் சம்பந்தப்படவில்லை என்பதுடன் தற்போது ஊதியமானது நிறுவனத்தின் பொருளாதார, சூழல் மற்றும் சமூக தாக்கங்களின் முகாமைப்படுத்தலுடன் இணைக்கப்படவில்லை.

சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுவானது பொது முகாமையாளர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் ஊதியத்தில் சபைக்கு பரிந்துரைகளை மேற்கொள்கின்றது. இந்த பரிந்துரைகளின் அடிப்படையில், சபையானது பிரேரணைகளை அங்கீகரித்து கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களது ஏற்பாடுகளின் பிரகாரம் இறுதி அங்கீகாரத்திற்காக உரிய அமைச்சருக்கு அவற்றை சமர்ப்பிக்கின்றது. பொது முகாமையாளர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் ஊதியமானது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மீளாய்வு செய்யப்படுகின்றது.

- போட்டித்தன்மை
- சமத்துவமான
- வெளிப்படையான
- உள்ளடக்கமான

வங்கியின் வெகுமதிக் கொள்கையானது பின்வரும் விளைவுகளை அடைவதை நோக்காகக் கொண்டுள்ளன:

- நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு தேவையான அனுபவம் மற்றும் விழுமியங்களுடன் திறன்படைத்த பணிச்சேனையினை கவருதல், ஊக்கமளித்தல் மற்றும் தக்கவைத்தல்
- சம்பள சமத்துவம் மற்றும் நியாயத்தன்மையினை உறுதிசெய்வதற்கு ஊதியத் திட்டங்களை உருவாக்குவதில் வெளிப்படைத்தன்மை
- சிறந்த பெருநிறுவன ஆளுகைக் கொள்கைகளுடன் சீரமைத்தல் மற்றும் எமது பன்முகமான பங்காளிகளது தேவைப்பாடுகளை வினைத்திறனாக சமநிலைப்படுத்துதல்
- நிறுவனத்தின் விழுமியங்களுடன் நிலைத்தன்மையான நிறுவனக் கலாச்சாரத்தினை புகுத்துதல்

## ஊதியக் கூறுகள்

Key elements of the Bank’s remuneration structures are set out below:

**நிலையான ஊதியம்**

- பணியாளின் பங்கு மற்றும் தரத்தில் தீர்மானிக்கப்பட்ட அடிப்படை சம்பளம் மற்றும் ஏனைய நிலையான கூறுகள்

**மாற்றமடையும் ஊதியம்**

- ஊக்குவிப்பு போனஸ்

**நலன்களும் சலுகைகளும்**

- தொழிலின் பின்னரான நலன்கள்
- விசேட திட்டங்களின் கீழ் கடன்கள்
- விடுமுறை இல்ல வசதிகளுக்கான அணுகல்

மேலதிக விபரங்களுக்கு, பணிப்பாளர்களது ஊதியத்திற்கு (பக்கம் 270) மற்றும் மு.மு.ஆ. இன் ஊதியத்திற்கு (பக்கம் 434) இனை பார்க்கவும். மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுவின் அறிக்கையானது பக்கங்கள் 184-185 இல் காணப்படுகின்றன.

# கணக்காய்வு செயற்குழு அறிக்கை

## அறிமுகம்

15 ஆகஸ்ட் 2025 முதல் கணக்காய்வு செயற்குழுவின் தலைவராக எனது நியமனத்தைத் தொடர்ந்து 31 டிசம்பர் 2025 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான இந்த கணக்காய்வு அறிக்கையினை முன்னிலைப்படுத்துவதை நான் கௌரவமாக கருதுகின்றேன்.

மீளாய்வுக் காலத்தின்போது, முன்னைய தலைவர் திரு. ஜயமின் பெல்பொலவின் ஆற்றல்மிக்க பாரபத்தியத்தின் கீழ் கணக்காய்வுக் குழுவானது அதன் ஒட்டுமொத்த பொறுப்புக்களை தொடர்ந்தும் வினைத்திறனாக நிறைவேற்றியது. குழுவானது அவரது தலைமைத்துவத்திற்கும் அவரது காலத்தின்போது அனைத்து அங்கத்தவர்களினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்புமிக்க பங்களிப்புகளுக்கு அதன் மனமார்ந்த நன்றிகளை பதிவுசெய்கின்றது. வலுவான பெருநிறுவன ஆளுகை, வெளிப்படைத்தன்மை மற்றும் வங்கி பூராவும் நிதியியல் ஒழுக்கம் என்பவற்றை ஊக்குவிக்கும் அதன் கடப்பாட்டில் குழுவானது நிலையுறுதியாயுள்ளது.

பொருத்தமான முறைமைப்படுத்தல் மற்றும் ஆளுகை கட்டமைப்பின் பிரகாரம் கணக்காய்வுக் குழுவினால் செயலாற்றப்பட்ட பிரதான பொறுப்புக்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை இந்த அறிக்கையானது உருவரை செய்கின்றது.

## குழுவின் தொகுப்பு

1. திரு. தர்ஷன குணசேகர
   தலைவர்/ சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
2. கலாநிதி. கபில சேனாநாயக்க
   அங்கத்தவர்/ சுயாதீனமற்ற நிறைவேற்றுனரல்லா பதவிவழி பணிப்பாளர்
3. திரு. துல்சி அலுவிஹார
   அங்கத்தவர்/ சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்

## 2025 இல் அங்கத்துவத்திலான மாற்றங்கள் சேர்க்கைகள்:

திரு. ஜயமின் பெல்பொல*
நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
03.02.2025 முதல் சபை கணக்காய்வுக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

கலாநிதி. கபில சேனாநாயக்க
அங்கத்தவர்/ சுயாதீனமற்ற நிறைவேற்றுனரல்லா பதவிவழி பணிப்பாளர், 03.02.2025 முதல் சபை கணக்காய்வுக் குழுவுக்கு நியமிக்கப்பட்டார்.

கலாநிதி. அமல் இலேசிங்க*
அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர், 23.06.2025 முதல் சபை கணக்காய்வுக் குழுவுக்கு நியமிக்கப்பட்டார்.

திரு. தர்ஷன குணசேகர
அங்கத்தவர்/ சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர், 15.08.2025 முதல் சபை கணக்காய்வுக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

திரு. துல்சி அலுவிஹார
அங்கத்தவர்/ சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர், 17.12.2025 இல் சபை கணக்காய்வுக் குழுவுக்கு நியமிக்கப்பட்டார்.

## பதிவி விலகல்கள்:

திரு. ஜயமின் பெல்பொல* 30.05.2025 முதல் அவரது தலைவர் பதவியினைத் துறந்தார்.

திரு. ஜெஹான் இஸ்மாயில்*
அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர், அவரது பதவியினை 17.12.2025 இல் துறந்தார்.

கலாநிதி. அமல் இலேசிங்க* ஒரு அங்கத்தவர், அவரது பதவியினை 17.12.2025 இல் துறந்தார்.

*கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் பிரகாரம் சுயாதீனமானவர்களாக கருதப்பட்டுள்ளார்கள்.

## செயற்குழுவின் செயலாளர்

கணக்காய்வுக் குழுவானது அம்மணி ஜானகி எஸ். சிறிவர்தனா, வழக்கறிஞர் மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் அவர்களினால் துணையளிக்கப்படுகின்றது. இவர் இலங்கை வங்கியின் பணிப்பாளர்கள் சபைக்கு செயலாளராகவும் கணக்காய்வு செயற்குழுவுக்கு செயலாளராகவும் சேவையாற்றுகின்றார்.

## வழமையான பங்குபற்றுனர்கள்

- பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்
- பிரதம இடர் அதிகாரி
- பிரதம இணக்கப்பாட்டு அதிகாரி
- உதவிப் பொது முகாமையாளர் (செயற்பாட்டு கணக்காய்வு)
- உதவிக் பொது முகாமையாளர் (கடன் கணக்காய்வு)
- உதவிப் பொது முகாமையாளர் (விசாரணைகள்)
- உதவிப் பொது முகாமையாளர் (தகவல் முறைமை கணக்காய்வு)
- உதவிப் பொது முகாமையாளர் (இடர் முகாமைத்துவம்)
- உள்ளகக் கணக்காய்வாளர்
- கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் பிரதிநிதி( வங்கியின் வெளிவார் கணக்காய்வாளர்).

## வரவேற்பின் பேரில் சமூகமளிப்பவர்கள்

- பொது முகாமையாளர்
- பிரதம நிதியியல் அதிகாரி
- பிரதிப் பொது முகாமையாளர் (நிதி மற்றும் திட்டமிடல்)
- பெருநிறுவன அல்லது நிறைவேற்று முகாமைத்துவத்தின் யாரேனும் ஏனைய அங்கத்தவர்
- யாரேனும் ஏனைய பணியாள் அங்கத்தவர்

2025 இல் இடம்பெற்ற கூட்டங்கள்: ஒன்பது

(வருகையானது இவ்வறிக்கையின் பக்கம் 173 இல் வழங்கப்பட்டுள்ளது)

குறைவெண்: அங்கத்தவர்கள் அல்லது அங்கத்தவர்களில் பெரும்பான்மையினர், இதில் எது உயர்ந்ததோ. இறுதியான மீளாய்வின் பிரகாரம் சமூகமளித்தோரில் பெரும்பான்மையினர் சுயாதீன பணிப்பாளர்கள்.

## செயற்குழுவின் வகிபாகம்

## கணக்காய்வு செயற்குழு சாசனம்

கணக்காய்வு செயற்குழுவின் குறிப்பு விதிமுறைகள் சபையினால் அங்கீகரித்து கடைப்பிடிக்கப்படும் கணக்காய்வுக் குழு சாசனத்தினால் ஆளுகை செய்யப்படுகின்றது.

## பிரதான முன்னிறுத்தம்

வங்கியின் நிதியியில் அறிக்கையிடல் செயன்முறையில் ஒரு சுயாதீன மற்றும் புறநிலையான மீளாய்வினை வழங்குவதன் மூலம் சபைக்கு அதன் கடமைகளை நிறைவேற்றுவதற்கு துணைபுரிவதில் கணக்காய்வுக் குழுவானது பிரதான முன்னிறுத்தத்தினை மேற்கொள்கின்றது.

## அறிக்கையிடல் ஊடகம்

கணக்காய்வுக் குழு கூட்டங்களின் நடவடிக்கைகள் சபை கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்டு உறுதிசெய்யப்படுகின்றது. இங்கு அனைத்து முக்கிய சிக்கல்கள், அக்கறைகள், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், அடைந்த விளைவுகள் அல்லது நிலுவையிலுள்ளவை, என்பவற்றில் பின்தொடர் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு, தெளிவுபடுத்தப்பட்டு, கலந்துரையாடப்பட்டு அவற்றில் சபையின் அங்கீகாரம் பெறப்படுகின்றது.

## 2025 இல் முன்னிறுத்தப் பிரிவுகளும் நடவடிக்கைகளும்

## நிதியியல் அறிக்கையிடல்

அ) பிரதம நிதியியல் அதிகாரி மற்றும் பொது முகாமையளரிடமிருந்து பெறப்பட்ட மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த கணக்காய்வு செய்யப்படாத/ கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீளாய்வு செய்யப்பட்டு, மேற்பார்வை மற்றும் முறைமைப்படுத்தல் அதிகாரிகளினால் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் மற்றும் பொருத்தமான கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்படுவதனை உறுதிசெய்தல் மற்றும் வங்கியின் செயற்பாடுகள் மற்றும் நிதியியல் கட்டுப்பாடுகளின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மையினை உறுதிசெய்தல் என்பனவாகும்.

ஆ) திரவத்தன்மை முகாமைத்துவம், மூலதனப் போதுமை மற்றும் வெளிநாட்டு நாணய முகாமைத்துவத்தினை மீளாய்வு செய்தல்.

இ) முக்கிய நிதி அறிக்கையிடல் சிக்கல்கள் மற்றும் நியாயப்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

## முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு

அ) கட்டாய வங்கியியல் மற்றும் ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாட்டினை மீளாய்வு செய்தல்.

ஆ) முறைமைப்படுத்துபவர்களினால் மேற்கொள்ளப்பட்ட சட்டரீதியான பரிசீலனைகளின் கண்டுபிடிப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் மீளாய்செய்யப்பட்டது.

இ) பணம் சலவை செய்தலுக்கு எதிர்ப்பு (AML) மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை தடுத்தல் (CFT) நடவடிக்கைகளின் அறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டன.

## உள்ளகக் கட்டுப்பாடுகள்

அ) வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் செயன்முறை மற்றும் கணக்கீட்டு மற்றும் ஏனைய உள்ளக கட்டுப்பாடுகளின் போதுமை என்பவற்றின் சிறந்த வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையினை உறுதிசெய்யும் நோக்கில் கணக்கீட்டு கொள்கைகள் / முறைமைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் கட்டமைப்பானது மீளாய்வு செய்யப்பட்டது.

ஆ) முறைமைகள், செயன்முறைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கு ஒரு வழமையான அடிப்படையில் மற்றும் விசேட நிகழ்வுகள் அல்லது விடயங்கள் தேவைப்படும்போது மூல காரணப் பகுப்பாய்வு நடாத்தப்பட்டு மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இ) முறைமைப்படுத்தல் எதிர்பார்ப்புகளுக்கு சீரமைவாக இடர் முகாமைத்துவ கட்டமைப்பானது கண்காணிக்கப்பட்டது.

ஈ) உள்ளக கணக்காய்வு கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் உள்ளகக் கட்டுப்பாடுகளில் மேம்படுத்தல்கள் பரிந்துரைக்கப்பட்டன.

## குழுவானது பின்வருவனவற்றினூடாக உள்ளக கணக்காய்வுச் செயற்பாட்டின் உறுதிமொழியினை பெற்றுக்கொண்டது -

## உள்ளகக் கணக்காய்வு

அ) உள்ளகக் கணக்காய்வு செயற்பாட்டின் சுயாதீனத்தன்மை, புறநிலைத்தன்மை மற்றும் செயற்திறன் என்பன மீளாய்வு செய்யப்பட்டன.

ஆ) உள்ளகக் கட்டுப்பாடுகள், இணக்கப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவத்தினைப் பலப்படுத்துவதற்கான ஒரு முன்முயற்சியான அணுகுமுறையாக கணக்காய்வு தரப்படுத்தல்களை மேம்படுத்துவதற்கான மூலோபாயங்கள் பெறப்பட்டன.

இ) சரியான நேரத்தில் மற்றும் பக்கச்சார்பற்ற புலனாய்வுகளை உறுதிசெய்யும்வேளை வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நெறிமுறையான வணிக நடைமுறைகளை பராமரிப்பதன் மூலம் தகவல் தெரிவிப்பு முறையீடுகள் பயனுறுதியாக முகாமைப்படுத்தப்பட்டன.

ஈ) வங்கியின் கடன் பட்டியல் தரமானது மதிப்பிடப்பட்டு கடன் தரத்தை மேம்படுத்துவதற்கு அவசியமான முன்னெடுப்புகள் பரிந்துரைக்கப்பட்டன.

உ) உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினை அங்கீகரித்து வருடம் பூராவும் திட்டத்தினது அமுலாக்கத்தின் வினைத்திறனானது மீளாய்வு செய்யப்பட்டது.

ஊ) 2025 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு கொள்கைகள் அங்கீகரிக்கப்பட்டன.

எ) தேவையான மாற்றங்களுடன் உள்ளகக் கணக்காய்வு கையேடானது அங்கீகரிக்கப்பட்டது.

ஏ) உள்ளகக் கட்டுப்பாட்டு கண்காணித்தல் செயன்முறையினை மேம்படுத்துவதற்கு உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட முன்னெடுப்புகளின் முன்னேற்றமானது கண்காணிக்கப்பட்டன.

ஐ) பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் சிரேஷ்ட பணியாட்களின் செயற்திறனானது மதிப்பிடப்பட்டது.

ஒ) துணை நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டின் செயன்முறைகள் கண்காணிக்கப்பட்டன.

ஓ) வெளிநாட்டு கிளைகளின் முறைமைப்படுத்துபவர்களுடனான கலந்துரையாடல்கள்.

ஔ) திறைசேரி செயற்பாடு, மூலதனப் போதுமை மதிப்பீடு, எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு மாதிரிகள், சைபர் பாதுகாப்பு, கொடை முகவர் நிதியளிப்பில் வழங்கப்பட்ட கடன்கள், த.தொ. ஆளுகை, சேவை மட்ட உடன்படிக்கைகள் மற்றும் வணிகத் தொடர்வுப் பரிசீலனை என்பவற்றில் விசேட மீளாய்வுகள்.

க) கிளை வலையமைப்பில் மேற்கொள்ளப்பட்ட கடன் கணக்காய்வுகளின்போதான முக்கிய அவதானிப்புகளின் பிரகாரம் இனங்காணப்பட்ட போக்குகளில் விசேட மீளாய்வு.

## வெளிவாரி கணக்காய்வு

அ) நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் வங்கியின் வெளிவாரி கணக்காய்வானது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. குழுவானது, வெளிவாரி கணக்காய்வானது வினைத்திறனாகவும் சுயாதீனமானவும் மேற்கொள்ளப்படுவதனை உறுதிசெய்ததுடன், கணக்காய்வு அணுகுமுறை மற்றும் செயன்முறை தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் பிரதிநிதிகளுடன் ஒரு நல்லுறவினை தொடர்ச்சியாகப் பராமரித்தது.

ஆ) வெளிவாரி கணக்காய்வளர்களுடனான மூடிய கதவு கூட்டங்களுக்கு வசதியளிக்கப்பட்டது.

## கருத்திலெடுக்கப்பட்ட முக்கியமான விடயங்கள்

இவ்வாண்டின்போது கணக்காய்வுக் குழுவானது பின்வருவனவற்றில் விசேட கவனம் செலுத்தியது:

- சைபர் பாதுகாப்பு மற்றும் த.தொ. இடர் முகாமைத்துவத்தினை பலப்படுத்துதல்.
- மோசடி கண்டுபிடிப்பு பொறிமுறைகளை மேம்படுத்துதல்.
- உலகளாவிய பொருளாதார உறுதியின்மைகளிலிருந்து தோன்றுகின்ற செயற்பாட்டு இடர்களை விளித்துரைத்தல்.

### முன்னோக்கிய பாதை

கணக்காய்வுக் குழுவின் செயற்திறன் மற்றும் பயனுறுதித்தன்மையில் ஒரு வருடாந்த மதிப்பீடானது இவ்வாண்டின்போது பொறுப்பேற்கப்பட்டது.

முன்னோக்கிப் பார்க்கும்போது, கணக்காய்வுக் குழுவானது ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு செயன்முறைகளை தொடர்ந்தும் பலப்படுத்தும், கணக்காய்வுக் குழு சாசனத்தில் 2026 மற்றும் அதற்கு அப்பால் உருவரை செய்யப்பட்டுள்ள குறிக்கோள்களுக்கு துணையளித்தல் மற்றும் நிதியியல் நேர்மை, இடர் முகாமைத்துவம் மற்றும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு என்பவற்றில் உயர் நியமங்களை நிலைநிறுத்துதல்.

கணக்காய்வுக் குழுவின் சார்பில்.



திரு. தர்ஷன குணசேகர
தலைவர்,

கணக்காய்வுக் குழு
24 பெப்ரவரி 2026

# ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ செயற்குழு அறிக்கை

## 2025 இன் போதான குழுவின் தொகுப்பு

2025 ஆம் ஆண்டிற்கான குழுவின் தொகுப்பு பின்வருமாறு:

01.01.2025 இலிருந்து

1. திரு. ஜயமின் பெல்பொல*
   தலைவர்/நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
2. திரு. ஜெஹான் இஸ்மாயில்*
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
3. கலாநிதி. கபில சேனாநாயக்க
   அங்கத்தவர்/ சுயாதீனமற்ற நிறைவேற்றுனரல்லா பதவிவழி பணிப்பாளர்

03.02.2025 இலிருந்து

1. திரு. ஆர். எம். பி. ரத்நாயக்க*
   தலைவர்/நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
2. திரு. ஜயமின் பெல்பொல*
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
3. திரு. காவிந்த டி சொய்சா*
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா தலைவர்

23.06.2025 இலிருந்து

1. திரு. ஆர். எம். பி. ரத்நாயக்க*
   தலைவர்/நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
2. திரு. காவிந்த டி சொய்சா*
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா தலைவர்
3. கலாநிதி, கபில சேனாநாயக்க
   அங்கத்தவர்/ சுயாதீனமற்ற நிறைவேற்றுனரல்லா பதவிவழி பணிப்பாளர்

## தற்போதைய குழு

01.01.2026 இலிருந்து

1. திரு. ஆர். எம். பி. ரத்நாயக்க*
   தலைவர்/நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
2. அம்மணி. ஷர்மினி ரத்வத்தே
   அங்கத்தவர்/ சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
3. திரு. தர்ஷன் ஜயரத்ன
   அங்கத்தவர்/ சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
4. திரு. சுனிமல் வீரசூரிய
   அங்கத்தவர்/ சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்

* கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின பிரகாரம் சுயாதீனமானவர்களாக கருதப்பட்டுள்ளார்கள்.

2025 இல் இடம்பெற்ற கூட்டங்கள்: 08

(வருகையானது இவ்வறிக்கையின் பக்கம் 173 இல் வழங்கப்பட்டுள்ளது)

பங்கேற்பு: பங்கேற்வு ஆனது குழு அங்கத்தவர்களில் ஆகக்குறைந்தது அரைவாசியை கொண்டிருக்கும்.

## குழுவின் செயலாளர்

செயலாளர், இலங்கை வங்கி / சபைக்கான செயலாளர், செல்வி. ஜானகி எஸ். சிறிவர்தன ஒரு வழக்கறிஞர், பிரதி பொது முகாமையாளர், குழுவின் செயலாளராக செயற்படுகின்றார்.

இற்றைப்படுத்தப்பட்ட வணிகத் தொடர்வு திட்டங்கள் உள்ளடங்கலான இடர் முகாமைத்துவத்தின் அனைத்து அம்சங்களை மதிப்பிடுவதற்கு குழுவானது ஆகக் குறைந்தது காலாண்டு தோறும் கூடுதல் வேண்டும்.

## வழக்கமான அழைப்பாளர்கள்

- பொது முகாமையாளர்
- பிரதான இடர் அதிகாரி
- பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்
- பிரதான இணக்கப்பாட்டு அதிகாரி
- பிரதான தகவல் பாதுகாப்பு அதிகாரி
- சபையின் / பெருநிறுவன முகாமைத்துவத்தின் / நிறைவேற்று முகாமைத்துவத்தின் யாரேனும் ஏனைய அங்கத்தவர்கள் / யாரேனும் ஏனைய பணியாள் அங்கத்தவர்கள் குழுவினால் அழைக்கப்படுகின்றார்கள்.

## குழுவின் வகிபாகம்

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் குறிப்பு விதிமுறையானது சபையினால் அங்கீகரிக்கப்பட்டு கடைப்பிடிக்கப்படும் குழுவின் சாசனத்தினால் ஆளுகை செய்யப்படுகின்றது.

இலங்கையில் உரிமமளிக்கப்பட்ட வங்கிகளுக்கான பெருநிறுவன ஆளுகையில் 2024 இன் 05 ஆம் இலக்க வங்கியியல் சட்ட பணிப்புரையின் தேவைப்பாடுகளை விளித்துரைக்கும் அதன் செயற்பாடுகளின் நோக்கெல்லை மற்றும் செயலெல்லையினையும் குழு உறுதிசெய்கின்றது.

இது ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் சாசனத்தில் இனங்காணப்பட்ட பின்வருவனவற்றை மீளாய்வுசெய்தல் மற்றும் / அல்லது பரிந்துரைத்தல்களை உள்ளடக்குகின்றன:

- இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கப்பாடு தொடர்பான கொள்கைகள், செயன்முறைகள் மற்றும் முகாமைத்துவக் குழு சாசனங்கள்.
- பிரதம இடர் அதிகாரியினால் பரிந்துரைக்கப்பட்டவாறான கடனுக்கான ஆர்வம், சந்தை, திரவத்தன்மை, செயற்பாடு, தகவல் பாதுகாப்பு மற்றும் ஏனைய இடர்களுக்காக நிறுவப்பட்ட இடர் வரையறைகள் மற்றும் கொள்கைகள
- குழுவினால் குறிப்பிடப்பட்ட அளவுசார்ந்த மற்றும் பண்புசார்ந்த இடர்களினுள் விசேட இடர்கள் மற்றும் அந்த இடர்களை முகாமைப்படுத்துவதனை விளித்துரைப்பதற்கு அனைத்து முகாமைத்துவ மட்ட குழுக்களின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மை.
- வெளிநாட்டு கிளைகள் மற்றும் துணை நிறுவனங்கள் உள்ளடங்கலான வங்கியின் இடர் தோற்றுருவத்திலான இடர் முகாமைத்துவ அறிக்கைகள் மற்றும் நடைமுறை சந்தை மற்றும் முறைமைப்படுத்தல் இடர்கள் மற்றும் அத்தகைய இடர்களை இனங்காண்பதற்கு, அளவிடுவதற்கு, கண்காணிப்பதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்காக பொறுப்பேற்கப்பட்ட நடவடிக்கைகள்.
- வங்கியின் கொள்கை மற்றும் முறைமைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை தேவைப்பாடுகளின் அடிப்படையில் குழுவினால் தீர்மானிக்கப்பட விவேகமான மட்டங்களுக்கு அப்பால் குறிப்பிட்ட இடர்கள் காணப்படுமாயின் அத்தகைய இடர்களின் விளைவுகளை தணிப்பதற்கான திருத்தச் செயற்பாடுகள்.
- கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாடு, தகவல் பாதுகாப்பு மற்றும் இணக்கப்பாட்டு இடர்கள் தொடர்பாக இடர் இனங்காணுதல், அளவிடுதல், கண்காணித்தல் மற்றும் தணித்தல் என்பவற்றின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மை.

## பிரதான முன்னிறுத்தம்

இடர் முகாமைத்துவத்தின் அனைத்து அம்சங்களுக்கான மேற்பார் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் சபைக்கு துணையளிப்பதற்கு. இது தொடர்பில் குழுவானது இடர் முகாமைத்துவக் கட்டமைப்பின் இருப்பு, செயற்பாடு மற்றும் பயனுறுதித்தன்மையினை குழு உறுதிப்படுத்துவதுடன், பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல்கள் ஊடாக கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாடு, தகவல் பாதுகாப்பு மற்றும் மூலோபாய இடர்களை மதிப்பிட்டு மீளாய்வு செய்கின்றது. குழுவானது வணிகச் செயற்பாடுகளின் அனைத்து பிரிவுகளிலுமான சட்டங்கள், ஒழுங்குவிதிகள், முறைமைப்படுத்தல் வழிகாட்டிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் என்பவற்றுடன் வங்கியின் இணக்கப்பாட்டினை மதிப்பிடுவதற்காக ஒரு இணக்கப்பாட்டு செயற்பாட்டினை நிறுவுவதில் குழுவானது மேலும் முன்னிறுத்தம் செய்கின்றது. .

வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கட்டமைப்பினை மேற்பார்வை செய்வதிலான அதன் பொறுப்புக்களுக்கு மேலாக, குழுவானது சபை நிலைபேறுடைமை குழுவாகவும் செயலாற்றியது. குழுவானது சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) இடர்களை முகாமைப்படுத்துவதில் வங்கியின் அணுகுமுறையில் மேற்பார்வையினை வழங்குவதுடன், நிலைபேறுடைமை மூலோபாயத்தினை வழிநடத்தி தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் நேர்மையினை உறுதிசெய்கின்றது. இந்த இரட்டை பங்கானது நிலைபேறான நிதியளித்தல், பொறுப்பான வங்கியியல் மற்றும் பரிணமிக்கின்ற முறைமைப்படுத்தல் மற்றும் பங்காளி எதிர்பார்ப்புகளுக்கான வங்கியின் கடப்பாட்டிற்கு துணையளிக்கின்றது.

## அறிக்கையிடல் ஊடகம்

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு கூட்டங்களின் நடவடிக்கைகள் சபைக் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்டு மற்றும் உறுதிப்படுத்தப்பட்டு அதனிலான சபை அங்கீகாரமும் பெறப்படுகின்றது.

## பின்வருவனவற்றில் முன்னிறுத்தப் பிரிவுகள் மற்றும் நடவடிக்கைகள்

### இடர் வரையறைகள்

- வங்கியின் இடர் ஆர்வ வரையறைகள் மீளாய்வு செய்யப்பட்டு இடர் முகாமைத்துவப் பிரிவினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளினூடாக விதிவிலக்குகள் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகின்றன.
- வரையறை முகாமைத்துவ கட்டமைப்பிற்கான விதிவிலக்குகள் கடுமையாக கண்காணிக்கப்பட்டு அவற்றின் பொருந்துமையினை ஏற்புடையதாக்குவதற்கு முகாமைத்துவம் முன்மொழியும் திருத்தச் செயற்பாடுகள்.
- கொள்கைகளும் செயன்முறைகளும்.
- வெளிநாட்டு கிளை கொள்கைகள் உள்ளடங்கலான அனைத்து இடர் தொடர்பான கொள்கைகளை, வணிக அல்லது முறைமைப்படுத்தல் தேவைகளினால் இயக்கப்படும் அவசியமான திருத்தங்களுடன் சபைக்கு பரிந்துரைத்தல்.
- குறிப்பிட்ட இடர்களை கையாளும் அனைத்து முகாமைத்துவ மட்ட குழுக்களின் குறிப்பு விதிமுறைகள் மீளாய்வு செய்யப்பட்டு திருத்தியமைக்கப்பட்டன.
- குறிக்கோள்களுடனான சீரமைவினை உறுதிசெய்வதற்காக இந்த குழுக்களின் பயனுறுதித்தன்மை அவற்றின் பொறுப்பாணைக்கு எதிராக மதிப்பிடப்பட்டன.

### திரவத்தன்மை

பொருளாதாரத்தின் படிப்படியான மீட்டலுக்கு அமைவாக வங்கியானது சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட மூலோபாய தீர்மானங்களின் காரணமாக ரூபாய் மற்றும் வெளிநாட்டு நாணயத்தைப் பொறுத்தளவில் வலுவான திரவத்தன்மை மட்டங்களை கட்டியெழுப்பக் கூடியதாயிருந்தது.

### சொத்தின் தரம்

மேம்பட்ட பொருளாதார நிலைமைகளுடன் இவ்வாண்டின்போது கடன் தரத்தை மேம்படுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. சொத்து தரத்திலான கலந்தாராய்வுகள் பலதரப்பட்டவையாகும். செயற்திறனற்ற கடன்களை கட்டுப்படுத்துவதற்கான விரிவான திட்டத்தின் கடைப்பிடிப்பானது கடுமையாக உறுதிசெய்யப்பட்டவேளை கடுமையான கண்காணித்தல் மற்றும் வழமையான அறிக்கையிடலுடன் கடன் தர அலகுகள் ஊடாக கடன் தரமானது கண்காணிக்கப்பட்டது. கடன் தரத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடன் செயற்திறனற்ற பிரிவுகள் மற்றும் வாடிக்கையாளர்களின் புத்துயிரளிப்பில் விசேட அழுத்தத்துடன் முன்னிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

### இணக்கப்பாடு

மீளாய்வாண்டின்போது, வங்கியானது ஒரு புதிய பணத் தூய்மையாக்கல் செய்வதற்கு எதிரான (AML)முறைமையினை கொள்வனவு செய்ததுடன், அதன் அமுலாக்கமானது IRMC இனால் நெருக்கமாக கண்காணிக்கப்பட்டு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. குழுவானது இணக்கப்பாட்டுப் பிரிவினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளின் ஊடாக வணிக அலகுகளினால் பொறுப்பேற்கப்பட்ட இணக்கப்பாட்டு இடர்களை தொடர்ச்சியாக மதிப்பிட்டு கண்காணித்தது. நாட்டின் எதிர்வரும் பரஸ்பர மதிப்பீட்டில் இலங்கை வங்கியிடமிருந்து எதிர்பார்க்கப்படும் கணிசமான பங்கினை கருத்திற்கொண்டு ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது (IRMC) வங்கியின் தயார்நிலையினை நெருக்கமாக மேற்பார்வை செய்தது.

### துணைநிறுவன இடர் மீளாய்வுகள்

- துணைநிறுவனங்களின் இடர் தோற்றுருவங்களை உறுதிப்படுத்துவதற்காக அவற்றில் விரிவான இடர் மீளாய்வுகள் நடாத்தப்பட்டு வங்கியின் இடர் பொறுப்பாணையுடனான சீரமைவினை உறுதிசெய்வதற்கு பரிந்தரைகளை மேற்கொள்ளப்பட்டன.

### உள்ளக மூலதனப் போதுமானதன்மை மதிப்பீட்டு செயன்முறை (ICAAP) மற்றும் மீட்டல் திட்டம்

- தூண் II இடர்களுக்கு போதுமையான மூலதன மட்டங்களைப் பராமரிக்கவும் அழுத்தமான சூழ்நிலைகளை தாங்கிக்கொள்வதற்கும் இலங்கை வங்கியின் ICAAP மீளாய்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டது.
- எச்சரிக்கை மற்றும் தூண்டுதல் நிகழ்வுகள் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட பரிகாரச் செயற்பாடுகளுடன் விபரமாக கலந்துரையாடப்பட்டன.
- இடைவெளிகளை நிரப்புவதற்கு மாற்றீட்டு மூலதன மூலங்கள் இனங்காணப்பட்டு மூலதன அதிகரித்துல் திட்டமானது திருத்தியமைக்கப்பட்டது.

### நிலைபேறுடைமை முன்னெடுப்புகள்

- கடன் மதிப்பீடு மற்றும் தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறையினுள் சூழல், சமூக மற்றும் ஆளுகை கருத்துக்களை ஒருங்கிணைப்பதன் மூலம் நிலைபேறுடைய நிதியளிப்பிற்கான வங்கியின் கடப்பாடானது மேம்படுத்தப்பட்டது.
- நீண்டகால பொருளாதார மீளெழுச்சி, சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக நல்வாழ்விற்கு பங்களிக்கும் திட்டங்களுக்கு துணையளிக்கும் பொறுப்புமிக்க கடன் வழங்கல் நடைமுறைகளை உறுதிசெய்வதற்கு கொள்கைகள் பலப்படுத்தப்பட்டன.
- தேசிய நிலைபேறுடைமை இலக்குகளுக்கு சீரமைவாக புதுப்பிக்கத்தக்க வலுத் திட்டங்கள் மற்றும் சூழல் தோழமையான வணிக முயற்சிகள் உள்ளடங்கலான பசுமை நிதியளித்தல் வாய்ப்புக்கள் ஊக்குவிக்கப்பட்டன.
- வாடிக்கையாளர்கள், பணியாட்கள் மற்றும் சமூகங்கள் பூராவும் நிலைபேறுடைமை கொள்கைகளின் விழிப்புணர்வினை வளர்ப்பதற்கு பங்காளிகளுடனான மேம்பட்ட ஈடுபாடு.
- சூழல் மற்றும் சமூக அக்கறைகளை பாதுகாக்கும் வங்கியின் பங்கினை வலியுறுத்திய வேளை உள்ளடக்கமான மற்றும் நிலைபேறுடைய வளர்ச்சிக்கு பங்களித்தல்.

### தகவல் பாதுகாப்பு / த.தொ. இடர்

- இரகசியத்தன்மை, நேர்மை மற்றும் உணர்திறனான தரவுகளின் கிடைப்பத்தன்மையினை பாதுகாக்கும் வேளை தடையற்ற வாடிக்கையாளர் அனுபவத்தை உறுதிசெய்வதற்கு வலுவான தகவல் பாதுகாப்பு மற்றும் த.தொ. இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்டன.
- 2025 இல் பிரதம இடர் அதிகாரி வங்கியின் சேவையிலிருந்து ஓய்வுபெற்றதுடன், இந்த குழுவின் பரிந்துரையுடன் ஒரு மாற்றாள் பிரதம இடர் அதிகாரி பின்னர் நியமிக்கப்பட்டார். குழுவிற்கு முன்னைய பி.இ.அ. இனால் மேற்கொள்ளப்பட்ட மதிப்புமிக்க பங்களிப்பிற்கு குழுவானது அதன் நன்றிகளைத் தெரிவித்தது.
- முன்னால் தலைவர் மற்றும் இக்குழுவின் அங்கத்தவரான திரு. ஜயமின் பெல்பொல அவர்கள் இலங்கை வங்கியின் பணிப்பாளர்கள் சபையிலிருந்து விலகியுள்ளதுடன், இக்குழுவுக்கு அவரால் மேற்கொள்ளப்பட்ட மதிப்புமிக்க பங்களிப்பிற்கு குழு அதன் நன்றிகளைத் தெரிவிக்கின்றது.

### முடிவுரை

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது 2025 இற்கான அதன் கடமைகளை வெற்றிகரமாக நிறைவுசெய்தது. பன்முகமான துறைகள் பூராவும் இடர்களை முழுமையாக மதிப்பிட்டு தணித்தல், முறைமைப்படுத்தல் நியமங்களுடனான இணக்கப்பாட்டினை உறுதிசெய்தல் மற்றும் நிறுவனம் முழுவதும் ஒரு வலுவான இடர் விழிப்புணர்வு கலாச்சாரத்தினை வளர்த்தல் என்பனவாகும்.

இலங்கை வங்கியின் நிதியியல் நேர்மையினை பாதுகாப்பதில் குழுவானது கடப்பாட்டுடன் உள்ளது. அதன் விரிவான இடர் தணித்தல் மூலோபாயங்கள், முன்முயற்சியான வழிமுறைகள் மற்றும் எதிர்கால சவால்களை சமாளிப்பதற்கு வங்கியின் மீளெழுச்சி நிலையிலான அழுத்தம். பரிணமிக்கின்ற வங்கியியல் நிலத்தோற்றத்தில் நிலைபேறுடைய முன்னேற்றத்தை பின்தொடர்வில் குழுவானது ஒத்துழைத்தல், கடைப்பிடித்தல் மற்றும் வளர்வதனை தொடர்கின்றது.

திரு. ஆர். எம். பி. ரத்நாயக்க
தலைவர்,

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு
24 பெப்வரவரி 2026

# மனித வளங்கள் மற்றும் ஊதிய செயற்குழு அறிக்கை

GRI 2-19, 20

## 2025 இன் போதான குழுவின் தொகுப்பு

2025 இன் ஆரம்பத்தில் உள்ள குழுவின் தொகுப்பு:

1. திரு. ஜெஹான் இஸ்மாயில்*
   தலைவர்/ நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
2. திரு. காவிந்த டி சொய்சா*
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா தலைவர்
3. கலாநிதி, கபில சேனாநாயக்க
   அங்கத்தவர்/ சுயாதீனமற்ற நிறைவேற்றுனரல்லா பதவிவழி பணிப்பாளர்

## தற்போதைய குழு

01.01.2026 இலிருந்த

1. திரு. ஜெஹான் இஸ்மாயில்*
   தலைவர்/ நிறைவேற்றுனரல்லா பணிப்பாளார்
2. திரு. காவிந்த டி சொய்சா*
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா தலைவர்
3. திரு. தர்ஷன் ஜயரத்ன
   அங்கத்தவர்/ சுயாதீன நிறைவேற்றனரல்லா பணிப்பாளர்

* கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின பிரகாரம் சுயாதீனமானவர்களாக கருதப்பட்டுள்ளார்கள்.

## குழுவின் செயலாளர்

செயலாளர், இலங்கை வங்கி / சபைக்கான செயலாளர், அம்மணி. ஜானகி எஸ். சிறிவர்தன ஒரு வழக்கறிஞர், பிரதி பொது முகாமையாளர், குழுவின் செயலாளராக செயற்படுகின்றார்.

## வழக்கமான அழைப்பாளர்கள்

- பொது முகாமையாளர்
- பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள்)
- கூட்டாண்மை அல்லது நிறைவேற்று முகாமைத்துவத்தின் யாரேனும் ஏனைய அங்கத்தவர்

2025 இல் இடம்பெற்ற கூட்டங்கள்: 08

(இவ்வறிக்கையின் பக்கம் 173 இல் வருகையானது வழங்கப்பட்டுள்ளது)

பங்கேற்பு: பங்கேற்பு ஆனது குழு அங்கத்தவர்களில் ஆகக்குறைந்தது அரைவாசியை கொண்டிருக்கும்.

## குழுவின் பங்கு

### குழுவின் குறிப்பு விதிமுறை

இலங்கை மத்திய வங்கியினால் இலங்கையிலுள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான பெருநிறுவன ஆளுகையில் 2024 இன் 05 ஆம் இலக்க வங்கியியல் சட்ட பணிப்புரையின் அடிப்படையில் குழுவின் பிரதான பொறுப்புக்கள் குழுவின் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அவையான பின்வருமாறு:

- வங்கியின் பணிப்பாளர்கள், பி.நி.அ. மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் தொடர்பான ஊதியக் கொள்கையினை (சம்பளங்கள், படிகள் மற்றும் பணிநீக்கம் அல்லது இளைப்பாறுதலின்போது வழங்கப்படும் விசேட கொடுப்பனவுகள் / நலன்கள் மற்றும் ஏனைய நிதிசார் மற்றும் நிதிசாரா நலன்கள்) தீர்மானித்தல்.
- பணிப்பாளர்கள், பொது முகாமையாளர் மற்றும் மு.மு.ஆ. இற்கான குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நிறுவுதல்.
- நிறுவப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கு எதிராக பொ.மு. மற்றும் மு.மு.ஆ. இன் செயற்பாடுகளை மதிப்பிடுதல் மற்றும் ஊதியம், நலன்கள் மற்றும் செயற்திறன் அடிப்படையான ஊக்கத்தொகைக் கொடுப்பனவுகளை திருத்தியமைப்பதற்கான அடிப்படையினை தீர்மானித்தல்.
- சபையினால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக பணியாட்களை மீளாய்வு செய்தல்.
- வங்கியின் மனிதவளக் கொள்கை மற்றும் நிறுவனக் கட்டமைப்பினை தீர்மானித்தல்.

### பிரதான முன்னிறுத்தம்

குழுவானது மனித வளங்கள் விடயங்களில், பிரதானமாக மு.மு.ஆ. தொடர்பானவற்றில், சபைக்கு துணையளிப்பதில் முன்னிறுத்தம் செய்கின்றது.

### அறிக்கையிடும் ஊடகம்

குழு கூட்டங்களின் நடவடிக்கைகள் சபைக் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்டு மற்றும் உறுதிப்படுத்தப்பட்டு குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை அமுலாக்குவதற்கான சபை அங்கீகாரம் பெறப்படுகின்றது.

## 2025 இல் முன்னிறுத்தப் பிரிவுகளும் நடவடிக்கைகளும்

### பணிப்பாளர்களின் ஊதியம்

வங்கியியல் சட்ட பணிப்புரைகளின் பிரகாரம் குழுவானது தலைவர் மற்றும் பணிப்பாளர்கள் தொடர்பான ஊதியக் கொள்கையினை திர்மானித்தல் வேண்டும். எவ்வாறாயினும், இலங்கை வங்கியினைப் பொறுத்தளவில், பணிப்பாளர்களின் ஊதியமானது இலங்கை அரசாங்கத்தினால் (வங்கியின் ஒரே பங்குதாரர்) வழங்கப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் தீர்மானிக்கப்படுகின்றன. 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதனிலான திருத்தங்களும் இது தொடர்பில் கருத்திலெடுக்கப்படுகின்றன. பணிப்பாளர்களின் ஊதியமானது இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 270 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஒரு ஊதியக் கொள்கையினை வங்கி கொண்டுள்ளதுடன், இது காலாகாலம் மற்றும் அரசாங்கத்தினால் புதிய ஒழுங்குவிதிகள் வழங்கப்படும்போது திருத்தியமைக்கப்படுகின்றன. பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியத்தின் விபரங்கள் வருடாந்த அடிப்படையில் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்படுகின்றன.

### மு.மு.ஆ. இன் ஊதியம்

பணியாட்களின் ஊதியமானது மூன்று வருடங்களுக்கொருமுறை திருத்தியமைக்கப்படுகின்றது. இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரின் கருத்தெல்லையினுள் வருவதனால் அவரது அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.

### செயற்திறன் மதிப்பீடு

குழுவானது பொது முகாமையாளர் உள்ளடங்கலான மு.மு.ஆ. தொடர்பான செயற்திறன் மதிப்பீடுகளை மதிப்பீடு செய்தது. பிரதம இணக்கப்பாட்டு அதிகாரி, பிரதம இடர் அதிகாரி மற்றும் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் அவர்களது செயற்திறன் மதிப்பீடுகள் அந்தந்த உபகுழுக்களின் முன்னால் வைக்கப்படுகின்றன. மூலோபாயத் திட்டத்திற்கமைய வருடத்தின் ஆரம்பத்தில் நிறுவப்பட்ட இலக்குகளுக்கு எதிராக அவர்கள் மதிப்பிடப்படுகின்றார்கள். இந்த பணியானது வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

### குறிக்கோள்களும் இலக்குகளும்

2025 ஆம் ஆண்டிற்கு பெருநிறுவன முகாமைத்துவ அங்கத்தவர்களின் மற்றும் பொது முகாமையாளரின் முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளை (மு.செ.கு.) குழுவானது மீளாய்வு செய்து பரிந்துரைத்தது. பிரதம இணக்கப்பாட்டு அதிகாரி, பிரதம இடர் அதிகாரி மற்றும் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் அவர்களது மு.செ.கு. அந்தந்த உபகுழுக்களின் முன்னால் வைக்கப்படுகின்றன. இது வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

வங்கியின் பி.நி.அ. மற்றும மு.மு.ஆ. இனருக்கு மேற்கொள்ளப்படும் செயற்திறன் அடிப்படையிலான கொடுப்பனவுகளுக்கு மீளப்பெறும் கொள்கையானது நிறுவப்பட்டுள்ளது.

இவ்வாண்டின்போது சில கொள்கைகள் / சாசனங்கள் மீளாய்வு செய்யப்பட்டு அல்லது திருத்தியமைக்கப்பட்டு கடைப்பிடிப்பிற்காக சபைக்கு பரிந்துரைக்கப்பட்டன.

## முன்னோக்கிய பாதை

வங்கியின் மூலோபாயத் திசை மற்றும் பரிணமிக்கின்ற வணிகத் தேவைப்பாடுளுடனான சீரமைவினை உறுதிசெய்வதற்காக வங்கியின் மனித வளக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை குழுவானது தொடர்ச்சியாக மீளாய்வு செய்து பலப்படுத்தும்.

முன்னைய ஆண்டில் கடைப்பிடித்த அணுகுமுறைக்கு அமைவாக, குழுவானது செயற்திறன் முகாமைத்துவ செயன்முறைகளை மேம்படுத்துதல், பெருநிறுவன மற்றும் நிறைவேற்று முகாமைத்துவத்திற்கான முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளை மீளாய்வு செய்தல், மற்றும் பதவி உயர்வுகள் மற்றும் பணியாட்கள் அபிவிருத்திக்கான ஒரு வெளிப்படைத்தன்மையான மற்றும் கட்டமைக்கப்பட்ட கட்டமைப்பினை உறுதிசெய்தல் என்பவற்றில் முன்னிறுத்தம் செய்யும்.

மேலும், பணியாட்கள் ஈடுபாடு, மனக்குறை கையாளுதல் பொறிமுறைகள், டிஜிட்டல் பயிலல் மேடைகளுக்கான மேம்பாடுகள் உள்ளடங்கலான பயிற்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான முன்னெடுப்புகளுக்கு குழுவானது தொடர்ந்தும் துணையளிக்கும். இது முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் தொடர்பான அனைத்து விடயங்களும் ஆளுகை மற்றும் முறைமைப்படுத்தல் எதிர்பார்ப்புகளுடனான சீரமைவினை உறுதிசெய்யும் வேளையாகும்.

மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுவின் சார்பில்



திரு. ஜெஹான் இஸ்மாயில்
தலைவர்,

மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு

24 பெப்ரவரி 2026

# நியமனம் மற்றும் ஆளுகை செயற்குழு அறிக்கை GRI 2-10

## 2025 இன் போதான குழுவின் தொகுப்பு

01.01.2025 இலிருந்த குழுவின் தொகுப்பு:

1. திரு. ஜெஹான் இஸ்மாயில்*
   தலைவர்/ நிறைவேற்றுனரல்லா பணிப்பாளார்
2. திரு. காவிந்த டி சொய்சா*
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா தலைவர்
3. கலாநிதி. கபில சேனாநாயக்க
   அங்கத்தவர்/ சுயாதீனமற்ற நிறைவேற்றுனரல்லா பதவிவழி பணிப்பாளர்

03.02.25 இலிருந்து

1. திரு. ஜெஹான் இஸ்மாயில்*
   தலைவர்/ நிறைவேற்றுனரல்லா பணிப்பாளார்
2. திரு. காவிந்த டி சொய்சா*
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா தலைவர்
3. திரு. ஆர். எம். பி. ரத்நாயக்க
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்

## தற்போதைய குழு

01.01.2026 இலிருந்து

1. திரு. ஜெஹான் இஸ்மாயில்*
   தலைவர்/ நிறைவேற்றுனரல்லா பணிப்பாளார்
2. திரு. காவிந்த டி சொய்சா*
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா தலைவர்
3. திரு. ஆர். எம். பி. ரத்நாயக்க*
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
4. பேரா. ஆனந்த ஜயவர்தன
   அங்கத்தவர்/ சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
5. திரு. தர்ஷன குணசேகர
   அங்கத்தவர்/ சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்

* கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் பிரகாரம் சுயாதீனமானவர்களாக கருதப்படுகின்றார்கள்.

## குழுவின் செயலாளர்

செயலாளர், இலங்கை வங்கி / சபைக்கான செயலாளர், செல்வி. ஜானகி எஸ். சிறிவர்தன ஒரு வழக்கறிஞர், பிரதி பொது முகாமையாளர், குழுவின் செயலாளராக செயற்படுகின்றார்.

## அழைப்பின் பேரில் கலந்துகொள்பவர்கள்

- பொது முகாமையாளர்.
- குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு முகாமைத்துவத்தின் யாரேனும் ஏனைய அங்கத்தவர்

2025 இல் இடம்பெற்ற கூட்டங்கள் : 14 (வருகையானது இவ்வறிக்கையின் பக்கம் 173 இல் வழங்கப்பட்டுள்ளது)

பங்கேற்பு: அங்கத்தவர்கள் அல்லது சுயாதீனப் பணிப்பாளர்களில் பெரும்பான்மையோர் (எது உயர்வானதோ) ஒரு பங்கேற்பாக அமைகின்றார்கள்.

## குழுவின் வகிபாகம்

நியமனம் மற்றும் ஆளுகைக் குழுவின் சாசனம். நியமனம் மற்றும் ஆளுகைக் குழுவின் குறிப்பு விதிமுறையானது குழுவின் சாசனத்தினால் ஆளுகை செய்யப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டு கடைப்பிடிக்கப்படுகின்றது.

இலங்கையிலுள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளுகையில் வங்கியியல் சட்ட பணிப்புரைகளது தேவைப்பாடுகள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பெருநிறுவன ஆளுகையிலான சிறந்த நடைமுறைக்கோவை மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளின் பிரிவு 9 இன் தேவைப்பாடுகள் விளித்துரைக்கப்படுவதனை குழுவின் செயற்பாடுகளது நோக்கெல்லை மற்றும் செயலெல்லை என்பவற்றை குழுவானது உறுதிப்படுத்துகின்றது.

## பிரதான முன்னிறுத்தம்

நியமனம் மற்றும் ஆளுகைக் குழுவானது ஒழுங்குவிதிகளினால் தேவைப்பட்டவாறு பெருநிறுவன ஆளுகைக் கொள்கைகளுடன் இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதில் சபைக்கு துணையளிப்பதுடன், புதிய பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் நியமனம் தொடர்பாகவும் சபைக்கு துணையளிக்கின்றது.

## அறிக்கையிடும் ஊடகம்

நியமனம் மற்றும் ஆளுகைக் குழு கூட்டங்களின் நடவடிக்கைகள் சபைக் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்டு மற்றும் உறுதிப்படுத்தப்பட்டு அதில் சபையின் அங்கீகாரம் பெறப்படுகின்றது.

## 2025 இல் முன்னிறுத்தப் பிரிவுகளும் நடவடிக்கைகளும்

குழுவானது வங்கியின் ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் முறைமைப்படுத்தல் சீரமைவினை தொடர்ந்தும் பலப்படுத்தியது.

## பணிப்பாளர்களது நியமனத்திலான கொள்கை

இக்குழுவினூடாக பணிப்பாளர்களது நியமனத்திற்கு வசதியளிப்பதற்காக சபைக்கு பணிப்பாளர்களை நியமிக்கும் கொள்கையானது திருத்தியமைக்கப்பட்டது.

## கூட்டாண்மை ஆளுகை

பரிணமிக்கின்ற முறைமைப்படுத்தல் எதிர்பார்ப்புக்கள் மற்றும் சிறந்த ஆளுகை நடைமுறைகளுடனா சீரமைவினை உறுதிசெய்வதற்காக வங்கியில் காணப்படும் பெருநிறுவன ஆளுகைக் கொள்கையானது தொடர்ந்தும் மீளாய்வு செய்யப்பட்டு திருத்தியமைக்கப்படுகின்றது. இந்த கட்டமைப்பினுள் உள்ள பல கொள்கைகள் 2025 இல் உரியவாறு மீளாய்வுசெய்யப்பட்டன.

ஆளுகை நடைமுறைகள் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் சீரமைவாக இருப்பதனையும் அவை இணங்கியிருப்பதனையும் குழுவானது உறுதிப்படுத்துகின்றது.

## பணிப்பாளர் பயிற்சி

2025 இன்போது பணிப்பாளர்கள் சபைக்கு பயிற்சி, கருத்தரங்குகள் மற்றும் முன்னிலைப்படுத்தல்களுக்கு வசதியளித்தது. இது இங்கிலாந்து மற்றும் வேல்சின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்களது பயிற்சி மற்றும் சான்றளிப்பினையும் உள்ளடக்கியதுடன், சபையின் திறமை மற்றும் ஆளுகை நியமங்களை வலுப்படுத்தியது.

## தகுதியும் பொருத்தமும்

பணிப்பாளர்கள் நியமிக்கப்படும்போது, அதிகாரிகள் மு.மு.ஆ. யினராக பதவி உயர்வு, நியமனம் பெறும்போது மற்றும் அவர்களது பதவிகளுக்கான மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்போது, அவர்களது பதவிகளை வகிப்பதற்கு மு.மு.ஆ. மற்றும் பணிப்பாளர்கள் தகுதியும் பொருத்தமும் ஆய் இருப்பதனை உறுதிசெய்கின்றது.

## சபையின் செயற்திறன்

ஆண்டுக்கு இருமுறை மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. பணிப்பாளர்களது சுயவிபரங்களில் வழங்கப்பட்டுள்ள பணிப்பாளர்களின் சபை செயற்திறன் விபரங்கள் குறிக்கப்பட்டன.

## தொடர்வு ஏற்பாடுகள்

தொடர்வுத் திட்டமிடல் மற்றும் திறன் அபிவிருத்தி குறிக்கோள்களுடனான சீரமைவினை உறுதிசெய்வதில் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளுக்கான பதவியுயர்வு கொள்கை மீளாய்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டது. வங்கியியல் ஓட்டத்தில் பிரதிப் பொது முகாயமையாளர், உதவிப் பொது முகாமையாளர் பதவிகளுக்கான பதவியுயர்வு கொள்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டன.

### முன்னோக்கிய பாதை

சபையானது சபை செயன்முறைகள் மற்றும் ஒட்டுமொத்த பயனுறுதித்தன்மையிலான மேம்பாடுகளுக்கு தொடர்ச்சியாக துணையளித்து, தலைமைத்துவத்தை பலப்படுத்தி நியமனங்கள், பதவியுயர்வுகள் மற்றும் தொடர்வுகள் தொடர்பான அனைத்து கொள்கைகளும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் சீரமைவாயுள்ளதை உறுதிசெய்கின்றது. வங்கியின் மூலோபாய திசைக்கு துணையளிப்பதற்காக பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் நிறுவனப் பயனுறுதித்தன்மையில் அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது.

## முடிவுரை

புதிதாக நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களுக்கான அறிமுகத் திட்டமானது நடாத்தப்பட்டது.

வங்கியின் பாரிய சிக்கல்கள் மற்றும் முறைமைப்படுத்தல் இற்றைப்படுத்தல்கள் சபைக் கூட்டங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. பணிப்பாளர்களின் சுயாதீனத்தன்மையிலான காலாண்டு கூற்றானது பெறப்படுகின்றது.

கூட்டாக மேற்கொள்ளப்பட்ட வருடாந்த மதிப்பீட்டினூடாக குழுவானது அதன் பணியின் செயற்திறனை மீளாய்வு செய்தது. இக்குழுவின் செயற்பாட்டினூடாக சபையின் பொறுப்புக்களுக்கும் குழுவானது தொடர்ந்தும் பெறுமதி சேர்க்கும்.

நியமனம் மற்றும் ஆளுகைக் குழுவின் சார்பில்



திரு. ஜெஹான் இஸ்மாயில்
தலைவர்,

நியமனம் மற்றும் ஆளுகைக் குழு
24 பெப்ரவரி 2026

# தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப செயற்குழுவின் அறிக்கை

## 2025 இன் போதான குழுவின் தொகுப்பு

01.01.2025 இலிருந்தான குழுவின் தொகுப்பு:

1. கலாநிதி. அமல் இலேசிங்க*
   தலைவர்/ நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
2. திரு. காவிந்த டி சொய்சா*
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா தலைவர்
3. கலாநிதி. கபில சேனாநாயக்க
   அங்கத்தவர்/ சுயாதீனமற்ற நிறைவேற்றுனரல்லா பதவிவழி பணிப்பாளர்

03.02.2025 இலிருந்து

1. கலாநிதி. அமல் இலேசிங்க*
   தலைவர்/ நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
2. திரு. காவிந்த டி சொய்சா*
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா தலைவர்
3. திரு. ஜயமின் பெல்பொல*
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா தலைவர்

23.06.2025 இலிருந்து

1. கலாநிதி. அமல் இலேசிங்க*
   தலைவர்/ நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
2. திரு. காவிந்த டி சொய்சா*
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா தலைவர்
3. கலாநிதி. கபில சேனாநாயக்க
   அங்கத்தவர்/ சுயாதீனமற்ற நிறைவேற்றுனரல்லா பதவிவழி பணிப்பாளர்

## தற்போதைய குழு

17.12.2025 இலிருந்து

1. கலாநிதி. அமல் இலேசிங்க*
   தலைவர்/ நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
2. திரு. காவிந்த டி சொய்சா*
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா தலைவர்
3. திரு. சுனிமல் வீரசூரிய
   அங்கத்தவர்/ சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்

* கொ.ப.ப. இன பட்டியலிடல் விதிகளின் பிரகாரம் சுயாதீனமானவர்களாக கருதப்படுகின்றார்கள்.

பங்கேற்பு: அங்கத்தவர்கள்

## குழுவின் செயலாளர்

டப்ளின், அயர்லாந்து தேசிய பல்கலைக்கழகத்திலிருந்து இளமானி விஞ்ஞானப் (முகாமைத்துவ தகவல் முறைமைகள்) பட்டத்தைக் கொண்டுள்ள பிரதம தகவல் அதிகாரியான திரு. புத்திக சீலநாத அவர்கள் குழவின் செயலாளராக செயற்படுகின்றார்.

## அழைப்பின் பேரில் கலந்துகொள்பவர்கள்

- த.தொ. பிரிவுடன் இணைந்துள்ள உதவிப் பொது முகாமையாளர்கள்.
- உதவிப் பொது முகாமையாளர் (கருவி அபிவிருத்தி மற்றும் வணிகச் செயன்முறை மறுசீராக்கல் திட்டம்)
- குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, சபையின், பெருநிறுவன முகாமைத்துவத்தின் மற்றும் பணியாட்கள் அங்கத்தவர்களின் யாரேனும் ஏனைய அங்கத்தவர்கள்.

2025 இல் இடம்பெற்ற கூட்டங்கள் : 10

(வருகையானது இவ்வறிக்கையின் பக்கம் 173 இல் வழங்கப்பட்டுள்ளது)

## குழுவின் வகிபாகம்

### தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் (ICT) குழு சாசனம்

ICT குழுவின் குறிப்பு விதிமுறைகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு கடைப்பிடிக்கப்படுகின்ற ICT குழு சாசனத்தினால் ஆளுகை செய்யப்படுகின்றது.

## பிரதான முன்னிறுத்தம்

வங்கியின் தகவல் தொழில்நுட்ப சூழலின் போதுமை, வினைத்திறன் மற்றும் மூலோபாய சீரமைவு தொடர்பான சபையின் மேற்பார்வை பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் சபைக்கு துணையளிப்பது குழுவின் பிரதான நோக்கமாகும்.

மீளாய்வாண்டின்போது வங்கியின் மூலோபாய குறிக்கோள்கள் மற்றும் பரிணமிக்கின்ற டிஜிட்டல் வங்கியியல் நிலத்தோற்றத்திற்கு துணையளிப்பதற்கு குழுவானது தொழில்நுட்ப ஆளுகை, சைபர்பாதுகாப்பு மீளெழுச்சி, டிஜிட்டல் இயலுமையாக்கல் மற்றும் உட்கட்டமைப்பு நவீனமயப்படுத்தல் என்பவற்றைப் பலப்படுத்துவதில் அதிகரித்த அழுத்தத்தினை பிரயோகித்தது. வங்கியானது வலுவான த.தொ. ஆற்றல்களை பராமரித்தல், துறைசார் சிறந்த நடைமுறைகளை கடைப்பிடித்தல் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்ப போக்குகள் மற்றும் முறைமைப்படுத்தல் எதிர்பார்ப்புக்களுக்கு பதிலளிக்கும் வகையில் இருத்தல் என்பவற்றை உறுதிப்படுத்துவதனை தொடர்ந்தது.

## அறிக்கையிடல் ஊடகம்

ICT குழு கூட்டங்களின் நடவடிக்கைகள் சபையின் மீளாய்விற்காகவும் உறுதிப்படுத்துவதற்காகவும் வழக்கமாக அனுப்பிவைக்கப்படுகின்றன. மூலோபாயத் திசை, கொள்கை அங்கீகாரம், அல்லது முதலீட்டுத் தீர்மானங்கள் தேவையான விடயங்கள் பொருத்தமானவாறு சபைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

## 2025 இல் முன்னிறுத்தப் பிரிவுகளும் நடவடிக்கைகளும்

### அபிவிருத்தியினை கண்காணித்தல்

- வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்கு வங்கியினால் பொறுப்பேற்கப்பட்ட முக்கிய டிஜிட்டல் மற்றும் தொழில்நுட் முன்னெடுப்புகளின் முன்னேற்றமானது கண்காணிக்கப்படுகின்றன.
- இணையம் மற்றும் மொபைல் வங்கியியல் மேடைகள் உள்ளடங்கலான முக்கிய வழிகளுக்கான மேம்பாடுகள் கண்காணிக்கப்பட்டன.
- இணைப்புநிலை, மீளெழுச்சி மற்றும் சேவை கிடைப்புத்திறனை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்ட வலையமைப்பு நவீனமயப்படுத்தல் முன்னெடுப்புகளின் முன்னேற்றமானது மேற்பார்வை செய்யப்பட்டது.
- வங்கியின் மூலோபாய வரைபடத்திற்கு துணையளிக்கும் வளர்ந்துவரும் டிஜிட்டல் தீர்வுகள் தொடர்பான அபிவிருத்திகள் மீளாய்வு செய்யப்பட்டன.
- பணம் சலவை செய்தல் எதிர்ப்பு தீர்வு, முன்னணி சேவை ஆற்றலினை தரமுயர்த்துவதற்கு பாரியளவிலான இறுதிப் பயனாளர் சாதனங்களின் புதுப்பிப்பு, ATM வலையமைப்பின் விரிவாக்கம் மற்றும் நிறுவன வலையமைப்பு மேம்படுத்தல் முன்னெடுப்புகள் உள்ளடங்கலான இவ்வருடத்தின் போது பல மூலோபாய தொழில்நுட்ப முதலீடுகளது அமுலாக்கமானது கண்காணிக்கப்பட்டது. இந்த முதலீடுகள் வங்கி முழுவதும் வாடிக்கையாளர் சேவை விநியோகம், செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் தொழில்நுட்ப மீளெழுச்சி என்பவற்றை கணிசமானளவு பலப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### த.தொ. ஆளுகை

- வங்கியின் மூலோபாய முன்னுரிமைகள் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடனான சீரமைவினை உறுதிசெய்வதற்கு த.தொ. ஆளுகைக் கட்டமைப்பானது மீளாய்வு செய்து பலப்படுத்தப்பட்டது.
- சலுகையான அணுகல் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகள் மேம்படுத்தல் உள்ளடங்கலான சைபர் பாதுகாப்பு தோரணை மேம்பாடுகள் தொடர்பான முகாமைத்துவ செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டன.
- தொழில்நுட்ப இடர் முகாமைத்துவம் தொடர்பான கணக்காய்வு மற்றும் முறைமைப்படுத்தல் பரிகாரச் செயற்பாடுகளது முன்னேற்றம் மேற்பார்வை செய்யப்பட்டது.
- த.தொ. கொள்முதல் செயன்முறைகள் மற்றும் பராமரித்தல் ஒப்பந்த ஆளுகை என்பன மீளாய்வு செய்யப்பட்டு சீராக்கப்பட்டன.

- பேரிடர் மீட்பு தயார்நிலை மற்றும் முக்கியமான த.தொ. உட்கட்டமைப்பின் மீளெழுச்சி என்பன கண்காணிக்கப்பட்டன.
- த.தொ. சூழலினுள் ISO மற்றும் சிறந்த நடைமுறை சீராக்கம் நோக்கி பொறுப்பேற்கப்பட்ட முன்னெடுப்புகள் மீளாய்வு செய்யப்பட்டன.

### முன்னோக்கிய பாதை

வங்கியின் தொழில்நுட்ப நிலத்தோற்றமானது பாதுகாப்பாகவும், உயர்த்தக்கூடியதாகவும் மற்றும் வணிக மூலோபாயத்துடன் சீரமைவானதாகவும் இருப்பதனை உறுதிசெய்வதற்கு வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள், சைபர்பாதுகாப்பு மீளெழுச்சி மற்றும் ஆளுகை முதிர்ச்சி என்பவற்றில் குழுவானது தொடர்ச்சியாக முன்னிறுத்தம் செய்யும். வலுவான முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் பராமரிக்கப்படும்வேளை வங்கியின் டிஜிட்டல் உருமாற்றல் பயணத்திற்கு துணையளிப்பதில் அழுத்தம் பிரயோகிக்கப்படும்.

### முடிவுரை

பயனுறுதித்தன்மை, மீளெழுச்சி மற்றும் வங்கியின் த.தொ. சூழலின் மூலோபாய சீரமைவு என்பவற்றை உறுதிசெய்வதற்காக இவ்வாண்டின்போது பொருத்தமான மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டது என தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழுவானது திருப்தியடைகின்றது.

வலுவான தகவல் பாதுகாப்பு மற்றும் ஆளுகை நியமங்கள் பராமரிக்கப்படும்வேளை வங்கியின் நீண்டகால குறிக்கோள்களுக்கு தொழில்நுட்ப முதலீடுகள் மற்றும் முன்னெடுப்புகள் வினைத்திறனாக பங்களிப்பதனை உறுதிப்படுத்துவதில் குழுவானது சபைக்கு தொடர்ச்சியாக துணையளிக்கும்.



கலாநிதி. அமல் இலேசிங்க
தலைவர்,

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழு
24 பெப்ரவரி 2026

# தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வு செயற்குழுவின் அறிக்கை

## குழுவின் தொகுப்பு

01.01.2025 இலிருந்தான குழுவின் தொகுப்பு:

1. திரு. ஜெஹான் இஸ்மாயில்*
   தலைவர்/ நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
2. திரு. காவிந்த டி சொய்சா*
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா தலைவர்
3. கலாநிதி. கபில சேனாநாயக்க
   அங்கத்தவர்/ சுயாதீனமற்ற நிறைவேற்றுனரல்லா பதவிவழி பணிப்பாளர்

03.02.2025 இலிருந்து

1. திரு. ஆர். எம். பி. ரத்நாயக்க*
   தலைவர்/ நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
2. கலாநிதி. கபில சேனாநாயக்க
   அங்கத்தவர்/ சுயாதீனமற்ற நிறைவேற்றுனரல்லா பதவிவழி பணிப்பாளா"
3. கலாநிதி. அமல் இலேசிங்க*
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா தலைவர்

01.01.2026 இலிருந்தான குழுவின் தற்போதைய தொகுப்பு

1. திரு. தர்ஷன் ஜயரத்ன
   தலைவர்/சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
2. திரு. ஆர். எம். பி. ரத்நாயக்க*
   அங்கத்தவர்/ நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
3. திரு. துல்சி அலுவிஹார
   அங்கத்தவர்/ சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்

* கொ.ப.ப. இன பட்டியலிடல் விதிகளின் பிரகாரம் சுயாதீனமானவர்களாக கருதப்படுகின்றார்கள்.

## குழுவின் செயலாளர்

திரு. என்டன் ஜோன் புள்ளே, பிரதி பொது முகாமையாளர், நிதி மற்றும் திட்டமிடல், அவர்கள் 01.01.2025 இலிருந்து 10.08.2025 வரை குழுவின் செயலாளராக செயலாற்றினார்.

திரு. என்டன் ஜோன் புள்ளே அவர்களின் இளைப்பாறுதலுடன், அம்மணி. ஷீனா ருவைஸ், உதவிப் பொது முகாமையாளர், பாதீடு, மூலோபாய திட்டமிடல் மற்றும் MIS 11.08.025 இலிருந்து குழுவின் செயலாளராக செயற்படுகின்றார்.

## வழக்கமான பங்குபற்றுனர்கள்

- பொது முகாமையாளர்

## அழைப்பின் பேரில் கலந்துகொள்பவர்கள்

உரிய முகாமைத்துவ ஆளணியினர்

2025 இல் இடம்பெற்ற கூட்டங்கள் : 05

(வருகையானது இவ்வறிக்கையின் பக்கம் 173 இல் வழங்கப்பட்டுள்ளது)

பங்கேற்பு: ஆகக்குறைந்தது அங்கத்தவர்களின் அரைவாசி பேர்

## குழுவின் வகிபாகம்

### தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல வாங்கல் மீளாய்வுக் குழு சாசனம்

தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வுக் குழுவின் குறிப்பு விதிமுறையானது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கடைப்பிடிக்கப்படும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வுக் குழு சாசனத்தினால் ஆளுகை செய்யப்படுகின்றது.

## பிரதான முன்னிறுத்தம்

இ.ம.வ. இன் ஒழுங்குவிதிகள், கொ.ப.ப. பட்டியலிடல் விதிகள் மற்றும் ஏனைய பொருத்தமான நியமங்கள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய அனைத்து தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களையும் மீளாய்வு செய்வதில் வங்கியின் பணிப்பாளர்கள் சபைக்கு துணைபுரிவதே குழுவின் பிரதான நோக்கமாகும். இது வங்கியானது தொடர்புடைய தரப்பினர்களுடன், அத்தகைய தரப்பினர்களுக்கு அதே வணிகத்தை மேற்கொள்வதில் வங்கியின் ஏனைய தொகுதிகளுக்கு வழங்கப்படுவதிலும் பார்க்க "மிகவும் சாதகமான கவனிப்பினை" வழங்கக்கூடிய கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடாது இருப்பதனை உறுதிசெய்கின்றது.

## அறிக்கையிடல் ஊடகம்

தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வுக் குழு கூட்டங்களின் நடவடிக்கைகள் சபைக் கூட்டங்களில் உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படுவதுடன் அதிலான சபையின் அங்கீகாரம் பெறப்படுகின்றது.

## 2025 இல் முன்னிறுத்தப் பிரிவுகளும் நடவடிக்கைகளும்

- தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வுக் குழு சாசனம் மீளாய்வு செய்யப்பட்டது.
- தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தல் கொள்கையானது திருத்தியமைக்கப்பட்டது.
- குழுவுக்கு தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை சமர்ப்பிப்பதற்கு ஒரு தரப்படுத்தப்பட்ட குறிப்பாணை படிவமானது விருத்திசெய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.
- பணிப்பாளர்கள் சபை, பெருநிறுவன மற்றும் நிறைவேற்று முகாமைத்துவம் மற்றும் உறவுமுறை முகாமையாளர்களுக்கு பிரதம இணக்கப்பாட்டு அதிகாரியினால் விழிப்புணர்வு அமர்வுகள் நடாத்தப்பட்டன.
- தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்களை இனங்காண்பதற்கான செயன்முறையினை மேம்படுத்துவதற்கு பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
- தொடர்புடைய தரப்பினர்களுக்கு எவ்விதமான சாதகமான கவனிப்புகளும் வழங்கப்படாதிருப்பது உறுதிசெய்யப்பட்டது.

## முன்னோக்கிய பாதை

தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் சீரமைவாயுள்ளதை உறுதிசெய்வதற்கு, குழுவானது ஆளுகையின் உயர்ந்த நியமங்களை நிலைநிறுத்துவதற்கு கடப்பாட்டுடன் இருப்பதுடன், மேற்பார்வை பொறிமுறைகளை தொடர்ந்தும் பலப்படுத்தும்.

## முடிவுரை

கூட்டாக மேற்கொள்ளப்பட்ட வருடாந்த மதிப்பீட்டினூடாக அதன் பணியின் பயனுறுதித்தன்மையினை குழு மீளாய்வு செய்தது. இக்குழுவின் செயற்பாடுகள் ஊடாக சபையின் பொறுப்புக்களுக்கு குமு தொடர்ந்தும் பெறுமதியினை சேர்க்கும்.

தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழு சார்பில்

திரு. தர்ஷன் ஜயாரத்ன

தலைவர்,

தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழு
24 பெப்ரவரி 2026

# இடர்கள் மற்றும் நிலைத்தன்மை வளர்ச்சி

**2025 ஆம் ஆண்டில், படிப்படியாக மீட்சியடைந்து வரும் ஒரு பேரினப் பொருளாதாரச் சூழலுக்கு மத்தியில், இலங்கை வங்கி தனது மீளெழுச்சித் திறன், நிலையானதன்மை மற்றும் விவேகமான இடர் முகாமை ஆகியவற்றை வெளிப்படுத்தியது. மொத்த சொத்துக்கள் 5.0 டிரில்லியன் ரூபாயைக் கடந்து வரலாற்று மைல்கல்லை எட்டியதுடன், 120.8 பில்லியன் ரூபாய் இலாபத்தையும் பதிவு செய்து, இலங்கையின் மிகப்பெரிய மற்றும் உள்நாட்டு ரீதியில் மிக முக்கியமான நிதி நிறுவனமாக தனது நிலையை இவ்வங்கி பலப்படுத்திக் கொண்டது. இந்த பெறுபேறுகள், ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட மூலோபாயச் செயற்பாடுகள், மேம்படுத்தப்பட்ட சொத்துத் தரம் மற்றும் நிலையான மதிப்பு உருவாக்கத்தில் செலுத்தப்பட்ட தொடர்ச்சியான கவனம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன.**

இவ்வருடத்தில் வங்கியின் சிறப்பான செயல்பாட்டிற்குத் திறமையான இடர் மேலாண்மையே (Risk Management) பிரதான காரணியாக விளங்கியது. வங்கியானது, ஒழுங்குமுறைத் தேவைகள், சர்வதேச சிறந்த நடைமுறைகள் மற்றும் தனது நீண்டகால மூலோபாய இலக்குகளுக்கு ஏற்ப, முன்கூட்டியே திட்டமிட்ட மற்றும் ஒருங்கிணைந்த இடர் முகாமைக் கட்டமைப்பொன்றைப் பின்பற்றியது

இந்த இடர் முகாமை அறிக்கை, இவ்வருடத்தில் வங்கியால் பின்பற்றப்பட்ட இடர் விவரக்குறிப்பு (risk profile), ஆளுமைக் கட்டமைப்பு மற்றும் இடர் தணிப்பு உபாயங்கள் ஆகியவற்றை விவரிக்கிறது. அத்துடன், மாறிவரும் இடர் சூழலில் நிதியியல் உறுதிப்பாடு, ஒழுங்குமுறை இணக்கம் மற்றும் நீண்டகால மீளெழுச்சித் திறன் ஆகியவற்றிற்கான இலங்கை வங்கியின் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துகின்றது.

**ஒரு பன்முக இடர் சூழல் ஒன்றோடொன்று இணைந்த, இயங்குநிலை மற்றும் தொடர்ச்சியான இயக்கம்.**




## இடர் மீள்திறன் ஊடாக நிலைத்ததன்மை

இடர் முகாமையில் வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட அணுகுமுறையானது, அதன் முக்கிய மூலதனம், திரவத்தன்மை மற்றும் செயல்பாட்டு குறிகாட்டிகளில் பிரதிபலிக்கிறது. இவை நிச்சயமற்ற காலப்பகுதிகளிலும் வங்கியின் மீளெழுச்சித் திறனையும் ஸ்திரத்தன்மையையும் நிரூபிக்கின்றன.

**தொலைநோக்கு**

### இடர் முகாமை அபிலாசை

இடர்களை முன்கூட்டியே கையாள்வதன் மூலம், வங்கியின் தொலைநோக்குப் பார்வையை அடைவதற்கு ஒரு பக்கபலமாக விளங்குதல்.

**குறிக்கோள்**

### இடர் முகாமை ஒழுங்கு

குழுப்பணி மற்றும் தைத்தொழில்முறை வளர்ச்சியை ஊக்குவிக்கும் துடிப்பானதொரு பணிச்சூழலில், ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் கைத்தொழில்துறையின் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப, இடர்களின் விரிவான முகாமையை உறுதிசெய்து, வங்கியின் நிலையான வளர்ச்சியை எளிதாக்குதல்

**வழங்கிய பெறுமதி**

### முறைமைசார் பொறுப்புக்கூறல் மற்றும் நிதியியல் உறுதிப்பாடு

உள்நாட்டு ரீதியில் மிக முக்கியமான முறைமைசார் வங்கியா இலங்கை வங்கியின் பங்களிப்பானது, இலங்கையின் நிதி முறைமையின் மையப்புள்ளியாக நிறுத்தியுள்ளது. இந்தத் பொறுப்புக்கூறலுக்கு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட இடர் முகாமை மிகவும் அவசியமானதாகும். இது, நிச்சயமற்ற காலப்பகுதிகளிலும் வங்கி மீளெழுச்சித் திறனுடன் இருப்பதை உறுதிசெய்வதுடன், பொருளாதார வளர்ச்சி, நிதி உள்ளடக்கம் மற்றும் நீண்டகால தேசிய அபிவிருத்தி ஆகியவற்றிற்குத் தொடர்ந்து ஒத்துழைப்பதையும் சாத்தியமாக்குகிறது

# இடர்கள் மற்றும் நிலைத்தன்மை வளர்ச்சி

## இடர் முகாமைத்துவ சாதனைப் பயணம்










## இடர் ஆளுகை

வங்கியானது மூலோபாய இலக்குகளை நோக்கிச் செயல்படும்போது, ஏற்படும் நிச்சயமற்ற தன்மைகளைக் கையாள்வதற்கான திறனுக்கு வலுவான இடர் நல்லாட்சியே அடித்தளமாக அமைகிறது. நிலைத்தன்மை மற்றும் காலநிலை மாற்றம் சார்ந்த இடர்கள் உட்பட அனைத்து இடர்களின் மீதான மேற்பார்வையானது, பணிப்பாளர் சபை மட்டத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளதுடன், அது கட்டமைக்கப்பட்ட குழுக்கள், சுயாதீன இடர் முகாமை மற்றும் நிறைவேற்று அதிகாரிகளின் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் மூலம் ஒத்துழைப்பளிக்கப்படுகிறது.



## முக்கிய இடர் ஆளுகை அமைப்புக்களின் கட்டமைப்பு

சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்கள் உட்பட பதினொரு (11) நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்கள், சமநிலையான மேற்பார்வை, சுயாதீனத்தன்மை மற்றும் மூலோபாய வழிகாட்டல் ஆகியவற்றை வழங்குகின்றனர்.

**பணிப்பாளர் சபை**
முழுமொத்த பொறுப்புக்கூறல்

சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்கள் உட்பட பதினொரு (11) நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்கள், சமநிலையான மேற்பார்வை, சுயாதீனத்தன்மை மற்றும் மூலோபாய வழிகாட்டல் ஆகியவற்றை வழங்குகின்றனர்.

**சுயாதீன இடர் முகாமைத்துவக் குழு (IRMC)**
பணிப்பாளர் சபை மட்டத்திலான மேற்பார்வை

பெரும்பான்மையானோர் சுயாதீன நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்களாகக் கொண்ட, நான்கு உறுப்பினர்களை உள்ளடக்கிய, பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு குழு

**நிறைவேற்று இடர் குழு**
முகாமைத்துவ நிர்வாகம்

முக்கிய வணிகம், அபாயம் மற்றும் கட்டுப்பாட்டு செயல்பாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூத்த நிர்வாகத்தைக் கொண்டுள்ளது

**சுயாதீன ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவப் பிரிவு (IIRMD)**
சுயாதீன அபாய மேற்பார்வை

சுயாதீன ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவப் பிரிவு, வணிகப் பிரிவுகளிலிருந்து சுயாதீனமாகச் செயல்படுகிறது. இப்பிரிவு பிரதான இடர் அதிகாரி (CRO) தலைமையில் இயங்குகிறது.

## வகிபாகம் மற்றும் பொறுப்புகள்

இடர் ஆளுகைப் வகிபாகம் மற்றும் பொறுப்புகளின் அணிவரிசை

| இடர் ஆளுகை அடுக்கு | மூலோபாய வழிகாட்டல் மற்றும் மேற்பார்வை | சுயாதீன இடர் மேற்பார்வை | முகாமைத்துவம் மற்றும் செயலாக்கம் | சுயாதீன உறுதிப்பாடு |
|---|---|---|---|---|
| ஆளுகை அமைப்பு (வகிபாகம்) /பங்கு | IRMC பணிப்பாளர்கள் குழு | IIRMD-யின் தலைமை இடர் அதிகாரி (CRO) | அங்கீகரிக்கப்பட்ட அபாய வரம்பிற்குள் செயல்படுதல் | உள்ளகத் கணக்காய்வு |
| இடர் மூலோபாயம் மற்றும் இடர் நாட்டம் | இடர் ஏற்புத்திறன் மற்றும் இடர் உத்தியை அங்கீகரிக்கின்றமை | இடர் ஏற்புத்திறன் மற்றும் வரம்புகளை நிர்ணயிக்கின்றமை | செயல்பாடுகளில் உள்ள அபாயங்களை அடையாளம் கண்டு நிர்வகித்தல் | செயல்திறனை மதிப்பாய்வு செய்கிறது |
| இடரைக் கண்டறிதல் | கண்டறியப்பட்ட முக்கிய இடர்களை மேற்பார்வையிடுகின்றமை | சுயமாக இடர்களைக் கண்டறிந்து மதிப்பிடுகின்றமை | கடன், சந்தை மற்றும் செயல்பாட்டு அபாயங்களைக் கண்காணித்தல் | முழுமையைச் சோதிக்கிறது |
| இடரை அளவிடுதல் மற்றும் கண்காணித்தல் | இடர் விவரம் மற்றும் போக்குகளை மேற்பார்வையிடுகின்றமை | முக்கிய இடர் குறிகாட்டிகளை (KRIs) உருவாக்குதல், இடர் வெளிப்பாடுகளைக் கண்காணிக்கின்றமை | அபாயத் தணிப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல் | கட்டுப்பாடுகளைச் சரிபார்க்கிறது |
| இடர் தணிப்பு | மூலோபாய வழிகாட்டுதலை வழங்குகின்றமை | தணிப்பு நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கிறமை | வணிகப் பிரிவுகளுக்குள் ஏற்படும் தாக்கங்களை நிர்வகித்தல், அத்துடன் செயல்பாட்டு மீள்தன்மை மற்றும் நெருக்கடித் தயார்நிலையை வலுப்படுத்துதல் | விளைவுகளை மதிப்பாய்வு செய்கிறது |
| நிலைத்தன்மை மற்றும் காலநிலை இடர்கள் | மூலோபாயம் மற்றும் மூலதனத் திட்டமிடலில் ஒருங்கிணைப்பை மேற்பார்வையிடுகின்றமை | நிலைத்தன்மை மற்றும் காலநிலை தொடர்பான இடர்களை இடர் மேலாண்மைக் கட்டமைப்பில் ஒருங்கிணைக்கிறமை | வெளிப்படையான அறிக்கையிடலை உறுதி செய்தல் மற்றும் நிர்வாகத்தின் ஊடாக சிக்கல்களை அடுத்த நிலைக்கு (படிநிலை உயர்வு) கொண்டு செல்லுதல் | போதுமான தன்மையை மதிப்பிடுகிறது |
| அறிக்கை செய்தல் மற்றும் மேல்நிலைக்குக் கொண்டு செல்லுதல் | வழக்கமான இடர் அறிக்கைகளை மதிப்பாய்வு செய்கின்றமை | IRMC மற்றும் வாரியத்திற்குச் சுயமாக அறிக்கை அளிக்கிறமை | அன்றாட செயல்பாடுகளில் அபாயம் குறித்த விழிப்புணர்வு கலாச்சாரத்தைப் புகுத்துதல் மற்றும் வளர்த்தெடுத்தல் | கண்டறிதல்களைத் கணக்காய்வுக் குழுவிடம் அறிக்கையிடுகிறது |
| இடர் கலாச்சாரம் மற்றும் திறன் | உயர்மட்டத்தில் ஒரு முன்மாதிரியை அமைக்கின்றமை | இடர் விழிப்புணர்வு மற்றும் பயிற்சியை ஊக்குவிக்கிறமை | அங்கீகரிக்கப்பட்ட அபாய வரம்பிற்குள் செயல்படுதல் | செயல்திறனை மதிப்பிடுகிறது |

வங்கியின் இடர் ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் பொறுப்பு ஒதுக்கீடு பற்றிய மேலோட்டப் பார்வை மேலே உள்ள இடர் ஆளுகைப் பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகள் மேட்ரிக்ஸில் (அட்டவணையில்) வழங்கப்பட்டுள்ளது. இந்த கட்டமைப்பிற்குள் முக்கியப் பங்காற்றும் ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழு (IRMC) மற்றும் சுயாதீன ஒருங்கிணைந்த இடர் முகாமைக் பிரிவு (IIRMD) ஆகியவற்றின் விரிவான பொறுப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டின் போது, சபைக் கடன் குழு மற்றும் நிலைத்தன்மை துணைக் குழு ஆகிய இரண்டு சபை துணைக் குழுக்களை நிறுவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன

# இடர்கள் மற்றும் நிலைத்தன்மை வளர்ச்சி

## IRMC ஒருங்கிணைந்த இடர் மேலாண்மைக் குழு

**வாரிய அளவிலான மேற்பார்வை**

நிறுவன இடர்கள், நிலைத்தன்மை சார்ந்த இடர்கள் மற்றும் காலநிலை சார்ந்த இடர்களுக்கான தனது மேற்பார்வைப் பொறுப்புகளை வாரியம் (Board) நிறைவேற்றுவதில் துணைபுரிகிறது.

- வங்கியின் இடர் ஆளுமைக் கட்டமைப்பைக் கண்காணித்தல் மற்றும் அது அங்கீகரிக்கப்பட்ட இடர் ஏற்புத் திறன் அறிக்கைக்கேற்ப (Risk Appetite Statement) அமைந்திருப்பதை உறுதிசெய்தல்.
- ஒட்டுமொத்த இடர் விவரக்குறிப்பு (Risk Profile) மற்றும் குறிப்பிடத்தக்க இடர் வெளிப்பாடுகளைக் (Risk Exposures) கண்காணித்தல்.
- மூலதனப் போதுமான தன்மை (Capital Adequacy), ICAAP, அழுத்தச் சோதனை (Stress Testing) மற்றும் மீட்புத் திட்டமிடல் (Recovery Planning) ஆகியவற்றின் முடிவுகளை மறுஆய்வு செய்தல்.
- குறிப்பிடத்தக்க, புதிதாக உருவாகும், நிலைத்தன்மை சார்ந்த மற்றும் காலநிலை சார்ந்த இடர்களின் மேலாண்மையைக் கண்காணித்தல்.
- பாதுகாப்பின் மூன்று அடுக்குகள் (Three lines of defence) மற்றும் இடர் மேலாண்மைச் செயல்பாட்டின் செயல்திறனை உறுதிசெய்தல்.
- வணிகத் தொடர்ச்சி (Business Continuity) மற்றும் நெருக்கடிச் சூழலை எதிர்கொள்ளும் தயார்நிலையைக் கண்காணித்தல்.
- நிறுவனம் முழுவதும் வலுவானதொரு இடர் கலாச்சாரத்தை (Risk Culture) ஊக்குவித்தல்.

## IIRMD சுயாதீன ஒருங்கிணைந்த இடர் மேலாண்மைப் பிரிவு

**சுயாதீன இடர் மேற்பார்வை மற்றும் செயலாக்கம்**

இது வணிகப் பிரிவுகளிலிருந்து தன்னிச்சையாகச் (சுயாதீனமாக) செயல்படுகிறது மற்றும் இதற்கு பிரதான இடர் அதிகாரி (CRO) தலைமை தாங்குகிறார். நிறுவன இடர் மேலாண்மைக் கட்டமைப்பை (Enterprise Risk Management framework) பயனுள்ள முறையில் செயல்படுத்துவதற்கும் அதன் தொடர்ச்சியான பராமரிப்பிற்கும் இது பொறுப்பாகும்.

- புதிதாக உருவாகும் நிலைத்தன்மை சார்ந்த மற்றும் காலநிலை சார்ந்த இடர்கள் உட்பட, வங்கியால் எதிர்கொள்ளப்படும் இடர்களைக் கண்டறிதல், மதிப்பீடு செய்தல் மற்றும் கண்காணித்தல்.
- இடர் ஏற்புத் திறன் (Risk appetite) மற்றும் முக்கிய இடர் குறிகாட்டிகளை (Key risk indicators) நிர்ணயித்தல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவற்றிற்கு ஆதரவளித்தல்.
- உயர் மேலாண்மை (Senior management), IRMC மற்றும் வாரியத்திற்கு (Board) சுயாதீனமான இடர் அறிக்கைகளை வழங்குதல்.
- அன்றாடச் செயல்பாடுகளில் இடர் மேலாண்மையை ஒரு அங்கமாக மாற்றுவதற்காக, வழிகாட்டுதல், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு மூலம் வணிகப் பிரிவுகளுக்கு ஆதரவளித்தல்.
- ICAAP, BCP மற்றும் RCP தொடர்பான ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு (Regulatory requirements) இணங்குவதை உறுதிசெய்தல்.

## CRO பிரதான இடர் அதிகாரி

**சுயாதீன இடர் தலைமைத்துவம்**

வங்கியின் இடர் மேலாண்மைச் செயல்பாட்டிற்குச் சுயாதீனமான தலைமைத்துவத்தை வழங்குகிறது மற்றும் நிறுவன இடர் மேலாண்மைக் கட்டமைப்பின் (Enterprise Risk Management framework) செயல்திறனை மேற்பார்வையிடுகிறது. முதன்மை இடர் அதிகாரி (CRO), IRMC மற்றும் வாரியத்திற்கு (Board) அறிக்கை அளிக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

- வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த இடர் மேலாண்மைக் கட்டமைப்பைச் செயல்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
- வங்கியால் எதிர்கொள்ளப்படும் இடர்களின் மீதான மேற்பார்வையைப் பராமரித்தல் மற்றும் அவை அங்கீகரிக்கப்பட்ட இடர் ஏற்புத் திறனுக்குள் (Risk appetite) நிர்வகிக்கப்படுவதை உறுதிசெய்தல்.
- இடர் வரம்புகளை (Risk limits) நிர்ணயித்தல் மற்றும் இடர் வெளிப்பாடுகளைக் கண்காணித்தல் இதில் வரம்புகள் மீறப்படும்போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதும் அடங்கும்.
- கடன் (Credit), சந்தை (Market), செயல்பாட்டு (Operational) மற்றும் காலநிலை சார்ந்த இடர்கள் (Climate-related risks) ஆகியவற்றுக்கு இடையேயான அழுத்தச் சோதனை (Stress testing) மற்றும் சூழ்நிலை பகுப்பாய்வு (Scenario analysis) உள்ளிட்ட இடர் மதிப்பீட்டு முறைகளைக் கண்காணித்தல்.
- வங்கியின் இடர் விவரக்குறிப்பு (Risk profile) மற்றும் குறிப்பிடத்தக்க இடர் வெளிப்பாடுகளை IRMC மற்றும் வாரியத்திற்கு அறிக்கையிடுதல்.
- மூலோபாயம் (Strategy), மூலதனம் மற்றும் திரவத்தன்மை திட்டமிடல் (Capital and liquidity planning), மற்றும் புதிய தயாரிப்புகள் மற்றும் சேவைகள் உள்ளிட்ட முக்கிய முடிவெடுக்கும் செயல்முறைகளில் பங்கேற்றல்.
- இடர் மேலாண்மைத் திறன்களை வலுப்படுத்துதல்
- நிறுவனம் முழுவதும் வலுவான இடர் பாதுகாப்பு கலாச்சாரத்தை ஊக்குவித்தல்

## SM சிரேஷ்ட முகாமை

**இடர் மேலாண்மை மற்றும் செயலாக்கம்**

வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட இடர் ஏற்புத் திறனின் (Risk appetite) வரம்புகளுக்குள் இடர்களை நிர்வகிப்பதற்கும், நிறுவனம் முழுவதும் இடர் ஆளுமைக் கட்டமைப்பைச் செயல்படுத்துவதற்கும் பொறுப்பாகும்.

- வங்கியின் இடர் வெளிப்பாடுகளை (Risk exposures) மதிப்பிடுவதற்கும், நிர்வகிப்பதற்கும் மற்றும் கண்காணிப்பதற்கும் ஒரு ஒருங்கிணைந்த கட்டமைப்பை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.
- இடர் வெளிப்பாடுகள் சரியான முறையில் அளவிடப்படுவதையும், வங்கியின் மூலதனம் மற்றும் பணப்புழக்க நிலைக்கு (Capital and liquidity position) ஏற்ப அமைந்திருப்பதையும் உறுதிசெய்தல்.
- வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட இடர் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் உள் கட்டுப்பாடுகளைச் (Internal controls) செயல்படுத்துதல்.
- இடர் வரம்புகளுக்கு (Risk limits) இணங்குவதைக் கண்காணித்தல் மற்றும் வரம்புகள் மீறப்படும்போது அதுகுறித்த தகவல்கள் உரிய நேரத்தில் உயர் மட்டத்திற்கு கொண்டு செல்லப்படுவதை (Escalation) உறுதிசெய்தல்.
- நிறுவனம் முழுவதும் இடர் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைத் தொடர்புகொண்டு தெரிவித்தல் மற்றும் வலுவான இடர் விழிப்புணர்வை (Risk-awareness) ஆதரித்தல்

## திறமை, தகுதி மற்றும் தொடர்ச்சியான அபிவிருத்தி

நிறுவனம் தழுவிய இடர்கள், நிலைத்தன்மை மற்றும் காலநிலை சார்ந்த இடர்களின் பயனுள்ள மேற்பார்வை மற்றும் முகாமைக்கு ஆதரவளிக்கும் வகையில், பொருத்தமான திறன்கள், நிபுணத்துவம் மற்றும் தகுதிகள் இருப்பதையும், அவை தொடர்ச்சியாக மேம்படுத்தப்படுவதையும் ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழுவின் (IRMC) மூலமாக சபை (Board) உறுதி செய்கிறது.

### சபை மற்றும் குழு இயலளவு

- அபாயக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்களுக்குத் தேவையான திறன்கள், அனுபவம் மற்றும் தகுதிகள் இருப்பதை உறுதி செய்கிறது.
- குறைபாடுகள் அல்லது இடைவெளிகள் கண்டறியப்படும் இடங்களில், அதற்கேற்ற இலக்கு சார்ந்த பயிற்சி, வெளிப்புற நிபுணத்துவம் அல்லது சிறப்பு ஆலோசனை ஆதரவு ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன.

### முகாமை மற்றும் பதவியணி அபிவிருத்தி

- வங்கியானது ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப கட்டமைக்கப்பட்ட பயிற்சி மற்றும் தொழில்முறை மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் தொடர்ச்சியான கற்றல் கலாச்சாரத்தை ஊக்குவிக்கிறது இது கடன், சந்தை, செயல்பாட்டு, நீர்மைத் தன்மை (பணப்புழக்கம்), தகவல் தொழில்நுட்பம்.்சைபர், இணக்கப் பாதுகாப்பு, நிலையான தன்மை மற்றும் காலநிலை சார்ந்த அபாயங்களை உள்ளடக்கியது.
- நிறுவனத்தின் திறனை வலுப்படுத்துவதற்காக, சர்வதேச திட்டங்கள் மற்றும் தொடர்புடைய சான்றிதழ்களின் அறிமுகம் உட்பட, பிரத்யேக மற்றும் வளர்ந்து வரும் அபாயங்கள் குறித்த பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

### வெற்றி மற்றும் தொடர்ந்து செல்லல்

- நிபுணத்துவம் மற்றும் திறமையான அபாயக் கண்காணிப்பை உறுதி செய்வதற்காக, வாரிசுத் திட்டமிடல் (பதவித் தொடர்ச்சி திட்டமிடல்) நடைமுறையில் உள்ளது.

### கருத்துகள் மற்றும் தொடர்ச்சியான மேம்பாடு

- கணக்காய்வுகள், ஒழுங்குமுறை ஆய்வுகள் மற்றும் தொடர்ச்சியான கற்றல் ஆகியவற்றின் முடிவுகள் ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவ செயல்முறையை மேம்படுத்துகின்றன.

## நிறுவன இடர் முகாமைக் கட்டமைப்பு

வங்கியின் நிறுவன இடர் முகாமைக் கட்டமைப்பானது (Enterprise Risk Management framework), இடர்களைக் கண்டறிவதற்கும், மதிப்பிடுவதற்கும் மற்றும் நிர்வகிப்பதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது அதே வேளையில், செயல்பாட்டுச் சூழலில் ஏற்படும் மாற்றங்களால் உருவாகக்கூடிய வாய்ப்புகளைக் கண்டறிந்து கண்காணிப்பதற்கும் இது வழிவகை செய்கிறது. சாத்தியமான இடர்களை மதிப்பீடு செய்வதன் மூலம், இந்தக் கட்டமைப்பானது விவேகமான (தகவலறிந்த) முடிவெடுத்தல் மற்றும் மீள்தன்மைத் திறனுக்கு (resilience) ஆதரவளிக்கிறது.

## ERM கட்டமைப்பின் அடித்தளம்

வங்கியின் நிறுவன இடர் முகாமைக் கட்டமைப்பானது (ERM framework), இடர்கள் எவ்வாறு கண்டறியப்படுகின்றன, நிர்வகிக்கப்படுகின்றன மற்றும் அன்றாடச் செயல்பாடுகளில் எவ்வாறு ஒரு அங்கமாக மாற்றப்படுகின்றன என்பதை வழிநடத்தும் நான்கு முக்கியத் தூண்களின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது.

### இடர் தத்துவம் (Risk Philosophy)

அபாய முகாமை என்பது நிறுவனம் முழுவதும் உள்ள ஒரு கூட்டுப் பொறுப்பாகும், மேலும் இது வங்கியின் மூலோபாய குறிக்கோள்களுடன் ஒத்துப்போகிறது. ஒழுங்குமுறை இணக்கம் என்பது எவ்வித சமரசத்திற்கும் இடமில்லாதது (விதிமுறைகளைப் பின்பற்றுவது கட்டாயமானது), மேலும் வங்கியின் நற்பெயரைப் பாதுகாப்பது என்பது நிதிச் செயற்பாடு மற்றும் பங்குதாரர்களின் நம்பிக்கையைப் பாதுகாப்பதில் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகும்.

### இடர் நாட்டம் (Risk Appetite)

இடர் தாங்குதிறன் கட்டமைப்பானது, வங்கியின் உத்திகளை அது செயல்பட வேண்டிய தெளிவாக வரையறுக்கப்பட்ட அபாய அளவுருக்களாக மாற்றுகிறது. நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்குள் அபாயத் தாங்குதிறனை நிர்வகிப்பதில் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளும், நிர்வாக அபாயக் குழுக்களின் ஆதரவும் முக்கியப் பங்காற்றுகின்றன் சாத்தியமான அபாயங்கள் முன்கூட்டியே கண்டறியப்பட்டு மதிப்பிடப்படுவதை உறுதி செய்வதற்காக, சுயாதீன ஒருங்கிணைந்த அபாய மேலாண்மைப் பிரிவு (IIRMD) அபாய ஆய்வுகளை மேற்கொள்கிறது.

### இடர் கண்டறிதல், தணித்தல் மற்றும் அறிக்கை செய்தல்

அபாயங்கள் மூலோபாய, கொள்கை மற்றும் செயற்பாட்டு நிலைகளில் முன்கூட்டியே கண்டறியப்பட்டு, மதிப்பிடப்பட்டு, தணிக்கப்படுகின்றன (குறைக்கப்படுகின்றன). குறிப்பிடத்தக்க அபாயங்கள், நிறுவப்பட்ட அபாய முகாமைக் கட்டமைப்பின் மூலம் அளவிடப்பட்டு, கண்காணிக்கப்பட்டு, அறிக்கையிடப்படுகின்றன் இது தகவலறிந்து முடிவெடுத்தலை ஆதரிக்கும் அதே வேளையில், சிரேட்ட முகாமை, ஒருங்கிணைந்த அபாய முகாமைக் குழு மற்றும் சபைக்கு (பணிப்பாளர் குழு) சரியான நேரத்தில் அபாயங்களை எடுத்துச் செல்ல உதவுகிறது.

### இடர் கலாச்சாரம்

ஒரு வலுவான அபாயக் கலாச்சாரமானது, தினசரி வணிக நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இடர்கள் குறித்த விழிப்புணர்வு, பொறுப்புக்கூறல் மற்றும் அபாயங்களை வெளிப்படையாக உயர் மட்டத்திற்கு எடுத்துச் செல்லுதல் ஆகியவற்றை ஊக்குவிப்பதன் மூலம், நுசுஆ கட்டமைப்பின் பயனுள்ள செயல்பாட்டிற்கு அடித்தளமாக அமைகிறது.

# இடர்கள் மற்றும் நிலைத்தன்மை வளர்ச்சி

## இலங்கை வங்கியின் ERM கட்டமைப்பு

### நோக்கங்கள்

- வளர்ச்சிக்கான வாய்ப்புகளை அதிகரிக்கும் அதே வேளையில் அபாயங்களை திறம்பட எதிர்பார்த்து குறைப்பதற்கான வங்கியின் திறனை மேம்படுத்துதல்
- அனைத்து இடர்களையும் நிர்வகிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொதுவான கொள்கைகள் மற்றும் தரங்களை நிறுவுதல்
- இடர்களை நிர்வகிக்க ஒரு நிலையான அணுகுமுறையை வளர்க்க ஒரு பொதுவான மொழி, அமைப்பு மற்றும் கட்டமைப்பை வழங்குதல்

### உலகளாவிய இடர்

**முதன்மை இடர்கள்**

1 கடன் இடர் | 2 திரவத்தன்மை இடர் | 3 சந்தை இடர் | 4 தொழிற்பாட்டு இடர்

**ஏனைய இடர்கள்**

05 மூலோபாய இடர் | 06 மக்கள் இடர் | 07 தகவல் பாதுகாப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப இடர் | 08 ஒழுங்குமுறை மற்றும் இணக்கப்பாட்டு இடர் | 09 நடத்தை இடர் | 10 சட்ட இடர் | 11 நன்மதிப்பு இடர் | 12 நிலைத்தன்மை தொடர்பான இடர் | 13 காலநிலை தொடர் | 14 மூன்றாம் நபர் இடர் | 15 மோசடி இடர்

### இடர் ஆளுகை மற்றும் மேற்பார்வை

**பணிப்பாளர் சபை**

- இடர் தொடர்பான சபை குழுக்கள்: ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (IRMC) | கணக்காய்வுக் குழு | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் குழு

**பொது முகாமையாளர்**

- இடர் தொடர்பான நிறைபேற்றுக் குழு

| கடன் இடர் | சந்தை இடர் | தொழிற்பாட்டு இடர் | தகவல் பாதுகாப்பு | நன்மதிப்பு இடர் |
|---|---|---|---|---|
| • கடன் குழு<br>• செயலற்ற கடன் மீளாய்வுக் குழு<br>• செயலற்றச் சொத்துக் குழு | • சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் முகாமைத்துவக் குழு<br>• முதலீட்டுக் குழு<br>• அரச பத்திரங்கள் மீதான முதலீட்டுக் குழு | • தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ நிறைவேற்றுக் குழு<br>• மோசடி இடர் முகாமைத்துவக் குழு<br>• தொழிற்பாட்டு நட்டங்களை கையாளும் குழு<br>• வியாபாரத் தொடர்ச்சி முகாமைத்துவக் குழு | • கூட்டாண்மை தகவல் பாதுகாப்பு குழு | • வாடிக்கையாளர் அனுபவ முகாமைத்துவக் குழு |

1 முதல் பாதுகாப்பு வளையம் — வணிக பிரிவுகள்

2 இரண்டாம் பாதுகாப்பு வளையம் — சுயாதீன ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவப் பிரிவு (IIRMD)

3 மூன்றாம் பாதுகாப்பு வளையம் — உள்ளக கணக்காய்வு

### இடர் கொள்கைகள்

| | | |
|---|---|---|
| ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ கோரிக்க | கடன் பட்டியல் முகாமைத்துவக் கொள்கை | திரவ இடர் முகாமைத்துவக் கொள்கை |
| குழும இடர் முகாமைத்துவக் கொள்கை | கடன் மீளாய்வு பொறிமுறைக் கொள்கை | தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கை |
| அழுத்த சோதனை கொள்கை | ஒருங்கிணைந்த சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ முறைமைக் கொள்கை | மோசடி இடர் முகாமைத்துவக் கொள்கை |
| உள்ளக மூலதனம் போதுமானதன்மை மதிப்பீட்டுக் கொள்கை | சந்தை இடர் முகாமைத்துவக் கொள்கை | தகவலர் தொழல்நுட்ப இடர் முகாமைத்துவக் கொள்கை |
| கடன் இடர் முகாமைத்துவக் கொள்கை | அந்நிய செலாவணி இடர் முகாமைத்துவக் கொள்கை | தகவல் பாதுகாப்புக் கொள்கை |
| கடன் இடர் தரமிடல் கொள்கை | | பாதிப்பு முகாமைத்துவக் கொள்கை |
| | | இணைய பாதுகாப்புக் கொள்கை |

## மூன்று பாதுகாப்பு வளையங்களின் மாதிரி

இடர் மேலாண்மை நடவடிக்கைகளில் தெளிவான பொறுப்புக்கூறல், பயனுள்ள மேற்பார்வை மற்றும் சுயாதீன உத்தரவாதம் ஆகியவற்றை உறுதி செய்வதற்காக வங்கி தனது நிறுவன இடர் மேலாண்மை கட்டமைப்பின் ஒருங்கிணைந்த அங்கமாக மூன்று பாதுகாப்பு மாதிரிகளைப் பயன்படுத்துகிறது.

### 1 முதலாம் பாதுகாப்பு வளையம்

வணிகப் பிரிவுகள் மற்றும் கூட்டு செயற்பாடுகள்

**Roles**

- அன்றாட நடவடிக்கைகளில் இருந்து உருவாகும் இடர்கள் ஏற்பதற்கும் அவற்றின் உரிமையைப் பொறுப்பேற்பதற்கும் பொறுப்பாகும்
- அந்தந்த செயற்பாடுகளுக்குள் இருக்கும் இடர்களைச் சொந்தமாக ஏற்று நிர்வகித்தல்
- அங்கீகரிக்கப்பட்ட இடர் தாங்குதிறன் மற்றும் இடர் முகாமைக் கொள்கைகளுக்குள் செயற்படுதல்

**Supported by**

- கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் நிலையான செயற்பாட்டு வழிகாட்டுதல்கள்
- வணிகச் செயற்முறைகளில் ஒன்றிணைக்கப்பட்ட உள் கட்டுப்பாடுகள்
- முகாமை தகவல் முறைமைகள் மற்றும் செயற்பாட்டு அறிக்கை செய்தல்
- இடர் விழிப்புணர்வு பயிற்சி மற்றும் வலுவான இடர் கலாச்சாரம்

### 2 இரண்டாம் பாதுகாப்பு வளையம்

IIRMD-ஆல் மேற்கொள்ளப்படும் இடர் முகாமை மற்றும் கட்டுப்பாடு

**Roles**

- இடர் முகாமைக் கட்டமைப்பின் பயனுள்ள செயலாக்கத்தை சுயாதீனமாக மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணித்தல்
- இடர் வெளிப்பாடுகளை அளவிடுதல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல்
- இடர் முகாமைக் கொள்கைகள் மற்றும் தரநிலைகளைப் பராமரித்தல் மற்றும் வலுப்படுத்துதல்

**Supported by**

- நிறுவன இடர் முகாமைக் கொள்கைகள் மற்றும் கட்டமைப்புகள்
- அழுத்த சோதனை (Stress testing) மற்றும் சூழ்நிலை பகுப்பாய்வு முடிவுகள்
- அழுத்த சோதனை மற்றும் சூழ்நிலை பகுப்பாய்வு விளைவுகள்
- ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ முறைமை மற்றும் அறிக்கையிடல் தளங்கள்

### 3 மூன்றாம் பாதுகாப்பு வளையம்

உள் உத்தரவாதம் மற்றும் கணக்காய்வு

**Roles**

- கூட்டு ஆளுமை, இடர் முகாமை மற்றும் உள் கட்டுப்பாடுகள் குறித்து சபைக்கு சுயாதீனமான உத்தரவாதத்தை வழங்குதல்
- முதல் மற்றும் இரண்டாம் அடுக்கு பாதுகாப்புகளின் செயற்திறனை மதிப்பிடுதல்

**Supported by**

- உள் கணக்காய்வு வழிமுறைகள் மற்றும் கணக்காய்வுத் திட்டங்கள்
- வெளி கணக்காய்வு மற்றும் ஒழுங்குமுறை மறுஆய்வு செயற்முறைகள்
- கணக்காய்வு முகாமை மற்றும் சிக்கல்களைக் கண்காணிக்கும் முறைமைகள்
- கணக்காய்வுக் குழுவிற்கு நேரடியாக அறிக்கை அளிக்கும் வழிமுறைகள்

## இடர் மேலாண்மை செயல்முறை

நிறுவன இடர் மேலாண்மை (நுசுஆ) கட்டமைப்பிற்குள், வங்கி அமைப்பு முழுவதும் உள்ள அபாயங்களை அடையாளம் காணவும், மதிப்பிடவும், முன்னுரிமை அளிக்கவும், கண்காணிக்கவும், குறைக்கவும், புகாரளிக்கவும் ஒரு கட்டமைக்கப்பட்ட மற்றும் முறையான இடர் மேலாண்மை செயல்முறையைப் பயன்படுத்துகிறது.

இந்த செயல்முறை வணிக அலகுகள், செயல்பாடுகள் மற்றும் நிறுவன நிறுவனங்கள் முழுவதும் தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறது.

### பரப்பு

- ஒட்டுமொத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கிளைகளின் வலையமைப்பு
- அனைத்து முக்கியமான வணிகப் பிரிவுகள் மற்றும் துணைச் செயற்பாடுகள்
- குழுமத்தின் கீழ் உள்ள அனைத்து துணை.்.இணை நிறுவனங்கள்

### கூட்டாண்மை ஆதரவு

- நிறுவன இடர் மேலாண்மை கட்டமைப்பிற்குள் செயல்படுகிறது
- மூன்று பாதுகாப்பு வளையங்கள் மூலம் ஆதரிக்கப்படுகிறது

# இடர்கள் மற்றும் நிலைத்தன்மை வளர்ச்சி

## 1 இடர் கண்டறிதல்

**நோக்கம்**

வங்கியைப் பாதிக்கக்கூடிய தற்போதைய, வளர்ந்து வரும் மற்றும் சாத்தியமான அபாயங்களைக் கண்டறிதல்

**முக்கிய செயற்பாடுகள்**

- அபாய மற்றும் கட்டுப்பாட்டு சுய-மதிப்பீடுகள் (RCSAs)
- கடன் சரிபார்ப்பு மற்றும் மதிப்பீட்டு செயற்முறைகள்
- கடன் தொகுப்பு (Portfolio) மறுஆய்வுகள் மற்றும் செறிவு பகுப்பாய்வு
- வரம்பு கண்காணிப்பு மற்றும் கூட்டுத் தரப்பு (Counterparty) அபாய மறுஆய்வுகள்
- நிகழ்வு மற்றும் இழப்பு தரவு அறிக்கை செய்தல்
- தயாரிப்பு மற்றும் செயற்முறை மறுஆய்வுகள்
- கடன் வழங்குவதற்கு முந்தைய மற்றும் பிந்தைய ESG மதிப்பீடுகள் உள்ளிட்ட சுற்றுச்சூழல் மற்றும் சமூக (E&S) உரிய விடாமுயற்சி

**முடிவு (விளைவு)**

கண்டறியப்பட்ட கடன், சந்தை, நீர்மைத் தன்மை, செயற்பாட்டு, ஒழுங்குமுறை, நற்பெயர், நிலையான தன்மை சார்ந்த மற்றும் இதர எஞ்சிய இடர்கள்

## 2 இடர் அளவீடு

**நோக்கம்**

கண்டறியப்பட்ட அபாயங்களின் தன்மை, நிகழ்தகவு (Likelihood) மற்றும் சாத்தியமான தாக்கத்தை மதிப்பிடுதல்

**முக்கிய செயற்பாடுகள்**

- முக்கிய அபாய குறிகாட்டிகளின் (KRIs) பயன்பாடு
- வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட அபாயத் தாங்குதிறன் மற்றும் சகிப்புத்தன்மை வரம்புகளுக்கு எதிரான மதிப்பீடு
- அழுத்த பரிசோதனை மற்றும் சூழ்நிலை பகுப்பாய்வு
- இலாகா அளவிலான அபாய மதிப்பீடுகள்
- கடந்தகால இழப்பு தரவுகளின் பகுப்பாய்வு
- நிபுணர்களின் கருத்து மற்றும் துறைசார் பகுப்பாய்வைப் பயன்படுத்திய தரமான மதிப்பீடுகள்

**முடிவு (விளைவு)**

தாக்கம் மற்றும் நிகழ்தகவின் அடிப்படையில் அபாயத் தரவரிசைகள் மற்றும் முன்னுரிமை அளித்தல்

## 3 கண்காணிப்பு மற்றும் கட்டுப்படுத்தல்

**நோக்கம்**

இடர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வரம்புகளுக்குள் இருப்பதையும் கட்டுப்பாடுகள் திறம்பட செயற்படுவதையும் உறுதிசெய்தல்

**முக்கிய செயற்பாடுகள்**

- முகாமை தகவல் அமைப்பு (MIS) அறிக்கை மூலம் தொடர்ச்சியான கண்காணிப்பு
- ஒருங்கிணைந்த அபாய முகாமை அமைப்பின் (IRMS) பயன்பாடு
- வரம்பு முகாமை மற்றும் தொடக்கநிலை (Threshold) கண்காணிப்பு
- முகாமை மற்றும் வாரியக் குழுக்களுக்கு அவ்வப்போது அபாய அறிக்கை சமர்ப்பித்தல்
- தொடர்ச்சியான RCSAs மற்றும் கட்டுப்பாட்டு செயற்திறன் மறுஆய்வுகள்

**முடிவு (விளைவு)**

முன்கூட்டிய எச்சரிக்கை குறிகாட்டிகள், போக்கு பகுப்பாய்வு மற்றும் அபாயப் பிரச்சினைகளை சரியான நேரத்தில் உயர் மட்டத்திற்கு எடுத்துச் செல்லுதல்

## 4 தணிப்பு மற்றும் அறிக்கையிடல்

**நோக்கம்**

அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளுக்குள் அபாயங்களை நிர்வகித்தல் மற்றும் பயனுள்ள மேற்பார்வை மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல்

**முக்கிய செயற்பாடுகள்**

- அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க அபாய தணிப்பு நடவடிக்கைகளை செயற்படுத்துதல்
- அபாயத் தாங்குதிறன் கட்டமைப்புடன் அபாயப் பதில்களை சீரமைத்தல்
- குறிப்பிடத்தக்க இடர்கள் மற்றும் வளர்ந்து வரும் சிக்கல்களை உயர் மட்டத்திற்கு எடுத்துச் செல்லுதல்
- அபாய வெளிப்பாடுகள், போக்குகள் மற்றும் அழுத்த பரிசோதனை முடிவுகளை முகாமை மற்றும் வாரியத்திற்கு அறிக்கையிடுதல்

**முடிவு (விளைவு)**

தகவல்களை முழுமையாக அறிந்த முடிவெடுத்தல், பலப்படுத்தப்பட்ட பின்னடைவுத் திறன் (Resilience) மற்றும் அபாய முகாமையில் தொடர்ச்சியான மேம்பாடு

## இடர் முன்னுரிமை மற்றும் நிலையான தன்மை மற்றும் காலநிலை சார்ந்த இடர்கள் மற்றும் வாய்ப்புகளின் ஒருங்கிணைப்பு

நிலையான தன்மை மற்றும் காலநிலை சார்ந்த இடர்கள் மற்றும் வாய்ப்புகள் மற்றும் உட்பட அனைத்து நிறுவன இடர்களும் பின்வரும் முறையில் மதிப்பிடப்பட்டு முன்னுரிமை அளிக்கப்படுகின்றன. இந்த செயற்முறைகள், நிறுவன மற்றும் ESG (சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுமை) சார்ந்த இடர்கள் வங்கியின் ஒட்டுமொத்த இடர் மதிப்பீடு மற்றும் முன்னுரிமை அளிக்கும் செயற்முறைகளுக்குள் ஒன்றிணைக்கப்படுவதையும், அவற்றிற்கு வழிகாட்டுவதையும் உறுதி செய்கின்றன.

**நிறுவன இடர்ங்களின் தன்மை, நிகழ்தகவு மற்றும் அளவை மதிப்பிடுதல்.**

வங்கி நிறுவனம் தழுவிய இடர்களை பின்வருபவை உள்ளிட்ட தரமான மற்றும் அளவுகோல் சார்ந்த அளவுகோல்களின் கலவையைப் பயன்படுத்தி மதிப்பிடுகிறது.

- இடர்களின் தன்மை மற்றும் அவற்றை தூண்டும் காரணிகள்.
- கடந்தகால போக்குகள் மற்றும் வளர்ந்து வரும் இடர் குறிகாட்டிகளின் அடிப்படையில், இடர் நிகழ்வதற்கான நிகழ்தகவு
- நிதி, செயற்பாட்டு, ஒழுங்குமுறை, நற்பெயர், நிலையான தன்மை மற்றும் காலநிலை சார்ந்த பரிமாணங்களில் ஏற்படக்கூடிய தாக்கத்தின் சாத்தியமான அளவு

ஒட்டுமொத்த இடர் வெளிப்பாடு மற்றும் பாதிப்புத் திறனைத் தீர்மானிக்க, அளவுகோல் சார்ந்த வரம்புகள், அழுத்த சோதனை முடிவுகள், முக்கிய இடர் குறிகாட்டிகள் (KRIs) மற்றும் நிபுணர்களின் கருத்து ஆகியவை கூட்டாகப் பயன்படுத்தப்படுகின்றன

**அபாய அளவுகோல்கள்**

- தன்மை மற்றும் மூலம்
- நிகழ்வதற்கான சாத்தியக்கூறு
- தாக்கத்தின் சாத்தியமான அளவு

### உள்ளீடுகள்/தூண்டுகோல்கள்

- தாக்கம் மற்றும் நிகழ்தகவு
- பொருண்மை பகுப்பாய்வு
- அழுத்த சோதனை மற்றும் சூழ்நிலை ஒப்பீடு
- இடர் நாட்டக் கட்டமைப்பு
- ERM ஒருங்கிணைப்பு (நிறுவன இடர் முகாமை ஒருங்கிணைப்பு

### முன்னுரிமை அளித்தல்

- தாக்கம் x நிகழ்தகவு மதிப்பீடு

### பாதிப்பு பகுதிகள்

- கடன் செயற்பாடு
- பிணை மதிப்புகள்/ ஈட்டுறுதி மதிப்புகள் (Collateral values)
- கூட்டுத் தரப்பு கடன் பலம்
- சந்தை வெளிப்பாடுகள்
- செயற்பாட்டு சொத்துக்கள்

### விரிவாக்கம் மற்றும் மேற்பார்வை

முக்கியமான இடர்கள் மற்றும் மீறல்களுக்கு அருகாமையில் உள்ள நிகழ்வுகளை மேல்நிலைக்குக் கொண்டு செல்லவும்

இடர் நாட்ட கட்டமைப்பு வரம்புகளுக்கு எதிராக மதிப்பாய்வு செய்யவும்.

நடவடிக்கை மற்றும் கண்காணிப்பிற்காக மேலாண்மை மற்றும் தொடர்புடைய வாரியக் குழுக்களுக்கு அறிக்கை அளிக்கவும்

### வழிகாட்டி Navigation Guide

அபாய மதிப்பீடு மற்றும் முன்னுரிமை அளித்தல் ஆகியவை அழுத்த சோதனை முடிவுகள் (Stress testing outcomes), ICAAP முடிவுகள், முக்கிய அபாயக் குறிகாட்டிகள் மற்றும் நிபுணர்களின் கருத்து உள்ளிட்ட பல்வேறு அளவுகோல் சார்ந்த (Quantitative) மற்றும் தரமான (Qualitative) உள்ளீடுகளின் அடிப்படையில் அமைகின்றன.

பின்வருபவை பற்றிய விரிவான விவரங்கள்:

- அழுத்த சோதனை (Stress testing), ICAAP மற்றும் மீட்புத் திட்டமிடல் (Recovery planning) ஆகியவை இந்த அறிக்கையின் 201-202 பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன.
- நிலையான தன்மை மற்றும் காலநிலை சார்ந்த அபாயங்கள் மற்றும் வாய்ப்புகள் (SRROs மற்றும் CRROs) இந்த அறிக்கையின் 214-215 பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன.

# இடர்கள் மற்றும் நிலைத்தன்மை வளர்ச்சி

## ஒரு வளர்ந்து வரும் கட்டமைப்பு 2025 இல் முன்னேற்றங்கள்

### இடர் சூழலில் மாற்றங்கள்

முந்தைய அறிக்கையிடல் காலத்துடன் (2024) ஒப்பிடும்போது, 2025 ஆம் ஆண்டில் வங்கியின் இடர் சூழல் விரிவுபடுத்தப்பட்டது மற்றும் பாரம்பரிய இடர் வகைகளுடன் வளர்ந்து வரும் மற்றும் நிதி அல்லாத இடர்களை பிரதிபலிக்கும் வகையில் இன்னும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது.

### மேம்பாடுகள்

- நிலைத்தன்மை தொடர்பான இடர்களை ஒரு தனித்துவமான இடர் வகையாக வெளிப்படையாக அடையாளம் காணுதல்
- காலநிலை தொடர்பான இடர்களை ஒரு தனி இடர் வகையாக வெளிப்படையாக அடையாளம் காணுதல்
- நடத்தை இடரை ஒரு தனித்துவமான இடர் அறிமுகப்படுத்துதல், வாடிக்கையாளர் விளைவுகள், நெறிமுறை நடத்தை மற்றும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகள் ஆகியவற்றில் கவனத்தை வலுப்படுத்துதல்
- வெளிப்புற விற்பனையாளர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் புறத்திறனீட்ட ஏற்பாடுகள் மீதான அதிகரித்த நம்பகத்தன்மையை பிரதிபலிக்கும் மூன்றாம் தரப்பு இடரை அறிமுகப்படுத்துதல்
- உலகளாவிய மோசடி இடரை முறையாக வெளிப்படுத்துதல், வளர்ந்து வரும் உள்ளக , வெளிப்புற மற்றும் சைபர்-இயக்கப்பட்ட மோசடி அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதற்கான கட்டுப்பாடுகள் மற்றும் கண்காணிப்பு வழிமுறைகளை வலுப்படுத்துதல்
- மக்கள், மூலோபாயம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான அபாயங்களின் தெளிவான வேறுபாடு, நிறுவன இடர் உலகம் முழுவதும் தெளிவை மேம்படுத்துகிறது.

### விளைவு

நுசுஆ கட்டமைப்பு மற்றும் கொள்கை கட்டமைப்பின் விரிவாக்கம் 2025 ஆம் ஆண்டில், வங்கி தனது நிறுவன இடர் முகாமைத்துவ (நுசுஆ) கட்டமைப்பை விரிவுபடுத்தி வலுப்படுத்தியது, அமைப்பு முழுவதும் நிலையான இடர் நிர்வாகத்தை ஆதரிப்பதற்காக மிகவும் விரிவான, கட்டமைக்கப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த கட்டமைப்பை நோக்கி நகர்ந்தது.

### ERM சட்டக கட்டமைப்பை வலுப்படுத்துதல்

- ERM கட்டமைப்பின் தெளிவான வெளிப்பாடு, ஆபத்து வகைகளில் நிலையான பயன்பாட்டை ஆதரிக்கிறது
- இடர் வகைபிரித்தல், ஆளுகை ஏற்பாடுகள் மற்றும் ஆதரவு கொள்கைகளுக்கு இடையிலான மேம்பட்ட சீரமைப்பு
- முக்கிய நுசுஆ கட்டமைப்பிற்குள் நிதி அல்லாத, நிலைத்தன்மை தொடர்பான மற்றும் காலநிலை தொடர்பான கருத்தாய்வுகளின் மேம்பட்ட ஒருங்கிணைப்பு

### இடர் கொள்கை கட்டமைப்பை விரிவுபடுத்துதல்

- COBIT 2019 செயல்படுத்தல் திட்டத்திற்கு ஏற்ப புதுப்பிக்கப்பட்ட இணைய பாதுகாப்பு கொள்கைகள்
- தொழில்நுட்பம், தகவல் பாதுகாப்பு மற்றும் இணைய இடர் ஆளுகை வலுப்படுத்துதல்
- சுற்றுச்சூழல், சமூக மற்றும் நிலைத்தன்மை தொடர்பான இடர் கொள்கைகளை முக்கிய நுசுஆ கட்டமைப்பில் ஒருங்கிணைத்தல்

### விளைவு

நிலைத்தன்மை, நிர்வாக ஒழுக்கம் மற்றும் நிறுவன அளவிலான சீரமைப்பு ஆகியவற்றை வலுப்படுத்துதல், இடர் முகாமைத்துவத்திற்கு மிகவும் வலுவான மற்றும் முன்னோக்கு அணுகுமுறையை செயல்படுத்துகிறது.

## இடர் முகாமைச் செயல்முறைகளில் மாற்றங்கள்

2025 ஆம் ஆண்டின் போது, வங்கியானது விரிவுபடுத்தப்பட்ட நிறுவன இடர் முகாமைத்துவ கட்டமைப்பு மற்றும் கொள்கை முறைமையை அடிப்படையாகக் கொண்டு, இடர்களைக் கண்டறிவதற்கும், மதிப்பிடுவதற்கும், கண்காணிப்பதற்கும் மற்றும் நிர்வகிப்பதற்கும் பயன்படுத்தப்படும் செயல்முறைகளை மேம்படுத்தியது.

| செயன்முறைபகுதி | 2025 இல் செயன்முறை மேம்பாடு | இடர் முகாமை தாக்கம் |
|---|---|---|
| இடர் கண்டறிதல் மற்றும் மதிப்பீடு | • அதிக வணிகப் பிரிவுகள் மற்றும் இடர் வகைகளில் இடர் மற்றும் கட்டுப்பாட்டு சுய மதிப்பீடுகளை விரிவுபடுத்துதல்<br>• மேம்படுத்தப்பட்ட மூன்றாம் தரப்பு மற்றும் வெளிப்பணி இடர் மதிப்பீட்டு வழிமுறைகள்<br>• இடர் கண்டறியும் செயல்முறைகளில் நிலைத்தன்மை மற்றும் மாற்றங்கள் தொடர்பான கருத்தாய்வுகளை ஒருங்கிணைத்தல் | • புதிதாக உருவாகும் மற்றும் ஒன்றோடொன்று தொடர்புடைய இடர்களை முன்கூட்டியே கண்டறிதல், கட்டுப்பாட்டு குறைபாடுகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுதல் மற்றும் நிறுவனம் முழுவதும் செயலூக்கமிக்க இடர் முகாமையை வலுப்படுத்துதல். |
| இடர் அளவீடு, கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடுகள் | • திறைசேரி முறைமை மேம்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இடைநிலை அலுவலக இடர் செயல்முறைகளைத் தானியக்கமாக்குதல்<br>• பாதிப்பு முகாமை மற்றும் இணையக் கண்காணிப்புக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துதல்<br>• இணையப் பொறுப்புக் காப்பீட்டைப் பெறுதல் மற்றும் இணையம் தொடர்பான சாத்தியமான இழப்புகளை ஈடுசெய்ய நிதிப் பாதுகாப்பு இருப்புகளை நிறுவுதல் | • மனிதத் தலையீடுகளைக் குறைத்தல், இடர் தரவுகளின் துல்லியம் மற்றும் நேர முகாமையை மேம்படுத்துதல், மேம்பட்ட சைபர் மீள்தன்மைத் திறன் மற்றும் கருவூலம் சந்தை மற்றும் செயல்பாட்டு இடர் ஆகியப் பகுதிகளில் கட்டுப்பாட்டுச் செயல்திறனை வலுப்படுத்துதல். |
| இடர் ஆளுகைக் கட்டமைப்பு | • நிலைத்தன்மை மற்றும் காலநிலை தொடர்பான இடர்களின் மீதான மேற்பார்வையை மேம்படுத்துவதற்காக,<br>• சபைக்கு பிரத்யேக துணைக்குழுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.<br>• நிர்வாகத்திற்கும் சபைக் குழுக்களுக்கும் இடையிலான அறிக்கையிடல் வழிமுறைகள் மற்றும் மேல்நிலைப்படுத்தல் நெறிமுறைகள் தெளிவுபடுத்தப்பட்டன. | • ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுக்கு இணங்க, இணையவழி மற்றும் தொழில்நுட்ப இடர் முகாமை வலுப்படுத்தப்பட்டது. வளரும் இடர் களங்கள் மீதான மிகவும் விசேட மற்றும் முறையான மேற்பார்வை, மேம்படுத்தப்பட்ட சிக்கல்களை உயர் மட்டத்திற்கு கொண்டு செல்லும் ஒழுங்குமுறை, மற்றும் மேம்பட்ட ஆளுமை வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் |
| இடர் ஆளுகை மற்றும் மேற்பார்வை | • பணிப்பாளர் குழு மட்டத்தில் பரந்த துறைசார் நிபுணத்துவம் மற்றும் பன்முகத்தன்மை<br>• குறிப்பாக, புதிதாக உருவாகும் மற்றும் நிதிசாரா இடர்கள் குறித்து, பணிப்பாளர் குழுவிற்கு இடர் அறிக்கையிடலின் ஆழத்தையும் தடவைகளையும் அதிகரித்தல். | • மேம்பட்ட மேற்பார்வையின் தரம், விவேகமான (தகவலறிந்த) முடிவெடுத்தல் மற்றும் வங்கியின் இடர் நாட்ட திறனுடன் வலுவான ஒத்திசைவு. |

## இடர் மீள்திறன், மூலதன போதுமானதன்மை மற்றும் மீட்புத் திட்டம்

பாதகமான சூழ்நிலைகளைத் தாங்கும் திறனை மதிப்பிடுவதற்கும், நிதி உறுதிப்பாட்டை பராமரிப்பதற்கும், நிலையான வளர்ச்சியை ஆதரிப்பதற்கும் வங்கி பலவிதமான முன்னோக்கிய இடர் மீள்திறன் மற்றும் மூலதன முகாமைத்துவ வழிமுறைகளைப் பயன்படுத்துகிறது. இந்த வழிமுறைகள் அழுத்த சோதனையின் கீழ் மீள்திறனை சோதிப்பதன் மூலமும், போதுமான மூலதன இடையகங்களை உறுதி செய்வதன் மூலமும், சரியான நேரத்தில் மீட்பு நடவடிக்கைகளை செயல்படுத்துவதன் மூலமும் நிறுவன இடர் முகாமைத்துவம் (நுசுஆ) கட்டமைப்பை பூர்த்தி செய்கின்றன.

### அழுத்த சோதனை

**நோக்கம்**

**பாதகமான ஆனால் நம்பத்தகுந்த சூழ்நிலைகளில் வங்கியின் மீள்திறனை மதிப்பீடு செய்து, சாத்தியமான பாதிப்புகளை அடையாளம் காணல்**

#### 2025 மேம்பாடுகள்/ புதிய சூழல்கள்

- வங்கியின் கூட்டாண்மை திட்டம் மற்றும் நடுத்தர கால மூலோபாய கண்ணோட்டத்துடன் இணைந்த அழுத்த
- சோதனை கால எல்லை ஐந்து ஆண்டுகளாக நீட்டித்தது
- தயாரிப்பு அளவிலான கடன் தர மதிப்பீடுகள், முக்கிய கடன் பட்டியல்களில் சரிவு போக்குகளை மதிப்பீடு செய்தல்
- கடன் வாங்குபவரின் திரவத்தன்மை மற்றும் சொத்தின் தரம் ஆகியவற்றில், குறிப்பாக வர்த்தக-உணர்திறன் துறைகளுக்குள் சாத்தியமான அமெரிக்க பரஸ்பர கட்டண தாக்கங்களை மதிப்பீடு செய்தல்
- ”தித்வா” புயல் தாக்க மதிப்பீடு,பௌதீக பருவநிலை இடர் வெளிப்பாடு, துறை ரீதியான பாதிப்புகள் மற்றும் கடன் செயல்திறன், பிணை மதிப்புகள் மற்றும் திரவத்தன்மை ஆகியவற்றில் சாத்தியமான பரிமாற்ற விளைவுகளை பகுப்பாய்வு செய்தல்.

#### பிரயோகம் மற்றும் பயன்பாடு

- மூலதனம் மற்றும் திரவத்தன்மை திட்டமிடலை தெரிவிக்கிறது
- இடர் தணிப்பு உத்திகள் மற்றும் மூலோபாய முடிவெடுப்பதை ஆதரிக்கிறது

#### மதிப்பீட்டின் நோக்கம்

- அழுத்தத்தின் கீழ் மூலதனம் போதுமானதாக இருப்பது
- பாதகமான நிதி மற்றும் காசுப்பாய்ச்சல் நிலைமைகளின் கீழ் திரவத்தன்மை
- பேரினப் பொருளாதாரம், சந்தை மற்றும் கடன் அதிர்ச்சிகளுக்கு வருவாய் மற்றும் இருப்புநிலை உணர்திறன

#### முன்னோக்கிய பார்வை

பேரினப் பொருளாதார, புவிசார் அரசியல் மற்றும் காலநிலை தொடர்பான இடர்கள் உள்ளிட்ட முன்னோக்கிய , வங்கி சார்ந்த மற்றும் சந்தை சார்ந்த சூழ்நிலைகளை ஒருங்கிணைக்க அழுத்த சோதனையை விரிவுபடுத்தல்.

# இடர்கள் மற்றும் நிலைத்தன்மை வளர்ச்சி

## உள்ளக மூலதனப் போதுமான மதிப்பீட்டுச் செயல்முறை (ICAAP)

**நோக்கம்**

இயல்பான மற்றும் நெருக்கடியான சூழ்நிலைகளில் ஏற்படக்கூடிய அனைத்து இடர்களையும் சமாளிக்கத் தேவையான மூலதனம் இருப்பதை உறுதி செய்தல்.

### 2025 மேம்பாடுகள்

- ஐந்தாண்டு நிறுவனத் திட்டத்திற்கு இணங்க, ICAAP-க்கான கால எல்லை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- காலநிலை தொடர்பான இடர்கள் குறித்த பண்புசார் மதிப்பீடுகள் இணைக்கப் பட்டுள்ளன.

### ஆளுகை மற்றும் மேற்பார்வை

- சிரேஷ்ட முகாமைத்துவ மற்றும் தொடர்புடைய சபைத் துணைக் குழுக்களால் மதிப்பாய்வு செய்யப்பட்டது.

### மதிப்பீட்டின் நோக்கம்:

- வங்கியின் இடர் சுயவிவரம், உத்தி மற்றும் இடர் ஏற்புத்திறன் ஆகியவற்றுடன் தொடர்புடைய மூலதனப் போதுமான தன்மை.
- நெருக்கடிச் சோதனை மற்றும் சூழ்நிலை பகுப்பாய்வு முடிவுகளின் ஒருங்கிணைப்பு.
- முன்னோக்கிய மூலதனம்/ திரவத்தன்மை திட்டமிடல் மற்றும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுடன் சீரமைத்தல்.

### முன்னோக்கிய பார்வை

- சுற்றுச்சூழல், சமூக மற்றும் காலநிலை இடர் கருத்தாய்வுகளுக்கான மூலதனத் தேவைகளை மதிப்பிடுவதற்கு ஒரு இடர் குறியீட்டை உருவாக்கி, அதை ICAAP-இல் இணைத்தல்.
- வங்கியின் மூலதனப் பெருக்கத் திட்டம் மற்றும் நிலைத்தன்மை முயற்சிகளின் கீழ், அதன் மூலதன அடித்தளத்தை மேலும் வலுப்படுத்த கடன்பத்திரங்கள் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## மீட்புத் திட்டம் (RCP)

**நோக்கம்:**

பாதகமான நிதியியல் அல்லது செயல்பாட்டு நெருக்கடி காலங்களில், சரியான நேரத்தில் மற்றும் கட்டமைக்கப்பட்ட மீட்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்துதல்.

### 2025 மீட்பு குறிகாட்டிகள் மேம்பாடுகள்

- செம்மைப்படுத்தப்பட்ட மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள் மீட்புத் திட்டக் கட்டமைப்பில் இணைக்கப்பட்டன, இது மாறிவரும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுடன் சீரமைப்பை வலுப்படுத்துகிறது.
- சாத்தியமான நெருக்கடி நிலைகளுக்கான ஆரம்ப எச்சரிக்கை மற்றும் தூண்டுதல் உணர்திறனை மேம்படுத்த ஒரு கூடுதல் மீட்பு குறிகாட்டி அறிமுகப்படுத்தப்பட்டது.

### நோக்கப்படும் விளைவு

- வங்கியின் நிதி மற்றும் செயல்பாட்டு மீள்திறனை உறுதி செய்வதற்கான மேம்படுத்தப்பட்ட தயார்நிலை மற்றும் திறன்.

### முக்கிய கூறுகள்

- மீட்பு குறிகாட்டிகள் மற்றும் அதிகரிப்பு வரம்புகள்
- வரையறுக்கப்பட்ட ஆளுகை மற்றும் தீர்மானமெடுக்கும் பொறிமுறை
- வங்கியின் இடர் சுயவிவரத்துடன் சீரமைக்கப்பட்ட மீட்பு விருப்பங்களின் தொகுப்பு

### முன்னோக்கிய பார்வை

- 2026 ஆம் ஆண்டிற்கான மீட்புத் திட்டத்தை மதிப்பாய்வு செய்து மறுபரிசீலனை செய்தல்
- மீட்பு நடவடிக்கைகள் அல்லது விருப்பங்களின் தேவையை மதிப்பிடுவதற்கு கூடுதல் மீட்பு குறிகாட்டிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் செயல்முறையை மேம்படுத்துதல்.

## நுசுஆ-இன் பயன்பாடு குழுமம் முழுவதும்

ஒரு சீரான நிறுவன இடர் மேலாண்மை அணுகுமுறையானது, குழுமம் மற்றும் அதன் சர்வதேச செயல்பாடுகள் முழுவதிலும் உள்ள இடர் மேற்பார்வைக்கு அடிப்படையாக அமைகிறது.

### துணை நிறுவன இடர் மேலாண்மை

குழும இடர் மேலாமைக் கொள்கையின்படி, குழுமத்தின் ஒட்டுமொத்த இடர் ஏற்புத்திறன், ஆளுகைத் தரநிலைகள் மற்றும் மூலோபாய நோக்கங்களுடன் சீரமைப்பை உறுதி செய்வதற்காக, வங்கியானது அதன் துணை நிறுவனங்கள் முழுவதும் ஒரு சீரான இடர் முகாமைத்துவ அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது.

#### குழுமம் தழுவிய இடர் முகாமைத்துவ நடைமுறைகள்

- துணை நிறுவனங்கள் முழுவதும் நிதி நிலைத்தன்மை, ஒழுங்குமுறை இணக்கம் மற்றும் செயல்பாட்டு மீள்திறனை ஆதரித்தல்
- இடர் கண்டறிதல், மதிப்பீடு மற்றும் கண்காணிப்பில் நிலைத்தன்மையை ஊக்குவித்தல்
- தொழில்துறை சிறந்த நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளை உள்ளடக்குதல்

#### முன்னோக்கிய பார்வை

- வலுப்படுத்தப்பட்ட ஆளுகை மற்றும் காலமுறை இடர் மதிப்பாய்வுகள் மூலம் வங்கி தனது துணை நிறுவன இடர் கண்காணிப்பை மேலும் மேம்படுத்தும்

### கடல்கடந்த இடர் முகாமைத்துவம்

வங்கியின் வெளிநாட்டு இடர் முகாமைத்துவ கட்டமைப்பு, சர்வதேச செயல்பாடுகள் முழுவதும் செயல்பாட்டு மீள்திறன் மற்றும் நிலையான வளர்ச்சியை ஆதரிக்கிறது

#### இடர் முகாமைத்துவ நடைமுறைகள்

- பல்வேறு பொருளாதார, ஒழுங்குமுறை மற்றும் புவிசார் அரசியல் சூழல்களில் செயல்படுவதில் உள்ள சிக்கல்களைக் கையாள்கிறது
- வெளிநாட்டுக் கிளைகள் முழுவதும் தரப்படுத்தப்பட்ட இடர் மற்றும் கட்டுப்பாட்டு சுய மதிப்பீட்டு செயல்முறையைப் பயன்படுத்துகிறது
- சர்வதேச போர்ட்/ போலியோக்களுக்கான கடன் இடர் மதிப்பீடு மற்றும் அழுத்தச் சோதனை முறைகளை வலுப்படுத்துகிறது
- வெளிநாட்டு இடர் மேலாண்மை நடைமுறைகள் வங்கியின் ஒட்டுமொத்த நுசுஆ கட்டமைப்பு மற்றும் இடர் ஏற்புத்திறனுடன் சீரமைக்கப்பட்டுள்ளன

#### முன்னோக்கிய பார்வை

- சர்வதேச செயல்பாடுகளின் விரிவாக்கத்தை ஆதரித்தல்
- தளத்தில் இடர் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்

## 2025ஆம் ஆண்டின் இடர் சூழல்

### முதன்மை இடர்களும் வாய்ப்புகளும்

ந்தப் பிரிவு, வங்கியின் தற்போதைய இடர் சூழலையும், வங்கியின் வணிக மாதிரி மற்றும் மதிப்பு உருவாக்கத்திற்கான சாத்தியமான தாக்கங்களையும் பிரதிபலிக்கும் வகையில், வங்கியின் முதன்மை இடர்களையும் வாய்ப்புகளையும் முன்வைக்கிறது.

1 கடன் இடர் | 2 திரவத்தன்மை இடர் | 3 சந்தை இடர் | 4 செயல்பாட்டு இடர்

### 1 கடன் இடர்

**இடர் வரைவிலக்கணம்**

கடன் வாங்குபவர் அல்லது எதிர் தரப்பினர் ஒப்பந்தக் கடமைகளை முழுமையாகவும் சரியான நேரத்திலும் நிறைவேற்றத் தவறுவதால் ஏற்படும் நிதி இழப்பு இடர்.

**இடர் கூறுகள்**

- **கடன் தவறும் இடர்** - கடன் வாங்கியவர்கள் திருப்பிச் செலுத்தும் கடமைகளை நிறைவேற்றத் தவறுதல்
- **தீர்க்கும் இடர்** - நிதிப் பரிவர்த்தனைகளில் எதிர் தரப்பினர் தோல்வியடைதல்
- **செறிவு இடர்** - குறிப்பிட்ட கடன் வாங்கியவர்கள், துறைகள், தயாரிப்புகள் அல்லது புவியியல் பகுதிகளுக்கு அதிகப்படியான வெளிப்பாடு
- **தரக்குறைப்பு இடர்** - கடன் வாங்கியவரின் கடன் தரம் மோசமடைதல்
- **நாடு மற்றும் எல்லை கடந்த இடர்** - குறிப்பிட்ட அதிகார வரம்புகளில் உள்ள பொருளாதார, ஒழுங்குமுறை அல்லது அரசியல் நிலைமைகளுக்கு வெளிப்பாடு

**கடன் இடர் முகாமைத்துவ கட்டமைப்பு**

வங்கியானது, கடன் இடர் மேலாண்மைக் கொள்கை மற்றும் இடர் ஏற்பு கட்டமைப்புடன் சீரமைக்கப்பட்ட, கடன் ஒப்புதலுக்கு முந்தைய மற்றும் கடன் கண்காணிப்புக்குப் பிந்தைய ஒரு விரிவான கட்டமைப்பின் மூலம் கடன் இடரை நிர்வகிக்கிறது.

**கடன் ஒப்புதலுக்கு முந்தைய நிலை**

- கட்டமைக்கப்பட்ட கடன் மதிப்பீடு மற்றும் வரையறுக்கப்பட்ட கடன் அளவுகோல்கள்
- சுயாதீனமான மறுஆய்வுடன் கூடிய பல அடுக்கு ஒப்புதல்
- கடன் வாங்குபவர் மதிப்பீட்டு மாதிரிகள் மற்றும் சில்லறை மதிப்பெண் அட்டைகள்
- இடர் அடிப்படையிலான விலை நிர்ணயம் மற்றும் ஒழுங்குமுறை வரம்புகள்

**கடன் ஒப்புதலுக்குப் பிந்தைய நிலை கண்காணிப்பு**

- தொடர்ச்சியான கடன் மறுஆய்வுகள் மற்றும் போர்ட்ஃபோலியோ மதிப்பீடுகள்
- ஆரம்ப எச்சரிக்கை சமிக்ஞைகளைக் கண்டறிதல் மற்றும் செயல்திறன் மிக்க ஈடுபாடு
- கண்காணிப்புப் பட்டியல் கண்காணிப்பு மற்றும் கடன் மறுஆய்வு வழிமுறைகள்
- அழுத்தச் சோதனை மற்றும் சூழ்நிலை பகுப்பாய்வு

**இடர் அளவீடு**

- உள் கடன் மதிப்பீடுகள் மற்றும் முக்கிய இடர் குறிகாட்டிகள் (KRIs)
- சொத்துத் தரம் மற்றும் மதிப்பிழப்பு மதிப்பீடு
- அழுத்தச் சோதனை மற்றும் சூழ்நிலை பகுப்பாய்வு வெளியீடுகள்
- பட்டியல் அளவிலான போக்கு மற்றும் செயல்திறன் பகுப்பாய்வு

**அளவீடுகள்**

- மொத்த கடன் வெளிப்பாடு
- மொத்த சொத்துக்களில் % ஆக வெளிப்பாடு
- மொத்த கடன் வெளிப்பாட்டில் % ஆக நிலை 3 முற்பணங்கள்

**வணிக மாதிரியில் தாக்கம்**

**தற்போதைய விளைவுகள்**

கடன் இடர், சொத்துத் தரம், ஒதுக்கீட்டு நிலைகள் மற்றும் வருவாய் நிலைத்தன்மை ஆகியவற்றில் செல்வாக்கு செலுத்துகிறது, அதே நேரத்தில் மூலதனப் போதுமான விளைவுகளையும் மற்றும் உகந்ததாக்கலையும் வடிவமைக்கிறது. இடர்-எடையிடப்பட்ட சொத்துக்கள்.

**செறிவு உணர்திறன்**

குறிப்பாக நெருக்கடியான சூழ்நிலைகளின் கீழ்கடன் வாங்குபவர், துறைசார், தயாரிப்பு, புவியியல், பிணையம், தரமதிப்பீட்டுத் தரம், மற்றும் எல்லை கடந்த வெளிப்பாடுகள் ஆகியவற்றில் அதிக உணர்திறன்.

**பெறுமதி உருவாக்க இணைப்பு**

பாதிக்கப்பட்ட பங்காளர்கள்

இணை பிரதான தலைப்புக்கள்

01 06 M10

உரிய மூலதனங்கள்

தொடர்புடைய SDGs

**முன்னோக்கிய பார்வை**

- பட்டியல் பல்வகைப்படுத்தல் துறைகள் மற்றும் தயாரிப்புகள் முழுவதும் இடர் சரிசெய்யப்பட்ட வருவாயை மேம்படுத்துதல்
- இடர் அடிப்படையிலான விலை நிர்ணயம் மேம்படுத்தப்பட்ட கடன் பகுப்பாய்வு மூலம் விலை நிர்ணய ஒழுக்கத்தை வலுப்படுத்துதல்
- நிலையான நிதி பசுமை மற்றும் மாற்றத்திற்கான கடன் தீர்வுகளை விரிவுபடுத்துதல்
- இருப்புநிலைக் குறிப்பின் மீள்தன்மை நீண்ட கால சொத்துத் தரம் மற்றும் மூலதனத் திறனை வலுப்படுத்துதல்

# இடர்கள் மற்றும் நிலைத்தன்மை வளர்ச்சி

## கடன் இடர் செயல்திறன்

| முக்கிய இடர் குறிகாட்டி | தற்போதைய நிலை (31.12.2025) | தற்போதைய நிலை (31.12.2024) |
|---|---|---|
| நிகர நிலை 3 கடன்கள் விகிதம் (%) | 5.6 | 5.1 |
| குறைபாடு காப்பீடு - நிலை 3 கடன்கள் (%) | 57.9 | 60.4 |
| துறைவாரியான செறிவு (HHI) | 1,037 | 991 |
| புவியியல் செறிவு | 1,947 | 2,031 |

### புவியியல் செறிவு %




### பிணை வாரியான %




### உற்பத்தி வாரியான செறிவு %




### தரவரிசை வாரியான பங்கீடு %




### துறை செறிவு %




### வங்கியின் எல்லை தாண்டிய வெளிப்பாடு %



## 2 திரவ இடர்

### இடர் வரைவிலக்கணம் (Risk Definition)

வங்கியானது ஏற்றுக்கொள்ள முடியாத இழப்புகளைச் சந்திக்காமலோ அல்லது தனது நிதி ஸ்திரத்தன்மையைப் பாதிக்காமலோ, காலக்கெடு வரும்போது தனது செலுத்த வேண்டிய பொறுப்புகளை முழுமையாகவும், சரியான நேரத்திலும் நிறைவேற்ற இயலாமையால் ஏற்படக்கூடிய இழப்புக்கான இடர் ஆகும்.

### இடர் கூறுகள்

- **நிதியளிப்பு திரவத்தன்மை இடர்:** மொத்த மற்றும் சில்லறை நிதியளிப்புச் சந்தைகளை அணுகுவது உட்பட, காலக்கெடு வரும்போது தனது கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான போதுமான நிதியைப் பெற வங்கியால் இயலாமல் போகக்கூடிய இடர்.
- **சந்தை திரவத்தன்மை இடர்:** சந்தையில் பணப்புழக்கக் குறைபாடு காரணமாக, பொருத்தமான காலக்கெடுவிற்குள் சொத்துக்களை நியாயமான சந்தை மதிப்பில் (fair market value) பணமாக மாற்ற இயலாமல் போகக்கூடிய இடர்.
- **முதிர்வுக்கால முரண்பாட்டு இடர்:** சொத்துக்களின் முதிர்வு விவரக்குறிப்புகளுக்கும் (எ.கா. நீண்ட காலக் கடன்கள்) மற்றும் பொறுப்புகளின் முதிர்வு விவரக்குறிப்புகளுக்கும் (எ.கா. குறுகிய கால வைப்புத்தொகைகள்) இடையே ஏற்படும் ஒத்திசையாமை அல்லது முரண்பாட்டினால் எழும் இடர்.
- **வட்டி விகித உணர்திறன்:** வட்டி விகிதங்களில் ஏற்படும் மாற்றங்கள் நிதி ஆதாரம் திரட்டும் செலவுகளை அல்லது சொத்து மதிப்புகளைப் பாதிக்கக்கூடிய இடர் இது பணப்புழக்கத்தின் நெகிழ்வுத்தன்மையைக் கட்டுப்படுத்தக்கூடும்.
- **கடன் தரமதிப்பீடு குறைப்பு இடர்:** வங்கியின் கடன் தரமதிப்பீடு சரிவடைவதால், நிதியளிப்புச் செலவுகள் அதிகரிக்க அல்லது சந்தை அணுகல் கட்டுப்படுத்தப்படக்கூடிய இடர்.
- **நன்மதிப்பு மற்றும் நிகழத்தக்க திரவத்தன்மை இடர்:** அழுத்தமான சூழ்நிலைகள், எதிர்மறையான விளம்பரங்கள், வைப்பாளர்களுக்கிடையேயான நம்பிக்கை இழப்பு அல்லது சந்தைக் குலைவுகள் ஆகியவற்றால் தூண்டப்படும் எதிர்பாராத பணப்புழக்க வெளியேற்றத்திற்கான இடர்.

### திரவத்தன்மை இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு

வங்கியானது, ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட இடர் ஏற்புத் திறன் கட்டமைப்பு ஆகியவற்றிற்கு இணங்க அமைக்கப்பட்ட ஒரு விரிவான கட்டமைப்பின் மூலம் திரவத்தன்மை இடரை நிர்வகிக்கிறது. இந்தக் கட்டமைப்பானது, போதியளவான பணப்புழக்கப் பாதுகாப்புகளைப் பராமரிப்பதையும், பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஆதாரங்களையும், இயல்பான மற்றும் அழுத்தமான இரு சூழ்நிலைகளின் கீழும் தொடர்ச்சியான கண்காணிப்பு நடைபெறுவதையும் உறுதி செய்கிறது. இது, வங்கி தனது அனைத்து நிதியளிப்புப் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதற்கும், எதிர்பாராத திரவத்தன்மை அதிர்ச்சிகளைத் தாங்குவதற்கும் ஆதரவளிக்கிறது.

### திரவத்தன்மை முகாமை கட்டமைப்பு

- வரையறுக்கப்பட்ட முதிர்வு விவரக்குறிப்புகள் மூலம் சொத்து-பொறுப்பு முகாமை.
- போதுமான உயர்தர திரவச் சொத்துக்களைப் (HQLA) பராமரித்தல்.
- நிதி ஆதாரங்களைப் பன்முகப்படுத்துதல்.

### தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடுகள்

- திரவத்தன்மை விகிதங்கள் மற்றும் ஆரம்பகால எச்சரிக்கை குறிகாட்டிகளைத் தொடர்ச்சியாகக் கண்காணித்தல்.
- குறிப்பிட்ட கால இடைவெளியிலான அழுத்தச் சோதனை மற்றும் சூழ்நிலை பகுப்பாய்வு
- நியமிக்கப்பட்ட முகாமைக் குழுக்கள் மற்றும் சபையின் துணைக் குழுக்களின் மேற்பார்வை.

### இடர் அளவீடு

- வரையறுக்கப்பட்ட முதிர்வு விவரக்குறிப்புகள்
- மூலம் சொத்து-பொறுப்பு முகாமை.
- ஒப்பந்த அடிப்படையிலான முதிர்வுக்கால முரண்பாட்டு பகுப்பாய்வு
- நிதி ஆதாரங்களின் குவிப்பு/ செறிவூட்டல்
- அடமானமில்லாத, பயன்படுத்தக்கூடிய திரவச் சொத்துக்கள்

### மேற்றிக்ஸ்

- திரவத்தன்மை காப்பு விகிதம் - LCR)
- தேறிய நிலையான நிதியிடல் விகிதம் - NSFR)
- கிடைக்கபெறக்கூடிய உயர்தர திரவச் சொத்துக்கள்
- கடன்-வைப்பு விகிதம்

### வியாபார மாதிரி தொடர்பான தாக்கம்

#### தற்போதைய விளைவுகள் / தாக்கங்கள்

பணப்புழக்கச் சூழலானது, கடன் வழங்கும் திறன், சொத்து-பொறுப்பு முகாமை மற்றும் நிதி ஆதாரம் திரட்டும் செலவுகள் ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்துகிறது. இதில், குறுகிய கால அல்லது நிலையற்ற நிதி ஆதாரங்களை அதிகமாகச் சார்ந்திருப்பது இருப்புநிலைக் குறிப்பின் நெகிழ்வுத்தன்மையைக் கட்டுப்படுத்துவதுடன், நிலையான மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட வைப்புத்தொகைகளின்அவசியத்தை மேலும் வலியுறுத்துகிறது.

#### குவிப்பு உணர்திறன்

திறைசேரி மற்றும் சொத்து-பொறுப்பு முகாமைசெயல்பாடுகள், நிலையற்ற வைப்புத்தொகை விவரக்குறிப்புகள் மற்றும் பணச் சந்தை வெளிப்பாடுகள் ஆகியவற்றில் காணப்படும் அதிகப்படியான உணர்திறன்.

### பெறுமதி உருவாக்க இணைப்பு

பாதிக்கப்பட்ட பங்காளர்கள்

இணைந்த பிரதான தலைப்புக்கள்

01 06 M10

உரிய மூலதனங்கள்

தொடர்புடைய SDGs

### முன்நோக்கிய பயணம்

- **சொத்து-பொறுப்பு முகாமை:** நடத்தை பகுப்பாய்வு மூலம் திரவத்தன்மை பராமரிக்கும் அதே வேளையில், வருவாயை அதிகப்படுத்துவதற்காக இருப்புநிலை குறிப்பை உகந்ததாக்குதல்.
- தரவு அடிப்படையிலான இடர் புத்தாக்கம்:
- விவேகமான இருப்புநிலை முகாமை உத்திகள்:
- மேம்படுத்தப்பட்ட அழுத்தச் சோதனை நுட்பங்கள்:
- தானியங்கி கண்காணிப்புக் கருவிகள்:

# இடர்கள் மற்றும் நிலைத்தன்மை வளர்ச்சி

## திரவ இடர் செயலாற்றுகை

| முக்கிய இடர் குறிகாட்டி | ஒழுங்குபடுத்தல்/ கொள்கை அளவீடுகள் | உண்மை நிலை (31.12.2025) | உண்மை நிலை (31.12.2024) |
|---|---|---|---|
| திரவ உள்ளடக்க விகிதம் (LCR) (%) | ≥ 100.0 | 260.4 | 269.6 |
| நிகர நிலையான நிதி விகிதம் (NSFR) (%) | ≥ 100.0 | 156.6 | 157.9 |
| கடன் - வைப்பு விகிதம் (CD) (%) | – | 60.5 | 57.9 |

### நிதியளிப்பு கட்டமைப்பு %




### தடையற்ற பிணையங்கள்




## 3 சந்தையிடர்

**இடர் வரைவிலக்கணம்**

வங்கியின் வர்த்தகப் புத்தக மற்றும் வங்கிப் புத்தக ஆபத்து வாய்ப்புகளைப் பாதிக்கக்கூடிய வகையில், வட்டி விகிதங்கள், அந்நியச் செலாவணி விகிதங்கள், பங்கு விலைகள் அல்லது பொருட்களின் விலைகள் ஆகியவற்றில் ஏற்படும் எதிர்மறையான மாற்றங்களால் இழப்புகள் ஏற்படுவதற்கான இடர் ஆகும்.

**இடர் கூறுகள்**

- **வட்டி விகித இடர்** (Interest rate risk): சந்தை வட்டி விகிதங்களில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக வருவாய் மற்றும் பொருளாதார மதிப்பில் (economic value) ஏற்படக்கூடிய தாக்கம்.
- **செலாவணி விகித இடர்** (Exchange rate risk): அந்நியச் செலாவணி விகிதங்களில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள், அந்நிய நாட்டு நாணய ஆபத்து வாய்ப்புகளைப் (foreign currency exposures) பாதிக்கும் நிலை.
- **பங்குச் சந்தை இடர்** (Equity risk): பங்குகள் மற்றும் அது சார்ந்த நிதிச் சாதனங்களின் விலைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள்.
- **பொருட்கள் விலை இடர்:** நுகர்வுப் பொருட்களின் விலைகளில் ஏற்படும் மாற்றங்களால் உண்டாகக்கூடிய பாதிப்பு.

**சந்தை இடர் முகாமைக் கட்டமைப்பு**

வங்கியானது, இடர் ஏற்புத் திறன் கட்டமைப்பு மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு (regulatory requirements) இணங்க அமைக்கப்பட்ட ஒரு விரிவான கட்டமைப்பின் மூலம் சந்தை இடரை நிர்வகிக்கிறது் இந்தக் கட்டமைப்பு வரம்பு அமைப்புகள் சுயாதீனமான மேற்பார்வை மற்றும் அழுத்தச பரிசோதனை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

**கட்டமைப்பு இடர் முகாமை**

- வர்த்தகப் புத்தக மற்றும் வங்கிப் புத்தக ஆபத்து வாய்ப்புகளுக்கு வரையறுக்கப்பட்ட வரம்புகள்.
- கால அளவு மற்றும் மறுவிலை நிர்ணய இடைவெளி முகாமை
- தேவைப்படும் இடங்களில் பொருத்தமான இடர் தவிர்ப்பு/ காப்பு உத்திகள்

**தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடுகள்**

- சந்தை ஆபத்து வாய்ப்புகள் மற்றும் வரம்புப் பயன்பாட்டைப் தினசரி கண்காணித்தல்.
- அழுத்தச் சோதனை மற்றும் சூழ்நிலை பகுப்பாய்வு.
- சொத்து-பொறுப்புக் குழு (ALCO) மற்றும் நியமிக்கப்பட்ட சபை துணைக் குழுக்களின் மேற்பார்வை.

**இடர் அளவீடு**

- வரம்பிற்குட்பட்ட இடர் மதிப்பு மற்றும் ஒரு அடிப்படைப் புள்ளியின் விலை மதிப்பு (PVBP)
- கால அளவு மற்றும் மறுவிலை நிர்ணய இடைவெளி பகுப்பாய்வு
- உணர்திறன் மற்றும் அழுத்தச் சோதனை மாதிரிகள் தற்போதைய விளைவுகள் / தாக்கங்கள்

**மேற்றிக்ஸ்**

- மொத்த வர்த்தகப் புத்தக ஆபத்து வாய்ப்பு
- நிகர திறந்த அந்நிய நாணய நிலைப்பாடு

**வியாபார மாதிரி தொடர்பான தாக்கம்**

வட்டி விகிதம் மற்றும் அந்நியச் செலாவணி ஆகியவற்றில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள், திறைசேரி வருவாய், வர்த்தகச் செயல்பாடு மற்றும் சொத்து மதிப்புகள் ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இது, மேம்படுத்தப்பட்ட பகுப்பாய்வு மற்றும் சுறுசுறுப்பான இருப்புநிலை முகாமை ஆகியவற்றின் அவசியத்தை மேலும் வலியுறுத்துகிறது.

**குவிப்பு உணர்திறன்**

ஏற்றுமதி/இறக்குமதி சந்தைகள், கருவூலச் செயல்பாடுகள், அந்நியச் செலாவணி (குழ) பிரிவுகள், அரசுப் பத்திரங்கள் மற்றும் வர்த்தகப் புத்தக ஆபத்து வாய்ப்புகள் ஆகியவற்றிலிருந்து அதிகப்படியான உணர்திறன் ஏற்படுகிறது் குறிப்பாகச் சந்தை அழுத்தத்திற்குள்ளாகும் காலங்களில் இது மிக முக்கியத்துவம் பெறுகிறது.

**பெறுமதி உருவாக்க இணைப்பு**

பாதிக்கப்பட்ட பங்காளர்கள் இணை பிரதான தலைப்புக்கள்

உரிய மூலதனங்கள்

தொடர்புடைய **SDGs**

**முன்நோக்கிய பயணம்**

- **சந்தை பகுப்பாய்வு** (Market analytics): மேம்படுத்தப்பட்ட கணினி சார்ந்த பகுப்பாய்வு மூலம், வட்டி விகிதம் மற்றும் அந்நியச் செலாவணி (FX) இடர் மாதிரியாக்கத்தை (risk modelling) வலுப்படுத்துதல்.
- சந்தை மாறிகளின் ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப, இடர் ஏற்புத் திறனில்) தொடர்ச்சியான மாற்றங்களைச் செய்தல்.
- அரசுப் பத்திரங்களின் “இடர்-வருவாய் சமநிலையை” உகந்ததாக்குவதற்கான இடர் முகாமை உத்திகள்.

## சந்தை இடர் செயலாற்றுகை

| முக்கிய இடர் குறிகாட்டி | உண்மை நிலை (31.12.2025) | உண்மை நிலை (31.12.2024) |
|---|---|---|
| நிகர வட்டி வருமானம் (ரூபா மில்லியன்) | 206,936 | 167,552 |
| நிகர வட்டி எல்லை (%) | 3.9 | 3.6 |
| அடிப்படை புள்ளியின் படி விலைப் பெறுமதி- திறைசேரி முறிகள் | 717,562 | 629,067 |

### PVBP திறைசேரி முறி

LKR million




### சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் முதிர்வுப் பகுப்பாய்வு - டிசம்பர் 2025

%




### சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் உணர்திறன் பகுப்பாய்வு - டிசம்பர் 2025

%



# இடர்கள் மற்றும் நிலைத்தன்மை வளர்ச்சி

## 4 செயற்பாட்டு இடர்

### இடர் வரையறை

செயற்பாட்டு இடர் (ழிநசயவழையெட சளைம) என்பது போதிய அளவில்லாத அல்லது தோல்வியுற்ற உள்நாட்டுச் செயற்முறைகள், மனிதவளம், மற்றும் முறைமைகள் அல்லது வெளிப்புற நிகழ்வுகளால் ஏற்படக்கூடிய நிதி இழப்பின் இடரை உள்ளடக்கியதாகும். இது சட்ட ரீதியான இடரை உள்ளடக்குவதுடன், உத்திசார் இடர் மற்றும் நற்பெயர் இடர் ஆகியவற்றைத் திட்டவட்டமாக விலக்குகிறது.

### இடர் கூறுகள்

- **உள்முறை மோசடி:** ஏமாற்றுதல், சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்துதல் அல்லது விதிமுறைகள் மற்றும் உள்முகக் கட்டுப்பாடுகளை மீறுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட செயற்களால் ஏற்படும் இழப்புகள்.
- **வெளிப்புற மோசடி:** இணைய வழி மோசடிகள் உட்பட, மூன்றாம் தரப்பினரின் ஏமாற்றுச் செயற்களால் ஏற்படும் இழப்புகள்.
- **வேலைவாய்ப்பு நடைமுறைகள் மற்றும் பணியிடப் பாதுகாப்பு:** வேலைவாய்ப்பு நடைமுறைகள், பாகுபாடு, பணியிடப் பாதுகாப்பு மற்றும் ஊழியர் உறவுகள் சார்ந்த இடர்கள்.
- **வாடிக்கையாளர்கள், தயாரிப்புகள் மற்றும் வணிக நடைமுறைகள்:** வாடிக்கையாளர்களுக்கான தொழில்முறை கடமைகளை நிறைவேற்றுவதில் ஏற்படும் தவறுகள் அல்லது தயாரிப்பு வடிவமைப்பு மற்றும் விநியோகத்தில் ஒழுங்குமுறைத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறுதல்.
- **பௌதிகச் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதம்:** இயற்கை பேரிடர்கள், பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்துதல் (எயனெயடளைஅ) அல்லது பிற பௌதிக நிகழ்வுகளால் ஏற்படும் இழப்புகள்.
- **வணிக முடக்கம் மற்றும் அமைப்புக் குறைபாடுகள்:** செயற்பாடுகளைப் பாதிக்கக்கூடிய தொழில்நுட்பத் தோல்விகள், இணையச் சம்பவங்கள் அல்லது உள்கட்டமைப்பு முடக்கங்கள்.
- **நிறைவேற்றம், விநியோகம் மற்றும் செயற்முறை முகாமை:** பரிவர்த்தனை செயலாக்கம், தரவு முகாமை அல்லது செயற்பாட்டு நிறைவேற்றத்தில் ஏற்படும் பிழைகள்.

### செயற்பாட்டு இடர் முகாமைக் கட்டமைப்பு

மனிதவளம், செயற்முறைகள் மற்றும் முறைமைகளின் உள்முகக் குறைபாடுகள் அல்லது வெளிப்புற நிகழ்வுகளால் ஏற்படக்கூடிய இடர்களைக் கண்டறிந்து, மதிப்பிட்டு, கண்காணித்து, மற்றும் தணிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு கட்டமைக்கப்பட்ட முறைமையின் மூலம் வங்கியானது செயற்பாட்டு இடரை நிர்வகிக்கிறது.

### கட்டமைப்பு இடர் முகாமை

- இடர் மற்றும் கட்டுப்பாட்டு சுய-மதிப்பீடுகள் (RCSAs).
- வரையறுக்கப்பட்ட செயற்பாட்டு இடர்க் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்.
- நிகழ்வு அறிக்கைமற்றும் மேல்முறையீட்டு/ அடுத்த கட்டத்திற்கு நகர்த்தும் நெறிமுறைகள்

### தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடுகள்

- முக்கிய இடர் குறிகாட்டிகள்- (KRI) கண்காணிப்பு.
- இழப்பு நிகழ்வு கண்காணிப்பு (Loss event tracking) மற்றும் மூலக் காரண பகுப்பாய்வு.
- செயற்பாட்டு இடர் முகாமைக் குழு (ORMEC) மற்றும் வாரியத் துணைக் குழுக்களின் மேற்பார்வை.

### இடர் அளவீடு

- இழப்பு நிகழ்வு தரவு பகுப்பாய்வு
- முக்கிய இடர் குறிகாட்டி (KRI) வரம்புகள் மற்றும் மீறல்களைக் கண்காணித்தல் (breach monitoring)
- சூழ்நிலை பகுப்பாய்வு மற்றும் அழுத்த மதிப்பீடுகள் தற்போதைய விளைவுகள் / தாக்கங்கள்

### மேற்றிக்ஸ்

- செயற்பாட்டு இழப்பு விகிதம்
- மொத்த செயற்பாட்டு இழப்புகள்

### வியாபார மதிரி மீதான தாக்கம்

**நடைமுறை விளைவுகள்**

செயற்பாட்டுத் திறனின்மைகள் மற்றும் இணையவழி அச்சுறுத்தல்கள் செலவுகளை அதிகரிக்கலாம், சேவை விநியோகத்தைப் பாதிக்கலாம், மேலும் வாடிக்கையாளர்களின் நம்பிக்கை மற்றும் உற்பத்தித் திறனைக் குறைக்கக்கூடும்.

**குவிப்பு உணர்திறன்**

கிளைச் செயற்பாடுகள், முக்கிய தகவல் தொழில்நுட்ப அமைப்புகள் , பணத் தீர்வுகள் மற்றும் வாடிக்கையாளர் சேவைப் பிரிவுகள் ஆகியவற்றில் அதிகப்படியான உணர்திறன் ஏற்படுகிறது இப்பிரிவுகளில் ஏற்படும் செயற்முறைத் தோல்விகள் அல்லது இணையச் சம்பவங்கள், சேவையின் தொடர்ச்சியையும் நிறுவனத்தின் நற்பெயரையும் நேரடியாகப் பாதிக்கக்கூடும்.

### பெறுமதி உருவாக்க இணைப்பு

பாதிக்கப்பட்ட பங்காளர்கள்

இணை பிரதான தலைப்புக்கள்




உரிய மூலதனங்கள்

தொடர்புடைய SDGs

### முன்னோக்கிய பயணம்

- **செயற்முறை தன்னியக்கம்ஃ தானியங்கிமயமாக்கல்:** கைமுறைப் பிழைகளைக் குறைக்கவும் செயற்பாட்டுத் திறனை அபிவிருத்தி செய்யவும் டிஜிட்டல் மயமாக்கலை விரைவுபடுத்துதல்.
- **செயற்முறை மறு-வடிவமைப்பு :** செலவுக் கட்டமைப்புகளை உகந்ததாக்கவும் சேவைத் தரத்தை அபிவிருத்தி செய்யவும் பணிப்பாய்வுகளைச் சீரமைத்தல்.
- **திறமை மேம்பாடு :** சிக்கலான செயற்பாடுகள் மற்றும் உருவாகி வரும் புதிய இடர் சூழல்களை நிர்வகிப்பதற்கான ஊழியர்களின் திறன்களை வலுப்படுத்துதல்.
- **சைபர் பாதுகாப்புத் தலைமை:** வாடிக்கையாளர் நம்பிக்கை மற்றும் போட்டித் நன்மையை ஈர்க்கும் ஒரு காரணியாக, வலுவான சைபர் பின்னடைவுத் திறன் மற்றும் செயற்பாட்டுக் கட்டுப்பாடுகளை நிலைநிறுத்துதல்.

## தொழிற்பாட்டு இடர் செயலாற்றுகை

| முக்கிய இடர் குறிகாட்டி | உண்மை நிலை (31.12.2025) | உண்மை நிலை (31.12.2024) |
|---|---|---|
| அபாயத் தாங்குதிறனின் சதவீதமாக செயற்பாட்டு இழப்பு | 38.0 | 8.0 |

2025 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு இழப்புகள் அங்கீகரிக்கப்பட்ட அபாயத் தாங்குதிறனுக்குள் சிறப்பாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன ரூபா 1,337.0 மில்லியன் என்ற சகிப்புத்தன்மை வரம்புடன் ஒப்பிடுகையில் ஒட்டுமொத்த இழப்பு ரூ 508.0 மில்லியனாக மட்டுமே இருந்தது.

### இடர் நாட்டத்திற்கு எதிர் உண்மையான இழப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள்

ரூ. மில்லியன்




### இழப்பு நிகழ்வு வகைகளின் விநியோகம் 2025

%



# இடர்கள் மற்றும் நிலைத்தன்மை வளர்ச்சி

## ஏனைய இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள்

வங்கியின் முதன்மை இடர் வகைகளுடன் மேலதிகமாக, நிறுவனம் தழுவிய இடர் முகாமைக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக, பலதரப்பட்ட பிற இடர்களும் வாய்ப்புகளும் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. இந்த இடர்கள் வங்கியின் நீண்டகால பின்னடைவுத் திறன், நற்பெயர் மற்றும் பெறுமதி உருவாக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய உத்திசார்ந்த, மனிதவளம், ஒழுங்குமுறை, நடத்தை, நிலைத்தன்மை, தொழில்நுட்பம் மற்றும் மூன்றாம் தரப்பு சார்ந்த அம்சங்களைப் பிரதிபலிக்கின்றன. இவை ஒவ்வொன்றும் வங்கியின் இடர் ஏற்புத் திறன் மற்றும் நிர்வாகக் கட்டமைப்புகளுக்கு ஏற்ப மதிப்பிடப்படுவதுடன், வங்கியின் செயற்பாடு, தகவமைப்புத் திறன் மற்றும் நிலையான வளர்ச்சியை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகளும் கண்டறியப்படுகின்றன.

**05** உபாய இடர் **06** மக்கள் இடர் **07** தகவல் பாதுகாப்பு த.தொ. இடர் **08** ஒழுங்குமுறைத்துகை இணக்க இடர் **09** நடத்தை இடர்

**10** சட்ட இடர் **11** ஈடுபாட்டு இடர் **12** நிலைபெறுதகு தொடர்புடைய இடர் **13** காலிநிலை தொடர்புடைய இடர் **14** மூன்றாம் நபர் இடர்

**15** மோசடி இடர்

### 05 உபாய இடர்

**இடர் வரைவிலக்கணம்**

உபாயம்சார் இடர் என்பது வங்கியின் எதிர்கால வணிகத் திட்டங்களில் உள்ள குறைபாடுகள், போதுமானதாக இல்லாத அல்லது பயனற்ற உபாயங்கள் அல்லது செயற்பாட்டுச் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு சரியான முறையில் பதிலளிக்கத் தவறுதல் ஆகியவற்றால் ஏற்படக்கூடிய சாத்தியமான இழப்புகளின் அபாயத்தைக் குறிக்கிறது.

**இடர் கூறுகள்**

- மேக்ரோ பொருளாதாரம் (பேரியல் பொருளாதாரம்) மற்றும் கொள்கை நிச்சயமற்ற தன்மை.
- போட்டி அழுத்தங்கள் மற்றும் சந்தை முடக்கம்.
- உத்தி, இடர் ஏற்புத் திறன் மற்றும் மூலதனத் திறன் ஆகியவற்றுக்கு இடையே உள்ள முரண்பாடுகள் (சீரற்ற தன்மை).

**அளவீடுகள்**

- **உபாய இடர் சுட்டி**

**இடர் தணிப்பு நடவடிக்கைகள்**

- கார்ப்பரேட் மேலாண்மை மற்றும் நிர்வாக மேலாண்மையின் தீவிர பங்களிப்புடன், வாரியத்தின் தலைமையிலான உத்திசார் திட்டமிடல் மற்றும் மறுஆய்வு செயல்முறையின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது.
- செயல்பாட்டுச் சூழலில் ஏற்படும் மாற்றங்கள், ஒழுங்குமுறை மேம்பாடுகள், மூலதனக் கட்டுப்பாடுகள் மற்றும் பங்குதாரர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு உத்திசார் முன்னுரிமைகள் உருவாக்கப்படுகின்றன.
- உத்திசார் முன்முயற்சிகள், துல்லியமாக வரையறுக்கப்பட்ட அளவிடக்கூடிய இலக்குகள் மற்றும் காலவரம்புக்குட்பட்ட மைல்கற்கள் மூலம் ஆதரிக்கப்படுகின்றன.
- வரையறுக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்புகள் மற்றும் தெளிவான பொறுப்புக்கூறல் கட்டமைப்புகளால் ஆதரிக்கப்படுகிறது.
- கட்டமைக்கப்பட்ட மதிப்பெண் அட்டைகள் (scorecards) மற்றும் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (KPIs) மூலம் தொடர்ச்சியான செயல்திறன் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது.
- உத்திசார் முன்முயற்சிகளை வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட இடர் ஏற்புத் திறன் கட்டமைப்பு மற்றும் நீண்டகால மூலதன இலக்குகளுடன் சீரமைத்தல்.

**பெறுமதி உருவாக்க இணைப்பு**

பாதிக்கப்பட்ட பங்காளர்கள்

இணை பிரதான தலைப்புக்கள்: M1, M2, M6, M8, M10

உரிய மூலதனங்கள்

தொடர்புடைய SDGs

**முன்னோக்கிய பயணம்**

- **புதிய வணிக மாதிரிகள்:** இலங்கையில் டிஜிட்டல் வங்கிச் சேவை, மொபைல் கட்டணங்கள் அல்லது நுண்நிதிச் சேவைக்கு மாறுதல்.
- **சந்தை இடைவெளிகளைக் கண்டறிதல்** (Market gap identification): பூர்த்தி செய்யப்படாத வாடிக்கையாளர் தேவைகளின் அடிப்படையில் பிரத்யேக சந்தைத் தயாரிப்புகளை (niche products) அறிமுகப்படுத்துதல்.
- **கூட்டாண்மைகள் மற்றும் கூட்டணிகள்** (Partnerships and alliances): சந்தை நிலையை வலுப்படுத்த ஃபின்தெக்) மற்றும் பெருநிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல்.
- **வளர்ந்து வரும் புதிய சந்தைப் பிரிவுகளைக் கவர்தல்** (Capture emerging market segments): சிறு மற்றும் நடுத்தர தொழில்கள், டிஜிட்டல் நுகர்வோர் மற்றும் பசுமைத் துறைகள்

## உபாய இடர் செயலாற்றுகை

| முக்கிய இடர் குறிகாட்டி | ஒழுங்குறுத்துகை / கொள்கை அளவீடுகள் | உண்மை நிலை (31.12.2025) | உண்மை நிலை (31.12.2024) |
|---|---|---|---|
| படிநிலை 1 மூலதன விகிதம் (%) | ≥ 10.0% | 12.4 | 13.0 |
| படிநிலை 1 மொத்த மூலதன விகிதம் (%) | ≥ 15.0% | 16.9 | 16.6 |
| படிநிலை 1 மூலதன விகிதம் (%) பொது பங்காண்மை படிநிலை 1 விகிதம் 1 (%) | ≥ 8.5% | 11.4 | 12.0 |
| ஒப்புரவுத் திரும்பல் (ROE) (%) | - | 22.7 | 23.2 |

### 06 மக்கள் இடர்

**இடர் வரைவிலக்கணம்**

போதிய அளவில்லாத திறமை முகாமை, திறமை இடைவெளிகள், பலவீனமான வாரிசுத் திட்டமிடல், அல்லது ஒரு வலுவான நெறிமுறை மற்றும் இடர் விழிப்புணர்வு கலாச்சாரத்தைப் பேணத் தவறுதல் ஆகியவற்றால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளின் அபாயம்

**இடர் கூறுகள் (Risk Components)**

- மேக்ரோ பொருளாதாரம் (பேரினப் பொருளாதாரம்) மற்றும் கொள்கை நிச்சயமற்ற தன்மை
- போட்டி அழுத்தங்கள் மற்றும் சந்தை முடக்கம்
- உத்தி, இடர் ஏற்புத் திறன் மற்றும் மூலதனத் திறன் ஆகியவற்றுக்கு இடையே உள்ள முரண்பாடுகள் / சீரற்ற தன்மை

**அளவீடு**

- பதவியணி வரலு விகிதம்

**இடர் தணிப்பு நடவழக்கைகள்**

- கட்டமைக்கப்பட்ட திறமை மேம்பாட்டுத் திட்டங்கள்
- வாரிசுத் திட்மிடல் கட்டமைப்புகள்
- செயல்திறன் மேலாண்மை அமைப்புகள்
- ஈடுபாடு மற்றும் கலாசார மேம்பாட்டு முன்முழஓ்சிகள்

**பெறுமதி உருவாக்க இணைப்பு**

பாதிக்கப்பட்ட பங்காளர்கள்

இணைப்பு பிரதான தலைப்புக்கள்

M3 M4 M5

தொடர்பு மூலதனம்

தொடர்புடைய ஌னுபுள

**முன்னோக்கிய பயணம்**

- திறமை முடுக்கம் (வுயடநவெ யஉஉநடநசயவழைெ): டிஜிட்டல் மற்றும் இடர் முகாமைத் திறன்களை வலுப்படுத்துதல்.
- தலைமைத்துவ ஒழுங்கு ∴ வாரிசு வரிசை: உள்முக வாரிசுத் திட்டமிடல் பலத்தை உருவாக்குதல்.
- கலாச்சார மேம்பாடு: இடர் விழிப்புணர்வு மற்றும் நெறிமுறை சார்ந்த நடத்தையை வலுப்படுத்துதல்.
- ஊழியர் ஈடுபாட்டுக் கருவிகள்): ஊழியர் தக்கவைப்பு மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல்.

# இடர்கள் மற்றும் நிலைத்தன்மை வளர்ச்சி

## 07 தகவல் பாதுகாப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப இடர்

**இடர் வரைவிலக்கணம்**

தகவல் பாதுகாப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப இடர் என்பது, போதுமானதாக இல்லாத அல்லது தோல்வியுற்ற தகவல் அமைப்புகள், இணையப் பாதுகாப்பு கட்டுப்பாடுகள், தரவுப் பாதுகாப்பு வழிமுறைகள் அல்லது தொழில்நுட்ப உள்கட்டமைப்பு ஆகியவற்றால் ஏற்படும் இழப்பு இடரைக் குறிக்கிறது. இதில் வெளிப்புற இணைய அச்சுறுத்தல்கள் மற்றும் மூன்றாம் தரப்பு தொழில்நுட்ப வழங்குநர்களிடமிருந்து உருவாகும் இடர்களும் அடங்கும்.

**இடர் கூறுகள்**

- இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் டிஜிட்டல் மோசடி
- கணினி அமைப்பு செயலிழப்பு மற்றும் உள்கட்டமைப்புத் தோல்வி
- தரவு தனியுரிமை மற்றும் இரகசியத்தன்மை மீறல்கள்
- மூன்றாம் தரப்பு தொழில்நுட்ப பாதிப்புகள்

**இடர் தணிப்பு நடவடிக்கைகள்**

- வலுப்படுத்தப்பட்ட இணையப் பாதுகாப்பு கட்டமைப்புகள் மற்றும் கண்காணிப்புக் கருவிகள்
- பிணையப் பாதுகாப்பு மேம்பாடுகள் மற்றும் அணுகல் கட்டுப்பாடுகள்
- வழக்கமான பாதிப்பு மதிப்பீடுகள் மற்றும் ஊடுருவல் சோதனை
- தகவல் தொழில்நுட்ப ஆளுகை மேற்பார்வை மற்றும் சம்பவ பதிலளிப்பு நெறிமுறைகள்

**இடர் அளவீடு**

- கணினி அமைப்பு கிடைக்கும் தன்மை மற்றும் செயலிழப்பு நேர அளவீடுகள்
- இணையச் சம்பவங்களின் நிகழ்வெண் மற்றும் தீவிரம்
- பாதிப்புகளைச் சரிசெய்வதற்கான காலக்கெடு
- தணிக்கை மற்றும் கட்டுப்பாட்டு மதிப்பீட்டு முடிவுகள்

**அளவீடுகள்**

- கணினி அமைப்பு இயங்கும் நேரம்
- இணையப் பாதுகாப்புச் சம்பவங்களின் எண்ணிக்கை

**வணிக மாதிரியின் மீதான தாக்கம்**

**தற்போதைய விளைவுகள்**

இணையச் சம்பவங்கள் அல்லது கணினி அமைப்புத் தோல்விகள் செயல்பாடுகளைச் சீர்குலைக்கலாம்,

வாடிக்கையாளர் நம்பிக்கையைப் பாதிக்கலாம், மற்றும் ஒழுங்குமுறை ஆய்வை அதிகரிக்கலாம்..

**செறிவு உணர்திறன்**

இணையச் சம்பவங்கள் அல்லது கணினி அமைப்புத் தோல்விகள் செயல்பாடுகளைச் சீர்குலைக்கலாம்,

வாடிக்கையாளர் நம்பிக்கையைப் பாதிக்கலாம், மற்றும் ஒழுங்குமுறை ஆய்வை அதிகரிக்கலாம்.

**பெறுமதி உருவாக்க இணைப்பு**

பாதிக்கப்பட்ட பங்காளர்கள்

இணை பிரதான தலைப்புக்கள்: M2, M3, M4

உரிய மூலதனங்கள்

தொடர்புடைய SDGs

**முன்னோக்கிய வழி**

**இணையப் பாதுகாப்பு மீள்திறன் தலைமைத்துவம்:**

- ஒரு பாதுகாப்பான டிஜிட்டல் வங்கிச் சேவை வழங்குநராக நிலைநிறுத்துதல்.

**டிஜிட்டல் உருமாற்றம்:**

- அமைப்பின் செயல்திறன் மற்றும் விரிவாக்கத்தன்மையை மேம்படுத்துதல்.

**மேம்பட்ட பகுப்பாய்வு:**

- கண்காணிப்பு மற்றும் முன்கூட்டியே அச்சுறுத்தலைக் கண்டறிவதை வலுப்படுத்துதல்.

## 08 ஒழுங்குமுறை மற்றும் இணக்க இடர்

**இடர் வரைவிலக்கணம்**

ஒழுங்குமுறை மற்றும் இணக்க இடர் என்பது, வங்கிச் செயல்பாடுகளை நிர்வகிக்கும் பொருந்தக்கூடிய சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் தொழில் தரநிலைகளுக்கு இணங்கத் தவறுவதால் எழும் இடரைக் குறிக்கிறது.

**இடர் கூறுகள்**

- பணமோசடி தடுப்பு/பயங்கரவாத நிதி தடுப்பு (AML/CFT) இணக்கமின்மை
- அறிக்கை மற்றும் வெளிப்படுத்தல் குறைபாடுகள்
- ஒழுங்குமுறை மாற்றங்கள் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள்
- நுகர்வோர் பாதுகாப்பு மீறல்கள்

**இடர் தணிப்பு நடவடிக்கைகள்**

- பிரத்யேக இணக்கப் பிரிவு மேற்பார்வை
- தொடர்ச்சியான ஒழுங்குமுறை கண்காணிப்பு மற்றும் அறிக்கை கட்டமைப்புகள்
- இணக்கப் பயிற்சி மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்கள்
- உள்ளகத் தணிக்கைகள் மற்றும் இணக்க மதிப்பீடுகள்

**அளவீடுகள்**

- ஒழுங்குமுறை இடர் குறியீடு
- இணக்க இடர் குறியீடு

**பெறுமதி உருவாக்க இணைப்பு**

பாதிக்கப்பட்ட பங்காளர்கள்

இணை பிரதான தலைப்புக்கள: M4

உரிய மூலதனங்கள்

தொடர்புடைய SDGs

**முன்னோக்கிய பயணம்**

- **ஒழுங்குமுறை தொழில்நுட்பத்தை (RegTech) ஏற்றுக்கொள்வது**
  துல்லியத்தையும் செயல்திறனையும் மேம்படுத்த, ஒழுங்குமுறை அறிக்கையிடல் மற்றும் கண்காணிப்பைத் தானியக்கமாக்குதல்
- **ஒழுங்குமுறை தயார்நிலை**
  நம்பகத்தன்மையை வலுப்படுத்த, புதிய விவேகமான மற்றும் பணமோச தடுப்பு/பயங்கரவாத நிதி தடுப்பு (AML/CFT) விதிமுறைகளுக்கு விரைவாகத் தகவமைத்துக் கொள்ளுதல்
- **இணக்க ஆலோசனைத் திறன்**
  ஒழுங்குமுறை மற்றும் ஆளுகை வழிகாட்டுதலுடன் வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளித்தல்
- **ஆளுகையில் வேறுபாடு**
  நிறுவன நம்பிக்கையின் அடித்தளமாக வலுவான இணக்கக் கலாச்சாரத்தை நிலைநிறுத்துதல்

## 09 நடத்தை இடர்

**இடர் வரையறை**

நெறிமுறையற்ற நடத்தை, முறைகேடு, அல்லது வாடிக்கையாளர்களின் நலன்களுக்கு உகந்த வகையில் செயல்படத் தவறுதல் ஆகியவற்றால் ஏற்படும் நிதி அல்லது நற்பெயர் இழப்புக்கான இடர்.

**ஆபத்துக் கூறுகள்**

- விற்பனை முறைகேடு மற்றும் தவறான விற்பனை
- நலன் முரண்பாடுகள்
- போதுமான வெளிப்படுத்தல் நடைமுறைகள் இல்லாமை
- வாடிக்கையாளர் புகார்கள் மற்றும் குறைகள்

**இடரை தணிக்கும் நடவடிக்கைகள்**

- நடத்தை விதிகள் மற்றும் நெறிமுறைக் கொள்கைகள்
- பணியாளர் பயிற்சி மற்றும் சான்றிதழ் திட்டங்கள்
- வாடிக்கையாளர் புகார் கையாளும் வழிமுறைகள்
- முறைகேடுகளை வெளிப்படுத்தும் கட்டமைப்புகள்

**அளவீடுகள்**

- தவறான விற்பனை இல்லாமை

**பெறுமதி உருவாக்க இணைப்பு**

பாதிக்கப்பட்ட பங்காளர்கள்

இணை பிரதான தலைப்புக்கள்

உரிய மூலதனங்கள்

தொடர்புடைய SDGs

**முன்னோக்கிய பார்வை**

- **நெறிமுறைகள் மற்றும் கலாச்சாரத் திட்டங்கள்**
அனைத்து வணிகப் பிரிவுகளிலும் ஆபத்து குறித்த விழிப்புணர்வு மற்றும் வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட கலாச்சாரத்தை வலுப்படுத்துதல்
- **பயிற்சி மற்றும் சான்றிதழ்**
பொறுப்பான விற்பனை மற்றும் வாடிக்கையாளர் தொடர்பில் பணியாளர்களின் திறனை மேம்படுத்துதல்
- **வாடிக்கையாளர் நம்பிக்கையை நிலைநிறுத்துதல்**
வெளிப்படையான மற்றும் நியாயமான வாடிக்கையாளர் நடைமுறைகள் மூலம் வங்கியை வேறுபடுத்திக் காட்டுதல்
- **தகவல் தெரிவிப்பு மற்றும் ஆளுகை மேம்பாடுகள்**
உள்ளக பொறுப்புக்கூறல் மற்றும் சிக்கல்களை முன்கூட்டியே கண்டறியும் வழிமுறைகளை வலுப்படுத்துதல்

## 10 சட்டரீதியான இடர்

**இடர் வரையறை**

வழக்குகள், ஒப்பந்தச் சர்ச்சைகள் அல்லது விளக்கத்தில் உள்ள நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றால் ஏற்படும் நிதி இழப்புக்கான ஆபத்து அல்லது சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் அமலாக்கத்தன்மை.

**இடர் கூறுகள்**

- வழக்குகள் மற்றும் கோரிக்கைகள்
- ஒப்பந்த ஆவணக் குறைபாடுகள்
- ஒழுங்குமுறை சட்ட சவால்கள்
- அதிகார வரம்பு அபாயங்கள்

**இடர் தணிப்பு நடவடிக்கைகள்**

- தயாரிப்புகள் மற்றும் ஒப்பந்தங்களின் சட்ட ஆய்வு
- தொடர்ச்சியான சட்ட ஆலோசனை மற்றும் இணக்கக் கண்காணிப்பு
- வலுவான ஆவணப்படுத்தல் மற்றும் ஆளுகைக் கட்டுப்பாடுகள்

**அளவீடுகள்**

- ஆண்டுக்கு வணிகம் தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கை
- ஆண்டுக்கு வணிகம் சாராத வழக்குகளின் எண்ணிக்கை

**பெறுமதி உருவாக்க இணைப்பு**

பாதிக்கப்பட்ட பங்காளர்கள்

இணை பிரதான தலைப்புக்கள்

உரிய மூலதனங்கள்

தொடர்புடைய SDGs

**முன்னோக்கிய பயணம்**

- **சட்ட இடர் ஒருங்கிணைப்பு**
தயாரிப்பு மேம்பாடு மற்றும் ஒப்பந்த வடிவமைப்பின் ஆரம்பத்திலேயே சட்ட ஆய்வை உட்பொதித்தல்
- **ஒப்பந்த உகப்பாக்கம்**
வழக்கு அபாயத்தைக் குறைக்க ஆவணப்படுத்தல் தரங்களை வலுப்படுத்துதல்
- **வடிவமைப்பிலேயே இணக்கம்**
தொடக்கத்திலிருந்தே மாறிவரும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுடன் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை சீரமைத்தல்
- **ஆலோசனைத் திறன்**
சிக்கலான பரிவர்த்தனைகள் மற்றும் அதிகார வரம்புகளை ஆதரிக்க நிறுவனத்தின் உள்ளக சட்ட நிபுணத்துவத்தை மேம்படுத்துதல்

# இடர்கள் மற்றும் நிலைத்தன்மை வளர்ச்சி

## 11 நற்பெயர் சார்ந்த இடர்

**இடர் வரையறை**

எதிர்மறையான பொதுக் கருத்து, பங்குதாரர் அதிருப்தி, அல்லது பாதகமான ஊடகச் செய்திகள் ஆகியவற்றால் நம்பிக்கை மற்றும் சந்தை நம்பிக்கையைப் பாதிக்கும் இழப்பு இடர்.

**இடர் கூறுகள்**

- நுளுபு ஒழுங்குமுறை மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்
- கார்பன்-செறிவுள்ள துறைகளுடன் தொடர்புடைய மாற்றத்தின் தாக்கங்கள்
- சமூகத் தாக்கம் மற்றும் பங்குதாரர் எதிர்பார்ப்புகள்
- நுளுபு தரவு கிடைக்கும் தன்மை மற்றும் அறிக்கையிடல் தரம்

**இடரைக் குறைக்கும் நடவடிக்கைகள்**

- வெளிப்படையான தகவல் தொடர்பு கட்டமைப்புகள்
- வாடிக்கையாளர் ஈடுபாட்டு வழிமுறைகள்

**அளவீடுகள்**

- நற்பெயர் இடர் சுட்டி

**பெறுமதி உருவாக்க இணைப்பு**

பாதிக்கப்பட்ட பங்காளர்கள்

இணை பிரதான தலைப்புக்கள்

M1 M3 M4 M6

உரிய மூலதனங்கள்

தொடர்புடைய SDGs

**முன்னோக்கிய பயணம்**

- பிராண்ட் வேறுபாடு:

நெறிமுறை சார்ந்த வங்கி நடைமுறைகள் மூலம் நற்பெயரை வலுப்படுத்துதல்.

- முன்முயற்சியான தகவல் தொடர்பு:

பங்குதாரர்களின் நம்பிக்கையை வலுப்படுத்த, நெருக்கடியான நிகழ்வுகளின் போது வெளிப்படைத்தன்மையைப் பேணுதல்.

- வாடிக்கையாளர் ஈடுபாட்டுத் திட்டங்கள்:

சிறந்த சேவை மற்றும் டிஜிட்டல் ஈடுபாடு மூலம் விசுவாசத்தை உருவாக்குதல்.

- சிந்தனைத் தலைமை:

நிதி எழுத்தறிவு, அனைவரையும் உள்ளடக்குதல், மற்றும் புதுமை ஆகியவற்றில் வங்கியை ஒரு நம்பகமான குரலாக நிலைநிறுத்துதல்.

## 12 நிலைத்தன்மை தொடர்பான இடர்

**இடர் வரையறை**

வங்கியின் நிதிச் செயல்திறன், சொத்துத் தரம், நிதி அணுகல் மற்றும் பங்குதாரர் நம்பிக்கை ஆகியவற்றைப் பாதிக்கக்கூடிய சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) காரணிகளால் எழும் இடர்.

**இடர் கூறுகள்**

- ESG ஒழுங்குமுறை மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்
- கார்பன்-செறிவுள்ள துறைகளுடன் தொடர்புடைய மாற்றத்தின் தாக்கங்கள்
- சமூகத் தாக்கம் மற்றும் பங்குதாரர் எதிர்பார்ப்புகள்
- ESG தரவு கிடைக்கும் தன்மை மற்றும் அறிக்கையிடல் தரம்

**தணிப்பு நடவடிக்கைகள்**

- நிலைத்தன்மை முயற்சிகளுக்கு பிரத்யேக நிதியைக் கண்டறிந்து ஒதுக்குதல்
- நிலையான தயாரிப்புகளை வடிவமைத்து உருவாக்குதல்
- ESG முக்கியத்துவ மதிப்பீட்டை நடத்துதல்
- வணிக மாதிரியின் மீதான தாக்கம்
- தற்போதைய விளைவுகள்
- நிறுவனத்திற்குள்ளேயே ESG தொடர்பான தரவு சேகரிப்பு வழிமுறையை உருவாக்குதல்

**இடர் அளவீடு**

- கடன் மதிப்பீடு மற்றும் இடர் கட்டமைப்புகளில் நுளுபு பரிசீலனைகளை ஒருங்கிணைத்தல்
- நிலையான நிதிக் கொள்கைகள்
- ESG ஆளுகை மற்றும் செயல்திறன் மீதான வாரியம் மற்றும் நிர்வாகத்தின் மேற்பார்வை
- நிலைத்தன்மை தொடர்பான வெளிப்பாடுகள் மற்றும் வளர்ந்து வரும் இடர்களைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல்

**தற்போதைய விளைவுகள்**

**தற்போதைய விளைவுகள்**

அதிகரித்து வரும் நுளுபு எதிர்பார்ப்புகள் கடன் வழங்கும் உத்தி, நிதி அணுகல் மற்றும் பிராண்ட் நிலைப்படுத்தல் ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன, இதனால் தொடர்ச்சியான செயல்திட்ட ஒருங்கிணைப்பு மற்றும் தயாரிப்பு மேம்பாடு.

**ஒருங்கிணைப்பு உணர்திறன்**

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் பசுமை உள்கட்டமைப்பு வெளிப்பாடுகள், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SMEs), மற்றும் நுளுபு-சார்ந்த நிதி ஆதாரங்கள் ஆகியவற்றில் அதிக உணர்திறன்.

**அளவீடுகள்**

- நிலையான நிதித் தொகுப்பு

**பெறுமதி உருவாக்க இணைப்பு**

பாதிக்கப்பட்ட பங்காளர்கள்

இணை பிரதான தலைப்புக்கள்

M4 M6 M9 M10

உரிய மூலதனங்கள்

தொடர்புடைய SDGs

**முன்னோக்கிச் செல்லும் வழி**

- **பசுமை நிதியளிப்பு**

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் நீடித்த சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான கடன் தீர்வுகளை விரிவுபடுத்துதல்

- **ESG ஆலோசனை சேவைகள்**

வாடிக்கையாளர்களின் மாற்றம் மற்றும் நுளுபு தயார்நிலைக்கு ஆதரவளித்தல்

- **சர்வதேச ESG நிதியளிப்பு**

நீடித்த நிலைத்தன்மை சார்ந்த நிதியளிப்பு மற்றும் கூட்டாண்மைகளை ஈர்த்தல்

- **நீடித்த நிலைத்தன்மைக்கான நிதிக் கருவிகள்**

பொறுப்பான நிலைப்பாட்டை வலுப்படுத்த பசுமை/ நீடித்த நிலைத்தன்மைப் பத்திரங்களை வெளியிடுதல் அல்லது அவற்றில் பங்கேற்றல்

## 13 காலநிலை தொடர்பான இடர்

### காலநிலை தொடர்பான இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள்

#### 1 பௌதீக இடர்கள்

**தீவிரமான**

**(நிகழ்வு சார்ந்த பருவநிலை ஆபத்துகள்)**

வெள்ளம், வறட்சி மற்றும் நிலச்சரிவு போன்ற தீவிர வானிலை நிகழ்வுகள், இவை செயல்பாடுகளை சீர்குலைக்கலாம், சொத்துக்களை சேதப்படுத்தலாம் மற்றும் நிதி இழப்புகளை ஏற்படுத்தலாம்.

**நீடித்த/ நாள்பட்ட**

**(பருவநிலை வடிவங்களில் ஏற்படும் நீண்டகால மாற்றங்கள்)**

கடன் வாங்குபவர்களின் வணிகங்கள் மற்றும் வாழ்வாதாரங்களில் பருவநிலை தாக்கங்கள் ஏற்படுத்துவதால் உருவாகும் அதிகரித்த கடன் ஆபத்து இது கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறுதல், பணப்புழக்கம், சந்தை மற்றும் செயல்பாட்டு அபாயங்களுக்கு வழிவகுக்கலாம். இதனால், வங்கி தனது சொத்துக்கள், மூலதனம் மற்றும் அன்றாட செயல்பாடுகளின் மீதான தாக்கங்களை நிர்வகிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.”

#### 2 மாற்றீட்டு இடல்

**கொள்கைஃ சட்டம் மற்றும் தொழில்நுட்பம்**

ஆற்றல் திறன் மிக்க அமைப்புகளில் முதலீடு செய்தல் மற்றும் பசுமை கட்டிட மேம்பாடுகள் உட்பட, குறைந்த கார்பன் பொருளாதாரத்திற்கு மாறுவதுடன் தொடர்புடைய அதிகப்படியான செலவினங்கள்”

**சந்தை மற்றும் நற்பெயர்**

அதிக உமிழ்வு கொண்ட துறைகளில் இருந்து மாறுவதால் ஏற்படும் குறைந்த லாபம் அல்லது நற்பெயர் அபாயங்கள் மற்றும் மாறிவரும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுக்கு இணங்கத் தவறுவதால் ஏற்படும் குறைந்த லாபம் அல்லது நற்பெயர் அபாயங்கள்.

**வழிசெலுத்தல் வழிகாட்டி**

**காலநிலை தொடர்பான சாத்தியமான தாக்கங்களின் விளக்க எடுத்துக்காட்டுகள், இந்த அறிக்கையின் 85-106 பக்கங்களில் உள்ள SLFRS S2 வெளிப்படுத்தல்களில் வழங்கப்பட்டுள்ளன.**

## 14 மூன்றாம் தரப்பு இடர்

**இடர் வரைவிலக்கணம்**

வெளிவாரி விற்பனையாளர்கள்), சேவை வழங்குநர்கள் மற்றும் வெளிப்பணி ஒப்பந்தங்களைச் சார்ந்து இருப்பதன் மூலம் ஏற்படும் நிதி அல்லது செயல்பாட்டுத் தாக்கத்தின் அபாயம்

**அபாயக் கூறுகள்/ இடர்க் கூறுகள்**

- விற்பனையாளர் செயல்திறன் அபாயம்
- வெளிப்பணி சீர்குலைவு தரவுப் பாதுகாப்பு பாதிப்புகள் / பலவீனங்கள்
- சேவை மட்ட இணக்கத் தோல்விகள்
- சேவை-நிலை இணக்கத் தோல்விகள்

**இடர் குறைக்கும் நடவடிக்கைகள்**

- விற்பனையாளர் உரிய விடாமுயற்சி மற்றும் உள்வாங்கல் கட்டுப்பாடுகள்
- தொடர்ச்சியான செயல்திறன் கண்காணிப்பு மற்றும் சேவை மட்ட ஒப்பந்த கண்காணிப்பு
- மூன்றாம் தரப்பு அபாய மதிப்பீடுகள்

**பெறுமதி உருவாக்க இணைப்பு**

பாதிக்கப்பட்ட பங்காளர்கள்

இணை பிரதான தலைப்புக்கள்

M2 M4 M8 M9

உரிய மூலதனங்கள்

தொடர்புடைய SDGs

**முன்னோக்கிய பயணம்**

- **செயல்திறன் கண்காணிப்பு**
  சேவை நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்காக, மூன்றாம் தரப்பு மேற்பார்வையை வலுப்படுத்துதல்
- **மூலோபாய வெளிப்பணி / அவுட்சோர்சிங்**
  அளவிடுதல் மற்றும் செலவு நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக, சிறப்புத் நிபுணத்துவம் வாய்ந்த சேவை வழங்குநர்களைப் பயன்படுத்துதல்
- **தொழில்நுட்ப கூட்டாண்மைகள்**
  அபாய வெளிப்பாடுகளை நிர்வகிக்கும் அதே வேளையில், கண்டுபிடிப்புகளை விரைவுபடுத்துவதற்காக ∴பின்டெக் (கவைெநஉா) நிறுவனங்களுடன் சாத்தியமான கூட்டணிகளை ஏற்படுத்துதல்

# இடர்கள் மற்றும் நிலைத்தன்மை வளர்ச்சி

## 15 மோசடி இடர்

**இடர் வரைவிலக்கணம்**

உபாயம்சார் இடர் என்பது வங்கியின் எதிர்கால வணிகத் திட்டங்களில் உள்ள குறைபாடுகள், போதுமானதாக இல்லாத அல்லது பயனற்ற உபாயங்கள் அல்லது செயற்பாட்டுச் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு சரியான முறையில் பதிலளிக்கத் தவறுதல் ஆகியவற்றால் ஏற்படக்கூடிய சாத்தியமான இழப்புகளின் அபாயத்தைக் குறிக்கிறது.

**இடர் கூறுகள்**

- மேக்ரோ பொருளாதாரம் (பேரியல் பொருளாதாரம்) மற்றும் கொள்கை நிச்சயமற்ற தன்மை.
- போட்டி அழுத்தங்கள் மற்றும் சந்தை முடக்கம்.
- உத்தி, இடர் ஏற்புத் திறன் மற்றும் மூலதனத் திறன் ஆகியவற்றுக்கு இடையே உள்ள முரண்பாடுகள் (சீரற்ற தன்மை).

**இடர் தணிப்பு நடவடிக்கைகள**

- மோசடி கண்காணிப்பு மற்றும் கண்டறிதல் அமைப்புகளைச் செயல்படுத்துதல்
- பணிகளைப் பிரித்தல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்புகள்
- டிஜிட்டல் மற்றும் அட்டைத் தளங்கள் முழுவதும் பரிவர்த்தனைக் கண்காணிப்பு
- பணியாளர் விழிப்புணர்வுத் திட்டங்கள் மற்றும் மோசடித் தடுப்புப் பயிற்சி
- சம்பவ அறிக்கையிடல் மற்றும் மேல்நிலைப்படுத்தல் நெறிமுறையை வலுப்படுத்துதல்

**பெறுமதி உருவாக்க இணைப்பு**

பாதிக்கப்பட்ட பங்காளர்கள்

இணை பிரதான தலைப்புக்கள

உரிய மூலதனங்கள்

தொடர்புடைய SDGs

**முன்னோக்கிய பயணம்**

- மேம்பட்ட மோசடிப் பகுப்பாய்வு
- செயற்கை நுண்ணறிவு சார்ந்த கண்டறிதல் மற்றும் முன்கணிப்புக் கண்காணிப்புக் கருவிகளைப் பயன்படுத்துதல்
- டிஜிட்டல் கட்டுப்பாட்டு மேம்பாடுகள்
- அங்கீகாரம் மற்றும் பரிவர்த்தனைக் கண்காணிப்புக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்
- வாடிக்கையாளர் விழிப்புணர்வு முயற்சிகள்
- நம்பிக்கையை வலுப்படுத்த மோசடித் தடுப்புக் கல்வியை ஊக்குவித்தல்

# நிதியியல் அறிக்கைகள்

## முன்னணிச் செயல்திறன்

தெளிவான மூலோபாய நோக்கும், நாட்டின் மீதான ஆழமான பொறுப்புணர்வும் வழிகாட்டியாக, வங்கி அனைத்து நிதியியல் அளவுகோள்களிலும் சிறப்பான செயல்திறனை வெளிப்படுத்தியுள்ளது. தொடர்ச்சியான வளர்ச்சி, வலுவான சொத்து தரம் மற்றும் பங்குதாரர்கள் மற்றும் சமூகங்களுக்கு நிலையான பெறுமதி உருவாக்கம் ஆகியவற்றின் மூலம் இந்த முன்னேற்றம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

*ரூபிக்ஸ் கனசதுரத்திற்கு 43 குவிண்டிலியன் சேர்க்கைகள் உள்ளன. எதிர்காலமும் அதேபோல் எண்ணற்ற வாய்ப்புகளை கொண்டுள்ளது. இதில் முக்கியமானது நிதானமான அணுகுமுறை, தெளிவான தொலைநோக்கு பார்வை மற்றும் சவால்களை தாண்டி தொடர்ந்து முன்னேறும் மனஉறுதி ஆகும்.*

# இலங்கை வங்கியின் அலுவல்களின் நிலைமையிலான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

## 1. அறிமுகம்

இலங்கை வங்கியின் பணிப்பாளர்கள் சபையானது வங்கியின் அலுவல்களிலான அறிக்கையுடன், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இல வங்கியியல் சட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய திருத்தங்கள் 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இல இலங்கை வங்கி கட்டளைச் சட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கி,வங்கியின் மற்றும் குழுமத்தின் 2025 டிசம்பர் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதியியல் அறிக்கைகள் மற்றும் அந்த நிதியியல் அறிக்கைகள் குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையினையும் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது. கொழும்பு பங்குச் சந்தை பட்டியல்படுத்தல் விதிகளால் வகுக்கப்பட்ட சில வெளிப்பாடுகளும், இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட உரிமம் பெற்ற வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளுகை குறித்து 2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இல வங்கிச் சட்ட நியமங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய திருத்தங்கள் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பணிப்பாளர்கள் 24 பெப்ரவரி 2026 அன்று நிதியியல் அறிக்கைகளை மீளாய்வு செய்து ஒப்புதல் அளித்தனர்.

இலங்கை வங்கியானது 1988 இன் 30ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதனிலான திருத்தங்களின் கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கியாவதுடன், 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் கீழ் 1 ஆகஸ்ட் 1939 இல் முறையாக ஒருங்கிணைக்கப்பட்டது. வங்கியானது இலங்கை அரசாங்கத்தினால் முழுவதும் உரித்துடைமையானதாகும். வங்கியினால் வழங்கப்பட்ட பிணைசாரா இரண்டாந்தர மீட்கத்தகு தொகுதிக்கடன்கள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ளன

## 2. வணிகத்தின் மீளாய்வு

### 2.1. வங்கியின் பிரதான நடவடிக்கைகள்

இவ்வாண்டின்போதான வங்கியின் பிரதான நடவடிக்கைகள், தனிப்பட்ட வங்கியியல், கூட்டாண்மை வங்கியியல், அபிவிருத்தி வங்கியியல், கரைகடந்த வங்கியியல், வர்த்தக நிதியளித்தல், குத்தகை நிதியளித்தல், முதன்மை வர்த்தகம், முதலீட்டு வங்கியியல் மற்றும் திறைசேரி செயற்பாடுகள் மற்றும் சர்வதேச வங்கியியல் மற்றும் பணவனுப்பல்கள், இஸ்லாமிய வங்கியியல், வங்கிக்காப்புறுதியியல், அடமானம், கடன் அட்டை வசதிகள், வெளிநாட்டு வங்கிச் செயற்பாடுகளின் முகாமை மற்றும் ஏனைய நிதிச் சேவைகள் என்பனவாகும்.

### 2.2. துணை நிறுவனங்களும் இணை நிறுவனங்களும்

துணைநிறுவனங்கள் மற்றும் இணைநிறுவனங்களின் பிரதான நடவடிக்கைகள் பக்கம் 246 இல் காணப்படும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளன. மீளாய்வாண்டின்போது, வங்கியின் மற்றும் குழுமத்தின் பிரதான நடவடிக்கைகளின் தன்மையில், கணக்கீட்டு கொள்கைகளின் கீழ் குறிப்பிட்டுள்ள மாற்றங்களைத் தவிர, எவ்விதமான குறிப்பிடத்தக்க மாற்றங்களும் காணப்படவில்லை. பிஓசி மேனேஜ்மென்ட் அண்ட் சப்போர்ட் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட், பிஓசி ஐடி சொல்யூஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் என்ற பெயர் மாற்றம் பெற்றது.

### 2.3. குழுமக் கட்டமைப்பில் மாற்றங்கள்

ஆண்டுக்காலப்பகுதியில் குழுமக் கட்டமைப்பில் எந்த வித மாற்றமும் ஏற்படவில்லை. நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இல. 31 மற்றும் 32 இன் கீழ் ஆண்டறிக்கையில் 306 முதல் 314 வரையிலான பக்கங்களில் குழுமத்தினை பற்றிய விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2025 ஆம் ஆண்டில், பிஓசி மேனேஜ்மென்ட் அண்ட் சப்போர்ட் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட் அதன் பெயரை பிஓசி ஐடி சொல்யூஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் என்று மாற்றியது, மேலும் வங்கி ரூபா. 25 மில்லியனை பிஓசி ஐடி சொல்யூஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு மூலதன உட்செலுத்தியுள்ளது.

### 2.4. தொலைநோக்கு, பணிநோக்கு மற்றும் கூட்டாண்மை பெறுமதிசேர் கூற்று

வங்கியின் தொலைநோக்கு, பணிநோக்கு மற்றும் விழுமியக் கூற்றானது இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 8இல் வழங்கப்பட்டுள்ளது. வங்கியானது "தொலைநோக்கு", "பணிநோக்கு" மற்றும் கூட்டாண்மை பெறுமதிசேர் கூற்று" ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை தொடரும்வேளை அதன் நடவடிக்கைகளில் உயர் நெறிமுறையான நியமங்களை பராமரிக்கின்றது.

### 2.5. ஆண்டின் செயற்திறனிலான மீளாய்வு

பக்கங்கள் 22 முதல் 25 வரை காணப்படும் தலைவரின் செய்தியானது இவ்வாண்டிற்கான வங்கி/ குழுமத்தின் மற்றும் இலங்கையின் பொருளாதாரத்தின் செயற்திறனையும் குறிப்பிடுகின்றது. பக்கங்கள் 26 முதல் 31 வரை காணப்படும் பொது முகாமையாளரின் மீளாய்வானது மீளாய்வாண்டின் போதான வங்கியின் செயற்பாடுகளது விளக்கமான விபரங்களை வழங்குகின்றது. பக்கங்கள் 108 முதல் 114 வரை காணப்படும் "நிதியியல் மீளாய்வு" எனத் தலைப்பிட்ட பகுதியானது வங்கியின் வணிகச் செயற்பாடுகளது விபரமான பகுப்பாய்வினை வழங்குகின்றது. வங்கியின் அலுவல்களில் ஒரு நியாயமான மீளாய்வினை வழங்கும் இந்த அறிக்கைகள் ஆண்டறிக்கையின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

### 2.6. வாடிக்கையாளர் தொடுமுனைகளின் விரிவாக்கம்

டிஜிட்டல் பயன்பாட்டினை மேம்படுத்துவதில் வங்கியானது இவ்வாண்டின்போது நாடு பூராவும் அதன் வலையமைப்பினை 29 CRM களினால் விரிவாக்கி மொத்த வாடிக்கையாளர் நேரடியான தொடர்பு புள்ளிகளை 2,413 ஆக கொண்டு வந்தது. இந்த எண்ணிக்கையானது இலங்கை வங்கியின் வாடிக்கையாளர்கள் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடிய சக வங்கிகளின் ATM களை மற்றும் பாடசாலை "சன்சத" மற்றும் மொபைல் சேமிப்பு அலகுகளை உள்ளடக்குவதில்லை.

2025ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கியின் கிளை வலையமைப்பில் ஒரு கிளை சேர்க்கப்பட்டுள்ளது.

### 2.7. கூட்டாண்மை நன்கொடைகள்

தித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட சமூகங்களை ஆதரிப்பதற்கும் உள்கட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் இலங்கை அரசாங்கத்தின் "இலங்கையை மறுசீரமைத்தல்" நிதிக்கு ரூபா. 500.0 மில்லியன் உட்பட இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சமூக மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக வங்கி ரூபா. 780.5 மில்லியனை நன்கொடையாக வழங்கியுள்ளது. (2024-ரூபா.215.2 மில்லியன்)

### 2.8. நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

அலுவல்கள் நிலைமையில் ஒரு மெய்யான மற்றும் நியாயமான கருத்தினை பிரதிபலிக்கும் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு பணிப்பாளர்கள் பொறுப்பாளியாவார்கள். இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள், 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகள் ஆகியவற்றின் தேவைப்பாடுகளுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளன என்பது பணிப்பாளர்களின் கருத்தாகும். துணை நிறுவனங்களைப் பொறுத்தளவில், நிதிக் கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 229 இல் வழங்கப்பட்டுள்ள “நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களது பொறுப்புக்கள்” கூற்றானது இந்த பணிப்பாளர்களின் அறிக்கையின் ஒரு ஒருங்கிணைந்த பாகமாயுள்ளது.

### 2.9. கணக்காய்வாளரது அறிக்கை

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கை வங்கியின் கணக்காய்வாளராக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் இருக்கின்றார்.

31 டிசம்பர் 2025 இல் உள்ளவாறான வங்கி மற்றும் அதன் துணைநிறுவனங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களிலான கணக்காய்வாளரது அறிக்கை இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 230 முதல் 234 வரை வழங்கப்பட்டுள்ளன.

### 2.10. கணக்கீட்டுக் கொள்கைகள்

குழுமமும் வங்கியும் அவற்றின் நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKASs) மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் (SLFRSs) இன் பிரகாரம் தயாரித்துள்ளன

நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பக்கங்கள் 246 முதல் 261 வரை வழங்கப்பட்டுள்ளன.

### 3. திட்டமிடப்பட்ட அபிவிருத்திகள்

வங்கியினால் எதிர்காலத்திற்காக திட்டமிடப்பட்ட அபிவிருத்திகளின் கண்ணோட்டம் இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 22 முதல் 25 வரை காணப்படும் தலைவரது செய்தியிலும் மற்றும் பக்கம் 26 முதல் 31 வரை காணப்படும் பொது முகாமையாளரது மீளாய்விலும் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளன.

### 4. மொத்த வருமானம்

2025 ஆம் ஆண்டிற்கான குழுமத்தின் மொத்த வருமானம் முன்னைய ஆண்டின் ரூபா 494,921.9 மில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 558,674.6 மில்லியனாக காணப்பட்டது. வங்கியின் மொத்த வருமானமானது குழுமத்தின் மொத்த வருமானத்தின் 98% இனை (2024 - 98%) கணக்கீடு செய்தது. குழுமத்தின் பிரதான வருமானம் வட்டி வருமானமாகும் என்பதுடன் இது மொத்த வருமானத்தின் 90% (2024 - 95%) இனை உள்ளடக்குகின்றது.

### 5. பங்கிலாபங்கள் மற்றும்ஒதுக்கங்கள்

### 5.1. இலாபமும் ஒதுக்கீடுகளும்

2025ஆம் ஆண்டில் ரூ.120,826.9 மில்லியன் வரிக்கு முன்னைய லாபத்தை வங்கி பதிவு செய்துள்ளது. இது முந்தைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ.106,904.3 மில்லியனுடன் ஒப்பிடும் போது 13% இகுறிப்பிடத்தக்க அதிகரிப்பினை பிரதிபலிக்கிறது.வருமான வரி ரூ.44,820.0 மில்லியன் (2024- ரூ. 42,517.3 மில்லியன்) கட்டணத்திற்குப் பிறகு,வங்கி 2025 ஆம் ஆண்டில் ரூ.76,006.9. மில்லியனாக வரிக்கு பிந்திய லாபத்தை (PAT) பதிவு செய்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டில் ரூ.64,386.9 மில்லியன் வரிக்கு பிந்திய லாபத்துடன் ஒப்பிடும் போது 18% அதிகரிப்பாகும். ரூ.45,462.5 மில்லியன் வருமான வரி (2024 ரூ.43,159.9 மில்லியன்) கட்டணத்திற்குப் பிறகு, குழுமத்தின்

வங்கி மற்றும் குழுமத்தின் இலாபம் தொடர்பான விபரங்கள் கீழ்காணும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன:

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 2025<br>ரூ. மில்லியன் | 2024<br>ரூ. மில்லியன் | 2025<br>ரூ. மில்லியன் | 2024<br>ரூ. மில்லியன் |
| வருடத்திற்கான அனைத்து செலவினங்களின் கொடுப்பனவு, கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்கள், எதிர்பாராதவை ஆகியவற்றிலான பெறுமானத்தேய்வு, பெறுமானக்குறைப்பு, வலுக்குன்றல் ஏற்பாடுகளின் பின்னர் ஆனால் வரிக்கு முந்திய இலாபம் | 152,708.3 | 135,299.6 | 154,067.6 | 136,925.2 |
| நிதிச் சேவைகளிலான வரிகள் | (31,881.4) | (28,395.3) | (32,290.0) | (28,790.1) |
| இணை நிறுவனங்களின் வரி கழித்த இலாபம்/(நட்டங்களின்) பங்கு | - | - | 156.2 | 86.4 |
| வருமான வரிக்கு முன்னரான இலாபம் | 120,826.9 | 106,904.3 | 121,933.8 | 108,221.5 |
| வருமான வரி (செலவு)/ மாற்றுப்பதிவு | (44,820.0) | (42,517.3) | (45,462.5) | (43,159.9) |
| ஆண்டிற்கான இலாபம் | 76,006.9 | 64,386.9 | 76,471.3 | 65,061.5 |
| ஆண்டிற்கான வரி கழித்த ஏனைய விரிவான வருமானம் | (7,766.5) | (12,058.5) | (5,934.7) | (13,704.2) |
| ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம் | 68,240.4 | 52,328.4 | 70,536.6 | 51,357.3 |
| **ஒதுக்கங்கள்** | | | | |
| நிரந்தர ஒதுக்க நிதியத்திற்கான மாற்றல்கள் | (1,521.0) | (1,288.0) | (1,521.0) | (1,288.0) |
| பங்கிலாபங்கள் | (5,000.0) | - | (5,000.0) | - |

# இலங்கை வங்கியின் அலுவல்களின் நிலைமையிலான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

ஆண்டிற்கான வரிக்கு வரிக்கு பிந்திய லாபம் 2025 ஆம்ஆண்டில் ரூ. 76,471.3 மில்லியன் ஆகும். (2024- ரூ.65,061.5 மில்லியன்)

### 5.2. பங்கிலாபங்கள்

வங்கியானது, தனது ஒரே பங்குதாரரான இலங்கை அரசாங்கத்திற்கு, வரிக்குப் பிந்தைய இலாபங்கள், கடன் இழப்புகளுக்கான ஒதுக்கீடு மற்றும் காப்பு நிதிகளுக்கான அத்தகைய பகுதி ஆகியவற்றின் அடிப்படையில், அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து வகுக்கப்பட்ட வங்கியின் ஈவுத்தொகைக் கொள்கையின்படி விவேக அடிப்படையில் பங்கிலாபங்கள் வழங்குகிறது. அதன்படி, 2025 ஆம் ஆண்டிற்கான பங்கிலாபமாக ரூபா. 5,000.0 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. (2024 - ஏதுமில்லை)

### 5.3. ஒதுக்கங்கள்

31 டிசம்பர் 2025 இல் உள்ளவாறான குழுமத்தின் மொத்த ஒதுக்கங்கள் ரூபா 361,174.4 மில்லியன் ஆகும் (2024 - ரூபா 295,566.3 மில்லியன்). குழுமத்தின் ஒதுக்கங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

| | குழுமம் | |
|---|---|---|
| டிசம்பர் 31 இல் உள்ளவாறானது | 2025<br>ரூபா மில்லியன் | 2024<br>ரூபா மில்லியன் |
| நிரந்தர ஒதுக்க நிதியம் | 18,474.0 | 16,953.0 |
| காசுப் பாய்ச்சல் எல்லை ஒதுக்கம் | 738.2 | 1,521.4 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 34,037.1 | 33,584.7 |
| சுயாதீன ஒதுக்கம் | 366.7 | 366.7 |
| செலாவணி மாற்றல் ஒதுக்கம் | 11,396.3 | 9,958.6 |
| ஏ.வி.வ.நி.பெ. ஒதுக்கம் | 9,459.2 | 7,328.6 |
| சட்டரீதியான ஒதுக்கம் | 392.3 | 394.6 |
| விசேட ஒதுக்கம் | 79,261.7 | 39,922.1 |
| நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள் | 207,048.9 | 185,536.6 |
| மொத்தம் | 361,174.4 | 295,566.3 |

### 6. ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

இவ்வாண்டின்போது ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் அருவச் சொத்துக்களின் சேர்க்கையில் குழுமத்தினால் ஆட்பட்ட மொத்த மூலதனச் செலவினம் ரூபா 5,505.9 மில்லியன் ஆகும் (2024 - ரூபா 5,870.2 மில்லியன்). இது பற்றிய விபரங்கள் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 316 முதல் 330 வரை மற்றும் 333 முதல் 334 வரை காணப்படும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 34 மற்றும் 36 இல் வழங்கப்பட்டுள்ளன.

### 7. இறையிலி ஆதனங்களின் பெறுமதி

31 டிசம்பர் 2025 இல் உள்ளவாறான குழுமத்தினால் உரித்தாக்கப்பட்ட இறையிலி ஆதனங்களின் பெறுமதியான ரூபா 39,765.50 மில்லியன் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 34 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது (2024 - ரூபா 39,562.3 மில்லியன்).

### 8. கூறப்பட்ட மூலதனமும் பங்குரித்துவமும்

### 8.1. கூறப்பட்ட மூலதனம்

31 டிசம்பர் 2025 இல் உள்ளவாறான வங்கியின் வழங்கப்பட்ட மற்றும் முழுவதும் செலுத்தப்பட்ட மொத்த மூலதனம் ரூபா 25,730 மில்லியன் ஆகும் (2024 - ரூபா 25,000 மில்லியன்). ஆண்டில், மூலதன ஒதுக்கீட்டு நிலுவை கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்த ‘ரூபா. 730.0 மில்லியன், இது தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டவுடன், செலுத்தப்பட்ட மூலதனத்திற்கு மாற்றப்பட்டது.

### 8.2. பங்குதாரர்

இலங்கை அரசாங்கமே வங்கியின் ஒரே பங்குதாரராகும்.

### 9.வழங்கப்பட்ட தொகுதிகடன்கள்/ முறிகள்

இந்த ஆண்டில், வங்கி வெற்றிகரமாக ‘ரூபா. 35,000.0 மில்லியன் அடுக்கு 2 மூலதனத்தைத் திரட்டியது, (2024 - ரூபா. 15,000.0 மில்லியன்) இது ரூபா 15,000.0 மில்லியன் மதிப்புள்ள பாசல் III இணக்கமான, பட்டியலிடப்பட்ட, தரப்படுத்தப்பட்ட, காப்பளிக்கப்படாத ,இரண்டாந்தர தொகுதிகடன்கள் மற்றும் ரூபா. 20,000.0 மில்லியன் மதிப்புள்ள நிலைத்தன்மை முறிகளை வெளியிடுவதன் மூலம் செய்யப்பட்டது. இது, சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பொறுப்புள்ள நிதி முயற்சிகளை ஆதரிப்பதில் வங்கியின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது.

நிதிநிலை அறிக்கை தேதியின்படி நிலுவையில் உள்ள தொகுதிகடன்கள் விவரங்கள், நிதிநிலை அறிக்கைகளின் 352 முதல் 355 வரையிலான பக்கங்களில் உள்ள குறிப்பு 49- இல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 10. பங்கு தகவல்கள்

மீளாய்வாண்டிற்கான குழுமத்தின் பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பும் பங்கொன்றிற்கான தேறிய சொத்தின் பெறுமதியும் முறையே ரூபா 3,010.60 (2024 - ரூபா 2,600.31) மற்றும் ரூபா 15,037.09 (2024 - ரூபா 12,851.85) ஆகும்.

### 11. சமூக மேம்பாட்டு செயல்பாடுகள்

சமூக மேம்பாட்டு நடவடிக்கைகள் முதலீடுகள் ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் பக்கம் 153 முதல் 160 வரையிலான “நிலைத் தன்மையான எதிர்காலத்தை கட்டியெழுப்புதல்” என்ற தலைப்பில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன

### 12. பணிப்பாளர்கள்

2025ஆம் ஆண்டின்போது பதவியிலிருந்த மற்றும் இந்த ஆண்டறிக்கை கையொப்பமிட்ட திகதியில் பதவியிலுள்ள பணிப்பாளர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. வங்கியின் பணிப்பாளர்கள் வங்கியில் எவ்விதமான நிறைவேற்று பதவிகளையும் வகிப்பதில்லை. இவர்கள் பரந்த அளவிலான திறன்கள் மற்றும் அனுபவங்களை வங்கிக்கு கொண்டுவருகின்றார்கள். பணிப்பாளர்களின் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 34 முதல் 39 வரை வழங்கப்பட்டுள்ளன. ஆண்டறிக்கை கையொப்பமிடப்பட்ட திகதியில் பதவியிலிருந்த பணிப்பாளர்களின் எண்ணிக்கை பதினொன்று (11). 2025 ஆம் ஆண்டின்போது சபையானது பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியிருந்தது:

## 12.1. பணிப்பாளர்களின் பட்டியல்

**திரு.காவிந்த டி சொய்சா,**
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்/ தலைவர்
(04 நவம்பர் 2024 முதல் நியமனம்)

**கலாநிதி. கபில சேனாநாயக்க**
சுயாதீனமற்ற, நிறைவேற்று அதிகாரமற்ற பதவிவழி பணிப்பாளர்
(14 நவம்பர் 2024 முதல் நியமனம்)

**திரு. ஆர் எம் பி ரத்நாயக்க**
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் (29 ஏப்ரல் 2023 முதல் பதவிவழி பணிப்பாளராக நியமிக்கப்பட்டு, 06 நவம்பர் 2024 முதல் பதவிவழி பணிப்பாளர் பதவியிலிருந்து விலகி, 20 டிசம்பர் 2024 முதல் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக மீண்டும் நியமிக்கப்பட்டார்)

**திரு. ஜெஹான் இஸ்மாயில்**
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(07 பெப்ரவரி 2024 முதல் நியமனம்)

**கலாநிதி. அமல் இல்லேசிங்க**
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(06 டிசம்பர் 2024 முதல் நியமனம்)

**திரு. தர்ஷன குணசேகர**
சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(13 ஆகஸ்ட் 2025 முதல் நியமனம்)

**திரு. துல்சி அலுவிஹாரே**
சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(16 செப்டம்பர் 2025 முதல் நியமனம்)

**அம்மணி. ஷர்மினி ரத்வத்தே**
சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(16 செப்டம்பர் 2025 முதல் நியமனம்)

**திரு. தர்ஷன் ஜயரத்ன**
சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(நியமனம் 26 செப்டம்பர் 2025 முதல் சபைக்கு நியமனம்)

**திரு சுனிமல் வீரசூரிய**
சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(07 அக்டோபர் முதல் நியமனம்)

**பொறியியலாளர். பேராசிரியர். ஆனந்த ஜயவர்தன**
சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(14 நவம்பர் 2025 முதல் நியமனம்)

**திரு ஜெயமின் பெல்பொல**
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(22 பெப்ரவரி 2024 முதல் நியமனம், 30 மே 2025 முதல் பதவி விலகல்)

### பணிப்பாளர்களின் சுயாதீன நிலை

தற்போதைய பணிப்பாளர் சபையின் படி, பின்வரும் பணிப்பாளர்கள், இலங்கை மத்திய வங்கியால் (CBSL) வெளியிடப்பட்ட உரிமம் பெற்ற வங்கிகளுக்கான வங்கிச் சட்டம் மற்றும் கூட்டாண்மை ஆளுகை வழிகாட்டுதல்களின் கீழ் சுயாதீனமற்றவர்களாகவும், கொழும்பு பங்குச் சந்தையின் (CSE) பட்டியலிடல் விதிகளின்படி சுயாதீனமானவர்களாகவும் கருதப்படுகிறார்கள்.

திரு. காவிந்த டி சொய்சா
திரு. ஜெஹான் இஸ்மாயில்
திரு. ஆர் எம் பி ரத்நாயக்க
கலாநிதி. அமல் இல்லேசிங்க

பின்வரும் இயக்குநர்கள், வங்கிச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் (CBSL) வெளியிடப்பட்ட உரிமம் பெற்ற வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளுகை மீதான வழிகாட்டுதல்கள் மற்றும் கொழும்பு பங்குச் சந்தையின் (CSE) பட்டியலிடல் விதிகள் ஆகியவற்றின் கீழ் சுயாதீனமானவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

திரு. தர்ஷன குணசேகர
திரு. தர்ஷன் ஜயரத்ன
திரு. துல்சி அலுவிஹாரே
திரு. சுனிமல் வீரசூரிய
அம்மணி. ஷர்மினி ரத்வத்தே
பொறியாளர். பேராசிரியர். ஆனந்த ஜயவர்தன
கலாநிதி.கபில சேனாநாயக்க ஓர் சுயாதீனமற்ற, நிறைவேற்று அதிகாரமற்ற பதவிவழி பணிப்பாளராகக் கருதப்படுகிறார்.

## 12.2. சபை உப செயற்குழுக்கள்

31 டிசம்பர் 2025 நிலவரப்படி வங்கியின் விவகாரங்கள் மீதான மேற்பார்வைக் கட்டுப்பாட்டை உறுதி செய்வதற்காக, சபை மேற்கூறிய 2024 ஆம் ஆண்டின் வங்கிச் சட்ட வழிகாட்டுதல் எண் 05 க்கு இணங்க ஆறு உப செயற்குழுக்களை அமைத்துள்ளது. சபை நிலைத்தன்மை செயற்குழு நிறுவப்பட்டது மற்றும்சபை கடன் செயற்குழு (BCC) மீண்டும் நிறுவப்பட்டது, இரண்டும் 01 ஜனவரி 2026 முதல் நடைமுறைக்கு வரும். துணை செயற்குழுவின் அமைப்பு, இந்த ஆண்டு அறிக்கையின் 180 முதல் 190 வரையிலான பக்கங்களில் உள்ள இலங்கை வங்கியின் ஆளுகை என்பதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

## 12.3 பணிப்பாளர்களது கூட்டங்கள்

சபை மற்றும் உபகுழுக்களது கூட்டங்களில் பணிப்பாளர்களது பிரசன்னமானது ஆண்டறிக்கையின் பக்கம் 173 இல் வழங்கப்பட்டுள்ளது.

## 12.4 ஒப்பந்தங்களிலான பணிப்பாளர்களது நாட்டம்

வங்கியுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களது நலன்கள், நேரடியான மற்றும் மறைமுகமானவை, பக்கம் 224,225இல் வழங்கப்பட்டுள்ளன. இந்த நலன்கள் பணிப்பாளர்கள் சபை கூட்டங்களில் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. அங்கு கொடுக்கப்பட்ட ஒப்பந்தங்களைத் தவிர, பணிப்பாளர்கள் வங்கியுடனான ஏனைய ஒப்பந்தங்களில் அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தங்களில் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலனைக் கொண்டிருக்கவில்லை. பணிப்பாளர்கள் பொருண்மை ரீதியாக அக்கறை கொண்ட விடயங்களில் வாக்களிப்பதை தவிர்க்கிறார்கள்.

## 12.5 வங்கியினால்/ குழுமத்தினால் வழங்கப்பட்ட தொகுதிக்கடன்களிலான பணிப்பாளர்களது நாட்டம்

எவ்விதமான தொகுதிக்கடன்களும் எந்த ஒரு பணிப்பாளர் பெயரிலும் பதிவு செய்யப்படவில்லை.

## 12.6 பணிப்பாளர்களது படிகள்/ கட்டணங்கள்

நிதி அமைச்சின் பொது நிறுவனங்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 17 ஜூன் 2015 திகதியிடப்பட்ட பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை இலக்கம் PED 3/2015 மற்றும் 27 ஜனவரி 2020 திகதியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் PED 01/2020 மற்றும் 1938 இன் 53 ஆம் இலக்க, திருத்தியமைக்கப்பட்ட இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள்/

# இலங்கை வங்கியின் அலுவல்களின் நிலைமையிலான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

உள்ளடக்கங்கள் ஆகியவற்றுக்கு அமைய பணிப்பாளர்கள் சபைக்கு செலுத்தவேண்டிய படிகள்/ கட்டணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 31 டிசம்பர் 2025 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான வங்கி மற்றும் குழுமம் தொடர்பான பணிப்பாளர்களின் வேதனம் பக்கம் 270 இல் காணப்படும் குறிப்பு 17 இல் வழங்கப்பட்டுள்ளது.

## 13. இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை

### 13.1. இடர் முகாமைத்துவம்

பணிப்பாளர்கள் சபையானது இடர்களை முகாமைப்படுத்துவதற்கான ஒட்டுமொத்த பொறுப்பினை பொறுப்பேற்கின்றார்கள். இடர்களைத் தணிப்பதற்காக வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட வழிமுறைகள் இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 191 முதல் 216 வரை விபரிக்கப்பட்டுள்ளது.

### 13.2. உள்ளகக் கட்டுப்பாடு

பணிப்பாளர்கள் சபையானது வங்கியில் ஒரு வினைத்திறனான மற்றும் விரிவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் அமுலாக்கத்தினை கணக்காய்வுக் செயற்குழுவினூடாக உறுதிப்படுத்துகின்றது.

கணக்காய்வுக் செயற்குழுவானது பணிப்பாளர்கள் சபை அவர்களது நம்பிக்கைக்குரிய பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு துணைபுரிகின்றது. கணக்காய்வுக் செயற்குழுவின் தலைவரது அறிக்கை இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 180 முதல் 181 வரை உள்ளடக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர்கள் மீளாய்வாண்டின்போது ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களது திகதி வரைக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் பயனுறுதித் தன்மையுடன் திருப்தியடைந்துள்ளார்கள்.

உரிமம் பெற்ற வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளுகை குறித்த வங்கிச் சட்ட வழிகாட்டுதல் எண் 05/2024-இன் வழிகாட்டுதல் எண் 9.2(டி)-இன் படி, வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு வழிமுறை குறித்து சபை ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. மேற்கண்ட அறிக்கை இந்த ஆண்டறிக்கையின் 226 மற்றும் 227 ஆம் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை குறித்து நியாயமான உத்தரவாதத்தை வழங்கும் வகையில் நிதி அறிக்கையிடல் அமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும், வெளிப்புற அறிக்கையிடல் நோக்கங்களுக்காக நிதிநிலை அறிக்கைகள் தயாரித்தல் என்பது தொடர்புடைய கணக்கியல் கோட்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்க செய்யப்பட்டுள்ளது என்றும் சபை உறுதிப்படுத்தியுள்ளது..

சபையானது உள்ளகக் கட்டுப்பாடுகளிலான பணிப்பாளர்களது கூற்றில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களிடமிருந்து ஒரு உறுதிமொழி அறிக்கையினை பெற்றுள்ளதுடன் இது இந்த ஆண்டறிக்கையில் பக்கம் 228 இல் வழங்கப்பட்டுள்ளது.

## 14. தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள்

பணிப்பாளர்களும் தமது கொடுக்கல் வாங்கல்கள் ஏதேனும் இருந்தால் தொடர்புடைய தரப்பினரின் இலங்கை கணக்கீட்டு நியமம் 24 நிபந்தனைகளுக்கு அமைய வகைப்படுத்தப்பட்ட தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் (தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்) நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது உள்வாங்கப்பட்டன.

தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள் மீளாய்வு செய்யும் செயற்குழு அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தொடர்புடைய விதிமுறைகளுக்கு இணங்க, நியாயமானதாகவும் வங்கியின் சிறந்த நலன்களுக்காகவும் இருப்பதையும் உறுதி செய்கிறது.

பணிப்பாளர்கள் பார்வையில் வங்கி அதன் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களில் விசேட சலுகைகள் வழங்கப்படவில்லை என்று கருதுகின்றனர்.

## 15. கூட்டாண்மை ஆளுகை

பணிப்பாளர் சபையானது, ஒரு செயல்திறன் மிக்க கூட்டாண்மை ஆளுகைக் கட்டமைப்பையும் செயல்முறையையும் பேணுவதில் உறுதியுடன் உள்ளது. வங்கியின் நிதி, செயல்பாட்டு மற்றும் இணக்கப் பணிகள், கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகளுக்குள் திறம்பட வழிநடத்தப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால், வங்கிச் சட்டம் 2024-ஆம் ஆண்டின் 05-ஆம் இலக்க வழிகாட்டுதல், கொழும்புப் பங்குச் சந்தையின் பட்டியலிடல் விதி 09 மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகை மீதான சிறந்த நடைமுறை நெறிமுறை ஆகியவற்றின் கீழ் வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகை வழிகாட்டுதல்களுக்கு இணக்கமான இந்த நடைமுறை கோவைகளும், இந்த ஆண்டறிக்கையின் 162 முதல் 179 வரையிலான பக்கங்களில் தோன்றும் “இலங்கை வங்கியின் ஆளுகை” என்ற தலைப்பிலான பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளன.

மேற்கூறிய 2024ஆம் ஆண்டின் வழிகாட்டல் இல 05 இன் விதிகளுக்கு இணங்குவது குறித்து, கணக்காளர் நாயகத்திடமிருந்து சபை ஒரு அறிக்கையைப் பெற்றுள்ளது.

## 16. மனித வளங்கள்

வங்கியின் மிகவும் மதிப்புமிக்க சொத்துக்களாக அதன் ஊழியர்கள் காணப்படுவதுடன் அவர்களை விருத்தி செய்வது வங்கிக்கு முக்கியமானதாகும். கூட்டாண்மை குறிக்கோள்களை அடைவது நோக்கிய அவர்களது பங்களிப்பினை உச்சப்படுத்துவதற்காக மிகவும் பெறுமதிவாய்ந்த மனித மூலதனத்தினை பலப்படுத்துவதற்காக பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. வங்கியின் மனித வள முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 138 முதல் 147 வரை காணப்படும் “நீடித்த செயல்திறனுக்கான அனைவரையும் உள்ளடக்கிய பணியாளர் குழு” என தலைப்பிட்ட பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளன

## 17. சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடு

பணிப்பாளர்கள் அவர்களது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவாறு, வங்கி குழுமம் சட்டங்கள் ஒழுங்குவிதிகளை மீறுகின்ற எவ்விதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என உறுதிப்படுத்துகின்றார்கள்.

சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான வங்கியின் இணக்கப்பாட்டின் விபரங்கள் பக்கங்கள் 405 முதல் 454 வரை காணப்படும் “இணக்கப்பாட்டு பின்னிணைப்புகள்” என தலைப்பிடப்பட்ட பகுதியின் கீழ் வழங்கப்பட்டுள்ளதுடன் இது இந்த

அறிக்கையின் ஒரு ஒருங்கிணைந்த பாகமாயுள்ளது. பொருந்தக்கூடிய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் குறித்து அறிந்து வைத்திருப்பதை உறுதி செய்கிறார்கள்.

## 18. நிலுவையிலுள்ள வழக்காடல்கள்

பணிப்பாளர்களது அபிப்பிராயத்தின் பிரகாரம் மற்றும் வங்கியின் வழக்கறிஞர்களினால் உறுதிசெய்யப்பட்டுள்ளவாறு, வங்கிக்கு எதிராக தற்போது நிலுவையிலுள்ள வழக்காடல்கள் அறிக்கையிடப்பட்ட நிதிக் கூற்றுக்களில் அல்லது வங்கியின் எதிர்கால செயற்பாடுகளில் ஒரு பொருண்மையான தாக்கத்தினைக் கொண்டிருக்காது.

## 19. சட்டரீதியான கொடுப்பனவுகள்

அரசாங்கத்திற்கு மற்றும் ஊழியர்கள் தொடர்பாக செலுத்தவேண்டிய அனைத்து சட்டரீதியான கொடுப்பனவுகளும் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சபை உறுதிசெய்கின்றது.

## 20. சுற்றுச்சூழல் பாதுகாப்பு

சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் எவ்விதமான நடவடிக்கையிலும் வங்கி ஈடுபடவில்லை. மேலும், சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கைச் செயற்பாடுகள் பக்கங்கள் 153 முதல் 160 வரை காணப்படும் “நிலைத்தன்மையான எதிர்காலத்தினை உருவாக்குதல்” என தலைப்பிடப்பட்ட பகுதியியல் வழங்கப்பட்டுள்ளன.

## 21. ஐந்தொகையின் பின்னரான நிகழ்வுகள்

நிதியாண்டின் இறுதிக்கும் இந்த அறிக்கையின் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் அவசியமான எவ்விதமான பொருண்மையான நிகழ்வுகளும் எழவில்லை என்ற அபிப்பிராயத்தினை பணிப்பாளர்கள் கொண்டுள்ளார்கள்.

## 22. தொடர்ந்து இயங்குதல்

வங்கியின் வளங்கள் அதன் செயற்பாடுகளை தொடர்வதற்கு போதுமானதென பணிப்பாளர்கள் நம்பிக்கையுடன் உள்ளார்கள். எனவே, நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் வங்கியானது தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவை பிரயோகித்துள்ளது.

**சபையின் கட்டளையின் பிரகாரம்,**



**ஜானகி சேனாநாயக்க சிறிவர்தன**

இலங்கை வங்கியின் செயலாளர்/ சபையின் செயலாளர்
24 பெப்ரவரி 2026
கொழும்பு

# ஒப்பந்தங்களிலான பணிப்பாளர்களது நாட்டம்

தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்" இற்கான இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 24 இன் தேவைப்பாட்டிற்கமைய தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் இந் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 61 இல் விபரிக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, வங்கியின் பணிப்பாளர் ஒருவர் பணிப்பாளராகவோ அல்லது பங்காளராகவோ இருக்கும் நிறுவனங்களுடன், சாதாரண வணிக நடவடிக்கைகளில் சுயாதீனமான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

| கம்பனி | உறவுமுறை | கொடுக்கல் வாங்கலின் தன்மை | எல்லை "000 | 31.12.2025 இல் உள்ளவாறான மீதி "000 | 31.12.2024 இல் உள்ளவாறான மீதி "000 |
|---|---|---|---|---|---|
| **ஒப்பந்தங்களிலான பணிப்பாளர்களது நாட்டம்** | | | | | |
| **திரு. காவிந்த டி சொய்சா (04 நவம்பர் 2024ம் திகதியிலிருந்து இலங்கை வங்கியின் தலைவராக நியமனம்)** | | | | | |
| ப்ரோபர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டெட் (12 நவம்பர் 2024 முதல் நியமனம்) | தலைவர்/ நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் | நடைமுறை கணக்குகள் | | 26,560 | 13,037 |
| | | தவணை வைப்புகள் | | 3,609,200 | 3,708,660 |
| | | மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | | 1,306,400 | 752,800 |
| இலங்கை வங்கி (UK) லிமிடெட் (09 டிசம்பர் 2024 முதல் நியமனம்) | தலைவர்/ நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் | நடைமுறை கணக்குகள் | | 9,023 | 8,564 |
| | | சேமிப்புக் கணக்குகள் | | 40 | 38 |
| | | நாஸ்ட்ரோ கணக்குகள் | | USD 1,119 | USD 1,583 |
| | | | | 347,004* | 463,098* |
| | | | | GBP 614 | GBP 508 |
| | | | | 256,088* | 186,563* |
| | | | | EURO 5,454 | EURO 1,105 |
| | | | | 1,985,009* | 336,628* |
| | | வைத்திருப்புக்கள் | | USD 6,133 | USD 6,000 |
| | | | | 1,901,118* | 1,755,500* |
| | | | | GBP 25,948 | GBP 25,700 |
| | | | | 10,828,672* | 9,441,723* |
| பிஓசி ப்ரொபேர்ட்டி டெவெலப்மென்ட் மற்றும் மேனேஜ்மென்ட் (பிரைவேட்) லிமிடெட் (06 நவம்பர் 2025 முதல் நியமனம்) | தலைவர்/ நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் | நடைமுறை கணக்குகள் | | 3,294 | 4,942 |
| | | தவணை வைப்புகள் | | 200,100 | 744,700 |
| | | தொகுதிகடன் முதலீடுகள் | | 250,000 | 500,000 |
| | | மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | | 783,000 | 296,000 |
| பிஓசி ஐடி சொலுஷன்ஸ் (பிரைவேட் ) லிமிடெட் (15 ஜனவரி 2025 முதல் நியமனம்) | தலைவர்/ நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் | நடைமுறை கணக்குகள் | | 24,601 | 777 |
| **திரு. ஜெஹுான் இஸ்மாயில் (07 பெப்ரவரி 2024 முதல் இலங்கை வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்)** | | | | | |
| ஹோட்டல்ஸ் கொழும்பு (1963) லிமிடெட் (04 ஏப்ரல் 2024 முதல் நியமனம்) | தலைவர்/ நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் | நடைமுறை கணக்குகள் | | 21,531 | 32,130 |
| | | சேமிப்புக் கணக்குகள் | | 20,462 | - |
| | | தவணை வைப்புகள் | | 2,167 | 2,044 |
| | | கடன்கள் | | 229,751 | 230,851 |
| | | ஏனைய பெறுவனவுகள் | | 289,151 | 235,960 |
| மெர்ச்சண்ட் பேங்க் ஒப் ஸ்ரீலங்கா அன்ட் பைனான்ஸ் பிஎல்சி (30 ஜனவரி 2025 முதல் நியமனம்) | நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் | நடைமுறை கணக்குகள் | | 257,089 | 279,379 |
| | | தவணை வைப்புகள் | | 33 | 32 |
| | | கடன்கள் | | - | 2,940,000 |
| | | வங்கி மேலதிகபற்று | 750,000 | 711,636 | 186,794 |
| **கலாநிதி. அமல் இல்லேசிங்க (06 டிசம்பர் 2024 முதல் இலங்கை வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்)** | | | | | |

* இலங்கை ரூபாய்க்கு நிகரான தொகை

குறிப்பு: விசேடமாக குறிப்பிடப்படாத நாணயங்கள் இலங்கை ரூபாவில் காணப்படுகின்றன.

| கம்பனி | உறவுமுறை | கொடுக்கல் வாங்கலின் தன்மை | எல்லை ‘000 | 31.12.2025 இல் உள்ளவாறான மீதி ‘000 | 31.12.2024 இல் உள்ளவாறான மீதி ‘000 |
|---|---|---|---|---|---|
| பி.ஓ.சி ஐடி சொல்யூஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (16 அக்டோபர் 2025 முதல் நியமிக்கப்பட்டார்) | நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் | நடைமுறை கணக்குகள் | | 24,601 | 777 |
| **திரு ஆர். எம். பி. ரத்நாயக்க (20 டிசம்பர் 2024 முதல் இலங்கை வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்)** | | | | | |
| பி.ஓ.சி டிராவல்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (01 ஆகஸ்ட் 2025 முதல் நியமிக்கப்பட்டார்) | நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் | நடைமுறை கணக்குகள் | | 29,914 | 20,976 |
| | | தவணை வைப்புகள் | | 351,972 | 290,917 |
| | | வங்கி மேலதிகபற்று | 58,500 | - | - |
| **திரு. தர்ஷன குணசேகர (13 ஆகஸ்ட் 2025 முதல் இலங்கை வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்)** | | | | | |
| டில்மா சிலோன் டீ கம்பெனி பி.எல்.சி (01 அக்டோபர் 2020 முதல் நியமிக்கப்பட்டார்) | நிறைவேற்று பணிப்பாளர் | நடைமுறை கணக்குகள் | | 860 | 1,154 |
| | | சேமிப்புக் கணக்குகள் | | 22,422 | 3,087 |
| | | தவணை வைப்புகள் | | 2,473,755 | 2,328,963 |
| தலவாக்கலை டீ எஸ்டேட் பி.எல்.சி (27 டிசம்பர் 2024 முதல் நியமிக்கப்பட்டார் ) | சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் | நடைமுறை கணக்குகள் | | 6,169 | 4,872 |
| **திரு. துல்சி அலுவிஹாரே (16 செப்டம்பர் 2025 முதல் இலங்கை வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்)** | | | | | |
| அபான்ஸ் ஃபைனான்ஸ் பிஎல்சி (22 டிசம்பர் 2022 முதல் நியமிக்கப்பட்டார்) | சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் | நடைமுறை கணக்குகள் | | 149 | 149 |
| | | தவணை வைப்புகள் | | 107 | 107 |
| | | வங்கி மேலதிகபற்று | 100,000 | 81,811 | 5,550 |
| எக்ஸ்பேக் கோருகேட்டட் கார்டன்ஸ் பிஎல்சி (15 ஜுன் 2021 முதல் நியமிக்கப்பட்டார்) | சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் | நடைமுறை கணக்குகள் | | 779 | 644 |
| | | சேமிப்புக் கணக்குகள் | | 122 | 1,435 |
| | | கடன்கள் | | 137,267 | 585,714 |
| **அம்மணி. ஷர்மினி ரத்வத்தே (16 செப்டம்பர் 2025 முதல் இலங்கை வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்)** | | | | | |
| கன்வீனியன்ஸ் ஃபுட்ஸ் (லங்கா) பிஎல்சி (01 ஏப்ரல் 2024 முதல் நியமிக்கப்பட்டார்) | சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் | நடைமுறை கணக்குகள் | | 257 | 35 |
| நேஷனல் கிரெடிட் கேரண்டி இன்ஸ்டிடியூஷன் லிமிடெட் (08 ஜனவரி 2024 முதல் நியமிக்கப்பட்டார்) | சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் | நடைமுறை கணக்குகள் | | 468 | 426 |
| | | தொகுதிகடன் முதலீடுகள் | | 2,400,000 | - |
| | | மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | | 2,787,000 | - |
| | | பங்கு மூலதனம் | | 151,145 | 151,145 |
| ஃபேர்ஃபர்ஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடெட் (01 அக்டோபர் 2025 முதல் நியமிக்கப்பட்டார்) | நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் | நடைமுறை கணக்குகள் | | 99,008 | 110,905 |
| | | சேமிப்புக் கணக்குகள் | | 246,949 | 162,359 |
| | | வங்கி மேலதிகபற்று | | 1 | 4 |
| | | மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | | 218,903 | 320,962 |
| **பொறியியலாளர். பேராசிரியர். ஆனந்த ஜயவர்தன (14 நவம்பர் 2025 முதல் இலங்கை வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்)** | | | | | |
| எச்என்பீ அஷ்யூரன்ஸ் பிஎல்சி (09 ஆகஸ்ட் 2024 முதல் நியமிக்கப்பட்டார்) | சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் | நடைமுறை கணக்குகள் | | 4,130 | 1,192 |
| பிரைம் லேண்ட்ஸ் ரெசிடென்சிஸ் பிஎல்சி (04 செப்டம்பர் 2025 முதல் நியமிக்கப்பட்டார்) | சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் | நடைமுறை கணக்குகள் | | - | 419 |
| | | வங்கி மேலதிகபற்று | 250,000 | 250,756 | - |
| | | கடன்கள் | | 700,000 | - |

* இலங்கை ரூபாய்க்கு நிகரான தொகை

குறிப்பு: விசேடமாக குறிப்பிடப்படாத நாணயங்கள் இலங்கை ரூபாவில் காணப்படுகின்றன.

# நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளிலான பணிப்பாளர்களது கூற்று

## பொறுப்பு

2024ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வங்கியியல் சட்டப் பணிப்புரையின் பிரிவு 9.2 (டி) இற்கமைய பணிப்பாளர்கள் சபையானது நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாடுகளிலான இந்த அறிக்கையினை சமர்ப்பிக்கிறது.

பணிப்பாளர்கள் சபையானது ("சபை") இலங்கை வங்கியில் ("வங்கி") காணப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மைக்கு பொறுப்பாளியாவார்கள். அத்தகைய போதுமை மற்றும் பயனுறுதித்தன்மையினை கருத்திலெடுப்பதில் சபையானது வங்கியியல் வணிகம் என்பது ஒரு முகாமைப்படுத்தப்பட்ட அடிப்படையில் வெகுமதிகளை இடருடன் சமநிலைப்படுத்தும் தேவையுடையது என்பதை அறிந்திருப்பதுடன், அதற்கமைய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் பிரதானமாக வங்கியின் இடர் ஏற்பினை உள்ளடக்கிய வரையறைகள் மற்றும் குறிகாட்டிகளிலிருந்து ஏதேனும் விலகல்களை எடுத்துக்காட்டும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் நிமித்தம், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது, நிதியியில் தகவல்களது மற்றும் பதிவுகளது பொருண்மையான பிறழ்கூற்றுகளுக்கு எதிராக அல்லது நிதியியல் நட்டங்கள் அல்லது மோசடிக்கு எதிராக பூரணமான உறுதிமொழியன்றி, ஒரு நியாயமான உறுதிமொழியினை மாத்திரமே வழங்கமுடியும். சபையானது வங்கியினால் முகங்கொடுக்கப்படும் கணிசமான இடர்களை இனங்காண்பதற்கும், மதிப்பிடுவதற்கும் மற்றும் முகாமைப்படுத்தவும் ஒரு தொடர்ச்சியான செயன்முறையினை நிறுவியுள்ளது. இந்தச் செயன்முறையானது, வணிகச் சூழலில் அல்லது முறைமைப்படுத்தல் வழிகாட்டிகளில் மாற்றங்கள் ஏற்படும்போது நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மேம்படுத்துவதனை உள்ளடக்கும். இச்செயன்முறையானது, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வங்கிகளின் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளிலான பணிப்பாளர்களின் கூற்று வழிகாட்டிகளுக்கு அமைவாக இருப்பதனை சபையினால் வழமையாக மீளாய்வு செய்யப்படுகின்றது. சபையானது நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளை மதிப்பிடும்போது, அந்த வழிகாட்டியில் வழங்கப்பட்டுள்ள உள்ளக் கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பிடுவதற்கான கொள்கைகளை கருத்திலெடுக்கின்றது.

நடைமுறையிலுள்ள நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது, நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்காக திடமானதும் போதுமானதும் எனவும் மற்றும் வெளிவாரி நோக்கங்களுக்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்கள் பொருத்தமான கணக்கிட்டுக் கொள்கைகள் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் ஆகியவற்றுக்கு அமைவாக உள்ளதெனவும் சபையானது கருதுகின்றது.

முகாமைத்துவமானது இடர் மற்றும் கட்டுப்பாட்டிலான சபையின் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை அமுலாக்குவதற்கு சபைக்கு துணைபுரிகின்றது. இது முகங்கொடுக்கும் இடர்களை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் வடிவமைப்பில், இந்த இடர்களை தணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளது செயற்பாடு மற்றும் கண்காணிப்பு என்பனவாகும்..

## நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளது வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்வதில் கடைப்பிடிக்கப்பட்ட செயன்முறைகளின் முக்கிய அம்சங்கள

நிதியியல் அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதுமாந்தன்மை மற்றும் நேர்மையினை மீளாய்வு செய்வதில் நிறுவப்பட்ட முக்கிய செயன்முறைகள் பின்வருவனவற்றை உள்ளக்குகின்றன:

- வங்கியின் செயற்பாடுகள் கூட்டாண்மை குறிக்கோள்கள், மூலோபாயங்கள் மற்றும் வருடாந்த பாதீடு மற்றும் அங்கீகரிக்கப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் வணிக வழிகாட்டுதல்களுக்கமைய வங்கியின் நாளாந்த செயற்பாடுகளது பயனுறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக சபைக்கு துணைபுரிவதற்காக சபையினால் பல்வேறு குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.

- வங்கியின உள்வாரி கணக்காய்வுப் பிரிவானது ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளுடனான இணக்கப்பாட்டினையும் மாதிரிகளையும் சுழற்சி செயன்முறைகளையும் பயன்படுத்தி உள்ளக் கட்டுப்பாடுகளின் பயனுறுதித்தன்மையினையும் பரிசீலனை செய்து ஏதேனும் இணக்கப்பாடின்மை தொடர்பான கணிசமான கண்டுபிடிப்புகளை எடுத்துக்காட்டுகின்றது. அனைத்து அலகுகளிலும் கிளைகளிலும் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிகழும் இடைவெளியானது ஒரு சுயாதீன மற்றும் குறிக்கோளான அறிக்கையினை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட இடர் தரமிடுதல் முறைகளை பயன்படுத்தி இடர் மட்டத்தினை மதிப்பீடு செய்வதன் மூலம் தீமானிக்கப்படுகின்றது. வருடாந்த கணக்காய்வுத் திட்டமானது சபை கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வு திட்டத்திற்கு இணங்க உள்ளக கணக்காய்வு பிரிவு பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி நிகழ்நேர மற்றும் தளத்திற்கப்பாலான உள்ளக கணக்காய்வினை மேற்கொள்கிறது. மற்றும் கணக்காய்வு முடிவுகள் சபை கணக்காய்வு செயற்குழுவிடம் மீளாய்வுக்காக சமர்ப்பிக்கப்படுகின்றன.

- வங்கியின் சபை கணக்காய்வுக் குழுவானது, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, வெளிவாரி கணக்காய்வாளர்கள், முறைமைப்படுத்தல் அதிகாரிகள் மற்றும் முகாமைத்துவத்தினால் இனங்காணப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டு சிக்கல்களை மீளாய்வு செய்து இடர் முகாமைத்துவ மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதுமாந்தன்மை மற்றும் பயனுறுதித்தன்மையினை மதிப்பீடு செய்கின்றது. அவர்கள் கணக்காய்வுகளின் நோக்கெல்லை மற்றும் அவற்றின் தரத்திலான குறிப்பிட்ட அழுத்தத்துடன் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகளை மீளாய்வு செய்கின்றார்கள். சபை கணக்காய்வுக் குழுவினது கூட்டங்களின் அனைத்து நிகழ்ச்சிப் பதிவுகளும் சபைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. வங்கியின் கணக்காய்வுக் குழுவினால் பொறுப்பேற்கப்பட்ட நடவடிக்கைகளின் விரிவான பகுப்பாய்வானது பக்கங்கள் 180 முதல் 181 வரை காணப்படும் கணக்காய்வுச் செயற்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

- நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மதிப்பிடுவதில், வங்கியின் இனங்காணப்பட்ட அதிகாரிகள், வங்கியின் நிதிக் கூற்றுக்களது குறிப்பிட்ட கணக்குகள் மற்றும் வெளிப்படுத்தல்களுடன் இணைந்துள்ள அனைத்து செயன்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை நுண்ணிப்பாக ஒப்பீட்டுப்பார்த்தார்கள். இவை ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையின் பொருந்துமைக்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் அவதானிக்கப்பட்டு பரிசீலனை செய்யப்படுகின்றது. இந்த மதிப்பீடுகள் வங்கியின் துணை நிறுவனங்களை உள்ளடக்கவில்லை..

- வங்கியானது 1 ஜனவரி 2018 முதல் இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 9 "நிதியியல் கருவிகள்" இனை கடைப்பிடித்தது. SLFRS 9 இன் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்காக, வங்கியானது, ஒரு வெளிவாரி ஆலோசகரின் துணையுடன், வலுக்குன்றல் ஏற்பாடுகளை தீமானிப்பதற்காக ஒரு பரவலான எதிர்வுகூறும் பொருளாதார சூழல்கைளைப் பயன்படுத்தி எதிர்பார்க்கப்படும் கடன் நட்ட (ECL) மாதிரிகளை விருத்தி செய்தது. இந்த மாதிரிகள் ஒரு பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் உதவியுடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் ஏற்புடையாக்கப்பட்டது. வங்கியானது 1 ஜனவரி 2022 முதல், இலங்கை மத்திய வங்கியினால் SLFRS 9 இன் கீழான கடன் வசதிகளின் வகைப்படுத்தல், அங்கீகாரம் மற்றும் அளவீடு தொடர்பாக வழங்கப்பட்ட பணிப்புரைகள் இலக்கம் 13 மற்றும் 14 உடனான இணக்கப்பாடு காண்பதற்காக போதுமையான வழிமுறைகளை எடுத்துள்ளதுடன் இது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

- அங்கீகாரம், அளவீடு, வகைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு காண்பதற்காகவும் மற்றும் நிதியியல் கருவிகளது வெளிப்படுத்தலானது ஆற்றல் மிக்கதாகவும் சிறப்பாகவும் இருப்பதற்கும் "நிதிக் கூற்றுக்களது நிறைவுசெய்தல்" செயல்முறைக்கு வசதியளிப்பதற்காகவும் வங்கி ஒரு தன்னியக்கமான நிதியியல் அறிக்கையிடல்

தீர்வினை அமுலாக்கும் செயன்முறையிலுள்ளது. இந்த தன்னியக்கமாக்கல் தீர்வானது SLFRS 9 "நிதியியல் கருவிகள்" இன் கீழான வலுக்குன்றல் ஏற்பாட்டினை கணிப்பிடுவதனை இயலுமையாக்குவதுடன் உள்வாரி மற்றும் வெளிவாரி அறிக்கையிடல் தேவைப்பாடுகளை நிறைவுசெய்யவும் வசதியளிக்கும்.

- 2025 ஆம் ஆண்டில், கோவிட்-19 ஆல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட நிலுவையில் உள்ள தடைத் தொகுப்புகளுடன் வங்கி தனது இணக்கத்தை தொடர்ந்தது. SLFRS 9 "நிதி கருவிகளின்" கீழ் ECL மாதிரிகளை வழங்குவதைப் பயன்படுத்தி குறைபாட்டை மதிப்பிடும் போது, கட்டுமானங்கள் மற்றும் ஆடை ஏற்றுமதி போன்ற அபாயம் அதிகரித்த தொழில்களில் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு கோவிட்-19 இன் எஞ்சிய தாக்கம் பரிசீலிக்கப்பட்டது.

- SLFRS 9 இன் கீழ் கடன் வசதிகளின் வகைப்பாடு, அங்கீகாரம் மற்றும் அளவீட்டிற்கான ஒழுங்குமுறையாளரால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து தன்னியக்க நிதியியல் அறிக்கையிடல் தீர்வை செயல்படுத்துவதை வங்கியின் பல்வேறு துறைகளை உள்ளடக்கிய ஒரு வழிநடத்தல் குழு கண்காணித்து ஒருங்கிணைக்கிறது.

- வங்கி மற்றும் வெளிநாட்டு கிளைகளின் கடன்கள் மற்றும் முற்பணங்கள், நிதி அறிக்கை வெளிப்பாடுகள், இடர் முகாமைத்துவம், தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் மாறிவரும் ஒழுங்குமுறை மற்றும் சந்தை நிலைமைகளின் அடிப்படையில் மற்ற அனைத்து குறிப்பிடத்தக்க வங்கி நடவடிக்கைகள் தொடர்பான நடைமுறைகளை வங்கி தொடர்ந்து கண்காணித்து இற்றைப்படுத்தி வருகிறது. SLFRS /LKAS ஆகியவற்றின் கீழ் உள்ள தேவைகள் மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள் சபை மற்றும் சிரேஷ்ட நிர்வாகம் உள்ளிட்ட தொடர்புடைய பங்குதாரர்களுக்கு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அமர்வுகள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளன.

- முன்னைய ஆண்டில் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளில் வெளிவாரி கணக்காய்வாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கள் இவ்வாண்டின்போது மீளாய்வு செய்யப்பட்டு அவற்றை திருத்துவதற்காக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் வெளிவாரி கணக்காய்வாளர்களினால் 2025 இல் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் எதிர்காலத்தில் விழித்துரைக்கப்படும்

## உறுதிப்பாடு

மேற்குறிப்பிட்ட செயன்முறைகளின் அடிப்படையில், சபையானது வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் முறைமையானது நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக ஒரு நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது எனவும் வெளிவாரி நோக்கங்களுக்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளன என உறுதியளிக்கின்றார்கள்.

## வெளியக கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட அறிக்கையின் மீளாய்வு

Messrs Ernst & Young துணையுடன் கணக்காய்வாளர் நாயகம் 31 டிசம்பர் 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கை மீதான உள் கட்டுப்பாடு குறித்த பணிப்பாளர் அறிக்கையை மீளாய்வு செய்து, வங்கியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பின் வடிவமைப்பு மற்றும் செயல்திறனை மீளாய்வுசநிழசவநன செய்வதில் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்முறை குறித்த அவரது புரிதலுடன் இந்த அறிக்கை முரண்படுவதாக அவர்கள் நம்புவதற்கு காரணமான எதுவும் அவர்களின் கவனத்திற்கு வரவில்லை என்று சபைக்கு தெரிவித்தார். நிதி அறிக்கை மீதான உள் கட்டுப்பாடு குறித்த அறிக்கை குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை இவ் வருடாந்த அறிக்கையின் பக்கம் 228இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

சபையின் கட்டளையின் பிரகாரம்,

தலைவர் - கணக்காய்வு செயற்குழு

பணிப்பாளர்

தலைவர்

கொழும்பு, இலங்கை
24 பெப்ரவரி 2026

# சுயாதீன உத்தரவாத அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය

தேசிய கணக்காய்வு அலுவலகம்

NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எமது இல. / My No. } BAN/B/BOC/IC/2025

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 24 March 2026

**தலைவர்**

**இலங்கை வங்கி.**

## வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளிலான பணிப்பாளர்களது கூற்றில் பணிப்பாளர் சபைக்கான கணக்காய்வு தலைமை அதிபதி அவர்களின் உறுதிமொழி அறிக்கை

### அறிமுகம்

இந்த அறிக்கையானது, 31 டிசம்பர் 2025 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இலங்கை வங்கியின் (வங்கி) நிதி அறிக்கையிடல் ("கூற்று") மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்றில் உறுதிமொழியினை வழங்குவதற்காகும்.

### முகாமைத்துவத்தின் பொறுப்பு

உரிமம் பெற்ற வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளுகை குறித்து, 2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இல.வங்கியியல் சட்ட வழிகாட்டல் பிரிவு 9.2 (b) க்கு இணங்க வெளியிடப்பட்ட உள்ளக கட்டுப்பாடு குறித்த பணிப்பாளர்களின் கூற்று "குறித்த வங்கிகளின் பணிப்பாளர்களின் வழிகாட்டுதலின் படி" அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### எனது பொறுப்பும் SLSAE 3050(திருத்தியமைக்கப்பட்டது) உடனான இணக்கப்பாடும்

இந்த கூற்று இயக்குநர்களால் அல்லது அவர்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்களால் ஆதரிக்கப்படுகிறதா என்பதை மதிப்பிடுவதும், வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டின் வடிவமைப்பு மற்றும் செயல்திறனை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் பின்பற்றிய செயல்முறையை சரியான முறையில் பிரதிபலிப்பதும் எனது பொறுப்பாகும்.

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் வழங்கிய உள்ளக கட்டுப்பாடு குறித்த பணிப்பாளர்களின் கூற்று குறித்த வங்கிகளுக்கான இலங்கை உத்தரவாத ஈடுபாட்டு தரநிலை (SLSAE) 3050 (திருத்தப்பட்ட) உத்தரவாத அறிக்கையின்படி எனது ஈடுபாட்டை நடத்தினேன். நிதிக் கூற்றுக்களின் மீதான உள்ளக கட்டுப்பாடு குறித்த அறிக்கையை அனைத்து பொருண்மை அம்சங்களிலும் நிர்வாகம் தயாரித்துள்ளதா என்பது குறித்த வரையறுக்கப்பட்ட உத்தரவாதத்தைப் பெறுவதற்கான நடைமுறைகளை நான் திட்டமிட்டுச் செய்ய வேண்டும் என்று இந்த தரநிலை கோருகிறது. இந்த ஈடுபாட்டின் நோக்கத்திற்காக, எந்தவொரு அறிக்கையையும் புதுப்பிப்பதற்கோ அல்லது மீண்டும் வெளியிடுவதற்கோ நான் பொறுப்பல்ல, அல்லது இந்த ஈடுபாட்டின் போது, நிதி தகவல்களின் கணக்காய்வை அல்லது மீளாய்வை நான் செய்யவில்லை.

### செயலாற்றப்பட்ட பணியின் சுருக்கம்

கூற்றானது, பணிப்பாளர்களினால் அல்லது அவர்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்களினால் துணையளிக்கப்பட்டுள்ளதா மற்றும் வங்கியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் அமைப்புமுறையினை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் கடைப்பிடித்த செயன்முறைகள் பொருத்தமாக பிரதிபலிக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்வதற்காக நான் எனது பணியினை நடாத்தினேன்.

செயலாற்றப்படட செயன்முறைகள், அடிப்படையில் வங்கி ஆளணியினரது விசாரணைகள் மற்றும் ஒரு மாதிரி அடிப்படையில் பணிப்பாளர்கள் சபையினால் கடைப்பிடிக்கப்பட்ட செயன்முறைகளுக்கு உறுதுணையளித்த உளதாயுள்ள ஆவணங்களுக்கு வரையறை செய்யப்பட்டுள்ளது.

SLSAE 3050 (திருத்தப்பட்டது) அறிக்கை அனைத்து இடர் மற்றும் கட்டுப்பாடுகளையும் உள்ளடக்குகிறதா அல்லது வங்கியின் இடர் மற்றும் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் செயல்திறன் குறித்து ஒரு கருத்தை உருவாக்குகிறதா என்பதை நான் கருத்தில் கொள்ள வேண்டியதில்லை. SLSAE 3050 (திருத்தப்பட்டது) வருடாந்திர அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட எந்தவொரு குறிப்பிடத்தக்க பிரச்சினைகள் பொருண்மை உள்ளக கட்டுப்பாட்டு அம்சங்களைக் கையாள்வதற்கு விவரிக்கப்பட்ட செயல்முறைகள் உண்மையில் பிரச்சினைகளை தீர்க்குமா என்பதை நான் கருத்தில் கொள்ள வேண்டியதில்லை.

வங்கியின் தன்மை, அறிக்கை தயாரிக்கப்பட்ட நிகழ்வு அல்லது பரிவர்த்தனை பற்றிய எனது புரிதலைக் கருத்தில் கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட நடைமுறைகள் எனது முடிவை பொறுத்தது. எனது முடிவுக்கு ஒரு அடிப்படையை வழங்க நான் பெற்ற சான்றுகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்று நான் நம்புகிறேன்.

### முடிவுரை

செயலாற்றப்பட்ட செயன்முறைகளின் அடிப்படையில், வங்கியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையின் மீளாய்வின்போது பணிப்பாளர்கள் சபை கடைப்பிடித்த செயன்முறைகளிலான எனது புரிந்துணர்வுடன் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கூற்றானது முரண்பட்டுள்ளது என நான் நம்புவதற்காக ஏதும் எனது கவனத்திற்கு வரவில்லை.

**எல் எஸ் ஐ ஜயரத்ன**

கணக்காய்வாளர் நாயகம்

இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.

+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

# நிதியியல் அறிக்கையிடுவதற்கான பணிப்பாளர்களது பொறுப்பு தொடர்பான அறிக்கை

விசேடமாக நிதியியல் அறிக்கையிடல் தொடர்பாக பணிப்பாளர்கள் மற்றும் கணக்காய்வாளர்களுக்கு உரிய பொறுப்புக்களை வேறுபடுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை வங்கி மற்றும் குழுமத்தின் நிதியியல் அறிக்கையிடல் தொடர்பான பணிப்பாளர்களது பொறுப்பானது பின்வரும் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நிதிக் கூற்றுக்கள்

1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதனிலான திருத்தங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதனிலான திருத்தங்கள் மற்றும் பணிப்புரைகளின் பிரகாரம், வங்கியின் நிதி நிலைமையினை எந்நேரத்திலும் நியாயமாகவும் துல்லியமாகவும் வெளிப்படுத்தும் முறையான கணக்குப் புத்தகங்களை வங்கி பராமரிப்பதனை உறுதிப்படுத்துவதும், வங்கியின் விவகாரங்களில் ஒரு மெய்யான மற்றும் நியாயமான கருத்தினை வழங்கும் முறையான நிதிக் கூற்றுக்களை ஒவ்வொரு வருடத்திற்கும் தயாரிப்பதும் பணிப்பாளர்களின் பொறுப்பாகும்.

இந்த ஆண்டறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன மற்றும் நியாயமானதும் விவேகமானதுமான தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகளினால் துணையளிக்கப்பட்டு தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டுள்ளன என்பதை பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றார்கள். பொருண்மையான பிறழ்வுகள், ஏதேனும் இருப்பின், வெளிப்படுத்துப்பட்டு விளக்கமளிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் மற்றும் அதன் கீழான பணிப்புரைகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் ஆகியவற்றின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப மற்றும் ஏனைய முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கமைய காணப்படுகின்றன. இந்த நிதிக் கூற்றுக்கள் 31 டிசம்பர் 2025 இல் உள்ளவாறான இலங்கை வங்கி மற்றும் குழுமத்தின் விவகாரங்களில் ஒரு மெய்யானதும் நியாயமானதுமான கருத்தினை பிரதிபலிக்கின்றன.

## நிறுவனச்செயல்நிலை தொடர்ச்சி

எதிர்பார்க்கக்கூடிய எதிர்காலத்தில் வணிகத்தினை தொடர்வதற்கான போதுமான வளங்களை வங்கி மற்றும் குழுமம் கொண்டுள்ளது என்பது பணிப்பாளர்களின் கருத்தாகும். இதன் பிரகாரம், நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் அவர்கள் தொடர்ச்சியான நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை கடைப்பிடித்துள்ளார்கள்.

## உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கப்பாடு

உள்ளக நிதியியில் கட்டுப்பாட்டு அமைப்புமுறைகளுக்கும் மற்றும் இடர் முகாமைத்துவத்திற்கும் பணிப்பாளர்கள் பொறுப்பாளியாவதுடன், வங்கியின் சொத்துக்களை பாதுகாப்பதற்கும் மோசடி மற்றும் தவறான நிர்வாகத்தை தடுப்பதற்காகவும் ஒரு திடமான கட்டுப்பாட்டு சூழலினை பராமரிப்பதில் கணிசமான முக்கியத்துவத்தினை வைத்துள்ளார்கள்.

உள்ளார்ந்த மற்றும் எஞ்சியுள்ள இடர்களை முற்றாக அகற்றமுடியாதவேளை வங்கியானது, பொருத்தமான உட்கட்டமைப்பு, கட்டுப்பாடுகள், அமைப்புமுறைகள் மற்றும் நெறிமுறையான நடத்தை என்பன முன்நிர்ணயிக்கப்பட்ட செயன்முறைகள் மற்றும் வரையறைகள்.'. எல்லைகளினுள் பிரயோகிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதனை உறுதிசெய்வதன் மூலம், இவற்றை குறைப்பதற்கு முயற்சிக்கின்றது.

நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்கு நிதியியல் அறிக்கையிடல் அமைப்புமுறை வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையில் பணிப்பாளர்களின் ஒரு அறிக்கை ஆண்டறிக்கையின் பக்கம் 226 மற்றும் 227 இல் வழங்கப்பட்டுள்ளன.

பணிப்பாளர்களும் முகாமைத்துவமும் இடர் முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகளை நிறுவியுள்ளன. பொருண்மையான இடர்களை கண்காணித்து முகாமைப்படுத்துவதற்காக முகாமைத்துவ குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுவின் மீளாய்வு மற்றும் கலந்துரையாடலுக்காக இடரிலான மாதாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொருத்தமான சட்டங்கள், ஒழுங்குவிதிகள், விதிகள், பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டிகளுடனான இணக்கப்பாடானது சுயாதீன ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ பிரிவினால் கண்காணிக்கப்பட்டு சபைக்கு அறிக்கையிடப்படுகின்றது.

கணக்காய்வுக் குழுவும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவும் உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ செயன்முறைகளது வினைத்திறனை பலப்படுத்துவதற்காக ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் செயலாற்றியுள்ளன. கணக்காய்வுக் குழு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கைகள் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 180 முதல் 183 வரை உள்ளடக்கப்பட்டுள்ளன.

## கணக்காய்வு அறிக்கை

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154 இன் ஏற்பாடுகளை தொடர்ந்து கணக்காய்வாளர் நாயகம் அவர்களே வங்கியின் கணக்காய்வாளர் என்பதுடன் வங்கியின் நிதிக் கூற்றுக்களிலான இறுதியான அபிப்பிராயத்தினை வழங்குகின்றார். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 230 முதல் 234 வரை காணப்படும்.

கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறைகளின் பயனுறுதித்தன்மையிலான கணக்காய்வாளர் அதிபதி அவர்களின் சான்றளிப்பானது இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 228 இல் வழங்கப்பட்டுள்ளது.

## இணக்கப்பாடு

நிதி நிலைமைக் கூற்று திகதியிலான வங்கி மற்றும் அதன் துணைநிறுவனங்களினால் நிலுவையிலுள்ள மற்றும் செலுத்தவேண்டிய அனைத்து பொருத்தமான முறைமைப்படுத்தல் மற்றும் சட்டரீதியான அதிகாரசபை தொடர்பான அனைத்து சட்டரீதியான கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டுள்ளன அல்லது பொருத்தமானவிடத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று பணிப்பாளர்கள் அவர்களது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டியவரையில் திருப்தியடைகின்றார்கள்.

இந்த கூற்றில் குறிப்பிட்டுள்ளவாறு பணிப்பாளர்கள் அவர்களது பொறுப்புக்களை முறையாக நிறைவேற்றியுள்ளார்கள் என்ற கருத்தினைக் கொண்டுள்ளார்கள்.

சபையின் கட்டளையின் பிரகாரம்,



**ஜானகி சேனாநாயக்க சிறிவர்தன**

செயலாளர் இலங்கை வங்கி/ சபையின் செயலாளர்

24 பெப்ரவரி 2026
கொழும்பு

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } BAN/B/BOC/FA/2025 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 26 February 2026

**தலைவர்**

**இலங்கை வங்கி**

2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் பிரகாரம் 31 டிசம்பர் 2025 இல் நிறைவடைந்த வருடத்திற்கான இலங்கை வங்கி மற்றும் அதன் துணைநிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளிலான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை..

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

31 டிசம்பர் 2025இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றும் மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்களின் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும், பொருண்மை கணக்கீட்டு கொள்கை தகவல்களை உள்ளடக்கிய 31 டிசம்பர் 2025 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான இலங்கை வங்கியின் (வங்கி) நிதிக் கூற்றுக்கள் மற்றும் வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களின் (குழுமம்) ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பகுதி II இன் ஏற்பாடுகளிலிருந்து அப்போதைய நிதி அமைச்சரின் கட்டளையின் பிரகாரம் குறித்த நிதிச் சட்டத்தின் பிரிவு 5 (1) இன் பிரகாரம் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் 14 மே 1992 இல் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க வர்த்தமானி இலக்கம் 715 இனால் வங்கிக்கு விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது அபிப்பிராயத்தின் பிரகாரம் இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் 31 டிசம்பர் 2025 இல் உள்ளவாறான வங்கியின் மற்றும் குழுமத்தின் நிதி நிலைமை அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்திறன் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப மெய்யானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொண்டேன் (SLAuSs). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 முக்கிய கணக்காய்வு விடயங்கள்

முக்கிய கணக்காய்வு விடயங்கள் எனது தொழில்சார் கருத்தில், தற்போதைய காலகட்டத்தின் நிதி அறிக்கைகளின் கணக்காய்வு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த விடயங்கள் ஒட்டுமொத்த நிதி அறிக்கைகளின் கணக்காய்வு மற்றும் அதன் மீது எனது கணக்காய்வு அபிப்பிராயத்தை உருவாக்கும் சூழலில் கையாளப்பட்டுள்ளது. மேலும் இந்த விடயங்களில் நான் ஒரு தனி கருத்தை வழங்கவில்லை. கீழே உள்ள ஒவ்வொரு விடயத்திற்கும் எனது கணக்காய்வு இந்த விடயத்தை எவ்வாறு கையாண்டது என்பது பற்றிய எனது விளக்கம் அந்தந்த உள்ளடக்கத்தில் வழங்கப்படுகிறது.

இந்த விடயங்கள் தொடர்பாக எனது அறிக்கையின் நிதி அறிக்கைகள் பிரிவின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகளில் விபரிக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நான் நிறைவேற்றியுள்ளேன். அதன்படி, நிதி அறிக்கைகளின் பொருண்மை தவறான அறிக்கையின் அபாயங்கள் குறித்த எனது மதிப்பீட்டிற்கு பதிலளிக்க வடிவமைக்கப்பட்ட நடைமுறைகளின் செயல்திறனை எனது கணக்காய்வு உள்ளடக்கியது. எனது கணக்காய்வு நடைமுறைகளின் முடிவுகள், கீழே உள்ள விடயங்களை நிவர்த்தி செய்ய நிகழ்த்தப்பட்ட நடைமுறைகள் உட்பட அதனுடன் இணைந்த நிதி அறிக்கைகள் குறித்த எனது கணக்காய்வு கருத்துக்கான அடிப்படையை வழங்குகின்றன.

| முக்கிய கணக்காய்வு விடயங்கள் | எனது கணக்காய்வு முக்கிய கணக்காய்வு விடயத்தை எவ்வாறு கையாண்டுள்ளது |
|---|---|
| **கடன் மற்றும் முற்பணங்ககளுக்கான எதிர்பார்க்கப்படும் கடனிழப்பு ஒதுக்கீடு காலத்தேய்மான கிரயத்தில்**<br><br>முகாமைத்துவத்தின் தீர்மானத்திற்கமைய கணக்கீடு கொள்கைகளை அடிப்படையாக கொண்டு நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 4.4.11.6 விவரிக்கப்பட்டுள்ள, குறிப்பு 28 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி, கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான எதிர்பார்க்கப்படும் கடனிழப்பு ஒதுக்கீடு காலத்தேய்மான கிரயத்தில் அளவிடப்பட்டுள்ளது.<br><br>இது ஒரு முக்கிய கணக்காய்வு விடயமாகும் ஏனென்றால்,<br><br>• கடன்கள் மற்றும் முன்பணங்களின் எதிர்கால மீட்புத்திறனை மதிப்பிடுவதில் ஈடுபடும் குறிப்பிடத்தக்க முகாமைத்துவ முடிவுகள் , அனுமானங்கள் மற்றும் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மை மற்றும்<br><br>• எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளின் அறிக்கையிடப்பட்ட தொகையின் பொருண்மைத்தன்மை<br><br>குறிப்பிடத்தக்க முடிவுகளின் முக்கிய பகுதிகள், அனுமானங்கள் மற்றும் மதிப்பீட்டில் முகாமைத்துவத்தால் பயன்படுத்தப்படும் கடன் மற்றும் முற்பணங்களுக்கான எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கான மதிப்பீட்டில் பயன்படுத்தப்படுகிறது. முன்னோக்கிப் பார்வையில் பேரின பொருளாதாரச் சூழ்நிலைகள் மற்றும் அவற்றுடன்தொடர்புடைய நிறையளிப்புக்கள், இவை இயல்பாகவே உயர்த்தப்பட்ட நிச்சயமற்ற நிலைகளுக்கு உட்பட்டவை. அத்தகைய முக்கிய மதிப்பீடுகள், அனுமானங்கள் மற்றும் முடிவுகள் பற்றிய தகவல்கள் குறிப்பு 28 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. | எனது கணக்காய்வு முக்கிய கணக்காய்வு விடயத்தை எவ்வாறு கையாண்டுள்ளது<br><br>கடன் மற்றும் முற்பணங்களுக்கான காலத்தேய்மான கிரயத்தில் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளின் ஒதுக்கீடு போதுமான தன்மையை நிவர்த்தி செய்வதில்,எனது கணக்காய்வு நடைமுறைகள் பின்வரும் முக்கிய நடைமுறைகளை உள்ளடக்கியுள்ளது.<br><br>• எனது அறிக்கை வெளியிடப்பட்ட தேதி வரை கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்களின் அடிப்படையில், பொருளாதார நிலைமைகளுக்கான துலங்கல்கள் அதன் கணக்கியல் கொள்கைகள் உள்ளிட்ட அடிப்படை வழிமுறைகளுடன் வங்கியின் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு ஒதுக்கீடு கணக்கீடுகளை மதிப்பீடு செய்தேன்.<br><br>• எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளின் மதிப்பீட்டின் மீதான கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு, செயற்படுத்தல் மற்றும் செயற்பாட்டு செயற்திறனை மதிப்பீடு செய்தேன்.<br><br>• பணிப்பாளர் சபை மற்றும் முகாமைத்துவத்தால் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் மேற்பார்வை, மதிப்பாய்வு மற்றும் ஒப்புதலின் அளவை மதிப்பிடு செய்தேன்.<br><br>• எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு கணக்கீடுகளில் பயன்படுத்தப்படும் அடிப்படைத் தரவின் முழுமை, துல்லியம் மற்றும் நியாயத்தன்மையை வங்கியின் தொடர்புடைய மூல ஆவணங்கள் மற்றும் கணக்கியல் பதிவுகளுடன் விவரங்களை ஒப்புக்கொள்வதன் மூலம் பரீட்சிக்கப்பட்டது<br><br>• கடன் தர மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய நிலை வகைப்படுத்தல்களின் நியாயத்தன்மையை மதிப்பீடு செய்தேன்.<br><br>• பின்வரும் நடைமுறைகளும் பின்பற்றப்பட்டன:<br><br>◆ கடன் குறைபாட்டிற்காக தனிப்பட்ட அடிப்படையில் மதிப்பிடப்பட்ட கடன்கள் மற்றும் முற் பணங்களுக்கானது.<br><br>◉ பொருளாதார நிலைமைகளுடன் செய்யப்பட்ட எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளில் பயன்படுத்தப்படும் முக்கிய உள்ளீடுகளின் நியாயத்தன்மையை மதிப்பீடு செய்தது. இத்தகைய மதிப்பீடுகள், குறிப்பாக உயர்ந்த ஆபத்துள்ள தொழிற்துறைகள் மற்றும் பிணைகளின் மீட்பு நடவடிக்கையின் நிலை தொடர்பான எதிர்வுகூறப்பட்ட காசுப்பாய்ச்சல்களின் பெறுமதி மற்றும் நேரத்தைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டன.<br><br>◉ அடிப்படைத் தனிப்பட்ட கடன் குறைபாட்டின் எண்கணித துல்லியம் பரீட்சிக்கப்பட்டது .<br><br>◆ கடன் குறைபாட்டிற்காக கூட்டு அடிப்படையில் மதிப்பிடப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கானது:<br><br>◉ எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கான கொடுப்பனவுகளில் பயன்படுத்தப்படும் முக்கிய உள்ளீடுகள் மற்றும் கணக்கீடுகளை பரீட்சித்தது.<br><br>◉ "டித்வா" புயலால் ஏற்படும் தாக்கத்தை கருத்தில் கொள்வது உட்பட அடிப்படை முறை மற்றும் முகாமைத்துவ மேலடுக்குகளில் நிர்வாகத்தால் பயன்படுத்தப்படும் முடிவுகள் , அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் நியாயத்தன்மையை மதிப்பீடு செய்தேன்.<br><br>◉ எனது சோதனையில் பயன்படுத்தப்பட்ட முன்னோக்கிப் பார்க்கும் தகவல்களின் நியாயத்தன்மையை மதிப்பீடு செய்தல், கருத்தில் கொள்ளப்பட்ட பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் அந்த ஒவ்வொரு சூழ்நிலைகளுக்கும் ஒதுக்கப்பட்ட நிகழ்தகவு முன்னுரிமை ஆகியவை அடங்கும்.<br><br>• குறிப்புகள் 4.4.11.6 மற்றும் 28 இல் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய நிதியியல் அறிக்கைகளின் வெளிப்பாடுகளின் போதுமான தன்மையை மதிப்பீடு செய்தேன். |

# REPORT OF THE AUDITOR GENERAL

| முக்கிய கணக்காய்வு விடயங்கள் | எனது கணக்காய்வு முக்கிய கணக்காய்வு விடயத்தை எவ்வாறு கையாண்டுள்ளது |
|---|---|
| **தகவல் தொழில்நுட்ப அமைப்புகள் தொடர்பான நிதி அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாடுகள்.**<br><br>வங்கியின் நிதி அறிக்கையிடல் செயல்முறை தானியங்கி செயல்முறைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளுடன் பல தகவல் தொழில்நுட்ப அமைப்புகளை கணிசமாக நம்பியுள்ளது. மேலும், தகவல் தொழில்நுட்ப அமைப்புக்களால் உருவாக்கப்பட்டதரவு மற்றும் அறிக்கைகளைப் பயன்படுத்தி முக்கிய நிதி அறிக்கை வெளிப்பாடுகள் தயாரிக்கப்படுகின்றன. அவை விரிதாள்களைப் பயன்படுத்தி தொகுக்கப்பட்டு வடிவமைக்கப்படுகின்றன. அதன்படி, தகவல் தொழில்நுட்ப அமைப்புகள் தொடர்பான நிதி அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாடுகள் ஒரு முக்கிய கணக்காய்வு விடயமாக கருதப்பட்டது. | எனது கணக்காய்வு நடைமுறைகள் பின்வரும் முக்கிய நடைமுறைகளை உள்ளடக்கி உள்ளது<br><br>• செயல்முறைகளின் உள்ளடக கட்டுப்பாட்டு சூழல் பற்றிய புரிதலைப் பெற்றேன் மற்றும் நிதி அறிக்கை மற்றும் தொடர்புடைய வெளிப்பாடுகள் தொடர்பான பொருத்தமான கட்டுப்பாடுகளை பரிசோதனை செய்தேன்.<br><br>• நான் எனது உள்ளக சிறப்புவாய்ந்த வளங்களை ஈடுபடுத்தி மற்றும்,<br>◆ பயனர் அணுகல் மற்றும் மாற்ற முகாமைத்துவம் தொடர்பானவை உட்பட தகவல் தொழில்நுட்ப அமைப்புகள் தொடர்பான உள் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் செயல்பாடு செயல்திறனை அடையாளம் கண்டு மதிப்பீடு செய்து பரிசோதனை செய்தேன், மற்றும்<br>◆ வங்கியை பாதிக்கும் சைபர் பாதுகாப்பு இடர் மற்றும் இந்த இடர்களை முதன்மையாக விசாரணை மூலம் தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து உயர் மட்ட புரிதலைப் பெற்றுக்கொண்டேன்.<br><br>• பொதுப் பேரேட்டு கணக்கிணக்கங்களை மதிப்பாய்வு செய்வது உட்பட, துல்லியம் மற்றும் முழுமைக்காக வெளிப்பாடுகளை உருவாக்கப் பயன்படுத்தப்படும் அறிக்கைகளின் மூலத் தரவை நான் பரிசோதனை செய்தேன். |

## 1.4 வங்கியின் 2025 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்கள் வங்கியின் 2025 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்களை உள்ளடக்குகின்றது, ஆனால் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதனிலான எனது கணக்காய்வு அறிக்கையை உள்ளடக்கவில்லை. ஆண்டறிக்கையானது இந்த கணக்காய்வாளரது அறிக்கை திகதியின் பின்னர் எனக்கு கிடைக்கப்பெறும். ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாளியாயுள்ளது.

நிதிக் கூற்றுக்களிலான எனது அபிப்பிராயமானது ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன் நான் இவற்றில் எவ்விதமான உறுதிமொழி முடிவினை தெரிவிக்கவில்லை.

நிதிக் கூற்றுக்களின் எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பு மேலே இனங்காணப்பட்டுள்ள ஏனைய தகவல்கள் கிடைக்கப்பெறும்போது அவற்றை வாசித்தல், மற்றும் அவ்வாறு செய்யும்போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் அல்லது கணக்காய்வில் நான் பெற்றுக்கொண்ட அறிவில் பொருண்மையான முரண்பாடுடையதாக உள்ளதா அல்லது இல்லையெனில் பொருண்மையானளவு தவறாகக் கூறப்பட்டுள்ளதா என கருதவேண்டியுள்ளது.

வங்கியின் 2025 ஆண்டறிக்கையினை நான் வாசிக்கும்போது, அவற்றில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் உள்ளன என நான் முடிவுக்கு வந்தால், நான் அந்த விடயத்தினை திருத்தத்திற்கான ஆளுகையுடன் பொறுப்புடையோருக்கு அறிவிப்பதற்கு வேண்டப்படுகின்றேன். திருத்தப்படாத பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் மேலும் காணப்படின், அவை பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையில் உள்ளடக்கப்படும். அரசியலமைப்பின் உறுப்புரை 154 (6) இன் ஏற்பாடுகளைத் தொடர்ந்து எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

## 1.5 முகாமைத்துவத்தின் மற்றும் நிதிக் கூற்றுக்களின் ஆளுகைக்கு பொறுப்பாயுள்ளோரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய ஒரு மெய்யானதும் மற்றும் நியாயமானதுமான கருத்தினை வழங்குகின்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாயுள்ளதுடன் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதனை இயலுமையாக்குவதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாயுள்ளது.

நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது ஓர் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியினை தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் குழுமத்தினை கலைப்பதற்கு அல்லது செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தைக் கொண்டிருந்தாலன்றி அல்லது யதார்த்தமான எவ்வித மாற்றுவழியுமின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, உகந்தவாறு நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுகைக்கு பொறுப்புடையோர் வங்கி மற்றும் குழுமத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாயுள்ளார்கள்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 16 (1) இற்கமைய குழுமமானது அதன் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமையாக்குவதற்காக அதன் அனைத்து வருவாய், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி முறையான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு வேண்டப்படுகின்றது.

### 1.6 நிதிக் கூற்றுக்களது கணக்காய்விற்கு கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஒரு பொருண்மையான பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்ற நியாயமான எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை பொருண்மையானதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்:

- நிதிக் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களது இடர்களை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்களுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குவதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடரிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் பொருண்மையான பிறழ் கூற்றினை இனங்காணாத இடரானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், தவறான பிரதிநிதித்துவங்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

- குழுமத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்.

- முகாமைத்துவத்தின் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியினை தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலில் பொருண்மையான சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் குழுமமானது நிறுவனத் செயல்நிலை தொடர்ச்சியினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

- ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயத்தினை தெரிவிப்பதற்காக நிறுவனம் அல்லது வியாபார நடவடிக்கைகள் தொடர்பாக குழுமத்தின் நிதியியல் தவகல்களுக்கான போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. வழிகாட்டல்கள், மேற்பார்வை மற்றும் குழுமக் கணக்காய்வு செயற்திறனுக்கு நானே பொறுப்பாவேன். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு மட்டுமே நான் தனித்து பொறுப்பாவேன்.

ஆளுகை தொடர்பாக பொறுப்பானவர்களுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

### 2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப் படுத்தல் தேவைப்பாடுகளிலான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்கான குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1.1 கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (a) இன் தேவைக்கேற்ப வங்கியானது முறையான கணக்கீட்டு பதிவுகளை வைத்துள்ளதான தோற்றத்தை வழங்குகின்றது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1)(d)(iii) பிரிவின் தேவைக்கேற்ப சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (d) (iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

2.2 வங்கியியல் சட்டத்தின் 1988 ஆம் ஆண்டின் 30 இல பிரிவு 39 (வங்கியியல் திருத்தச் சட்டம் 2024 ஆண்டின் 24 இல) பின்வரும் தேவைப்பாடுகளுக்கான பிரத்தியேகமான ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

2.2.1 இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டு இல 05 சுற்றறிக்கைக்கிணங்க இணைந்த நிதியியல் கூற்றுக்களின் வெளிப்படுத்தல்கள்.

# REPORT OF THE AUDITOR GENERAL

2.3 செயலாற்றப்பட்ட செயன்முறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை.

2.3.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (d) இன் தேவைக்கேற்ப வழக்கமான வணிக நிகழ்வுகளுக்கு அப்பால் வங்கியினது ஆளுகை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் வங்கியினால் செய்து கொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு,

2.3.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (f) இன் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூல சட்டம், வங்கியின் ஆளுகை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு வங்கி இணக்கப்பாடு காணவில்லை என குறிப்பிடுவதற்கு,

2.3.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (g) பிரிவின் தேவைக்கேற்ப வங்கியானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை என குறிப்பிடுவதற்கு,

2.3.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (h) பிரிவின் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு ஏற்றாற்போல் வங்கியின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்படுத்தப்படவில்லை என குறிப்பிடுவதற்கு.

**எல் எஸ் ஐ ஜயரத்ன**
**(கணக்காய்வாளர் நாயகம்)**

# நிதியியல் அறிக்கைகள் - உள்ளடக்கம்


| | பக்க இல. |
|---|---|
| **முதன்மை நிதிக்கூற்றுக்கள்** | |
| இலாப நட்ட கூற்று | 236 |
| முற்றடக்க வருமானக் கூற்று | 237 |
| நிதியியல் நிலைமை கூற்று | 238 |
| உரிமைமாற்றக் கூற்று | 240 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 244 |
| **நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள்** | |
| 1. அறிக்கையிடும் நிறுவனம் | 246 |
| 2. நிதி கூற்றுக்களுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு | 247 |
| 3. தயாரிப்பின் அடிப்படை | 247 |
| 4. பொருண்மை கணக்கியல் கொள்கை | 250 |
| 5. காப்புறுதி வணிகம் | 259 |
| 6. வழங்கப்பட்டு அறிக்கையிடல் திகதிவரை பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படாத புதிய கணக்கீட்டு நியமங்கள் | 260 |
| 7. மொத்த வருமானம் | 262 |
| 8. தேறியவட்டி வருமானம் | 262 |
| 9. தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 264 |
| 10. வர்த்தகத்தின் மூலம் தேறிய இலாபம்/(நட்டம்) | 265 |
| 11. இலாபம்/நட்டத்தின் ஊடாக நிதிக் கருவிகளின் நியாயப் பெறுமதியினாலா தேறிய அதிகரிப்பு/ (இழப்பு) | 265 |
| 12. அங்கீகரிக்கப்படாத நிதிச் சொத்துக்களின் மூலமான தேறிய இலாபம் அல்லது நட்டம் | 265 |
| 13. தேறிய ஏனைய செயற்பாட்டு வருமானம் | 266 |
| 14. கடன் மற்றும் பிற இழப்புக்களுக்கான பெறுமதி குறைப்பு விதிப்பனவு/ (மாற்றுப் பதிவு) | 267 |
| 15. ஆளணிச் செலவுகள் | 268 |
| 16. பெறுமானத் தேய்வு மற்றும் காலத்தேய்மானம் | 269 |
| 17. பிற செலவுகள் | 270 |
| 18. வரிகள் | 271 |
| 19. இணை நிறுவனங்களின் இலாபம்/ (நட்டம்) பங்குகள் தேறிய வரியில் | 272 |
| 20. பங்கொன்றுக்கான உழைப்பு மற்றும் பங்கொன்றுக்கான பங்கிலாபம் | 273 |
| 21. அளவீட்டு அடிப்படையில் நிதிக் கருவிகளின் பகுப்பாய்வு | 274 |
| 22. காசும் காசுக்கு சமமானவையும் | 277 |
| 23. மத்திய வங்கிகளுடனான நிலுவைகள் | 278 |
| 24. வங்கிகளுடனான வைத்திருப்புக்கள் | 279 |
| 25. மீள் விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பத்திரங்கள் | 280 |
| 26. பெறுதி நிதியியல் சொத்துக்கள் | 281 |
| 27. அங்கீகரிக்கப்பட்ட நிதி நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 281 |
| 28. தேய்மானக் கிரயத்தில் நிதிச் சொத்துக்கள் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 290 |
| 29. தேய்மானக் கிரயத்தில் நிதிச் சொத்துக்கள் கடன் மற்றும் ஏனைய பத்திரங்கள் | 297 |
| 30. ஏனைய முற்றடக்க வருமானத்தின் மூலம் நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 303 |
| 31. துணை நிறுவனங்களில் முதலீடு | 306 |
| 32. இணை நிறுவனங்களில் முதலீடு | 311 |

| | பக்க இல. |
|---|---|
| 33. முதலீட்டு ஆதனங்கள் | 314 |
| 34. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 316 |
| 35. ஆதனங்களைப் பயன்படுத்துவதற்கான உரிமை/ குத்தகை சொத்துக்கள் | 330 |
| 36. கட்புலனாகாச் சொத்துக்கள் | 333 |
| 37. பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள்/(பொறுப்புக்கள்) | 334 |
| 38. ஏனைய சொத்துக்கள் | 336 |
| 39. வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை | 336 |
| 40. மீள் கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பத்திரங்கள் | 337 |
| 41. பெறுதி நிதியியல் சாதனங்கள் | 337 |
| 42. கடன்தீர்வு கிரயத்தில் நிதியியல் பொறுப்புக்கள் - வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 338 |
| 43. கடன்தீர்வு கிரயத்தில் நிதியியல் பொறுப்புக்கள் - பிற கடன்கள் | 339 |
| 44. வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 339 |
| 45. நடைமுறை வரிப்பொறுப்புக்கள்/(சொத்துக்கள்) | 340 |
| 46. காப்புறுதி ஒப்பந்த பொறுப்புக்கள் | 341 |
| 47. ஏனைய பொறுப்புக்கள் | 342 |
| 48. ஊழியர் ஓய்வூதியத் திட்டங்கள் | 342 |
| 49. துணைநிலை பொறுப்புக்கள் | 352 |
| 50. பங்கு மூலதனம் | 356 |
| 51. நிரந்தர ஒதுக்கு நிதியம் | 356 |
குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்களின் எச்சப் பெறுமதிகள், பயன்பாட்டுக் காலங்கள் மற்றும் பெறுமானத்தேய்வு முறைகள் என்பவற்றை மீளாய்வு செய்கின்றது. இந்த பெறுமதிகள், வீதங்கள் மற்றும் முறைகளின் மதிப்பீட்டில் முகாமைத்துவத்தின் கருத்தானது நிறைவேற்றப்படுவதுடன், இதனால் இவை நிச்சயமற்றதன்மைக்கு உட்பட்டவையாகும். ஒவ்வொரு சொத்துப்பிரிவிற்கும் பயன்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு முறைகள் மற்றும் வீதங்களது விபரங்கள் குறிப்பு 34 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 3.3.8.9 முதலீட்டு ஆதனங்களின் வகைப்பாடு

ஒரு ஆதனம் ஒரு முதலீட்டு ஆதனமாக தகமை பெறுகின்றதா என்பதை தீர்மானிப்பதற்கு முகாமைத்துவம் அதன் பகுத்தறிவினை பயன்படுத்த வேண்டியுள்ளது. வாடகைகளை உழைப்பதற்காக வைத்திருக்கப்படும் ஒரு ஆதனம் அல்லது மூலதன பெறுமதியேற்றத்திற்காக அல்லது இரண்டிற்காகவும் வைத்திருக்கப்படுபவை குழுமத்தினால் வைத்திருக்கப்படும் ஏனைய சொத்துக்களிலிருந்து பெரும்பாலும் சுயாதீனமாக காசுப் பாய்ச்சல்களை உருவாக்கினால், அவை முதலீட்டு ஆதனங்களாக கணக்கீடு செய்யப்படுகின்றன. மறுபுறத்தில், செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் ஆதனங்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கான செயன்முறைக்காக அல்லது நிர்வாக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படுபவை, தனித்து நிற்கும் சொத்துக்களாக காசுப்பாய்ச்சல்களை நேரடியாக உருவாக்க இயலாதவை ஆதனம், பொறி மற்றும் உபகரணமாக கணக்கீடு செய்யப்படுகின்றது.

### 3.3.8.10 முதலீடு செய்யப்பட்டவர்கள் மீதான கட்டுப்பாடுகளது தீர்மானம்

துணைநிறுவனங்கள் என்பன வங்கியினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களாகும், வங்கியானது வெளிப்படுத்தப்படும்போது கட்டுப்பாடு அடையப்படுகின்றது, அல்லது முதலீடு செய்யப்பட்டுள்ளவருடனான அதன் ஈடுபாட்டிலிருந்து மாற்றமடையக்கூடிய விளைவுக்கான உரிமையினைக் கொண்டிருத்தல் மற்றும் முதலீடு செய்யப்பட்டுள்ளவர் மீதான அதன் அதிகாரத்தினூடாக அந்த முதலீடு செய்யப்பட்டவர்களது விளைவினில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய ஆற்றலினை கொண்டிருத்தல் ஆகும். வங்கி அதன் முதலீடு செய்யப்பட்டவர்கள் மீதான கட்டுப்பாட்டினை தீர்மானிப்பதற்காக முகாமைத்துவமானது அதன் பகுத்தறிவினை பிரயோகிக்கின்றது.

### 3.3.8.11 வரிவிதிப்பு

குழுமமானது வருமான வரி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) மற்றும் ஏனைய பொருத்தமான வரிகளுக்கு உட்பட்டதாகும். இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் நேரத்தில் பொருத்தமான வரிச் சட்டங்களது பொருள் விளக்கம் தொடர்பாக நிலவிய நிச்சயமற்ற தன்மையின் காரணமாக நடைமுறை, ஒத்திவைக்கப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்காக மொத்த ஏற்பாட்டினை தீர்மானிப்பதற்கு ஒரு கருத்து தேவைப்படுகின்றது. பொருத்தமான வரி வீதங்களின் விபரங்கள் மற்றும் ஏனைய தகவல்கள் குறிப்புக்கள் 4.8, 18 மற்றும் 37 இல் வழங்கப்பட்டுள்ளன. குழுமமானது மாற்றுவிலையிடல் ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்பட்டுள்ளதுடன் மாற்றுவிலையிடல் ஒழுங்குவிதிகளின் தாக்கத்தினை தீர்மானிப்பதற்கு முகாமைத்துவம் பகுத்தறிவினை பயன்படுத்துவதற்கான அவசியம் காணப்படுகின்றது. இதன் பிரகாரம், பார்வையளவில் ஒழுங்குவிதிகளை பிரயோகிப்பதில் முக்கியமான கருத்துக்களும் மதிப்பீடுகளும் பயன்படுத்தப்பட்டன. இது பின்வருவன உள்ளடங்கலாக ஆனால் வரையறுக்கப்படாத, இணைக்கப்பட் பொறுப்பேற்புக்களினை இனங்காணுதல், உரிய முழங்கையளவு தூர விலைகளது மதிப்பீடு மற்றும் பொருத்தமான விலையிடல் பொறிமுறையினை தெரிவுசெய்தல் என்பனவாகும். நடைமுறை வரிச் சுமையானது அத்தகைய பகுத்தறிவுகளுக்கு உட்பட்டதாகும். முகாமைத்துவத்தின் பொருள் விளக்கம் மற்றும் வரி ஒழுங்குவிதிகளது பிரயோகத்திற்கிடையேயான வித்தியாசங்களின் விளைவாக மதிப்பிடப்பட்ட வருமான வரிச் சுமைக்கும் மெய்யாகவே செலுத்தவேண்டியவைக்கும் இடையே வித்தியாசங்கள் எழலாம்.

## 4 பொருண்மை கணக்கீட்டு கொள்கைகள்

வங்கி மற்றும் குழுமத்தினால் அதன் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன் அவை கீழே உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை வங்கியின் மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்களில், வேறாக குறிப்பிடப்பட்டாலன்றி, முன்னிலைப்படுத்தப்பட்ட அனைத்து காலப்பகுதிகளுக்கும் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டுள்ளன.

### 4.1 ஒருங்கிணைப்பின் அடிப்படை

குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள், SLFRS 10 – "ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள்" இன் பிரகாரம் வங்கி மற்றும் அதன் துணைநிறுவனங்களது ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் LKAS 27 – "ஒருங்கிணைப்பட்ட மற்றும் வெவ்வேறான நிதிக் கூற்றுக்கள்" இன் பிரகாரம் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் LKAS 28 – "இணை நிறுவனங்களிலான மற்றும் கூட்டு முயற்சிகளிலான முதலீடுகள்" இன் பிரகாரம் அதன் இணைக்கம்பனிகளின் இலாபம் அல்லது நட்டம் மற்றும் தேறிய சொத்துக்களின் விகிதாசாரப் பங்கு ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. வங்கியின் நிதிக் கூற்றுக்கள், உள்நாட்டு வங்கியியல் அலகு, கரைகடந்த வங்கியியல் அலகு மற்றும் வங்கியின் வெளிநாட்டு செயற்பாடுகளை உள்ளடக்குகின்றன. துணைநிறுவனங்கள் மற்றும் இணைநிறுவனங்களின் ஒருங்கிணைப்பு தொடர்பான கணக்கீட்டு கொள்கைகளின் விபரங்கள் குறிப்புகள் 31 மற்றும் 32 இல் வழங்கப்பட்டுள்ளன.

### 4.1.1 வணிக சேர்க்கைகள்

கையகப்படுத்தப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்பேற்கப்பட்ட பொறுப்புக்கள் ஒரு வணிகமென உருவாக்கும் தேவையுடைய SLFRS 3 – "வணிகச் சேர்க்கைகள்" இன் வரைவிலக்கணத்தினை பிரயோகிப்பதன் மூலம் ஒரு கொடுக்கல் வாங்கல் அல்லது ஏதேனும் நிகழ்வு ஒரு வணிகச் சேர்க்கையாவென குழுமம் தீர்மானிக்கின்றது. வணிகச் சேர்க்கைகள் கையகப்படுத்தல் முறையினை பயன்படுத்தி கணக்கீடு செய்யப்படுகின்றன.

கையகப்படுத்தல் தினத்தன்று கட்டுப்பாடற்ற நலன்களின் தொகையானது ஒன்றில் நியாயப் பெறுமதியில் அல்லது கையகப்படுத்துபவரின் இனங்காணப்பட்ட தேறிய சொத்துக்களின் கட்டுப்பாடற்ற நலன்களின் விகிதாசார பங்கில் அளவீடு செய்யப்படுகின்றது. கையகப்படுத்தல் தொடர்பான செலவுகள் கையகப்படுத்துபவர் ஒரு வணிகச் சேர்க்கையினை செயலாற்றுவதற்கு ஆட்படும் செலவுகளாகும். இந்தச் செலவினங்கள், கண்டறியுநரின் கட்டணங்கள், ஆலோசனை, சட்ட, கணக்கீட்டு, பெறுமதியிடல், ஏனைய தொழில்சார் ஆலோசனைக் கட்டணங்கள், ஒரு உள்வாரி கையகப்படுத்தல் பிரிவினை பராமரிப்பதிலான செலவு உள்ளடங்கலான பொது நிர்வாகச் செலவுகள் மற்றும் கடன் மற்றும் உரித்துவப் பிணையங்களின் பதிவீடு மற்றும் வழங்கல் செலவுகள் என்பனவாகும். கடன் அல்லது உரித்துவ பிணையங்களது வழங்கலுடன் இணைந்தவை தவிர்ந்த கையகப்படுத்தல் தொடர்பான செலவுகள் அவை ஆட்பட்ட காலப்பகுதியில் செலவாகக் கருதப்படுகின்றன.

குழுவாகை பரிவர்த்தனையின் அடிப்படையில் ஒரு பரிவர்த்தனை மூலம் இதன் நியாயமான மதிப்பில் அல்லது கையகப்படுத்தம் தேதியில் அடையாளம் காணக்கூடிய நிகர சொத்துக்களின் அங்கிகரிக்கப்பட்ட தொகையின் விகிதாசாரப்பங்கில்

ஒரு வணிக அமைப்புத் தொடர்பாக குழுமம் மேற்கொள்ளும் கடன் அல்லது பங்குப் பத்திரங்களை வெளியிடுவது தொடர்பான செலவுகளைத்தவிர, மற்ற பரிவர்த்தனைச் செலவுகள் அவை ஏற்படும்போதே செலவீனமாகப் பதியப்படும்.

### 4.1.2 கட்டுப்பாட்டினை இழத்தல்

குழுமம் ஓர் துணைநிறுவனத்தின் மீதான கட்டுப்பாட்டை இழந்துவிடும்போது, துணைநிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை, மற்றும் ஏதேனும் தொடர்புள்ள கட்டுப்படுத்தாத நலன் (NCI) மற்றும் ஏனைய உரித்துவத்தின் கூறுகள் அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றது. இதன்விளைவாக ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் இலாபத்தில் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. முன்னாள் துணைநிறுவனத்தில் தக்கவைக்கப்படும் ஏதேனும் நலனானது கட்டுப்பாடு இழக்கப்படும்போது நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றது. மேலும், முன்னர் ஏனைய விரிவான வருமானத்தில் (OCI) அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் ஆக்கக்கூறுகளின் பங்கானது பொருத்தமானவாறு இலாபம் அல்லது நட்டம் அல்லது தக்கவைக்கப்பட்டுள்ள உழைப்புகளாக மீள்வகைப்படுத்தப்படுகின்றது. கட்டுப்பாடு இழப்பின் காரணமாக ஏற்படும் ஏதேனும் மிகை அல்லது குறைபாடு இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. குழுமம் முன்னைய துணைநிறுவனத்தின் ஏதேனும் நலனைத் தக்கவைத்துக்கொண்டால், அத்தகைய நலன் கட்டுப்பாடு இழக்கப்பட்ட திகதியில் நியாயமான பெறுமதியில் அளவீடுசெய்யப்படுகின்றது. அதன்பின்னர் அது உரித்துவம் கணக்கீடு செய்யப்பட்ட முதலீடு பெறுபவராக, அல்லது தக்கவைக்கப்பட்ட செல்வாக்கு மட்டத்துக்கு ஏற்றவகையில் நிதியியல் கருவிகளுக்கான குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் கணக்கீடு செய்யப்படுகின்றது.

## 4.2 வெளிநாட்டு நாணயப் பரிமாற்றல்கள்

### 4.2.1 வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகள்

ஆரம்ப அங்கீகாரத்தின்போது வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள், கொடுக்கல் வாங்கல் தினத்தில் நடைமுறையிலுள்ள ஸ்பாட் பரிமாற்ற வீதத்தில் செயற்பாட்டின் கருமப்பாட்டு நாணயமாகிய இலங்கை ரூபாவுக்கு (LKR) மாற்றம் செய்யப்படுகின்றன. அறிக்கையிடல் திகதியில் வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட பணரீதியான சொத்துக்களும், பொறுப்புகளும் அத்திகதியில் உள்ள ஸ்பாட் பரிமாற்ற வீதத்தில் கருமப்பாட்டு நாணயத்துக்கு மீள்மாற்றம் செய்யப்பட்டு, வர்த்தகமல்லாத செயற்பாடுகளில் எழும் சகல வேறுபாடுகளும் இலாப அல்லது நட்டக் கூற்றில் "தேறிய ஏனைய செயற்பாட்டு வருமானத்திற்கு" (குறிப்பு 13) கொண்டு செல்லப்படுகின்றது. ஒரு வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று கிரயத்தின் பிரகாரம் அளவீடு செய்யப்படும் நாணயமல்லாத சொத்துக்களும், பொறுப்புகளும் ஆரம்ப அங்கிகாரம் செய்யப்பட்ட திகதியில் நிலவும் பரிமாற்றல் வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றம் செய்யப்படுகின்றன. நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாணயமல்லாத சொத்துக்களும், பொறுப்புகளும், நியாயப் பெறுமதி தீர்மானிக்கப்படும் தினத்தில் ஏதேனும் பரிமாற்றல் இலாபம் அல்லது நட்ட ஆக்கக்கூறு உள்ளடங்கலாக ஸ்பாட் பரிமாற்ற வீதத்தில் கருமப்பாட்டு நாணயத்திற்கு மீள்மாற்றம் செய்யப்படுகின்றன. பரிமாற்றல் ஆக்கக்கூறு உள்ளிட்ட ஒரு நாணயமல்லாத உறுப்படியிலான இலாபம் அல்லது நட்டம் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. முன்னோக்கிய பரிமாற்றல் ஒப்பந்தங்கள், அறிக்கையிடல் திகதியில் காணப்படும் முன்னோக்கிய சந்தை வீதங்களில் மதிப்பிடப்பட்டு அதன்விளைவான தேறிய எய்தப்பெற்றிராத இலாபங்கள் அல்லது நட்டங்கள், இலாபம் அல்லது நட்டக் கூற்றினுள் கையாளப்படுகின்றன.

### 4.2.2 வெளிநாட்டுச் செயற்பாடுகள்

**வெளிநாட்டுச் செயற்பாடுகளின்** விளைவுகளும், நிதிநிலைமையும் கருமப்பாட்டு நாணயமான இலங்கை ரூபாவாக இல்லாதவிடத்து அவை பின்வருமாறு இலங்கை ரூபாவுக்கு மாற்றப்படுகின்றன:

வெளிநாட்டுச் செயற்பாடுகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அறிக்கையிடல் திகதியிலுள்ளபடியான ஸ்பாட் பரிமாற்ற வீதத்தில் இலங்கை ரூபாவாக மாற்றப்படுகின்றன.

வெளிநாட்டுச் செயற்பாடுகள் குறித்த வருமானம் மற்றும் செலவினங்கள் அக்காலப்பகுதிக்கான சராசரி பரிமாற்றல் வீதத்திற்கேற்ப மாற்றப்படுகின்றன. வெளிநாட்டுச் செயற்பாடுகள் மதிப்பு மாற்றம் செய்யப்படும்போது இடம்பெறும் வெளிநாட்டு நாணய வேறுபாடுகள் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஒரு வெளிநாட்டுச் செயற்பாடானது கையுதிர்ப்பு செய்யப்படும்போது, மாற்றல் ஒதுக்கத்திலுள்ள இயைபுள்ள தொகை ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் அல்லது ஏனைய செயற்பாட்டுச் செலவினத்தில் கையுதிர்ப்பின்போதான இலாபம் அல்லது நட்டத்தின் ஒருபகுதியாக இலாபம் அல்லது நட்டத்திற்கு மாற்றல் செய்யப்படுகின்றது.

### 4.2.3 இடர்காப்புக் கணக்கீடு

வங்கியானது கொடுக்கல் வாங்கல் செய்யும் நிறுவனங்களுடன் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற வெளிநாட்டு நாணயமாற்று இடரினைக் குறைத்துக்கொள்வதற்காக இழப்பீட்டுக் காப்பு ஏற்பாடுகளை மேற்கொள்கின்றது. SLFRS 09 இன் பிரகாரம், ஒரு உருப்படி முழுவதினையும் அல்லது ஒரு உருப்படியின் ஒரு கூறினை ஒரு இழப்பீட்டுக் காப்பு உறவினில் இழப்பீட்டு காப்பு செய்யப்பட்ட உருப்படியாக கருதலாம். ஒரு இழப்பீட்டுக் காப்பு உறவானது, தகுதியுடைய இழப்பீட்டுக் காப்பு கருவிகள் மற்றும் தகுதியுடைய இழப்பீட்டுக் காப்பு உருப்படிகளை மாத்திரம் இழப்பீட்டுக் காப்பு உறவானது கொண்டிருந்தால் மாத்திரமே இழப்பீட்டுக் காப்பு கணக்கீட்டிற்கு தகுதி பெறுகின்றது. இழப்பீட்டுக் காப்பு உறவின் ஆரம்பத்தில், இழப்பீட்டுக் காப்பு உறவின் மற்றும் நிறுவனத்தின் இடர் முகாமைத்துவக் குறிக்கோள் மற்றும் இழப்பீட்டுக் காப்பினை பொறுப்பேற்பதற்கான மூலோபாயம் ஆகியவற்றின் முறையான நியமனம் மற்றும் ஆவணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அந்த ஆவணங்கள், இழப்பீட்டுக் காப்பு கருவி, இழப்பீட்டுக் காப்பு செய்யப்பட்ட உருப்படி, இழப்பீட்டு காப்பு செய்யப்படுகின்ற இடரின் தன்மை, எவ்வாறு நிறுவனம் இழப்பீட்டுக் காப்பு உறவானது இழப்பீட்டுக் காப்பு விளைவுடைமை தேவைப்பாடுகளை சந்திக்கின்றது என்பதை மதிப்பீடு செய்யும் என்பவற்றுடன் இழப்பீட்டுக் காப்பு விளைவுடைமையின் மூலங்கள் மற்றும் எவ்வாறு அது இழப்பீட்டுக் காப்பு விகிதத்தினை தீர்மானிக்கின்றது என்ற அதன் பகுப்பாய்வினையும் உள்ளடக்குகின்றது. SLFRS 9 – "நிதியியல் கருவிகள் ஆனது மூன்று வெவ்வேறு நியமிக்கப்பட்ட பிரிவுகளுக்கு இழப்பீட்டுக் காப்பு கணக்கீட்டினை இயலுமையாக்குகின்றது. அவற்றில் காசுப் பாய்ச்சல் இழப்பீட்டுக் காப்பு (ஒரு உயர்ந்த சாத்தியமுடைய எதிர்வுகூறப்பட்ட கொடுக்கல் வாங்கலுக்காக, ஒரு உறுதியான கடப்பாடு (ஐந்தொகையில் பதிவு செய்யப்படாதவை). ஒரு அங்கீகரிக்கப்பட்ட சொத்தின் அல்லது பொறுப்பின் வெளிநாட்டு நாணய காசுப் பாய்ச்சல்கள், அல்லது ஒரு எதிர்வுகூறப்பட்ட கம்பனிகளுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல் ஆகியவற்றுக்காக நியமிக்கப்பட்டுள்ளன). நியாயப் பெறுமதி இழப்பீட்டுக் காப்பு (ஒரு திடமான கடப்பாட்டிற்காக (பதிவு செய்யப்படாதவை) அல்லது ஒரு அங்கீகரிக்கப்பட்ட சொத்து அல்லது பொறுப்பின் வெளிநாட்டு நாணய காசுப் பாய்ச்சல்களுக்காக நியமிக்கப்பட்டவை). தேசிய முதலீட்டு இழப்பீட்டுக் காப்பு (ஒரு வெளிநாட்டு செயற்பாட்டில் தேறிய முதலீட்டிற்காக நியமிக்கப்பட்டது). வங்கியானது SLFRS 9 – "நிதியியல் கருவிகள்" இல் குறித்துரைக்கப்பட்டுள்ள இழப்பீட்டுக் காப்பு கணக்கீட்டு செயற்பாட்டின் கீழ், ஒத்த கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்வதுடன், இவை அத்தகைய கருவிகளது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியில் காணப்படும் முன்னோக்கிய பரிமாற்றல் வீதத்தினை பயன்படுத்தி பெறுமதியிடப்படுகின்றன.

## 4.3 கடன் மற்றும் உரித்துவம் இடையேயான நிதியியல் கருவிகளின் வகைப்பாடு

கடன் மற்றும் உரித்துவம் இடையேயான நிதியியல் கருவிகளின் வகைப்பாடு அத்தகைய கருவிகளின் பின்வரும் பண்புகளின் அடிப்படையிலாகும்::

- கருவிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பெயர் அல்லது முகப்புச்சீட்டு
- ஒரு நிலையான முதிர்வுத் திகதி காணப்படுதல் அல்லது இல்லாதிருத்தல்
- கருவியின் வாழ்நாள்

- கொடுப்பனவுகளின் மூலம்
- கொடுப்பனவுகளை வலியுறுத்துவதற்கான உரிமை
- முகாமைத்துவத்தில் பங்குபற்றுவதற்கான உரிமைகள்
- கருவிகளினுள் உள்ளடங்கியுள்ள இடர்
- காசுப் பாய்ச்சல்களின் தளம்பல்
- பிணைச்சொத்துக்களாக வழங்கப்பட்டுள்ள பிணையங்கள்

## 4.4 நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள்

### 4.4.1 நிதியியல் கருவிகளின் அங்கீகாரம் மற்றும் அங்கீகார நீக்கம்

சகல நிதிச் சொத்துக்களும், பொறுப்புகளும் ஆரம்பத்தில் தீர்ப்பனவுத் திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றன, அதாவது, குழுமம் கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பாக ஆகும் திகதியிலாகும். இது “வழக்கமான வழி வர்த்தகங்களை” உள்ளடக்குகின்றது. வழக்கமான வழி வர்த்தகங்கள் என்பது சந்தையில் ஒழுங்குவிதியினால் அல்லது மரபுவழியின் மூலம் பொதுவாக நிறுவப்பட்டுள்ள கால எல்லையினுள் சொத்துக்களின் விநியோகம் அவசியமான நிதிச் சொத்துக்களின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகள் என்று பொருள்படும். கடன்கள் மற்றும் வருமதிகள் கடன் பெறுநர்களுக்கு எப்போது காசு வழங்கப்படுகின்றதோ (அல்லது தீர்க்கப்படுகின்றதோ) அப்போது அங்கீகரிக்கப்படுகின்றது. இலாபம் அல்லது நட்டத்தினூடாக நிதிச் சொத்துக்கள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அங்கிகரிக்கப்படுகின்றன.

ஏனைய அனைத்து நிதிச் சொத்துக்களும் ஆரம்பத்தில் அவற்றின் நியாயப் பெறுமதியுடன் நேரடியாக உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் செலவுகளுடன் சேர்த்து அங்கீகரிக்கப்படுகின்றன. குழுமமானது பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு நிதிச் சொத்தினை அங்கீகார நீக்கம் செய்கின்றது சொத்திலிருந்தான ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்கள் முதிர்வடையும்போது அல்லது நிதிச் சொத்திலான ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமையினை மாற்றல் செய்யும் ஒரு கொடுக்கல் வாங்கலில் உரித்துடைமையின் கணிசமான அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகள்மாற்றல் செய்யப்பட்டிருப்பின் ஆகும்.

குழுவால் உருவாக்கப்பட்ட அல்லது தக்கவைக்கப்பட்டு மாற்றப்பட்ட நிதி சொத்துக்கள் மீதான எந்தவொரு ஆர்வமும் ஒரு தனி சொத்தாக அல்லது பொறுப்பாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஒரு நிதிப் பொறுப்பானது பொறுப்பின் கீழான கடப்பாடானது வெளியேற்றப்பட்டால் அல்லது ரத்துசெய்யப்பட்டால் அல்லது முதிர்வடைந்தால் அங்கீகார நீக்கம் செய்யப்படும். நடப்பிலுள்ள ஒரு நிதிப் பொறுப்பானது அதே கடன்வழங்குநரிடமிருந்து கணிசமானளவு வித்தியாசமான நியதிகளில் மற்றொன்றினால் மாற்றீடு செய்யப்பட்டிருப்பின் அல்லது நடப்பிலுள்ள ஒரு பொறுப்பின் நியதிகள் கணிசமானளவு திருத்தியமைக்கப்பட்டால், அத்தகைய பரிமாற்றல் அல்லது திருத்தம் ஆரம்ப பொறுப்பின் அங்கீகார நீக்கமாக கருதப்பட்டு ஒரு புதிய பொறுப்பாக அங்கீகரிக்கப்படும். ஆரம்ப நிதிப் பொறுப்பின் கொண்டு செல்லல் பெறுமதிக்கும் செலுத்தப்பட்ட மறுபயனுக்கும் இடையேயான வித்தியாசம் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 4.4.2 நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் வகைப்படுத்தல்

SLFRS 9 – “நிதிக் கருவிகள்” இன் பிரகாரம் வகைப்படுத்தலானது நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிச் சொத்துக்களின் காசுப் பாய்ச்சல்களின் ஒப்பந்த நியதிகளை முகாமைப்படுத்துவதற்கான குழுமத்தின் வணிக மாதிரியில் தங்கியுள்ளது. பின்வரும் வரைபடமானது வங்கி எவ்வாறு நிதிச் சொத்துக்களை வகைப்படுத்துகின்றது என்பதை விளக்குகின்றது.

#### 4.4.2.1 ஆரம்பத்தில், நிதிச் சொத்துக்கள் பின்வரும் வகைகளுள் ஒன்றாக வகைப்படுத்தப்படுகின்றன.

- இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் (குறிப்புகள் 4.4.7 மற்றும் 27)
- கடன் தீர்வுக் கிரயத்தில் நிதிச் சொத்துக்கள்
  - கடன் தீர்வுக் கிரயத்தில் நிதிச் சொத்துக்கள் - கடன்களும் முற்பணங்களும் (குறிப்பு 28)
  - கடன் தீர்வுக் கிரயத்தில் நிதிச் சொத்துக்கள் - கடன் மற்றும் ஏனைய கருவிகள் (குறிப்புகள் 4.4.8 மற்றும் 29)
- ஏனைய முற்றடக்க வருமானத்தினூடாக அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் (குறிப்புகள் 4.4.9 மற்றும் 30).

#### 4.4.2.2 ஆரம்பத்தில், நிதிப் பொறுப்புக்கள் பின்வரும் வகைகளுள் ஒன்றாக வகைப்படுத்தப்படுகின்றன

- கடன் தீர்வுக் கிரயத்தில் நிதிப் பொறுப்புக்கள்
  - கடன் தீர்வுக் கிரயத்தில் நிதிப் பொறுப்புக்கள் - வைப்பீட்டாளர்களுக்கு செலுத்தவேண்டியவை (குறிப்பு 42)
  - கடன் தீர்வுக் கிரயத்தில் நிதிப் பொறுப்புக்கள்-ஏனைய கடன்பெறுகைகள் மற்றும் பொறுப்புக்கள் (குறிப்புகள் 43, 44 மற்றும் 49)



### 4.4.3 நிதிக் கருவிகளின் ஆரம்ப அளவீடுகள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் பதிவுசெய்யப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தவிர்ந்தவகையில் நிதிச் சொத்துக்களும், பொறுப்புகளும் ஆரம்பத்தில் அவற்றின் நியாயமான பெறுமதியுடன் கொடுக்கல்வாங்கல் கிரயமும் சேர்த்து அளவிடப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான கொடுக்கல்வாங்கல் கிரயமானது இலாபம் அல்லது நட்டக்கூற்றில் கையாளப்படுகின்றது.

### 4.4.4 “முதல் நாள்" இலாபம் அல்லது நட்டம்

ஒரே கருவியில் கொடுக்கல்வாங்கல் விலையானது ஏனைய அவதானிக்கக்கூடிய நடைமுறைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் நியாயப் பெறுமதியிலிருந்து வேறுபட்டால், அல்லது அவதானிக்கக்கூடிய சந்தைகளிலிருந்த தரவுகளை மாத்திரம் உள்ளடக்கும் மாறிகளைக் கொண்ட ஒரு மதிப்பீட்டு நுட்பத்தினடிப்படையில் இடம்பெற்றால், குழுமம் உடனடியாகவே கொடுக்கல்வாங்கல் விலைக்கும், நியாயப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாட்டை (ஒரு “முதல் நாள்” இலாபம் அல்லது நட்டம்) இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கின்றது. அவதானிக்கப்பட இயலாத தரவுகளைப் பயன்படுத்தி, நியாயப் பெறுமதி தீர்மானிக்கப்படும் விடயங்களின் கொடுக்கல்வாங்கல் விலைக்கும் மாதிரிப் பெறுமதிகளுக்குமிடையிலான வேறுபாடு மாத்திரமே கருவியின் வாழ்க்கைக்காலம் முழுவதுமாக இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 4.4.5 வணிக மாதிரி மதிப்பீடு

2018 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து SLFRS 9 – “நிதிக் கருவிகள்” இன் பிரகாரம் குழுமம் அதன் சகல நிதிச் சொத்துக்களையும் வணிக மாதிரி அடிப்படையிலேயே வகைப்படுத்துவதோடு,

ஒரு முதலீட்டுத்தேக்க மட்டத்தில் ஒரு சொத்து வைத்திருக்கப்படும் வணிக மாதிரியின் குறிக்கோள் சம்பந்தமான மதிப்பீட்டினை செய்கின்றது. அது ஒரு சாதனத்துக்கு சாதனம் என்னும் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுவதில்லை, ஏனெனில் இது வணிகம் முகாமைத்துவம் செய்யப்படும் விதத்தினை மிகச் சிறந்த முறையில் பிரதிபலித்து, முகாமைத்துவத்துக்கு தகவலை வழங்குகின்றது என்பதாகும். கவனத்தில் கொள்ளப்படும் தகவல் பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றன:

- முதலீட்டுத்தேக்கத்திற்காக எடுத்துரைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் குறிக்கோள்கள் மற்றும் நடைமுறையில் அக்கொள்கைகள் செயற்படும் விதம். குறிப்பாக, முகாமைத்துவத்தின் மூலோபாயம் ஒப்பந்த வட்டி வருமானத்தை உழைக்கின்றதா, ஒரு குறிப்பிட்ட வட்டி வீதத் தோற்றப்பாட்டைப் பராமரிக்கின்றதா, நிதிச் சொத்துக்களின் கால அளவுடன் அச்சொத்துக்களுக்கு நிதியளிக்கும் பொறுப்புக்களின் கால அளவு பொருந்தியமைகின்றதா அல்லது சொத்துக்களின் விற்பனையூடாக காசுப் பாய்ச்சல்கள் எய்தப்பட்டுள்ளனவா போன்ற விடயங்களில் முன்னிறுத்தம் செய்கின்றது'
- முதலீட்டுத் தேக்கத்தின் செயற்திறன் எவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டு வங்கியின் முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடுகின்றது
- வணிக மாதிரியின் செயற்திறனை பாதிக்கும் இடர்கள் (அந்த வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள்) மற்றும் எவ்வாறு அந்த இடர்கள் முகாமைப்படுத்தப்படுகின்றன.
- வணிகத்தின் முகாமையாளர்களுக்கு எவ்வாறு வேதனம் வழங்கப்படுகின்றது உதாரணமாக, வேதனமானது முகாமைப்படுத்தப்படும் சொத்துக்களின் நியாயப் பெறுமதியின் அடிப்படையிலா அல்லது திரட்டப்பட்ட ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல்கள் அடிப்படையிலான மற்றும்
- முன்னைய காலப்பகுதியில் விற்பனைகளின் நிகழ்வெண், பருமன் நேரம் மற்றும் அத்தகைய விற்பனைகளுக்கான காரணம் மற்றும் எதிர்கால விற்பனை நடவடிக்கை பற்றிய அதன் எதிர்பார்ப்புக்கள். எவ்வாறாயினும், விற்பனை நடவடிக்கை பற்றிய தகவல்கள் தனியாக கருத்திலெடுக்கப்படவில்லை, ஆனால் இது நிதிச் சொத்துக்களை முகாமைப்படுத்துவதற்கான வங்கியின் கூறப்பட்ட குறிக்கோள் எவ்வாறு அடையப்படுகின்றது மற்றும் எவ்வாறு காசுப்பாய்ச்சல்கள் எய்தப்பெறுகின்றன என்ற ஒட்டுமொத்த மதிப்பீட்டின் ஒரு பகுதியாகும்..

வணிக மாதிரி மதிப்பீடானது “மோசமான விடய” அல்லது “அழுத்தமான விடய” சூழ்நிலைகளை கருத்திலெடுக்காது நியாயமான எதிர்பார்க்கப்படும் சூழ்நிலைகளின் அடிப்படையிலாகும். ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னரான காசுப் பாய்ச்சல்கள் வங்கியின் மூல எதிர்பார்ப்புகளிலிருந்து வேறுபட்ட விதத்தில் எய்தப்பெற்றிருப்பின், வங்கியானது வணிக மாதிரியில் வைத்துள்ள எஞ்சிய நிதிச் சொத்துக்களது வகைப்படுத்தலை மாற்றாது, முன்னோக்கிச் செல்லும்போது புதிதாக உருவாக்கப்படும் அல்லது புதிதாக கொள்வனவு செய்யப்படும் நிதிச் சொத்துக்களை மதிப்பிடும்போது அத்தகைய தகவல்களை ஒருங்கிணைக்கின்றது.

### 4.4.6 ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களின் பண்புகள் முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவு மாத்திரம் (அ.வ.கொ.மா.) சோதனையினை சந்தித்துள்ளதா என மதிப்பீடு செய்தல்

சொத்துக்கள் வகைப்படுத்தல் செயன்முறையின் இரண்டாவது படியாக, குழுமமானது நிதிச் சொத்துக்களின் ஒப்பந்த நியதிகள் அ.வ.கொ. மா. சோதனையினை சந்தித்துள்ளதா என இனங்காண்பதற்காக மதிப்பீடு செய்கின்றது.

இந்த மதிப்பீட்டு நோக்கத்திற்காக “முதல்” என்பது நிதிச் சொத்தின் ஆரம் அங்கீகாரத்தின்போதான நியாயப் பெறுமதி என வரையறை செய்துள்ளதுடன், இது நிதிச் சொத்தின் வாழ்நாளில் மாற்றமடையலாம் (உதாரணமாக, முதல் மீளச்செலுத்தப்பட்டிருப்பின் அல்லது வட்டம்/கழிவின் பெறுமதிகுறைப்பு)

“வட்டி” என்பது பணத்தின் நேரப் பெறுமதிக்கான மறுபயன்எனவும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் நிலுவையிலுள்ள முதல் தொகையுடன் இணைந்த கடன் இடர் மற்றும் ஏனைய அடிப்படை கடன் வழங்கல் இடர்கள் மற்றும் செலவுகளது மறுபயன் மற்றும் இலாப விடுமிகை எனவும் வரையறை செய்யப்பட்டுள்ளன.

இதற்கு நேர்மாறாக, ஓர் அடிப்படையான கடன்வழங்கல் ஏற்பாட்டுடன் தொடர்பற்ற, ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களிலான இடர்கள் அல்லது தளம்பல்கள் என்பவற்றுக்கான வெளிப்பாட்டினை அதிகுறைவாக்குவதனை அறிமுகம் செய்யும் ஒப்பந்த நியதிகள், நிலுவையிலுள்ள அசல் தொகையிலான வட்டி மற்றும் அசலின் கொடுப்பனவுகளை மாத்திரம் கொண்ட காசுப்பாய்ச்சல்களை ஏற்படுத்ததாது. அத்தகைய விடயங்களில், நிதிச் சொத்தானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்படல் வேண்டும்.

ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்கள் முதல் மற்றும் நிலுவையிலுள்ள அசல் தொகையிலான வட்டி மாத்திரமா என்று மதிப்பிடுவதில்,: குழுமமானது கருவியின் ஒப்பந்த நியதிகளைக் கவனத்தில் கொள்ளுகின்றது. இது நிபந்தனையை நிறைவேற்ற முடியாத அளவுக்கு ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்கள் இடம்பெறும் காலம் அல்லது தொகையை மாற்றக்கூடிய வகையில் நிதிச்சொத்து ஓர் ஒப்பந்த நிதியைக் கொண்டுள்ளதா என்பதைக் கணிப்பீடு செய்வதையும் உள்ளடக்குகின்றது. இந்தக் கணிப்பீட்டை மேற்கொள்ளுவதில் குழுமம் பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொள்ளுகின்றது:

- காசுப் பாய்ச்சல்களின் தொகை மற்றும் நேரத்தை மாற்றும் எதிர்பாரா நிகழ்வுகள்:
- கடன் அம்சங்கள்:
- முற்கொடுப்பனவு மற்றும் நீடிப்பு நியதிகள்:

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

- குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களிலிருந்தான காசுப் பாய்ச்சல்களுக்கான குழுமத்தின் கோரலை மட்டப்படுத்தும் நியதிகள்:

  மற்றும்

- பணத்தின் நேரப் பெறுமதியினது மறுபயனை மாற்றியமைக்கும் அம்சங்கள்

### 4.4.7 இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறமதியில் காணப்படும் உறுப்படிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

- வர்த்தக நோக்கத்திற்காக வைத்திருக்கப்படும் உறுப்படிகள்;
- ஆரம்ப அங்கீகாரத்தின்போது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் என விசேடமாக பெயரிடப்பட்ட உறுப்படிகள்; மற்றும்
- முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்யாத ஒப்பந்த நியதிகளுடனான கடன் கருவிகள்.

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் வைத்திருக்கப்படும் நிதியியல் கருவிகள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுவதுடன் கொடுக்கல் வாங்கல் கிரயமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அது ஆட்படும்போது அங்கீகரிக்கப்படுகின்றது. அதன் பின்னர், அவை நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டு ஏதேனும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் அவை எழும்போது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. நிதிச் சொத்தொன்று நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்படும்போது, நேரெதிர் தரப்பினரின் கடன் தகைமையைப் பிரதிபலிக்கும்வகையில் ஒரு கடன் மதிப்பீட்டுச் சீராக்கல் உள்ளடக்கப்படுகின்றது. இது கடன் இடர்வில் மாற்றங்கள் காரணமாக ஏற்படும் நியாயமான பெறுமதியின் நகர்வைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

#### 4.4.7.1 வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் நிதியியல் கருவிகள்

ஒரு நிதிக் கருவியானது அது பிரதானமாக விற்பனை செய்யும் நோக்கத்திற்காக கையகப்பட்டிருந்தால் அல்லது ஆட்பட்டிருந்தால் அல்லது குறுகிய தவணையில் மீள்கொள்வனவுக்காக அல்லது கூட்டாக முகாமைத்துவம் செய்யப்படும் நிதிக் கருவிகளின் முதலீட்டுத் தேக்கத்தின் ஒரு பகுதியாயிருந்தால், அதற்கு குறுந்தவணை இலாபம் ஈட்டும் சான்றுகள் இருந்தால், அல்லது அது மூலாதாரம் ஆனால் தகமையான இழப்பீட்டுக் காப்பு உறவு காணப்படாதிருந்தால் அது வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படும். வர்த்தக மூலாதாரங்கள் மற்றும் வர்த்தகப் பிணையங்கள் வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் நியாயப் பெறுமதியில் அங்:கீகரிக்கப்படுகின்றன. நியாயப் பெறுமதியிலான மாற்றங்கள் - வர்த்தகத்திலான தேறிய இலாபங்கள்/ (நட்டங்கள்) (குறிப்பு 10) மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நிதியியல் கருவிகளிலிருந்தான தேறிய நியாயப் பெறுமதி இலாபங்கள்/(நட்டங்கள்) (குறிப்பு 11) இல் அங்கீகரிக்கப்படுகின்றன. வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படும் நிதியியல் கருவிகளிலிருந்தான வட்டி வருமானம் “தேறிய வட்டி வருமானம்” (குறிப்பு 08) இன் கீழ் பதிவு செய்யப்படுவதுடன் பங்கிலாப வருமானமானது கொடுப்பனவிற்கான உரிமை நிலைநாட்டப்படும்போது “வர்த்தகத்திலிருந்தான தேறிய இலாபங்கள்/(நட்டங்கள்) (குறிப்பு 10) இல் பதிவு செய்யபப்டுகின்றன.

#### 4.4.7.2 இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட மற்றும் அளவிடப்பட்ட நிதியியல் கருவிகள்

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், நிதியியல் கருவிகள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்டு அளவிடப்படலாம். நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை ஒரு வித்தியாசமான அடிப்படையில் அளவிடுவதன் மூலம் எழக்கூடிய அளவீடு அல்லது முரண்பாடுகளை (அதாவது ஒரு கணக்கீட்டு பொருத்தமின்மையினை அகற்றும்) அகற்றும் அல்லது கணிசமானளவு குறைப்பதனை விளைவித்தால் மாத்திரமே ஒரு நிதிச் சொத்து இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்படலாம். ஒரு நிதிப் பொறுப்பானது பின்வரும் நிபந்தனைகளுடன் காணப்பட்டால் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்படலாம், அது கணக்கீட்டு பொருத்தமின்மையினை அகற்றினால் அல்லது கணிசமானளவு குறைத்தால் அல்லது:

- ஒரு ஏற்பு ஒப்பந்தமானது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டபொதிந்துள்ள மூலாதாரங்களை உள்ளடக்கியிருந்தால் அல்லது
- நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் ஆகிய இரண்டும் முகாமைப்படுத்தப்பட்டு அவற்றின் செயற்திறன் ஒரு ஆவணப்படுத்தப்பட்ட இடர் முகாமைத்துவ அல்லது மூலதன மூலோபாயத்தின் பிரகாரம் ஒரு நியாயப் பெறுமதி அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படலாம். ஒரு நிதிப் பொறுப்பு இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்டிருப்பின், குழுமத்தின் சொந்த கடன் தரத்திலான மாற்றங்களுக்கு உடைமையாக்கத்தக்க நியாயப் பெறுமதியிலான அசைவானது, அவதானிக்கக்கூடிய சந்தை வட்டி வீதங்களுக்கு மேலான கடன் நெடுக்கத்திலுள்ள மாற்றங்களை தீர்மானிப்பதன் மூலம் கணிப்பிடப்பட்டு ஏனைய விரிவான வருமானத்தில் தனியாக முன்னிலைப்படுத்தப்படுகின்றது. 31 டிசம்பர் 2025 இல் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட எந்த நிதிச் சொத்தும் காணப்படவில்லை.

#### 4.4.7.3 முதல் மற்றும் வட்டியினை மாத்திரம் கொடுப்பனவுகளாக பிரதிநிதித்துவம் செய்யாத ஒப்பந்த நியதிகளுடனான கடன் கருவிகள்

முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவினை மாத்திரமான கொடுப்பனவுகளின் சோதனையினை சந்திக்காத நிதியியல் கடன் கருவிகள் இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியாக வகைப்படுத்தப்படும்.

### 4.4.8 கடன் தீர்வுக் கிரயத்தில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் - கடன் கருவிகள்

பின்வருவனவற்றை கொண்டிருந்தால் கடன் கருவிகளிலான முதலீடுகள் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றன:

- குறிப்பிட்ட திகதிகளில் காசுப் பாய்ச்சலை விளைவிக்கும் ஒப்பந்த நியதிகள் அசல் மற்றும் நிலுவையிலுள்ள முதல் தொகையிலான வட்டிக் கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்தல் மற்றும்
- ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை திரட்டுவதற்காக வைத்திருப்பதன் மூலம் குறிக்கோளினை அடையும் ஒரு வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்பட்டால்.

இந்த கடன் கருவிகள் ஆரம்பத்தில் நேரடியாக உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயத்துடன் சேர்த்து நியாயப் பெறுமதியில் அங்கீகரித்து அதன் பின்னர் விளைவுறு வட்டி வீதத்தினை (வி.வ.வீ.) இனை பயன்படுத்தி பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றது. கடன் வலுக்குன்றல் அளவீடானது குறிப்பு 4.4.11 நிதிச் சொத்துக்களின் வலுக்குன்றல் இல் விபரிக்கப்பட்டுள்ள மூன்று கட்ட எதிர்பார்த்த கடன் இழப்பு மாதிரியின் அடிப்படையிலாகும்.

### 4.4.9 ஏனைய முற்றடக்க வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்

#### 4.4.9.1 கடன் கருவிகள்

பின்வருவனவற்றைக் கொண்டிருந்தால், கடன் கருவிகளிலான முதலீடுகள் ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றன:

- குறிப்பிட்ட திகதிகளில் காசுச் பாய்ச்சலை விளைவிக்கின்ற ஒப்பந்த நியதிகள், அசல் மற்றும் நிலுவையிலுள்ள அசலிலான வட்டிக் கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவம்

செய்தால் மற்றும்

- ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை திரட்டுதல் மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்தல் ஆகிய இரண்டினாலும் அடையப்படும் குறிக்கோளினைக் கொண்ட ஒரு வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்பட்டால்.

இந்த கடன் கருவிகள் ஆரம்பத்தில் நேரடியாக உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயத்துடன் சேர்த்து நியாயப் பெறுமதியில் அங்கீகரித்து அதன் பின்னர் நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றது. நியாயப் பெறுமதியிலான மாற்றங்களிலிருந்து எழுகின்ற இலாபங்கள் மற்றும் நட்டங்கள் ஏனைய விரிவான வருமானத்தில் உரித்துவத்தின் ஒரு தனியான கூறாக உள்ளடக்கப்படுகின்றது. வலுக்குன்றல் நட்டங்கள் அல்லது திருப்பல்கள், வட்டி வருமானம் மற்றும் அந்நிய செலாவணி இலாபங்கள் மற்றும் நட்டங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. கையுதிர்வினைத் தொடர்ந்து, ஏனைய விரிவான வருமானத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டம் ஏனைய விரிவான வருமானத்திலிருந்து இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்படுகின்றன.

கடன் வலுக்குன்றலின் அளவீடானது கடன் தீர்வுக் கிரயத்தில் நிதிச் சொத்துக்களுக்கு பிரயோகிக்கப்படும் மூன்று கட்ட கடன் நட்ட மாதிரியின் அடிப்படையிலாகும். எதிர்பார்த்த கடன் நட்ட மாதிரியானது குறிப்பு 4.4.11 நிதிச் சொத்துக்களின் வலுக்குன்றல் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளது.

### 4.4.9.2 உரிமைச் சாதனங்கள்

SLFRS 3 – "வணிகச் சேர்க்கை" பிரயோகிக்கப்படும் ஒரு வணிகச்சேர்க்கையில் குழுமத்தினால் வருநிகழ்வு மறுபயன் அங்கீகரிப்படாத அல்லது வர்த்தகத்திற்கு வைத்திருக்கப்படாத உரித்துவக் கருவிகளிலான முதலீடானது, முகாமைத்துவத்தினால் ஒரு மாற்றவியலாத தெரிவானது மேற்கொள்ளப்பட்டிருப்பின், ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப்பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றன. ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியின் மாற்றவியலாத தெரிவினைக் கடைப்பிடிப்பதனை முகாமைத்துவம் கருதாத முதலீட்டுத்தேக்கங்களில்,முன்னிருப்பாக அத்தகையமுதலீடுகள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப்பெறுமதியில்அளவீடு செய்யப்படுகின்றன.

அங்கீகாரத்தினைத் தொடர்ந்து ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டமானது, இலாபம் அல்லது நட்டத்திற்கு மாற்றல் செய்யப்படாது. எவ்வாறாயினும், திரண்ட இலாபம் அல்லது நட்டம் அங்கீகரிக்கப்பட்டிருப்பின், அங்கீகார அகற்றல் முழுத்தொகையானது ஏனைய விரிவான வருமான ஒதுக்கத்திலிருந்து உரித்துவத்தினுள் காணப்படும் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகளுக்கு மாற்றல் செய்யப்படும். அத்தகைய முதலீடுகளிலான பங்கிலாபங்கள் "தேறிய ஏனைய செயற்பாட்டு வருமானத்தில்" (குறிப்பு 13) இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 4.4.10 நிதிச் சொத்துக்களின் மீள்வகைப்படுத்தல்

குழுமமானது அதன் வணிக மாதிரியினை நிதிச் சொத்துக்களை முகாமைப்படுத்துவதற்காக மாற்றினால், மற்றும் மாற்றினால் மாத்திரம் குழுமமானது அதன் நிதிச் சொத்துக்களை மீள்வகைப்படுத்துகின்றது. பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்களை குழுமமானது, ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதிக்கு அல்லது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதிக்கு மீள்வகைப்படுத்தினால், குழுமமானது மீள்வகைப்படுத்தலை மீள்வகைப்படுத்தல் திகதியிலிருந்து எதிர்பார்ப்புடன் பிரயோகிக்கின்றது. குழுமமானது முன்னர் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் இலாபங்கள், நட்டங்கள் (குறைப்பாட்டு நட்டங்கள் உள்ளடங்கலான) அல்லது வட்டியினை மீள் எடுத்தரைப்பதில்லை.

கீழ்க்காணும் அட்டவணையானது, மீள்வகைப்படுத்தலான இலாபம் மற்றும் நட்டங்கள் கவனிப்பின் சுருக்கத்தினை வழங்குகின்றது

| ஆரம்ப அளவீடு | மீள்வகைப்படுத்தலின் பின்னரான அளவீடு | மீள்வகைப்படுத்தலிலான கவனிப்பு |
|---|---|---|
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் | கடன் தீர்வு முற்றடக்க கிரயத்தில் | மீள் வகைப்படுத்தல் திகதியில் உள்ள நியாயப் பெறுமதியானது அதன் புதிய மொத்த கொண்டுசெல்லல் தொகையாக வருகின்றது. அந்த தொகையின் அடிப்படையில் விளைவுறு வட்டி வீதமானது கணிப்பிடப்படுகின்றது. வலுக்குன்றல் தேவைப்பாடுகளை பிரயோகிக்கும் நோக்கத்திற்காக மீள்வகைப்படுத்தல் திகதியானது ஆரம்ப பிரயோகத் திகதியாக கவனிக்கப்படுகின்றது. |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் | ஏனைய விரிவான வருமானத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில் | மீள்மதிப்பீடு திகதியில் உள்ளவாறான நிதிச் சொத்தின் நியாயப் பெறுமதியானது அதன் புதிய கொண்டுசெல்லல் தொகையாக வருவதுடன் விளைவுறு வட்டி வீதமானது மீள்மதிப்பீடு திகதியிலுள்ள சொத்தின் நியாயப் பெறுமதி அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. |
| ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் | கடன் தீர்வு முற்றடக்க கிரயத்தில் | ஏனைய விரிவான வருமானத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டமானது உரித்துவத்திலிருந்து அகற்றப்பட்டு மீள்வகைப்படுத்தல் திகதியில் உள்ளவாறான நிதிச் சொத்தின் நியாயப் பெறுமதிக்கு எதிராக செம்மையாக்கப்படுகின்றது. மீள்வகைப்படுத்தலின் விளைவாக விளைவுறு வட்டி வீதமும் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களின் அளவீடும் செம்மையாக்கப்படுவதில்லை. |
| ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் | நியாயப் பெறுமதியில் இலாபம்/(நட்டம்) | மீள்வகைப்படுத்தல் திகதியில் உள்ள நிதிச்சொத்தின் நியாயப் பெறுமதியானது அதன் புதிய கொண்டுசெல்லல் தொகையாக வருகின்றது. ஏனைய விரிவான வருமானத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டமானது உரித்துவத்திலிருந்து ஒரு மீள்வகைப்படுத்தல் செம்மையாக்கலாக இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தல் திகதியில் மீள்வகைப்படுத்தப்படுகின்றது. |
| கடன் தீர்வு முற்றடக்க கிரயத்தில் | இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில் | நிதிச் சொத்தின் முன்னைய பெறுமதிக் குறைப்புக் கிரயத்திற்கும் மீள்வகைப்படுத்தல் திகதியில் உள்ளவாறான நியாயப் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசத்திலிருந்து எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டமானது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. |
| கடன் தீர்வு முற்றடக்க கிரயத்தில் | ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் | நிதிச் சொத்தின் முன்னைய பெறுமதிக் குறைப்புக் கிரயத்திற்கும் மீள்வகைப்படுத்தல் திகதியில் உள்ளவாறான நியாயப் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசத்திலிருந்து எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டமானது ஏனைய விரிவான வருமானத்தில் அங்கிகரிக்கப்படுகின்றது. மீள்வகைப்படுத்தலின் விளைவாக விளைவுறு வட்டி வீதமும் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களின் அளவீடும் செம்மையாக்கப்படுவதில்லை. |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**4.4.10.1 நிதிக் கருவிகளின் தரமுயர்த்தல்**

2021 இன் 14 ஆம் இலங்கை பணிப்புரையின் பிரகாரம், வங்கியானது பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையின் பிரகாரம் உயர்ந்த படிநிலையிலிருந்து நிதிக் கருவிகளை தரமுயர்த்தலாம். எனவே, வங்கியானது நிதியியல் கருவிகளை பிரதான இடர் அதிகாரியின் சம்மதத்துடன் அத்தகைய தரமுயர்த்தலுக்கான காரணவிளக்கத்துடன் ஒரு உயர்ந்த படிநிலைக்கும தரமுயர்த்தும்.

**4.4.11 நிதிச் சொத்துக்களின் வலுக்குன்றல்**

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படாத பின்வரும் நிதிச் சொத்து வகைகளுக்கான எதிர்பார்த்த கடன் நட்டங்களை (எ.க.ந) அளவிடுவதில் குழுமமானது ஒரு மூன்று நிலை அணுகுமுறையினை பிரயோகிக்கின்றது:

- ஏனைய முற்றடக்க வருமானத்தினூடாக பெறுமதி குறைப்புக் கிரயத்தில் மற்றும் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட கடன் கருவிகள்.
- கடன் கடப்பாடுகள் மற்றும்
- நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்கள்.

உரித்துவ முதலீடுகளில் எந்த எ.க.ந. உம் அங்கீகரிக்கப்படவில்லை.

குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதியிலும் ஒரு மதிப்பீட்டினை செயலாற்றுகின்றது. அது நிதியியல் கருவியின் எஞ்சியுள்ள வாழ்நாள் மீதான தவறுதல் இடர் ஏற்படக்கூடியவற்றிலான மாற்றத்தை கருத்திலெடுப்பதன் மூலம் ஒரு நிதியியல் கருவியின் கடன் இடரானது ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கணிசமானளவு அதிகரித்துள்ளதா என்பதினாலாகும். இந்த செயன்முறையின் அடிப்படையில், ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கடன் இடரிலான மாற்றத்தின் அடிப்படையில் பின்வரும் மூன்று படிநிலைகளூடான நிதிச் சொத்துக்கள் இடம்பெயர்கின்றன.

**4.4.11.1 கட்டம் 1: 12 மாதங்கள் எ.க.ந.**

ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கடன் இடரில் ஒரு கணிசமான அதிகரிப்பினைக் கொண்டிராத வெளிப்பாடுகளுக்கு மற்றும் ஆரம்பத்திலிருந்து கடன் வலுக்குன்றாமலிருப்பவைக்கு, அடுத்த 12 மாதங்களினுள் தவறுதல் நிகழ்வுகள் இடம்பெறும் சாத்தியத்துடன் இணைந்துள்ள வாழ்நாள் எ.க.ந. இன் பகுதியானது அங்கீகரிக்கப்படுகின்றது. கடன் கணிசமாக சீர்கெடப்படாத வாடிக்கையாளர்களிலிருந்தான 12 மாதக எ.க.ந. ளை வங்கி தீர்மானிக்கின்றது.

**4.4.11.2 கட்டம் 2: வாழ்நாள் எ.க.ந.**

ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கடன் இடரில் ஒரு கணிசமான அதிகரிப்பினைக் கொண்ட, ஆனால் கடன் வலுக்குன்றாத வெளிப்பாடுகளுக்கு ஒரு வாழ்நாள் எ.க.ந. (அதவாது நிதிச் சொத்தின் எஞ்சியுள்ள வாழ்நாளை பிரதிபலிக்கும்) ஆனது அங்கீகரிக்கப்படுகின்றது.

**4.4.11.3 கட்டம் 3: வாழ்நாள் எ.க.ந.**

ஒன்று அல்லது அதற்கு மேலான நிகழ்வுகள் அந்த சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலில் ஒரு சீர்கேடான தாக்கம் ஏற்பட்டிருக்கும்போது வெளிப்பாடுகள் கடன் வலுக்குன்றியுள்ளவையாக மதிப்பிடப்படுகின்றன. கடன் வலுக்குன்றலடைந்த வெளிப்பாடுகளுக்கு ஒரு வாழ்நாள் எ.க.ந. அங்கீகரிக்கப்பட்டு வட்டி வருமானமானது மொத்த கொண்டுசெல்லல் தொகைக்குப் பதிலாக, கடன் தீர்வு முற்றடக்க கிரயத்திற்கு விளைவு வட்டி வீதத்தினை பிரயோகித்து கணிப்பிடப்படுகின்றது.

**4.4.11.4 எ.க.ந. இன் கணிப்பீடு**

குழுமமானது எ.க.ந. இனை ஒரு மூன்று சாத்தியமான நிறையிடப்பட்ட சூழ்நிலைக்காட்சிகளில், எதிர்பார்த்த காசுப் பற்றாக்குறைகளை அளவிடுவதற்காக, விளைவுறு வட்டி வீதத்திற்கு (வி.வ.வீ) அண்ணளவான ஒரு வீதத்தில் கழிவிறக்கம் செய்து கணிப்பிடுகின்றது. காசுப் பற்றாக்குறை என்பது ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒரு நிறுவனத்திற்கு வரவேண்டிய காசுப் பாய்ச்சல்களுக்கும் நிறுவனம் பெறுவதற்கு எதிர்பார்க்கும் காசுப் பாய்ச்சல்களுக்கும் இடையேயான வித்தியாசமாகும். எ.க.ந. கணிப்பீடுகளுக்கான குழுமத்தின் இயக்கவியலானது கீழே விபரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் முக்கிய கூறுகள் பின்வருவனவாகும்:

**தவறுதலுக்கான சாத்தியம் (த.சா.)**

த.சா. என்பது ஒரு வழங்கப்பட்ட நேரக் காலத்தின்போது தவறுதலுக்கான நிகழ்வியல்பின் ஒரு மதிப்பீடாகும். கடன் வசதியானது முன்னர் அங்கீகரிக்கப்படாது இன்னமும் கடன் தேக்கத்தில் காணப்பட்டால் மதிப்பிடப்பட்ட காலத்தின் மீது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரமே தவறுதல் இடம்பெறலாம். த.சா. இன் எண்ணக்கருவானது குறிப்பு 28 இல் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது.

**தவறுதலில் உள்ளவாறான வெளிப்பாடு (த.உ.வெ.)**

த.உ.வெ என்பது ஒரு எதிர்கால தவறுதல் திகதியில் உள்ள வெளிப்பாட்டிலான ஒரு மதிப்பீடாகும். இது அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான அசல் மற்றும் வட்டியின் மீள்செலுத்துதல் உள்ளடங்கலான, வெளிப்பாட்டிலான எதிர்பார்த்த மாற்றங்களை கணக்கிலெடுக்கின்றது. இது ஒப்பந்தத்தினால் அட்டவணைப்படுத்தப்பட்டிருப்பின் அல்லது இல்லையெனில், கடப்பாடுடைய கடன் வசதிகளின் பணமிழுப்புக்கள் மற்றும் தவறிய கொடுப்பனவுகளிலான அட்டுறு வட்டியுடனும் ஆகும். த.உ.வெ. என்பது குறிப்பு 28 இல் மேலும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

**தவறுதலின்போது ஏற்படும் நட்டம் (த.ஏ.ந.)**

த.ஏ.ந. என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு தவறுதல் இடம்பெறும் சமயத்தில் எழுகின்ற நட்டத்தின் ஒரு மதிப்பீடாகும். வரவேண்டிய ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களுக்கும் கடன் வழங்குநர் பெறுவதற்கு எதிர்பார்ப்பதற்கும் இடையேயான வித்தியாசத்தின் அடிப்படையிலாகும். இது ஏதேனும் பிணைச் சொத்தின் எய்தப்பெறுதலையும் உள்ளடக்கும். இது பொதுவாக எ.க.ந. இன் சதவீதமாக வெளிப்படுத்தப்படுகின்றது. த.ஏ.ந. ஆனது குறிப்பு 28 இல் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது.

**4.4.11.5 குறைபாட்டிற்கான படிநிலையினைத் தீர்மானித்தல்**

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து வெளிப்பாடுகளுக்கான கடன் இடரில் ஒரு கணிசமான அதிகரிப்பு காணப்படுகின்றதா என குழுமம் மதிப்பீடு செய்கின்றது. இது இடரினை அறிக்கையிடும் திகதிக்கும் ஆரம்ப அங்கீகாரத்திற்கும் இடையேயான வாழ்நாள் மீது தவறுதல் இடம்பெறக்கூடிய இடரினை ஒப்பிடுவதன் மூலமாகும். குழுமமானது இந்த நோக்கத்திற்காக தேவையற்ற கிரயம் அல்லது முயற்சியின்றி பொருத்தமான மற்றும் கிடைக்கக்கூடிய நியாயமான மற்றும் துணையளிக்கக்கூடிய தகவல்களை கருத்திலெடுக்கின்றது. இது அளவுசார்ந்த மற்றும் தரம்சார்ந்த தகவல்களையும் முன்னோக்கிய பகுப்பாய்வினையும் உள்ளடக்குகின்றது.

சொத்தின் தரம் சீர்கெடும்போது எ.க.ந. படிநிலைகள் ஊடாக ஒரு வெளிப்பாடானது இடம்பெயரும். அதன் பின்னரான ஒரு காலத்தில், சொத்தின் தரம் மேம்படுவதுடன், ஆரம்பத்திலிருந்து கடன் இடரில் முன்னர் மதிப்பிடப்பட்ட ஏதேனும் கணிசமான அதிகரிப்பினை திருப்பும் என்பதுடன், அச்சமயம் சந்தேகத்திற்கிடமான கடன்களுக்கான ஏற்பாடானது வாழ்நாள் எ.க.ந. இலிருந்து 12 மாதங்கள் எ.க.ந. இற்கு திருப்புதல். ஆரம்பத்திலிருந்த கணிசமானளவு சீர்கேடடையாத வெளிப்பாடுகள் அல்லது சீர்கேடானது குழுமத்தின் முதலீட்டுத் தர வரன்முறையினுள் இருந்தால் அல்லது 30 நாட்களுக்குக் குறைவாக காலம் கடந்திருப்பின் அவை ஒரு குறைவான கடன் இடரினைக் கொண்டவையாக கருதப்படும். இந்த நிதிச் சொத்துக்களுக்கான வலுக்குன்றல் ஏற்பாடானது 12 மாதங்கள் எ.க.ந. அடிப்படையிலாகும்.

குழுமமானது ஒரு வெளிப்பாட்டிலான கடன் இடரானது, ஒரு தனியான அல்லது கூட்டு அடிப்படையில், கணிசமானளவு அதிகரித்துள்ளதா என மதிப்பீடு செய்கின்றது. வலுக்குன்றலுக்கான கூட்டு மதிப்பீட்டு நோக்கங்களுக்காக, நிதியியல் கருவிகள் பகிரப்பட்ட கடன் இடர் பண்புகளின் அடிப்படையில் தொகுக்கப்படுகின்றது. இது கருவியின் வகை, கடன் இடர் தரப்படுத்தல்கள், பிணைச் சொத்தின் வகை, ஆரம்ப அங்கீகாரத் திகதி, முதிர்வுவரை எஞ்சியுள்ள காலம்,

துறை, கடன் பெறுநரின் பூகோளவியல் இடம் மற்றும் ஏனைய பொருத்தமான காரணிகள் கணக்கிலெடுக்கப்படுகின்றன.

**4.4.11.6 கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான குறைபாடு கணிப்பீடு**

SLFRS 9 – “நிதியியல் கருவிகள்” இன் கீழ் அனுமதிக்கப்படும் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான வலுக்குன்றலை கணிப்பிடுவதில் வங்கியானது மறுக்கத்தக்க அனுமானங்களை பயன்படுத்துதகின்றது. கடன் தேக்கமானது கடந்த நிலுவையான நாட்களின் அடிப்படையில் மூன்று படிநிலைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை பின்வருமாறு, பொருந்து தன்மையானது 12 மாதங்கள் எ.க.ந. மற்றும் வாழ்நாள் எ.க.ந. படிநிலைகளில் தங்கியுள்ளது. கடன் வசதிகளுக்கு எதிராக பெறப்பட்ட பிணையத்தின் பெறுமதி மற்றும் வகையானது, ஒரு கடன் வசதியின் வகைப்படுத்தல் நிலையினை தீர்மானிக்கும்போது கருத்திலெடுக்கப்படமாட்டாது. ஒரு கடன் பெறுநர் மேலதிகப் பற்று வரையறைகளுடன் பல நடைமுறைக் கணக்குகளை வங்கியுடன் வைத்திருக்கும்போது, மேலதிகப் பற்றுக்களை வகைப்படுத்தும் நோக்கங்களுக்காக மொத்த ஒப்புதலளிக்கப்பட்ட வரையறை மற்றும் அத்தகைய அனைத்து கணக்குகளில் நாளாந்தம் நிலுவையிலுள்ள மொத்த மீதியானது கருத்திலெடுக்கப்படும்.

**4.4.11.6.1 செயற்பாடுள்ள கடன் வசதிகள்**

(a) SLFRS 9 – “நிதியியல் கருவிகள்” இன் கீழ் கட்டம் 1 ஆக வகைப்படுத்தப்பட்ட அனைத்து கடன் வசதிகள் மற்றும்

(b) கடன் இடர் வசதிகளில் கணிசமான அதிகரிப்பு என இனங்காணப்பட்ட அனைத்து கடன் வசதிகள் மற்றும் SLFRS 9 – “நிதியியல் கருவிகள்” இன் கீழ் கட்டம் 2 ஆக வகைப்படுத்தப்பட்ட (குறைவான செயற்பாடுடைய கடன் வசதிகள்)

**4.4.11.6.2 செயற்பாடு இல்லாத கடன் வசதிகள் (செ.இ.க.வ.)**

செயற்பாடு இல்லாத கடன் வசதிகள் (செ.இ.க.வ.) என்பது பின்வரும் அனைத்து கடன் வசதிகள் என்று பொருள்படும்ஶ

(a) ஒரு வாடிக்கையாளரின ஒப்பந்தக் கொடுப்பனவுகள் 90 நாட்களுக்கு மேலாக கடந்த நிலுவைத்தொகை (கடந்த நாட்களின் எண்ணிக்கையானது ஒப்பந்த நிலுவையான திகதியிலிருந்து ஆரம்பித்து கணிப்பிடப்படும்).

(b) ஒப்புதலளிக்கப்பட்ட வரையறையானது 90 நாட்களுக்கும் மேலான மிகையாக இருப்பின்.

(c) SLFRS 9 – “நிதியியல் கருவிகள்” இன் பிரகாரம் கட்டம் 3 ஆக வகைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஏனைய கடன் வசதிகள் (உருவாகுகையின்போது சாத்தியமான இடர் மற்றும் வலுக்குன்றிய சொத்துக்களின் அடிப்படையில் செ.இ.க.வ. ஆக வகைப்படுத்தப்பட்ட வசதிகள்).

மேற்கூறிய வகைப்பாட்டு நோக்கத்திற்காக கடன் தரம் மோசமடைந்தன் காரணமாக அசல் திருப்பிச் செலுத்தும் விதிமுறை திருத்தப்பட்டிருந்தால், மறுக்கட்டமைக்கப்பட்ட வசதியாக கருதப்படும் மற்றும் வசதிகளை அடையாளம் காண்பதில் வங்கியின் “கடன் சகிப்புத்தன்மை கொள்கை” குறிப்பிட வேண்டும். வங்கியின் கடன் சகிப்பு தன்மை கொள்கையின் படி, பின்வரும் மாற்றங்கள்/அளவு கோல்கள் கடன்வசதியின் முதல் திருப்பி செலுத்தம் விதிமுறைகளி மாற்றங்கலாக அங்கீகரிக்கப்படுகின்றன.




| செயற்பாட்டிலுள்ளது | | செயற்பாட்டில் இல்லாத கடன் வசதிகள் (செ.இ.க.வ.) |
|---|---|---|
| **கட்டம் 01** | **கட்டம் 02** | **கட்டம் 03** |
| • 30 நாட்கள் அல்லது 30 நாட்களுக்கு குறைவான கடந்த நிலுவை | • 31 முதல் 89 நாட்கள் வரையான கடந்த நிலுவை | • 90 நாட்கள் அல்லது 90 நாட்களுக்கும் மேலான கடந்த நிலுவை |
| • கட்டங்கள் 2 அல்லது 3 இன் கீழ் வகைப்படுத்தப்படாத அனைத்து கடன் வசதிகள் | • அனைத்து மீள்கட்டமைக்கப்பட்ட கடன்கள்,<br>- இவை இரண்டு மடங்குகள் வரைக்கும் மீள்கட்டமைக்கப்பட்டவை, இது மீள்கட்டமைப்பின் பின்னர் 1ஆவது அசல் மற்றும்/அல்லது வட்டி தவணைக்கொடுப்பனவு நிலுவை திகதியிலிருந்து ஆகக் குறைந்த 90 நாட்கள் திருப்தியான செயற்பாடுடைய காலத்தின் கீழ் தரமுயர்த்தப்பட்ட கடன் வசதிகள் தவிர்த்தவையாகும்.<br>• குறிப்பு 28- “வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள்” இன் கீழ் வழங்கப்பட்டுள்ள சீர்கெடல் காரணிகளின் அடிப்படையில் கணிசமாக கடன் சீர்கெட்டவையாக இனங்காணப்பட்ட செயற்பாடு இல்லாத கடன் வசதிகள்/வெளிப்பாடுகள். | • இரண்டு தடவைகளுக்கு மேல் மீள்கட்டமைப்பு செய்யப்பட்ட அனைத்து மீள்கட்டமைக்கப்பட்ட கடன்கள், மீள்கட்டமைப்பின் பின்னர் 1ஆவது அசல் மற்றும்/அல்லது வட்டி தவணைக்கொடுப்பனவு நிலுவை திகதியிலிருந்து ஆகக் குறைந்த 90 நாட்கள் திருப்தியான செயற்பாடுடைய காலத்தின் கீழ் தரமுயர்த்தப்பட்ட கடன் வசதிகள் தவிர்த்தவையாகும்.<br>• ஏனைய மீள்அட்டவணைப்படுத்தப்பட்ட கடன்கள், கடன் வசதிகள்/வெளிப்பாடுகள் தவிர்த்தவை.<br>• இ.ம.வ. இன் பணிப்புரைகளின் பிரகாரம் செயற்பாடு அல்லாதது என வகைப்படுத்தப்பட்ட அனைத்து கடன் வசதிகள்/வாடிக்கையாளர்கள்.<br>• குறிப்பு 28 - “வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள்” இன் கீழ் வழங்கப்பட்டள்ள சீர்கெடல் காரணிகளின் பிரகாரம் கணிசமானளவு கடன் சீர்கெடலுடன் இனங்காணப்பட்ட வாடிக்கையாளர்கள். |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

- வட்டி வீதத்திலான மாற்றம்
- காலத்திலான மாற்றம் (முதிர்வு)
- கருணை காலத்திற்கான மாற்றங்கள்
- வட்டி தள்ளுபடிகள்

#### 4.4.11.6.3 செயற்பாடற்ற கடன் வசதிகளின் மீள்வகைப்படுத்தல்

| பிரிவு | காலம் கடந்த நாட்கள் | சாத்தியமான இடர் வரன்முறை |
|---|---|---|
| விசேட குறியீடு | > 90 மற்றும் < = 180 | உரிய நேரத்தில் திருத்தப்படாவிட்டால், சாத்தியமான பலவீனங்களை வெளிப்படுத்தி, எதிர்காலத்தில் வாடிக்கையாளரின் மீள்செலுத்தும் ஆற்றலினை மோசமாக பாதிக்கலாம். |
| தரங்குறைந்தவை | > 180 மற்றும் < = 270 | வாடிக்கையாளரின் வணிகம், காசுப்பாய்ச்சல் அல்லது நிதியியல் நிலைமை தொடர்பாக நிர்ணயிக்கத்தக்க பலவீனங்களை வெளிப்படுத்தி, நடைமுறையிலுள்ள மீள்செலுத்தலை இடருக்குட்படுத்தலாம் மற்றும் மீள்செலுத்தலில் நிச்சயமற்றதன்மையினை உருவாக்கலாம். |
| சந்தேகத்திற்கிடமானவை | > 270 மற்றும் <= 360 நாட்கள் | ஒரு உயர்ந்த இடர் அல்லது பகுதியளவிலான தவறுதலை வெளிப்படுத்தல் அல்லது முழு திரட்டலானது சாத்தியமற்றது மற்றும் தவறுவதற்கான ஒரு உயர்ந்த இடர். |
| நட்டம் | > 360 நாட்கள் | திரட்ட இயலாது என்று கருதப்பட்ட அல்லது மீள்செலுத்தல் பெரும்பாலும் இடம்பெறாது என்ற நிச்சயம் மற்றும் மேற்குறிப்பிட்ட வகைகளின் கீழ் உள்ளடக்கப்படாத ஏனைய அனைத்து செ.இ.க.வ. |

#### 4.4.11.7 கடன் வசதிகளை மேம்படுத்தல்

கட்டங்களுக்கிடையேயான கடன் வசதிகளின் தரமுயர்த்தலானது, ஆரம்ப புள்ளியுடன் பிந்தைய மதிப்பீட்டு திகதிகளை ஒப்பிட்டு கடன் சீர்கெடலில் மேம்பாட்டு மட்டத்தின் அடிப்படையில் இடம்பெறும்.

வங்கியானது கடன் வசதிகளின் தரமுயர்த்தல் தொடர்பான கடன் இடர் முகாமைத்துவக் கொள்கையின் கீழ் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டிகளின் பிரகாரம் கடன் வதிசகளை தரமுயர்த்தும்.

### 4.5 நிதியல்லாத சொத்துக்களின் குறைப்பாடு

குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் ஒரு சொத்து வலுக்குன்றும் என்ற குறிகாட்டி உள்ளதா என்று மதிப்பிடும். ஏதேனும் குறிகாட்டி காணப்பட்டால், அல்லது ஒரு சொத்துக்கு வருடாந்த வலுக்குன்றல் பரிசோதனை தேவைப்பட்டால், வங்கியானது சொத்தின் மீட்கக்கூடிய தொகையினை மதிப்பிடுகின்றது. ஒரு சொத்தின் மீட்கத்தக்க தொகையானது ஒரு சொத்தின் உயர்ந்த நியாயப் பெறுமதியிலிருந்து விற்பனைக்கான செலவுகளை கழித்ததன் பின்னர் அல்லது பயன்பாட்டிலுள்ள அதன் பெறுமதியாகும். ஒரு சொத்தின் கொண்டு செல்லல் தொகையானது அதன் மீட்கத்தக்க தொகையினை விஞ்சியிருந்தால், சொத்தானது வலுக்குன்றியுள்ளது என கருதப்பட்டு அதன் மீட்கத்தக்க தொகைக்கு குறைத்தெழுதப்படுகின்றது. பயன்பாட்டிலுள்ள பெறுமதியினை மதிப்பிடுவதில், பணத்தின் நேரப் பெறுமதியினை மதிப்பிடுவதில் நடைமுறை சந்தையினை பிரதிபலிக்கும் ஒரு வரிக்கு முன்னரான கழிவிறக்க வீதத்தினை மற்றும் சொத்து தொடர்பான இடர்களையும் பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் பாய்ச்சல்களை அவற்றின் நிகழ் காலப் பெறுமதிக்கு கழிவிறக்கம் செய்யப்படுகின்றது. நியாயப் பெறுமதியிலிருந்து விற்பனைக்கான செலவுகளை கழிப்பதனை தீர்மானிப்பதில், ஒரு பொருத்தமான பெறுமதியிடல் மாதிரியானது பயன்படுத்தப்படுகின்றது. இந்த கணிப்பீடுகள், பெறுமதியிடல் மடங்குகள், பொதுவாக வர்த்தகம் செய்யப்படும் துணைக்கம்பனிகளது பட்டியலிடப்பட்ட பங்கு விலைகள் அல்லது ஏனைய பெறுமதியான நியாயப் பெறுமதி குறிகாட்டிகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

### 4.6 நம்பிக்கைப் பொறுப்பு

குழுமமானது வாடிக்கையாளர்களின் சார்பில் சொத்துக்களை வைத்திருப்பதனை விளைவிக்கும் நம்பக நிலை சேவைகளை மூன்றாம் தரப்பினருக்கு வழங்குகின்றது. நம்பக நிலை தகுதியில் வைத்திருக்கப்படும் சொத்துக்கள், குழுமம் அத்தகைய சொத்துக்களின் பயன்பெறும் உடைமையாளர் இல்லை என்பதாலும் அல்லது அவற்றை கட்டுப்படுத்தாதனாலும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதில்லை.

### 4.7 ஏற்பாடுகள்

ஒரு ஏற்பாடானது ஒரு கடந்த நிகழ்வின் விளைவாக அங்கீகரிக்கப்படுகின்றது, இது குழுமம் நம்பகமாக மதிப்பிடக்கூடிய மற்றும் கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களின் வெளிப்பாய்ச்சல் தேவையானது என்ற சாத்தியம் காணப்படும் ஒரு நடைமுறை கடப்பாட்டினை (சட்ட அல்லது ஆக்கபூர்வமான) கொண்டிருந்தால். அங்கீகரிக்கப்படும் தொகையானது அறிக்கையிடப்படும் திகதியில் தற்போதைய கடப்பாட்டினை தீர்ப்பதற்கு தேவையான மறுபயனின் சிறந்த மதிப்பீடாகும். இது அந்த திகதியில் கடப்பாட்டினை சூழ்ந்துள்ள இடர்கள் மற்றும் நிச்சயமற்றதன்மைகளை கணக்கிலெடுத்து மதிப்பிடப்படுகின்றது. நடைமுறையிலுள்ள கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல்களை பயன்படுத்தி ஒரு ஏற்பாடானது அளவிடப்படும்போது அதன் கொண்டு செல்லப்படும் தொகையானது அந்த காசுப்பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. ஒரு ஒப்பந்தத்திலிருந்து குழுமத்தினால் பெறுகின்ற எதிர்பார்க்கப்படும் நலன்கள் அந்த ஒப்பந்தத்தின் கீழான அதன் கடப்பாடுகளை சந்திப்பதில் தவிர்க்க இயலாத செலவுகளிலும் பார்க்க குறைவாக இருப்பின் கடினமான ஒப்பந்தங்களுக்கான ஒரு ஏற்பாடு அங்கீகரிக்கப்படுகின்றது. இந்த ஏற்பாடானது ஒப்பந்தத்தினை நிறுத்துவதிலான எதிர்பார்த்த செலவினம் மற்றும் ஒப்பந்தத்தை தொடர்வதிலான எதிர்பார்க்கும் தேறிய செலவினம், இவற்றில் எது குறைந்ததோ அதன் நிகழ்காலப் பெறுமதியாக அளவிடப்படுகின்றது.

### 4.8 வருமான வரிச் செலவினம் மற்றும் ஏனைய வரிகள் GRI 207-1, 2

#### 4.8.1 வருமான வரிச் செலவினம்

வருமான வரிச் செலவினம் நடைமுறை மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரியினை உள்ளடக்குகின்றது. குறிப்பு 18 இல் மேலதிகத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

**4.8.2 நிதிச் சேவைகளிலான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT)**

பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் கணிப்பீட்டிற்கான அடித்தளம், ஊழியர்களுக்கான ஊதியங்கள் மற்றும் வருமான வரிக்கு முந்திய மொத்த கணக்கீட்டு இலாபத்தினை ஒன்றிணைப்பதன் மூலம் வருகின்ற தொகையில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் பெறுமானத்தேய்வு கணிப்பீட்டிற்காக செம்மையாக்கப்படுகின்றது. இவ்வாண்டின்போது, குழுமத்தின் மொத்த பெறுமதி சேர்ப்பானது 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சட்டம் மற்றும் அதனிலான திருத்தங்களின் பிரகாரம் 18% ஆகும் அத்துடன் குழுமமானது நிதிச் சேவைகளிலான பெ.சே.வ.இனை கணிப்பிடுவதற்கு பெறுமதி உடைமையாக்கத்தக்க முறையினை பின்பற்றுகின்றது.

**4.8.3 பயிர் காப்புறுதிக் கட்டணம் (ப.கா.க.)**

2013 இன் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், ப.கா.க. ஆனது 1 ஏப்ரல் 2013 முதல் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், வரிக்கு பிந்திய இலாபத்தில் 1% தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபைக்கு செலுத்தப்படல் வேண்டும்

**4.8.4 சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு கட்டணம் (ச.பா.ப.க.)**

2022 இன் 25 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு கட்டணச் சட்டத்தின் பிரகாரம், வங்கியானது 1 ஒக்டோபர் 2022 முதல் நிதிச் சேவைகளிலான சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு கட்டணத்திற்கு பொறுப்பாளியாவதுடன், இது நிதிச் சேவைகளுக்கு உடைமையாக்கத்தக்க பெறுமதி சேர்க்கையில் 2.5% ஆகும். மேலும், நிதியல்லாத சேவைகளிலான ச.பா.ப.க. ஆனது புரள்வில் 2.5% ஆகும்.

**4.8.5 வங்கி, துணைநிறுவனங்கள் மற்றும் இணைநிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்படும் பங்கிலாபத்திலான முற்பண வருமான வரி (AIT)**

**வங்கியினால் பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கிலாபத்திலான முற்பண வருமான வரி**

வங்கி அதன் ஒரே பங்குதாரரான இலங்கை அரசாங்கத்திற்கு பங்கிலாபத்தை பகிர்ந்தளித்தது. 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணை மற்றும் அதனிலான திருத்தங்களின் பிரகாரம், இலங்கை அரசாங்கத்தினால் பெறப்படும் தொகைகள் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம், இலங்கை அரசாங்கத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பங்கிலாபக் கொடுப்பனவுகளில் முற்பண வருமான வரி கழிக்கப்படுவதில்லை.

**துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கிலாபத்திலான முற்பண வருமான வரி**

2017ம் ஆண்டு உள்நாட்டு இறை வரி (திருத்த) 24ம் இலக்க சட்டத்தின் படி பங்கிலாபம் மீதான முற்பண வருமான வரி துணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பங்கிலாப வருமானத்தில் முற்பண வருமான வரி 15% என்ற விகிதத்தில் பொறுப்பாகும் மற்றும் இது வங்கியின் இறுதி வரியாகும்.

## 5 காப்புறுதி வணிகம்

### 5.1 மீள்காப்புறுதி

குழுமமானது வழக்கமான வணிகப் போக்கில் அதன் அனைத்து வணிகங்களுக்கும் காப்புறுதி இடருக்கு இசைவளிக்கின்றது. மீள்காப்புறுதி சொத்துக்கள் மீள்காப்புறுதி கம்பனிகளிடமிருந்து வரவேண்டிய மீதிகளை பிரதிநிதித்துவம் செய்கின்றது. மீள்காப்புறுதியாளர்களிடமிருந்து மீட்கக்கூடிய தொகைகள், நிலுவையிலுள்ள கோரல் ஏற்பாடுகள் அல்லது மீள்காப்புறுதியாளரது கொள்கையுடன் இணைந்துள்ள தீர்ப்பனவு செய்யப்பட்ட கோரல்கள் உடன் இயைபான விதத்தில் மற்றும் தொடர்புடைய மீள்காப்புறுதி ஒப்பந்தத்தின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்படுகின்றது. மீள்காப்புறுதி சொத்துக்கள் வலுக்குன்றலுக்காக ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் அல்லது அறிக்கையிடும் ஆண்டில் வலுக்குன்றலுக்கான ஒரு அறிகுறி எழுந்தால் அடிக்கடி மீளாய்வு செய்யப்படுகின்றது. வலுக்குன்றலானது பின்வரும் சந்தர்ப்பத்தில் ஏற்படுகின்றது. மீள்காப்புறுதி செய்யப்பட்ட சொத்தின் ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் இடம்பெற்ற ஒரு நிகழ்வின் விளைவாக ஒரு புறநிலைத்தன்மையான சான்று காணப்பட்டால் மற்றும் ஒப்பந்தத்தின் நியதிகளின் கீழ் வரவேண்டிய சகல நிலுவையிலுள்ள தொகைகளை குழுமம் பெறாமல் இருக்கலாம் மற்றும் மீள்காப்புறுதியாளரிடமிருந்து குழுமம் பெறவேண்டிய தொகைகளில் நிகழ்வானது ஒரு நம்பகத்தன்மையான அளவிடக்கூடிய தாக்கத்தினைக் கொண்டிருந்தால் ஆகும். வலுக்குன்றல் நட்டமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் பதிவு செய்யப்படுகின்றது. காப்புறுதிக்கான தவணைக்கட்டணம் மற்றும் கோரல்கள் ஒரு மொத்த அடிப்படையில் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. மீள்காப்புறுதி சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள், ஒப்பந்த உரிமைகள் அழித்துவிடப்படும்போது அல்லது முதிர்வடைந்தால் அல்லது ஒப்பந்தமானது மற்றுமோர் தரப்பினருக்கு மாற்றல் செய்யப்பட்டால் அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றது.

### 5.2 வருமதியான காப்புறுதி

காப்புறுதி வருமதிகள் அவை நிலுவையானபோது அங்கீகரிக்கப்பட்டு வருமதியான மறுபயனின் நியாயப் பெறுமதியில் ஆரம்ப அங்கீகாரத்தின்போது அளவிடப்படுகின்றன. காப்புறுதி வருமதிகளின் கொண்டுசெல்லல் பெறுமதியானது வலுக்குன்றலுக்காக, கொண்டு செல்லப்படும் தொகையானது மீட்க இயலாது போகலாம் என்று நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் குறிப்பிட்டால் மீளாய்வு செய்யப்பட்டு வலுக்குன்றல் நட்டமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் பதிவு செய்யப்படுகின்றது.

### 5.3 ஒத்திவைக்கப்பட்ட செலவினங்கள்

**5.3.1 ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் கிரயங்கள் (ஒ.கை.கி.)**

புதிய வணிகங்களை கையகப்படுத்தும் செலவுகள் தரகு, ஒப்புரவளித்தல், சந்தைப்படுத்தல் மற்றும் காப்புறுதிக் கொள்கை வழங்கல் செலவினங்கள் ஆகியவற்றை உள்ளடக்குவதுடன், இவை புதிய வணிகங்களின் உருவாக்கலுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்கலாம் மற்றும் வேறுபட்டிருக்கலாம் மற்றும்/ அல்லது தன்முடிபான பங்குபற்றல் அம்சங்களுடனான (த.ப.அ.) முதலீட்டு ஒப்பந்தங்கள் என்பன இந்தச் செலவுகள் எதிர்கால தவணைக்கட்டணங்களிலிருந்து மீட்கப்படக்கூடியளவுக்கு ஒத்திவைக்கப்படுகின்றன. ஏனைய அனைத்து கையகப்படுத்தல் செலவினங்களும் அவை ஆட்படும்போது ஒரு செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், பொது காப்புறுதிக்கான ஒ.கை.கி. ஆனது உழைக்கப்படாத தவணைக்கட்டணமானது பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றது என்ற அடிப்படையில் காலத்தின் மீது பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றது. மீள்காப்புறுதிகளின் ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் கிரயங்களின் பங்கானது, இலாபம் அல்லது நட்டக் கூற்றில் பதிவுசெய்யப்படும் உள்ளார்ந்த சொத்துக்களின் பெறுமதி குறைப்பு செய்யப்படும் விதம் போன்றே பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றது. எதிர்பார்க்கப்படும் வாழ்நாளிலான மாற்றங்கள் அல்லது சொத்தில் புதைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்களது நுகர்வின் எதிர்பார்க்கும் போக்கு என்பன, கணக்கீட்டு மதிப்பீட்டிலான ஒரு மாற்றமாக கருதப்பட்டு பெறுமதி குறைப்புக் காலத்தினை மாற்றுவதன் மூலம் கணக்கீடு செய்யப்படுகின்றது. ஒ.கை.கி. கள் தொடர்புடைய ஒப்பந்தங்கள் ஒன்றில் அவை முதிர்வடைந்தால் அல்லது இரத்துசெய்யப்பட்டால் அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றன.

### 5.4 மீள்காப்புறுதி தரகுகள்

வெளிவாரியான மீள்காப்புறுதி ஒப்பந்தங்களில் வருமதியான தரகுக்கூலிகள் மீள்காப்புறுதி காலத்தின் மீது ஒத்திவைக்கப்பட்டு பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றன.

### 5.5 முதலீட்டு ஒப்பந்த பொறுப்புக்கள்

முதலீட்டு ஒப்பந்தங்கள் தன்முடிபான பங்குபற்றல் அம்சங்கள் (த.ப.அ.) உடனான மற்றும் அற்ற ஒப்பந்தங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. த.ப.அ. உடனான முதலீட்டு ஒப்பந்த பொறுப்புக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் ஆயுள் காப்புறுதி ஒப்பந்த பொறுப்புக்களை போன்றதாகும். த.ப.அ. இல்லாத முதலீட்டு ஒப்பந்த பொறுப்புக்கள் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு தவணைக்கட்டணங்கள் அறவிடப்படும்போது அங்கீகரிக்கப்படுகின்றன.

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

இந்தப் பொறுப்புக்கள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன, அது ஒப்பந்தத்தினை வழங்குவதில் நேரடியாக உடைமையாக்கத்தக்க ஏதேனும் கொடுக்கல் வாங்கல் செலவினங்கள் நீங்கலான சொடுக்கல் வாங்கல் விலையாகும். ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், முதலீட்டு ஒப்பந்தப் பொறுப்புக்கள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. வைப்புகளும் மீளப்பெறுகைகளும் பொறுப்புக்கான ஒரு நேரடியான செம்மையாக்கலாக நிதி நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் நியாயப் பெறுமதி செம்மையாக்கல்கள் செயற்படுத்தப்பட்டு இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. நியாயப் பெறுமதியானது சாத்தியமான கழிவிறக்க காசுப்பாய்ச்சல் நுட்பங்களை பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றன. அலகுகளாக்கப்பட்ட ஒப்பந்தங்களுக்கு, நியாயப் பெறுமதியானது ஒவ்வொரு அலகுடன் இணைக்கப்பட்ட நிதியத்திலும் காப்புறுதியுறுநருக்கு ஒதுக்கப்படும் அலகுகளின் எண்ணிக்கையானது அறிக்கையிடப்படும் திகதியில் உள்ளவாறான அந்த நிதியங்களின் அலகுகளின் விலையினால் பெருக்கப்பட்டு கணிக்கப்படுகின்றன. அறிக்கையிடப்படும் திகதியில் உள்ளவாறான அலகுகளின் விலையினைத் தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்படும் நிதியத்தின் சொத்துக்கள் மற்றும் நிதியத்தின் பொறுப்புக்கள் அவற்றின் அளவீட்டு அடிப்படையுடன் சீரான ஒரு அடிப்படையில் நிதி நிலைமைக் கூற்றில் பெறுமதியிடப்படுவதுடன், இது நிதியத்திலுள்ள சொத்துக்களிலான எய்தப்பெற்றிராத இலாபங்களிலான ஒத்திவைக்கப்பட்ட வரிக்கான பொறுப்புக்களின் விளைவினை கணக்கிலெடுத்து செம்மையாக்கப்படுகின்றன. பயன்படுத்தப்படாத ஒப்பந்தங்கள் பின்னர் நியாயப் பெறுமதியில் கொண்டு செல்லப்படுவதுடன் இவை கழிவிறக்கம் செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல்கள் மற்றும் வாய்ப்பியல் சார் மாதிரிகள் போன்ற பெறுமதியிடல் நுட்பங்களை பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. இம்மாதிரிகள் ஏற்புடையதாக்கப்பட்டு, அளவீடுசெய்யப்பட்டு மற்றும் காலாகாலம் ஒரு சுயாதீன் தகமையுடைய நபரினால் மீளாய்வு செய்யப்படுகின்றது. ஒப்பந்தமானது முதிர்வடைந்தால், அல்லது ரத்துசெய்யப்பட்டால் பொறுப்பானது அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றது. காப்புறுதியுறுநரினால் ரத்துசெய்யப்படக்கூடிய ஒரு ஒப்பந்தத்திற்கு நியாயப் பெறுமதியானது ஒப்புவிப்பு மதிப்பிலும் பார்க்க குறைவாக இருத்தலாகாது. ஒப்பந்தங்கள் ஒரு நிதியியல் இடரினையும் ஒரு கணிசமான காப்புறுதி இடர் கூறினையும் உள்ளடக்கியிருக்கும்போது இரண்டு கூறுகளிலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்கள் வெவ்வேறாகவும் நம்பகத்தன்மையோடு மதிப்பிடக்கூடியதாகவும் உள்ளபோது உள்ளார்ந்த தொகைகள் பிரிக்கப்படுகின்றன. காப்புறுதி இடர் கூறு தொடர்பான ஏதேனும் தவணைக்கட்டணங்கள் காப்புறுதி போன்ற அதே அடித்தளங்களில் கணக்கீடு செய்யப்படுகின்றன.

### 5.6 தன்முடிபான பங்குபற்றல் அம்சங்கள் (த.ப.அ.)

ஒரு த.ப.அ. என்பது இந்த ஒப்பந்தங்களது உடைமையாளர்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்ட நலன்களுக்கு ஒரு இணைப்பாக பெறுவதற்கான உரிமையினை வழங்கும் ஒரு ஒப்பந்த உரிமையாகும். கணிசமான மேலதிக நலன்கள் த.ப.அ. தேக்கத்தினுள் வைத்திருக்கப்படும் சொத்துக்களின் செயற்திறனின் அடிப்படையிலாகும். ஒப்பந்தத்தின் நியதிகளின் கீழ் த.ப.அ. நிதியங்களில் காணப்படும் மிகைகள் காப்புறுதியுறுநர்களுக்கும் பங்குதாரர்களுக்கும் 90/10 என்ற அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படலாம். காப்புறுதியுறுநர்களுக்கான இந்த மிகைகளின் பங்களிப்பினது தொகை மற்றும் நேரம் மீதான தன்முடிபினை குழுமம் கொண்டுள்ளது. உத்தரவாதமளிக்கப்பட்ட மற்றும் தன்முடிபான ஒதுக்கப்படாத மிகைகள் உள்ளடங்கலான அனைத்து த.ப.அ. பொறுப்புக்களும் பொருத்தமானவாறு வருடாந்தம் காப்புறுதி அல்லது முதலீட்டு ஒப்பந்த பொறுப்புக்களினுள் வைத்திருக்கப்படுகின்றன.

### 5.7 உழைக்கப்படாத தவணைக்கட்டண ஒதுக்கம்

உழைக்கப்படாத தவணைக்கட்டண ஒதுக்கமானது இவ்வாண்டில் எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தின் ஒரு பகுதியை பிரதிநிதித்துவம் செய்கின்றது, ஆனால் காப்பீட்டின் முதிர்வடையாத காலம் தொடர்பானதாகும். உழைக்கப்படாத தவணைக்கட்டணமானது 1/24 அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுகின்றது.

## 6 வழங்கப்பட்டு அறிக்கையிடல் திகதிவரை பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படாத புதிய கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் கணக்கீட்டு நியமங்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன. இவ் நியமங்கள் 1 ஜனவரி 2026 அன்று அல்லது அதற்குப் பிறகு அமுலாகும். அதன்படி, 31 டிசம்பர் 2025 ஆண்டு முடிவடைந்தஆண்டுக்கான நிதி அறிக்கைகள் தயாரிப்பில் இவ் கணக்கீட்டு நியமங்கள் பிரயோகிக்கப்படவில்லை.எம்மால் அடையாளம் காணப்பட்ட நியமங்கள் குழுமத்திற்கு பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.:

### 6.1 SLFRS 17- "காப்பீட்டு ஒப்பந்தங்கள்"

SLFRS 17 – "காப்பீட்டு ஒப்பந்தங்கள்" தரநிலையின் எல்லைக்குள் காப்பீட்டு ஒப்பந்தங்களை அங்கீகரித்தல், அளவிடுதல், வழங்குதல் மற்றும் வெளிப்படுத்துவதற்கான கொள்கைகளை நிறுவுகிறது. SLFRS 17 இன் நோக்கம் "காப்பீட்டு ஒப்பந்தங்கள்" என்பது ஒரு நிறுவனம் அந்த ஒப்பந்தங்களை உண்மையுடன் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருத்தமான தகவல்களை வழங்குவதை உறுதி செய்வதாகும். இந்த தகவல் நிதி அறிக்கைகளின் பயனர்களுக்கு காப்பீட்டு ஒப்பந்தங்கள் நிறுவனத்தின் நிதி நிலை, நிதி செயல்திறன் மற்றும் பணப்புழக்கங்களில் ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு ஒரு அடிப்படையை வழங்குகிறது.

SLFRS 17 "காப்பீட்டு ஒப்பந்தங்கள்" 1 ஜனவரி 2026 அன்று அல்லது அதற்குப் பிறகு தொடங்கும் வருடாந்திர காலங்களுக்கு நடைமுறையில் இருக்கும்.

SLFRS 17 "காப்பீட்டு ஒப்பந்தங்கள்" பயன்பாட்டின் விளைவாக நிதி அறிக்கைகளில் ஏற்படக்கூடிய தாக்கத்தை குழு மதிப்பீடு செய்துவருகிறது.

### 6.2 SLFRS 18 – "நிதிநிலை அறிக்கைகளில் சமர்ப்பித்தல் மற்றும் வெளிப்படுத்துதல்"

SLFRS 18 – "நிதிநிலை அறிக்கைகளில் சமர்ப்பித்தல் மற்றும் வெளிப்படுத்துதல்" என்பது LKAS 1 – "நிதிநிலை அறிக்கைகளின் சமர்ப்பித்தல்" என்பதற்குப் பதிலாக வருகிறது. இந்தத் தரநிலை 1 ஜனவரி 2027 அன்று அல்லது அதற்குப் பிறகு தொடங்கும் ஆண்டு அறிக்கைக் காலங்களுக்குச் செயல்படும், மேலும் முன்கூட்டியே செயல்படுத்துவதற்கும் அனுமதிக்கப்படுகிறது.

SLFRS 18 – "நிதிநிலை அறிக்கைகளில் சமர்ப்பித்தல் மற்றும் வெளிப்படுத்தல்" என்பது நிதிநிலை அறிக்கைகளில் சமர்ப்பித்தல் மற்றும் வெளிப்படுத்துதல் தேவைகளில், குறிப்பாகப் பின்வருவனவற்றைப் பொறுத்து, குறிப்பிடத்தக்க மாற்றங்களை அறிமுகப்படுத்துகிறது:

- இலாப நட்ட அறிக்கையில் வருமானம் மற்றும் செலவினங்களை வரையறுக்கப்பட்ட பிரிவுகளாக (செயல்பாட்டு, முதலீட்டு மற்றும் நிதியியல்) வகைப்படுத்துதல்.
- செயல்பாட்டு இலாபம் உட்பட, வரையறுக்கப்பட்ட துணைத்தொகைகளைக் கட்டாயமாகச் சமர்ப்பித்தல்
- நிர்வாகத்தால் வரையறுக்கப்பட்ட செயல்திறன் அளவீடுகளுக்கான மேம்படுத்தப்பட்ட தேவைகள்
- மேம்படுத்தப்பட்ட திரட்டுதல் மற்றும் பிரித்தெடுத்தல் கொள்கைகள் மற்றும்
- பணப்புழக்க அறிக்கை மற்றும் தகவல்களைக் குழுவாக்குதல் குறித்த கூடுதல் வழிகாட்டுதல்

குழுமம் தற்போது SLFRS 18 – "நிதிநிலை அறிக்கைகளில அளிப்பு மற்றும் வெளிப்படுத்தல்கள்" என்பதன் தாக்கத்தை அதன் நிதிநிலை அறிக்கைகளில் மதிப்பிட்டு வருகிறது. மிக முக்கியமான மாற்றங்கள் பின்வருவனவற்றுடன் தொடர்புடையதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது:

- SLFRS 18 - :நிதிநிலை அறிக்கைகளில் அளிப்பு மற்றும் வெளிப்படுத்தல்கள்" மூலம் பரிந்துரைக்கப்பட்ட புதிய வகைகளுக்கு இணங்க, இலாப நட்ட அறிக்கையில் உள்ள சில வருமானம் மற்றும் செலவின இனங்களை மறுவகைப்படுத்தல்.
- புதிய கட்டாய துணைத்தொகைகளை அளித்தல்
- பொருந்தக்கூடிய இடங்களில், நிர்வாகத்தால் வரையறுக்கப்பட்ட செயல்திறன் அளவீடுகள் தொடர்பான கூடுதல் வெளிப்படுத்தல்கள்

SLFRS 18 – "நிதி அறிக்கைகளில் அளிப்பு மற்றும் வெளிப்படுத்தல்கள்" என்பதை ஏற்றுக்கொள்வது, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அங்கீகரித்தல் அல்லது அளவிடுவதில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது ஆனால் அளிப்பு மற்றும் வெளிப்படுத்தல்களில் மாற்றங்களை ஏற்படுத்தும்.

### 6.3 SLFRS 9 – "நிதிக் கருவிகள்" மற்றும் ளுடுகுசுளு 7  "நிதிக் கருவிகள்: வெளிப்படுத்தல்கள்"

ஆகியவற்றில் திருத்தங்கள் இந்தத் திருத்தங்கள், தீர்வுத் தேதிக்கு முன்னர் மின்னணுப் பணப்பரிவர்த்தனை அமைப்புகள் மூலம் தீர்க்கப்பட்ட நிதிப் பொறுப்புக்களை, குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அங்கீகாரம் நீக்க அனுமதிக்கும் ஒரு கணக்கியல் கொள்கை விருப்பத்தை அறிமுகப்படுத்துகின்றன.

மேலும் நுளுபு தொடர்பான மற்றும் அதுபோன்ற அம்சங்களைக் கொண்ட நிதிச் சொத்துக்களுக்கான ஒப்பந்த அடிப்படையிலான பணப்புழக்கங்களின் மதிப்பீட்டை அவை தெளிவுபடுத்துகின்றன: "திருப்பிச் செலுத்தத் தேவையில்லாத அம்சம்" என்பது என்ன என்பதை வரையறுத்து, ஒப்பந்த ரீதியாக இணைக்கப்பட்ட கருவிகளின் பண்புகளையும் கோடிட்டுக் காட்டுகின்றன.

கூடுதலாக, நிபந்தனைக்குட்பட்ட அம்சங்களைக் கொண்ட நிதிக் கருவிகளுக்காக புதிய வெளிப்படுத்தல் தேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன: அத்துடன், பிற விரிவான வருமானம் மூலம் நியாயமான மதிப்பில் வகைப்படுத்தப்பட்ட பங்குப் பத்திரங்களுக்கான மேம்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தத் திருத்தங்கள், 1 ஜனவரி 2026 அன்று அல்லது அதற்குப் பிறகு தொடங்கும் ஆண்டு அறிக்கைக் காலங்களுக்குச் செல்லுபடியாகும், மேலும் வங்கியின் ∴ குழுமத்தின் நிதிநிலை அறிக்கைகளில் எந்தவொரு குறிப்பிடத்தக்க தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

### 6.4 SLFRS 19 – "பொதுப் பொறுப்புக்கூறல் வெளிப்படுத்தல்கள் இல்லாத துணை நிறுவனங்கள்"

SLFRS 19 – "பொதுப் பொறுப்புக்கூறல் வெளிப்படுத்தல்கள் இல்லாத துணை நிறுவனங்கள்" என்பது ளுடுகுசுளு ஐப் பயன்படுத்தும்போது, தகுதியுள்ள துணை நிறுவனங்கள் குறைக்கப்பட்ட வெளிப்படுத்தல் தேவைகளைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கிறது. இந்தத் தரநிலை, 1 ஜனவரி 2027 அன்று அல்லது அதற்குப் பிறகு தொடங்கும் ஆண்டு காலங்களுக்குச் செல்லுபடியாகும். வங்கியின்/குழுமத்தின் நிதிநிலை அறிக்கைகளில் எந்தப் பாதிப்பும் இல்லை. இருப்பினும், தகுதியுள்ள துணை நிறுவனங்கள் இந்தத் தரநிலையைத் தங்களின் தனிப்பட்ட நிதிநிலை அறிக்கைகளிலும் பயன்படுத்தலாம்.

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 7 மொத்த வருமானம்

**கணக்கீட்டுக் கொள்கை**

பொருளாதார நலன்கள் குழு/வங்கிக்கு வருகின்ற விதத்திலும், வருவாயானது நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாகவும் வருமானமானது அங்கீகரிக்கப்பட்டுள்ளது..

| | | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
| வட்டி வருமானம் | 8.1 | 496,158,958 | 461,113,949 | 504,977,909 | 468,786,127 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 9.1 | 35,697,977 | 30,415,561 | 36,255,289 | 30,847,506 |
| வியாபாரத்திலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்) | 10 | 5,810,710 | 3,433,734 | 5,855,505 | 3,473,065 |
| இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் நியாயப் பெறுமதியில், நிதியியல் முதலீடுகளிலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்) | 11 | 1,581,766 | 1,507,537 | 998,484 | 1,714,133 |
| நிதியியல் சொத்துக்களை அங்கீகரிக்காமையால் ஏற்பட்ட இலாபம்/(நட்டம்) | 12 | 1,741,194 | (3,598,692) | 2,526,648 | (2,892,497) |
| தேறிய ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 13 | 7,632,808 | (7,467,042) | 8,060,752 | (7,006,387) |
| **மொத்த வருமானம்** | | 548,623,413 | 485,405,047 | 558,674,587 | 494,921,947 |

## 8 தேறிய வட்டி வருமானம்

**கணக்கீட்டுக் கொள்கை**

பயனுறு வட்டி முறையினைப் பயன்படுத்தி வட்டி வருமானம் மற்றும் செலவீனங்கள் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. (EIR) நிதியியல் கூற்றில் கூறப்பட்டுள்ள வட்டி வருமானம் மற்றும் செலவீனம் என்பன பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றன.

கடன்தீர்வு கிரயத்தில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் (AC)

இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் நியாயப்பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள் (FVTPL)

ஏனைய ஒன்றுதிரட்டிய வருமானத்தின் மூலம் நியாயப்பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் நிதியில் சொத்துக்கள் (FVTOCI)

### பயனுறு வட்டிவீதம் (EIR)

பயனுறு வட்டிவீதமென்பது, நிதியியல் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் (அல்லது (A) பொருத்தமானவிடத்து, குறுங்காலமொன்றுக்கு) எதிர்பார்க்கப்படும் ஆயட்காலத்தினூடாக (A) நிதியியல் சொத்து மற்றும் பொறுப்பில் கொண்டிருக்கும் தொகைக்கு மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவுகள் மற்றும் பெறுகைகளை மீளச்சரியாக கழிவிடுகின்ற ஒரு வீதமாகும். பயனுறு வட்டி வீதத்தினைக் கணிக்கும் பொழுது குழுமமானது நிதியியல் சாதனத்தின் அனைத்து ஒப்பந்த ரீதியான நியமங்களையும் கருத்தில் கொண்டு எதிர்கால காசுப்பாய்ச்சலை மதிப்பிடுகின்றது.

பயனுறுவட்டி வீதக்கணிப்புகள், நிதியியல் சொத்துக்களின் கொள்வனவின் மீதான ஏதாவது கழிவு அல்லது தவணைக் கட்டணத்தினையும் பயனுறு வட்டி வீதத்தின் முக்கியமானதொகு பகுதியாக விளங்கும் செலுத்தப்பட்ட அல்லது பெறப்பட்ட அனைத்துக் கட்டணங்களையும் கொடுக்கல் வாங்கல் செலவுகளையும் உள்ளடக்குகின்றது. அதிகரிப்புச் செலவுகளை உள்ளடக்கிய கொடுக்கல்வாங்கல் செலவுகள் நேரடியாகக் கொள்வனவு அல்லது நிதியியல் சொத்துக்களின் அல்லது பொறுப்புக்களின் வழங்கலில் சேர்க்கப்படுகின்றன.

நிதிச் சொத்தின் மீது எதிர்பார்க்கப்படும் காசுப்பாய்சலானது கடன் அபாயத்தைத் தவிரவும் வேறு காரணங்களுக்காகத் திருத்தப்படுகின்றன, வருமானக்கூற்றில் உள்ள அதே வருமானம் அல்லது வட்டி வருமானத்தின் திருத்தத்துடன் நிதிநிலைக் கூற்றில் சொத்துக்களின் பெறுமதியானது எடுத்துச் செல்லப்படுவதற்காக இத்திருத்தமானது மேற்கொள்ளப்படுகின்றது.

## 8.1 வட்டி வருமானம்

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 5,078,655 | 3,364,183 | 5,078,655 | 3,364,183 |
| வங்கிகளில் வைத்திருக்கப்படுபவை | 2,795,195 | 4,095,404 | 2,885,931 | 4,435,574 |
| மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | 3,575,702 | 2,243,462 | 3,481,708 | 2,150,336 |
| இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் அறியப்பட்ட நிதியியல் சொத்துக்கள் நியாயப்பெறுமதியில் அளவிடப்பட்டவை | 1,719,754 | 1,914,923 | 1,722,241 | 1,917,552 |
| நிதியியல் சொத்துக்களின் காலத்தேய்மான கிரயத்தில் | | | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 242,979,456 | 251,400,593 | 250,682,002 | 256,731,662 |
| கடன் மற்றும் ஏனைய கருவிகள் | 237,078,376 | 194,714,182 | 238,180,415 | 196,777,645 |
| நியாயப்பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள் ஏனைய ஒன்றுதிரட்டிய வருமானத்தின் மூலம் அறியப்பட்ட இலாபம் | 2,931,820 | 3,381,202 | 2,946,957 | 3,409,175 |
| **மொத்த வட்டி வருமானம்** | 496,158,958 | 461,113,949 | 504,977,909 | 468,786,127 |

கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீதான வட்டி வருமானத்தில், கடன் தகுதி குறைந்த கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான வட்டியான ரூபா 3,661.7 மில்லியன் தொகையும் அடங்கும், இது 2025ஆம் ஆண்டிற்கானது (2024: ரூபா 2,855.9 மில்லியன்)

## 8.2 வட்டிச் செலவுகள்

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
| வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | 67,325 | 159,496 | 80,410 | 165,403 |
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 13,880,177 | 9,536,232 | 13,786,183 | 9,443,106 |
| இலதாக்கல் பெறுமதியில் நிதியியல் பொறுப்புகள் | | | | |
| வாடிக்கையாளர்களுக்குச் செலுத்தவேண்டியவை | 260,608,444 | 272,025,052 | 264,060,604 | 275,360,550 |
| ஏனைய கடன்கள் | 4,214,408 | 2,533,456 | 4,788,118 | 2,818,388 |
| இரண்டாந்தர பொறுப்புக்கள் | 10,452,183 | 9,307,253 | 10,419,390 | 9,270,880 |
| **மொத்த வட்டிச் செலவுகள்** | 289,222,537 | 293,561,489 | 293,134,705 | 297,058,327 |
| **தேறிய வட்டிவருமானம்** | 206,936,421 | 167,552,460 | 211,843,204 | 171,727,800 |

## 8.3 இலங்கை அரச பிணையங்களிலிருந்தான தேறிய வட்டி வருமானம்

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
| வட்டி வருமானம் | 244,568,302 | 201,730,942 | 244,723,333 | 201,779,444 |
| கழி: வட்டிச் செலவுகள் | 13,880,177 | 9,536,232 | 13,786,183 | 9,443,106 |
| **இலங்கை அரச பிணையங்களிலிருந்தான தேறிய வட்டி வருமானம்** | 230,688,125 | 192,194,710 | 230,937,150 | 192,336,338 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 9 தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்

### கணக்கீட்டுக் கொள்கை

கட்டணம் மற்றும் தரகு வருமானக் குழுவால் வழங்கப்படும் பல்வேறு வகைப்பட்ட பணிகளிலிருந்த பெறப்பட்ட கட்டணம் மற்றும் தரகு வருமானத்தைக் கொண்டிருக்கின்றது. இவற்றை பின்வரும் இரண்டு முக்கிய பிரிவுகளாக பிரிக்கலாம்.

**(i) குறிப்பிட்ட காலப்பகுதிக்கு வழங்கப்படுகின்ற சேவைகளிலிருந்து ஈட்டப்படும் கட்டணம் மற்றும் தரகு வருமானம்,**

குறிப்பிட்ட காலத்திற்கு சேவைகளை வழங்குவதன் மூலம் ஈட்டப்படும் கட்டணம் அந்த காலகட்டத்தில் திரட்டப்படுகிறது. இந்த கட்டணங்களில் தரகு வருமானம் உள்ளடங்கும், அத்துடன் தனிப்பட்ட சொத்துக்கள் முகாமை செய்வதற்காக பெறப்படும் கட்டணம், ஆலோசனை கட்டணங்கள் என்பன அடங்கும். இவை தனிப்பட்ட சொத்து முகாமைத்துவ கட்டணங்கள் பாதுகாப்பு சேவை கட்டணங்கள் மற்றும் ஏனைய முகாமைத்துவ மற்றும் மதியுரை கட்டணங்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது.

**(ii) கொடுக்கல் வாங்கல் சேவைகளை வழங்குவதன் மூலம் மற்றும் குறிப்பிட்ட சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெறப்படும் கட்டண மற்றும் தரகு வருமானம்.**

மூன்றாம் நபர்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மூலம் பெறப்பட்ட கட்டண மற்றும் தரகு வருமானங்கள் ஏனைய பிணையங்களின் விற்பனை மூலமான வருமானங்கள் என்பன கொடுக்கல் வாங்கல் முடிவடைந்த பின்னர் கீழ்வரும் குறிப்புகளில் வரவு வைக்கப்படுகின்றன. ஒரு சில கட்டண வருமானங்கள் மட்டும் சில தொடர்புபட்ட நியமங்களை பூர்த்தி செய்த பின்னர் மட்டுமே வரவு வைக்கப்படுகின்றது.

கட்டண மற்றும் தரகு வருமானம் சம்பந்தப்பட்ட சேவைகளின் மூலம் பெறப்பட்டவை என்பன அட்டுறு அடிப்படையில் தரப்பட்டது

### 9.1 கட்டணம் மற்றும் தரகு வருமானம்

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
| வியாபாரச் சேவைகள் | 3,077,063 | 3,204,363 | 3,077,063 | 3,204,363 |
| பற்று மற்றும் வரவு அட்டைகள் | 17,199,290 | 14,565,617 | 17,200,477 | 14,567,504 |
| பயணம் மற்றும் பண அனுப்பல்கள் தொடர்பான சேவைகள் | 3,065,675 | 2,924,881 | 3,065,675 | 2,924,881 |
| கட்டுக்காப்புப் பணிகள் | 151,486 | 135,458 | 151,486 | 135,458 |
| சில்லறை வங்கி நடவடிக்கைகள் | 8,868,013 | 6,822,701 | 9,166,119 | 6,991,428 |
| உத்தரவாதங்கள் மற்றும் தொடர்புடைய சேவைகள் | 1,572,019 | 1,647,426 | 1,573,222 | 1,647,855 |
| ஏனைய நிதிச்சேவைகள் | 1,764,431 | 1,115,115 | 2,021,247 | 1,376,017 |
| மொத்த கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 35,697,977 | 30,415,561 | 36,255,289 | 30,847,506 |

### 9.2 கட்டணம் மற்றும் தரகு செலவு

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
| பற்று மற்றும் வரவு அட்டைகள் | 11,632,575 | 8,923,346 | 11,633,106 | 8,924,300 |
| பயணம் மற்றும் பண அனுப்பல்கள் தொடர்பான சேவைகள் | 330,379 | 289,236 | 330,379 | 289,236 |
| சில்லறை வங்கிச் சேவைகள் | 541,528 | 477,139 | 541,528 | 477,139 |
| உத்தரவாதங்கள் மற்றும் தொடர்புடைய சேவைகள் | 36,174 | 27,689 | 37,068 | 28,260 |
| ஏனைய நிதிச்சேவைகள் | 60,213 | 85,124 | 147,303 | 126,931 |
| மொத்த கட்டணம் மற்றும் தரகு செலவினங்கள் | 12,600,869 | 9,802,534 | 12,689,384 | 9,845,866 |
| தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 23,097,108 | 20,613,027 | 23,565,905 | 21,001,640 |

## 10 வியாபாரத்திலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்)

### கணக்கீட்டுக் கொள்கை

வியாபார நடவடிக்கைகள் ஊடாக ஏற்படும் வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் அல்லது நட்டங்கள், உரிமை மூலதனம் மீதான பங்குலாப வருமானம் மற்றும் பெறுமதி நிதியியல் சாதனங்களின் நியாயப்பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக உருவாகும் இலாபம் அல்லது நட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

பங்குலாபம் பெறுவதற்கான குழுவின் உரிமை நிறுவப்படும்போது பங்குலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
| அந்நியச் செலாவணி | | | | |
| வங்கிகளிலிருந்து | - | - | 42,997 | 39,331 |
| வாடிக்கையாளர்கள் மற்றும் ஏனையவர்களிடமிருந்து | 5,795,353 | 3,365,983 | 5,795,353 | 3,365,983 |
| உரிமை மூலதனங்கள் | | | | |
| பங்குலாப வருமானம் | 15,357 | 67,751 | 17,155 | 67,751 |
| **வியாபாரத்திலிருந்தான தேறிய இலாம்/(நட்டம்)** | 5,810,710 | 3,433,734 | 5,855,505 | 3,473,065 |

## 11 இலாபம்/ நட்டத்தின் ஊடாக நிதிக் கருவிகளின் நியாயப் பெறுமதியினாலான தேறிய அதிகரிப்பு/ (இழப்பு)

### கணக்கீட்டுக் கொள்கை

நிதியியல் சொத்துக்களை நியாயப் பெறுமதியில் அளவிடுவதால் ஏற்படும் இலாபம்/நட்டமானது, உரிமையாண்மை, மற்றும் முதலீட்டு அலகுகளின் முதலீடுகளில் இருந்து கிடைக்கவிருக்கும் இலாபத்தையும் கணக்கிடுகின்றது.

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
| நிலையான வருமானப் பிணையங்களின் சந்தைப்படியான குறிக்கப்பட்ட பெறுமதி மதிப்பீட்டின் மீதான இலாபம்/(நட்டங்கள்) | | | | |
| நிரந்தர வருமான பத்திரங்கள் | (72,826) | (23,745) | (631,136) | 29,862 |
| உரிமை மூலதனம் | 234,053 | 696,513 | 210,607 | 847,547 |
| நம்பிக்கை அலகுகள் | 1,420,539 | 834,769 | 1,419,013 | 836,724 |
| **இலாபம்/நட்டத்தின் மூலம் நியாயப்பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்களின் மீதான தேறிய இலாபம்/நட்டம்** | 1,581,766 | 1,507,537 | 998,484 | 1,714,133 |

## 12 நிதியியல் சொத்துக்களை அங்கீகாரமளிக்காமையால் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டம்

### கணக்கீட்டுக் கொள்கை

நிதி சொத்தாக அங்கீகரிக்கப்படாமையால் எழும் தேறிய இலாபம்/(நட்டம்), நியாயப் பெறுமதியில் ஊடாக வகைப்படுத்தப்படுகின்ற கடன் கருவிககளை விற்பனை செய்வதன் மூலம் எழும் இலாபம்/நட்டம், கடன்தீர்வுக் கிரயம் மற்றும் நியாயப் பெறுமதியில் ஏனைய முற்றடக்க வருமானம் மற்றும் நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்பட்ட உரிமைச் சாதனங்களின் விற்பனை செய்வதன் மூலம் எழும் இலாபம்/நட்டம், SLISBsக்களை மறுசீரமைப்பதன் மூலம் எழும் பெறுமதி குறைப்பு நட்டம் என்பனவற்றை உள்ளடக்கும்.

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
| அங்கீகாரம் அளிக்கப்பட்டது | | | | |
| நியாயப் பெறுமதியில் இலாபம் அல்லது நட்டம் | 486,521 | 160,152 | 537,434 | 178,227 |
| கடன் தீர்வுக் கிரயம் | - | (4,999,545) | 3,164 | (5,087,161) |
| நியாய பெறுமதியில் ஏனைய முற்றடக்க வருமானம் | 1,254,673 | 1,240,701 | 1,986,050 | 2,016,437 |
| **தேறிய நிதியியல் சொத்துக்களை அங்கீகாரமளிக்காமையால் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டம்** | 1,741,194 | (3,598,692) | 2,526,648 | (2,892,497) |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 13 தேறிய ஏனைய தொழிற்பாட்டு வருமானம்

### கணக்கீட்டுக் கொள்கை

**பங்குலாப வருமானம்**

வங்கிக்கு பங்குலாபத்தை பெறுவதற்கான உரிமை நிறுவப்படுகின்ற வேளையில் பங்குலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

**நிதியல்லா சொத்துக்களை அகற்றுவதால் ஏற்படும் இலாபம்/(நட்டங்கள்)**

ஆதனம், பொறி, உபகரணங்கள் மற்றும் துணை மற்றும் கூட்டுக் கம்பனிகளில் முதலீடு செய்தவை அடங்கலாக ஏனைய நடைமுறையல்லா சொத்துக்களை அகற்றுவதன் மூலமாக தேறிய இலாபம் அல்லது நட்டமானது அத்தகைய சொத்துக்களின் கொண்டிருக்கும் பெறுமதி மற்றும் விற்பனை தொடர்பான செலவுகளை விற்பனை தொகையிலிருந்து கழித்தபின் இலாப நட்டக்கூற்றில் பதியப்படுகின்றது.

**அந்நிய செலாவணி வருமானம்**

வெளிநாட்டு நாணய நிலைகள் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீள்மதிப்பீடு செய்யப்படுகின்றது. உண்மைப்பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக உருவாகும் இலாபங்கள்/(நட்டங்கள்) அக்காலத்துக்குரிய இலாப நட்டக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**வாடகை வருமானம்**

வாடகை வருமானம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது. இது வங்கி வளாகங்கள், விடுதிகள், பாதுகாப்பு வைப்புப்பெட்டிகள் போன்றவற்றிலிருந்து அறவிடப்பட்ட வாடகையையும் வங்கி வளாகங்களில் இருந்தான குத்தகை வாடகை போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

**மொத்தக் காப்புறுதிக் கட்டணம்**

தற்றுணிபு பங்கேற்பு பண்புகளுடனான ஆயுள் மற்றும் முதலீட்டு ஒப்பந்தங்கள் மீதான மொத்த மீண்டெழும் கட்டுப்பணங்கள் பூட்கையாளர்களிடமிருந்து பெறத்தக்கவையாக இருக்கும் பொழுது வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றன. தனியொரு கட்டுப்பண தொழிலினைப் பொறுத்தவரை வருமானமானது பூட்கை நடைமுறைக்கு வரும் திகதியில் இருந்து கணிப்பிடப்படுகின்றது.

மொத்த பொதுக்காப்புறுதி பதிவுக்கட்டுப் பணமானது கணக்கீட்டுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களினால் வழங்கப்பட்ட காலப்பகுதி முழுவதற்குமாகப் பெறப்பட்ட மொத்தக் கட்டுப் பணத்தினையும் உள்ளடக்கியிருந்ததுடன் பூட்கை ஆரம்பமான திகதியிலிருந்து அங்கீகரிக்கப்பட்டது.

| | | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2025<br>ரூ. ‘000 | 2024<br>ரூ. ‘000 | 2025<br>ரூ. ‘000 | 2024<br>ரூ. ‘000 |
| நிதியியல் சொத்துக்களில் இருந்தான பங்கிலாப வருமானம் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டது | | 496,694 | 374,073 | 560,149 | 384,988 |
| துணை மற்றும் இணைக் கம்பனிகளிலிருந்தான பங்கிலாபவருமானம் | | 417,967 | 437,113 | - | - |
| நம்பிக்கை அலகுகளின் மீதான பங்கிலாப வருமானம் | | 54,519 | 8,054 | - | - |
| அந்நியச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம்/(நட்டம்) | | 5,398,058 | (9,004,991) | 5,398,058 | (9,004,991) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலம் பெற்ற இலாபம்/(நட்டம்) | | 1,163 | 15,669 | 59,772 | 24,029 |
| பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களின் விற்பனை மூலம் பெற்ற இலாபம்/(நட்டம்) | | 279,650 | 5,731 | 279,650 | 5,731 |
| வாடகை வருமானம் | | 309,845 | 263,856 | 252,820 | 176,030 |
| சேவை வருமானம் | | - | - | 702,762 | 767,024 |
| தங்க இருப்பு விற்பனையிலிருந்தான இலாபம் | | 15,998 | 9,322 | 15,998 | 9,322 |
| நானாவித வருமானம் | | 467,527 | 423,714 | 352,301 | 285,954 |
| மொத்தக் காப்புறுதிக் கட்டணம் | | - | - | 247,855 | 345,109 |
| இஸ்லாமிய வங்கித் தொழிலிருந்தான தேறிய வருமானம் | 13.1 | 191,387 | 417 | 191,387 | 417 |
| **மொத்த ஏனைய தொழிற்பாட்டு வருமானம்** | | 7,632,808 | (7,467,042) | 8,060,752 | (7,006,387) |

## 13.1 இஸ்லாமிய வங்கித் தொழிலிருந்தான தேறிய வருமானம்

| | வங்கி/குழுமம் | |
|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | 2025<br>ரூபா '000 | 2024<br>ரூபா '000 |
| இஸ்லாமிய வங்கியியல் தொழிற்பாடுகளிலிருந்தான வருமானம் | 374,218 | 200,605 |
| கழி: முதலீட்டாளர்களுக்குச் செலுத்தப்பட்ட இலாபம் | 182,831 | 200,188 |
| **இஸ்லாமிய வங்கித் தொழிலிலிருந்தான தேறிய வருமானம்** | 191,387 | 417 |

## 14 கடன் மற்றும் பிற இழப்புக்களுக்கான பெறுமதி குறைப்பு விதிப்பனவுஃ (மாற்றுப் பதிவு)

**கணக்கீட்டுக் கொள்கை**

வங்கி மற்றும் குழுமமானது "நிதியியல் சாதனங்கள்" மீதான இலங்கை நிதியியல் அறிக்கை நியமம் SLFRS-09 இன் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான பெறுமதி குறைப்பு மதிப்பீட்டில் ஏற்படும் மாற்றங்களை அங்கீகரிக்கின்றது. விபரங்கள் வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் (குறிப்பு 28) கீழ் காட்டப்பட்டுள்ளது. மேலும் வங்கி/குழுமம் ஆனது ஒரு நிதியல்லா சொத்தின் மதிப்பிடப்பட்ட அறவீட்டு தொகையை விட கொண்டிருக்கும் பெறுமதி அதிகரிக்கும்போது ஏற்படும் பெறுமதி குறைப்பு நட்டத்தை "சொத்துக்களின் பெறுமதி குறைப்பு" மீதான இலங்கை கணக்கீட்டு நியமனம் LKAS 36 இன் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

ஆண்டுக் காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட கணக்கீட்டு சாதனங்களின் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பிற்கான ஏற்பாடானது இலாப நட்ட கணக்கீட்டு அறிக்கையில் பதியப்பட்டுள்ள அட்டவணையானது கீழே காட்டப்படுகின்றது.

| | | வங்கி | | | | குழுமம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2025 | | | | 2025 | | | |
| | | கட்டம் 1<br>ரூபா '000 | கட்டம் 2<br>ரூபா '000 | கட்டம் 3<br>ரூபா '000 | மொத்தம்<br>ரூபா '000 | கட்டம் 1<br>ரூபா '000 | கட்டம் 2<br>ரூபா '000 | கட்டம் 3<br>ரூபா '000 | மொத்தம்<br>ரூபா '000 |
| காசும் காசிற்கு சமமானதும் | 22.2 | 28,843 | - | - | 28,843 | 28,843 | - | - | 28,843 |
| ஏனைய வங்கிகளில் வைப்புக்கள் | 24.2 | (7,659) | - | - | (7,659) | (7,659) | - | - | (7,659) |
| இலதாக்கல் பெறுமதியில் அளவிடப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 28.2 | 12,223,930 | 6,087,181 | 2,353,556 | 20,664,667 | 12,211,430 | 6,078,280 | 2,282,830 | 20,572,540 |
| இலதாக்கல் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள் கடன் கருவிகள் | 29.3 | 1,953,442 | (274,421) | - | 1,679,021 | 1,953,442 | (274,421) | - | 1,679,021 |
| ஏனைய நட்டங்கள் | 38.1 | - | (1,255,094) | - | (1,255,094) | - | (1,255,094) | - | (1,255,094) |
| **கடன்கள் மற்றும் ஏனைய இழப்புக்களுக்கான பெறுமதி குறைப்பு விதிப்பனவு/(மாற்றுப்பதிவு)** | | 14,198,556 | 4,557,666 | 2,353,556 | 21,109,778 | 14,186,056 | 4,548,765 | 2,282,830 | 21,017,651 |

| | | வங்கி | | | | குழுமம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2024 | | | | 2024 | | | |
| | | கட்டம் 1<br>ரூபா '000 | கட்டம் 2<br>ரூபா '000 | கட்டம் 3<br>ரூபா '000 | மொத்தம்<br>ரூபா '000 | கட்டம் 1<br>ரூபா '000 | கட்டம் 2<br>ரூபா '000 | கட்டம் 3<br>ரூபா '000 | மொத்தம்<br>ரூபா '000 |
| காசும் காசிற்கு சமமானதும் | 22.2 | 418,479 | - | - | 418,479 | 418,479 | - | - | 418,479 |
| ஏனைய வங்கிகளில் வைப்புக்கள் | 24.2 | (22,385) | - | - | (22,385) | (22,385) | - | - | (22,385) |
| இலதாக்கல் பெறுமதியில் அளவிடப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 28.2 | 3,385,060 | (3,735,358) | 12,776,669 | 12,426,371 | 3,367,623 | (3,746,796) | 12,704,510 | 12,325,337 |
| இலதாக்கல் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள் கடன் கருவிகள் | 29.3 | 5,684 | (36,199,145) | - | (36,193,461) | 5,684 | (36,374,221) | - | (36,368,537) |
| துணை நிறுவனங்களின் மீதான முதலீடுகள் | 31.2 | 100,736 | - | - | 100,736 | - | - | - | - |
| ஏனைய நட்டங்கள் | 38.1 | - | 2,927,101 | - | 2,927,101 | - | 2,927,101 | | 2,927,101 |
| **கடன்கள் மற்றும் ஏனைய இழப்புக்களுக்கான பெறுமதி குறைப்பு விதிப்பனவு/(மாற்றுப்பதிவு)** | | 3,887,574 | (37,007,402) | 12,776,669 | (20,343,159) | 3,769,401 | (37,193,916) | 12,704,510 | (20,720,005) |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 15 ஆளணிச் செலவுகள்

**கணக்கீட்டுக் கொள்கை**

ஆளணிச் செலவுகள், ஊழியர் சம்பளம், நிச்சயிக்கப்பட்ட பங்களிப்பு/அனுகூலத் திட்டங்களுக்கான பங்களிப்புகள் மற்றும் ஏனைய ஊழியர் தொடர்புடைய செலவுகளை உள்ளடக்கியுள்ளது. குறுங்கால ஊழியர் அனுகூல கடப்பாடுகள் கழிவிடல் இல்லா அடிப்படையில் கணிக்கப்பட்டு தொடர்பான சேவைகள் வழங்கும் போது செலவு செய்யப்படுகின்றது. ஊழியரினால் முன்னைய சேவைகள் வழங்கியது மற்றும் கடப்பாடுகள் நம்பிக்கையான முறையில் மதிப்பிடக்கூடியதுமான தொகையினை குழுவானது தற்போதைய சட்டரீதியாக அல்லது வேறேதும் வலுவான கடப்பாடுகளினால் செலுத்தவேண்டி இருப்பின் எதிர்பார்க்கப்படுகின்ற கொடுப்பனவு தொகைக்கு குறுங்காலக் காசு மிகை ஊதியத்தின் கீழ் ஒரு பொறுப்பு அங்கீகரிக்கப்படுகின்றது.

உள்ளக மற்றும் வெளியக நியதிச்சட்டங்கள் மற்றும் ஏனைய ஒழுங்குபடுத்தல்களுக்கு அமைவாக ஊழியர்கள் நிச்சயிக்கப்பட்ட பங்களிப்பிற்கு பங்களிப்பு செய்ய தகுதியுடையவர்களாகிறார்கள்.

“ஊழியர் நன்மைகள்” மீதான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் LKAS 19இன் நியதிகளின்படி விதந்துரைக்கப்பட்ட ஆயுள் மதிப்பீட்டு முறையின் அடிப்படையில் நிச்சயிக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களுக்கான பங்களிப்புக்கள் இலாப நட்டக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

| | | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2025<br>ரூ. ‘000 | 2024<br>ரூ. ‘000 | 2025<br>ரூ. ‘000 | 2024<br>ரூ. ‘000 |
| ஊழியர் சம்பளம் | | 34,977,291 | 31,318,096 | 37,150,734 | 33,336,727 |
| நிச்சயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கான பங்களிப்புக்கள் | 15.1 | 2,845,479 | 2,837,603 | 3,061,747 | 3,030,639 |
| நிச்சயிக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களுக்கான பங்களிப்புக்கள் | 15.2 | 5,366,710 | 3,947,180 | 5,503,144 | 4,062,394 |
| ஏனைய ஆளணிச் செலவீனங்கள் | | 2,499,958 | 2,184,192 | 2,818,578 | 2,516,860 |
| **மொத்த ஆளணிச் செலவுகள்** | | 45,689,438 | 40,287,071 | 48,534,203 | 42,946,620 |

### 15.1 நிச்சயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கான பங்களிப்புக்கள்

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத்திட்டம் என்பது வேலைக்காலத்திற்கு பிந்திய நன்மைத் திட்டம் ஆகும். இதன்கீழ், ஒரு நிறுவனம் நிலையான பங்களிப்புக்களை வேறுபட்ட நிறுவனங்களுக்கு செலுத்துகின்றது. மேலும் கூடுதல் தொகைகளை செலுத்துவதற்கு சட்டபூர்வ அல்லது ஆக்கபூர்வ கடமைகள் எதுவும் இருக்காது.

அறிக்கையிடல் காலத்தின் முடிவில் வரையறுக்கப்பட்ட பங்களிப்புகளுக்கான கடமைகள், திட்டங்களுக்கு முன் அளிக்கப்பட்ட சேவையைப் பொறுத்தமட்டில், இலாபம் அல்லது நட்டம் குறித்த அறிக்கையில் அவை ஒரு செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன.

முற்கூட்டிய பங்களிப்புக்கள், மொத்தப் பணத்தை திரும்ப பெறுதல் அல்லது எதிர்காலக் கொடுப்பனவில் குறைப்புக் கிடைக்கும் அளவிற்கு ஒரு சொத்தாக அங்கீகரிக்கப்படும்.

#### இலங்கை வங்கி சேமலாப நிதியம்

வங்கியின் அனைத்து ஊழியர்களும் இலங்கை வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களாவர். இந்நிதியத்திற்கு ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தில் 12% வங்கி பங்களிப்புச் செய்யும் அதேவேளையில் ஊழியர்கள் 8% பங்களிப்புச் செய்கின்றனர்.

#### ஊழியர் சேமலாப நிதியம்

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தினதும் அதன் திருத்தங்களினதும் நியதிகளின்படி துணைக்கம்பனிகளும் அவற்றின் ஒவ்வொரு ஊழியர்களும் (இலங்கை வங்கியும் அதன் ஊழியர்களும் நீங்கலாக) மாதாந்த மொத்தச் சம்பளத்தில் முறையே 12% பங்களிப்பினையும் (புறொப்பட்டி டிவலப்மென்ட் பிஎல்சி மற்றும் ஹோட்டல் கலம்போ லிமிட்டெட் 15% செலுத்துகிறது) மற்றும் 8% (புறப்பட்டி டிவெலப்மென்ட் பிஎல்சி மற்றும் ஹோட்டல் கலம்போ லிமிட்டெட் இன் ஊழியர்களால் 10% பங்களிப்பு) செலுத்துகின்றனர். இது தொடர்பான நிதியம் இலங்கை மத்திய வங்கியால் முகாமை செய்யப்படுகின்றது.

#### ஊழியர் நம்பிக்கை நிதியம்

1980 ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைச் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க வங்கியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் அனைத்து ஊழியர்களும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் உறுப்பினர்களாவர். இதற்கு வங்கி மற்றும் குழுமம் ஊழியர்களின் மாதாந்த மொத்தச் சம்பளத்தில் 3% பங்கிளிக்கின்றது.

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
| **பின்வருவனவற்றிற்கான தொழில்தருநர்களின் பங்களிப்புக்கள்:** | | | | |
| இலங்கை வங்கி ஊழியர் சேமலாப நிதியம் | 2,281,376 | 2,274,615 | 2,455,358 | 2,433,793 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 564,103 | 562,988 | 606,389 | 596,846 |
| **நிச்சயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கான மொத்தப் பங்களிப்புக்கள்** | 2,845,479 | 2,837,603 | 3,061,747 | 3,030,639 |

### 15.2 நிச்சயிக்கப்பட்ட நன்மைத்திட்டங்களுக்கான பங்களிப்புக்கள்

நிச்சயிக்கப்பட்ட அனுகூலத் திட்டமானது, நிச்சயிக்கப்பட்ட பங்களிப்புத்திட்டம் தவிர்ந்த ஒரு தொழில் நிலைக்குப் பின்னரான நன்மைகள் திட்டமாக விளங்குகின்றது. நிச்சயிக்கப்பட்ட அனுகூலத் திட்டங்கள் தொடர்பாக குழுமத்தின் தேறிய கடப்பாட்டுத் தொகை ஒவ்வொரு திட்டத்திற்கும் வெவ்வேறாக எதிர்கால நன்மைகளின் தொகையினை, அதாவது ஊழியர்கள் அவர்களது நடப்பு மற்றும் கடந்த காலங்களில் அவர்களின் பணிக்குப் பதிலாக ஈட்டிய தொகை மற்றும் அதன் தற்போதைய பெறுமதியினை நிர்ணயிப்பதற்காக அந்நன்மைகளைக் கழித்து அதன் பின்னர் ஏதேனும் திட்டத்தினது சொத்துக்களின் நியாயப் பெறுமதியினைக் கழிப்பதன் மூலம் மதிப்பிடப்படுகின்றது. கழிவு வீதம் என்பது குழுமத்தின் கட்டுப்பாடுகள் ஏறத்தாள முதிர்ச்சியடைகின்ற திகதியின் உண்மையாக பயன்படுத்தப்படுகின்ற கழிவிடல் வீதத்திற்கான நீண்டகால திறைசேரி வீதத்திற்கான அறிக்கையிடல் திகதியிலுள்ள வீதம் எனப்படுகின்றது. இக் கணக்கீடானது தகைமைபெற ஆயுள் காப்பீட்டாளரினால் உத்தேசிக்கப்பட்ட அலகு கடன் முறையினை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

குழுமமானது நிச்சயிக்கப்பட்ட அனுகூலத்திட்டத்திலிருந்து தோன்றுகின்ற ஆயுள் கணிப்பு ரீதியான இலாபம் மற்றும் நட்டத்தினை ஏனைய அனைத்தும் உள்ளடக்கிய வருமானத்திலும் நிச்சயிக்கப்பட்ட அனுகூலத்திட்டங்களுடன் தொடர்பான செலவுகளை தனியாள் செலவுகளின் கீழ் வருமானக் கூற்றிலும் அங்கீகரிக்கின்றது. நிச்சயிக்கப்பட்ட அனுகூலத்திட்டங்களின் விபரங்கள் "ஊழியர் ஓய்வூதிய அனுகூலத் திட்டத்தில்" காட்டப்பட்டுள்ளது. (குறிப்பு 48)

| | | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
| **அங்கீகரிக்கப்பட்ட இலாப நட்டத்தின் தேறிய செலவுகள்** | | | | | |
| இலங்கை வங்கி ஓய்வூதிய நம்பிக்கை நிதியம் | 48.1.1 | 6,433,080 | 5,628,990 | 6,433,080 | 5,628,990 |
| இலங்கை வங்கி விதவைகள், தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் | 48.2.1 | 30,890 | (1,166,660) | 30,890 | (1,166,660) |
| இளைப்பாற்றுப் பணிக்கொடை | 48.3 | 233,630 | 174,160 | 354,940 | 274,835 |
| இலங்கை வங்கி ஓய்வூதிய நிதியம் - 2014 | 48.4.1 | (1,644,070) | (871,480) | (1,644,070) | (871,480) |
| சுகயீன விடுமுறைகளை பணமாக்குதலுக்கான ஏற்பாடு | 48.5 | 313,180 | 182,170 | 313,180 | 182,170 |
| இலங்கை வங்கி (யூகே) லிமிட்டட் - ஓய்வூதிய நிதியம் | | - | - | 15,124 | 14,539 |
| **நிச்சயிக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களுக்கான மொத்த பங்களிப்புக்கள்** | | 5,366,710 | 3,947,180 | 5,503,144 | 4,062,394 |

## 16 பெறுமானத் தேய்வு மற்றும் காலத்தேய்மானம்

**கணக்கீட்டுக் கொள்கை**

குழுவானது ஒரு திகதியில் இருந்து தேய்மானத்தை வழங்குகின்றது. சொத்துக்கள் பொருளாதார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் வரை சொத்துக்கள் பயன்படுத்தப்படக்கூடியனவாய் இருக்கின்றன. சொத்துக்களின் தேய்மானம், சொத்து விற்பனைக்காக வகைப்படுத்தப்பட்ட தேதி அல்லது சொத்து அங்கீகரிக்கப்படாத தேதியில் நிறுத்தப்படும். சொத்து முழுமையாக தேய்மானம் செய்யப்படாவிட்டால், அச்சொத்து செயலற்றதாக அல்லது செயலில் இருந்து ஓய்வு பெற்றதாக இருக்கும்போது தேய்மானம் நிறுத்தப்படாது.

குழுமம் அருவச் சொத்துக்களின் செலவை அவை பயன்பாட்டிற்கு வரும் திகதியிலிருந்து தொடங்கி, அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள பொருளாதார ஆயுட்காலத்தின் மீது ஒதுக்கீடு செய்வதற்காகத் தேய்மானம் செய்கிறது.

| | | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
| முதலீட்டுச் சொத்துக்களின் தேய்மானம் | 33 | - | - | - | 92,446 |
| ஆதனம், பொறி, இயந்திரம் என்பவற்றின் தேய்மானம் | 34 | 2,636,765 | 2,130,103 | 3,236,781 | 2,609,870 |
| குத்தகை ஆதனங்கள்/பயன்படுத்தும் உரிமையின் இலதாக்கல் | 35 | 1,743,972 | 1,553,120 | 814,844 | 1,048,365 |
| கட்புலனாகா சொத்துக்களின் இலதாக்கல் | 36 | 642,179 | 511,704 | 680,869 | 557,372 |
| **மொத்த தேய்மானம் மற்றும் கடன்தீர்வுச் செலவீனங்கள்** | | 5,022,916 | 4,194,927 | 4,732,494 | 4,308,053 |

## 17 ஏனைய செலவீனங்கள்

### கணக்கீட்டுக் கொள்கை

ஏனைய அனைத்துச் செலவுகளும் அவை தொடர்பான காலப்பகுதியில் ஏற்பட்டமையின் காரணமாக ஏனைய அனைத்துச் செலவுகளும் நிதியியல்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அனைத்துச் செலவீனங்களும் வியாபாரத் தொழிற்பாட்டில் ஏற்பட்டதுடன் மிகச் சிறந்த வினைத்திறனுள்ள நிலையில் மூலதனச் சொத்துக்கள் பேணப்பட்டமையும் குழுமத்தின் ஆண்டிற்கான இலாபத்தினை அடைவதற்கான வருமானத்தினைப் பெற உதவின. கடந்தகால நிகழ்வின்பேறாக குழுமமானது தற்போதைய கடப்பாடுகளை (சட்ட ரீதியான அல்லது உறுதியான) கொண்டிருக்குமாயின் ஏனைய செலவினங்கள் தொடர்பான ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. கடப்பாடுத் தொகையானது நம்பகமான முறையில் மதிப்பிடக் கூடியதும் பொருளாதார நன்மைகளின் வெளிப்பாய்ச்சலுக்கான சாத்தியங்களின் கடப்பாட்டினை தீர்ப்பதற்கான தேவையாக இருக்கும்.

**வைப்பு காப்புறுதி கட்டணம்**

2010ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் கீழ் வங்கியானது தகுதியுள்ள வைப்புப் பொறுப்புகளுக்கு காலாண்டுக்கு ஒருமுறை 0.1% அல்லது 0.125% கட்டணத்தில் செலுத்த வேண்டி உள்ளது. 01 ஒக்டோபர் 2010 இல் இருந்து காப்புறுதிக கட்டண வீதமானது அதற்கு முன்னரான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றின் மூலதன போதுமை விகிதத்தில் தங்கியுள்ளது. (CAR)

**மீள் காப்புறுதிக் கட்டணம், கோரல்கள் மற்றும் பிற நன்மைகள்**

மொத்த நன்மைகளும் கோரல்களும் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்களுக்கான மொத்த நன்மைகள் மற்றும் கோரல்கள் தற்றுணிவு பங்கேற்பு (DPF) தன்மைகளுடனான முதலீட்டு ஒப்பந்தங்கள் என்பன உள்ளக மற்றும் வெளிவாரி கோரல்களின் கையாளல் கிரயங்களை உள்ளடக்கிய இவ்வாண்டில் தோன்றிய அனைத்துக் கோரல்களையும் உள்ளடக்கியிருந்ததுடன் அவை நேரடியாக கோரல்களைச் செய்முறைப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு செய்தலுடன் தொடர்பான கையாளல் செலவுகள் தற்றுணிபு பங்கேற்பு பண்பு ஒப்பந்தங்களின் மீது பூட்கையாளர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட மிகையூதிய இலாபங்கள் அதேபோன்று காப்புறுதியின் மொத்தப் பெறுமதியிலும் தற்றுணிவு பங்கேற்பு பண்புகளுடனான முதலீட்டு ஒப்பந்தப் பொறுப்புக்கள் என்பனவற்றுடன் நேரடியாக தொடர்புடையனவாகவும் காணப்பட்டன. மரணக் கோரல்கள் மற்றும் சமர்ப்பிப்புக்கள் என்பன அறிவித்தல்கள் பெறப்பட்டதன் அடிப்படையில் மதிப்பிடப்பட்டன. முதிர்ச்சி மற்றும் ஆண்டுக் கொடுப்பனவுகள் வரும் வேளையில் பதிவுசெய்யப்பட்டன. இடைக்காலக் கொடுப்பனவுகளும் சமர்ப்பிப்புக்களும் தீர்ப்பனவு செய்யப்படும் நேரத்தில் கணக்கிடப்பட்டன.

பொதுக் காப்புறுதியானது இவ்வாண்டில் நிகழ்ந்த அனைத்துக் கோரல்களையும் அவை அறிவிக்கப்பட்டனவோ இல்லையோ அவை எல்லாவற்றையும் கோரல்களைச் செயன்முறைப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு செய்தலுடன் நேரடியாக தொடர்புடைய உள்ளக மற்றும் வெளிவாரி கோரல்களின் கையாளல் செலவுகளையும், கழிவுக்காப்புப் பெறுமதி மற்றும் ஏனைய அளவிடல்களுக்கான கழிவுகளையும் முன்னைய ஆண்டுகளிலிருந்தான வெளிநின்ற கோரல்களுக்கான ஏதேனும் சீராக்கங்களையும் உள்ளடக்கியிருந்தன.

கோரல் செலவினங்களும் வெளிநின்ற கோரல்களுக்கான பொறுப்புக்களும் நேரடியான (IBNR) மற்றும் உள்முக மீள்காப்புறுதி நடவடிக்கைகள் தொடர்பாகவும் இனங்காணப்பட்டன. பொறுப்பானது அறிவிக்கப்பட்டு ஆனால் இன்னமும் செலுத்தப்படாத கோரல்களையும், நிகழ்ந்து ஆனால் அறிவிக்கப்படாத கோரல்களையும், அக்கோரல்களைத் தீர்ப்பனவு செய்வதுடன் தொடர்பான நேரடி மற்றும் மறைமுகச் செலவுகளையும் உள்ளடக்குகிறது. வெளிநின்ற கோரல்களை, தனிப்பட்ட கோரல் கோவைகளை மதிப்பீடு செய்வதன் மூலமும் கோரல்களை தீர்ப்பனவு செய்வது தொடர்பான இறுதிச் செலவில் ஏற்பட்ட மாற்றங்களை மதிப்பிடுவதன் மூலமும் மதிப்பிடப்பட்டன. கடந்தகால அனுபவங்கள் மற்றும் போக்குகளினை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால பொறுப்பின் மிக யதார்த்தமான மதிப்பீடுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நிகழ்ந்து ஆனாலும் அறிவிக்கப்படாத கோரல்கள் தொடர்பிலான ஒதுக்கம் வருடாந்த அடிப்படையில் காப்புறுதிக் கணிப்பீட்டாளர்களினால் மதிப்பிடப்பட்டன.

கோரல்களுக்கான ஒதுக்கம், தற்போது கிடைக்கத்தக்கதாகவுள்ள தகவல்களின் அடிப்படையில் மிகச்சரியாக தெரிவிக்கப்பட்டுள்ளன என பணிப்பாளர்கள் கருதுகின்ற வேளையில் இறுதியான பொறுப்பு பின்னர் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் சம்பவங்களின் காரணமாக வேறுபடும். இது வழங்கப்பட்ட தொகையில் சீராக்கங்களைத் தோற்றுவிக்கக்கூடும். அத்தகைய தொகைகள் உரிய காலப்பகுதிக்கான நிதியியல் கூற்றுக்களில் பிரதிபலிக்கப்படுகின்றன. பயன்படுத்தப்பட்ட முறைகளும் செய்யப்பட்ட மதிப்பீடுகளும் கிரமமாக மீளாய்வு செய்யப்பட்டன.

மொத்தக் காப்புறுதிக் கோரல்கள் தொடர்பான ஒப்பந்த நியதிகளுக்கிணங்க அங்கீகரிக்கப்படும் பொழுது மீள் காப்புறுதிக் கோரல்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
| பணிப்பாளர்களின் ஊதியங்கள் | 4,975 | 4,502 | 20,736 | 13,846 |
| கணக்காய்வாளர்களின் ஊதியங்கள் | | | | |
| கணக்காய்வு சேவைக் கட்டணங்கள் | 49,650 | 21,994 | 112,242 | 80,356 |
| கணக்காய்வு அல்லா சேவைக் கட்டணங்கள் | 6,573 | 1,555 | 6,573 | 1,555 |
| வைப்புகளுக்கான சேவைக்கட்டணங்கள் | 15,880 | 7,803 | 16,235 | 8,452 |
| தொழில்சார் மற்றும் சட்டச் செலவுகள் | 3,290,128 | 3,237,606 | 3,334,085 | 3,275,897 |
| காணி கட்டடம் என்பவற்றை முன் மதிப்பிடாமையால் ஏற்பட்ட (இலாபம்)/நட்டம் | 315,227 | 279,499 | 408,378 | 415,011 |
| அசையாச் சொத்துக்கள் பராமரிப்புச் செலவு | 7,204,886 | 8,784,172 | 7,605,674 | 8,614,316 |
| மீள்காப்புறுதிக் கட்டணங்கள், கோரல்கள் மற்றும் ஏனைய நன்மைகள் | - | - | 445,349 | 270,706 |
| நிலைய நிர்வாக, மற்றும் நிறுவுதற் செலவினங்கள் | 11,382,198 | 10,265,497 | 12,549,269 | 11,877,762 |
| **மொத்த ஏனைய செலவினங்கள்** | 22,269,517 | 22,602,628 | 24,498,541 | 24,557,901 |

## 18 வரிகள்

GRI 207-1, 2, 4

### 18.1 நிதியியல் சேவைகள் மீதான வரிகள்

**கணக்கீட்டுக் கொள்கை**

நிதிச் சேவைகள் மீதான வரிகளில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்புக்கான வசூலிப்பு (SSCL) ஆகியவை நிதிச் சேவைகளில் செய்யப்பட்ட பெறுமதி சேர்தலின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன.

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
| பெறுமதி சேர் வரி | 27,993,418 | 24,932,941 | 28,349,923 | 25,277,395 |
| சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புக்கான வசூலிப்புக்கள் | 3,887,986 | 3,462,348 | 3,940,091 | 3,512,748 |
| நிதியியல் சேவைகள் மீதான மொத்த வரிகள் | 31,881,404 | 28,395,289 | 32,290,014 | 28,790,143 |

### 18.2 வருமான வரிச் செலவினம்/மாற்றுப்பதிவு

**கணக்கீட்டுக் கொள்கை**

நடைமுறைவரி மற்றும் பிற்போடப்பட்ட வரி என்பன உரிமை மூலதனம் அல்லது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான அளவு நீங்கலாக வருமானக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படுகின்றன. (OCI)

**நடைமுறை வரி**

நடைமுறை வரி என்பது அறிக்கையிடுகின்ற திகதியில் இயற்றப்பட்ட அல்லது கணிசமானளவிற்கு இயற்றப்பட்ட வரி வீதங்களையும் முன்னைய ஆண்டுகள் தொடர்பான செலுத்தத்தக்க வரிக்கான ஏதும் சீராக்கங்கள் என்பனவற்றைப் பயன்படுத்தி ஆண்டிற்கான வரி செலுத்தத்தக்க வருமானம் அல்லது இழப்பு மீது செலுத்துவதற்கு அல்லது பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வரியாகும்.

அதன்படி 1 ஏப்பிரல் 2018 முதல் நடைமுறைக்கு வரும் 2017 ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு வருவாய் சட்டத்தின் விதிகளின் படி வரிவிதிப்பு நோக்கங்களுக்காக சரிசெய்யப்பட்ட ஆண்டிற்கான கணக்கியல் இலாபத்தின் அடிப்படையில் வரிவிதிப்புக்கான ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS 12) வருமான வரிகள், பயனுள்ள வரி விகிதங்கள் மற்றும் வரி மற்றும் வரிக்கு முந்திய இலாபத்திற்கு இடையான இணக்கப்பாடு ஆகியவற்றால் கோரப்பட்டுள்ளது குறிப்பு 18.2.2 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு செயற்பாடுகளிற்கான வரி ஏற்பாடானது கணக்கீட்டு இலாபத்தின் அடிப்படையில் வரி அறவிடுதல் காரணமாக சரி செய்யப்பட்ட, அந்தந்த நாடுகளிலுள்ள சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளுக்குட்பட்ட ஏற்பாடுகளுடன், அறிக்கையிடப்படுகின்ற திகதியின் போதான இயற்றப்பட்ட அல்லது குறிப்பிடத்தக்க வகையில் இயற்றப்பட்ட வரி வீதங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றன.

**பிற்போடப்பட்ட வரி**

தற்காலிக வேறுபாடுகள் மீதான பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மீது பகுப்பாய்வு விபரங்கள் குறிப்பு 37இல் தரப்பட்டுள்ளது.

**18.2.1 வருமான வரிச் செலவினக் கூறுகள்.**

| | | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
| நடப்பு வரிச் செலவினம் | | | | | |
| ஆண்டுக்கான இலாபத்தின் மீதான வருமான வரி | | 46,065,423 | 36,954,896 | 46,802,479 | 37,598,380 |
| முன்னைய ஆண்டுகளுக்கான சீர்படுத்தல் | | 6,448,594 | (902,092) | 6,448,594 | (902,092) |
| பிற்போடப்பட்ட வரிச் செலவினங்கள் | | | | | |
| பிற்போடப்பட்ட வரி செலவின விதிப்பனவு/(மாற்றுப்பதிவு) | 37 | (7,693,994) | 6,464,525 | (7,788,581) | 6,463,702 |
| ஆண்டுக்கான வருமான வரிச் செலவினம் | | 44,820,023 | 42,517,329 | 45,462,492 | 43,159,990 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 18.2.2 கணக்கீட்டு இலாபம் மற்றும் வருமான வரிச் செலவினக் கணக்கிணக்கம்

| | | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|---|
| டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2025<br>ரூ. ‘000 | 2024<br>ரூ. ‘000 | 2025<br>ரூ. ‘000 | 2024<br>ரூ. ‘000 |
| வருமான வரிக்கு முன்னரான கணக்கீட்டு இலாபம் | | 120,826,954 | 106,904,268 | 121,933,750 | 108,221,467 |
| கூட்டு: துணை மற்றும் கூட்டு நிறுவனங்களிலிருந்தான பங்குலாப வருமானம் | | - | - | 472,486 | 445,167 |
| | | 120,826,954 | 106,904,268 | 122,406,236 | 108,666,634 |
| கூட்டு: அனுமதிக்கப்படாத செலவினங்கள் | | 65,786,763 | 36,108,781 | 66,955,211 | 36,639,568 |
| | | 186,613,717 | 143,013,049 | 189,361,447 | 145,306,202 |
| கழி: அனுமதிக்கத்தக்க செலவினங்கள் | | 25,203,678 | 13,801,023 | 25,494,557 | 13,949,228 |
| கழி: வரி விலக்களிக்கப்பட்ட வருமானம் | | 2,033,959 | 7,115,756 | 2,033,959 | 7,115,756 |
| **வரி விதிக்கத்தக்க வருமானம்** | | 159,376,080 | 122,096,270 | 161,832,931 | 124,241,218 |
| வரிவிதிக்கத்தக்க வருமானம 30% | | 147,726,742 | 122,096,270 | 150,183,593 | 124,241,218 |
| வரிவிதிக்கத்தக்க வருமானம 15% | | 11,649,338 | - | 11,649,338 | - |
| தற்போதைய வரிவிகிதம் 30% இல் | | 44,318,022 | 36,628,881 | 45,055,078 | 37,272,365 |
| தற்போதைய வரி விகிதம் 15% இல் | | 1,747,401 | - | 1,747,401 | - |
| ஏனைய நாடுகளிலுள்ள வேறுபட்ட வரி வீதங்களின் தாக்கம் | | - | 326,015 | - | 326,015 |
| கடந்த வருடத்திற்கான சீராக்கல் | | 6,448,594 | (902,092) | 6,448,594 | (902,092) |
| பிற்போடப்பட்ட வரி விதிப்பனவு/(மாற்றுப்பதிவு) | 37 | (7,693,994) | 6,464,525 | (7,788,581) | 6,463,702 |
| ஆண்டுக்கான வருமான வரிச் செலவினம் | | 44,820,023 | 42,517,329 | 45,462,492 | 43,159,990 |
| பயனுறு வருமான வரி வீதம் (%) | | 37.1% | 39.8% | 37.3% | 39.9% |

| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | 25 | 23,982,341 | - | 23,982,341 |
| பெறுதி நிதியியல் சொத்துக்கள் | 26 | 23,500,600 | 23,500,600 | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக அங்கீகரிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் | | | | |
| - நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்பட்ட | 27 | 21,003,177 | 21,003,177 | - |
| பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதிச் சொத்துக்கள் | | | | |
| - கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 28 | 2,177,707,779 | - | 2,177,707,779 |
| - கடன் மற்றும் ஏனைய கருவிகள் | 29 | 2,275,934,376 | - | 2,275,934,376 |
| ஏ.வி.வ. ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 30 | 52,049,653 | - | 52,049,653 |
| துணைக் கம்பனிகளிலான முதலீடு | 31 | 8,080,402 | - | 8,080,402 |
| இணைக் கம்பனிகளிலான முதலீடு | 32 | 92,988 | - | 92,988 |
| முதலீட்டு ஆதனங்கள் | 33 | 2,414,640 | - | 2,414,640 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 34 | 45,621,257 | - | 45,621,257 |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள்/குத்தகை ஆதனங்கள் | 35 | 5,554,420 | - | 5,554,420 |
| அருவச் சொத்துக்கள் | 36 | 1,608,812 | - | 1,608,812 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 37 | 15,836,422 | - | 15,836,422 |
| ஏனைய சொத்துக்கள் | 38 | 101,570,365 | - | 101,570,365 |
| **மொத்த சொத்துக்கள்** | | 4,985,138,976 | 44,503,777 | 4,940,635,199 |
| **சந்தை இடருக்குட்பட்ட பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை | 39 | 1,671,087 | - | 1,671,087 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனைசெய்யப்பட்ட பிணையங்கள் | 40 | 131,079,414 | - | 131,079,414 |
| பெறுதி நிதியியல் பொறுப்புக்கள் | 41 | 16,476,077 | 16,476,077 | - |
| பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதியியல் பொறுப்புக்கள் | | | | |
| - வைப்பீட்டாளர்களுக்கு செலுத்தவேண்டியவை | 42 | 4,208,603,435 | - | 4,208,603,435 |
| - ஏனைய கடன் பெறுகைகள ஏனைய கடன் பெறுகைகள் | 43 | 29,143,678 | - | 29,143,678 |
| நடைமுறை வரிப் பொறுப்புக்கள் | 45 | 23,209,855 | - | 23,209,855 |
| ஏனைய பொறுப்புக்கள் | 47 | 203,859,925 | - | 203,859,925 |
| துணைநிலை பொறுப்புக்கள் | 49 | 68,535,700 | - | 68,535,700 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | 4,682,579,171 | 16,476,077 | 4,666,103,094 |

### 64.4.2 வட்டி வீத இடர்

வட்டி வீத இடரானது வட்டி வீதத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகளில் இருந்து உருவாகின்றது. இவ் வட்டி வீத மாற்றமானது எதிர்கால காசுப்பாய்ச்சல்களை அல்லது நிதியியல் சாதனங்களின் நியாயப் பெறுமதியைப் பாதிக்கும். தொடர்கண்காணிப்பு மற்றும் வட்டி விகித அபாயத்தை திறம்பட நிர்வகிப்பதை அவ்வப்போது மறுவிலையிடல் உத்திகள் உறுதிசெய்கின்றன.

வட்டி விகித உணர்திறன் கொண்ட கருவிகளான, வங்கியின்திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் வர்த்தக பட்டியல்களில் , வட்டி விகித மாற்றங்களின் தாக்கத்தை மதிப்பிடுவதற்காக, அடிப்படைப் புள்ளி வாரியான விலை மதிப்பு (PVBP) மற்றும் கால அளவுப் பகுப்பாய்வு ஆகியவை இடர் நாட்ட வரையறைகளுக்கு எதிராக தினசரி அடிப்படையில் கண்காணிக்கப்படுகின்றன

| | 2025 ரூ | 2024 ரூ | இடர் நாட்டம் ரூ. |
|---|---|---|---|
| **அடிப்படை புள்ளிவாரியான விலை மதிப்பு** | | | |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு | 1,330 | 47,933 | 900,000 |
| திறைசேரி முறிகளில் முதலீடு | 717,562 | 629,067 | 2,100,000 |

வங்கிப் புத்தகத்திலுள்ள வட்டி வீத இடரானது, வட்டித் தளம்பல் நிறைந்த சொத்துக்கள், பொறுப்புக்களை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட முதிர்ச்சிப் பட்டியலில் அவை முதிர்ச்சியடைவதற்குத் தேவையான எஞ்சியுள்ள காலத்தைக் கருத்திற் கொண்டு போடுதல், இடைவெளி எல்லைகளைத் தீர்மானித்துக் கண்காணித்தல் மற்றும் சொத்துப் பட்டியலை மீள் விலையிடல் போன்றவற்றின் ஊடாக கண்காணிக்கப்படுகின்றது.

கீழேயுள்ள அட்டவணை, வங்கியின் நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மீதான வட்டி வீத இடர் வெளிப்பாட்டை சதவீத அடிப்படையில் பகுப்பாய்வு செய்கிறது.

| 2025 | 1 மாதம் வரை (%) | 1-3 மாதங்கள் (%) | 3-6 மாதங்கள் (%) | 6-12 மாதங்கள் (%) | 1-2 வருடங்கள் (%) | 2-3 வருடங்கள் (%) | 3-4 வருடங்கள் (%) | 4-5 வருடங்கள் (%) | 5வருடங்களுக்கு மேல் (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வீத உணர்திறன் சொத்துக்கள் | 4.1 | 4.3 | 5.2 | 15.2 | 10.7 | 10.7 | 14.1 | 8.1 | 27.6 |
| வீத உணர்திறன் பொறுப்புக்கள் | 6.5 | 3.3 | 3.7 | 20.1 | 9.0 | 12.4 | 12.4 | 6.6 | 25.9 |
| இடைவெளி | (2.4) | 1.0 | 1.5 | (4.9) | 1.7 | (1.7) | 1.7 | 1.5 | 1.7 |

| 2024 | 1 மாதம் வரை (%) | 1-3 மாதங்கள் (%) | 3-6 மாதங்கள் (%) | 6-12 மாதங்கள் (%) | 1-2 வருடங்கள் (%) | 2-3 வருடங்கள் (%) | 3-4 வருடங்கள் (%) | 4-5 வருடங்கள் (%) | 5வருடங்களுக்கு மேல் (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வீத உணர்திறன் சொத்துக்கள் | 10.7 | 13.2 | 12.1 | 11.9 | 6.2 | 6.2 | 5.0 | 5.0 | 29.7 |
| வீத உணர்திறன் பொறுப்புக்கள் | 4.9 | 19.9 | 14.5 | 11.8 | 5.0 | 5.0 | 5.1 | 5.1 | 28.8 |
| இடைவெளி | 5.8 | (6.7) | (2.4) | 0.1 | 1.2 | 1.2 | (0.1) | (0.1) | 0.9 |

### 64.4.3 அந்நிய செலாவணி இடர்

அந்நியச் செலாவணி இடர் என்பது, அந்நியச் செலாவணி விகிதங்களில் ஏற்படும் மாற்றங்களால், அந்நிய நாணயத்தில் குறிப்பிடப்பட்ட நிதிக் கருவிகளின் மதிப்பில் ஏற்படும் பாதகமான ஏற்ற இறக்கத்தின் இடர் ஆகும். இது வங்கியின் நிதிச் செயல்திறன் அல்லது நிதி நிலையைப் பாதிக்கிறது. இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் , வங்கியானது இந்த ஆண்டில் திறந்த நிலைகளைக் கொண்டிருந்தது. IRMC-ஆல் பரிந்துரைக்கப்பட்ட தனிப்பட்ட வெளிப்பாடுகள் மற்றும் திரட்டப்பட்ட வெளிப்பாடுகளை உள்ளடக்கிய ஒரு விரிவான எல்லை முகாமைத்துவ கட்டமைப்பு (LMF), அந்நியச் செலாவணி இடரை நிர்வகிக்கிறது. நெருக்கடியான சூழ்நிலைகளின் போது இலாபம் மற்றும் மூலதனப் போதுமான விகிதத்தில் (CAR) ஏற்படும் தாக்கத்தை மதிப்பிடுவதற்காக, அந்நியச் செலாவணி பரிவர்த்தனைகள் மீது அழுத்தச் சோதனைப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.

| டிசம்பர் 31 இல் உள்ளவாறான அந்நிய செலாவணி நிலைமை | 2025 | | 2024 | |
|---|---|---|---|---|
| | தேறிய ஒட்டுமொத்த நீண்ட ரூ. '000 | தேறிய ஒட்டுமொத்த குறுகிய ரூ. '000 | தேறிய ஒட்டுமொத்த நீண்ட ரூ. '000 | தேறிய ஒட்டுமொத்த குறுகிய ரூ. '000 |
| **நாணயம்** | | | | |
| ஐக்கிய அமெரிக்க டொலர் | - | (1,836,099) | 262,223 | - |
| கிரேட் பிரிட்டன் பவுண்ட் | 18,727 | - | 13,679 | - |
| யூரோ | 54,119 | - | 47,952 | - |
| ஜப்பானிய யென் | 1,862,742 | - | - | (94,689) |
| அவுஸ்திரேலிய டொலர் | 8,061 | - | 8,468 | - |
| கனேடிய டொலர் | 423 | - | 1,208 | - |
| சுவிஸ் பிராங்க | 692 | - | - | - |
| சிங்கப்பூர் டொலர் | - | (24,076) | 1,014 | - |
| ஹொங் கொங் டொலர் | 124,924 | - | 247,081 | - |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| பகுதித் தொகை | 2,069,688 | (1,860,175) | 581,625 | (94,689) |
| ஏனைய நாணயங்கள் | 2,291,632 | (206,419) | 1,980,373 | (91,207) |
| மொத்தத் தொகை | 4,361,320 | (2,066,594) | 2,561,998 | (185,896) |
| நீண்ட அல்லது குறுகியதின் உயர்வானது | | 4,361,320 | | 2,561,998 |

நாணயமாற்று அதிர்ச்சிகளின் நிமித்தம் வருமானக் கூற்றிலான தாக்கம்

| | 2025 | | 2024 | |
|---|---|---|---|---|
| | தேறிய திறந்த இருப்பு (வீத அதிர்ச்சிகளின் பின்னர்) | வருமானக் கூற்றிலான தாக்கம் ரூ. "000 | தேறிய திறந்த இருப்பு (வீத அதிர்ச்சிகளின் பின்னர்) ரூ. "000 | வருமானக் கூற்றிலான தாக்கம் ரூ. "000 |
| நாணயமாற்று வீத அதிர்ச்சிகள் | | | | |
| 5% | 4,143,253 | (218,066) | 1,280,999 | (1,280,999) |
| 10% | 3,925,187 | (436,132) | 2,305,799 | (256,200) |
| -5% | 4,579,385 | 218,066 | 3,842,998 | 1,280,999 |
| -10% | 4,797,451 | 436,132 | 2,818,198 | 256,200 |

### 64.4.4 உரித்துவ இடர்

உரித்துவ இடர் என்பது உரித்துவ குறியீடுகளின் நிலை மற்றும் தனிப்பட்ட பங்குகளின் விலையில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாக உரித்துவ பட்டியலின் நியாய மதிப்பு மோசமடைவதற்கான இடராகும். ஒட்டுமொத்த பட்டியல் வரம்புகள்,முகவர் வரம்புகள், இழப்பு வரம்புகள் மற்றும் VaR முறையைப் பயன்படுத்துவதன் மூலம் உரித்துவ இடர் கண்காணிக்கப்படுகிறது..

## 64.5 தொழிற்பாடடு இடர்நேர்கை

தொழிற்பாட்டு இடர் என்பது போதுமையற்ற அல்லது தவறிய உள்ளக செயல்முறைகள், மக்கள் மற்றும் முறைமைகள் அல்லது வெளிவாரி நிகழ்வுகளிலிருந்து விளைகின்ற நட்டத்திற்கான இடர் ஆகும். வங்கியானது அடிப்படை குறிகாட்டி அணுகுமுறையின் (BIA) பிரகாரம் தொழிற்பாட்டு இடருக்கு குறிப்பிடத்தக்களவு மூலதனத் தொகையினை ஒதுக்கியுள்ளது. இது மெய்யான தொழிற்பாட்டு நட்டங்கள் ஒதுக்கப்பட்ட மூலதனத்திலும் பார்க்க மிகவும் குறைவாக இருந்தபோதிலும் ஆகும். வங்கியின் முழுதான மற்றும் விரிவான தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ வரம்புறுகையானது அனைத்து பொருத்தமான இடர்களும் செயல்திறனுடன் முகாமைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துகின்றது.

## 64.6 மூலதன முகாமைத்துவம்

வங்கி ஏற்கும் இடர்களுக்கு எதிரான நிதிப் பாதுகாப்பு அரணாக மூலதனம் விளங்குகிறது. எனவே, வணிகத்தின் நீடித்த நிலைத்தன்மையையும் நீண்டகால ஸ்திரத்தன்மையையும் உறுதி செய்வதில் முறையான மூலதன முகாமைத்துவம் இன்றியமையாதது. மூலதன முகாமைத்துவத்தின் முதன்மை நோக்கம், குறைந்தபட்ச ஒழுங்குமுறைத் தேவைக்கு மேலான மூலதன அளவுகளைப் பராமரிப்பதும், அதிகபட்ச இலாபத்திற்காக மூலதனத்தை உகந்த முறையில் பயன்படுத்துவதும் ஆகும். வணிகத்தின் அளவு மற்றும் தன்மையைக் கருத்தில் கொண்டு, நிறுத்திவைக்கப்பட்ட வருவாயே வங்கியின் உள்ளக மூலதன உருவாக்கத்தின் முதன்மை ஆதாரமாக உள்ளது. மூலதன விரிவாக்கத் திட்டம், வணிக விரிவாக்கத்திற்காக முன்னரே தீர்மானிக்கப்பட்ட மூலதன இலக்குகளை அடைவதை உறுதி செய்வதற்கும், நெருக்கடியான சூழ்நிலைகளைச் சமாளிப்பதற்கும் தேவையான மூலதன ஆதாரங்களைத் தீர்மானிக்கிறது.

### 64.6.1 மூலதனப் போதுமான தன்மை மற்றும் உள்ளக மூலதனப் போதுமான தன்மை மதிப்பீட்டுச் செயல்முறை (ICAAP)

மூலதனப் போதுமான தன்மை என்பது வங்கியின் நிதி வலிமையின் ஒரு அளவீடு ஆகும். இது, வணிகத்தின் கடன், சந்தை மற்றும் செயல்பாட்டு அம்சங்களின் இடர் எடையிடப்பட்ட சொத்துக்களுக்கு (RWAs) அதன் மூலதனத்திற்கும் உள்ள விகிதமாக வெளிப்படுத்தப்படுகிறது. இந்த விகிதம், நிதி நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காகப் போதுமான மூலதனத்தைப் பராமரிக்கும் வங்கியின் திறனைக் குறிக்கிறது. இது, ஒரு நியாயமான அளவிலான இடரை எவ்வளவு திறம்படத் தாங்க முடியும் என்பதை உறுதி செய்கிறது. உள்நாட்டு அமைப்புரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளுக்கான (DSIBs) குறைந்தபட்ச மொத்த மூலதனத் தேவை 14% ஆகும். மேலும், வங்கிகள் அடுக்கு I (Tier I) மூலதன அளவில் 10மூ-ஐப் பராமரிக்க வேண்டும்.

உள்ளக மூலதனப் போதுமான தன்மை மதிப்பீட்டுச் செயல்முறை (ICAAP), பாசல் தேவை மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டுதலின்படி, அனைத்து இடர்களுக்கும் எதிராகப் பராமரிக்கப்பட வேண்டிய மூலதனத்தின் அளவைத் தீர்மானிக்கிறது. வங்கி எதிர்கொள்ளும் அனைத்து இடர்களையும் ஈடுசெய்யப் போதுமான மூலதன அளவுகள் பராமரிக்கப்படுவதை உறுதிசெய்யும், நிறைவேற்றப்பட்ட மற்றும் திட்டமிடப்பட்ட வணிகச் செயல்முறையின் அடிப்படையில் ICAAP மூலதனத் திட்டமிடலை எளிதாக்குகிறது. வங்கி, ICAAP-இல் உள்ள தூண் 2 இடர்களை மதிப்பிடுவதற்கு சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உள் மாதிரிகளைப் பயன்படுத்துகிறது மற்றும் மொத்த மூலதனத் தேவையைத் தீர்மானிக்க பல சூழ்நிலைகளைப் பயன்படுத்தி விரிவான அழுத்தச் சோதனையை மேற்கொள்கிறது. ICAAP, நன்மதிப்பு இடர், இணக்கப்பாட்டு இடர், மூலோபாய இடர் மற்றும் தகவல் தொழில்நுட்ப இடர்

போன்ற சாத்தியமான அனைத்து பண்புசார் இடர்களையும் நீக்குகிறது. மேலும், செறிவு இடர் மதிப்பீடு, வங்கியானது எந்தவொரு எதிர் தரப்பினர், தயாரிப்பு, துறை அல்லது புவியியல் பிரிவிற்கும் அதிகப்படியாக வெளிப்படாத, நன்கு பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டுத் தொகுப்பைக் கொண்டிருப்பதை உறுதி செய்கிறது.

| மூலதன மட்டங்கள் | 2025 | 2024 |
|---|---|---|
| கடன் இடர் சார்ந்த நிறையளித்த சொத்துக்களுக்கான மூலதனக் கட்டணம் (ரூ.000) | 247,238,509 | 223,131,659 |
| சந்தை இடர் சார்ந்த நிறையளித்த சொத்துக்களுக்கான மூலதனக் கட்டணம் (ரூ.000) | 2,617,377 | 2,545,425 |
| செயல்பாட்டு இடர் சார்ந்த நிறையளித்த சொத்துக்களுக்கான மூலதனக் கட்டணம் (ரூ.000) | 26,580,620 | 24,582,544 |
| அடுக்கு I மூலதனம் % (ஒழுங்குமுறை குறைந்தபட்சம் - 10%) | 12.37 | 13.00 |
| மொத்த மூலதனம் % (ஒழுங்குமுறை குறைந்தபட்சம் - 15%) | 16.89 | 16.55 |

## 65 தெர்ந்தெடுக்கப்பட்ட செயல்திறன் குறிகாட்டிகள்/ முக்கிய நிதி தரவு (ஒழுங்குமுறை அறிக்கையிடலின்படி)

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| 31 டிசம்பர் உள்ளவாறான | 2025 | 2024 | 2025 | 2024 |
| **ஒழுங்குமுறை மூலதன போதுமான அளவு (ரூ. மில்லியன்களில்)** | | | | |
| பொது மூலதன அடுக்கு 1 | 225,968 | 213,974 | 238,613 | 225,093 |
| அடுக்கு 1 மூலதனம் | 244,318 | 232,324 | 256,963 | 243,443 |
| மொத்த ஒழுங்குமுறை மூலதனம் | 333,555 | 295,847 | 349,258 | 308,735 |
| **ஒழுங்குமுறை மூலதன விகிதங்கள (%)** | | | | |
| பொது மூலதன அடுக்கு 1 மூலதனம் (%) (குறைந்தபட்ச தேவை : 8.5%) | 11.4 | 12.0 | 11.5 | 12.2 |
| அடுக்கு 1 மூலதன விகிதம் (%) (குறைந்தபட்ச தேவைப்பாடு : 10.0%) | 12.4 | 13.0 | 12.4 | 13.1 |
| மொத்த மூலதன விகிதம் (%) (குறைந்தபட்ச தேவைப்பாடு : 15.0%)** | 16.9 | 16.6 | 16.8 | 16.7 |
| பாசல் III முடுக்கி விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு : 3.0%) | 4.1 | 4.4 | 4.3 | 4.6 |
| **ஒழுங்குமுறை திரவத்தன்மை தேவைப்பாடு (%)** | | | | |
| திரவத்தன்மை காப்பு விகிதம் (%) (குறைந்தபட்ச தேவை : 100.0%) | | | | |
| - ரூபாய் (%) | 296.0 | 329.0 | | |
| - அனைத்து நாணயம (%) | 260.4 | 269.6 | | |
| தேறிய நிலையான நிதியிடல் விகிதம் (%) - (குறைந்தபட்ச தேவைப்பாடு : 100.0%) | 156.6 | 157.9 | | |
| **சொத்துக்களின் தரம் (%)** | | | | |
| குறைபாட்டு கடன்கள் (கட்டம் 3) மொத்த கடன்களில், விகிதம் (%)* | 5.6 | 7.2 | | |
| குறைபாடு (கட்டம் 3) கட்டம் 3 கடன்களில், விகிதம் (%)* | 57.9 | 53.6 | | |
| **வருமானம் மற்றும் லாபத்தன்மை (%)** | | | | |
| தேறிய வட்டி எல்லை (%) | 4.0 | 3.6 | 4.0 | 3.6 |
| சொத்துக்கள் மீதான வருமானம் (வரிக்கு முன்) (%) | 2.3 | 2.3 | 2.3 | 2.3 |
| உரிமையாண்மை மீதான வருமானம் (%) | 22.7 | 23.2 | 21.5 | 21.9 |
| வருமான விகிதத்திற்கான செலவு (%) | 33.0 | 40.1 | 34.1 | 41.3 |
| **குறிப்பு தகவல்கள்** | | | | |
| கடன் தரப்படுத்தல்- - உள்நாட்டு | AA- | AA- | | |
| பணியாளர்களின் எண்ணிக்கை | 8,912 | 8,214 | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 584 | 584 | | |

* பயன்படுத்தப்படாத கடன் பகுதி உட்பட

** திருத்தப்பட்ட 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 19(10) க்கு இணங்க, 14% என்ற ஒழுங்குமுறைத் தேவைக்கு மேலாக, குறைந்தபட்சம் 1% கூடுதல் மூலதன இடையகத்தைப் பராமரிக்குமாறு இலங்கை மத்திய வங்கி (CBSL) இலங்கை வங்கிக்கு உத்தரவிட்டுள்ளது.

## இணக்கப்பாட்டு பின்னிணைப்புக்கள்


| | |
|---|---|
| இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2023ம் ஆண்டு வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகை பற்றிய சிறந்த நடைமுறைக் கோவைக்கு அமைவான இணக்கப்பாடு | 405 |
| 2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள் | 411 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தினால் வெளியிடப்பட்ட இல 09 அமைவான விதிகளுடனான இணக்கப்பாடு | 436 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தினால் அமுல்ப்படுத்தப்பட்ட ஏனைய இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள் | 441 |
| இலங்கை மத்திய வங்கியினால் அமுல்ப்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள் | 442 |
| மூலதனப் போதுமானதன்மை | 446 |

# இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2023ம் ஆண்டு வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகை பற்றிய சிறந்த நடைமுறைக் கோவைக்கு அமைவான இணக்கப்பாடு

| நடைமுறைக் கோவையில் குறிப்பிட்டுள்ள பிரிவுகள் | இணக்கப்பாட்டு நிலைமை |
|---|---|
| A | **பணிப்பாளர்கள்** |
| A.1 | **சபை** |
| கொள்கை A.1 | கொள்கை A.1 31.12.2025 திகதியன்று, இலங்கை வங்கி அதன் பணிப்பாளர் சபையில் பதினொரு (11) நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை கொண்டிருந்தது . இவர்கள், வங்கியைத் திறம்படக் கட்டுப்படுத்தி வழிநடத்துவதற்கான திறன்களையும் அனுபவத்தையும் கொண்டுள்ளனர்.<br>பணிப்பாளர்கள் திறன்களும் அனுபவமும், பக்கம் 34 முதல் 39 வரையிலான அவர்களைப் பற்றிய விவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. |
| A.1.1 | **சபைக் கூட்டங்கள்**<br>இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை என்கின்ற அடிப்படையில் சபைக் கூட்டங்கள் இடம்பெறுகின்றன. மேலும் தேவையேற்படும் போது விசேட கூட்டங்கள் திட்டமிடப்படுகின்றன. கூட்டங்களுக்கான அட்டவணை வருடத்தின் ஆரம்பத்தின் போதே நிர்ணயிக்கப்படுவதுடன் சபைக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்கும் கட்டமைப்பு ஏற்று இணங்கப்பட்டுள்ளது. தீர்மானம் வகுத்தலை இயலுமாக்குவதற்காக இணங்கப்பட்டுள்ளவாறு அவசியமான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. மீளாய்வின் கீழுள்ள வருடத்தில் சபை 26 தடவைகள் கூடியுள்ளதுடன் கூட்டங்களிற்கு வருகை தந்த விபரங்கள் 173 ஆம் பக்கத்தில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.<br>இந்தப் பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள தகவல்கள் சம்பந்தப்பட்ட உபசெயற்குழுக்கள் மற்றும் சபையினால் விவாதிக்கப்படுகின்றன. |
| A.1.2 | **சபையின் வகிபாத்திரமும் பொறுப்புக்களும்**<br>சபையின் வகிபாத்திரமும் பொறுப்புக்களும் சபைச் சாசனத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. |
| A.1.3 | **வுழ யஉவ டை யஉஉழசனயநெஉந றவைா வாந டயறள ழக வாந உழரவெசல**<br>1938 ஆம் ஆண்டு 53 ஆம் இல இலங்கை வங்கி கட்டளை சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் மற்றும் 1988ஆம் ஆண்டு 30 ஆம் இல வங்கியியல் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் மற்றும் 2024 ஆம் ஆண்டு 24 ஆம் இல வங்கியியல் சட்டங்களுக்கு அமைவாக வங்கியானது ஒழுங்குமுறைப்படுத்தப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, மத்திய வங்கி, ஒழுங்குமுறையாளர்களால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்கள்,இலங்கை வங்கியின் வெளிநாட்டு கிளைகளின் உள்ள எந்த ஒரு ஒழுங்குமுறையாளர்கள், இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்குச் சந்தை ஆகியவற்றின் வழிக்காட்டல்கள் இலங்கை வங்கிக்கு பிரயோகிக்கப்படுகின்றன.சபை பிரயோகிக்கக்கூடிய சட்டங்களின்படி செயல்படுகிறது.<br>சுயாதீன தொழில்முறை ஆலோசனைகளுக்கான பணிப்பாளர்களின் அணுகல் குறித்த கொள்கை நடைமுறையில் உள்ளது, இதன் மூலம் வங்கியின் செலவில் தேவைகளின் அடிப்படையில் சுயாதீன தொழில்முறை ஆலோசனைகளைப் பணிப்பாளர்கள் பெற முடியும். |
| A.1.4 | **நாட்டின் சட்டங்களுக்கு அமைவாகச் செயற்படுதல்**<br>சட்டத்தரணியான சபையின் செயலாளர்/இலங்கை வங்கியின் செயலாளர் வழங்குகின்ற ஆலோசனையினையும் சேவையினையும் சபை உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ள முடியும். சபைச் செயன்முறைகள் பின்பற்றப்படுகின்றன மற்றும் பிரயோகிக்கத்தக்க விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள், நெறிப்படுத்தல்கள் ஆகியவற்றுக்குச் சபை இயைபுறுகின்றது மேலும் கூட்ட அறிக்கைகளும் பொருத்தமான பதிவுகளும் பேணப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பினைச் சபையின் செயலாளர் கொண்டுள்ளார்.<br>சபைச் செயலாளர்/இலங்கை வங்கியின் செயலாளரினை அகற்றுவது தொடர்பான எந்த விடயமும் முழுச் சபையினதும் விடயமாக அமைந்துள்ளது. கம்பனிச் செயலாளரின் வகிபாகம் பக்கம் 170 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| A.1.5 | **சுயாதீனமான தீர்மானங்கள்**<br>உபாயமார்க்கம், செயலாற்றுகை, வள ஒதுக்கீடு, அபாயநேர்வு முகாமைத்துவம், இணக்கப்பாடு மற்றும் வியாபார நடத்தைத் தராதரங்கள் உள்ளிட்ட வங்கியுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றிய தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கு இலங்கை வங்கியின் சபை சுயாதீனமான தீர்மானங்களைக் கொண்டு வருகின்றது. |
| A.1.6 | **சபை மற்றும் வங்கியின் விடயங்களுக்குப் போதிய நேரத்தினையும் முயற்சியினையும் அர்ப்பணித்தல்**<br>பாதுகாப்பான இலத்திரனியல் தீர்வு (e-solution) மூலமாகக் கூட்டம் நடைபெறுவதற்கு ஏழு நாட்களுக்கு முன்னர் சபை உறுப்பினர்களுக்கு நிகழ்ச்சிநிரலும் சபைக் குறிப்பும் விநியோகிக்கப்படுகின்றன. இதனால் சபைக் குறிப்பினை மீளாய்வு செய்து மேலதிக தகவல்களையும் தெளிவுபடுத்தல்களையும் பெறுவதற்கு உறுப்பினர்களை இயலுமாக்குவதற்கு அவர்களுக்குப் போதிய நேரம் வழங்கப்படுகின்றது. |
| | கூட்டாண்மை முகாமைத்துவ உறுப்பினர்கள் மற்றும் வெளி நிபுணர்கள் வங்கியின் மூலோபாய வழிக்காட்டல், செயல்பாடுகள், நிதி செயல்திறன், இடர் முகாமைத்துவ மற்றும் பிற முக்கிய பகுதிகளுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்களில் இற்றைப்படுத்தலை வழங்கவும், ஒப்புதல் அல்லது வழிகாட்டுதல்களைப் பெறவும் சபைக்கு விளக்கக்காட்சிகளை வழங்குகிறார்கள் |
| A.1.7 | **தீர்மானத்திற்கு அழைப்பு விடுத்தல்**<br>சபை அங்கத்தவர்கள் தாமாக தனிப்பட்ட ரீதியில் பிரேரணைகளைச் சமர்ப்பிக்க முடியும் அவை வங்கியின் நலனிற்கு பங்களிப்பை வழங்கும் பட்சத்தில் சபை அவற்றிற்குரிய அங்கீகாரத்தை வழங்கும். |
| A.1.8 | **பணிப்பாளர்களுக்கான பயிற்சி**<br>பணிப்பாளர் சபையில் முதன்முதலில் நியமிக்கப்படும்போது, பணிப்பாளர்கள் ஒரு அறிமுகப் பயிற்சித் திட்டத்திற்கு உட்படுத்தப்படுகிறார்கள். அத்திட்டத்தில், பொருந்தக்கூடிய ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள், வங்கியின் வரலாறு, நிறுவனக் கட்டமைப்பு, துணை மற்றும் இணை நிறுவனங்களின் விபரங்கள், உற்பத்திகள் மற்றும் சேவைகள், பணிப்பாளர்களின் பொறுப்புகள் ஆகியவை அடங்கும். மேலும், மேற்கூறிய அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு சபைக் கையேடு, வங்கியின் மின்னணு உதவி முறைமை மூலம் மின்னணு வடிவில் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. |

# இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2023ம் ஆண்டு வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகை பற்றிய சிறந்த நடைமுறைக் கோவைக்கு அமைவான இணக்கப்பாடு

| நடைமுறைக் கோவையில் குறிப்பிட்டுள்ள பிரிவுகள் | இணக்கப்பாட்டு நிலைமை |
|---|---|
| | பொருத்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்துகொள்ளுமாறு பணிப்பாளர்கள் ஊக்கப்படுத்தப்படுகின்றனர் மேலும் வங்கியில் இடம்பெறுகின்ற அதிநவீன முன்னேற்றங்கள் தொடர்பாகவும் வங்கியின் புறச்சூழல் தொடர்பாகவும் பெருநிறுவன முகாமைத்துவ உறுப்பினர்கள் மூலமாக அல்லது புறவள ஆளணியினர் மூலமாகப் புதிய உறுப்பினர்களுக்கு விளக்கப்படுகின்றது. ஆண்டுக்காலப்பகுதியில் பணிப்பாளர்கள் ஒரு பயிற்சி திட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.வங்கியின் செயல்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறைச் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்.'.இற்றைப்படுத்தல்கள் குறித்து பணிப்பாளர் சபைக்கு தெரிவிப்பதற்காக, முகாமைத்துவம் தேவை ஏற்பட்ட இடங்களில் விளக்கக்காட்சிகளை வழங்கியது. |
| A.2 | **தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோருக்கிடையில் பொறுப்புக்களைப் பிரித்தல்** |
| | தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி (வங்கியில் பொதுமுகாமையாளர் என அழைக்கப்படுகின்றார்) ஆகியோரின் பதவிகள் இரண்டு வேறான தனிநபர்களினால் வகிக்கப்படுகின்றன. தலைவர் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் ஆவார். தலைவருக்கும் பொதுமுகாமையாளருக்குமிடையில் பொறுப்புக்களில் தெளிவான வித்தியாசங்கள் காணப்படுவதுடன் வங்கியினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள சபைச் சாசனம் இந்தப் பொறுப்புக்களைத் தெளிவாக வரையறை செய்கின்றது. |
| A.3 | **தலைவரின் வகிபாகம்** |
| | இலங்கை வங்கியின் தலைவர் சபைக்குத் தலைமைத்துவத்தினை வழங்கி, ஒழுங்கினைப் பேணி, சபையின் செயற்பாடுகளை செயற்திறன்மிகு முறையில் நிறைவேற்றுவதை வசதிப்படுத்துகின்றார். சபைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சிநிரல் செயலாளர், இலங்கை வங்கி.'.சபைச் செயலாளரினால் பொதுமுகாமையாளர் மூலமாகச் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்புக்களின் அடிப்படையிலே மேலும் பணிப்பாளர்.'.பணிப்பாளர்களினால் முன்மொழியப்பட்ட ஏனைய பொருத்தமான விடயங்களின் அடிப்படையிலே தலைவரினால் பிரித்து வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் தயாரிக்கப்படுகின்றது.<br><br>நிகழ்ச்சிநிரலானது உபாயமாரக்கம், செயலாற்றுகை, வள ஒதுக்கீடு, இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கப்பாடு ஆகியவை தொடர்பான விடயங்களை உள்ளடக்குகின்றது. கூட்டம் நடைபெறுவதற்கு ஏழு நாட்களுக்கு முன்னதாகப் பாதுகாப்பான இலத்திரனியல் தீர்வு மூலமாக நிகழ்ச்சிநிரலில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் பற்றிய விபரமான தகவல்கள் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.<br><br>சகல பணிப்பாளர்களுக்கும் அவர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் (இவை சபைச் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன) பற்றி அறிவிக்கப்படுவதுடன் சபை உபசெயற்குழுக் கட்டமைப்பு அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குச் சபை உதவுகின்றது.<br><br>இலங்கை வங்கியின் சபையானது ஒட்டுமொத்தமாக நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது.இவர்கள் சம்பந்தப்பட்ட தமது ஆற்றலினுள் வங்கியின் நலனுக்காகச் செயற்திறன்மிகு முறையில் பங்களிப்பு வழங்குகின்றனர்.<br><br>கூட்டத்தில் நிகழ்ச்சி நிரலிலுள்ள விடயங்களைக் கலந்துரையாடுவதற்கு அவசியமானதெனக் கருதப்படுகின்ற தகவல்களைக் கோருமாறும் கூட்டாண்மை கரிசனைக்குரிய விடயங்களை நிகழ்ச்சிநிரலில் உள்ளடக்குமாறு வேண்டுகோள் விடுக்குமாறும் பணிப்பாளர்கள் ஊக்கப்படுத்தப்படுகின்றனர்.<br><br>பரிசீலனையின் கீழுள்ள விடயங்கள் தொடர்பான பணிப்பாளர்களின் கருத்துக்கள் உறுதிப்படுத்தப்பட்டு அவ்வாறான கலந்துரையாடல்கள் பற்றிய பதிவு கூட்ட அறிக்கையில் விபரமாக வழங்கப்படுகின்றது. |
| A.4 | **நிதியியல் விடயங்களில் வழிகாட்டல் வழங்கத் தேவையான நிதியியல் திறனும் அறிவும்** |
| | பணிப்பாளர்கள் கொண்டுள்ள வியாபார/தொழில் ரீதியான தேர்ச்சி மற்றும் அறிவின் மூலமாகவும் அவர்கள் கொண்டுள்ள தகைமைகளின் மூலமாகவும் வங்கியினை வழிநடத்துவதற்குப் போதிய நிதித் தேர்ச்சியினையும் அறிவினையும் அவர்கள் கொண்டுள்ளனர். |
| A.5 | **சபையின் சமநிலை** |
| | தலைவர் ஒரு சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் ஆவார். இலங்கை வங்கியின் சபை எப்போதும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களையே கொண்டுள்ளது. அவர்களில் அறுவர் (06) சுயாதீனமானவர்கள் மற்றும் 2024 ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல் இல. 5 இன் படி, திறைசேரி பிரதிநிதி உட்பட ஐவர் (05) சுயாதீனமற்றவர்கள். சுயாதீன/ சுயாதீனமின்மையை உறுதி செய்வதற்கான ஓர் சுயாதீனமான பிரகடனம் பெறப்பட்டுள்ளது. இது இலங்கை மத்திய வங்கியின் வழிக்காட்டல்கள், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் விதிகள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட சிறந்த நடைமுறைகளையும் உள்ளடக்கியுள்ளது.<br><br>பிரிவு A5.5 இன் படி தலைவர் சுயாதீனமானவராக இருந்தாலும், 2026 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதலின் அடிப்படையில் சிரேஷ்ட பணிப்பாளரை நியமிக்க வங்கி முடிவு செய்துள்ளது. |
| A.6 | **உரிய நேரத்தில் பொருத்தமான தகவல்களை வழங்குதல்** |
| | சபை/ உபசெயற்குழுக் கூட்டங்களுக்குத் தேவையான நிகழ்ச்சிநிரலும் சபைக் குறிப்புக்களும் கூட்டம் நடப்பதற்கு ஏழு நாட்களுக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக இலத்திரனியல் தீர்வு மூலமாகப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. இதன் மூலமாகப் சபைக் கூட்டங்கள் சுமூகமாக இயங்க பணிப்பாளர்கள் கூட்ட அறிக்கையினை மீளாய்வு செய்து வினாக்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான விடயங்களைத் தயார்படுத்துவதும் தேவையேற்படின் மேலதிக தகவல்களுக்கான வேண்டுகோள்களை விடுப்பதும் இயலுமாக்கப்படுகின்றது.<br><br>பணிப்பாளர்கள் மேலதிக தகவல்களினைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் அல்லது வேறு ஏதாவது தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் கூட்டாண்மை முகாமைத்துவ உறுப்பினர்கள் உதவிக்குக் கிடைக்கப் பெறுவார்கள். கூட்டம் நடைபெற்று பத்து நாட்களினுள் சபைக் கூட்டத்தின் கூட்ட அறிக்கைகள் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றன |

| நடைமுறைக் கோவையில் குறிப்பிட்டுள்ள பிரிவுகள் | இணக்கப்பாட்டு நிலைமை |
|---|---|
| **A.7** | **சபைக்கான நியமனம் நியமன மற்றும் கூட்டாண்மை ஆளுகை செயற்குழு** |
| 7.1 & 7.2 | நியமன மற்றும் கூட்டாண்மை ஆளுகைச் செயற்குழுவில் ஐந்து (05) நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் உள்ளனர், அவர்களில் இருவர் (02) சுயாதீன பணிப்பாளர்கள் ஆவர். கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தின் விதிமுறைகளின்படி, செயற்குழுவின் தலைவர் ஒரு சுயாதீன பணிப்பாளராக கருதப்படுகிறார். பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைக்கப்படும்போது, இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட 2007 ஆம் ஆண்டின் வங்கிச் சட்ட வழிகாட்டுதல் எண் 11 இன் வழிகாட்டுதல் எண் 3(6) (iv) (d) இன் படி, செயற்குழுவின் உறுப்பினர்களால் அவர்களின் தகுதியும் பொருத்தமும் மதிப்பிடப்படுகிறது.<br>இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபைக்கான நியமனம் நியமனம் மற்றும் ஆளுகைக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்படும். நியமன மற்றும் கூட்டாண்மை ஆளுகைச் செயற்குழு வெளிப்படையான, புறநிலை மற்றும் தகுதி அடிப்படையிலான செயல்முறையின் மூலம் தகுதியான விண்ணப்பதாரர்களை அடையாளம் கண்டு மதிப்பீடு செய்கிறது, தேவையான பின்னணிச் சோதனைகளை நடத்துகிறது மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க தகுதியையும் பொருத்தத்தையும் மதிப்பிடுகிறது.<br>பணிப்பாளர்களின் நியமனம் குறித்த பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையானது இந்த நடைமுறையை வகுக்கிறது மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர் பதவிக்குத் தேவையான திறன்கள், அனுபவம், அறிவு ஆகியவற்றை கோடிட்டுக் காட்டுகிறது. நியமன மற்றும் கூட்டாண்மை ஆளுகைச் செயற்குழு, தகுதிப்பட்டியல் செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களைப் பரிசீலனை மற்றும் ஒப்புதலுக்காக சபையின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கிறது. சபையின் ஒப்புதலுக்குப் பிறகு, தகுதியான விண்ணப்பதாரர்கள் முறைப்படியான நியமனத்திற்காக அமைச்சின் மூலம் வழங்கப்படும் நியமனக் கடிதத்துடன் அமைச்சரிடம் அனுப்பப்படுகிறார்கள். தங்களது அலுவல் பதவியின் காரணமாக நியமிக்கப்படும் பணிப்பாளர்கள் , பதவிவழி பணிப்பாளர்களாக (Ex-Officio Director) என அங்கீகரிக்கப்படுகிறார்கள். |
| 7.3 | கூட்டாண்மை முகாமைத்துவம் உள்ளடங்கலாக பொது முகாமையாளர் தொடர்பான மாற்றுத் திட்டம் வங்கியிடம் உள்ளது.அது இவ் ஆண்டு திருத்தியமைக்கப்படவுள்ளது. |
| 7.4 | புதிய பணிப்பாளர்கள் தொடர்பான தகவல்கள் வங்கியின் இணையத்தளத்திலும் ஊடகங்களிலும் வெளியிடப்பட்டு பங்குப் பரிவர்த்தனை நிலையத்திற்கும் அறிவிக்கப்படுகின்றன. |
| 7.5 | நியமனம் மற்றும் கூட்டாண்மை ஆளுகை செயற்குழு பற்றிய அறிக்கை 186 மற்றும் 187 பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ள செயற்குழுகுழுவின் செயல்பாடுகளைக் குறிக்கின்றது. |
| **A.8** | **மீள் நியமனம்**<br>நியமிக்கப்படுகின்ற ஒவ்வொரு பணிப்பாளரும் 1938 ஆம் ஆண்டின் 53ம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாகத் தனது பதவியிலிருந்து அகற்றப்படாமல் இருக்கும் போது அல்லது தனது பதவியினை வறிதாக்காமல் இருக்கும் போது தனது பதவியில் மூன்று வருடங்களுக்கு நிலைத்திருப்பார். இவ்வாறான இரண்டு சந்தர்ப்பங்களிலும் அவர் மீண்டும் நியமிக்கப்படுவதற்கு தகைமையுடையவராவார்.<br>**பதவி விலகல்**<br>எந்த அமைச்சரின் நோக்கெல்லையின் கீழ் இலங்கை வங்கி வருகின்றதோ அந்த அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதமொன்றினைச் சமர்ப்பிப்பதன் மூலமாக நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தனது பதவியினை இராஜினாமாச் செய்யலாம். மேலும் தனது பதவிக் காலத்தினை முடித்ததன் காரணமாகப் பதவியிலிருந்து வெளியேறும் எந்தவொரு பணிப்பாளரும் மீள் நியமனத்திற்கான தகுதியினைக் கொண்டுள்ளார். விசேட காரணத்தினால் பதவியினை பதவி விலகினால் பதவி விலகல் கடிதத்தில் அது சுட்டிக் காட்டப்படுகின்றது.<br>நியமனம் மற்றும் மீள்நியமனம் தொடர்பான தகவல்களுக்கு வழிக்காட்டல்கள் பக்கம் 173 இல் தரப்பட்டுள்ளது. |
| **A.9** | **சபை மற்றும் உபசெயற்குழுக்களின் மதிப்பீடு**<br>சபை மற்றும் அதன் உபசெயற்குழுக்களின் பொறுப்புகள் திருப்திகரமாக நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்காக, சபை மற்றும் அதன் உபசெயற்குழுக்களால் ஆண்டுதோறும் அதற்கு உரித்தான செயல்திறன் குறித்த சுய மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது. அதன் ஒட்டுமொத்த விளைவு சபையால் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.<br>பணிப்பாளர்கள் வருடாந்த மதிப்பீடானது, அவர்களால் தனித்தனியாக நிரப்பப்படும் வினாத்தாளின் அடிப்படையில் அமைந்துள்ளது.சபையின் சுய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. |
| **A.10** | **வருடாந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள பணிப்பாளர்கள் தொடர்பான தகவல்களின் வெளிக்கூறல்**<br>பணிப்பாளர்கள் தொடர்பான பின்வரும் தகவல்கள் வருடாந்திர அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.<br>பெயர், தகுதிகள், நிபுணத்துவத்தின் தன்மை மற்றும் நிறைவேற்று அதிகாரம் உடையவரா இல்லையா ஆகியவற்றை உள்ளடக்கிய பணிப்பாளர்களின் சுயவிபரங்கள் பக்கங்கள் 32 முதல் 39 வரை குறிப்பிடப்பட்டுள்ளன.<br>பக்கம் 224 இல் உள்ள வங்கியுடனான ஒப்பந்தங்களினான பணிப்பாளர்களது நாட்டம்<br>குறிப்பு 17இல் உள்ள பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம், பக்கம் 270 இல் உள்ள நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்<br>பக்கங்கள் 367 முதல் 373 வரை குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய தரப்பினரது தகவல்கள் பக்கங்கள் 224 முதல் 225 வரை குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிறுவனங்களில் பணிப்பாளர் பதவி வகித்தல்<br>உபசெயற்குழுக்களின் அங்கத்துவம் மற்றும் ஆண்டு முழுவதும் கலந்து கொண்ட சபை மற்றும் உபசெயற்குழு கூட்டங்களின் எண்ணிக்கை பக்கம் 173 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| **A.11** | **பிரதம நிறைவேற்று அதிகாரி/பொதுமுகாமையாளரின் மதிப்பீடு**<br>சபை மனித வள மற்றும் ஊதிய செயற்குழுவினால் தயாரிக்கப்பட்ட கூட்டாண்மை திட்டத்திற்கு அமைவாக வருடத்தின் ஆரம்பத்தின் போது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு பொது முகாமையாளரின் செயலாற்றுகை மதிப்பீடு வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டு இறுதி அறிக்கையானது சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது |

# இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2023ம் ஆண்டு வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகை பற்றிய சிறந்த நடைமுறைக் கோவைக்கு அமைவான இணக்கப்பாடு

| நடைமுறைக் கோவையில் குறிப்பிட்டுள்ள பிரிவுகள் | இணக்கப்பாட்டு நிலைமை |
|---|---|
| B | **பணிப்பாளர்களின் ஊதியம்** |
| B .1 | ட.1.தலைவர் மற்றும் பணிப்பாளர் குழுவிற்கு (சகலரும் நிறைவேற்று அதிகாரமற்ற) முறையான ஊதியக் கொள்கை உள்ளது.மேற்கூறிய கொள்கை அரசு, பங்குதாரர் அவ்வப்போது வெளியிடும் சுற்றறிக்கைகள் மற்றும் பொருந்தக்கூடிய பிற சட்டங்களின் அடிப்படையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. எந்தவொரு பணிப்பாளரும் அவரது ஊதியத்தை தீர்மானிப்பதில் ஈடுபடுவதில்லை. |
| B.2 | **மனிதவள மற்றும் ஊதியக் குழு**<br>பணிப்பாளர்களின் ஊதியம் அரசு, பங்குதாரர், அவ்வப்போது வெளியிடும் சுற்றறிக்கைகள் மற்றும் பொருந்தக்கூடிய பிற சட்டங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. |
| | இதற்கமைய பணிப்பாளர்களின் ஊதியத்தினைத் தீர்மானிப்பதில் வங்கியின் மனிதவளக் குழு மற்றும் ஊதியக் குழு எவ்வித வகிபாத்திரத்தினையும் வகிக்கவில்லை. (எவ்வாறாயினும் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரிகளின் ஊதியத்தினை அது பரிந்துரைக்கின்றது). |
| B.3 | **ஊதியத்தினை வெளிக்கூறல்**<br>ஒட்டுமொத்த சபைக்கும் வழங்கப்படும் ஊதியம் பற்றிய விபரங்கள் பக்கம் 270 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.<br>மனித வளம் மற்றும் ஊதிய செயற்குழுவின் அமைப்பு பக்கம் 184 இல் காட்டப்பட்டுள்ளது.<br>பக்கம் 368 இல் உள்ள முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான இழப்பீடு |
| C | **பங்குதாரர் உறவுகள்** |
| C.1 | வங்கியின் ஒரேயொரு பங்குதாரராக இலங்கை அரசாங்கம் காணப்படுவதுடன், பங்குதாரருடனான வங்கியின் தொடர்பாடல் பல்வேறு வடிவங்களில் இடம்பெறுகின்றன. அரசாங்கத்தின் ஒரு பிரதிநிதி (நிதி அமைச்சின் ஒரு அதிகாரி) சபையில் இருப்பதுடன், இவர் நேரடியாக பங்குதாரரை பிரதிநிதித்துவம் செய்வதுடன் ஆண்டறிக்கையானது பாராளுமன்றத்திற்கு முன்னால் சமர்ப்பிக்கப்படுவதுடன் பாராளுமன்றத்தினால் கேள்விக்கு திறந்திருக்கும். |
| C.2 | சபையால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொடர்பு கொள்கை நடைமுறையில் உள்ளது. பங்குதாரர்களின் முக்கிய பிரச்சினைகள் மற்றும் அக்கறை இலங்கை அரசாங்கம் சபையின் நேரடி அரசாங்க பிரதிநிதியின் பங்கேற்புடன் சபைக் கூட்டங்களின்போது விவாதிக்கப்பட்டு அமைச்சகத்திற்கு அல்லது தேவைக்கேற்ப உயர் மட்டங்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. தகவல் தொடர்பு கொள்கை வங்கிக்கு உள் மற்றும் வெளி பங்குதாரர்களுடன் பயனுள்ள தகவல் தொடர்பு குறித்து வழிகாட்டுகிறது மற்றும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்டது. |
| C.3 | 367 முதல் 373 பக்கங்களில் உள்ள நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டதைத்தவிர, வங்கியின் செயல்திறன், அதன் நிகர சொத்து, தளம் அல்லது தொடர்புடைய கட்சி பரிவர்த்தனைகளைப் பாதிக்கும் வகையில் பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள் எதுவும் இல்லை. |
| D | **பொறுப்புடைமை மற்றும் கணக்காய்வு** |
| D.1 | ஆண்டறிக்கையில் வங்கியின் நிதியியல் நிலை, செயல்திறன், வணிக மாதிரி, ஆளுகைக் கட்டமைப்பு, இடர் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் சவால்கள், வாய்ப்புகள் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டங்கள் ஆகியவற்றின் சீரான மதிப்பீட்டை எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் வழங்குவதை உறுதிசெய்ய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.<br>ஆண்டறிக்கையில் வழங்கப்படும் வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் சீரானவையாகவும், புரிந்துகொள்ளக்கூடியவையாகவும், தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்கவும் தயாரிக்கப்படுகின்றன் ஏதேனும் விலகல்கள் தெளிவாக விளக்கப்பட்டு, உண்மையான மற்றும் நியாயமான கண்ணோட்டத்தை வெளிப்படுத்துகின்றன.<br>மேலும், சீரான மற்றும் புரிந்துகொள்ளக்கூடிய மதிப்பீடானது, இடைக்கால மற்றும் பிற விலை உணர்திறன் கொண்ட பொது அறிக்கைகள், ஒழுங்குமுறை அமைப்புகளுக்கான அறிக்கைகள், அத்துடன் சட்டப்பூர்வ தேவைகளைப் பூர்த்தி செய்ய சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் விரிவடைவதையும் இது உறுதி செய்கிறது.<br>வங்கியின் பிரதான நிதியியல் அதிகாரி மற்றும் பொது முகாமையாளர் ஆகியோர், நிதிக் கூற்றுக்கள் இலங்கை வங்கி மற்றும் அதன் குழுமத்தின் நிலவரங்கள் குறித்த உண்மையான மற்றும் நியாயமான கண்ணோட்டத்தை வழங்குகின்றன என்பதனை உறுதிப்படுத்துகிறார்கள். நிதியியல் கூற்றுக்கள், வெளியீட்டிற்கான ஒப்புதலுக்காக சபையின் பரிந்துரைக்கு முன்பாக, சபை கணக்காய்வு செயற்குழுவால் மீளாய்வு செய்யப்பட்டு விவாதிக்கப்படுகின்றன.<br>வெளிப்படுத்தல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, பின்வரும் அறிக்கைகள் ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன - இலங்கை வங்கியின் அலுவல்களின் நிலைமையிலான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை,பக்கங்கள் 218 முதல் 223 வரை.<br>நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளிலான குறித்த பணிப்பாளர்களது அறிக்கை, பக்கங்கள் 226 முதல் 227 வரை. நிதியியல் மீளாய்வின் கீழ் முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு, பக்கங்கள் 108 முதல் 114 வரை.<br>முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் தொடர்புடைய தரப்புக் கொடுக்கல்வாங்கல்கள் குறித்த அறிக்கை, பக்கங்கள் 367 முதல் 373 வரை.<br>நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களது பொறுப்பு குறித்த அறிக்கை, பக்கம் 229. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை, பக்கங்கள் 230 முதல் 234 வரை.<br>நிதியியல் மீளாய்வின் முகாமைத்துவ ஆய்வு கலந்துரையாடல், பக்கங்கள் 108 முதல் 114 வரை. |

| நடைமுறைக் கோவையில் குறிப்பிட்டுள்ள பிரிவுகள் | இணக்கப்பாட்டு நிலைமை |
|---|---|
| D.2 | இடர் முகாமைத்துவ செயல்முறை மற்றும் பங்குதாரர்களின் முதலீடுகளையும் வங்கியின் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கான ஒரு வலுவான உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு.<br><br>தனது மூலோபாய நோக்கங்களை அடைவதில், சபை ஏற்கத் தயாராக இருக்கும் முக்கிய இடர்களின் தன்மை மற்றும் அளவைத் தீர்மானிப்பது சபையின் பொறுப்பாகும். மேலும், இணக்கப்பாட்டு திட்டங்கள் உட்பட பல்வேறு வகையான இடர்களை நிர்வகிப்பதற்காக வங்கியால் பயன்படுத்தப்படும் இடர் முகாமைத்துவ திட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் இருப்பு, செயல்பாடு மற்றும் செயல்திறன் தொடர்பான அதன் மேற்பார்வைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் சபைக்கு உதவுவதற்காக சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ செயற்குழு உள்ளது.<br><br>வங்கியின் மூலோபாய, செயல்பாட்டு மற்றும் நிதி நோக்கங்களை அடைவதற்கு ஆதரவளிப்பதில் அதன் செயல்திறனை உறுதி செய்வதற்காக, இடர்களைக் கண்டறிதல், மதிப்பிடுதல், கண்காணித்தல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றுக்கு தெளிவான பொறுப்புப் பகிர்வுடன் ஒரு இடர் முகாமைத்துவ கட்டமைப்பு உள்ளது. சபை , வங்கியின் இடர் முகாமைத்துவ மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்புகளை முறையே ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் செயற்குழு மற்றும் கணக்காய்வு செயற்குழு மூலம் கண்காணித்து, அக்குழுக்களின் செயல்திறனை ஆண்டுதோறும் மீளாய்வு செய்கிறது.<br><br>செயல்பாட்டு, நிதி மற்றும் இணக்கப்பாடு உள்ளிட்ட வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பின் நோக்கத்தை அடைவதில், சபை கணக்காய்வு செயற்குழு சபைக்கு உதவுகிறது. இச் செயற்குழுவுக்கு மற்ற பொறுப்புகளும் உள்ளன.<br><br>வங்கியின் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு இலங்கை வங்கி பூரணமான உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினை கொண்டுள்ளது. கணக்காய்வாளர் நாயகமே வங்கியின் வெளியகக் கணக்காய்வாளர் ஆவார்.<br>வருடாந்த நியதிச் சட்ட கணக்காய்வு தேசிய கணைக்காய்வு அலுவலகம் அல்லது அதன் மேற்பார்வையின் கீழ் நியமிக்கப்பட்ட ஒரு சுயாதீனமான தகுதி வாய்ந்த கணக்காய்வாளரினால் கணக்காய்வாளர் நாயகத்தின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. |
| D.3 பிரிவு 3 (6) வங்கியியல் | **கணக்காய்வு செயற்குழு**<br><br>சபைக் கணக்காய்வு செயற்குழு மீளாய்வின் கீழுள்ள வருடத்தின் போது நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை பிரத்தியேகமாகக் கொண்டிருந்தது. தலைவர் சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் ஆவர். கணக்காய்வு செயற்குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் நிதி அறிக்கையிடல் மற்றும் கட்டுப்பாட்டில் பொருத்தமான அனுபவத்தினைக் கொண்டிருந்தனர். ஆண்டுக் காலப்பகுதியில் கணக்காய்வுச் செயற்குழுவில் மாற்றங்கள் கணக்காய்வுச் செயற்குழு அறிக்கையில் 180 மற்றும் 181 பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>வங்கியின் சபை அதன் மேற்பார்வைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குச் சபைக் கணக்காய்வு செயற்குழு உதவுகின்றது. |
| | இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு செயன் முறைகள் மற்றும் செயற்திறன் மீளாய்வுகளை நடத்துவதையும் கணக்காய்வு அறிக்கைகள் செயற்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படுவதையும் சபைக் கணக்காய்வுக் செயற்குழு உறுதிப்படுத்துகின்றது. கணக்காய்வுக் செயற்குழுவின் வகிபாத்திரமும் பொறுப்புக்களும் இந்த வருடாந்த அறிக்கையின் 180 மற்றும் 181 பக்கத்தில் காணப்படுகின்ற கணக்காய்வுக் செயற்குழு அறிக்கையில் வெளிக்கூறப்பட்டுள்ளன.<br><br>கணக்காய்வுக் செயற்குழு குறிப்புதவி விதிமுறைகள் எழுதியுள்ளது. இது குழுவின் வகிபாத்திரம் மற்றும் பொறுப்புக்களைத் தெளிவாக வரையறுக்கின்றது. மீளாய்வின் கீழுள்ள வருடத்தின் போது செயற்குழுவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் இந்த வருடாந்த அறிக்கையில் 180 மற்றும் 181 பக்கத்தில் காணப்படுகின்றன. |
| D.4 | **ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ செயற்குழு (IRMC)**<br><br>இடர் கலாச்சாரம், இடர் ஏற்பு, இடர் அடையாளம் மற்றும் வகைப்பாடு, மதிப்பீடு மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ செயற்குழு மேற்பார்வையிடுகிறது. குழு அமைப்பு மற்றும் ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் பக்கங்கள் 182 மற்றும் 183 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. |
| D.5 | **தொடர்புடைய தரப்பினருடன் கொடுக்கல்வாங்கல்கள்**<br><br>தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல்கள், அதன் கொடுக்கல்வாங்கல்களில் மற்றும் தொடர்புடைய தரப்பினருக்கு மிகவும் சாதகமான தன்மையினை வழங்குவதற்கான கட்டுப்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சபையால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையை வங்கி கொண்டுள்ளது, இதனால் சபை உறுப்பினர்கள் இது தொடர்பாக எந்தவொரு ஆர்வ முரண்பாட்டினையும் தவிர்க்கிறார்கள்.<br><br>சபையினால் தொடர்புடைய கட்சிகளுடனான கொடுக்கல்வாங்கல்கள்களை மீளாய்வு செய்வதற்காக புதிதாக நிறுவப்பட்ட செயற்குழு, குறைந்தபட்சம் மூன்று (3) நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. கொ.ப.ச. (ஊளுநு) பட்டியற்படுத்தப்பட்ட விதிகளின் படி அவர்களில் இருவர்(2) சுயாதீன பணிப்பாளர்கள் ஆவர். 2025 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஐந்து (5) கூட்டங்கள் நடைபெற்றன.<br>முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் அவர்களின் நெருங்கிய குடும்பங்களின் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் குறித்த அறிக்கை இந்த வருடாந்திர அறிக்கையின் பக்கம் 190 இல் காணப்படுகிறது |
| D.6 | **வியாபார நடத்தை மற்றும் நெறிகள் கோவை**<br><br>வங்கியின் ஊழியர்களுக்காக வங்கி நெறிக் கோவையொன்றினைப் பேணி வருவதுடன் பணிப்பாளர்களுக்காக வேறான நெறிக் கோவைகளைப் பேணி வருகின்றது. மேலும் இந்தக் கோவைகளுக்கு இயைபுறுவதை உறுதிப்படுத்துகின்ற அங்கீகாரம் பெற்றுக 'கொள்ளப்படுகின்றது.<br>சட்டவிரோத மோசடிகளைப் புகார் செய்ய “தகவல் தெரிவிப்புக் கொள்கை” நடைமுறையில் உள்ளது. இக்கொள்கைகள் ஆண்டுக்காலப்பகுதியில் மீளாய்வு செய்யப்பட்டது. |
| D.7 | **.கூட்டாண்மை ஆளுகை வெளிப்பாடுகள்**<br><br>பக்கங்கள் 162 முதல் 179 வரையிலான கூட்டாண்மை ஆளுகை அறிக்கை, வங்கி எந்த அளவிற்கு நிறுவன ஆளுகையின் நிறுவப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை கடைபிடிக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது. கூட்டாண்மை ஆளுகைக்கான சிறந்த நடைமுறை விதிகளின் விதிகளுடன் இணங்குதல் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது |

# இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2023ம் ஆண்டு வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகை பற்றிய சிறந்த நடைமுறைக் கோவைக்கு அமைவான இணக்கப்பாடு

| நடைமுறைக் கோவையில் குறிப்பிட்டுள்ள பிரிவுகள் | இணக்கப்பாட்டு நிலைமை |
|---|---|
| F | பங்குதாரர் |
| F.1 மற்றும் F.2 | வங்கியின் ஏக பங்குதாரராக இலங்கை அரசாங்கம் உள்ளது. |
| G | பொருட்களின் இணையம் மற்றும் இணையப் பாதுகாப்பு<br><br>வங்கியின் வணிக மாதிரி, வங்கிக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் ஆகியவை வங்கியின் வலையமைப்புடன் எவ்வாறு இணைந்து தகவல்களை அனுப்பவும் பெறவும் முடியும் என்பதையும், அதன் விளைவாக வணிகத்தைப் பாதிக்கக்கூடிய இணையப் பாதுகாப்பு அபாயங்களையும் கண்டறிவதற்கான ஒரு செயல்முறையை வங்கி கொண்டுள்ளது.<br><br>வங்கியின் தகவல் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுதலையும் ஆதரவையும் வழங்கும், சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகவல் பாதுகாப்புக் கொள்கை நடைமுறையில் உள்ளது.<br><br>இதற்கு மேலதிகமாக , ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ செயற்குழு,பாதிப்பு மதிப்பீடுகளைப் பரிந்துரைத்து, அவற்றைப் பின்தொடர்ந்து, சபைக்கு அறிக்கை அளிப்பதன் மூலம், இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களிலிருந்து வங்கி பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய சபைக்கு உதவுகிறது. இணையப் பாதுகாப்பு அபாயங்களைக் கண்டறிந்து நிர்வகிப்பதற்கான செயல்முறைகள், இந்த ஆண்டறிக்கையின் இடர் முகாமைத்துவ அறிக்கையில் 182 முதல் 183 வரையிலான பக்கங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.<br><br>இணையப் பாதுகாப்பு இடர் முகாமைத்துவ கொள்கையைச் செயல்படுத்துவதற்காக, வங்கி ஒரு பிரதான தகவல் பாதுகாப்பு அதிகாரியை நியமித்துள்ளது.<br><br>சபை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப செயற்குழு, தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் தொடர்பான அதன் மேற்பார்வைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் பணிப்பாளர் சபைக்கு உதவுகிறது மற்றும் இணையப் பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவை குறித்து பணிப்பாளர் சபை தீர்மானம் மேற்கொள்வதனை எளிதாக்குவதற்காக பொருத்தமான ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் வழங்குகிறது. |
| H | நிலைத்தன்மை: சுற்றுச்சூழல் சமூக மற்றும் ஆளுகை தொடர்பான இடர்களும் வாய்ப்புகளும்<br><br>இந்தப் பகுதியைச் சிறப்பாக நிர்வகிப்பதற்காக, தற்போது ஒரு நிலைத்தன்மைச் செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் ,சமூக மற்றும் ஆளுகை தொடர்பான வெளிப்படுத்தல்கள் இவ் ஆண்டறிக்கையின் 75 முதல் 84 வரையிலான பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. |
| I | கொள்கைகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் |
| I.1 மற்றும் 1.2 | பின்வரும் துறைகள் தொடர்பான கொள்கைகள் நடைமுறையில் உள்ளன.<br>(a) பணிப்பாளர் சபை தொடர்பான விடயங்கள்<br>(b) சபையின் செயற்குழுக்கள்<br>(c) கூட்டாண்மை ஆளுகை, நியமனங்கள் மற்றும் மறுதேர்வு<br>(d) ஊதியம்<br>(e) அனைத்து பணிப்பாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கான உள்ளக வணிக நடத்தை மற்றும் நெறிமுறைகள், உட்பட நிறுவனத்தின் பட்டியலிடப்பட்ட பத்திரங்களில் வர்த்தகம் செய்வது தொடர்பான கொள்கைகள்<br>(f) இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள்<br>(g) பங்குதாரர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடனான உறவுகள்<br>(h) சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை நிலைத்தன்மை<br>(i) நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பங்குதாரர் முதலீடுகளின் கட்டுப்படுத்தல் மற்றும் முகாமைசெய்தல்<br>(j) கூட்டாண்மை வெளிப்படுத்தல்கள்<br>(k) தகவல் தெரிவிப்பு<br>(l) இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு |

# 2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

| பிரிவு | | வழிகாட்டல் மற்றும் நடைமுறைப்படுத்தல் விபரங்கள் | இணக்கப்பாடு |
|---|---|---|---|
| 1.1 | | சபைக்குரிய பொறுப்புக்கள் | |
| | | வங்கியின் பாதுகாப்பையும் ஸ்திரத்தன்மையையும் வலுப்படுத்தும் நோக்கில்,சபை பின்வருவனவற்றின் செயலாக்கத்தை உறுதிசெய்து, வங்கிக்கு “கவனிப்புக் கடமையையும்” “விசுவாசக் கடமையையும்” செலுத்த வேண்டும்: | |
| | a) | வங்கியின் நீண்டகால இலக்குகளின் அடிப்படையில் அதன் மூலோபாய நோக்கங்கள் மற்றும் கூட்டாண்மை விழுமியங்களை அங்கீகரித்து மேற்பார்வையிடுவதுடன்,அவை வங்கி முழுவதும் முறையாகத் தெரிவிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்<br>பணிப்பாளர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் பங்கேற்புடன் நடைபெறும் அமர்வுகளில், மூலோபாய நோக்கங்கள் வகுக்கப்பட்டு பெறுமதிகள் மீளாய்வு செய்யப்படுகின்றன. பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட மூலோபாயத் திட்டம், கூட்டாண்மை பெறுமதிகளுடன் சேர்த்து, வங்கிக்கு வெளியே உள்ள ஓர் இடத்தில் நடைபெற்ற பிரத்யேக மூலோபாய அமர்வில், கிளை நிலை ஊழியர்கள் உட்பட வங்கி முழுவதும் தெரிவிக்கப்பட்டது. அந்த அமர்வில், பணிப்பாளர் சபை மற்றும் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவினரால் மூலோபாயத் திட்டம் தொடங்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டது. வழக்கமான விளக்க அமர்வுகள் மற்றும் கூட்டங்கள் மூலம் வங்கியின் மூலோபாய நிகழ்ச்சி நிரல் குறித்து மற்ற ஊழியர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது..<br>பணிப்பாளர் சபை 2026-2030 ற்கான மூலோபாயத் திட்டத்தினையும், 2026ற்கான பாதீட்டையும் அங்கீகரித்தது.<br>கூட்டாண்மை பெறுமதிகள் உள்ளக வலையமைப்பினுள் கிடைக்கக்கூடியதாக உள்ளது. | ✓ |
| | b) | வங்கியின் ஒட்டுமொத்த வணிக மூலோபாயம், ஒட்டுமொத்த இடர் கொள்கை மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் அளவிடக்கூடிய இலக்குகளைக் கொண்ட வழிமுறைகள் உட்பட, குறைந்தபட்சம் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அங்கீகரித்தல்.<br><br>வங்கியின் ஒட்டுமொத்த வணிக மூலோபாயம், ஐந்து ஆண்டு காலத்திற்கு தயாரிக்கப்பட்ட சுழலும் மூலோபாயத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது, மேலும் அதே காலகட்டத்திற்கான தொடர்புடைய நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.<br><br>இடர் நாட்டம் இடர் முகாமைத்துவ கட்டமைப்பு மற்றும் பொறிமுறை மூலோபாய திட்டத்திற்கு ஏற்ப இச் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்த வங்கிக்கும் அளவிடக்கூடிய இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு இந்த இலக்குகளுக்கு ஏற்ப செயல்திறன் அளவிடப்படுகிறது. | ✓ |
| | c) | வலுவான இடர் ஆளுகை கலாச்சாரத்தை வளர்த்தல் | |
| | | (i) முக்கிய இடர்களை அடையாளம் காணுதல் மற்றும் இடர்களை விவேகத்துடன் முகாமைத்துவம் செய்ய பொருத்தமான அமைப்புகளை செயல்படுத்துவதை உறுதி செய்தல்.<br><br>2025 ஆம் ஆண்டில், வங்கி இவ் வழிகாட்டலுடன் முழுமையான இணக்கப்பாட்டுடன் ஒரு வலுவான இடர் அடையாளங்காணும் மற்றும் முகாமைத்துவ கட்டமைப்பை பராமரித்தது. கடன், சந்தை, செயல்பாடு, திரவத்தன்மை , இணையம், சமூக-சுற்றுச்சூழல் மற்றும் நன்மதிப்பு இடர் , உள்நாட்டு மதிப்பீடுகள், வெளிப்புற பொருளாதாரம் மற்றும் இலங்கையின் பிற போக்குகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறை இற்றைப்படுத்தல்கள் உள்ளிட்ட முக்கிய இடர்களை அடையாளம் காண சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ செயற்குழு மூலம் காலாண்டு மதிப்பாய்வுகளை நடத்தியது. இந்த செயல்முறை சுயாதீன ஒருங்கிணைந்த இடர்முகாமைத்துவ பிரிவுடன் ஒத்துழைப்பதை உள்ளடக்கியது, இது அழுத்த சோதனை மாதிரிகள் மற்றும் சூழ்நிலை பகுப்பாய்வு போன்ற மேம்பட்ட கருவிகளைப் பயன்படுத்தி சாத்தியக்கூறுகள் மற்றும் தாக்கத்தின் அடிப்படையில் இடர்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது.<br><br>விவேகமானமுகாமைத்துவத்தினை உறுதி செய்வதற்காக, ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ முறைமை உள்ளிட்ட மேம்பட்ட முறைமைகளை வங்கி பயன்படுத்தியது, இது இடர் பகுப்பாய்வு மற்றும் கண்காணிப்புக்காக வங்கியின் முக்கிய முறைமைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு தளமாகும். முக்கிய முன்முயற்சிகளில் ஊழியர்களுக்கு தொடர்ச்சியான இடர் தொடர்பான பயிற்சியும் அடங்கும், அதே நேரத்தில் அதிகரித்து வரும் டிஜிட்டல் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வங்கியின் இணைய பாதுகாப்பு தொடர்பான பாதுகாப்புகளை வலுப்படுத்த கணிசமான முதலீடுகள் செய்யப்பட்டன.<br><br>பேரிடர்கள் உள்ள அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ கொள்கை சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.<br><br>பின்வரும் அறிக்கைகள் இது தொடர்பான மேலதிக விவரங்களையும் வழங்குகின்றன:<br>• பக்கங்கள் 191 முதல் 216 வரையிலான இடர் முகாமைத்துவ அறிக்கை<br>• ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ செயற்குழு அறிக்கை பக்கங்கள் 182 மற்றும் 183 | ✓ |
| | | (ii). நிறுவன பொறுப்புகளை நிறுவுதல் தொடர்பாக நன்கு வரையறுக்கப்பட்டவங்கியின் மூன்று பாதுகாப்பு வளையங்கள்.அதாவது,<br><br>a. **வணிக வளையம்**<br>வணிக அலகுகள் தங்கள் செயல்பாடுகளிலிருந்து எழும் இடர்களை அடையாளம் காணுதல், சொந்தமாக வைத்திருத்தல் மற்றும்முகாமைத்துவம் செய்தல் பயனுள்ள செயல்பாட்டு கட்டுப்பாடுகளைப் பராமரித்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் ஒப்படைக்கப்பட்ட அதிகாரிகளுடன் அன்றாட இணக்கப்பாட்டினை உறுதி செய்தல் ஆகியவற்றிற்கு முதன்மையாக பொறுப்பாக உள்ளன.<br><br>b. **இடர் முகாமைத்துவ செயல்பாடு மற்றும் பாதுகாப்பின் முதல் மற்றும் மூன்றாவது வளையங்களிலிருந்து சுயாதீனமான இணக்கப்பாட்டு செயல்பாடு, மற்றும் இடர் முகாமைத்துவ மற்றும்**<br>இணைக்கப்பாட்டு செயல்பாடுகள் பாதுகாப்பின் முதல் மற்றும் மூன்றாவது வளையங்களிலிருந்து சுயாதீனமாக செயல்படுகின்றன மற்றும் இடர் முகாமைத்துவ மற்றும் இணக்க கட்டமைப்புகளை உருவாக்கி பராமரிப்பதன் மூலம் மேற்பார்வையை வழங்குகின்றன. | ✓ |
| | | c. **முதல் மற்றும் இரண்டாவது பாதுகாப்பு வளையங்களிலிருந்து சுயாதீனமான உள்ளக கணக்காய்வு செயல்பாடு.**<br>உள்ளக கணக்காய்வு முதல் மற்றும் இரண்டாவது பாதுகாப்பு வளையங்களிருந்து சுயாதீனமாக செயல்படுகிறது மற்றும் நிர்வாகத்தின் போதுமான மற்றும் செயல்திறன், இடர் முகாமைத்துவ மற்றும் இடர் அடிப்படையிலான கணக்காய்வுகள் மூலம் உள்ளக கட்டுப்பாடுகள், கணக்காய்வு அவதானிப்புகளைப் அறிக்கையிடல் மற்றும் ஒப்புக் கொள்ளப்பட்ட திருத்த நடவடிக்கைகள் தொடர்பில் தொடர் கண்காணிப்பு குறித்து சபை மற்றும் முகாமைத்துவத்திற்கு புறநிலை உத்தரவாதம் அளிக்கிறது. | |

# 2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட வழிகாட்டலுக்கு அமைவான இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்

| பிரிவு | | வழிகாட்டல் மற்றும் நடைமுறைப்படுத்தல் விபரங்கள் | இணக்கப்பாடு |
|---|---|---|---|
| | (iii) | இடர் முகாமைத்துவம் , இணக்கப்பாடு மற்றும் உள்ளக கணக்காய்வு செயல்பாடுகள் சரியாக நிலைநிறுத்தப்பட்டு, போதுமான பணியாளர்கள் மற்றும் வளங்கள் பொறுப்புகளை சுயாதீனமாகவும், புறநிலை ரீதியாகவும், திறம்படவும் நிறைவேற்ற உறுதிசெய்கின்றன. இடர் முகாமைத்துவ, இணக்கப்பாடு மற்றும் உள்ளக கனகக்காய்வு செயல்பாடுகளின் பொறுப்புகள் முறையே அட்டவணை II, III மற்றும் IV இல் வழங்கப்பட்டுள்ளன்<br><br>பாதுகாப்பு மாதிரியின் மூன்று வளையங்களிலிருந்து வணிக வளையம் பிரிக்கப்படுவதை உறுதிசெய்து, ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ செயற்குழுவிற்கு க்கு நேரடியாக கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு அறிக்கை மற்றும் கனகக்காய்வு செயற்குழுவிற்கு கண்கக்காய்வு ஆகிய மூன்று செயல்பாடுகளை சுயாதீன அலகுகளாக கட்டமைப்பதன் மூலம் வங்கி இந்த தேவையுடன் முழுமையாக இணைந்துள்ளது.<br><br>இடர் முகாமைத்துவ செயல்பாடு பரந்த வங்கி அனுபவம் மற்றும் நிபுணத்துவம் கொண்ட ஒரு பிரதான இடர் அதிகாரி தலைமையில் உள்ளது, இது இடர் நிபுணர்களின் குழுவால் ஆதரிக்கப்படுகிறது.<br><br>இணக்கப்பாட்டு செயல்பாடு பிரதான இணக்கப்பாட்டு அதிகாரியால் வழிநடத்தப்படுகிறது மற்றும் வங்கியின் அனைத்து செயல்பாட்டு மட்டங்களிலிருந்தும் சுயாதீனமாக செயல்படுகிறது, நேரடியாக ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ செயற்குழுவிற்கு அறிக்கையிடுகிறது.<br><br>பொருந்தக்கூடிய அனைத்து சட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை பின்பற்றுவதை உறுதி செய்வதன் மூலம் இணக்கப்பாட்டு இடர்களை முன்கூட்டியே அடையாளம் கண்டு, மதிப்பீடு செய்து, முகாமைத்துவம் செய்து கட்டுப்படுத்துகிறது.<br><br>உள்ளக கணக்காய்வு செயற்பாடு , கட்டுப்பாட்டு மதிப்பீடு மற்றும் மோசடிகளை கண்டறிதல் ஆகியவை சிறப்பு கணக்காய்வுக்காக வெளியக ஆலோசகர்களால் மேம்படுத்தப்படுகின்றன, இது 1,895 கணக்காய்வுகளை நடத்தியது, இது 80மூ செயல்பாடுகளை உள்ளடக்கியது, சராசரியாக 90 நாட்களுக்குள் அவதானிப்புகள் சுட்டிக்காட்டப்பட்டன.<br><br>ஒட்டுமொத்தமாக, இந்த செயல்பாடுகள் போதுமான வளங்கள் கொண்டவை மற்றும் வழக்கமான சபை மேற்பார்வையுடன் சுயாதீனமாக செயல்படுகின்றன. | ✓ |
